தமிழ் அர்த்தத்துடன் கூடிய

# ஸ்ரீமத்கீதாபாஷ்யம்.

முதல் ஆறு அத்தியாயங்கள்.

ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதப்பிரவர்த்தகரான

ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த

# ஸ்ரீமத்கீதாபாஷ்யமும்.

ஆசாரியர்களால்

வி. கே. ராமாநுஜனைக்கொண்டு

எளிதான தமிழ் நடையில்

எழுதப்பட்ட உரையும்.

கும்பகோணம்

" ஸ்ரீ ஜநார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் "

விலை ] 1928. [ ரூ 1—4—0.

# முகவுரை.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம: ॥

உலகத்தில் எல்லாரும் "நான் நான்" என்று சொல்லுகிறார்கள். நான் என்பது என்ன? அது உடம்பா? அல்லது அதைக் காட்டிலும் வேறானதா? இதை யோஜித்துப் பார்ப்போம். உடம்பு தாயார் வயிற்றிலிருந்து வெளியே வரும்போது, மிகவும் சிறிதாயிருந்து, வளர்ந்து, பிறகு பையனாகவும், ஆளாகவும், கடைசியில் கிழவனாகவும் ஆகிறது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நான் என்பது இவ்விதமாக வளர்ந்தும் குறைந்தும் வருகிறதென்று தோன்றுகிறதா? அப்படித்தோன்றாமல் ஒரேவிதமாய் இருப்பதாகத் தோன்றினால், எப்போதும் மாறிக்கொண்டிருக்கிற உடம்பைக்காட்டிலும் மாறுதலில்லாத நான் என்பது வேறு என்று எண்ண வேண்டியது.

2. மேலும், உடம்பு பேசுகிறது. ஓடியாடி அலைகிறது. தூங்கும்போது ஒருவேலையையும் செய்யாமல், தூக்கம் போன பிறகு மறுபடியும் கிளம்புகிறது. சாகிற காலத்தில் அடியோடே கீழே விழுந்து விடுகிறது. இந்த வேலைகளை உடம்பு தானாகச் செய்கிறதா? தானாகவே கீழே விழுந்து விடுகிறதா? அல்லது, அதைக் காட்டிலும் வேறான "நான்"என்பது அதற்குள்ளிருந்து, அதைக்கொண்டு கொஞ்சகாலம் வேலை செய்கிறதா? அந்த "நான்" என்பது உடம்பைவிட்டு ஒருகாலத்தில் போகிறதா? அப்போது உடம்பு அடியோடே கீழே விழுந்து விடுகிறதா? இதை யோஜித்துப்பார்த்தால், உடம்பு தானாக இப்படிச் செய்கிறதென்பதைக்காட்டிலும், நான் என்று ஒன்றிருந்து போய்விட்டதென்று சொல்வது பொருந்தி யிருக்கிறது.

3. "நான்" என்பது இந்திரியங்களில் ஒன்றா யிருக்குமா? இதையும் கவனிக்கவேணும். தெருவில் போகும் அழகான ஒரு ஸ்திரீயைப் பார்க்கக்கூடாது, பார்த்தால் மனது கலங்கும் என்று நினைத்து, ஒருவன் தலையைத் திருப்பிக்கொள்கிறான். ஒருக்ஷணத்தில் அவனுடைய கண்ணானது திரும்பி அவளைப்பார்க்கிறது.

சாப்பிடும்போது கெட்டமாம்பழத்தை இலையில் போடுகிறார்கள். அது உடம்புக்கு ஆகாது. அதைச்சாப்பிட வேண்டாம் என்று எண்ணுகிறான். ஒரு க்ஷணத்தில் அவன் கை அதை எடுத்து வாயில் போடுகிறது. அதை வாயும் விழுங்குகிறது. இப்படியே கண்ணைப் போல மற்ற ஞானேந்திரியங்களும், கையைப் போல் மற்ற கர்மேந்திரியங்களும் அவனுக்கு உட்படாமல் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கின்றன. மனதும் அப்படித்தான் இருக்கிறது. தியானம் செய்ய ஒருவன் உட்கார்ந்து, ஒரு வஸ்துவையே நினைக்க வேண்டும், வேறொன்றையும் நினைக்கக்கூடாது என்று எண்ணுகிறான். உடனே மனது வெளியே ஓடிப்போகிறது. நான் என்பது கண்முதலானவைகளை தடுத்துத் திருப்பி விடுகிறது. ஆகையால் நான்என்பது இந்திரியங்களுமன்று.மனதுமன்று. பிராணனுமிருக்க முடியாது. ஏனென்றால், நான் என்பது தூங்கும் போது ஒரு வேலையையும் செய்கிறதில்லை. அப்பொழுதும் பிராணன் தன் வேலைகளை நிறுத்தாமல் செய்து கொண்டிருக்கிறது.

4. இதின்மேல் ஒரு கேள்வி—உடம்பைக்காட்டிலும் வேறான நான் என்பவன் உடம்புக்குள் எப்படி வந்தான். தானாக வந்தானா? அல்லது அவனுக்கு மேற்பட்டவன் அவனை அதற்குள் வைத்தானா? என்று. பதில்—முதலில் சொன்னது ஸரியன்று. ஏனென்றால், எவனும் அழகு முதலான நல்ல குணங்கள் பொருந்திய உடம்போடே பணத்தினாலும், படிப்பினாலும், மற்ற நல்ல ஸங்கதிகளாலும் உயர்ந்தவனாகப் பிறக்க வேணுமென்று ஆசைப் படுவன். உலகத்திலோ பெரும்பாலும் அப்படிக் காணப்படவில்லை. ஏழைகளாயும், முட்டாள்களாயும், கெட்ட நடவடிக்கையுள்ளவர்களாயும் நான் என்பவர்கள் பிறக்கிறார்கள். அங்கங்கள் குறைவுள்ளனவாயும், அழகில்லாதவைகளாயும், அனேக வியாதிநிறைந்தவைகளாகவும் இருக்கிற உடம்புகளுடன் அவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் தாமாக வருவதானால் இப்படி இருப்பார்களோ? அவர்களுக்கு மேற்பட்டவனாக ஒரு யஜமானன் தான் அவர்களை உடம்புகளில் வைக்கிறான் என்று சொல்ல வேண்டும்.

5. இப்படி— (1.) உடம்பும், அதைச் சேர்ந்தவைகளும் (2.) நான் என்பவர்கள்— (3.) அவர்களுக்கு மேற்பட்ட யஜமானன்—

ன்று மூன்று தத்வங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. அவைகளுக்குப் பிரமாணங்கள் இருக்கின்றனவா என்று பார்ப்போம். உலகத்தில் மூன்று பிரமாணங்கள் இருக்கின்றன—பிரத்தியக்ஷம், அநுமானம் (யுக்தி), சப்தம்—என்று. பிரத்தியக்ஷம் என்பது இங்கே உபயோகப்படாது. ஏனென்றால், கண் முதலான இந்திரியங்களாலே இரண்டாவது தத்வத்தையும், மூன்றாவது தத்வத்தையும் அறியமுடியாது. யுக்திகளை மாத்திரம் கொண்டும் அறிய முடியாது. ஏனென்றால், இந்த தேசத்தில் அநேகம் பேர்கள் யுக்திகளை மாத்திரம் கொண்டு விசாரித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லவில்லை. ஒவ்வொருவர் சொல்வதும் அநுபவத்துக்கு ஒத்து வரவில்லை. எப்படியென்றால், அவர்களில் ஆறு பேர்கள் மிகவும் உயர்ந்தவர்கள். அவர்களாவன— (1) ஸாங்கியமதத்தை ஏற்படுத்தின கபிலர் என்ற ருஷி. அவர் பெரிய யோகி என்று பிரஸித்தம். (2.) யோகமதத்தை ஏற்படுத்தின நான்குமுகமுடைய பிரும்மா. (3.) வைசேஷிகமதத்தை ஏற்படுத்தின கணாதன் என்கிற ருஷி. (4.) பௌத்தமதத்தை ஏற்படுத்தின புத்தர் என்பவர். இவரைப் பகவானுடைய அவதாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (5.) ஜைநமதத்தை ஏற்படுத்தின ஜிநன் என்பவர். (6.) பாசுபதமதத்தை ஏற்படுத்தின பசுபதி என்கிற ருத்திரன்.

6. மேலான யஜமானன். இவர்களில் ஸாங்கியனும், பௌத்தனும் எல்லாவற்றிற்கும் மேலானவனாகவும் யஜமானனாகவும் ஒருவனை ஒப்புக்கொள்ளவில்லை. மூன்று மதக்காரர்கள் தைவம் ஒன்று இருக்கிறது. அதை யுக்தியினாலே மாத்திரம் அறிந்து கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லும் யுக்தியாவது—ஒரு குசவன் சட்டிகளையும் பானைகளையும் செய்கிறான். இப்படியே வேறு வேலைக்காரர்கள் வெவ்வேறு வஸ்துக்களை உண்டு பண்ணுகிறார்கள் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிற நாம்—எந்த வஸ்து செய்யப்பட்டதோ, அதை ஒருவன் செய்திருக்க வேண்டும்—என்று அறிகிறோம். இந்த உலகமானது அநேக வஸ்துக்கள் சேர்ந்து உண்டாயிருக்கிறது. ஆகையால் அது செய்யப்பட்ட வஸ்து. அதை ஒருவன் செய்திருக்க வேண்டும்.

அவன் எவனுயிருக்கலாம்? உலகத்தைச் செய்கிறவனுக்கு அறிவும் சக்தியும் அளவில்லாமல் இருக்கவேண்டும். நான் என்கிற ஜீவன்களுக்கு அறிவும் சக்தியும் மிகவும் கொஞ்சமாயிருப்பதால், அவர்களால் அது செய்ய முடியாது. ஆகையால் தைவம் என்று ஒன்று இருக்க வேண்டும்—என்று.

இந்த யுக்தி ஸரியானதன்று—உலகமானது செய்யப்பட்டதாயிருந்தாலும், அதை ஏன் ஒரு ஜீவன் செய்திருக்கக்கூடாது? ஜீவன்களுக்குள் அறிவிலும் சக்தியிலும் தாரதம்மியமிருக்கிறதே. ஆனதினுல் ஏன்ஒருஜீவன் ஏராளமான புண்ணியத்தைப்பண்ணி, உலகத்தை உண்டு பண்ணக்கூடிய அறிவும் சக்தியுமுள்ளவனுயிருக்கக்கூடாது? இந்தப் பிரும்மாண்டத்தை ஆளுகிற பிரும்மா என்பவன் ஜீவன் தானே. ஜீவன்களிருப்பதாகவும், அவர்களுக்கு அறிவும் சக்தியும் இருப்பதாகவும் எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறேம். அவர்களில் ஒரு ஜீவனுடைய அறிவுக்கும் சக்திக்கும் அளவில்லையென்பதை மாத்திரம் ஒப்புக்கொள்வது நல்லதா? அல்லது ஒருவருக்கும் தெரியாத புதிதான தைவம் என்ற ஒன்றையும், அதற்கு அளவில்லாத அறிவையும் சக்தியையும் ஒப்புக்கொள்வது நலமா? என்றால், முதலாவதே நலம். புதிதாக ஒரு வஸ்துவை ஏற்படுத்துவதைக் காட்டிலும், இருக்கிற வஸ்துவுக்கு ஒரு குணத்தையோ, ஒப்புக்கொண்ட குணத்துக்கு அளவில்லாமையையோ ஏற்படுத்துவது தகுந்ததென்று எல்லா சாஸ்திரக்காரர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறர்கள். ஆகையால் தைவமிருக்கிறதென்று யுக்திமாத்திரத்தைக்கொண்டு சொல்ல முடியாது.

7. இங்கே ஸாங்கியனும் பௌத்தனும்—ஏன் கஷ்டப்படுகிறய், தைவமென்று ஒன்று எதற்காக வேண்டும்-என்று கேட்கலாம். தைவமில்லாவிட்டால் உலகத்தில் காணப்படுகிற பலவிதமான தாரதம்மியங்கள் எப்படி ஏற்படும். ஒருவன் பணக்காரன். இன்னெருவன் ஏழை. ஒருவன் புத்தியுள்ளவன். ஒருவன் முட்டாள். ஒருவன் அழகுள்ளவன். மற்றொருவன் குரூபி. இவைகள் எப்படி ஏற்பட்டன? பௌத்தன் பதில் சொல்லுகிறன்—இவைகள் கர்மத்தினுல் ஏற்பட்டன. நல்ல கர்மம் செய்தவன் நல்லதையும், கெட்டகர்மம் செய்தவன் கெட்டதையும் அடை

கிறான்—என்று. அவனைக் கேட்போம். கர்மம் என்றால் வேலை அதைப்பண்ணி முடித்த உடனே அது போய்விடுகிறது. ஆதலால் அது இருக்கவுமில்லை. அதற்கு அறிவுமில்லையே. அது எப்படிப்பலன் களைக்கொடுக்கும்? என்று. இதற்கு அவன் ஒரு பதில் சொல்லக்கூடும். அதாவது—கர்மம் உடனே போன போதிலும், அது செய்கிறவனிடத்தில் ஒரு சக்தியையுண்டு பண்ணுகிறது. அடுப்பில் ஒரு பானையில் ஜலம் வைத்து நெருப்பைப் போட்டுக் காய்ச்சினால், வெந்நீராக ஆகிறது. நெருப்பு அணைந்துபோன போதிலும், வெந்நீரில் சூடு இருக்கிறது. அதுபோல. இந்த சக்திக்கு அதிருஷ்டம் என்றுபெயர். அது தகுந்த காலத்தில் பலனைக் கொடுக்கிறது—என்று. இந்த பதிலும் ஸரியன்று—அதிருஷ்டத்துக்கும் அறிவில்லையே. அறிவுள்ளவனால் ஏவப்படாமல் ஒரு அறிவில்லாத வஸ்து ஒரு வேலையைச் செய்வதை யாராவது பார்த்திருக்கிறார்களா ?

8. ஜீவன். யோகாசாரன் என்கிற பௌத்தன் சொல்லுகிறான்—நான் என்பது அறிவு. அதற்கு அறிவு இல்லை. அது ஒரு க்ஷணமிருந்து போய் விடுகிறது. அடுத்த க்ஷணத்தில் இன்னொரு அறிவு வருகிறது. அதுவும் ஒருக்ஷண மிருந்து போய் விடுகிறது. இப்படி அறிவானது வெள்ளம் போல் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்கிறது. இந்த அறிவின் பிரவாஹத்தை (வரிசையை) த்தான் ஜீவன் என்று சொல்லுகிறது—என்று. இது ஒருவருடைய அனுபவத்துக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. நேற்று பார்த்த ஒருவனை இன்றைக்குப் பார்க்கும்போது, "அவன்தான் இவன்" என்று சொல்லுகிறோம். அவன் என்றால் நேற்றுப் பார்க்கப்பட்டவன். அவனும் இன்றைக்குப் பார்க்கப்பட்டவனும் ஒன்று என்று இதினால் ஏற்படுகிறது. ஆனதால் ஜீவன் ஒரு க்ஷணமிருந்து அழிந்து போகிறான் என்று சொல்லமுடியாது. பௌத்தன் பதில் சொல்லுகிறான்—நேற்றைக்குப் பார்க்கப்பட்டவன் வேறு. இன்றைக்குப் பார்க்கப்படுகிறவன் வேறு. இரண்டுபேரும் ஒரே மாதிரியாயிருப்பதாலே நீ மயங்குகிறாய்—என்று. இதுவும் ஸரியன்று—மயங்குகிற ஒருவன் ஒருவனை நேற்றைக்கும் மற்றொருவனை இன்றைக்கும் பார்த்தால்தானே அவர்கள் ஒன்று என்று

மயங்கக்கூடும். அப்போது இரண்டு நாள்களிலும் ஒருவன் இருக்கவேண்டுமே. அதனால் ஜீவன் ஒரே க்ஷணமிருக்கிறான் என்று சொன்னது போய் விட்டது. அவன் நிலையாயே இருக்கிறான்.

9. வைசேஷிகன் (தர்க்க சாஸ்திரம் ஏற்படுத்தினவன்) ஜீவன் விபு (எங்கும் நிறைந்திருக்கிறவன்) என்று சொல்லுகிறான். அது பிசகு. ஜீவன் எங்கும் நிறைந்திருந்தால், எல்லா இடத்து ஸங்கதிகளும் ஏன் அவனுக்குத் தெரியவில்லை என்றால், வைசேஷிகன் பதில் சொல்லுகிறான்—ஜீவன் எங்கும் நிறைந்திருந்த போதிலும், எந்த இடத்தில் அவன உடம்பிருக்கிறதோ, அந்த இடத்தில் தான் அறிவு உண்டாகிறது. மற்ற இடத்து ஸங்கதிகள் அவனுக்குத் தெரியாது— என்று. அதுவும் தப்பு— இல்லாத ஒரு ஸங்கதியைச் சொல்லி, அதற்கு ஸமாதானம் சொல்லுவானேன்? புண்ணியம் பண்ணிச் செத்துப் போனவன் ஸ்வர்க்கத்திற்குப் போகிறான். பாபம் பண்ணினவன் நரகத்துக்குப் போகிறானென்று சொல் இருக்கிறதே. எங்கும் நிறைந்தவன் எந்த விடத்துக்குப் போகிறது? எங்கிருந்து வருகிறது? ஜீவன் சின்னதாயிருந்தால் தான் போக்கும் வரத்தும் கூடும்.

ஜைநன்—உடம்பு அளவு எத்தனையோ, அத்தனை அளவுள்ளது ஜீவன்—என்று சொல்லுகிறான். அதுவும் பிசகு— ஜீவனுக்கு அனேகம் பிறப்பு உண்டாகிறதென்று நீயும் ஒப்புக்கொள்ளுகிறாய். போன ஜந்மம் யானையாயிருந்து அடுத்த ஜந்மத்தில் எறும்பாகப் பிறந்தால், யானையின் உடம்பிலிருக்கிற ஜீவனுக்கு யானையின் அளவு இருப்பதால், அந்த உடம்பை விட்டு எறும்பின் உடம்பில் நுழையும்போது முழு ஜீவன் அதில் கொள்ளாதே. ஆகையாலே இந்த மதமும் பிசகு. ஜைநன் பதில் சொல்லுகிறான்- எந்த உடம்பில் ஜீவனிருக்கிறானோ, அந்த உடம்பிற்குத் தகுந்தபடி ஜீவ ஸ்வரூபம் சுருங்கிக் கொண்டும் விரிவையடைந்து கொண்டுமிருக்கிறது. ஆகையால் யானை உடம்பில் இருக்கும் ஜீவன் எறும்பின் உடம்பில் வரும்போது சுருங்குகிறது—என்று. அப்போது ஜீவஸ்வரூபத்துக்கு அடிக்கடி மாறுபாட்டை ஒப்புக்கொள்ளுகிறபடியால், சட்டிப்பானைபோல் அழிந்து விடும். மாறுபாடென்னும் அழிவுதான். ஆகையால் இந்த மதத்தையும் தள்ளிவிட

வேண்டியது. பிரும்மா முதல் கண்ணுக்குத் தெரியாத சின்னப் புழுவரையில் உள்ள எல்லா உடம்புகளிலும் ஜீவன் நுழைந்திருப் பதாலே, அவன் ஸ்வரூபம் மிகவும் சின்னதாயிருக்கிறது என்று சொல்லுவதே தகுந்தது. அப்படியே வேதம் சொல்லுகிறது. அதில் ஏன் உனக்கு இவ்வளவு த்வேஷம்.

10. ஸாங்கியன் ஜீவனை ஒப்புக்கொண்டு, அவன் அறிவே தவிர, அவனுக்கு அறிவில்லை என்று சொல்லுகிறான். அதுவும் தப்பு—இது ஒருவருடைய அநுபவத்துக்கும் ஒத்துக் கொள்ள வில்லை. ஏனென்றால், யாரும் ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது "நான் இதைப் பார்க்கிறேன்" என்று எண்ணுகிறார்கள். சொல்ல வும் சொல்லுகிறார்கள். அதில் நான் என்கிற வஸ்துவில் அறிவு என்பது இருக்கிறதாக ஏற்படுகிறது. ஆகையால் ஜீவன் அறிவு மாத்திரமன்று. அறிவாயும் அறிவுள்ளவனாயும் இருப்பவன்.

வைசேஷிகன் சொல்லுகிறான்—ஜீவனுக்கு அறிவு இயற்கை யன்று—நடுவில் வருகிறது, போகிறது. ஜீவனுடன் மனது சேர்ந் தால் அது வருகிறது. பிரிந்தால் அது போகிறது—என்று. அது பிசகு—அவன் மதத்தில் ஒருவன் மோக்ஷம் அடையும்போது அவனுக்கு மனது கிடையாது. ஆகையால் அப்போது அவனுக்கு அறிவு உண்டாகாது. அப்போது கல்லைப்போல் அறிவில்லாமல் இருக்க வேண்டியது இவ்விதமான மோக்ஷத்தை எவன் ஆசை ப்படுவன். ஸுகமில்லாத இந்த மோக்ஷத்தைக் காட்டிலும், ஸு கமுள்ள ஸம்ஸாரமே துக்கக்கலப்பு இருந்தாலும், நல்லது. எல்லா ரும் ஸம்ஸாரத்திலிருந்து கிளம்பி, அழிவில்லாததும், அளவில் லாததுமான ஸுகத்தை அநுபவிக்கவன்றோ ஆசைப்படுகிறார் கள். அறிவில்லாவிட்டால், இந்த அநுபவம் எப்படி வரும்? ஆகை யால் ஜீவனுக்கு அறிவு இருக்கிறதென்றும், அது எப்போது மிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்வது தான் பொருந்தியது.

11. ஸாங்கியன் சொன்னபடி ஜீவன் அறிவு என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஏனென்றால் அறிவு என்பது தன்னைப் பற்றியோ, தன்னையும் மற்றென்றையும் பற்றியோ பேசுவதற்குக் காரணமாய் இருப்பது. ஜீவன் தன்னைப்பற்றிப் பேசுவதற்குக் காரணமாயிருக்கிறான். ஆகையால் அது கூடும். இது நம்மு

டைய அநுபவத்துக்கு ஒத்திருக்கிறது. ஒருவனை "நான், நான்" என்று நீ சொல்லுகிறாயே, 'நான்' என்பது உனக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டால், என்னை எனக்குத் தெரியாதா? அவனவனுக்கு அவனவனைத் தெரியாதா என்று பதில் சொல்லுகிறான். 'நான்' என்பது தானாகவே தோன்றும் என்று அந்தச் சொல்லிற்குப் பொருள். இந்த ஸங்கதி வைசேஷிகன் மனதில் படவில்லை. அவன் ஜீவ ஸ்வரூபத்தை ஜடம் என்று சொல்லுகிறான். ஜடம் என்றால் தானாய் தோன்றாமல் வேறொன்றின் உதவியால் தோன்றுகிற வஸ்து. இருட்டில் விளக்குத்தானாய் தோன்றுகிறது. இருட்டிலிருக்கும் வஸ்துக்கள் அதின் உதவியால் தோன்றுகின்றன. ஆத்மா அந்த வஸ்துக்கள் போலன்று. விளக்குப்போன்றது.

12. உலகம் எல்லாராலும் கண்ணால் பார்க்கப்படுகிற உலகமானது இல்லை (பொய்)என்று யோகாசாரன் என்கிற பௌத்தன் சொல்லுகிறான். அவனைக் கேட்போம்—எல்லாருக்கும் கண்ணுக்குத்தெரிகிறதே. இப்போது தோன்றுகிறபடியே நேற்றைக்கும் தோன்றிற்றே. அது எப்படிப்பொய்-என்று. அவன் பதில் சொல்லுகிறான்—ஸ்வப்நத்தில் அநேக ஸங்கதிகளைப் பார்க்கிறோமே. அவைகள் பொய்தானே. அதுபோல உலகமும் பொய். அறிவு ஒன்று தான் உண்மையில் இருக்கிறது — என்று. இந்த உதாரணம் ஸரியானதன்று. தூங்கும்போது ஸ்வப்நத்தில் நமக்குத் தோன்றுகிற வஸ்துக்கள் நமக்கு மாத்திரம் தோன்றுகிறது எல்லாருக்கும் தோன்றவில்லை. உலகம் அப்படியன்று. அதை நாம் எப்படி பார்க்கிறோமோ, அப்படியே எல்லாரும் பார்க்கிறார்கள். மேலும், தூங்கி எழுந்திருந்தால் ஸ்வப்நத்தில் கண்டவைகள் போய் விடுகின்றன. உலகமோ நிலையாய் இருக்கிறது. ஆகையால் அது பொய்யன்று.

13. பௌத்தர்களுக்குள் ஸௌத்ராந்திகன் என்று சொல்லப்பட்ட இன்னொருவன்—உலகமிருக்கிறது, அதை நம்முடைய கண் முதலிய இந்திரியங்களால் அறிய முடியாது. யுக்திகளால் தான் அறிய முடியும். யுக்தியாவது—நமக்குப் பல அறிவுகள் உண்டாகின்றன—மரம், செடி, ஆடு, மாடு—என்று. இந்த அறிவுகளில் மரம் முதலான ஸங்கதிகளிருப்பதாக அறிந்தோம். அறி

வுகளில் இந்த ஸங்கதிகள் ஏது என்று யோஜிக்கும்போது, மரம் முதலியவைகளிலிருந்து இந்த ஸங்கதிகள் அறிவுக்கு வந்திருக்க வேண்டியது. ஆகையால் மரம் முதலியவைகள் இருக்கவேண்டும். உடம்பு தெரியாமல் தூங்கி எழுந்தவன் உடம்பில் கடிக்திருப்பதைப் பார்த்து தூங்கும்போது ஏதோ கடித்திருக்க வேண்டு மென்று சொல்வது போல—என்று. பிரத்தியக்ஷமாய் கண்ணால் பார்ப்பதை மறைப்பதால், இந்த மதம் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. இந்த ஸௌத்ராந்திகனுக்கும் முன் பாராவில் சொன்ன யோகாசாரனுக்கும் வித்தியாஸம் என்னவென்றால், இரண்டு பேர்களும் அறிவுகள் இருப்பதாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒருவன் அறிவுகளை உண்டாக்கும் உலகமிருக்கிறதென்று சொல்லுகிறான். மற்றொருவன் அது இல்லை என்று சொல்லுகிறான்.

14. வைபாஷிகன் என்கிற பௌத்தன் உலகம் கண்ணுக்குத்தெரிகிறதென்று சொல்லுகிறான். அவனும் ஸௌத்ராந்திகனும்—உலகத்தில் இருக்கும் வஸ்துக்கள் ஒரேக்ஷணமிருக்கின்றன. அடுத்த க்ஷணத்தில் அதேமாதிரி வஸ்துக்கள் உண்டாகின்றன. அவைகளும் ஒரே க்ஷணமிருந்து போய் விடுகின்றன—என்று சொல்லுகிறார்கள். மாமரத்திலிருக்கும் ஒரு பழத்தைப் பார்த்து, பறித்து, நறுக்கி, சாப்பிடுகிறோமே. பழம் ஒரே க்ஷணமிருப்பதானால், இது எப்படிக்கூடும்? என்றால், பார்த்த பழம் வேறு, பறிக்கப்பட்ட பழம்வேறு. நறுக்கினது வேறு. சாப்பிட்டதும் வேறுதான். எல்லாம் ஒரேமாதிரியாய் இருப்பதாலே, அவைகளை நீ ஒன்று என்று எண்ணுகிறாய்—என்றும் சொல்லுகிறார்கள். இதைக்கேட்டு எவன்தான் சிரிக்கமாட்டான். பௌத்தர்கள் சொல்லுகிறார்கள்—பரிஹாஸம் பண்ணாதே. ஒருவிளக்கு எரிகிறது. அதின் ஜ்வாலைகள் ஒன்று என்று மயங்குகிறார்கள். ஆனால் அநேக ஜ்வாலைகள் ஒன்றின்பின்னால் ஒன்று வந்துபோகின்றன. திரி நாலு அங்குலமிருக்கிறது அதில் வீசம் அங்குலம் எரிந்து ஜ்வாலை உண்டாகிறது. அதுஎரிந்து போனபிறகு அந்தஜ்வாலை போய் விட்டது. இரண்டாவது வீசம் அங்குலத்தில் இரண்டாவது ஜ்வாலை உண்டாகிறது. அதுபோல ஒவ்வொரு வஸ்துவும்

ஒவ்வொருக்ஷணமிருந்து போகிறது—என்று. இவர்களைக்கேட்க வேண்டியது. விளக்கின் ஜ்வாலைக்கு திரியும் எண்ணெயும் வேண்டும். அவைகள் போனால், அந்த ஜ்வாலையும் போய்விடுகிறது. பார்த்த மாம்பழம் போகிறதென்று சொல்லுகிறாயே, அதற்கு என்ன காரணம்? பறிக்கிற மாம்பழம் உண்டாவதற்கும் என்ன காரணம்? ஒரு காரணமும் தெரியவில்லையே. உலகத்தில் மண்ணைக்கொண்டு சட்டிப்பானைகள் செய்கிறார்கள். அந்த மண் இருக்கிறது. ஆனால் உருவம் வேறு. பார்த்த மாம்பழம் போய் விட்டபடியால், அதைக்கொண்டு பறித்த மாம்பழம் உண்டாகாதே. பின்னை அது எப்படி உண்டாயிற்று? பௌத்தன் பதில் சொல்லுகிறான்.—பறித்த மாம்பழம் உண்டாகிற வரையில் பார்த்த மாம்பழம் இருக்கிறது—என்று. இப்படியானால் இரண்டு மாம்பழம் கண்ணுக்கு படவேண்டுமே, ஒன்றைத்தானே பார்க்கிறோம். மேலும் பார்த்த மாம்பழம் இரண்டு க்ஷணமிருப்பதாக ஏற்படுமே. இது உன் மதத்துக்கு விரோதமல்லவா? இன்னொரு கேள்வி கேட்போம். இப்போது உலகத்தில் இருக்கிற வஸ்துக்கள் மாத்திரம் ஒரு க்ஷணமிருக்கின்றனவா? அவைகளுக்குக் காரணமாய் நீ சொல்லுகிற பரமாணுக்களும் ஒரே க்ஷணமிருக்கின்றனவா—என்று. பௌத்தன் பதில் சொல்லுகிறான்—எல்லாம் ஒரே க்ஷணம் தானிருக்கிறது—என்று. அப்படியானால் பரமாணுக்கள் சேர்ந்து தானே பூமி முதலானது உண்டாக வேணும். அவைகள் சேருவது எப்போது, உண்டாகிறது எப்போது? சேருவதுக்குள்ளே அவைகள் போய் விடும். உண்டாகிறதற்குள்ளே சேர்ந்தவைகள் போய்விடுமே. வாழை ஒரு வருஷத்தில் தார் போடும். தென்னை ஐந்து வருஷத்தில் காய்க்கும். இவைகள் ஒரு க்ஷணமிருந்தால், காய்களை எப்படிப் பார்க்க முடியும்? ஆகையாலே இந்த க்ஷணிகவாதம் மனதால் நினைக்கக்கூடத் தகுந்ததன்று.

15. இந்த உலகம் இப்படியே எப்போதுமிருந்ததா? அல்லது எதிலிருந்தாவது உண்டாயிற்றா? என்று விசாரிக்க வேண்டும். பல மதக்காரர்கள் இந்த உலகம் உண்டானது என்று சொல்லுகிறார்கள். ஸாங்கியன் சொல்லுகிறான்—ஸத்வம் ரஜஸ், தமஸ்,

என்று மூன்று வஸ்துக்கள் ஒரு காலத்தில் ஸமமாயிருந்தன. அதாவது—ஒவ்வொன்று அதிகமாயும், மற்றவைகள் குறைந்தும் இருக்கவில்லை. அப்போது இந்த உலக முண்டாகிறதில்லை. அந்த காலத்தைப் பிரளயகாலம் என்று சொல்லுகிறது. ஸமமா யிருக்கிற காலத்தில் அவைகளுக்குப் பிரகிருதி என்று பெயர். பிறகு இவைகள் ஸமமாயிருப்பது போய், ஒவ்வொன்று மேலிட்டது. அப்போது அந்தப்பிரகிருதி–மஹத், அஹங்காரம், ஐந்து பூதங்கள், பத்து இந்திரியங்கள், மனது, இப்படி மாறிற்று. அவைகளிலிருந்து இவ்வுலகம் உண்டாயிற்று. இப்படித்தான் உண்டா யிருக்கவேண்டும். காரணமான ஸத்வம், ரஜஸ், தமஸ்ஸுக்கள் ஸுகத்தையும், துக்கத்தையும், தப்பு எண்ணத்தையுமுண்டு பண்ணுகின்றன. இவைகளைத் தான் இவ்வுலகத்திலும் பார்க்கிறோம்—என்று. நாம் ஸாங்கியனைக் கேட்போம். பிரகிருதி உலகமாக ஆகிறதே, இது தானாய் ஆகிறதா? அல்லது அறிவுள்ள ஒருவன் அதை உலகமாக ஆக்குகிறானா—என்று. ஸாங்கியன் பதில் சொல்லுகிறான்—பிரகிருதி தானாகவே உலகமாயிற்று—என்று. ஓ ஸாங்கியனே! ஒரு வீடு கட்ட செங்கல்லும் சுண்ணாம்பும் வந்திருக்கிறது. அவைகளைக் கொண்டு ஒரு கொத்தன் வேலை செய்தால் தானே வீடாகிறது. கொத்தன் வேலை செய்யாவிட்டால், கல்லும் சுண்ணாம்பும் வீடாக ஆகுமா? அப்படியே பிரகிருதியையும் அறிவுள்ளவன்தான் உலகமாகச் செய்யவேண்டுமே—என்று. அவன் சொல்லுகிறான்—பால் தயிராக ஆகிறதே. குளிர்ந்த தேசத்தில் தண்ணீர் பனிக்கட்டியாக ஆகின்றதே. அங்கே அறிவுள்ளவன் வேலை என்ன?—என்று. இதற்கு நாம் சொல்லுவதாவது. அறிவில்லாத வஸ்துவால் ஒரு காரியம் ஆகவேணுமேயானால், அறிவுள்ளவன் உதவி இல்லாமல் போனால் முடியாது என்பது இஷ்யூ. அதாவது நாம் விசாரிக்கவேண்டியது. நீ சொல்லுகிற பாலும் தண்ணீரும் இந்த இஷ்யூவில் அகப்பட்டவைகள். ஸாங்கியன் பதில் சொல்லுகிறான்—அறிவுள்ளவன் வேலை வேண்டியதில்லை. அவன் கிட்ட இருந்தால் போதும். பசுமாடு பில்லைத்தின்று தண்ணீரைக்குடிக்கிறது. அந்தப் பில்லும் தண்ணீரும் பாலாக ஆகின்றன. அவை பாலாக ஆகிறதற்கு மாடு இருந்தால் போதும்.

அது போலவே ஜீவன்கள் கிட்டஇருப்பதாலேயே பிரகிருதி உலகமாகிறது—என்று. இதற்கு பதில்—காளை மாடு பில்லைத் தின்று தண்ணீரைக் குடிக்கிறதே. அங்கு அறிவுள்ள ஜீவன் கிட்ட இருக்கிறதே, அவைகள் பாலாக ஆகின்றனவா? மேலும், ஜீவன்கள் எப்போதும் கிட்ட இருக்கிறார்களே. பிரகிருதி எப்போதும் உலகமாயிருக்கவேணுமே. பிரளயகாலத்தில் உலகமில்லை என்று சொல்லுகிறாயே. அது எப்படிக்கூடும். மேலும், பிரளயகாலத்தில் ஸத்வமும், ரஜஸ்ஸும், தமஸ்ஸும் ஸமமாயிருந்ததே. இது எப்படி மாறி ஒவ்வொன்று மேலிட்டு மற்றவை குறைந்தன. இது அறிவுள்ளவன் செய்கிற வேலையல்லவா? ஆகையால் தைவம் என்று ஒன்று ஒப்புக்கொண்டால் தான், அதின் எண்ணத்தாலே பிரகிருதி உலகமாக மாறிற்று என்று சொல்லலாம்.

16. வைசேஷிகன் உலகமுண்டாவதற்குத் தகுந்த காரணம் நான் சொல்லுகிறேன் என்று வருகிறான். அவன் சொல்லுகிறதாவது—ஒரு உள்ளில் கூறையின் ஓட்டை வழியாக ஸூரிய கிரணங்கள் ஒரு கம்பியாக வரும்போது, அதில் மிகவும் சின்னதான வஸ்துக்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. இவைகள் மிகவும் சின்னதாயிருந்தாலும், அவைகளை நாம் பார்க்கிறோம். அவைகளைக்காட்டிலும் சின்னதாய் நம்முடைய கண்ணுக்குப்படாமல் பரமாணு என்று சொல்லப்பட்ட வஸ்துக்கள் இருக்கின்றன. அவை—பூமி பரமாணுக்கள், ஜலபரமாணுக்கள், தேஜஸ்ஸு பரமாணுக்கள், காற்றுப் பரமாணுக்கள் என்று நாலுவகையாயிருக்கின்றன. பரமாணுக்களுக்கு அழிவில்லை. இவைகளில் இரண்டு பரமாணுக்கள் சேர்ந்து த்வியணுகம் என்று ஒன்று உண்டாகிறது. மூன்று த்வியணுகம் சேர்ந்து ஒரு த்ரயணுகமுண்டாகிறது. அவைகளின் வழியாய் உடம்புகளும், இந்திரியங்களும், மற்ற உலகங்களுமுண்டாகின்றன—என்று. அவனைக் கேட்போம். ஓ வைசேஷிகனே! பிரிந்திருக்கும் பரமாணுக்கள் சேருவதற்கு என்ன காரணம்—என்று. அவன் பதில்சொல்லுகிறான்—ஜீவன்கள்கர்மங்கள் செய்து அதிருஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகள் கொடுக்கும் பலன்களை அநுபவிக்க ஜீவன்களுக்கு உடம்புகளும் இந்திரி

யங்களும் வேண்டும். அதற்காக அதிருஷ்டங்கள் பரமாணுக்களைச் சேரும்படி பண்ணி உலகத்தை உண்டு பண்ணுகின்றன—என்று. நீ சொல்லுகிறபடியானால், அதிருஷ்டங்கள் எப்போது மிருக்கிற படியாலே, பரமாணுக்கள் எப்போதும் சேர்ந்து கொண்டிருக்க வேணுமே. பிரளயகாலத்தில் உலகமில்லையென்றும், ஒரே தடவை யாக அது உண்டாகிறது என்றும் நீ சொல்லுகிறாயே. அது எப்படிக்கூடும்? என்றால், அவன் பதில் சொல்லுகிறான்—அதிரு ஷ்டங்கள் உடனே பலன்களைக்கொடுக்கிறதில்லை. சில இன்றைக் கும், சில நாளைக்கும், சில அடுத்த வர்ஷத்திலும், சில அடுத்த யுகத்திலும், சில அடுத்த கல்பத்திலும் பலன் கொடுக்கின்றன. உலகத்தை யுண்டாக்கும் அதிருஷ்டங்கள் எல்லாம் சேர்ந்து ஒரே காலத்தில் உலகத்தை உண்டுபண்ணுகின்றன—என்று இது ஒப்புக் கொள்ளத் தகுந்ததன்று. ஜீவன்கள் இத்தனை என்று கணக்கில்லை. அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே மனதுடன் ஒரே விதமான கர்மத்தைச் செய்கிறதில்லை. ஆகையாலே எல்லா ருடைய அதிருஷ்டங்கள் ஒரேகாலத்தில் சேர்ந்து உலகத்தை உண்டுபண்ணும் வேலையை செய்ய முடியாது.

17. பரமாணு என்று அழிவில்லாத வஸ்து இருக்கிற தென்றுசொல்லுகிறாயே. அதை எதைக் கொண்டு சொல்லுகிறாய். நீயே அவைகள் கண்ணுக்குத் தெரியாது என்று சொல்வதாலே பிரத்தியக்ஷப் பிரமாணமில்லை. எதைக் கொண்டு அவைகளை ஒப்புக்கொள்ளுகிறாய்—என்று நாம் கேட்டால், அவன் பதில் சொல்லுகிறான்— யுக்தியால் சொல்லுகிறேன். யுக்தியாவது— ஸூரியன் வெளிச்சத்தில் சுழலுகிற சின்ன வஸ்துக்கள் கண்ணு க்குத் தென்படுவதால், அநேக அவயவங்கள் சேர்ந்து உண்டா யிருக்கவேண்டியது. உலகத்திலும் அப்படியே பார்க்கிறோம். இவைகளின் அவயவங்களுக்கும் அவயவங்கள் ஒப்புக்கொள்ள வேணும். கண்ணுக்குத் தெரிகிற வஸ்துக்களை உண்டுபண்ணுவ தால். அந்த அவயவங்கள் தான் பரமாணுக்கள்—என்று. இந்த யுக்தியை நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன விரோதம் என் றால், சொல்லுகிறான்—இந்த வஸ்து அதைக்காட்டிலும் சின்னது, அது இன்னொன்றைக் காட்டிலும் சின்னது, என்று பேசப்பட்ட

சிறுமைக்கு ஒரு முடிவு வேண்டும். அதாவது—இதற்குக்கீழ் சின்னது வேறு கிடையாதென்று ஒரு வஸ்துவை ஒப்புக்கொள்ள வேணும். நாணயங்களில் ஒரு பைசாவை (தம்படி) கடைசியாக ஒப்புக்கொள்வது போல. அப்படி ஒப்புக் கொள்ளா விட்டால், ஒரு கடுகுக்கும் மலைக்கும் என்னமாய் வித்தியாஸம் சொல்ல முடியும். இதை ஒப்புக்கொண்டால், கடுகில் ஆயிரம் பரமாணுக்கள் இருக்கின்றன. மலையில் லக்ஷம் பரமாணுக்கள் இருக்கின்றன என்று சொல்லலாம் அவயவங்கள் என்பது இரண்டுக்கும் பொதுதானே—என்று. அவனுக்கு நாம் சொல்ல வேண்டியது—ஸூரியன் வெளிச்சத்தில் சுழலும் சின்ன வஸ்துக்களையே சிறுமைக்கு முடிவாக வைத்துக் கொள்ளலாமே கண்ணுக்குத் தெரியாத பரமாணுக்களை ஏன் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆகையால் நீ சொல்லுவதும் ஒப்புக் கொள்ளத் தகுந்த தன்று.

18. யோகமதத்தையும் பாசுபத மதத்தையும் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்—நாங்கள் தைவமொன்றை ஒப்புக் கொள்ளுகிறோம். அது பிரகிருதியை உலகமாகச் செய்தது. ஸாங்கியனிடத்தில் போலவும் வைசேஷிகனிடத்தில் போலவும் எங்களிடத்தில் குற்றம் சொல்ல முடியுமா?—என்று. அவர்களைக் கேட்போம்—உலகத்தில் ஒரு வஸ்துவை உண்டுபண்ணுவதற்கு உபாதானம் என்றும், நிமித்தம் என்றும் இரண்டு காரணம் சொல்லுகிறார்களே. அவைகளில் தைவம் என்ன காரணம்—என்று. அவர்கள் பதில் சொல்லுகிறார்கள்—தைவம் நிமித்த காரணம். பிரகிருதி உபாதான காரணம். உலகத்திலும் அப்படியே பார்க்கிறோம். சட்டிப்பானைகள் செய்யும்போது குயவன் நிமித்த காரணம். மண் உபாதான காரணம். இப்படியே இரண்டு காரணங்களும் பிரிந்தே யிருக்கவேண்டும்—என்று. அவனைக் கேட்க வேண்டும். தாயார் வயிற்றிலிருந்து குழந்தை பிறந்து யுவா (ஆள்) ஆகிறதே. ஆளுக்கு எது உபாதானகாரணம், எது நிமித்தகாரணம். குழந்தை உடம்பே காரணம் என்று சொல்ல முடியாது. ஜீவன் போய்விட்டால் உடம்பு வளராது. ஆகையாலே உடம்போடு கூடிய ஜீவன் உபாதான காரணம். இந்தக்குழந்தையை செய்தது வேறொன்றும் காணப்படாமையால், அதுவே

நிமித்த காரணம் என்று சொல்ல வேணும். இப்படியே பிரகிருதியோடு சேர்ந்த தைவமே உலகத்திற்கு உபாதானகாரணமும் நிமித்த காரணமும் என்று சொல்லவேணும். இரண்டு காரணங்களும் வேருக இருக்கமுடியாது.

19. இப்படி யுக்திகளைக் கொண்டே ஏற்பட்ட மதங்களால் நம்முடைய அநுபவத்துக்கு ஒட்டினபடி ஒரு முடிவும் ஏற்படவில்லை. ஆகையாலே சப்தம் என்கிற பிரமாணத்தைக்கொண்டுதான் முடிவு செய்யவேண்டியது. நமக்குச் சப்தப் பிரமாணமானது வேதம்தான். அது என்ன சொல்லுகிறதென்றால், தைவம் என்று ஒன்றிருக்கிறது. எல்லா ஜீவன்களும் உலகமும் அவனுடைய சொத்து. அவனே அவைகளை அடக்கி ஆளுகிறான். ஜீவன்களுடைய கர்மத்துக்கு த்தகுந்தபடி தாரதம்மியத்துடன் உலகத்தை உண்டு பண்ணுகிறான். ஜீவன்கள் அழிவில்லாதவர்கள். அவர்களுடைய ஸ்வபாவம் அணு. அதாவது மிகவும் சின்னது. அவனுக்கு அறிவு என்கிற குணம் இயற்கையாகவே இருக்கிறது. ஆகையாலே மோக்ஷம் அடைந்த பிறகு அது அவனை விடுகிறதில்லை. ஜீவனுடைய ஸ்வரூபம் ஸ்வயம் பிரகாசம். அதாவது வேறொன்றின் உதவியில்லாமல் தன்னைக்காட்டும் தன்மையுள்ளது. உலகம் பொய்யன்று. உண்மையிலே இருக்கிறது. பௌத்தன் சொன்னபடி ஒரேக்ஷணம் இருப்பதன்று. அது அநேக உருவங்களையும் அநேகம் பெயர்களையுமுடையதாயிருக்கிறது. ஒரு காலத்தில் இந்த உருவங்களும் பெயர்களும் இல்லாமல் மிகவும் ஸூக்ஷ்மமாய் தைவத்துடன் சேர்ந்திருந்தது. அப்போது இது தைவம், இது பிரகிருதி என்றுகூட பிரிக்கமுடியாத படி இருந்தது. ஆகையால் தைவம் ஒன்றே இருந்தது என்று வேதம் சொல்லுகிறது. இப்படி ஒன்றுயிருந்த தைவமானது பல உருவங்களும் பல பெயர்களும் உள்ளதாக ஆகவேண்டுமென்று எண்ணி, இந்த உலகமாக ஆயிற்று. ஒன்றுயிருக்கிற காலத்திலும் உலகமான பிற்பாடும் பிரகிருதியும் ஜீவன்களும் தைவத்தோடே சேர்ந்தேயிருக்கின்றன. தைவம் ஆத்மாவாகையால், இவைகளை விட்டு ஒருக்காலும் பிரிகிறதேயில்லை. அது பிரிந்தால் இவைகள் வஸ்துக்கள் அல்ல. அவைகள் தைவத்துக்கு உடம்பு. தைவம் அவைகளுக்கு

ஆத்மா. பிரகிருதியும் ஜீவன்களுமாகிய உடம்போடு கூடின தைவம் நாம் பார்க்கிற உலகமாக ஆயிற்று. தைவமே உபாதான காரணமும் நிமித்த காரணமும். ஆகையால் நாம் முதலில் பார்த்தபடி தைவமும் ஜீவன்களும் பிரகிருதியும் வெவ்வேறு தத்வங்கள்.

20. வேதத்தை ஒப்புக்கொள்ளாத மதக்காரர்கள் சேர்ந்து சில ஆக்ஷேபங்களைச் சொல்லுகிறார்கள். அவைகளாவன—

(1) வேதம் எப்படிப் பிரமாணமாக ஆகலாம். அது ஒருவனால் செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா? ஒருவன்—தான் ஒரு ஸங்கதியை உள்ளபடி பார்த்து, மோசம் பண்ணவேணும் என்கிற எண்ணமில்லாமல், பார்த்தபடியே சொன்னால் தானே, அவனை நம்பலாம். வேதத்தைச் செய்தவன் இப்படியிருந்தான் என்று சொல்ல முடியுமா? இதற்குப் பதில்—வேதம் ஒருவனாலும் செய்யப்படவில்லை. ஆகையால் சொன்னவனாலுண்டான தோஷம் வேதத்துக்கு கிடையாது. அது எப்போதுமிருந்து கொண்டிருக்கிறது.

(2) வேதம் எப்போது மிருக்கிறதென்று சொல்லலாமா? வேதம் என்பது சொல்லாயிற்றே. சொல் சொன்னவுடன் போய் விடுகிறதே. இதற்குப் பதில்—வேதத்தில் என்ன எழுத்துக்கள் இருக்கின்றனவோ, எந்த வரிசையாயும் எந்த ஸ்வரத்துடனும் இப்போது சொல்லுகிறார்களோ, இந்த மாதிரியே அந்த எழுத்துக்களும், அந்த வரிசையும் அந்த ஸ்வரங்களும் எப்போதும் சொல்லப்படுகின்றன. ஒரேமாதிரியாயிருப்பதைப் பற்றி நித்யம் என்று சொல்லுகிறது.

(3) வேதத்தில் சில மந்திரங்களை இந்த ருஷி பண்ணினார். வேறு மந்திரங்களை வேறு ருஷிகள் செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறதே. வேதம் எப்படி நித்தியமாயிருக்கும். பதில்—வேதம் நித்தியம் தான். அதில் அடங்கிய மந்திரங்களும் நித்தியங்கள் தான். அவைகளை ஒருருஷியும் பண்ணவில்லை. மறைந்துபோன மந்திரங்களை அந்தருஷிகள் யோகத்தாலே பார்த்து, அவைகளைப் பிறர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். ஆகையாலே அந்த

மந்திரங்களுக்கு அவர்களை ருஷிகள் என்று சொல்லுகிறது. ருஷி என்கிற சொல்லுக்கு "பார்த்தவர்" என்று பொருள்.

(4) தைவம் உலகத்துக்கு உபாதாந காரணமென்று சொன்னீரே. சட்டிப் பானைகளுக்கு உபாதாந காரணமான மண்கட்டி மாறுதலை யடைந்து, வேறு உருவங்களையும் பெயர்களையும் அடைந்து விடுகிறதே. அப்படியே தைவமும் மாறுதலை யடைந்தால், அதை ஸத்தியம் என்று எப்படிச் சொல்லக் கூடும். ஸத்தியம் என்றால், ஸ்வரூபத்திலாவது ஸ்வபாவத்திலாவது மாறுதலில்லாமல் ஒரே மாதிரியாக இருப்பதல்லவா? பதில்—தைவம் மண்கட்டியைப் போல் மாறுதலை அடைகிறதில்லை. நம்முடைய உடம்புகள் வளரும்போதும், இளைக்கும்போதும் மாறுதல்கள் உடம்பிலே தான் உண்டாகின்றன. இவைகள் உடம்புக்குள் இருக்கும் ஆத்மாவுக்கு இல்லை. அப்படியே தைவத்துக்கு உடம்பாயிருந்த பிரகிருதியானது ஒன்றாயிருந்து பல உருவமாக மாறுதலையடைந்தாலும், அதற்குள்ளே ஆத்மாவாக இருக்கும் தைவத்துக்கு ஒரு வித மாறுதலும் கிடையாது.

(5) தைவம் உபாதான காரணமாயிருந்தால், முழுவதும் செலவழிந்து போய்விட்டதா? ஒரு பாகம் செலவழிந்து ஒரு பாகம் பாக்கி இருக்கிறதா? முழுவதும் செலவழிந்துபோனால் தைவமே யில்லை. ஒரு பாகம் மீதியிருந்தால், தைவத்துக்கு அவயவங்கள் இல்லை யென்பது விரோதிக்கும். பதில்—கண்ணால் பார்க்கமுடியாத ஸங்கதிகளை வேதத்தைக் கொண்டே அறியவேண்டும். அது எப்படிச் சொல்லுகிறதோ, அதையே ஒப்புக் கொள்ள வேண்டும். அந்த விஷயங்களில் யுக்தியைக் கொண்டு இது கூடும், இது கூடாதென்று சொல்லக்கூடாது. மண்கட்டி அழிந்து சட்டியும் பானையும் ஆவதைப்பார்த்து நீ இந்த ஆக்ஷேபம் செய்கிறாய். மண்கட்டி ஒரு ஜாதி. தைவம் வேறு ஜாதி. அதனுடைய ஸ்வபாவம் தைவத்துக்கு எப்படி வரும்? சுடுவது நெருப்புக்கு ஸ்வபாவம். இதைக்கொண்டு ஜலம் ஏன் சுடவில்லை என்று கேட்கலாமோ.

(6) தைவம் உலகமாக ஆகிறதென்று சொன்னீரே. எத ற்காக இப்படி ஆகிறது? குயவன் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடு படுகிறான். தைவத்துக்கு வேண்டியதெல்லாமிருக்கிறதே.
பதில்— வேண்டியதெல்லாமிருக்கிற மஹாராஜா ஸாயங்கால வேளையில் பந்தாடப் போகிறானே. எந்தப் பிரயோஜனத்துக்காக இது செய்கிறான். அது போல. வாஸ்தவத்தில் உலகத்தையுண்டு பண்ணுவது அளவில்லாத தயையின் வேலை. பிரளயகாலத்தில் அறிவில்லாத வஸ்துக்களைப்போல் இருக்கிற ஜீவன்களைப் பார்த்து, தைவமிரக்கப்பட்டு, உலகத்தை யுண்டுபண்ணி, அவர்களுக்கு உடம்புகளையும் இந்திரியங்களையும் கொடுத்து, சாஸ்திரத்தைப் பலபேர்களைக் கொண்டு சொல்லி வித்து, தன்னைத்தியானம் செய்தாவது, அல்லது தன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாவது தன்னிடம் வரவேணும் என்று இப்படிச் செய்கிறது.

21. 1. இந்த ஸமயத்தில் நாலு அத்வைதிகள் வந்து ஆக்ஷேபிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் சொல்லுகிறார்—உன்னைப்போல நானும் வேதத்தை ஒப்புக் கொள்ளுகிறவன். ஸாங்கியனைப்போலன்று. "இந்த உலகமெல்லாம் பிரும்மம்" என்று வேதம் சொல்லுகிறது. அதின் பொருள்—பிரும்மம் ஒன்றுதான் இருக்கிறது, வேறொன்று கிடையாது என்று. இப்படி யிருக்க, நீ மூன்று தத்வங்கள் இருப்பதாக எப்படிச் சொல்லலாம்—என்று. பதில்— வேதத்தில் "அநுபவிக்கிறவன், அநுபவிக்கத்தகுந்தது, இவைகளை ஏவுகிறவன்—என்று மூன்று வஸ்துக்கள் இருக்கின்றன. அநுபவிக்கிறவன் ஏவுகிறவனை த்யானம் செய்தால், ஏவுகிறவனான தைவம் பிரீதியடைந்து, இவனுடைய ஸம்ஸாரத்தைப் போக்கு

---

1. பெரியவர்கள் சொன்னவைகளில் குற்றம் கண்டு பிடிக்கிறாயே. நீ யார்? என்று ஒருவன் கேட்கலாம். இந்தக்குற்றங்களை நானாகச் சொல்லவில்லை. வேறொரு பெரியவர் புத்தகத்தில் எழுதியதையே இங்கே எழுதுகிறேன். ஒரு மதத்தில் குற்றமிருப்பதாக இன்னொரு மதக்காரர் எழுதினால், உண்மையைக்கண்டுபிடிக்க வேணுமென்று ஆசைப்படுகிறவர்கள், அதை நன்றாய் கவனிக்கவேணும். தூஷித்ததாக நினைக்கக்கூடாது. நம்முடையதென்று ஒருமதமும் கிடையாது.

கிறது " என்று இன்னொரு வாக்கியமிருக்கிறதே. அதை நீங்கள் மறந்தீர்களா—என்று. அவர் சொல்லுகிறார்—நாங்கள் சொல்கிற வாக்கியத்தாலே உன்னுடைய வாக்கியம் ரத்தாகி விட்டது. வேதம் பிரும்மத்துக்கும் உலகத்துக்கும் பேதம் கிடையாதென்று சொல்ல வந்தது. பேதம் என்பதைக் காட்டித் தானே, அதை இல்லை யென்று சொல்லவேணும். உன் வாக்கியம் பிரும்மம் வேறு, உலகம் வேறு என்று சொல்லுகிறது. என் வாக்கியம் அந்த பேதம் இல்லை என்று சொல்லுகிறது. ஆகையாலே உன் வாக்கியம் ரத்தாகிபபோய் விட்டது—என்று. இது பிசகு—பேதம் என்பது வேறு பிரமாணத்தாலே ஏற்பட்டிருந்தால், அதை எடுத்துச் சொல்லி, அந்த பேதமில்லை யென்று வேதம் சொல்லலாம். வேறு பிரமாணத்தாலே தைவம் என்று ஒன்றிருக்கிறது. அது வேறு, உலகம் வேறு என்று தெரிய வில்லையே. வேதம் தானே தைவமென்று ஒன்றிருக்கிறது. அது வேறு, உலகம் வேறு என்று சொல்லுகிறது. இப்படித் தெரியாத ஸங்கதியைச் சொல்லித் தெரியப்படுத்தி, அந்த ஸங்கதியை பொய்யென்று சொன்னால், வேதமானது பைத்தியம் பிடித்தவன் பேச்சுப்போலாகுமே. ஆகையால் என் வாக்கியம் ரத்தாகி விடவில்லை. என் வாக்கியத்திற்கும் உங்கள் வாக்கியத்திற்கும் பொருத்தமாக அர்த்தம் சொல்ல வேண்டியது.

22. இது நிற்க. ஒரே தத்வமிருந்தால், பல விதமான பேதங்களுடைய உலகம் எப்படித் தோன்றுகிறது? இதற்கு நீங்கள் காரணம் சொல்லவேண்டும். அவர் சொல்லுகிறார்—பிரும்மத்தை அவித்யை சூழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால் அது தன்னை அறியவில்லை. இருட்டிலிருப்பவன் தன்னைக் கண்ணால் பார்க்காததுபோல். அதனால் தன்னைக் காட்டிலும் வேறான உகைமிருப்பதாக மயங்குகிறது. உண்மை தெரிந்தால் உலகம் போய்விடும்—என்று. இதுவும் பிசகு. பிரும்மத்திற்கு எல்லாம் தெரியும் என்றும், இந்த அறிவுஇயற்கையாகவே இருக்கிறதென்றும் வேதம்சொல்லுகிறதே. ஆகையாலே அது தன்னை எப்போதும் உள்ளபடி பார்த்துக் கொண்டிருக்கிறதே. அதற்கு அவித்யை எப்படி வரும். அவித்யை என்றால் அறிவில்லாமை தானே.

அவர் பதில் சொல்லுகிறார்—பிரும்மத்துக்கு அறிவு என்பது கிடையாது, ஏனென்றால், வேதமே அது நிர்குணம் என்று சொல்லுகிறது. நிர்குணம் என்றால், ஒரு குணமுமில்லாதது என்று பொருள்—என்று. இதுவும் பிசகு—சில வாக்கியங்களில் பிரும்மத்துக்கு அநேக நல்ல குணங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன—அறிவு, வலிமை (பலம்), எல்லாரையும் அடக்கி ஆளுவது, நினைத்த வேலை முடிக்கும் தன்மை இவை முதலியவைகள். இதனால் குணமில்லை என்கிற சொல்லுக்கு கெட்ட குணமில்லை என்று தான் பொருள். ஆகையால் என் கேள்விக்குப் பதில் வரவில்லை.

23. மேலும், பிரும்மம் ஸ்வயம் பிரகாசம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அதாவது—வேறொன்றின் உதவியில்லாமல் தானே தோன்றுகிறது—என்று. தானே தோன்றுகிற வஸ்துவுக்குத் தன்னை அறியாமை எப்படி? ஒருவன் முத்துச்சிப்பியைப் பார்க்கிறான். அதன் உருப்படி மாத்திரம் தெரிகிறது. சிப்பி என்பது தோன்றவில்லை. பளபளப்பாயிருப்பதைக் கொண்டு அதை வெள்ளியென்று எண்ணுகிறான். அப்படியே பிரும்மத்துக்குக்குணமிருந்தால், அதன் ஸ்வரூபம் மாத்திரம் தெரிகிறது. அதன் குணத்தை அவித்யை மறைக்கிறது என்று சொல்லலாம். நீங்களோ பிரும்மத்துக்குக் குணமில்லையென்று சொல்லுகிறீர்கள். அது தோன்றினால், தோன்றாத பாகமில்லை.

24. மேலும், அவித்யை யென்பது அறிவினாலே போகும் என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிற பிரும்மம் அறிவு தானே. அதினால் அவித்யை ஏன் போகவில்லை? அவர் பதில் சொல்லுகிறார்—பிரும்மம் என்கிற அறிவு ஸ்வரூபமான அறிவு. அவித்யையைப்போக்கும் அறிவு "பிரும்மம் ஸ்வயம் பிரகாசம்" என்கிற வாக்கியத்தால் வரும் அறிவு. பதில்—ஸ்வரூபமான அறிவினால் எந்த ஸங்கதி தெரிகிறதோ, அதைக்காட்டிலும் என்ன அதிக ஸங்கதி வாக்கியத்தால் தெரிகிறது. ஒன்றும் அதிகமாய் தோன்றவில்லையே. ஆகையாலே ஸ்வரூபமான அறிவினாலே அவித்யை போகாவிட்டால், வாக்கியத்தினால் வரும் அறிவினாலும் போகாது. இது தவிர, பிரும்மம் ஸ்வயம் பிரகாசமாயிருப்பதாலே, ஒரு அறிவுக்கும் விஷயமன்று. அறிவுக்கு விஷயமாயிருப்

பது ஸ்வயம் பிரகாசமாகாது என்று உங்களுடைய மதம். வாக்யத்தினால் வரும் அறிவுக்கு பிரும்மம் விஷயம் என்று சொல்வது உங்கள் மதத்துக்கு விரோதம்.

25. அவித்யையானது பிரும்மத்தைத் தன்னை அறியாதபடி செய்கிறதென்று சொல்லுகிறீர்கள். பிரும்மம் பிரகாசமுள்ளது என்று சொன்னால், அவித்யையினால் ப்ரகாசம் போனாலும், பிரும்மம் இருக்கும். பிரும்மமே பிரகாசமானால் அவித்யையினால் பிரகாசம் போகும்போது பிரும்மமே போய்விடுமே. அவித்யைப் பிரகாசத்தைப்போக்குவது என்பது என்ன? பிரகாசத்தை உண்டாகாதபடி பண்ணுகிறதா? அல்லது பிரகாசத்தை அழிப்பதா? பிரும்மமான பிரகாசம் உண்டானதன்று என்று சொல்லுகிறபடியால், அவித்யை அதை அழித்தது என்று தான் சொல்லவேணும். அப்போது பிரும்மம் அழிந்ததென்று முடியும்.

26. அவித்யை என்று சொல்லுகிறீர்களே. அது உண்மையா? அல்லது பொய்யா? உண்மையானால் பிரும்மம் உண்மையாயிருக்கிற வஸ்து. அவித்யையும் உண்மையாயிருக்கிற வஸ்து. அப்போது இரண்டு உண்மையான வஸ்துக்கள் ஏற்படும். உண்மையான வஸ்து ஒன்றுதானென்று உங்களுடைய மதம். அது பொய்யாயிருந்தால், பொய்யான உலகம் உண்டாவதற்காகத்தானே அவித்யையை ஏற்படுத்தினீர்கள். பொய்யான அவித்யை உண்டாவதற்கு இன்னொரு அவித்யை வேணுமே. அதுவும் பொய்யாயிருந்தால், அதுக்கு ஒரு அவித்யை வேண்டுமே. இதற்கு எங்கு முடிவு? ஒருவன் முத்துச்சிப்பியை வெள்ளியென்று எண்ணினான். பிறகு கிட்டப்போய் பார்த்தான். சிப்பி என்று தெரிந்து கொண்டான். ஆகையால் அறிவுள்ளவனுக்கன்றோ தப்பு எண்ணம் உண்டாவதும் அது போவதும். அறிவில்லாதபிரும்மத்துக்கு தப்பு எண்ணமுண்டாவதும் அது போவதும் எப்படி? இந்த ஸங்கதிகளை யாரும் நன்றாய் கவனிக்க வேண்டும்.

இங்கே சொன்ன குற்றங்களுக்கு ஸமாதானமாக அத்வைதிகள் சொல்லுகிறார்கள்—நாங்களும் மூன்று தத்வங்களையும் உன்னைப்போல் வியவஹார தசையில் ஒப்புக்கொள்ளுகிறோம்—என்று. இதற்குப் பதில்—வியவஹார தசை என்றால் என்ன? வியவஹார

ர்ம் என்றால் பேச்சு. வார்த்தைக்குச் சொன்னேனே யொழிய உண்மையில் இல்லையென்று சொன்னதாக ஆயிற்று. அதனால் என்ன லாபம்? ஒருவனுக்குப் பதினாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி, அவன் ஸந்தோஷப்பட்டு, கொடு என்று கேட்கும் ஸமயத்தில், வேடிக்கைக்குச் சொன்னேன் என்று சொன்னால், அவனுக்கு எவ்வளவு ஸங்கடத்தை யுண்டு பண்ணும். அதுபோலிருக்கிறது.

27. இரண்டாவது அத்வைதி சொல்லுகிறார்—பிரும்மத்துக்கு அவித்யையிருக்கிறது என்று சொல்வது பெரிய குற்றம். அவித்யை ஜீவனுக்குத்தானிருக்கிறது. எப்படி என்றால், கண்ணாடி, ஜலம், மெருகு போட்ட வெள்ளி இவைகளில் முகத்தின் பிரதிபிம்பங்கள் தோன்றுகின்றன. முகம் ஒன்றாயும் அழுக்கில்லாமலுமிருந்தாலும், அவைகளுக்குத் தகுந்தபடி பிரதிபிம்பங்கள் சின்னதாயும், பெரிதாயும், அழுக்குள்ளதாயும், அழுக்கில்லாததாயும் பலவிதமாய் தோன்றுகின்றன. அதுபோல பிரும்மம் ஒன்றாயும் துக்கம் முதலான குற்றமில்லாமலிருந்தாலும், அனேக அவித்யைகளினாலே ஒரே பிரும்மம் அனேகமாகத் தோன்றுகிறது. அப்படித் தோன்றியவைகள் ஜீவன்கள். அவித்யைகளுக்குத் தகுந்தபடி, ஒன்று ஸுகமுள்ளதாகவும், ஒன்று துக்கமுள்ளதாகவும் காணப்படுகின்றன. பிரும்மமோ, ஒரேமாதிரியாக ஸுகமும் துக்கமுமில்லாமலிருக்கிறது—என்று அவரை நாம் கேட்போம்—யாரிடத்தில் அவித்யை இருக்கிறது? அது பிரும்மத்தினிடமிருக்க இல்லை யென்று நீங்களே சொல்லுகிறீர்கள். அது ஜீவனிடத்திலுமிருக்கக்கூடாது. ஏனென்றால், அவித்யையால் ஜீவன், ஜீவனால் அவித்யை என்று, ஒவ்வொன்று மற்றொன்றைப் பொருத்திருக்கிறது. ஒரு பிரும்மசாரிக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது. கல்வியாணமானால் பயித்தியம் போகும். பயித்தியம்போனால் கல்வியாணமாகும் என்று சொல்வதுபோல. அவர் பதில் சொல்லுகிறார்—பீஜாங்குரநியாயம் கேட்டதுண்டா ? முளை விதையினால். விதை முளையால். அதாவது—முளைத்து மரமானால் விதையுண்டாகும். அதுபோல அவித்யையால் ஜீவன், ஜீவனால் அவித்யை—என்று. இதுவும் பிசகு—பீஜ—அங்குரநியாயம் (விதை—முளை) உங்களுக்கு ஒட்

டாது. ஒரு மரத்தின் விதையிலிருந்து ஒருமுளை யுண்டாகிறது அது மரமாகி அதிலிருந்து வேறு விதை உண்டாகிறது. அதிலிருந்து இன்னொரு முளை உண்டாகிறது. இங்கே எந்த அவித்யையினால் எந்த ஜீவனுண்டாகிறதோ, அந்த ஜீவனிடத்தில் அந்த அவித்யையிருக்கிறது என்று நீங்கள் சொல்ல வேணும். அது ஒட்டாது. அவர் சொல்லுகிறார்—அவித்யையும் ஜீவனும் பீஜாங்குரநியாயம் போலவே ஒன்றின்பின் ஒன்று வருகிறதென்று ஒப்புக்கொள்ளுகிறேன். ஒரு ஜீவனிடமிருந்து ஒரு அவித்யை வருகிறது. அதிலிருந்து வேறுஜீவன், அதிலிருந்து வேறு அவித்யை—என்று. இதுவும் பிசகு—ஒரு ஜீவத்தன்மைபோய் வேறொரு ஜீவனுண்டாகிறான் என்று சொன்னால், ஜீவன்களுக்கு அழிவு ஏற்படும். ஜீவனை நித்தியமென்று சொல்லுகிற வேதத்திற்கு விரோதம். உம்முடைய மதத்துக்கும் விரோதம். மோக்ஷம் வரையில் ஜீவன் நிலையாயிருக்கிறான் என்று சொல்லுகிறீர்களே.

28. மூன்றாவது அத்வைதி பாஸ்கரன் சொல்வதாவது—ஒரே தத்வமிருக்கிறதென்று சொல்வது பிசகு. உண்மையில் அனேக அந்தக்கரணங்கள் இருக்கின்றன. ஆனால் பிரும்மமும் ஜீவன்களுமொன்று. அதாவது—பிரும்மமிருக்கிறது. ஜீவன்களில்லை. பிரும்மத்தினிடத்தில் அந்தக்கரணங்கள் சேருவதால், அவைகள் ஜீவன்களாகின்றன அந்தக்கரணங்கள் சேராத இடம் பிரும்மமாயிருக்கிறது. உதாரணம்—ஒரே ஆகாசம் எங்கும் நிறைந்திருக்கிறது. அப்படியிருந்தபோதிலும், அந்த உள், இந்த உள், வாசல் என்று சொல்லுகிறோம். சுவர்களால் தடுக்கப்பட்ட ஆகாசத்து (இடவெளி)க்கு உள்ளு என்று பெயர். சுவர்கள் வேறாயிருப்பதால், உள்ளுக்கள் வேறு. சுவர்களால் தடுக்கப்படாத இடவெளியை பெரிய ஆகாசம் என்று சொல்லுகிறது. அதுபோல ஒரு அந்தக்கரணத்தோடு சேர்ந்த பிரும்மம் வேறு. இன்னொரு அந்தக்கரணத்துடன் சேர்ந்த பிரும்மம் வேறு. ஒரு அந்தக்கரணத்துடனும் சேராத பிரும்மம் வேறு. இதைக் கொண்டு தான், வேதம் "பிரும்மம் வேறு, ஜீவன்கள் வேறு, அவர்களுக்குள்ளும் ஒவ்வொருவர் வெவ்வேறு என்று" சொல்லுகிறது. ஜீவத்தன்மை வந்த பிற்பாடு ஜீவனை பிரும்மம் கர்மம் செய்கிறது. மறுபடியும்

அந்தக்கரணத்துடன சேர்ந்து ஜீவத்தன்மையை யடைந்து கர்மம செய்கிறது ஜீவத்தன்மையும காமமும ஆறுபோல ஒன றின்பின ஒன்ருக பெருகிக கொண்டு வருகிறது இதைககொண டுதான வேதம "ஜீவனகளும அவாகள காமங்களும் எபபோது மிருக்கினறன" எனறு சொலலுகிறது அநதககரணம அணுவா யிருப்பதாலே அதனுடன சேர்ந்த பிருமமமாகிற ஜீவஸவரூபமும அணுவாயிருககிறது அநதககரணததுடன சேர்ககைபோனுல, அந்த ஜீவத்தனமை போயவிடுகிறது அதாவது மோக்ஷம் வரு கிறது—என்று இநத மதமும ஸரியன்று—(1) ஜீவததன்மை பிருமமததுககுததானே வருகிறது அது வருமபோது அதனு லுண்டாகும அறிவின குறைவும துககஙகளும பிருமமததுக்குத தான வருகிறது. துககஙகளைப பொய் எனறு சொல்லக்கூடாது அநதககரணஙகள உண்மையிலிருககினறன அவைகளுடன் சேர் க்கைகளுமுணமை அவைகளால் வருகிற அறிவுக்குறைவும துககங் களும் உணமை இவைகள எலலாம பிருமமததுககுததான வருகி றது அப்போது பிருமமததுககு பூர்ணமான அறிவு இருககிறது எனறும, ஒருவித துக்கம் முதலான குறறமிலலை எனறும வேதம சொலவதோடு விரோதிக்கும் (2) மேலும, ஒரே பிருமமததோடு அனேக அநதககரணஙகள சேருவதால, எல்லா ஜீவத்தன்மை களும் ஒரே பிரும்மத்துககுததானே வருகினறன அபபோது ஒவவொரு ஜீவனும எலலா ஜீவனகளையும் 'நான' என்று ஏன அறியவிலலை ஒரே பிரும்மமதானே எல்லா ஜீவன்களும அவர் சொல்லுகிருர்— பிருமமததுககு அனேக இடஙகளிருக்கினறன. ஒவ்வொரு இடததை ஒவவொரு அநதக்கரணம தொடுகிறது. அநதந்த அந்தக கரணஙகளுககு அதது தொடட இடமதான தெ ரியும் மறறது தெரியாது ஆகையால ஒரு ஜீவன மறற ஜீவனை அறியவேணடியதிலலை— எனறு இபபடி பிரும்மததினிடம வெவ் வேறு இடஙகளை ஒபபுககொணடால், பிரும்மததுக்கு அவயவங் கள் இல்லை யெனறு சொலலுகிற வேதவாககியததுடன விரோதிக கும் (3) பிருமமததுககு அவயவஙகள இல்லாவிடடால், அநதககரணங்கள் பிருமமததுடன சேருவதானுல, முழுவதும் சேரவே ணும், சேராத இடமேயிலலை, சேராத இடமு பிரும்மம் என்று

சொல்லுகிறீர்கள். சேராத இடமான பிரும்மம் ஏது. எல்லா அந்தக்கரணங்களும் ஒரே வஸ்துவைத்தொடுவதால், ஒரே ஜீவன் தான் இருக்கவேண்டியது. (4) மேலும், அந்தக்கரணத்துடன் சேர்க்கை போனால், ஜீவத் தன்மை போய் விடுகிறது. அதாவது மோக்ஷம் வருகிறது. தைவம் எங்கும் நிறைந்திருப்பதால், அந்தக்கரணங்கள் அதை எங்கேயாவது தொட்டுக் கொண்டே இருக்கவேணும். தொட்டவிடம் ஜீவன். அப்போது பந்தம் (கட்டு) வருகிறது. அந்தக்கரணம் அதை விட்டால், மோக்ஷம் வருகிறது ஆகையால் பந்தமும் மோக்ஷமும் அடிக்கடி வந்து கொண்டே இருக்கவேணும்.

29. கடைசி அத்வைதி யாதவப் பிரகாசன். அவர் சொல்லுகிறார்—ஜீவன்களைப் பொய் என்று சொல்வது பிசகு. தைவமும், ஜீவன்களும், பிரகிருதியும் எல்லாம் உண்மையில் இருக்கின்றன. இவைகள் ஒன்றுக் கொன்று வேறு தான். ஆனால் இவைகள் எல்லாம் ஸத் என்கிற ஒரே வஸ்துவிலிருந்து உண்டானவைகள். உதாரணம்—ஸமுத்திரத்தில் காற்றில்லாமல் போனால் ஜலம் அசங்காமல் இருக்கிறது. இதைப்போல ஸத் என்பது. காற்று அடித்தால், அந்த ஜலமானது அலைகளாகவும், நுரையாகவும், கொப்பளாங்களாகவும் ஆகிறது. இவைகள் போல் தைவமும், ஜீவன்களும், பிரகிருதியும். ஆகையால் வேதவாக்கியங்களுக்கு ஒன்றுக்கு ஒன்று விரோதமில்லை—என்று. இந்த மதமும் வேதத்துக்கு விரோதமானது. வேதம்—தைவமும் ஜீவன்களும் உண்டாகிறதில்லை என்று சொல்லுகிறது. மேலும், வெவ்வேறாக இருக்கிற இந்த மூன்று தத்வங்களும் பிரளயகாலத்தில் ஸத்தாக ஆய்விடுமாகையாலே, மோக்ஷம் என்பது தானே வந்து விடும். ஜீவன் அதற்காகப் பாடுபட வேண்டியதில்லை. ஆகையால் ஜீவன் தைவத்தைத் தியானம் பண்ணவேண்டும் என்கிற வேதவாக்கியங்களுக்குப் பிரயோஜனமில்லாமல் போய் விடும்.

30. நாலு அத்வைதிகளும் சேர்ந்து கேட்கிறார்கள்—எங்களுடைய மதத்தைத் தூஷித்தாயே. நான் சொன்ன வேதவாக்கியத்துக்கும் நீசொன்ன வேதவாக்கியத்துக்கும் பொருத்தமாக நீதான் அர்த்தம் சொல்-என்று. பதில் சொல்லுகிறேன், உண்மையில்லை

வமும், ஜீவன்களும் வெவ்வேறுதான். இந்த ஸங்கதியைப் பேதச் சுருதிகள் சொல்லுகின்றன. தைவமானது ஜீவன்களையும், பிரகிருதியையும்விட்டுப்பிரியாமையாலே,வேதம்தைவத்தையும்,மற்றவைகளையும்ஒன்ருகச் சொல்லுகிறது. உதாரணம்—ஒருவனை எந்த ஊர் என்றுகேட்டால், நான் ஸ்ரீரங்கம் என்று சொல்லுகிறன். அவன் ஸ்ரீரங்கமோ. அவன் ஸ்ரீரங்கத்திலிருப்பதாலே தன்னை ஸ்ரீரங்கமாகச் சொல்லுகிறுன். ஸ்ரீரங்கம் என்பதற்கு ஸ்ரீரங்கத்திலிருப்பவன் என்றுதான் பொருள். ஒருவனைப் பார்த்து இவன் கறுப்பு என்ருல், இவன் என்பது ஜீவன். கறுப்பாயிருப்பது உடம்பு. இரண்டும் வேறு. ஆனபோதிலும் ஜீவன் உடம்பில் இருப்பதால், அவனையும் உடம்பையும் ஒன்ருகச் சொல்லுகிறது. இது உலகவழக்கம். அப்படியே வேதமும் தைவம் எல்லாவஸ்துக்களிலுமிருப்பதாலே, அதையும் அந்த வஸ்துக்களையும் ஒன்ருகச சொல்லுகிறது. ஆகையால்“இதெல்லாம் பிரும்மம்” என்கிற வாக்கியத்திற்கு இவைகள் எல்லாவற்றிலும் தைவமிருக்கிறது என்று பொருள். மனிதன் என்கிற சொல்லிற்கு மனித உடம்பிலிருக்கிற ஜீவன் என்று பொருள். அது போல எல்லாச் சொற்களும் எல்லா வஸ்துக்களிலுமிருக்கிற தைவத்தையே சொல்லுகின்றன. அதுதான் அவைகளுக்கு முக்கியமான பொருள்.

31. இப்படி மூன்று தத்வங்கள் வெவ்வேருயிருப்பதை ஸ்ரீ கீதையும் சொல்லுகிறது. ஏழாவது அத்தியாயத்தில் பகவான் தன்னுடைய ஸ்வரூபத்தை அர்ஜுநனுக்கு உபதேசம் பண்ணும்போது, இந்த உலகத்திலிருக்கிற வஸ்துக்களை உண்டு பண்ணின பிரகிருதியும், அந்த வஸ்துக்களைத் தூக்குகிற ஜீவன்களும் தன்னுடைய ஸொத்து என்று சொல்லுகிருர். பிரகிருதியினுலுண்டான வஸ்துக்களை ஜீவன்கள் தூக்குகிருர்களென்று சொன்னதால், பிரகிருதி வேறு, ஜீவன்கள் வேறு என்றும், அவைகள் பகவானுக்கு ஸொத்து என்பதால், அவைகள் வேறு, பகவான் வேறு என்றும் ஏற்படுகிறது.

ஜீவன்களைக் காட்டிலும் வேருக தைவமென்று ஒன்றிருந்தால்தான், அவர்களுக்குஸுகமுண்டாகும். தைவம்—தான் சொன்னபடி நடக்கிறவனுக்கு இன்பமான பலனைக் கொடுக்கும். சொன்ன

படி செய்யாதவனை தொந்தரவுகளைக்காட்டி, நல்ல வழிக்குத் திருப்பிக் கொண்டு வரும். உலகத்திலும் இப்படியே பார்க்கிறோம். ஒரு தேசத்துக்கு ராஜா இல்லாவிட்டால், அதிலிருக்கும் ஜனங்களுக்குக் கொஞ்சமேனும் ஸுகம் கிடைக்காது. ராஜா இருந்தால், அவன் சட்டப்படி நடக்கிறவனுக்கு வேண்டியதைக் கொடுப்பன். சட்டபபடி நடக்காதவனைத் தண்டித்து நல்லவழியில் திருப்புவன். தைவம் எந்த ஸங்கதியை எப்படிச செய்கிறதோ, அது உண்மையென்று காட்டுவதற்காகவே, அதே மாதிரி ஸங்கதிகளை இந்த உலகத்திலும் நடத்தி வைக்கிறது. 1.

32. இந்த ஸங்கதியை இவ்வளவு விஸ்தாரமாய் சொல்லுவதற்குக் காரணம் என்னவென்றால், ஜனங்களுக்கு இருக்கும் இரண்டு தப்பு எண்ணங்கள் மனதில் நன்றாய் பட்டு, அவைகளைப் போக்குவதற்காக இவ்வளவு பாடு பட்டது. அந்தத்தப்பு எண்ணங்களாவன—(1) உடம்புதான் ஜீவன். அதைக் காட்டிலும் வேறன்று. (2)உடம்பைக் காட்டிலும் வேறாக ஜீவன் என்று ஒரு வஸ்து இருந்தாலும், அது ஒருவருக்கும் உட்பட்டதன்று. அது தனக்காகவே இருக்கிறது. அதற்கு யஜமானனாய் தைவமென்று ஒன்று கிடையாது-என்று.அந்த இரண்டு தப்புஎண்ணங்களும் போகாவிட்டால், ஒருவனுக்கு நிலையான, துக்கம் கலப்பில்லாத ஸுகம் கிடைக்காது. அதற்காகத்தான் வேதமும் அதின் அர்த்தத்தைத் தெளிவாகச் சொல்லுகிற ஸ்ரீகீதையும் இந்த ஸங்கதியை அடிக்கடி சொல்லுகிறது. ஸ்ரீபாஷ்யகாரர் மதத்தில்

---

1. இபபடி எந்தவிததததாலும் உயர்நத ஸ்ரீபாஷ்யகாரர் மதத்தை விட்டு விட்டு, எந்த விதத்திலும் இளப்பமான மதங்களில் ஜனஙகளுக்கு அபிமானமுண்டாவதேன் ? அவர்கள் குணங்களையும் தோஷஙகளையும் பார்த்துச் செய்கிறார்களா? மற்றவர்களைப் பற்றிச் சொல்லுவானேன்? அடியேன் ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தஙகளை ஸேவித்த பிறகு, வேறு மதத்தில் அபிமான முள்ளவனாய் கொஞ்சகாலமிருந்து திரிந்தேன். எனது ஆசாரியன்—ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன்—மிகுந்த கவலைப் பட்டு, அடியேனைத் திருப்பினார். அடியேன் பெரிய ஆண்டவன் திருவடிகளை அடைந்தவர்கள் வயிற்றில பிறந்தது என்கிற புண்ணியத்தால் திரும்பினேன். என்னைப் போல இருக்கும் மற்றவர்களை எந்த ஆசாரியர்கள் கவலைப் பட்டுத் திருப்புவார்களோ ?

இது ஸாரமான அர்த்தம். இது நம்முடைய மனதில் நன்றாகப் பதிந்தால், ஸம்ஸாரத்தில் கஷ்டப்பட்டு உழன்று கொண்டிருக்க மாட்டோம்.

33. ஜீவன்களுக்கு அறிவு என்கிற குணமிருப்பதால், ஸுகத்தையே தேடுகிறார்கள். இந்த உலகத்தில் துக்கம் கலப்பில்லாத நிலையான ஸுகம் கிடையாது. ஒருவன் பிள்ளைக் குழந்தையில்லை யென்று வெகு தபஸ்ஸு பண்ணுகிறான். அவன் போகாத கோவிலில்லை. கடைசியில் ஒரு குழந்தை பிறக்கிறது. அவனுக்கு அளவில்லாத ஸந்தோஷமுண்டாகிறது. கொஞ்ச நாளில் குழந்தைக்கு மாந்தம் வந்து, கையையும் காலையும் இழுக்கிறது. அவன் அங்குமிங்கும் ஓடி மருந்தை வாங்கிக் கொண்டு வருகிறான். குழந்தைக்கு என்ன வந்துவிடுமோ என்று நடுங்குகிறான். குழந்தைஇறந்து போய்விடுகிறது. அவனுக்குமூர்ச்சைபோய்,நல்லசோறில்லாமல், தூக்கமில்லாமல் வெகுநாள் அவன் கஷ்டப்படுகிறான். இவன் கொஞ்ச ஸுகத்தை வெகு கஷ்டப்பட்டு அடைகிறான். அளவில்லாத கவலையோடும் பயத்தோடும் அது கலந்திருக்கிறது. அந்த ஸுகமும் அவனிருக்கும் காலத்திலேயே போய் விடுகிறது. இன்னொருவன் கப்பல் யாத்திரைசெய்து பணம் சம்பாதிக்கிறான். அவனுக்குப் பணத்தைப் பார்ப்பதே ஸுகமாயிருக்கிறது. ஆனால் அந்தப் பணத்தாலே அநேகம் பேர்கள் விரோதிகள் ஆகிறார்கள். பெற்ற தாயார் மற்றப் பிள்ளைகளுக்குப் பணத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வில்லையே யென்று வைகிறாள். பெண்ணும் மாப்பிள்ளையும் சீர் செய்ய வில்லையே என்று கோபித்துக் கொள்ளுகிறார்கள். பந்துக்கள் தங்களுக்குப் பணம் கொடுக்கவில்லையே என்று ஹிம்ஸிக்கிறார்கள். திருடர்கள் எப்போது அமாவாஸை வரப்போகிறது. தீவட்டிக் கொள்ளை அடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணக்காரனுடைய ஸுகம் என்ன ஸுகம். இதுபோலவே மற்ற ஸுகங்களுமிருக்கின்றன. ஜனங்கள் ஸுகத்தை மாத்திரம் பார்க்கிறார்களேயல்லாமல், அநுபவிக்கும் துக்கத்தை நினைக்கிறதேயில்லை. ஒரு ஸ்திரீ பிரஸவிக்கும் போது கஷ்டப் படுகையில், இனிமேல் புருஷனை என்னைத் தொடவொட்டேன் என்று சொல்லுகிறாள். நாலு மாதத்துக்கெல்

லீரம் கர்ப்பம் வந்து விடுகிறது. ஸ்வர்க்கம் என்கிற இடத்தில் துக்கம் கலப்பில்லாத ஸுகமிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அதையும் அநுபவிக்கும்போது இது முடிந்து போய்விடுமே என்கிற பயம் அத்துடன் கலந்திருக்கிறது.

34. ஆதலால் அறிவுள்ளவன் நிலையான—துக்கம் கலப்பில்லாத ஸுகத்தைத் தேடவேண்டியது. அது எங்கே கிடைக்கும் என்றால், பகவான் ஸ்ரீ கீதையில் 9-வது அத்தியாயத்தில் கடைசியில் சொல்லுகிறார்—"நிலையில்லாமலும், ஸுகமில்லாமலுமிருக்கிற இந்த லோகத்தை அடைந்திருக்கிற நீ என்னைத் தியானம் பண்ணு" "என்னை இடைவிடாமல் பிரீதியுடனே நினை, என்னை மிகவுமுயர்ந்த பிரயோஜநமாக நினைத்து, இப்படி என்னைத்தியானம் பண்ணினால், என்னிடம் வரலாம்," (சுலோகம் 33–34) என்று. இந்த உலகத்தில் துக்கம் கலந்த ஸுகம்தான் இருக்கிறதென்றும், அது நிலையில்லையென்றும் கீழே சொன்னது பகவான் வார்த்தையால் உறுதிப்படுகிறது. இந்த லோகத்திலிருக்கிறவனைத் தன்னிடம் அழைத்துக் கொள்வேன் என்று சொல்வதால், அவர் இருக்குமிடம் நிலையானதாயும், மிகுந்தஸுகமுள்ளதாயும் இருக்க வேண்டியது. இப்படியில்லாவிட்டால், அவரைத்தியானம் பண்ணுகிறவனுக்கு அங்கு போவதனால் என்ன பிரயோஜனம் கிடைக்கும். இவ்விதமான இடம் எங்கே இருக்கிறதென்றால், வைகுண்டமென்கிற லோகத்தில் வைகுண்டமென்கிற பட்டணத்தில் இருக்கிறது. பகவானே அளவில்லாத ஸுகம் என்று பல காரணங்களாலே முதலாவது அத்தியாயம் அவதாரிகையில் சொல்லப்போகிறது. அதைப்பார்க்க. ஆகையால் நமக்கு எல்லாவற்றுக்கும் மேலான பிரயோஜநமானது வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானிடம் போவது. இதற்கு வழி பகவானை வேறு நினைவு கலப்பில்லாமல் பிரீதியுடனே தியானம் பண்ணுவது. இதற்குப் பக்தி யோகம் என்று பெயர்.

35. மிகுந்தபாக்கியம் பண்ணினவர்களால் இப்படித்தியானம் செய்ய முடியும். பெரும்பாலும் ஜனங்களுக்குப்பகவான் இருக்கிறார் என்று தெரிந்த போதிலும், அவரிடத்தில் பிரீதியில்லை. அவரை இடைவிடாமல் நினைக்கவும் முடியாது. நம்முடைய மனது விஷ

யங்களில் படிந்து அவைகளையே நினைத்துக் கொண்டிருக்கிறது. பகவானிடத்தில் பக்தியில்லை என்றால், அனேகம் பேர்கள் சண்டைக்கு வருவார்கள். நான் கோவிலுக்குப் போகவில்லையா? பெருமாளுக்குக் கைங்கரியங்கள் செய்யவில்லையா? எப்படி எனக்குப் பக்தியில்லை என்று சொல்லலாம் என்று கேட்பார்கள். அவர்களை யோஜித்துப் பார்க்கவேண்டியது. கோவிலில் பெருமாளை ஸந்தோஷமாய் ஸேவித்துக் கொண்டிருக்கும்போது, பெண்டாட்டிக்குத் தேள் கொட்டிற்று என்று யாராவது சொன்னால், உடனே வீட்டுக்கு ஓடிவர மாட்டார்களா? இதனால் பெருமாளைக்காட்டிலும் பெண்டாட்டியிடம் அதிகப் பிடிமானம் இருக்கிறதென்று ஏற்படவில்லையா? இது அடியேனுடைய அநுபவத்தைக்கொண்டு எழுதினேன். பக்தியில்லை என்கிற எண்ணமேயில்லையே. பக்தி எப்படி வரும்? ஆகையால் பகவானிடத்தில் ஆசையுண்டாவதற்கும், அவரை வேறு நினைவில்லாமல் தியானம் பண்ணுவதற்கும் இடைஞ்சல்கள் போவதற்காக, ஒருவன் தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கவேணும். அதற்காக முயற்சி செய்யும்போதே விஷயங்களில் அலுப்பு வந்து விடும். ஆத்மாவைப்பார்த்த பிறகு, அவைகளிலிருக்கிற சபலமும் போய்விடும். அப்போது பக்தியோகத்தை நன்றாகச் செய்யலாம்.

36. ஸ்ரீ கீதையில் 18 அத்தியாயங்கள் இருக்கின்றன. முதல் ஆறு அத்தியாயங்களால் ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கும் வழி விரிவாய் சொல்லப்படுகிறது. ஏழாவதுஅத்தியாயம் முதல் ஆறு அத்தியாயங்களால் பக்தி யோகமும், அதற்கு வேண்டிய பகவானைப்பற்றிய அறிவும் சொல்லப்படுகின்றன. கடைசி ஆறு அத்தியாயங்களால் கீழ்ச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்ட சில ஸங்கதிகள் வெகு விரிவாய் சொல்லப்படுகின்றன.

37. முதல் ஆறு அத்தியாயங்களில் முதல் அத்தியாயமும், இரண்டாவதுஅத்தியாயத்தில் முதல்பதினொன்று சுலோகங்களும் ஸ்ரீ கீதை யாரால், யாருக்கு, எந்த விடத்தில், எந்தக் காலத்தில், என்னப் பிரயோஜநத்திற்காகச் சொல்லப்பட்டது—என்பதைச் சொல்லுகின்றன. அவதாரிகையைப் பார்க்க. 12-வது சுலோகம் முதல் 30-வது சுலோகம் வரையில் ஆத்மஸ்வரூபத்தைப்பகவான்

(1) இப்படி இரக்கப்பட்டு கண்களில் தண்ணீர் ததும்பத் துக்கப்படும் அர்ஜுநனைப் பார்த்துப் பகவான இந்த வார்த்தையைச் சொல்லுகிருர்.

𑌗𑍁𑌰𑍂𑌨𑌹𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌭𑍋
𑌕𑍍𑌤𑍁𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌪𑍀𑌹 𑌲𑍋𑌕𑍇 । 𑌹𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁
𑌰𑍂𑌨𑌿𑌹𑍈𑌵 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌰𑍁𑌧𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌨𑍍 ॥ [௫]

𑌨 𑌚𑍈𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌮𑌃 𑌕𑌤𑌰𑌨𑍍𑌨𑍋 𑌗𑌰𑍀𑌯𑍋 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌜𑌯𑍇𑌮 𑌯𑌦𑌿 𑌵𑌾
𑌨𑍋 𑌜𑌯𑍇𑌯𑍁𑌃 । 𑌯𑌾𑌨𑍇𑌵 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑌾𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿
𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍇 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌃 ॥ ॥௬॥

𑌕𑌾𑌰𑍍𑌪𑌣𑍍𑌯𑌦𑍋𑌷𑍋𑌪𑌹𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌮𑍂𑌢𑌚𑍇𑌤𑌾𑌃 ॥ 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿
𑌤𑌨𑍍𑌮𑍇 𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 ॥ ॥௭॥

𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌮𑌾𑌪𑌨𑍁𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌚𑍍𑌛𑍋𑌕𑌮𑍁𑌚𑍍𑌛𑍋
𑌷𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 । 𑌅𑌵𑌾𑌪𑍍𑌯 𑌭𑍂𑌮𑌾𑌵𑌸𑌪𑌤𑍍𑌨𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂
𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌚𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 ॥ ॥௮॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 —

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪𑌃 ।
𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌬𑌭𑍂𑌵 𑌹 ॥௯॥

---

(6) நாம் அவர்களை ஜயிப்போமா? அல்லது அவர்கள் நம்மை ஜயிப்பார்களா? இந்த இரண்டில் எது மிகவும் நல்லதென்று எனக்குத் தெரியவில்லை. எந்த திருதராஷ்ட்ரன் பிள்ளைகளைக் கொன்று நாம் உயிரோடிருக்க ஆசைப்படவில்லையோ, அவர்கள் முன்னால் இருக்கிறார்கள்.

(7) துக்கம் என்கிற தோஷத்தினால் என் ஸ்வபாவம் கெட்டுப் போயிருக்கிறது. எது தர்மம் என்று எனக்குத் தோன்றவில்லை. உம்மைக் கேட்கிறேன். எது எனக்கு நல்லதென்று உம்மால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதோ, அதை எனக்குச் சொல்லும். உமக்கு நான் சிஷ்யன். உம்முடைய திருவடியைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீர் என்னை "இப்படிச் செய்" என்று சொல்லும்.

(8) பூமியில ஒருவித இடஞ்சலுமில்லாமல் நிறைந்த ராஜ்யத்தையும் தேவர்களுடைய அதிகாரத்தையும் அடைந்தபோதிலும் எனக்கு உண்டாயிருக்கு மிந்திரியங்களை யுலர்த்தும்படியான துக்கமானது போகாதென்று தோன்றுகிறது. அதையெப்படிப் போக்குவேனென்று எனக்குத் தெரியவில்லை.

மிருந்த மரியாதை பண்ணத்தக்குந்த பீஷ்மா துரோணர் முத
லான ஆசாரியர்களை நான் எப்படிக் கொல்லுவேன் போகங்களை
அநுபவிக்க வேண்டுமென்று மிகவும் ஆசையுள்ளவர்களைக்கொன்று,
அவர்கள் அநுபவித்த ஸுகங்களை அவர்கள் ரத்தத்தை ஊர்கா
யாக வைத்துக்கொண்டு அந்த இடங்களிலேயே யிருந்துகொண்டு
எப்படி அநுபவிப்பேன் இது இலையில் சோற்றைப் போட்டுக்
கொண்டு சாப்பிடுவதற்குப் பசியுடன் உட்கார்ந்த ஒருவனை
கொலைசெய்து அதேயிடத்தில் உட்கார்ந்து கொண்டு அந்தச்
சோற்றைச் சாப்பிடுவதுபோலிருக்கிறது. நான் அதைச் செய்
யத்தக்குந்தவனோ? நீ இப்படிச் சண்டையை ஆரம்பித்து நடுவில்
நின்று விட்டால், அவர்கள் உன்னைப் பலாத்காரமாய் கொலை
செய்வார்களேயென்றால்-அப்படியேயாகட்டும், அதர்மமாக அவர்
களைக்கொன்று ஜயத்தை அடைவதைக் காட்டிலும் தர்மத்தையும்
அதர்மத்தையும் தெரியாத அவர்களால் கொல்லப்படுவது நமக்கு
நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது—என்றிப்படிச் சொல்லி
"உம்மை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் உம்
மால் ஆளத்தக்குந்தவன் எனக்கு எது நல்லது என்று உமக்குத்
தீர்மானமாய்த் தோன்றுகிறதோ, அதைச் சொல்லவேணும்"
என்று மிகவும் தவித்து ஸ்ரீ கிருஷ்ணன் திருவடிகளில் விழுந்
தான். இப்படித் தப்பான ஸ்நேஹத்தாலும் தயையாலும் ஸ்வ
பாவம் மாறி க்ஷத்திரியர்களுக்கு உயர்ந்த தர்மமான சண்டை
யைப் பாபமென்று நினைத்து தர்மத்தை யறியவேணுமென்று அர்
ஜுனன் திருவடிகளில் விழுந்தவுடன், இவனுக்குண்டான தப்பு
நினைவானது—ஆத்மாவையுள்ளபடி அறிவதாலும், பலனில் ஆசை
யில்லாமல் சண்டையைச் செய்வது ஆத்மாவைப் பார்ப்பதற்கு
வழியென்று அறிவதினாலும்தான் போகும், இந்த இரண்டு அறி
வும் இல்லாவிட்டால் போகாது—என்று எண்ணி, மஹாபுருஷனான
பகவான் ஆத்மாவைப்பற்றின சாஸ்திரத்தைச் சொல்ல ஆரம்பித்
தான் அவர் இதைச் சொல்லுவதற்கு எங்கேயிடம் அகப்படப்
போகிறதென்று பார்த்துக்கொண்டிருந்தார் அர்ஜுனனிப்படி
வருத்தப்பட்டுக் கேட்டுக் கொண்டதாலே அவர் விரும்பின வியா
ஜம் அகப்பட்டது ஸ்ரீ கீதையினுடைய அபிப்ராயத்தைச் சுருக்

கமாய் அருளிச்செய்த ஸ்ரீ ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ மென்கிற புஸ்தகத்தில் இதேஸங்கதியை யருளிச்செய்திருக்கிறார்.

தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ‖௰‖

இப்படி உடம்புவேறு ஆத்மாவேறு என்று தெரியாமல் வருத்தப்பட்டு, அது தெரிந்ததுபோல் தர்மத்தையும் பேசி, இப்படி ஒன்றோடொன்றுசேராத இரண்டு குணங்களையுடையவனாய், சண்டைக்குத் தயாராயிருந்த இரண்டு ஸேனைகளின் நடுவில் ஒரு காரணமில்லாமல் ஆரம்பித்த வேலையை அடியோடு விட்ட அர்ஜுநனைப்பார்த்து, மஹாபுருஷன் 1 பரிஹாஸவார்த்தை சொல்வது போல்உபதேசித்தான். ஜீவாத்மாவின் உண்மையையும், பரமாத்மாவின் உண்மையையும், அவைகளை யடைவதற்கு உபாயமான கர்மயோகத்தையும்,ஞானயோகத்தையும், பக்தியோகத்தையும் இந்த அத்தியாயம் 12-வது சுலோகம் முதல் 18-வது அத்தியாயம் 66 வது சுலோகம் வரையிலுள்ள வார்த்தைகளாலே சொன்னார் (10)

ஸ்ரீ பகவாநுவாச—

அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ‖
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ‖௧௧‖

பகவான் சொல்லுகிறார்— வருத்தப்படத்தகாத ஸங்கதிகளுக்கு வருத்தப்படுகிறாய். உடம்பையும் ஆத்மாவையும் தெரிந்தவன் போலும் பேசுகிறாய். உண்மையாக இவைகளைத் தெரிந்தவர்களுக்கு 2 உடம்பைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் கொஞ்சமேனும் வருத்தப்பட நியாயமில்லை. ஆதலால் நீ வருத்தப்படுவ

---

1. பரிஹாஸவார்த்தை யென்பதற்கு, வேதாந்தங்களாகிற காட்டில் மறைந்திருக்கிற உயர்ந்த அர்த்தங்களை வருத்தமில்லாமல் சொன்னாரென்றும், அதைக் குழந்தைகள்கூட லகுவாய்த் தெரிந்துகொள்ளக் கூடுமென்றும், அது வெகு ரஸமுள்ள தென்றும் கருத்து.

2. மூலத்தில் 'கதாஸூந்' என்றும், ''அகதாஸூந்'' என்றும்இரண்டு சொற்கள் இருக்கின்றன. 'கதாஸூந்' என்பதற்கு உயிர்போனது என்று அர்த்தம், 'அகதாஸூந்' என்பதர்கு உயிர்போகாதது என்று

தும் தர்மம் பேசுவதும் ஒன்றுக்கொன்று சேரவில்லை. ஆகையால் அழிவுள்ள உடம்பையும், அதைக்காட்டிலும் வேறான அழி வில்லாத ஆத்மாவையும், அந்த ஆத்மாவையுள்ளபடி அறிவ தற்குச் சண்டை முதலான தர்மங்கள் உபாயம் என்பதையும் நீ 1 அறியவில்லை. இந்தச் சண்டையை ராஜ்ஜியம் முதலான பிர யோஜனங்களை உத்தேசிக்காமல் செய்வது ஆத்மாவை யுள்ளபடி அறிவதற்கு உபாயம். 2 ஆத்மாவுக்குப் பிறப்புமில்லை, சாவு மில்லை. இரண்டு தகடு சேர்ந்தால் ஒருகுடமாகிறது. அவைகள் பிரிந்தால் குடம் அழிகிறது. அதுபோல ஆத்மாவானது சில அவயவங்கள் சேர்ந்து உண்டானதன்று. அவைகள் பிரிந்து அழி வதுமன்று. ஆகையால் எப்பொழுதும் அது இருக்கிறது. அதைப் பற்றி வருத்தப்பட. நியாயமில்லை. உடம்போ அறிவில்லாதது. சின்னதாயிருந்து பெரிதாகிறது. பிறகு இளைக்கிறது, அழிந்தும் போகிறது. பிறப்பும் அழிவும் அதற்கு ஸ்வபாவம். அதைப்பற்றி யும் வருத்தப்பட நியாயமில்லை. ஏரி ஜலம் தேங்குகிறதே யென் றும், ஆறு ஜலம் போகிறதே யென்றும் எவனாவது வருத்தப்படு வனோ? அதற்கு அது ஸ்வபாவம். அதுபோல.

அவ—முதலில் ஆத்மாவினுடைய ஸ்வபாவத்தைக்கேள்—

நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: ।
நசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ॥ ॥௧௨॥

எல்லா லோகங்களுக்கும் யஜமானனான நான் இந்த க்ஷணத் திற்கு முன்னாலே இதுமுதலென்றில்லாத காலத்தில் எப்போதா வது இல்லையென்கிறதில்லை. எப்போதுமிருந்தேன். என்னால் ஆளப்படுகிற நீயும் மற்ற இவர்களும் இல்லையென்பதில்லை. இருக்

---

அர்த்தம். இந்த விடத்தில் உடம்பையும் ஆத்மாவையும் பற்றி சொல்லு கிறதாகையால் அழிவதையே இயற்கையாயுடைய உடம்பை 'கதாஸூந்' என்றும், எப்பொழுதும் அழிவில்லாத ஆத்மாவை "அகதாஸூந்" என் றும் சொல்லியிருக்கிறது.

1. இது இந்த அத்தியாயம் 47—53 சுலோகங்களில் சொல்லு மர்த்தத்தை நினைத்து எழுதப்பட்டது.

2. இது 17—30 சுலோகங்களின் கருத்து.

களேவயிருந்தீர்கள். நானும் நீயும் மற்றவர்களுமாகிய எல்லாரும் இந்த நிமிஷத்துக்குமேலே வரப்போகிற காலத்தில் முழுவதிலும் இருக்கப்போகிறதில்லையென்பதில்லை. இருக்கத்தான் போகிறோம். 1 எல்லா லோகத்துக்கும் யஜமானனான நானெப்படி அழிவில்லாதவன் என்பதில் ஸந்தேஹமில்லையோ, அதேமாதிரி ஜீவன்களான நீங்களும் அழிவில்லாதவர்களென்றே நினைத்துக்கொள்.

ஒரு விண்ணப்பம்—ஜீவன்களான நமக்கு மனித ஜன்மம் நேர்ந்தது உயர்ந்த பாக்கியத்தாலே. அதிலும் வேதத்தைச் சொல்லும்படியான ஜன்மம் நேர்ந்தது இன்னுமுயர்ந்த பாக்கியத்தாலே. நாமெல்லாரும் வேதத்தில் சொல்லியிருக்கும் ஸங்கதிகளை ஏற்கனவே அறியாமையால் அவைகளை அறிவதற்கு மிகவும் பாடுபடுகிறோம். ஒருவர் ஒருவிதமாய் அர்த்தம் பண்ணினார். அதற்குப் பிறகு இன்னொருவர் அதில் சில குற்றங்களைக்காட்டி வேறு விதமாய் அர்த்தஞ் சொன்னார். இரண்டாவது அர்த்தம் எழுதுவதற்கு முன்னே முதல் அர்த்தத்தையே யெல்லாரும் ஸரியான அர்த்தம் என்று நினைத்தார்கள். இரண்டாவது அர்த்தம் எழுதின பிறகு ஒருவன் என்ன செய்யவேண்டும். இரண்டையும் பார்த்து எது ஸரியோ அதை யெடுத்துக் கொள்ளவேண்டும். வேதத்தின் உண்மையான அர்த்தத்தை அறிவதற்கு ஆசையிருந்தால் விசாரிப்பதில் எப்படிச்சண்டையுண்டாகும். இரண்டாவது அர்த்தம் எழுதின பிறகு முதல் அர்த்தத்திலும் ஸந்தேஹம் வரக்கூடுமாகையால், முதல் அர்த்தமிருக்கையில் இரண்டாவது அர்த்தத்திலும் ஸந்தேஹம் வரக்கூடுமாகையால் ஒருவனும் ஒரு அர்த்தத்தைத்தன்னுடைய கக்ஷியென்று அபிமானம் வைக்கக்

1. அர்ஜுனன் அனேகருஷிகளின் உபதேசங்களாலே ஸ்ரீகிருஷ்ணபகவான் எல்லாவுலகங்களுக்கும் யஜமானன் என்றும், அவர் எப்போதுமிருக்கிறாரென்றும் தெரிந்தவன். இதை அவனுக்கு உபதேசம் செய்யவேண்டுவதில்லை. ஆகையாலே அதை உதாரணமாகச் சொன்னபடி. உடம்பைக்காட்டிலும் வேறாக ஆத்மாவொன்று இருக்கிறதென்று அவனுக்குத் தெரியும். ஆனால் அது உடம்போடு பிறந்து உடம்பு அழியும்போது அழியுமோவென்று ஸந்தேஹம் மாத்திரமிருந்தது. அந்த ஸந்தேஹத்தை மாத்திரம் இந்த பகவான் தீர்க்கிறார்.

கூடாது. இப்படி இரண்டையும் ஒத்துப் பார்க்கக்கூடிய உயர்ந்த புத்தியில்லாதவர்கள் எப்படியாவது இருக்கலாம். தகுந்த புத்திமான்கள் இந்த இரண்டையும் ஒத்துப்பார்க்காமலிருப்பதற்குக் காரணமென்ன? வேதத்தின் அர்த்தத்தை உண்மையாய் அறியவேணுமென்று ஆவலில்லாமைதான். மேலும், வேதத்தின் அர்த்தம் உண்மையாய்த் தெரிந்தவனுக்குக் கோபம் கொஞ்சமேனும் வராது. கோபம் வருகிறவனுக்கு அதின் அர்த்தம் ஸரியாய் தெரியவில்லையென்றே சொல்லலாம். இப்படிக்கோபம் வாராதவன் இப்போது அகப்படுவது மிகவும் அரிது. இல்லையென்றும் சொல்லமுடியாது. யாராவது ஒருவரிருக்கலாம். ஆகையால் வேதத்தின் அர்த்தத்தை உள்ளபடி அறியவேண்டுமென்று மிகவும் கவலைப்பட்டு, சண்டையைப் பெரிதாக நினைக்காமல், இரண்டு அர்த்தங்களையும் தெரிந்தவர்கள் சேர்ந்து விசாரிக்க வேண்டும். பிள்ளை பெண்டாட்டிகள்மேல் ஆசை அதிகமாயிருப்பதால், அவர்களிடத்தில் சண்டையேயுண்டாகாது. அப்படி உண்டானாலும் நிலைநிற்காது, அதுபோல அர்த்தத்தை உள்ளபடி அறிவதற்கு ஆவலிருந்தால், சண்டையுண்டாகாது. உண்டானாலும் சீக்கிரம் போய்விடும். சங்கராசாரியர் என்கிற மஹானும் பௌத்தமதத்தைத் தூஷித்துத்தானே பாஷ்யமெழுதினார். அதேமாதிரி சங்கராசாரியர் எழுதிய அர்த்தங்களில் குற்றமிருப்பதாக ஸ்ரீ வைஷ்ணவ மதப்பிரவர்த்தகரான ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் எழுதியிருக்கிறார். அவைகளை நாமிரண்டு மதக்காரர்களும் சேர்ந்து கவனிக்கவேண்டும். ஒரு மதத்தை இன்னொருவன் தூஷிக்கும்போது கடுமையாக வைவது இந்த காலத்தில் கூடாது. மஹான்கள்கள் வைதது த்வேஷத்தினாலன்று; பிரீதியினாலேதான். தகப்பன் பிள்ளைகளை வைவதுபோல.

இந்த இடத்தில் அத்வைதமதத்தில் சில குற்றங்களிருப்பதாக ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்கிறார். 1. அவர்கள் ஈசுவரனைக் காட்டிலும் வேறான ஜீவனில்லை யென்றும், ஈசுவரனே ஜீவன்களாகத் தோன்றுகிறானென்றும் சொல்லுகிறார்கள். அவர்களில் சிலர்—உண்மையாயிருக்கிற உபாதி (காரணம்) சேர்வதினாலே—அது சேர்ந்த பிர்மத்தினுடைய இடம் ஜீவனாக ஆகிறது என்று

சொல்லுகிறார்கள். ஒருவன் மஞ்சளையோ கரியையோ பூசிக்கொண்டஸமயத்தில் அவன் உடம்பு பழைய உடம்பைக்காட்டிலும் வேறாகத்தோன்றுகிறது. அதுபோல பிரும்மத்தில் சில வஸ்துக்கள் சேர்வதால் பிரும்மத்தைக்காட்டிலும் வேறாக ஜீவன்கள் தோன்றுகிறார்கள். வேறு சிலர் பிரும்மமே அஞ்ஞானத்தாலே (அறியாமையாலே) தன்னை ஜீவன்களாக எண்ணுகிறது என்கிறார்கள். இந்த இரண்டு கக்ஷிகளும் பிசகு. தெரியாமையால் மயங்கின அர்ஜுநனுக்கு அந்த மயக்கம் தீரவேணுமென்று உண்மையான ஸங்கதியை ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசிக்கிற ஸமயத்தில், நான்-நீ-இவர்கள்-நாம் எல்லோரும் என்று சொன்னபடியால் கணக்கில்லாத ஜீவன்களுக்குள் ஒருவருக்கொருவர் வேறுபாடும், அவர்களுக்கு ஈசுவரனைக்காட்டிலும் வேறுபாடும் இருப்பது உண்மையென்று ஏற்படுகிறது.

2. மேலும், முதலாவது பக்ஷத்தில் ஈசுவரனுக்கும் ஜீவன்களுக்கும் வேறுபாடு உண்மையல்ல, உபாதிபோனால் பேதம் போய்விடும். மஞ்சளையும் கரியையும் அலம்பினால், அவைகளாலே தோன்றின பேதம் போய்விடுமே, அது உண்மையல்லவே. வேதத்திலும் "அழிவில்லாதவர்களும் அறிவுள்ளவர்களுமான அனேக ஆத்மாக்களுக்கு இஷ்டங்களை அழிவில்லாதவனும் அறிவுள்ளவனுமான ஒரு ஈசுவரன் கொடுக்கிறான்" என்று சொல்லப்படுகிறது. அதில் ஜீவன்கள் அனேகம் பேர்களென்றும், அவர்களைக் காட்டிலும் ஈசுவரன் வேறென்றும், அவர்களுக்கு அவன் யஜமானனென்றும் ஏற்படுகிறது.

3. இரண்டாவது பக்ஷத்திலும் குற்றமுண்டு. மஹாபுருஷனாயும் தன் ஸ்வரூபத்தினுடைய உண்மையை யறிந்தவனாயுமிருந்த ஸ்ரீகிருஷ்ணனுக்கு அக்ஞானமும், அதினாலுண்டான அனேக வஸ்துக்கள் இருப்பதாகத்தோற்றமும்இல்லையாகையால், அர்ஜுநன் என்று ஒருவனிருப்பதாகத் தோன்றி, அவனுடன் பேசுவது எப்படிக் கூடும். தெரிந்தவன் கண்ணாடியைப் பார்க்கும்போது அதில் தோன்றுகிற பிரதி பிம்பத்தோடு பேசுவானோ? குழந்தைகளன்றோ அப்படிச் செய்யும்.

4. பிரும்மத்தைக்காட்டிலும் வேறொன்றில்லை யென்று தெரிந்தவனுக்கும்—கொளுத்தப்பட்ட துணி சற்று நேரம் துணி போல் தோன்றுவதுபோல்—ஜீவன்களிருப்பதாகக கொஞ்சகாலம் தோன்றிக்கொண்டிருக்கும். ஆனால் அதினால் தொந்திரவு இல்லை —என்று இப்படி அவர்கள் ஸமாதானம் சொல்லக்கூடும். அதுவும் பிசகு. ஏனென்றால்—துணியை கொளுத்தினவனுக்கு அது துணியாகத் தோன்றினாலும், அதை உடுத்த ஆரம்பிப்பானோ? வெய்யில் வேளையில் ஒரு மைதானத்தில் ஜலம் ஓடுவதுபோல் தோன்றும். அது உண்மையில் தண்ணீரல்ல என்று அறிந்தவனுக்குத் தண்ணீர் தோன்றினாலும், அவன் அதையெடுக்கக் குடம் கொண்டு போவானோ? அதுபோல உண்மை யறிந்த ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ஜுனன் என்பவன் ஒருவன் முன்னாலிருப்பதாகத் தோன்றினாலும், அவனுடன் பேச ஆரம்பிப்பது கூடுமோ?

5. மேலும், ஈசுவரன் முன்பு தன்னை யறியாதிருந்து, பிறகு சாஸ்திரத்தைக் கொண்டு உண்மையை யறிந்தும், முன்போலவே அவனுக்குத் தப்பாகத் தோற்றம் தோன்றிக்கொண்டே யிருக்கிறது—என்று சொல்வதும் கூடாது. “அவன் எல்லாவற்றையும் எப்பொழுதும் நன்கு யறிந்தவன்” என்று வேதத்தில் சொல்லுவதும், ‘எனக்கு எல்லாம் தெரியும்’ என்று இந்த ஸ்ரீ கீதையில் அவன்தானே சொல்லுவதும் விரோதிக்குமே.

6 மேலும், ஸ்ரீகிருஷ்ணனும், இப்போது பரம்பரையாய் சொல்லிக்கொடுக்கிற ஆசாரியர்களும்-தங்களுக்குப் பிரும்மத்தைத் தவிர வேறு ஒரு வஸ்துவு மில்லையென்கிற உண்மையான எண்ணமிருக்கும்போது, எதிரில் எல்லாரும் இருப்பதாகத் தோன்றினாலும்—இந்த உண்மையான ஸங்கதியை யாருக்குச் சொல்லுகிறார்கள். கண்ணாடியில் பிரதி பிம்பம்போல் எதிரில் தோன்றுகிறவர்களுக்கு என்றால்-பிரதி பிம்பமென்று தெரிந்தவர்கள் பிரதி பிம்பத்தோடு பேசுவார்களோ? கொளுத்தின துணி சற்று நேரம் துணியாகத் தோன்றுவதுபோல், வேறு வஸ்துஇல்லையென்று தோன்றினவனுக்கும் வேறு இருப்பதாகத் தோன்றுகிறதென்றும் சொல்ல முடியாது. சாஸ்திரத்தினாலே யுண்டாகிற உண்மையான அறிவு-இந்தத் தோற்றத்தையுண்டுபண்ணுகிற அஜ்ஞானத்தையும்

தொலைத்துவிட்டதே. வழியில் கிடந்த பழுதையை ஒருவன் பாம்பென்று நினைத்து, அந்த வழியில் போகப் பயந்து நின்றான். விளக்கைக் கையில் கொண்டு, அந்தப் பழுதையை மிதித்துக் கொண்டு, எதிரில்வந்த ஒருவன் அவனைப்பார்த்து 'ஏன் நிற்கிறாய்' என்று கேட்க, பாம்பிருக்கிறதென்று பயப்படுகிறேன் என்று அவன் சொன்னான். "அது பாம்பல்ல, அது பழுதை, நான் அதை மிதித்துக்கொண்டு வந்தேன்,பயப்படாதே போ" என்று வந்தவன்சொன்னான். அப்போது இவனுக்கு அஜ்ஞானமும், அஜ்ஞானத்தினாலுண்டான பாம்பும், பாம்பென்கிற தோற்றமும் எல்லாம் போய்விட்டதே.

7. ஒரு ஸமயத்தில் கண்ணின் குற்றத்தால் சந்திரன் இரண்டாக ஒருவனுக்குத் தோன்றுகிறது. அப்போது தெரிந்தவன் "சந்திரன் ஒன்றுதான்" என்று சொன்னான். அவன் வார்த்தையில் இவனுக்கு நம்பிக்கை யிருக்கிறது. ஆனாலும் முன் போலவே சந்திரன் இரண்டாகத் தோன்றுகிறது—என்று இப்படி ஸமாதானம் சொல்லுவார்கள். அதுவும் பிசகு. அது கண்ணின் குற்றத்தாலே தோன்றுகிறது. அது தப்பென்று தீர்மானமிருப்பதாலே அதினால் ஒரு கெடுதியுமில்லை. அது அறிவினால் போகாது. மருந்தினால்தான் போகும். பழுதையில் பாம்பென்கிற எண்ணத்திற்கு உண்மையான அறிவு தவிர வேறு மருந்து கிடையாது. இந்த விடத்தில் அர்ஜுநனும், அவனிருப்பதாகத் தோற்றமும், அதற்குக் காரணமான அஜ்ஞானமும் எல்லாம் பொய்யாகையால், உண்மையான அறிவினால் போய்விட்டபடியால், பிறகு அவைகள் வருவதற்கு நியாயமே இல்லை. ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் இப்போதிருக்கிற ஆசாரியர்களுக்கும் உண்மையான அறிவிருந்தால், உபதேசத்தைப் பெற்றுக்கொள்ள மனிதனிருப்பதாகத் தோன்றாமையாலே உபதேசங் கூடாது. அவர்களுக்கு உண்மையான அறிவில்லாமல் போனால், தெரியாமையால் உபதேசங் கூடாது.

8. மேலும், குருவுக்கு பிரும்மம் தவிர வேறு ஒன்றில்லை என்று உண்மையான அறிவு வந்தபோதே, பிரும்மத்தினுடைய அக்ஞானமும், அதினாலுண்டான உலகமும் போய்விட்டதே.அப்புறம் யாருக்கு என்னப் பிரயோஜனத்திற்காக உபதேசிக்கவே

ண்டும். ஆசாரியனும், அவனுக்கு உண்டான ஞானமும் பொய் என்றால். சிஷ்யனும் அவனுக்குண்டான ஞானமும் பொய்தானே. ஆகையால் உபதேசம் எதற்கு? இல்லை என்கிற எண்ணம் பொய்யாயிருந்தாலும், உண்டென்கிற தப்பு எண்ணத்தைப்போக்குகிறது என்று ஸமாதானம் சொல்லலாம். ஆசாரியனுக்கு இல்லையென்கிற ஞானமுண்டாயிருப்பதாலே, உண்டென்கிற எண்ணம் போய்விட்டதே. உபதேசம் எதற்கு?

இந்தமாதிரி வார்த்தைகள் நன்றாயில்லையென்பதைப்பற்றி ஸூத்ரபாஷ்யத்தில் விரிவாய் சொல்லியிருக்கிறது. [12]

அவ— ஆத்மா அழிவில்லாதவனாயிருந்தால், 'பிறந்தான்— செத்தான்' என்கிற தோற்றமும், அந்தச் சொல்லும் எப்படியென்றால், உதாரணத்தைக் கொண்டு பதில் சொல்லுகிறார்—

𑌦𑍇𑌹𑌿𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌥𑌾 𑌦𑍇𑌹𑍇 𑌕𑍌𑌮𑌾𑌰𑌂 𑌯𑍌𑌵𑌨𑌂 𑌜𑌰𑌾 ।
𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑍀𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ॥ ॥௧௩॥

ஒரு பருவம் போய் வேறு பருவம் வருகிறதுபோல, ஒரு உடம்பு போய் வேறு உடம்பு வருகிறது. ஒருபருவம்போய் வேறு பருவம்வரும்போது அவன் அழியாததுபோல, ஒரு உடம்பு போய் வேறு உடம்பு வரும்போதும் அவன் அழியாமலிருக்கிறான். பிறந்தான் என்பதற்கு ஒரு உடம்பை அடைந்தான் என்று தான் பொருள். செத்தான் என்பதற்கு அந்த உடம்பை விட்டுப் பிரிந்தானென்றுபொருள். வீட்டில் ஒரு மனிதன் குடியிருப்பதுபோல், உடம்பில் அழிவில்லாத ஆத்மாவென்று ஒன்று இருக்கிறது. ஒருஉடம்பில் அதிருக்கும்போது, குழந்தைத்தனம்போய் யௌவனம வருகிறது. யௌவனம்போய் கிழத்தனம்வருகிறது. அதாவது அந்த உடம்புபலவிதமாய் மாறுகிறது. குழந்தைத்தனம் போனதற்கு அவனும் அவன் பந்துக்களும் துக்கப்படவில்லை. அதுபோலத்தான் அந்த உடம்பு போய் இன்னொரு உடம்பு வருகிறது. பருவம் போன ஸமயத்தில் உடம்பு அடியோடு போகாததால் துக்கப்படுகிறதில்லை. உடம்புபோன ஸமயத்தில் அது அடியோடு போனபடியாலும், வேறு உடம்பு வருவது தெரியாததாலும், துக்கப்படுகிறார்கள். வேறு உடம்பு வருவது தெரியாத போனபோதிலும், சாஸ்தி

ரத்தில் சொல்லியிருக்கிறது. அதை நம்பினவன் துக்கப்பட நியாயமில்லை.

ஆனால் ஒன்று செய்யவேண்டியது—ஜீவன்கள் அழிவில்லாதவர்களாயிருந்தபோதிலும், 1 நெடுநாளாய் கர்மங்கள் செய்து, அந்தந்தக் கர்மங்களின் பலன்களை அநுபவிக்கத்தகுந்த உடம்புகளை அடைந்து, தொந்திரவு படுகிறார்கள். அந்தத் தொந்திரவு போவதற்காக, அந்த உடம்புகளைக் கொண்டே தங்களுடைய 2 ஜாதிக்கும் ஆசிரமத்துக்கும் 3 சாஸ்திரத்தினால் ஏற்பட்ட சண்டை முதலான கர்மங்களை 4 அவைகளின் பலன்களில் ஆசையில்லாமல் செய்யவேண்டும். அப்போது இந்திரியங்கள் விஷயங்களைத் தொடும்போது, குளிரினாலும் சூட்டினாலும் ஸுகமும் துக்கமும் உண்டாகும். அவைகளை விலக்கமுடியாது. சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்கள் முடியும்வரையில் அவைகளைப் பொறுத்துக்கொள்ளவேணும். [ 13 ]

---

1. ஜீவன்கள் இயற்கையாகவே ஒரு தோஷமில்லாதவர்கள். அவர்கள் இது முதலென்றில்லாமல் வெகுகாலமாய் தங்களையுள்ளபடி அறியாமல், பலப் பிரயோஜனங்களை ஆசைப்பட்டுப் பல கர்மங்களைச் செய்கிறார்கள். அந்த பலன்களை அநுபவிப்பதற்காக அடிக்கடி பிறந்து அந்த பலன்களை அநுபவிக்கத்தகுந்த உடம்புகளை அடைகிறார்கள்.

2. பிராமணன்—க்ஷத்திரியன்—வைசியன்—சூத்திரன்—என்று நான்கு ஜாதிகள். பிரும்மசாரி (வேதம்படிக்கிறவன்). கிருஹஸ்தன் (கலியாணம் செய்து கொண்டு வீட்டிலிருக்கிறவன்.) வாநப்பிரஸ்தன் (வீட்டைவிட்டுக் காட்டுக்குப்போனவன்). ஸந்நியாஸி (எல்லாப் பற்றையும் விட்டவன்) என்று நாலு ஆசிரமத்திலிருப்பவர்கள்.

3. கர்மங்களினாலுண்டாகும் தொந்திரவைப் பகவான் தான் ஸந்தோஷப்பட்டுப் போக்கவேணும். அதற்காக அவனுக்கு ஸந்தோஷத்தை கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்ய வேண்டும். அந்த வேலைகள் இப்படிப்பட்டனவென்று நமக்கு இப்போது தெரியாது. அவைகளைச் சாஸ்திரத்தைக்கொண்டே அறிந்து அவைகளைச் செய்ய வேண்டியது. இந்த ஸங்கதி 16-வது அத்தியாயம் 26-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

4. இது இந்த அத்தியாயம் 47-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

அவ— இந்த அர்த்தத்தை அடுத்த சுலோகத்தில் சொல்லு கிறார்—

மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ணஸுகது:கதா: |
ஆகமாபாயிநோऽநித்யாஸ்தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத ॥ ‖௧௪‖

சாஸ்திரங்களில் சொல்லிய கர்மங்களைச் செய்யும்போது இந்திரியங்கள் விஷயங்களைத் தொடுவதால் ஸுகமும் துக்கமும் உண்டாகும். அந்தக் கர்மங்கள் முடிகிறவரையில் தைரியத்துடன் அவைகளைப் பொறுத்துக்கொள். அவைகள் நிலையில்லாமல் வந்து போகிறபடியால் தைரியமுள்ளவன் 1 பொறுத்துக்கொள்ளலாம். வெள்ளம்போல் ஒன்றின் பின்னாலே ஒன்று வந்து கொண்டிருப்பதும் கர்மங்களினால். கர்மங்கள் போனால், வந்துபோகிறதென்பது மிருக்காது. அவைகள் அடியோடு போய்விடும். [ 14 ]

அவ— ஸுகதுக்கங்களை எதற்காகப் பொறுத்துக் கொள்ளுகிறது என்றால், சொல்லுகிறார்—

யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப |
ஸமது:கஸுகம் தீரம் ஸோऽம்ருதத்வாய கல்பதே ॥ ‖௧௫‖

எவன் ஸம்ஸாரத்தைப் போக்குவதற்காகத் தன் ஜாதிக்குத் தகுந்த சண்டை முதலான கர்மங்களை அவைகளின் பலன்களில ஆசையில்லாமல் செய்து, செய்யும்போது அவைகளால், அவசியம் வரும் துக்கத்தையும் ஸுகம்போல் நினைத்து, அவைகளை விடவில்லையோ, அவனே 1 நிலையான நல்ல கதியையடைவான் 2. [15]

---

1. துக்கத்தைப் பொறுத்துக் கொள்வதென்பது எல்லாருக்கும் தெரியும். ஸுகத்தைப் பொறுத்துக் கொள்வது என்பது என்ன ? ஸுகத்தை யநுபவிக்கும்போது கர்வப்படக்கூடாதென்பது அதின் பொருள். ஏழைக்கு நாலுகாசு வந்தால், அவன் கெட்டவனாயிருந்தால், அவன் படுத்துகிற பாட்டுக்கு எல்லையிராது.

1. சுலோகத்தில் 'அமிருதத்வாய கல்பதே' என்று வடமொழிச் சொல் இருக்கிறது. அதற்கு மரணமில்லாமையை யடைவதற்குத் தகுந்தவன் என்று பொருள். ஜீவன்கள் செய்கிற கருமங்களின் பலன்களை அநுபவிப்பதற்காக அடிக்கடி பிறக்கிறார்கள். மறுபடியும் கர்மங்கள் செய்து அவைகளின் பலன்களை அநுபவிப்பதற்காக மறுபடியும் பிறக்கிறார்கள்.

அவ— ஆத்மாவுக்கு அழியாமையே யியற்கை, உடம்புக்கு அழிவதே யியற்கை என்று இந்த அத்தியாயத்தில் 11-வது ச்லோகத்தில் சொல்லியதை விரிவாய் சொல்ல ஆரம்பிக்கிறார்—

நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத: ।
உபயோரபி த்ருஷ்டோऽந்தஸ்த்வநயோஸ்தத்த்வதர்சிபி: ॥ ||௧௬||

உடம்பு 1 நிலையாயிராது. ஆத்மாவுக்கு அழிவில்லை. உடம்பின் அழிவை யாரும் பார்க்கிறோம். ஆத்மா அழியாதென்பதை சாஸ்திரத்தாலும் யுக்திகளாலும் தெரிந்தவர்கள் அறிகிறார்கள். [16]

அவ— ஆத்மாவுக்கு அழிவில்லையென்பதை எதைக்கொண்டு அறியலாம் என்றால், சொல்லுகிறார்—

---

இப்படிப் பிறப்பும் இறப்பும் ஆற்றின் சுழல்போலத் திரும்பித் திரும்பி வருகின்றன. இதற்கு ஸம்ஸாரம் என்று பெயர். இதை "பந்தம்" என்றும் சொல்லுகிறது. பந்தமென்றால் கட்டுப்பட்டிருப்பது. இந்தக் கட்டுப்போவதை மோக்ஷமென்று சொல்லுகிறது. கட்டினவனும், அவிழ்க்கிறவனும் ஈசுவரன்தான். மோக்ஷமென்றால் அவிழ்க்கிறது. கர்மங்களினாலே ஜீவன் தன்னிஷ்டப்படியிருக்கமுடியாமல் கட்டுப்பட்டிருக்கிறான். கட்டிலிருந்து விடுவிக்கப்படுவது தான் மோக்ஷம். ஸம்ஸாரம் போய் கர்மத்தின் கட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறவனுக்குப் பகவானுடைய அநுபவம் தானாகவேவரும். இதைத்தான் "நிலையான நல்ல கதியை யடைவன்" என்று பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது.

2. 12—வது ச்லோகம் முதல் நான்கு ச்லோகங்களாலே ஆத்மாவின் உண்மையான இருப்பும், உடம்பின் சேர்க்கை போவதற்கு வழியும், அது செய்வதனால் வரக்கூடிய நல்ல பலனும் சுருக்கமாகச் சொல்லப்பட்டன. இவைகளைத் தத்வம் என்றும், ஹிதமென்றும், புருஷார்த்தமென்றும் வடமொழியில் சொல்லுகிறது. தத்வம் என்றால் உலகத்தின் உண்மையான இருப்பு. ஹிதம் என்றால் நாம் செய்யவேண்டிய வேலை. புருஷார்த்தமென்றால் நாம் அடையவேண்டிய நிலையான பலன். தத்வத்தையும் ஹிதத்தையும் மேலே விரிவாய் சொல்லுகிறார்.

1. மூலத்திலுள்ள "அஸத்" என்கிற சொல்லுக்கு இல்லையென்று பொருளன்று, நிலையில்லாதது என்றுதான் பொருள். ஆகையால் அந்தச் சொல் உடம்பைத்தான் சொல்லுகிறது "ஸத்" என்கிற சொல்லுக்கு ஸ்வரூபத்தில் மாறுதலில்லாமல் ஒரேவிதமா யிருக்கிறவன் என்று பொருள், ஆகையால் அந்தச்சொல் ஆத்மாவைச் சொல்லுகிறது.

அவிநாஶி து தத்வித்தி யேந ஸர்வமிதம் ததம் ।
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித்கர்துமர்ஹதி ॥ ||௧௭||

ஆத்மா அறிவுள்ளதாய், அறிவில்லாத எல்லா உடம்புக்குள்ளே நுழைய சக்தியுள்ளதாயிருப்பதாலே, அது அவைகளைக் காட்டிலும் மிகவும் ஸூக்ஷ்மமானது (சின்னது). ஆகையாலே அது எதினாலும் அழிக்கத்தகுந்ததன்று உலகத்தில் கத்தி, தண்ணீர், நெருப்பு, காற்று முதலான வஸ்துக்கள் ஒரு வஸ்துவில் நுழைந்து அதையழிக்கிறது. உலக்கையால் ஒரு வஸ்துவை யழிக்கும்போது உலக்கை அதில் நுழையாத போதிலும், அதினாலுண்டாகும் காற்று அதில் புகுந்து அதையழிக்கிறது. கத்தி முதலானவைகளைக் காட்டிலும் ஆத்மா சிறியதாயிருப்பதாலே, அவைகள் அதில் நுழைந்து 1 அதையழிக்கமுடியாது. [ 17 ]

அவ- உடம்புக்கு அழிவதே ஸ்வபாவமென்று சொல்லுகிறார்—

அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாஶ்ஶரீரிண: ।
அநாஶிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத்யுத்யஸ்வ பாரத ॥ ||௧௮||

உடம்பு அநேக வஸ்துக்கள் சேர்ந்து பொருந்திருக்கிறபடியால் அழிகிறது. உலகத்தில் குடம் முதலானவைகள் அநேக வஸ்துக்கள் சேர்ந்து பொருந்திருக்கிறபடியால் உடைந்துபோகின்றன. மேலும் கர்மங்களின் பலன்களான ஸுகங்களையும் துக்கங்களையும் ஜீவன் அநுபவிப்பதற்காக உடம்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சாஸ்திரம் சொல்லுகிறது. கர்மம் போனால் உடனே உடம்பு அழிந்துபோய்விடும். க்ஷணமகூட நிற்காது. ஒருவருஷம் ஜெயிலில் போடப்பட்டவனை கெடுவானவுடன, அவன் இருக்கிறேனென்று சொன்னாலும், ஒரு நிமிஷம்கூட அங்கு வைப்பார்களா?

---

1. ஆத்மா மிகவும் சின்னது. ஒரு மயிரின் நுனியை நூறுபங்காக்கி, அதில் ஒரு பங்கை நூறுபங்காக்கினால், அதிலொருபங்கு ஆத்மாவின் அளவு. இப்படி வேதத்தில் சொல்லியிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத சின்னப் புழுதியைக் கத்தியால் வெட்ட முடியாது. அது கத்திக்கு அகப்படாது. அப்படியே ஆத்மாவையும் ஒரு விதத்தாலும் அழிக்க முடியாது.

ஆத்மாவோ அறிவுள்ளதானதால் அதற்கு அழிவில்லை. உலகத்தில் அறியப்படும் வஸ்துக்களிலேதான் அழிவைப் பார்க்கிறோம். ஆத்மா அறியப்படும் வஸ்துவல்ல. அறிகிறவஸ்து. எப்போதும் "நான் இதை அறிகிறேன்" என்றே தோன்றுகிறது. நான் என்பது அறிகிறவன். இதை யென்பது அறியப்படும் பொருள். இது 13-வது அத்தியாயத்தில் 1-வது சுலோகத்தில் சொல்லப்படும்.

ஆத்மாவென்பது அனேக அவயவங்கள் சேர்ந்து உண்டானதாகத் தெரியவில்லை. "எனக்குக்காலில் வலிக்கிறது" "தலையில் ஸுகமாயிருக்கிறது" என்று துக்கத்துக்கும் ஸுகத்துக்குமிருப்பிடமாக உடம்பின் அவயவங்களைப் பேசுகிறோம். அப்படி ஆத்மாவுக்கு அவயவங்களிருப்பதாகத் தெரியவில்லை. ஆத்மா அறிவுள்ளதாயிருப்பதாலே, அது அவயவங்களின் சேர்க்கையாயிருந்தால், அந்த அவயவங்களுக்கும் அறிவு இருப்பதாக ஒப்புக்கொள்ளவேணும். அப்போது ஒரு அவயவத்துக்கும் மற்றொரு அவயவத்துக்கும் சண்டை நேரிடும். அப்படிச் சண்டையிருப்பதாய் ஒருவருக்கும் தெரியாதபடியால், ஆத்மா அவயவங்களின் சேர்க்கையன்று. ஆகையால் ஆத்மா மாறுதலன்றியில் ஒரேரூபமாயிருக்கிறது. அனேக அவயவங்கள் சேர்ந்து உண்டானதன்று ஒன்றையறிகிற வஸ்துவாகவும் மிகவும் சிறிய வஸ்துக்களிலும் நுழையத்தகுந்ததாயுமிருக்கிறது ஆகையால் அதற்கு அழிவில்லை. உடம்போ அனேக வஸ்துக்கள் சேர்ந்து உண்டாயிருக்கிறபடியாலும், ஜீவன்கள் கர்மபலனை யநுபவிப்பதற்காக உண்டாயிருப்பதாலும், எப்போதும் ஒரேமாதிரியாயில்லாமையாலும், ஆத்மாவினால் நுழையக்கூடியதாயிருப்பதாலும், அதற்கு 1. அழிவுண்டு. ஆகை

1. உடம்பு அழிவுள்ளது என்று எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே, அதற்கு யுக்தி சொல்லுவானேனென்றால், அதினால் எட்டு விதப் பிரயோஜனங்களிருக்கின்றன—1. ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதைக் காட்டுவதற்காக உடம்பின் அழிவைக் காட்டினபடி. அதாவது— எந்தக் காரணங்களால் உடம்பு அழிகிறதோ, அந்தக்காரணங்கள் ஆத்மாவுக்கு இல்லையென்று காட்டுதல். 2. உடம்புக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கு அழியும் தன்மையுண்டென்றும், ஒன்றுக்கு அழியும் தன்மையில்லையென்றும் காட்டுவதினால், அது வேறு இது வேறு என்று காட்டுதல்

யால் அழிவே இயற்கையான உடம்பையும் எப்போதும் அழிவில்லாத ஆத்மாவையும் பற்றி நீ துக்கப்படாதே நீ நல்ல கதியையடைவதற்காக விதிக்கப்பட்ட சண்டை முதலான கர்மங்களில் உனக்கும் பிறருக்கும் வரும் தொந்திரவுகளை தைரியத்தினால் பொறுத்துக்கொண்டு பலன்களில் ஆசையில்லாமல் சண்டையை ஆரம்பி [ 18 ]

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥

இப்படி அழிவில்லை யென்று சொல்லப்பட்ட ஆத்மாவை கத்தி முதலானது அழித்தது என்று எண்ணுகிறவனும், அவைகளில் ஏதாவதொன்றால் ஆத்மா கொல்லப்பட்டது என்று எண்ணுகிறவனும் - இந்த இரண்டுபேர்களும் அறியாதவர்கள். கீழ்ச்சொன்ன காரணங்களாலே ஆத்மாவுக்கு அழிவில்லையாகையால், கத்தி முதலானது அவனைக் கொல்லுவதில்லை. அவன் கொல்லப்படுவதுமில்லை. லோகத்தில் “ஒருவன் ஒருவனைக் கொன்றான்” என்று சொல்லுவதற்கு உடம்பைவிட்டு ஆத்மாவைப் பிரித்தானென்று பொருள் “பிராணிகளைக் கொலை பண்ணக

3 நீ லக்ஷம் ஜாக்கிரதை பண்ணினாலும், உடம்பு நிலையாயிராது என்று காட்டுதல். 4 உடம்பு பல காரணங்களால் கட்டாயம் அழிந்துவிடுமென்று தோன்றப்பண்ணி, அதில் வெறுப்பை யுண்டுபண்ணுதல். 5. தைவத்தின் ஒத்தாசையில்லாமல் ஒருவனை ஒருவன் கொல்ல முடியாது உங்களை அரக்கு மாளிகையில் வைத்துக் கொளுத்த ஆரம்பித்தார்களே, முடிந்ததோ ? இப்போது துர்யோதனன் முதலானவர்களைக் கொல்ல நான் தீர்மானித்துவிட்டேன். அதை உன்னால் தடுக்கமுடியுமோ ? ஆகையால் தைவமில்லாமல் ஒருவனால் மட்டும் ஒரு வேலை செய்ய முடியாதென்று காட்டுகை 6 ஒருவேளை தவறாமல் தளிகை பண்ணுவதும் சாப்பிடுவதும் இந்தமாதிரி ஓயாமல் நடத்தும்போது, “அப்பா! இந்தப் பசியை எப்போது அடியோடு தொலைப்போம்” என்று நல்ல அறிவுள்ளவனுக்கு தோன்றுவதுபோல, அடிக்கடி அழியக்கூடிய இந்த உடம்பு ஒருக்காலும் நமக்கு இல்லாமல் பண்ணுவதற்கு வழி யென்ன என்று தோன்றி, நல்ல கர்மங்கள் செய்து, இந்த உடம்பையே வாராமல் பண்ணலாமென்று தோன்றப்பண்ணுகை 7 கட்டாயம் அழியக்கூடிய உடம்பின் அழிவைப்பற்றி வருத்தப்படலாமோ என்று காட்டுகை. 8 ஒருவன் மோக்ஷத்தை அடைவதற்கு வேண்டிய ஸாதனத்தைச் சீக்கிரம் தேடவேண்டுமென்று காட்டுகை.

கூடாது" "பிராம்மணனைக் கொல்லக்கூடாது" என்று சொல்லுகிற சாஸ்திரங்களுக்கு "கொல்லவேணும்" என்று சொல்லப்பட்ட இடங்கள் தவிர மற்ற இடங்களில் உடம்பை விட்டு ஆத்மாவைப் பிரிக்கக்கூடாதென்று பொருள். [19]

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் நாயம் பூத்வா பவிதா வா ந பூய꞉ । அஜோ நித்ய꞉ ஶாஶ்வதோ(அ)யம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥ ||உ௦||

கீழ்ச்சொன்ன காரணங்களாலே ஆத்மாவுக்கு அழிவில்லை. ஆகையாலே அது பெருக்கிறதுமில்லை. இளைக்கிறதுமில்லை. ஒரு வித மாறுதலையுமடைவதில்லை. பிறப்பு இறப்பு முதலான அறிவில்லாத உடம்பினுடைய எல்லா ஸங்கதிகளும் ஆத்மாவுக்கு ஒரு காலத்திலுமில்லை. 1 கல்பத்தின் ஆரம்பத்தில் பிரும்மா முதலானவர்கள் உண்டாகிறார்களென்றும், கல்பத்தின் முடிவில் அவர்கள் போய்விடுகிறார்களென்றும் வேதத்தில் சொல்லப்பட்ட பிறப்பும் சாவும் அவர்கள் உடம்புக்கே தவிர ஆத்மாவுக்கில்லை. ஆகையால் எல்லாவுடம்புகளிலும் இருக்கும் ஆத்மாவுக்குப் பிறப்பு மில்லை அழிவுமில்லை. பிரளயகாலத்திலும் 2 பிரகிருதி ஒருவிதமாக

---

1. மனிதர்களுக்கு ஒரு வர்ஷம் தேவர்களுக்கு ஓர் நாள். அப்படிப்பட்ட 360 நாள் கொண்டது ஒரு தேவவர்ஷம். பன்னீராயிரம் தேவவர்ஷம் கூடியது ஒரு சதுர்யுகம் (நாலுயுகங்கள்). கலியுகத்துக்கு (432000) நான்கு லக்ஷத்து முப்பத்தீராயிரம் வர்ஷம். இதற்கு இரண்டு பங்கு கொண்டது த்வாபரயுகம், மூன்றுபங்கு கொண்டது த்ரேதாயுகம். நான்கு பங்கு கொண்டது க்ருதயுகம். ஆக நாலுயுகங்களுக்கும் 4320000 நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரம் வர்ஷம். ஆயிரம் சதுர்யுகம் கூடியது பிரும்மாவுக்கு ஓர்பகல், இதற்குக் கல்பம் என்று பெயர்.

2. பிரகிருதி யென்பது ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற மூன்று குணமுள்ளவஸ்து. ஸிருஷ்டி காலத்தில் அது மாறி வேறு பெயர்களை அடைகிறது. பிரளயகாலத்திலும் அதற்கு ஒரேவிதமான மாறுபாடு இருந்து கொண்டேயிருக்கிறது. அப்போது அதற்குப் பிரகிருதி யென்றே பெயர். வேறு பெயர் இடமுடியாது. உதாரணம்—ஒரு பெரிய குளத்தில் பெருங்காற்று அடிக்கும்போது தண்ணீரைபுரட்டிக்கொண்டு வருகிறது. அந்தத் தண்ணீருக்கு அலையென்று பெயர். காற்று மெது

மாறுவதுபோல் மாறுகிறதுமில்லை. அது எப்போதும் அநுப வித்தாலும், ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிதுபோல் இன்பமாயிருக் கிறது. ஆகையால் உடம்பு அழியும்போது ஆத்மாவுக்கு அழி வில்லை. [20]

வேதாவிநாஶிநம் நித்யம் ய ஏநமஜமவ்யயம் |
கதம் ஸ புருஷ: பார்த்த கம் காதயதி ஹந்தி கம் ||௨௧||

இப்படிப் பிறப்பும் இறப்பும் உருவத்தில் மாறுபாடும் இல்லா மையால் ஆத்மா, நிலையாயிருக்கிறதென்று எவன் அறிந்தானோ, அவன் பலவித உடம்புகளிலிருக்கும் ஆத்மாவைத் தானாகவோ பிறரைக்கொண்டோ அழிப்பதாக எப்படி நினைத்து 1 வருத்தப் படுவன். ஆகையால் ஆத்மாவைக் கொன்றேன் என்றும், கொல் லுவித்தேன் என்றும் துக்கப்படுவது ஆத்மாவை உள்ளபடி அறி யாமையாலேயே. [21]

அவ— தேவரீர் சொன்னபடி ஆத்மாவுக்கு அழிவில்லை, சாவு என்பது ஆத்மாவை உடம்பை விட்டுப்பிரிப்பதுதான். மிக வும் உயர்ந்த ராஜ உடம்பு போய்விடுகிறதே. அதைப்பற்றி வரு த்தம் வாராதோ என்றால், பதில் சொல்லுகிறார்—

வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி | ததா ஶரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யா நி ஸம்யாதி நவாநி தேஹீ ॥ ||௨௨||

சாஸ்திரப்படி செய்யப்படுகிற சண்டையில் சாகிறவனுக்கு ராஜ உடம்பைக்காட்டிலும் கோடிபங்கு அதிகமான அழகுள்ள உடம்பு வருகிறதென்று சாஸ்திரம் சொல்லுகிறது. ஒருகாசு கூடப்பொராத கிழிந்த அழுக்குத் துணியை உடுத்திக்கொண்டி

---

வாய் அடிக்கும்போது தண்ணீர் அசங்கிக் கொண்டேயிருக்கிறது. அதற்கு அலையென்று பெயரில்லை. அதுபோல ஆத்மாவுக்கு வேறு பெயரிடமுடியாத வேறுபாடும் கிடையாது.

1. உடம்பைக்காட்டிலும் வேறான அழிவில்லாத ஆத்மாவொன்று இருப்பதாக நாமும் சொல்லுகிறோமேயொழிய நமக்கு மனதில் பட வில்லை. நாமும் அர்ஜுநனைப்போலவே தானிருக்கிறோம். இது மன தில் பட்டதாக நினைக்கிறோம். ஆனால் மனதில் படவில்லை. இதைக்கவ னிக்கவேணும்.

ருக்கிறவன் நூறுரூபாய் பொருமானமுள்ள மிகவும் அழகான புதுத்துணியை உடுத்திக்கொள்ள வருத்தப்படுவனோ. ஸந்தோஷப்படமாட்டானோ. [22]

அவ— கீழ்ச்சொன்ன ஆத்மாவின் அழிவில்லாமை மனதில் நன்றாய் படுவதற்காக மறுபடியும் விரிவாய்ச்சொல்லி ஸ்திரப்படுத்துகிறார்—

𑌨𑍈𑌨𑌂 𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑍈𑌨𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌾𑌵𑌕𑌃 ।
𑌨 𑌚𑍈𑌨𑌂 𑌕𑍍𑌲𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑍋 𑌨 𑌶𑍋𑌷𑌯𑌤𑌿 𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ॥௨௩॥

𑌅𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌦𑌾𑌹𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌕𑍍𑌲𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌶𑍋𑌷𑍍𑌯 𑌏𑌵 𑌚 ॥
𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌰𑌚𑌲𑍋𑌽𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ॥௨௪॥

ஆத்மாவைக்கத்தியால் வெட்டவும், நெருப்பினால் கொளுத்தவும், ஜலத்தினால் நனைக்கவும், காற்றினால் உலர்த்தவும் முடியாது. ஆத்மா அவைகளுக்குள்ளே புகுமேயொழிய, ஆத்மாவுக்குள் அவைகளால் நுழையமுடியாது. கீழ்ச்சொன்ன வெட்டுவது முதலான ஸங்கதிகள் நுழைந்து தான் ஆகவேண்டும். நுழையாமல் முடியாது. ஆகையால் ஆத்மா அழிவில்லாதது. அழிக்கத் தகுந்ததல்ல. அழிக்கும் வஸ்துவுக்கு அகப்படாதது. இது முதலென்று இல்லாமலிருக்கிறது. [23–24]

அவ— கீழ்ச்சொன்ன ஸங்கதிகளுக்கு விரோதமான அநுபவமுமில்லை, யுக்தியுமில்லை என்று காட்டி முடிக்கிறார்—

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌯𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑌵𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌨𑌾𑌨𑍁𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

வெட்டுவது முதலான வேலைகளுக்குத் தகுந்த வஸ்துக்களை கண் முதலான இந்திரியங்களால் அறிகிறோம். அப்படி அவைகளால் ஆத்மாவை அறியமுடியாது. ஆகையால் ஆத்மா அந்த ஜாதியல்ல. ஒருக்கால் அதுபோலிருக்கலாமோவென்று எண்ணவும் முடியாது. ஆகையால் ஒருவிதமான வேறுபாடுக்கும் தகுந்ததல்ல. இந்த ஸங்கதி உன்மனதில் பட்டால் வருத்தமுண்டாகாது. [25]

𑌅𑌥 𑌚𑍈𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌨𑍈𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

பிறப்பையும் சாவையும் இயற்கையாகவுடைய உடம்பு தவிர வேறு ஆத்மா இல்லையென்று நீ நினைத்தாலும், இப்படி அதிகமாக வருத்தப்பட நியாயமில்லை. அழியக்கூடிய உடம்பு அழியா திருக்குமோ. [26]

𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌽𑌰𑍍𑌥𑍇 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

உண்டான எல்லா வஸ்துக்களும் தவராமல் அழிவதைப் பார்க்கிறோம். அப்படியே அழிந்ததும் கட்டாயம் உண்டாகும். ஆகையால் கட்டாயம் அழியக்கூடிய உடம்பை ஆத்மாவாகநினைத்தவன் அதின் அழிவுக்கு அழுவனோ? ஆற்றங்கரையிலுட்கார்ந்து கொண்டு ஜலத்துக்கு கிழக்கே போகிறதே ஸ்வபாவம் என்று தெரிந்தவன் அதற்கு அழுவனோ ?

அழிந்தது உண்டாகுமோ ? அது எப்படி என்றால்—சேணியன் துணி நெய்கிறனே. அந்தத்துணி முன் இருந்ததா ? இல்லாததா? சேர்ந்த நூல்கள் தவிர துணியென்று வேறு வஸ்து கண்ணுக்குத் தெரிகிறதோ. சேர்ந்தால் துணி. பிரிந்தால் நூல். இது தானே. ஆகையால் "உண்டாகிறது, அழிகிறது" என்பதிரண்டும் ஒரு வஸ்துவின் ஒரு விதமான இருப்பின் மாறுதல். அழிந்த காலத்திலும் வஸ்து இருக்கிறது. அழிந்தது உண்டாகலாம். புதிதாகத் துணியென்று முன் இல்லாத ஒன்று உண்டாகிற தென்று சொல்லுகிற தர்க்க சாஸ்திரகாரர்களுக்கும் கண்ணுக் குப்படுவது சேர்ந்த நூல்தானே. புதிதாய் முன்பில்லாத துணி யென்று ஒன்று உண்டாகிறதென்பது கட்டுப்பாடுதானே. சேர்ந்த நூல் பிரியும்போது துணி கிழிந்தது என்று சொல்லுகிறது. துணி கிழிந்தது நூலின் பிரிவுதான். நூலாயிருந்த வஸ்துவிற்கு துணியாயிருப்பு அழிவு. அதுதானே துணிக்குப் பிறப்பு. ஆகையால் நூல் துணியாகும். துணி நூலாகும். இந்த மாறுதல்

நிற்காது [27]

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾 𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾 ॥ ॥௨௮॥

வஸ்துக்களுடைய முன் இருப்புபோய்,வேறு இருப்பு வரும் போது, வநதது கெடுதல என்று தெரிநதால், துக்கப்படலாம். ஒரு நல்ல மாம்பழத்தை இரண்டு நாள் பார்க்காமலிருந்து அது அழுகிப்போனால், அதைப்பறறி வருத்தப்படுகிறோம். ஒரு மனிதன் இறநதுபோன பிறகு இன்னமா யிருக்கிறானென்று தெரியுமா? அது கெடுதல என்று பார்க்கிறானோ? எப்படி அதைப் பற்றி வருத்தப்படக்கூடும். இப்போதிருப்பதைக் காட்டிலும் வரப்போகிற இருப்பு நல்லதாயிருந்தால், ஸந்தோஷப்பட வேண்டாமா? குழந்தை பிறந்தவுடன் ஒருவன் ஸந்தோஷப்படுகிறானே. அதினுடைய முன் இருப்பு அவனுக்குத் தெரியுமா? அது கெடுதலாயிருநததா? ஆகையால் முன் இருந்ததும் தெரியவில்லை பின்பு வரப்போகிறதும் தெரியவில்லை. ஆகையால கெடுதி தெரியாமையால் ஒரு வஸ்து அழிவதை நினைத்து வருத்தப்பட நியாயமில்லை.

[ 28 ]

அவ— உடம்பையே ஆத்மாவாக நினைத்தாலும், வருததப்பட நியாயமில்லையென்று சொன்னேன். உடம்பைக்காட்டிலும் வேறாய், ஆதமாவென்று ஒரு வஸ்து இருககிறது. அது மிகவும் ஆசசரியமானது. அதைப் பார்ப்பதும், சொல்லுவதும, கேட்பதும, கேட்டு அதின் உண்மையை யறிவதும் மிகவும் அரிது என்று சொல்லுகிறார்—

𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍇𑌨𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌦𑍍𑌵𑌦𑌤𑌿 𑌤𑌥𑍈𑌵
𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 । 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌚𑍍𑌚𑍈𑌨𑌮𑌨𑍍𑌯𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑍇
𑌨𑌂 𑌵𑍇𑌦 𑌨 𑌚𑍈𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 ॥ ॥௨௯॥

ஒருவன் உயர்நத தபஸ்ஸைப்பண்ணி, பாபத்தைப போக்கி, புண்ணியத்தைஸம் பாதித்து,உடம்பைக்காட்டிலும் வேறாயும்,தன்னைத்தவிர மறற அறிவில்லாத எல்லா வஸ்துக்களைக் காட்டிலும வேறு ஜாதியாயும், அதனாலே ஆசசரியமாயும்இருக்கிற ஆத்மஸ்வரூபத்தைப பார்க்கிறான். இப்படிப்பட்ட ஒருவன மற்றொருவனுக்குச சொல்லுகிறான். இதையாரோ ஒருவன் கேட்கிறான.

அப்படிக்கேட்டும் ஒருவனும் அதை யுள்ளபடி 1 அறியவில்லை.

𑌦𑍇𑌹𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌵𑌧𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑌤 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

தேவ உருவம், மனித உருவம், மிருக உருவம், மர உருவம்- இவைகளில் ஜாதி, குணம், தேசம், காலம் முதலானவைகளால் வேறுபாடுகளும், அவைகளிலிருக்கும் ஆத்மாக்களுக்கு 2 ஸுகத்திலும் துக்கத்திலும் வேறுபாடுகளும் இருந்தாலும், அழிவில்லை யென்கிற விஷயத்தில் எல்லா ஆத்மாக்களும் ஒரேமாதிரி. சில உடம்புகளில் ஆத்மா அழிகிறதென்றும், சில உடம்புகளில் ஆத்மா அழிகிறதில்லை யென்றுமில்லை. வேறுபாடுகளும் அழிவும் உடம்புகளில்தானிருக்கின்றன ஆகையால் ஒரு ஆத்மாவைப் பற்றியும் நீ வருத்தப்படாதே. இவ்வளவு தூரம் சொன்னது பீஷ்மரும் துரோணரும் மாத்திரம் சாகவில்லை யென்பதில்லை. ஒரு ஆத்மாவுக்கும் சாவு இல்லை என்று காட்டுவதற்காக [30.]

அவ— துர்யோதநன் முதலானவர்கள் விஷயத்தில் ஸ்நேஹத்தாலும் தயையாலும் வந்த கலக்கத்தைத் தீர்த்தார். துரோணாசாரியர் முதலானவர்களைக் கொல்லுவது பாபம் என்கிற எண்ணத்தைப் போக்குகிறார்—

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥௩௧॥

1. உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மாவைப் பார்க்கிறவனே அரிது. அதையுள்ளபடி பார்க்கிறவன் அரிது என்று சொல்லவேணுமோ? இப்படிப்பட்டவர்களிருந்தாலும், அதைச்சொல்லுகிறவனே அரிது. அதினுடைய எல்லா ஸங்கதிகளையும் சொல்லுகிறவன் அரிது என்று சொல்லவேணுமோ? இப்படி சொல்லுகிறவர்களிருந்தாலும், கேட்கிறவனே அரிது. சிஷ்யனுக்கு வேண்டியஎல்லா குணங்களோடுகூடி, அதை யுள்ளபடி யிருப்பதைக் கேட்பவன் அரிதென்று சொல்லவேணுமோ?

2. உடம்புகளில் மாறுபாடு இருப்பது எல்லாருக்கும் தெரியும். ஸுகத்திலும் துக்கத்திலும் வேறுபாடுகளிருப்பதாலே, ஆத்மாக்களுக்குள்ளும் வேறுபாடுகளிருக்கிறதோ என்று உண்டாகும் ஸந்தேஹம் இந்த சுலோகத்தில் தீர்க்கப்படுகிறது.

இப்போது ஆரம்பித்திருக்கிற சண்டை பிராணிகளைக் கொல்லுவதாயிருந்தாலும், யக்ஞத்தில் ஆட்டைக் கொல்லுவதைப்போல, அதைத் தர்மமென்று நினை கலங்காதே நியாயமாக ஏற்பட்ட சண்டையைக் காட்டிலும், ஆத்மாவுக்கு க்ஷேமத்தைக்கொடுக்கிற வேறு நல்லவேலை க்ஷத்திரியனுக்குக் கிடையாது க்ஷத்திரியனுக்குச் சண்டைசெய்வது தொழிலென்று, அந்தந்த ஜாதிக்குத் தொழில்களைச் சொல்லுமிடத்தில் (18-வது அத்தியாயம் 43-வது சுலோகம்) சொல்லப்போகிறார்.

யாகத்தில் ஆடு கொல்லப்பட்டாலும், அதற்கு மிகவும் இளப்பமான ஆட்டுருவம் போய், மிகவும் உயர்ந்ததான தேவ உருவம் வருகிறதென்று வேதம் சொல்லுகிறது சிரங்கைக் கத்தியால் அறுத்து, வைத்தியன் செய்கிறவேலை, அந்த வேளையில் தொந்திரவைக் கொடுத்தாலும், பிறகு மிகுந்த சௌக்கியத்தைக்கொடுக்கிறது அப்படியே யக்ஞத்தில் ஆட்டைக்கொல்வது. அப்போது அதற்குத் தொந்திரவாயிருந்தாலும், பிறகு ஸ்வர்க்கத்தை கொடுப்பதால், தோஷமன்று சண்டையில் சாகிறவர்கள் தேவர்களாகிறார்கள் என்று சாஸ்திரம் சொல்லுகிறது [ 31 ]

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾 𑌚𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌪𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑍁𑌖𑌿𑌨𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌮𑍀𑌦𑍃𑌶𑌮𑍍 ||௩௨||

பிரயத்தனமில்லாமல் வந்ததும், மிகவுமுயர்ந்த ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக் கூடியதும், ஒருவிதமான தடங்கலில்லாததுமான இவ்விதமான சண்டை மிகுந்த புண்ணியம் பண்ணின க்ஷத்திரியர்களுக்கு வருகிறது [ 32 ]

𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌤𑌤𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ ||௩௩||

க்ஷத்திரியனுக்குக் கட்டாயம் செய்ய வேண்டியதென்று சாஸ்திரத்தால் சொல்லப்படுகிற, இப்போது நேர்ந்திருக்கிற, இந்தச் சண்டையை, இதின் உண்மையை யறியாமல், நீ விட்டு விட்டால், தர்மத்தைச் செய்யாததினால் வேறு லோகத்தில் வரும் ஸ்வர்க்கத்தையும், இந்த லோகத்தில் வரும் கீர்த்தியையும் இழந்து, மிகுந்த பாபத்தையும் அடைவாய் [ 33 ]

𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌽𑌵𑍍𑌯𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌰𑌣𑌾𑌦𑌤𑌿𑌰𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௩௪॥

ஸ்வர்கத்தையும் கீர்த்தியையும் இழப்பது மாத்திரமன்று, "அர்ஜுனன் சண்டை ஆரம்பித்தவுடன் பயந்து ஓடிப்போய் விட்டானும்" என்ற கெட்ட பெயரை எல்லா விடங்களிலும் எப்போதும் யாரும் சொல்லுவார்கள். அதினால் என்னவென்றால், நல்ல பெயர்பெற்ற ஒருவனுக்கு கெட்டபெயர் வருவதைக்காட்டிலும் சாவே மிகவும் நல்லது. [ 34 ]

அவ— நான் பந்துக்களிடத்தில் ஸ்நேஹத்தாலும் தயையாலும் அன்றோ சண்டைப்படாமலிருக்கிறேன். பயந்து ஓடுகிறான் என்று கெட்டபெயர் எப்படிவரும் என்றால், பதில்சொல்லுகிறார்-

𑌭𑌯𑌾𑌦𑍍𑌰𑌣𑌾𑌦𑍁𑌪𑌰𑌤𑌂 𑌮𑌂𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 ।
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌬𑌹𑍁𑌮𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌲𑌾𑌘𑌵𑌮𑍍 ॥

தகுந்த கெட்டிக்காரர்களோடு சண்டை நேரும்போது, தகுந்த கெட்டிக்காரனென்று எதிரிகளால் கொண்டாடப்பட்ட ஒருவன் பயமில்லாவிட்டால், ஸ்நேஹத்தாலும் தயையினாலும் ஒதுங்குவது வழக்கமில்லை. ஒதுங்கவும் மாட்டான். கர்ணன் முதலானவர்கள் பயத்தாலே நீ ஓடினாய் என்று தான் நினைப்பார்கள்.

𑌅𑌵𑌾𑌚𑍍𑌯𑌵𑌾𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑌹𑍂𑌨𑍍𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵𑌾𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌵 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌤𑌤𑍋 𑌦𑍁𑌃𑌖𑌤𑌰𑌂 𑌨𑍁 𑌕𑌿𑌮𑍍 ॥ ॥௩௬॥

அதுவும் தவிர, "சூரர்களான எங்கள் முன்னிலையில் இந்த அர்ஜுனன் ஒரு க்ஷணம் நிற்க முடியுமா? வேறு இடத்தில்தான் இவன் ஸாமர்த்தியம் செல்லும்" என்று உன்னைப் பலவிதமாக துர்யோதநன் முதலான சத்ருக்கள் எல்லாரும் தூஷிப்பார்கள். அதைக்காட்டிலும் பெரிதான துக்கம் உனக்கு எது ? இப்படி அவர்கள் சொல்லக் கேட்கும்போது, அதைக்கேட்பதைக்காட்டிலும் சாவதே மேலென்று நீயே நினைப்பாய். [ 36 ]

அவ— ஆகையால் நீயாவது அவர்களைக் கொல்லுவது, அல்லது அவர்கள் உன்னை கொல்லுவது—இந்த இரண்டும் மிகவும் நல்லது என்று சொல்லுகிறார்—

**ஹதோ** வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க³ம் ஜித்வா வா போ⁴க்ஷ்யஸே மஹீம் | தஸ்மாது³த்திஷ்ட² கௌந்தேய யுத்³தா⁴ய க்ருதநிஶ்சய: || ||௩௭||

*தர்மமான சண்டையில் நீ பிறர்களால் கொல்லப்பட்டால், அதினாலேயே உயர்ந்த ஸுகத்தையடைவாய். நீ அவர்களைக் கொன்றால், ஒருவிதத் தொந்திரவுமில்லாத ராஜ்ஜியத்தை அநுபவிப்பாய். இந்த சண்டையைச் சாஸ்திரம் செய்யவேணுமென்று சொல்லுகையால், மோக்ஷத்தையும் அடைவாய். சண்டைப்படுவது மோக்ஷத்திற்கு ஸாதநமென்று நினைத்து, சண்டைக்குக் கிளம்புவதுதான் என் அத்தை குந்தியின் பிள்ளையான உனக்குத் தகுந்தது.* [ 37 ]

*அவ— மோக்ஷத்திற்காகச் சண்டை செய்கிற விதத்தைச் சொல்லுகிறார்—*

**ஸுக²து³:கே² ஸமே க்ருத்வா லாபா⁴லாபௌ⁴ ஜயாஜயௌ |**
தோ யுத்³தா⁴ய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ||௩௮||

*உடம்பைக்காட்டிலும் வேறாய், உடம்பிலுள்ள ஒருவித கெடுதியும் அழிவும் இல்லாத ஆத்மாவையறிந்து, சண்டையில் நேரிடும் ஸுகத்தையும் துக்கத்தையும், லாபத்தையும் நஷ்டத்தையும், ஜயத்தையும் தோல்வியையும் ஸமமாக எண்ணி, அதாவது அவைகளால் மனது கலங்காமல், ஸ்வர்க்கம் முதலான பிரயோஜநங்களை விரும்பாமல், இந்தச சண்டையைக் கட்டாயம் செய்யவேண்டியதென்று நினைத்துச் சண்டையைச்செய். இப்படிச் செய்தால், இப்போதிருக்கிற ஸம்ஸாரம் போய்விடும். இனிமேல் ஸம்ஸாரமும் வராது.* [ 38 ]

*அவ— இப்படி ஆத்மாவை யுள்ளபடி அறிவித்து, இந்த அறிவுடன் செய்யவேண்டிய மோக்ஷத்திற்கு ஸாதநமான கர்மயோகத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார்—*

ஏஷா தேऽபி⁴ஹிதா ஸாங்க்²யே பு³த்³தி⁴ர்யோகே³ த்விமாம் ஶ்ருணு | பு³த்³த்⁴யா யுக்தோ யயா பார்த² கர்மப³ந்த⁴ம் ப்ரஹாஸ்யஸி || ||௩௯||

ஆத்மாவையுள்ளபடி அறிவதற்குச் சொல்ல வேண்டியதைச் சொன்னேன். இந்த அறிவுடன் மோக்ஷத்திற்காகக் கர்மம் செய்யும்போது, என்ன நினைவு வேணுமோ அதைச் சொல்லுகிறேன் அந்த நினைவு இல்லாவிட்டால், அந்தக் கர்மத்தினால் ஸம்ஸாரம் போகாது தாம்பிரம் முதலானவைகளைச் சுத்திசெய்யாமல் பஸ்மம் (மருந்து) பண்ணினால், அதனால் குணமுண்டாகாது அது போல். [ 39 ]

அவ— சொல்லப்போகிற நினைவுடன் செய்கிற கர்மத்தின் பெருமையைச் சொல்லுகிறார்—

நேஹாபிக்ரமநாஶோऽஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே ।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் ॥௪0॥

நான் சொல்லப்போகிற நினைவுடன் செய்ய வேண்டிய கர்மத்தை ஆரம்பித்து நடுவில் விட்டு விட்டாலும், செய்யப்பட்டது வீணாய்ப்போகாது தோஷமுமில்லை. தைவவசத்தால் நடுவில் நின்றாலும், கொஞ்சம்செய்ததும் பெரிய பயத்தை யுண்டுபண்ணக்கூடிய ஸம்ஸாரத்தைப்போக்கும் இந்த ஸங்கதி 6-வது அத்தியாயம் 40-வது சுலோகத்தில் விரிவாய்ச் சொல்லப்படும். உலகத்தில் ஒருவன் நாத்துவிட்டு, மேலே செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் விட்டுவிட்டால், அவனுக்கு ஒன்றும் அகப்படாது விதைக்காமல் போனால், அந்த விதையைக் குத்திச் சாப்பிடலாம். அதையும் இழந்தான் நிறைந்த வெள்ளமுள்ள ஆற்றைத்தாண்டி, அக்கரை போக நினைத்தவன், அதிலிறங்கி கொஞ்சதூரம் நீந்தி நடுவாற்றில் நீந்தாமல் இருந்தால், அதுவரையில் நீந்தினதும் வீண். ஆற்றோடே போய்விடுவான் ஸ்வர்க்கத்திற்காக யாகம் செய்ய ஆரம்பித்தவன் நடுவில் அதை விட்டு விட்டால், செய்ததும் வீண், தோஷமுமுண்டு அவன் பிரும்மராக்ஷஸ்ஸாகவும் ஆய்விடுவான் என்று சாஸ்திரம் சொல்லுகிறது [ 40 ]

அவ— மற்ற பிரயோஜநத்திற்காக கர்மங்கள் செய்யும்போது இருக்கும் நினைவைக்காட்டிலும், மோக்ஷத்திற்காக கர்மங்கள்செய்யும்போது இருக்கும் நினைவின் பெருமையைச் சொல்லுகிறார்—

வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தந |
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோऽவ்யவஸாயிநாம் ||௪௧||

1. ஆத்மாவை யுள்ளபடி அறிந்து, மோக்ஷம் வேணுமென்று ஆசைப்பட்டு, கர்மங்களைச் செய்பவனுக்கு தன்னால் செய்யப்படும் சாஸ்திரத்தில் சொல்லிய எல்லாக் கர்மங்களிலும் ஒரே நினைவு தானிருக்கிறது. ஏனென்றால்—அந்தக் கர்மங்கள் எல்லாவற்றுக்கும் அவனுக்கு மோக்ஷமொன்றே பலன். அப்படியே அவன் எல்

---

1. ஸுவர்க்கம் முதலான பலன்களுக்காகக் கர்மங்கள் செய்கிறவனுக்கு, உடம்பைக்காட்டிலும் வேறான அழிவில்லாத ஆத்மாவென்று ஒருவஸ்து இருக்கிறது என்கிற அறிவுமாத்திரம் போதும். உடம்பைக் காட்டிலும் ஆத்மா வேறு என்று அறிவுமாத்திரம் போதாது. அது உடம்போடு பிறந்து உடம்போடு அழியும் என்கிற தப்பெண்ணமிருந்தால், வேறு லோகத்தில் அநுபவிக்கக்கூடிய பலன்களை ஆசைப்பட்டுக் கர்மங்களைச் செய்யமாட்டான். ஆனால் ஆத்மா ஸ்வயம் பிரகாசம் (தானே தோன்றுகிறது) என்றும், அதில்இயற்கையாக ஒருவித தோஷம் கிடையாதென்றும், அது மிகவும் இன்பமானதென்றும், பகவானுக்கு உடம்பென்றும் அவன் அறியவேண்டியதில்லை. இந்த அறிவில்லாமலே ஸ்வர்க்கம் முதலான பலன்களை ஆசைப்படவும், அவைகளுக்கு வேண்டிய ஸாதநங்களைச் செய்யவும், அந்தப்பலன்களை அநுபவிக்கவும் கூடும். ஸுவர்க்கம் ஸுகமென்று சாஸ்திரத்தாலே தெரிந்தால், தானே அதில் ஆசையுண்டாகும். அதனுடைய ஸாதநங்களைச் செய்வதற்குத் தகுந்த உடம்பு முதலான கருவிகள் இருப்பதாலும், பலனையநுபவிக்கும்காலத்தில்தானிருப்பதாக நிச்சயமிருப்பதாலேயும்,அறிவில்லாத குடியானவன் நெல்லுக்காக வயலையுழுவதுபோல், அதின் ஸாதநங்களை அவன் செய்வான். ஸாதநங்கள் ஸரியாயிருந்தால், பலன் கட்டாயமுண்டாகும். அநுபவத்திற்காகவே அவன் பிறந்திருப்பதாலே, பலனையநுபவிக்கவும் கூடும். அப்போது அவனுக்கு ஆத்மாவின் உள்ளபடி அறிவு வேண்டியதில்லை. ஸுவர்க்கத்தை ஆசைப்பட்டவன் ஆத்மாவை உள்ளபடி அறிந்துதான் யாகங்களைச்செய்ய வேணுமென்று சாஸ்திரம் சொல்லவில்லை. ஆத்மாவை உள்ளபடி தெரியாதவனே ஸுவர்க்கம் முதலான பலன்களை அநுபவிக்கிறானென்றும், புகை முதலான வழியால் அவன் ஸுவர்க்கத்திற்குப் போகிறானென்றும் சாஸ்திரம் சொல்லுகிறது. அடுத்த சுலோகத்திலும் ஆத்மாவை யுள்ளபடி அறியாதவன் ஸுவர்க்கத்திற்காகப் பாடுபடுகிறானென்று சொல்லுகிறது.

லாக் கர்மங்களையும் மோக்ஷமென்கிற ஒரே பலனுக்காகச் செய்ய வேண்டியதென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது ஆகையாலே அவன் செய்யும் கர்மங்கள் வெவ்வேறாக இருந்தாலும், வெவ்வேறு விதிகளைக்கொண்டு செய்யப்பட்டாலும், மோக்ஷமென்கிற ஒரே பலனை அவைகளால் அடைய வேண்டியது. அந்த விதிகளெல்லாம் அவனுக்கு ஒரே விதியாயிருக்கின்றன ஆகையாலே அவனுக்கு எல்லாக் கர்மங்களிலும் ஒரே நினைவுதான் இருக்கிறது உதாரணம்—தர்சம் என்றும், பூர்ணமாஸமென்றும் சொல்லப்பட்ட யஞ்ஞங்களில் ஆறு 1 யாகங்களைச் செய்யும்படி ஐந்து விதிகளிருக்கின்றன. அந்த யாகங்கள் பலன் கொடுப்பதற்கு உதவியாக, பதினொன்று யாகங்கள் வேறு விதிகளால் தனித்தனி விதிக்கப்படுகின்றன இவைகள் எல்லாவற்றுக்கும் ஸ்வர்க்கமொன்றே பலன் ஆகையால் இந்தக் கர்மங்கள் வெவ்வேறாக இருந்தாலும், ஒரே பலனைக் கொடுக்கிறதாகையால், அவைகளைப்பற்றின நினைவு ஒன்றுதான் இதுபோல மோக்ஷத்தை ஆசைப்பட்டவனுக்கு அவன் செய்யும் எல்லாக்கர்மங்களிலும் ஒரே நினைவுதானிருக்கிறது ஸ்வர்க்கம்-பிள்ளை-பசு-சோறு, முதலான பலன்களை ஆசைப்பட்டவன் செய்யும் கர்மங்களில் இருக்கும் நினைவுகள் கணக்கில்லாதவைகளாயிருக்கின்றன ஏனென்றால் — அவன் ஆசைப்படுகிற பலன்களுக்குக் கணக்கில்லை ஸ்வர்க்கம் என்ற ஒரே பலனுக்காக வேதம் சொல்லுகிற தர்சமென்றும், பூர்ணமா

---

1. யாகமென்பது ஒரு தேவதைக்கு ஒரு பொருளை கொடுப்பது அமாவாஸைக்கு அடுத்த பிரதமையில் மூன்று யாகங்கள் செய்ய வேண்டியது. அவைகளுக்குத் தர்சமென்று பெயர். பௌர்ணமாஸிக்கு அடுத்தப் பிரதமையில் மூன்று யாகங்கள் செய்ய வேண்டியது. அவைகளுக்கு பூர்ணமாஸம் என்று பெயர் தர்சமும் பூர்ணமாஸமும் சேர்ந்து ஸ்வர்க்கம் என்கிற பலனைக்கொடுக்கின்றன இவைகள் பிரதானயாகங்கள். இவைகளுக்கு உதவிசெய்கிற யாகங்கள் பதினொன்று. அவை யாவன- ஐந்து பிரயாஜங்கள் இரண்டு ஆஜ்யபாகங்கள் இவைகளை பிரதானயாகங்களுக்கு முன்னாலே செய்ய வேண்டியது ஸ்விஷ்டக்ருத் மூன்று அநுயாஜங்கள் இவைகளைப் பிரதான யாகங்களுக்குப் பின்னாலே செய்யவேண்டியது, இவைகளுக்குத் தனியான பலன் கிடையாது.

ஸமென்றும் சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்யும்போது, நடுவில் ஸுவர்க்கத்தோடு அநேக 1 சின்ன பலன்களை ஆசைப்பட்டு, அவைகளுக்காகச் சில கர்மங்கள் செய்யப்படுவதால், ஒரே நினைவில் பல பிரிவுகளிருக்கின்றன.

2 இதினால் மோக்ஷம் வேணுமென்று ஆசைப்படுகிறவன் தெரிந்து கொள்ள வேண்டியதாவது— 3 நித்யமென்றும், நைமித்திகமென்றும் சொல்லப்படுகிற கர்மங்களினால் சில முக்கியமான பலன்களும், நடுவில் சின்னபலன்களும் வருமென்று வேதத்தில் சொல்லப்படுகின்றன. அந்த பலன்களை யெல்லாம் விட்டுவிட்டு,

---

1. சின்ன பலன்கள்—உதாரணம் - தர்சமும் பூர்ணமாஸமும் செய்யும்போது, வருத்த அரிசிமாவை உண்டையாகப் பிடிப்பதற்காக ஒரு மர அகலில் ஜலத்தை யெடுத்து ஆஹவனீய அக்நிக்கு வடபுறம் வைக்க வேண்டியது. இந்த ஜலத்திற்குப் பிரணீதா என்று பெயர். யஜமானுக்குப் பசுவில் ஆசையிருந்தால், மர அகலுக்குப் பதிலாக மாடு கறக்கிற பாத்திரத்தில் இந்த ஜலத்தை வைக்கவேண்டியது. அப்படிச் செய்தால், ஸுவர்க்கம் என்கிற முக்கியமான பலனுடன், பசு என்கிற சின்ன பலனும் வருகிறது.

2. பலன்களை ஆசைப்பட்டுக் கர்மங்களைச் செய்கிறவனுக்கு அநேக நினைவுகளும், ஒவ்வொரு நினைவில் அநேகப் பிரிவுகளும் இருப்பதால், அவன் நாலு பக்கத்திலும் இழுக்கப்படுகிறான். அதனால் மனது கலங்கி, ஒரு கர்மத்தையும் நன்றாய் செய்ய முடியாது. மோக்ஷத்திற்காகக் கருமங்கள் செய்கிறவனுக்கு ஒரே நினைவு இருக்கிறபடியால், மனதில் கலக்கமில்லை. அவனுடைய சக்தி முழுவதையும் அந்தக் கர்மங்களில் செலுத்தி அவைகளை நன்றாய் செய்யலாம்.

3. நித்யகர்மம் என்றால், எந்தக் கர்மங்களைச்செய்யாமல் போனால், தண்டனை யுண்டென்று சாஸ்திரம் சொல்லுகிறதோ, அவைகள். ஸந்தியாவந்தநம் முதலியவைகள். ஒருகாரணம் நேர்ந்தபோது செய்யவேண்டிய கர்மங்களை நைமித்திக கர்மங்கள் என்று சொல்லுகிறது. கிரஹணம் வந்தால், தர்ப்பணம் செய்வது நைமித்திக கர்மம். இவைகளையும் செய்யாவிட்டால் தண்டனையுண்டு. இவைகளை ஒரு காலத்தில் செய்ய வேண்டியது. நித்யகர்மங்களை உயிரோடிருக்கும் வரையில் செய்ய வேண்டியது.

அவைகளுக்கு எல்லாம் 1மோக்ஷமொன்றே பலனென்றும், அவைகள் வெவ்வேறு சாஸ்திரங்களால் விதிக்கப்பட்டாலும், எல்லா விதியும் ஒரே விதியென்றும் எண்ணி, அவைகளைச் செய்யவேண்டியது பலனுக்காகவே ஏற்பட்ட (காமிய) கர்மங்களிலும், தன்னுடைய ஜாதிக்கும் ஆசிரமத்துக்கும் தகுந்த கர்மங்களை அவைகளின் பலன்களில் ஆசையை விட்டு, அவைகளுக்கு மோக்ஷம் ஒன்றே பலனென்று எண்ணி, நித்யம் நைமித்திகம் என்ற கர்மங்களுடன் 2 சேர்த்துத் தன் சக்திக்குத் தகுந்தபடி செய்யவேண்டியது [41]

அவ— ஸ்வர்க்கம் முதலான பிரயோஜனங்களுக்காகக் கர்மம் செய்கிறவர்களைத் தூஷிக்கிறார்—

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஶ்சித: ।
வேதவாதரதா: பார்த்த நாந்யதஸ்தீதி வாதிந: ॥ ॥௪௨॥
காமாத்மாந: ஸ்வர்கபரா ஜந்மகர்மபலப்ரதாம் ।
க்ரியாவிஶேஷபஹுலாம் போகைஶ்வர்யகதிம் ப்ரதி ॥௪௩॥
போகைஶ்வர்யப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம் ।
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே ॥ ॥௪௪॥

1 நித்ய கர்மங்களைச் செய்வதனாலே பாபம் போகுமென்று சொல்லவில்லையா? மோக்ஷமென்கிற ஒரே பலனென்று சொல்லலாகுமோ? பதில்—நித்ய கர்மங்கள் பாபத்தை நாசம் செய்து, மனதின் கல்மஷத்தைப் போக்கி, மோக்ஷத்திற்கு உதவி செய்கின்றன. ஆதலால் அவைகளுக்கும் மோக்ஷமே பலன்.

2 இதன் கருத்து—முமுக்ஷுவுக்கு காமியகர்மங்களில் அங்கங்கள் குறைந்தபோதிலும், நித்யகர்மங்களிலும் நைமித்திகங்களிலும் போல் தோஷம் வராது. பிரதானமான தர்சத்திலும் பூர்ணமாஸத்திலும் விட்டுப்போவது உண்டானால் தோஷமுண்டு. அவைகளுக்கு அங்கமான பிரயாஜம் முதலான யாகங்களை, தேசமும் காலமும் ஒத்துக்கொள்ளாததாலே, விட்டபோதிலும் தோஷமில்லை. அப்படியே நித்ய கர்மங்களும், நைமித்திக கர்மங்களும், காமியகர்மங்களும் கர்மயோகத்துக்கு அங்கமாயிருப்பதாலே, ஒருக்கால் அவைகள் செய்ய முடியாமல் நின்றுபோய் விட்டாலும் குற்றமில்லை. பிரதானமான கர்மயோகம் நின்றால்தான் குற்றம்.

சிலர் நல்ல அறிவு இல்லாமல், சில கர்மங்களாலே சில பலன்கள் வருமென்று வேதத்தில் சொல்லுகிற வார்த்தைகளில் மனது படிந்து, அந்தப் பிரயோஜநங்களில் ஆசையை வைத்து, அவைகளுக்குள் ஸ்வர்க்கத்தையே உயர்ந்த பிரயோஜநமாக எண்ணி, அதைக்காட்டிலும் உயர்ந்த ஸுகம் கிடையாது என்று விஷயாநுபவத்தைப் பற்றியும், நானு ஜநத்தை யடக்கி ஆளுகிற அதிகாரத்தைப்பற்றியும், சில பேச்சுக்களைப் பேசுகிறார்கள். அந்தப்பேச்சுகள், பின்னால் பழத்தைக் கொடுக்காத புஷ்பம்போல், கேட்கும் போது ஸுகமாயிருந்தாலும், முடிவில் ஸுகத்தைக் கொடுப்பதன்று அவர்கள் சொல்லுங்கர்மங்களில் ஆத்மாவின் உண்மையான அறிவு இல்லை. வேலைபாகங்களே அதிகமாயிருக்கின்றன. அவைகள் ஸ்வர்க்கத்தில் அநுபவம் முடிந்தவுடன், முன்போல் பிறப்பைக் கொடுத்து, ஸ்வர்க்கம் முதலான பிரயோஜநங்களுக்காக மறுபடியும் கர்மங்களைச் செய்யும்படி செய்யும். இந்தக் கர்மங்களைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதால், அவர்கள் மனது விஷயாநுபவத்திலும் அதிகாரத்திலும் படிந்திருக்கிறது ஆத்மாவின் நினைவில் இல்லை. ஆகையால் ஆத்மாவை யுள்ளபடி அறிந்து, மோக்ஷத்திற்காகக் கர்மங்கள் செய்யவேணுமென்று அவர்கள் மனதில் தோன்றாது ஆகையால் ஸ்வர்க்கம் முதலான பிரயோஜநங்களை மோக்ஷத்தை விரும்புகிறவன் கொஞ்சங்கூட ஆசைப்படக்கூடாது. [42-44]

அவ— நல்ல தாய் தகப்பனகளைக்காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமான பிரீதியுள்ள வேதமானது, ஜீவனகளுக்கு உயாந்த ஸுகத்தைக் கொடுப்பதற்காக ஏற்பட்டது அது மிகவும் கொஞ்சமாயும் நிலையில்லாததுமான பிரயோஜநங்களைக் கொடுக்கக்கூடிய கர்மங்களை ஏன் சொல்லுகிறது? மேலும், வேதத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்ய வேண்டாமென்றுதான் சொல்லலாமோ என்றால், இரண்டு சுலோகங்களாலே பதில் சொல்லுகிறார்—

த்ரைகுண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந। நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவாந்॥ ॥சரு॥

யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே ॥
தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ॥

உலகத்தில் ஜநங்கள் பலவிதமாயிருக்கிறார்கள். அவர்களில் சிலரிடம் ஸத்வமென்கிற குணம் மேலிட்டிருக்கிறது. சிலரிடத்தில் ரஜோகுணம். சிலரிடத்தில் தமோகுணம். ஸத்வகுணம் மேலிட்டவர்களுக்காக மோக்ஷத்திற்கு வேண்டிய கர்மங்களை வேதம் எப்படிக் காட்டுகிறதோ, அப்படியே ரஜோகுணமும் தமோ குணமும் மேலிட்டவர்களுக்கும் பிடித்த பலன்களை கொடுக்கத் தகுந்த கர்மங்களை வேதம் சொல்லுகிறது. அது அவைகளைச் சொல்லாவிட்டால், அவர்கள் தங்களுக்கு வேண்டிய பலன்களை அடைய வழிதெரியாமல், தப்பு வழிகளில் போய் கெட்டுப் போவார்கள். கும்பகோணம் முதலான பெரிய ஸ்தலங்களில் கூலிவேலை செய்கிறவர்களுக்காக கள்ளுக்கடைகள் இருக்கவேண்டியது. அப்படியில்லாவிட்டால், கள்ளு இல்லாவிட்டால் தாங்க முடியாதவர்கள் கள்ளுக்கடையிருக்கும் ஊர்களுக்குபோய், கும்பகோணத்தில்போல் தொழில் அகப்படாமல், உத்ஸவகாலத்தில் ஆராவமுதனை கருடவாகனத்தில் எழுந்தருளப்பண்ணுகிற பாக்கியத்தையும், அதினாலுண்டாகும் புண்ணியத்தையும் இழந்து போவார்கள். ஆகையாலே வேதமானது பிரீதியினாலேயே அவரவர்களுக்கு வேண்டிய பலன்களுக்கு ஸாதனங்களைக் காட்டுகிறது.

பலன்களைக் கொடுக்கக்கூடிய கர்மங்களை இப்படி அர்ஜுநனிடத்தில் தூஷிக்கக் கூடுமோ, என்று ஸந்தேஹமுண்டாகலாம். அர்ஜுநன் "உமக்கு நான் சிஷ்யன், எனக்கு நல்ல ஸங்கதியைச் சொல்லவேணும்" என்று கேட்டுக்கொண்டபடியால், அவனிடத்தில் ஸத்வகுணம் மேலிட்டிருக்கிறதென்றும், அவன் மற்ற இரண்டு குணங்களையும் தலையெடுக்கவொட்டாமல் செய்ய வேண்டியது என்றும் நினைத்து பகவான் அருளிச்செய்கிறார். பிறவியிலேயே ஸத்வகுணம் மேலிட்ட நீ அந்த குணத்தையே வளரப்பண்ணு. கெட்ட பலன்களை கொடுக்கக்கூடிய புண்ணியங்களிலும், பாபங்களிலும் ஆசையில்லாதவனாய், ரஜோகுணமும் தமோகுணமும் சேராத ஸத்வகுணத்தில் இரு. இது எப்படி வருமென்றால், சொல்லுகிறேன். ஆத்மாவின் உள்ளபடி அறிவையும், அதை

கொடுக்கக்கூடியவைகளையும் தேடி, அவைகளைக்காப்பாற்று. மற்றதைத்தேடாதே. இருப்பதையும் விட்டுவிடு. இப்படிச்செய்தால், ரஜோகுணமும் தமோகுணமும் தன்னடையாய் போய்விடும். ஸத்வகுணம் வளரும்.

வேதத்தில் சொல்லிய எல்லா வேலைகளையும் எல்லாரும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. எல்லாருக்காகவும், எல்லாப்பிரயோஜநங்களுக்காகவும் ஏற்பட்டு தண்ணீர் நிறைந்திருக்கிற ஒரு குளத்தில் தாஹமெடுத்தவன் தாஹம்தணிய எவ்வளவு வேணுமோ, அவ்வளவுதான் எடுத்துக்கொள்ளுகிறான். 1. தண்ணீர் முழுவதையும் குடித்துவிடுகிறானோ ? அப்படியே வேதத்திலும். வேதத்தைப்படித்து, ஆத்மாவையுள்ளபடி அறிந்து, இதை விடவேண்டியது, இதையெடுத்துக்கொள்ள வேண்டியது என்று தெரிந்து, ஸம்ஸாரத்தைப் போக்கவேணும், பகவானிடம் போகவேணும் என்று ஆசைப்படுகிறவன் அதற்காக வேண்டிய ஸங்கதிகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளவேணும் [ 46 ]

அவ— ஆகையால் ஸத்வமுள்ளவனாய் மோக்ஷத்தை ஆசைப்படுகிற நீ, மேலே சொல்லப்போகிற ஸங்கதியைத்தான் எடுத்துக்கொள்ளவேணு மென்கிறார்—

கர்மண்யேவாதிகாரஸ்தே மா ஃபலேஷு கதாசந ।
மா கர்மஃபலஹேதுர்பூர் மா தே ஸங்கோऽஸ்த்வகர்மணி ॥

நித்யம், நைமித்திகம், காம்யம் என்று பிரிவுள்ள கர்மங்களுக்கு ஏற்பட்ட 2 பலன்களில் ஆசையை வைக்காமல், கர்மங்களை

---

1. துணி தோய்க்கப்போனவன் ஸ்நாநம் பண்ணுகிறானோ ஸ்நாநம் பண்ணப்போனவன் மீன் பிடிப்பனோ. மீன் பிடிக்கப்போனவன் ஒருவேளை ஸ்நாநஞ்செய்யலாம். அவன் ஸ்நாநம் பண்ணுவதற்காகத்தான் மீன் குளத்தில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது.

2. ஒருவன் ஆத்மாவை உள்ளபடி தெரிந்தால்தான், பலன்களில் ஆசையை விடுவான். தான் உடம்பைக்காட்டிலும் வேறு என்று தெரிந்தால், உடம்பையும் அதைச் சேர்ந்தவைகளையும் தன்னுடையதென்று எண்ணமாட்டான். அந்த எண்ணமில்லாவிட்டால், அவைகளுக்கு வேண்டிய வஸ்துக்களைத் தேடவேணுமென்று ஆசையுண்டாகாது. ஆகையி

**மாத்திரம் நீ 1. செய்யவேண்டியது. மோக்ஷமென்பது இப்போ திருக்கும் பிள்ளை பெண்டாட்டி முதலான கட்டைவிடுவது. மற்ற**

---

ஞ்பலனில் ஆசையைவிடுவதற்காக-தான் உடம்பைக்காட்டிலும் வேறு என்றும், அதுவும் அதைச் சேர்ந்தவைகளும் தன்னது அன்று என்றும், அறியவேணும் இது இந்த அத்தியாயம் 71-வது சுலோகத்தில் சொல்லப்படும் மேலும், இந்தக் கர்மங்களை சுலோகத்தில் சொல்லியபடி செய்யும்போது, இரண்டு நினைவுகள் வேண்டியது. இந்தக் கர்மங்களே எனக்குப் பிரயோஜநம் என்பது ஒரு நினைவு "தான் பகவானுக்கு வேலைக்காரன், வேலைசெய்து அவனை ஸந்தோஷப்படுத்த வேண்டியது" என்று தன்னுடைய ஸ்வரூபத்தைத்தெரிந்தால், "என் கர்மங்களால் பகவானை ஸந்தோஷப்படுத்துகிறேன், ஆகையால் அவைகளே எனக்குப் பிரயோஜநம். அவைகளால் வேறு பிரயோஜநத்தை நான் வேண்டேன்" என்றுஎண்ணமுடியும் இரண்டாவது நினைவு-நான்கர்மங்களைச் செய்யவில்லையென்று அதாவது—இந்த வேலைகளைச்செய்வது என் ஸ்வரூபத்துக்கு இயற்கையன்று உடம்போடு கூடியிருப்பதாலே நான் அவைகளைச்செய்கிறேன் என்று நினைக்கவேண்டியது. அதாவது—ஆத்மாவுக்கு அடியோடே கர்மம்போய்விட்டால், அதாவது மோக்ஷம் வந்தால்—இம்மாதிரி வேலை இல்லை இதுதவிர நான் பகவானுக்கு உட்பட்டவன், அவன் ஏவின்படி நான் வேலைசெய்கிறேன் என்றும் நினைக்க வேண்டும் ஆகையாலே இதற்காகவும் தன் ஸ்வரூபத்தை நினைக்க வேண்டும் அதாவது—தான் உடம்பைக்காட்டிலும் வேறு என்றும், பகவானுக்காக ஏற்பட்டவனென்றும், பகவானுக்கு உட்பட்டவன் என்றும். ஆகையாலேதான் ஸ்ரீ பாஷ்யகாரர் "ஆத்மாவையுள்ளபடி அறிந்து கர்மயோகத்தைச் செய்ய வேண்டியது" என்று அடிக்கடி அருளிச் செய்கிறார்.

1 இந்த சுலோகத்தில், சாஸ்திரம் சொல்லுகிற வேலைகளை ஒருவன் எப்படிச் செய்யவேண்டியதென்று சொல்லப்படுகிறது. அவைகளில் மோக்ஷத்தை வேண்டுகிறவன் தன்னாலே செய்யமுடியுமான கர்மத்தை யெடுத்துக்கொண்டு, ஆத்மாவைப் பார்க்கிறவரையில் விடாமல் கீழ்ச்சொன்ன இரண்டு நினைவுகளுடன் செய்துவர வேண்டியது. இதுதான் கர்மயோகம். மற்ற கர்மங்கள் அதற்கு அங்கங்கள் அதாவது—கர்மயோகத்தினாலே ஆத்மாவைப் பார்ப்பதற்கு ஒவ்வொருநாளும் உண்டாகும் இடைஞ்சல்களைப்போக்கி உதவி செய்கின்றன. இந்தக் கர்மங்களினாலே பகவானுக்கு ஸந்தோஷமுண்டாகவேண்டியதாகையால் சாஸ்திரம் சொல்லும் கர்மத்தையே கர்மயோகமாகச் செய்யவேண்டியது சாஸ்திரத்தில் சொல்லாதவைகளும், சாஸ்திரம் செய்யக்கூடாதென்று சொன்னவைகளும் பலன்களில் ஆசையை விட்டபோதிலும் கர்மயோகமாகமாட்டாது.

பலன்களை விரும்பினால் கட்டுத்தானே வரும். ஆகையாலே பலன்களில் ஆசை வைக்கக்கூடாது. கர்மங்களையே பிரயோஜனமாக எண்ண வேண்டியது. ஏனென்றால், அவைகளால் எனக்கு ஸந்தோஷமுண்டாகிறது. நான் ஸந்தோஷப்பட்டு கட்டை விடுவிப்பேன். வேறு ஒருவனாலும் விடுவிக்கமுடியாது. மற்ற பலன்களை விரும்புமவர்களைக்கண்டால் எனக்குப்பிடிக்கவில்லை. மேலும், அந்தக்கர்மங்களைச் செய்கிறபோது, நீ அவைகளைச் செய்கிறேனென்று நினைக்காதே. சாப்பாடு முதலிய வேலைகளால் பசிபோவது முதலிய பலன்கள் வந்து அநுபவிக்கும்போதும், நான் அந்த பலன்களை உண்டுபண்ணினேன்—என்று நினைக்காதே. நீ சாப்பிடுகிறதும், அதினால் பசிபோவதும் உன்னுடைய ஸத்வம் முதலான குணங்களுக்குத் தகுந்தபடி உண்டாகிறது. பேனாவைக்கொண்டு ஒருவன் எழுதுவதுபோல், பகவானும், ஸத்வம் முதலிய உன் குணங்களும் உன்னைக் கொண்டு வேலைசெய்கின்றன என்று நினை. இந்த ஸங்கதி மேலே சொல்லப்போகிறது. இப்படி நினைத்துக்கொண்டு வேலைகளைச் செய். "சண்டைபோடமாட்டேன்" என்று நீசொன்னாய். அப்படி வேலைசெய்யாமலிருப்பதைத் துளிக்கூட மனதில் வைக்காதே. நான் சொன்னபடி சண்டை முதலான கர்மங்களிலேயே உன் மனது இருக்க வேண்டியது. [ 47 ]

அவ— சொன்னதையே தெளிவாகச் சொல்லுகிறார்—

யோகஸ்த꞉ குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய ।
ஸித்த்யஸித்த்யோ꞉ ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே ॥

ராஜ்யம், பந்துக்கள் முதலானவைகளில் ஆசையை விட்டு, சண்டை முதலான கர்மங்களை யோகத்திலிருந்து செய். அதாவது அவைகளில் வருகிற ஜயத்தையும், தோல்வியையும் ஒரே மாதிரியாக நினைத்துச் சண்டையைச் செய். இப்படி இரண்டையும் ஒரே மாதிரியாக நினைப்பதை யோகம் என்று சொல்லுகிறது. [ 48 ]

அவ— "நினைவு வேண்டும்" "நினைவு வேண்டும்" என்று என் பலதடவை சொல்லுகிறீர் என்றால், சொல்லுகிறார்—

தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத்தனஞ்ஜய ।
புத்தௌ சரணமன்விச்ச க்ருபணா꞉ பலஹேதவ꞉ ॥ ॥௪௯॥

ஒரு கர்மத்தினுடைய முக்கியமான பலனை வேண்டாமலும், நடுவில் நேருகிற லாபநஷ்டங்களை ஒரேமாதிரியாக நினைத்தும், செய்கிற கர்மங்கள் மிகவுமுயர்ந்தன. பலனை நினைத்துச்செய்யும் கர்மங்கள் மிகவும் தாழ்ந்தன ஏனென்றால், முதலில் சொன்ன கர்மமானது ஸம்ஸாரத்தில் உண்டாகும் எல்லா வருத்தங்களையும் போக்கி, அளவில்லாத ஸுகமான மோக்ஷத்தைதகொடுக்கும். இரண்டாவது சொன்னது இப்போது ஸம்ஸாரத்திலிருக்கிற வருத்தத்தைக் காட்டிலும் அதிகமான வருத்தத்தை யுண்டாக்கும். நினைவுடன்சேர்ந்த செய்கையால்தான் ஸுகம் வரும். நினைவு இல்லாவிட்டால் செய்கைக்கு பலன் இல்லை அதற்காகத்தான் நினைவை அடிக்கடி சொல்லுகிறது. ஆகையால் கர்மஞ்செய்யும்போது இந்த எண்ணம் உனக்குக்கட்டாயம் வேண்டியது [49]

புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருததுஷ்க்ருதே |
தஸ்மாத்யோகாய யுஜ்யஸ்வ யோக꞉ கர்மஸு கௌஶலம் ||

கீழ்ச்சொன்ன நினைவுடன் கர்மங்களைச் செய்தால், அதனால் பகவான் ஸந்தோஷப்பட்டு, வெகுகாலமாய் வந்துகொண்டிருக்கிற பலவித தொந்திரவுகளைக் கொடுக்கும்படியான, கணக்கில்லாத 1 புண்ணியங்களையும் பாபங்களையும் போக்குகிறான். ஆகையால் மிகவும் யோசனை பண்ணி, இந்த நினைவை ஸம்பாதித்துக்கொள் அது நல்ல கெட்டிக்காரனுக்குத்தான் வரும். [ 50 ]

கர்மஜம் புத்தியுக்தா ஹி ஃபலம் த்யக்த்வா மநீஷிண꞉ ।
ஜந்மபந்தவிநிர்முக்தா꞉ பதம் கச்சந்த்யநாமயம் ॥ ॥௫௧॥

---

1. புண்ணியமென்பது ஸுவர்க்கம் முதலான நல்லபலன்களை கொடுக்கும் கர்மங்கள். பாபமென்றால் நரகம் முதலான துக்கங்களை கொடுக்கும் கர்மங்கள். மோக்ஷத்தை வேண்டுகிறவனுக்கு இந்தஇரண்டும் இடைஞ்சல்கள். இஷ்டப்படி போகவேணுமென்பவனுக்குத் தங்கத்தினால் செய்த விலங்கு போட்டாலென்ன! இரும்பினால் செய்த விலங்கு போட்டாலென்ன! இரண்டும் இடைஞ்சல்தானே. ஆகையால் புண்ணியங்களையும் சிலவிடங்களில் பாபமென்கிற சொல்லாலே சொல்லுகிறது.

கர்மங்களின் பலன்களை வேண்டாமென்று வெறுத்து, கர்மங்களைக்கீழ்ச்சொன்ன நினைவுகளுடன் செய்தால், பிறவியென்கிற பெரிய 1 வருத்தம்போய், ஒரு தொந்திரவுமில்லாத அளவில்லாத 2 ஸுகமான பதம் வரும். இது உபநிஷத்துக்களில் பிரஸித்தம். [51]

யதா தே மோஹகலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி ।
ததா கந்தாஸி நிர்வேதம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்ய ச ॥

நான் சொன்ன நினைவுகளுடன் நீ கர்மங்களைச் செய்தால், அதனால் உன் பாபங்கள்போய், புத்தி தெளிந்து, நான் இதுவரையில் நீ விடவேண்டியதென்று சொன்னதும், இனிமேல்சொல்லப் போகிறதும் ஆன சின்ன பிரயோஜநங்களில் அலுப்புவரும். அப்போது "நான் முன்னை மிகுந்த கெடுதல்களைச் செய்தேன், நல்ல ஸங்கதிகளைச் செய்யவில்லை" என்று நினைத்து 3 நீயே வருத்தப் படுவாய். [ 52 ]

அவ— ஆத்மாவையுள்ளபடி அறிந்து, கீழ்ச்சொன்ன நினைவுகளுடன் கர்மங்களைச்செய்வதாலே வரும் பலனைச் சொல்லுகிறார்—

ஶ்ருதிவிப்ரதிபந்நா தே யதா ஸ்தாஸ்யதி நிஶ்சலா ।
ஸமாதாவசலா புத்திஸ்ததா யோகமவாப்ஸ்யஸி ॥ ||ருங.||

என்னிடமிருந்து கேட்டதனால், ஆத்மா மற்ற வஸ்துக்களைக்காட்டிலும் வேறு ஜாதியென்றும், அழிவில்லாதது என்றும், மிகவும்

1. முன் சுலோகத்தில் புண்ணியங்களையும் பாபங்களையும் விடுவன் என்று சொல்லப்பட்டது. இந்த சுலோகத்தில் அதின்பலனை கட்டுப்போவதும் மோக்ஷத்தையடைவதும் சொல்லப்படுகிறது.

2. மூலத்தில் "பதம்" என்று சொல் இருக்கிறது. அதற்கு அடையப்படுகிறது என்று பொருள். அது பகவான். மோக்ஷத்தை யடையும்போது, ஒருவனுடைய மறைந்திருந்த ஸ்வரூபம் வெளிப்படுகையால், அதுவும் அடையவேண்டியதுதான் அதையும் பதமென்று சொல்லலாம். வைகுண்டமென்கிற இடத்துக்குப் போய் பகவானை அடைய வேண்டியதாகையால், அதையும் பதமென்று சொல்லலாம்

3. நீயே—நான் சொல்லாமலே. இன்னது விடவேண்டியது இன்னது எடுத்துக்கொள்ளவேண்டியது என்று உனக்கே தெரியும்

சின்னமென்றும் அறிந்திருப்பாய். இந்த அறிவு அடிக்கடி நினைப்பதால் ஸ்திரப்பட்டு, கர்மயோகத்தைச் செய்வதால் தெளிந்த உன் மனதில் கெட்டயுக்திகளால் கலங்காமல் எப்போது நிலையாயிருக்குமோ, அப்போது யோகத்தை அடைவாய். அதாவது ஆத்மாவைப் [1] பார்ப்பாய். இந்த ச்லோகத்தால் சொல்லப்பட்டதாவது— சாஸ்திரத்தில் ஆத்மாவையுள்ளபடி அறிந்து, கர்மயோகத்தைச் செய்தால், அந்த அறிவு நிலையாய் நிற்கும். இதற்கு ஸ்திதப்ரக்ஞதையென்று பெயர். அதனால் யோகமென்று சொல்லப்படுகிற ஆத்மாவின் பார்வையுண்டாகும். [ 53 ]

அவ— கீழ்ச்சொன்ன ஸ்திதப்ரக்ஞதையென்பது என்ன? அதுவுள்ளவன் என்ன வேலைகளைச் செய்வான்? என்று அர்ஜுநன் கேட்கிறான்—

அர்ஜுந உவாச—

ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேசவ |
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் || ௫௪ ||

மனதை வசப்படுத்திக்கொண்டு ஆத்மாவை நிலையாய் அறிகிறவனுடைய ஸ்வரூபம் என்ன? அவன் பேச்சு முதலான வேலைகள் எப்படியிருக்கும். [ 54 ]

அவ— வேலைகளைச் சொன்னால் ஸ்வரூபமும் சொன்னதாக ஆகுமென்று எண்ணி, பகவான் சொல்லுகிறார்—

ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த்த மநோகதாந் |
ஆத்மந்யேவாத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோச்யதே || ௫௫ ||

தெளிந்த மனதால் எவன் ஆத்மாவை எப்பொழுதும் உள்ளபடி நினைத்துக்கொண்டு மிகவும் ஸந்தோஷமடைந்து, அதனால் உலக ஸங்கதிகள் எல்லாவற்றையும் நன்றாய் விட்டுவிட்டானோ, அப்

---

1. ஆத்மாவின் அறிவில் மூன்று படிகளிருக்கின்றன 1 சாஸ்திரத்தாலே அதையறிவது 2. அதையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருப்பது இதற்குத் த்யானமென்றும், உபாஸநமென்றும் பெயர் 3 ஆத்மாவைப் பார்ப்பது. கர்மயோகம் செய்து, மனது தெளிந்த பிறகு இரண்டாவது படி [illegible] இரண்டாவது படியால் மூன்றாவது படி வருகிறது.

போது அவனுக்கு ஆத்மாவின் அறிவு நிலையாயிருக்கிறதென்று சொல்லுகிறது. இது நாலுபடிகளுள்ள ஞானநிஷ்டையில் உயர்ந்த படி. நன்றாய் விட்டுவிட்டானென்றால், பிறகு ஒருக்காலும் நினைப் பதில்லை யென்று பொருள. [ 55 ]

அவ— இதற்கு அடுத்த கீழ்ப்படி (மூன்றாவது) சொல்லப் படுகிறது—

து:கேஷ்வநுத்விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ: |
வீதராகபயக்ரோத: ஸ்திததீர்முநிருச்யதே || ||56||

இஷ்டமான வஸ்துக்களின் பிரிவு முதலானவைகள் வந்த போது வருத்தப்படான். மிகவும் பிடித்த வஸ்துக்கள் கிட்ட வந்தாலும் ஸந்தோஷமடைகிறதில்லை ஆசையும் பயமும் கோப மும் போனவன். இப்படியிருந்து ஆத்மாவை எப்போதும் நினைத் துக்கொண்டேயிருக்கிறவனுக்கு ஆத்மாவின் அறிவு 1 நிலையாயி ருக்கிறதென்று சொல்லப்படுகிறது ஆசையென்றால் பிடிக்கும் வஸ்துக்கள் வரப்போகிறதென்று ஸந்தோஷம். பயமென்பது இஷ்டமான வஸ்துக்களின் பிரிவுகளுக்கும், பிடிக்காத வஸ்துக் களின் வரவுக்கும் காரணங்களைப்பார்த்து உண்டாகும் வருத்தம். கோபமென்றால் இஷ்டமான வஸ்துக்களைப் பிரித்தும், தொந்தி ரவைக் கொடுக்கும் வஸ்துக்களைச் சேர்த்தும், வருத்தத்தையுண்டு பண்ணுகிற ஒரு மனிதனுக்குத் தொந்திரவை யுண்டுபண்ணக் கூடிய மனதின் கலக்கம் [ 56 ]

ய: ஸர்வத்ராநபிஸ்நேஹஸ்தத்தத்ப்ராப்ய ஶுபாஶுபம் |
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||57||

1. அர்ஜுநன், ஒருவனுக்கு ஆத்மாவின் அறிவு நிலையாயிருப்பதற்கு அடையாளமென்ன என்று கேட்டான். அதற்குப் பகவான் இரண்டு சுலோகங்களாலே பதில் சொன்னார். ஆத்மாவின் நினைவு நிலையாயிருக் கிறவர்கள் இருவர். ஒருவன் உலகங்களிலுள்ள வஸ்துக்களைக் கண் முத லான இந்திரியங்களால் அறிகிறதேயில்லை. மற்றொருவன் இவைகளை அறிந்தாலும், வருத்தமும் ஸந்தோஷமுமடைகிறதில்லை. இந்த இரண்டு படிகளையும் இந்த அத்தியாயக் கடைசியில் 69—70 வது சுலோகங்களில் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்.

இஷ்டமான வஸ்துக்களைக்கண்டபோது ஸந்தோஷப்பட்டு ஒன்றும் செய்கிறதில்லை பிடிக்காத வஸ்துக்களைக்கண்டு வருத்தப் பட்டு ஒன்றுஞ் செய்கிறதில்லை 1 ஏதவஸ்துவைக் கண்டாலும், நமக்கு இதனால் என்னப் பிரயோஜநம் என்று இருக்கிறான்.

அவ- இதற்குக் கீழ்ப்படி (முதலாவதுபடி) யைச் சொல்லு கிறார்—

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்காநீவ ஸர்வஶ: ।
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥

இஷ்டமான வஸ்துக்கள் கண்ணுக்குப் படும்போது, பார்க்கக்கூடாதென்று நினைத்து, கண்ணையும் மனதையும் அதிலிருந்து இழுத்து, ஆத்மாவில் நிறுத்துகிறான் ஒரு குளத்திலிருக்கிற ஆமையானது மனிதனைக்கண்டவுடன், நீட்டின கால்களைச் சுருக்கிக்கொண்டு மறைந்து விடுகிறது. அதுபோல, கீழ்ப்படிகளால் மேல்படிகள் உண்டாகின்றன. 2. [ 58 ]

---

1. பாஷ்யத்தில் "ஏதது வஸ்து" என்றிருந்தாலும், பிடித்தவஸ்துக்கள் என்று பொருள் பிடிக்காத வஸ்துக்களில் ஆசையுண்டாகவே இடமில்லை. பிரியமான வஸ்துக்களைக் கண்டால், அதனால் ஸந்தோஷமுண்டாகும் ஆனால் அது விஷயமாக ஒரு வேலையும் செய்கிறதில்லை. பிடிக்காத வஸ்துக்களைக் கண்டால், வருத்தமுண்டாகும். ஆனால் அதை விலக்குவதற்காக ஒரு வேலையும் செய்கிறதில்லை. இந்தப்படியில் விஷயங்களிலிருக்கும் ஆசைகளில் சில ஆசைகள் ஜயிக்கப்பட்டு போய்விட்டன. சில ஆசைகள் இருக்கின்றன. அவைகளையும் போக்குவதற்குப் பிரயத்தனப்படுகிறான். பிடிக்கும் வஸ்துக்கள் வருவதற்கு தானாக வேலை செய்கிறதில்லை பிடித்த வஸ்துக்கள் தானாக வந்தபோதும், போன போதும், ஸந்தோஷத்தாலும் வருத்தத்தாலும் ஒரு வேலையும் செய்கிறதில்லை

2. 55-வது முதல் நான்கு சுலோகங்களில் நாலுபடிகள் சொல்லப்பட்டன. இந்த நாலுபடிகளுக்கு வித்தியாஸம் என்னவென்றால்- முதற்படியில் ஒருவன் விஷயங்களை தன்னை யிழுக்குமென்று பயந்து, அவைகளில்லாத இடத்தில் போவான். விஷயங்கள் என்றால் இந்திரியங்களால் அநுபவிக்கக்கூடிய வஸ்துக்கள். இதற்கு அடுத்த

அ— 1 கீழ்ச்சொல்லிய உயர்ந்தபடி வருவது மிகவும் அரிது என்றும், அது வருவதற்கு வழியையும் சொல்லுகிறார்—

விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: ।
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥

இந்திரியங்களுக்கு ஆஹாரங்கள் விஷயங்கள் அவைகளை விஷயங்களில் போகாமல் அடக்கினவனுக்கு விஷயங்கள் தோன்றாது ஆனால் அவைகளிலிருக்குமாசை ஒழியாது விஷயங்களைக் காட்டிலும் உயர்ந்த ஸூக்ஷ்மமான ஆத்மாவைப் பார்த்தால்தான் ஆசையொழியும் நாம் பார்க்கக்கூடாது என்று எண்ணி சில வஸ்துக்களைப் பார்க்காமலிருக்கிறோம் ஆனால் அவைகளில் ஆசை யொழியவில்லை இதை யோஜித்தால் தெரியும் [ 59 ]

மேற்படியில் ஸந்தோஷத்தைக் கொடுக்கும் ஒரு நன்மை கிடைத்தால், அதனாலுண்டாகும் ஸந்தோஷத்தின் வேலையையும், துக்கத்தைக் கொடுக்கும் தீமை வந்தால், அதனாலுண்டாகும் வருத்தத்தின் வேலையையும் பிரயத்தப் பட்டுத் தடுப்பன் இதற்கடுத்த மேற்படியில் நன்மையும் தீமையும் வந்தால், ஸந்தோஷமும் துக்கமும் உண்டாகாது ஒன்றிலும் ஆசையில்லாமையால் ஆசைப்பட்ட வஸ்து கிடைக்காமல் போகுமோ என்று பயமுமுண்டாகாது அது வருவதை எவனாவது தடுத்தாலும், அவனிடம் கோபமுமுண்டாகாது இந்தப் படியில் விஷயங்கள் கண்ணில் படும் எல்லாவற்றிற்கும் மேலான படியில் விஷயங்களே கண்ணில் படாது உதாரணம்—முதல் படியில் ஒருவன் ஒரு அழகான ஸ்திரீ கண்ணில் பட்டால், அவளைப் பார்க்கக்கூடாதென்று கண்ணைத் திருப்பிக் கொள்ளுகிறான் அதற்கு அடுத்த மேற்படியில் அவளைப் பார்த்தால் ஸந்தோஷமுண்டாகிறது ஆனால் மேலே ஒருவேலையும் செய்கிறதில்லை இதற்கு அடுத்த மேற்படியில் ஸந்தோஷமே உண்டாகிறதில்லை உயர்ந்தபடியில் ஸ்திரீயைப் பார்ப்பதேயில்லை இப்போது நாமோ ஸ்திரீகளிருக்கிற இடத்தைவிட்டுப் போகாமல், அவர்களிருக்குமிடத்தைத் தேடிப்போகிறோம்

2 இந்த ஸங்கதியை எதற்காகச் சொல்லுகிறார் என்றால், ஞான யோகத்தைச் சொன்னவுடன் அதை அர்ஜுனன் செய்கிறேனென்று சொல்லுவனோவென்று பயந்து, அவனுக்கு அந்த எண்ணம் உண்டாகாமலிருப்பதற்காக இதைச்சொன்னாரென்று தோன்றுகிறது.

அவ— இப்படி ஆத்மாவைப்பார்க்காவிட்டால் விஷயங்களில் ஆசைபோகாது என்று கீழே சொல்லப்பட்டது. இப்போது விஷயங்களில் ஆசைபோகாமல் போனால், இந்திரியங்களை ஜயிக்க முடியாதென்று சொல்லுகிறார்—

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித꞉ ।
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந꞉ ॥ ॥௬௰॥

விஷயங்களில் ஆசைபோகாதபோனால், ஒருவன் சாஸ்திரத்தைக்கொண்டு நல்ல ஸங்கதிகளைத் தெரிந்து, நல்ல வேலைகளில் பிரயத்தினம் பண்ணினாலும்,1. வலிமையுள்ள இந்திரியங்கள் அவனைக்கலக்கி பலாத்காரமாய் அவன் மனதை இழுத்துக்கொண்டு போய்விடும். ஆகையால் ஆத்மாவைப்பார்த்தால்தான் இந்திரியங்களை ஜயிக்கலாம். இந்திரியங்களை ஜயித்தால்தான் ஆத்மாவைப் பார்க்கலாம். ஆகையால் உயர்ந்தபடி வருவது மிகுந்த வருத்தம்.

தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர꞉ ।
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ ௬௧॥

கீழ்ச்சொன்னபடி ஒன்றுக்கொன்று துணையாயிருப்பதால், உயர்ந்தபடியை அடையமுடியாத கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக, விஷயங்களில் ஆசையிருப்பதாலே ஜயிக்கமுடியாத 2 இந்திரியங்களை அடக்கி, 3 மிகவும் இன்பமாயும், எல்லாப் பாபங்களையும் போக்குவதும் ஆன என்னுடைய திருமேனியில் உன் மனதை நிறுத்தி, ஜாக்கிரதையாய் என்னையே நினைத்துக்கொண்டிரு. இடை

---

1. இந்திரியங்களுக்கு வலிமை விஷயங்களில் ஆசை.

2. இவ்விடத்தில் இந்திரியங்களை அடக்குவதாவது விஷயங்களைத் தொடாமல்மாத்திரம்செய்வது. முழுவதும்இப்போது அடக்கமுடியாது.

3. இது சுலோகத்தில் உள்ள "மத்பர:" என்கிற சொல்லின் கருத்து. அதின் பொருள்—என்னையே நினைத்துக்கொண்டவனாய் என்று. ஆகையாலே கிருஷ்ணபகவானுடைய திருமேனியை நினையென்று சொல்லப்பட்டது. எதற்காக அவருடைய திருமேனியை நினைப்பது என்றால், அந்தத்திருமேனியில் இரண்டு குணங்கள் இருக்கின்றன. முதலாவது அது மிகவும் இன்பமானது. ஆகையால் அதில் மனதை நிறுத்தலாம். மிகவும் அழகான வஸ்துக்களைப் பார்த்தால், அவைகளை

விடாமல் என் திருமேனியை நீ நினைத்தால், உன்னுடைய 1 எல்லாப் பாபங்களும் போய்விடும். அதனால் மனது 2 தெளிந்து, ஆசையையொழித்து, இந்திரியங்களை உன் வசப்படுத்திக் கொள்வாய். அப்போது ஆத்மாவைப்பார்க்க முடியும் இதையே ச்லோகத்தின் பின்பாதி சொல்லுகிறது. 'காற்றோடு கூடிய நெருப்பு வைக்கோல் போரைக் கொளுத்துவதுபோல, யோகிகளுடைய மனதிலிருக்கும் விஷ்ணு அவர்களுடைய எல்லாப் பாபங்களையும் கொளுத்திவிடுவான்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லியிருக்கிறது. [ 61 ]

த்யாயதோ விஷயாந் பும்ஸ: ஸங்கஸ்தேஷூபஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோऽபிஜாயதே ||

க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம: |
ஸ்ம்ருதிப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி ||௬௨||

---

யே நினைப்பது மனதிற்கு வழக்கம். அளவில்லாத ஸுகமுள்ள பகவானுடைய திருமேனியில் மனது நிலையாய் நிற்குமென்று சொல்லவேண்டுமோ. பிரும்மா முதலானவர்களுடைய உடம்பை நினைக்கலாம். ஆனால் அவைகளை நினைத்தவனுக்குப் பாபங்கள் போகாது. பகவானுடைய திருமேனியை நினைப்பவனுக்கு அவைகள் போய்விடும். பாபங்களைப் போக்குவது அதற்கு ஸ்வபாவம் நெருப்புக்கு வைக்கோல் போரை கொளுத்துவதுபோல. இது பகவானுடைய திருமேனிக்கு இரண்டாவது குணம்.

1. இங்கே 'எல்லாப் பாபம்' என்பதற்கு, ஆத்மாவைப் பார்ப்பதற்கு விரோதியான பாபங்கள் என்றுபொருள்.

2 மனது தெளிந்து என்றால் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் குறைந்து என்று பொருள் அதனால்தான் விஷயங்களில் ஆசைபோகிறது ஆத்மாவை விடாமல் நினைப்பதற்கு இடைஞ்சலானது இந்திரியங்கள் அடங்காமை. அதற்குக் காரணம் விஷயங்களில் ஆசையிருப்பது. அதற்கும் காரணம் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் ஆகிற குணங்கள் மேலிட்டிருப்பது. இதைத் தடுப்பதற்கு ஸாதநம் ச்லோகத்தில் சொன்னபடி பகவானுடைய திருமேனியில் மனதை வைத்து அவனையே நினைத்துக்கொண்டிருப்பது.

தானுக்கே ஆசையொழியாமலும், என் உருவத்தில் மனதை வைக்காமலும், தன்னுடைய பிரயத்தினத்தால் இந்திரியங்களை அடக்கவேணுமென்று ஆரம்பித்தால், நெடுநாளாய் வந்த கெட்ட பழக்கத்தாலே வரும் விஷயங்களுடைய நினைவைத் தள்ளமுடியாது. விஷயங்களை நினைத்ததே ஆசை வளரும். ஆசை வளர்ந்தால் காமமுண்டாகும். காமமாவது ஆசையின் கடுமையான நிலை. அதாவது—எந்த ஸமயத்தில் விஷயங்களை யநுபவிக்காத போனால் தாங்கமுடியாதோ, அப்படிப்பட்ட ஆசை. காமத்தால் கோபமுண்டாகும். அந்தக்காமம் இருக்கும்போது அநுபவிக்க வேண்டிய விஷயம் கிட்டாதபோனால், "இவர்கள்தான் இந்த விஷயங்களை கிட்டவொட்டாமல் செய்தார்கள்" என்று அருகில் இருக்கிறவர்களிடம் கோபமுண்டாகிறது. கோபம் வந்தால், இன்னது செய்யலாம், இன்னது செய்யக்கூடாது என்கிற அறிவு போய்விடும். அப்போது எதை வேணுமோ, அதைச் செய்வன். தாய்தகப்பனையும் கொலைபண்ணுவன். அப்போது "இந்திரியங்களை அடக்கவேணுமென்று ஆரம்பித்தோம்" என்கிற நினைவுபோய்விடும். அதுபோனால் ஆத்மாவைஅறியவேணுமென்கிற நிர்மானம் போய் விடும். அது போய்விட்டால், மறுபடியும் 1 ஸம்ஸாரத்தில் அழுந்தி விடுவன். பிறப்பு சாவு முதலிய தொந்திரவுகள் நிற்காது. [62-63]

ராகத்வேஷவியுக்தைஸ்து விஷயாநிந்த்ரியைஶ்சரந் |
ஆத்மவஶ்யைர்விதேயாத்மா ப்ரஸாதமதிகச்சதி || ||௬௪||

61—வது சுலோகத்தில் சொல்லியபடி எல்லா உலகங்களுக்கும் ராஜாவான என்னுடைய திருமேனியில் மனதைப்பதித்து, எல்லாப் பாபங்களையும் போக்கி, அதனால் ஆசையும் த்வேஷமும் ஆகிற வலிமைபோன இந்திரியங்களைத்தன் வசமாக்கி, விஷயங்கள்

1. சுலோகத்தில் "ப்ரணச்யதி" என்று சொல் இருக்கிறது. அதற்கு மிகவும் அழிந்து போவன் என்று பொருள். ஆத்மாவுக்கு அழிவில்லாமையாலே அந்தச் சொல்லுக்கு இல்லாதது போலாகிறான் என்று பொருள் கொள்ளவேணும். இல்லாதது என்றது தன்னையுள்ளபடி அறியாமை. அதற்குக்காரணம் உடம்பையே ஆத்மாவாக எண்ணுவது. அதற்கும் காரணம் கர்மத்தின் ஸம்பந்தம்.

எதிரில் இருந்தாலும், அவைகளை லக்ஷியம் பண்ணாமலிருக்கிறவனுக்கு மனது அடங்கி தெளிவையடைகிறது [64]

𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌹𑌾𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑍋𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌚𑍇𑌤𑌸𑍋 𑌹𑍍𑌯𑌾𑌶𑍁 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑌰𑍍𑌯𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ॥௬௫॥

மனது தெளிந்தால், உடம்புடன் சேர்க்கையால் வருகிற எல்லா துக்கங்களும் போய்விடுகின்றன. ஏனென்றால், ஆத்மாவைப் பார்ப்பதற்கு விரோதியான தோஷம்போன மனதுள்ளவனுக்கு அப்போதே ஆத்மாவின் அறிவு நிலைத்து நிற்கும். ஆகையால மனது தெளிந்தால, ஒரு துக்கம் இராதென்றுசொல்லலாம்.

𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨 𑌚𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌨𑌾 ।
𑌨 𑌚𑌾𑌭𑌾𑌵𑌯𑌤𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑌃 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥௬௬॥

என திருமேனியில் மனதை நிறுத்தாமல், தன் பிரயத்நத்தால இந்திரியங்களை அடக்கவேணுமென்று ஆரம்பித்தவனுக்கு, ஒருநாளும், அதாவது வெகுகாலம் பிரயத்நப்பட்டும், உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மாவின் அறிவு நிலையாய் நிற்காது. எப்போது அது இல்லையோ, அப்போது ஆத்மாவை நீடித்து நினைக்க முடியாது ஆத்மாவை நீடித்து நினைக்காதவனுக்கு விஷயங்களில ஆசை ஒழிவது இல்லை ஆசையொழியாதவனுக்கு நிலையான அளவில்லாத ஸுகம் எப்படிக் கிடைக்கும். 1. [66]

மேற்சொல்லியபடி இந்திரியங்களை அடக்காதவனுக்கு வரும் தொந்திரவை மறுபடியும் சொல்லுகிறார்—

---

1. இந்த சுலோகத்தில் யோகத்திற்கு அங்கங்களான பிரத்யாஹாரம் முதலான மூன்று அங்கங்கள் சொல்லப்படுகின்றன. "ஆத்மாவின் அறிவு நிலையாய் நிற்காது" என்பதனால் விஷயங்களிலிருந்து மனதையிழுத்து, ஆத்மாவில் அதை வைக்கவில்லையென்று ஏற்படுகிறது. விஷயங்களிலிருந்துமனதையிழுப்பதற்குப்பிரத்யாஹாரம் என்றுபெயர். மனதை ஆத்மாவில் நிறுத்துவதற்குத் தாரணை என்று பெயர். பிரத்யாஹாரம் முதலில் ஏற்பட்டுப் பிறகு தாரணை வரவேண்டியது. பிரத்யாஹாரமில்லாவிட்டால் தாரணை முடியாது. ஆத்மாவை நீடித்து நினைப்பது என்பது தியானம். தாரணையில்லாவிட்டால் தியானம் முடியாது. தியானமில்லாவிட்டால் ஆத்மாவைப் பார்க்க முடியாது. ஆத்மாவைப்

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே |
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி ||௬௭||

விஷயங்களிலேயே நோக்காயிருக்கிற இந்திரியங்களின் பின்னால் எவன் மனதை விடுகிறானோ, அந்த மனதானது அவனுடைய ஆத்மாவின் அறிவை வாரிக்கொண்டு போய்விடுகிறது. அதாவது ஆத்மாவை விட்டு விஷயங்களையே நினைக்கும்படி பண்ணுகிறது. ஸமுத்திரத்தில் கிழக்கே போகவேண்டிய கப்பலை கடுமையான கீழ்காற்று மேற்கே கொண்டு போவதுபோல.[67]

தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதாநி ஸர்வஶ: |
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||

ஆகையால் கீழ்ச்சொல்லியபடி பாபங்களைப் போக்கக்கூடிய மிகவும் இன்பமான என் திருமேனியில் மனதைப்பதித்து, இந்திரியங்களை விஷயங்களில் போகாமல் எவன் தடுக்கிறானோ, அவனுக்குத்தான் ஆத்மாவின் அறிவு நிலையாய் நிற்கும். [68]

அவ— இப்படி இந்திரியங்களை அடக்கி, அதனால் மனது தெளிந்தவனுக்கு வரும்பலனைச் சொல்லுகிறார்—

யா நிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ |
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஶா பஶ்யதோ முநே: ||

உலகத்தில் பெரும்பாலும் ஜனங்களுக்கு ஆத்மாவின் அறிவானது கொஞ்சமேனும் வெளிச்சமில்லாத மழைகாலத்திய இருட்டிலிருக்கும் பண்டங்கள்போல் இருக்கிறது. இந்திரியங்களை அடக்கி மனது தெளிந்தவனுக்கு, அதே ஆத்மா நல்ல வெளிச்சத்தில் கண்ணால் பார்ப்பவனுக்கு பதார்த்தங்கள் தோன்றுவது

---

பார்க்காவிட்டால் விஷயங்களில் ஆசை போகாது. விஷயங்களில் ஆசை போவதை சுலோகத்தில் 'சாந்தி' என்கிற சொல்லாலே சொல்லியிருக்கிறது. அந்த சாந்தியில்லாவிட்டால், மோக்ஷமென்கிற நிலையான அளவில்லாத ஸுகம் வராது. அதைசுலோகத்தில் "ஸுகம்" என்று சொல்லியிருக்கிறது. இப்படி பிரத்யாஹாரம்-தாரணை-தியானம்-ஆத்மதர்சனம்-சாந்தி-ஸுகம் இவைகள் சங்கிலிபோல் ஒன்றோடொன்று சேர்ந்து ஒன்றினால் ஒன்று வருகிறது.

போல் தோன்றுகிறது. அதாவது—அவன் ஆத்மாவையே பார்த்துக்கொண்டிருக்கிறான். அறிவில்லாத ஜனங்களுக்கு எப்போதும் தோன்றுகிற பிள்ளை பெண்டாட்டி முதலானவைகள் மனது தெளிந்தவனுக்கு, இருட்டிலிருக்கும் பண்டம்போலிருக்கின்றன. அதாவது அவைகள் அவனுக்குத் துளியேனும் தோன்றுகிறதில்லை. 1. [69]

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் । தத்வத்காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே ஸ சாந்திமாப்நோதி ந காமகாமீ ॥ ॥௭௦॥

மழைகாலத்தில் ஆறுகள்போய் விழுவதினாலே ஸமுத்திரம் பெருகவில்லை. கோடைகாலத்தில் ஆறுகள் வற்றிப்போகும்போது அது வடியவில்லை. அது எப்போதும் ஒரேமாதிரியாயிருக்கிறது. அதுபோல எவன் ஆத்மாவையே எப்போதும் நினைத்து மஹாஸந்தோஷமடைந்து, பிடிக்காததோ பிடித்ததோ, எது கிட்டினாலும் எது கிட்டாவிட்டாலும் ஒரேமாதிரியா யிருக்கிறானோ, அவன்தான் ஸுகத்தையடைவான். எவன் விஷயங்களால் கலங்குகிறானோ, அவனுக்கு ஒருபோதும், அதாவது—ஆசைபோகிறவரையில், ஸுகம் கிடையாது. [70]

விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாம்ஶ்சரதி நிஸ்ப்ருஹ: ।
நிர்மமோ நிரஹங்கார: ஸ ஶாந்திமதிகச்சதி ॥ ॥௭௧॥

எவன் உடம்பை ஆத்மாவாக நினைக்காமலும், உடம்பைச் சேர்ந்த பண்டங்களைத் தன்னது என்று நினைக்காமலும், அவை

---

1. இந்த சுலோகத்தாலே, இந்த அத்தியாயம் 55-வது சுலோகத்தில் சொன்ன உயர்ந்தபடி சொல்லப்படுகிறது. அடுத்த சுலோகத்தில் 56-வது சுலோகத்தில் சொன்ன இரண்டாவதுபடி சொல்லப்படுகிறது. இவைகளும் மற்ற இரண்டு படிகளும் கர்மயோகம் செய்கிறவனுக்கு வரும் பலன்கள். இந்த அத்தியாயத்தை முடிக்கிறவராய், கர்மயோகம் செய்கிறவனுக்கு வந்து நிலையாய் நிற்கும் ஆத்மாவின் அறிவை இந்த இரண்டு சுலோகங்களிலும், அதற்குக் காரணமான கர்மயோகத்தை 71-வது சுலோகத்திலும், இவைகளை ஒருவன் மறந்துபோகாமலிருப்பதற்காக மறுபடியும் அருளிச் செய்கிறார்.

களையுடைய வேணுமென்று எண்ணமில்லாமலும், 1 எல்லா விஷயங்களையும் விடுகிறானோ, அவன் ஆத்மாவை உள்ளபடி பார்த்து எல்லா துக்கங்களும் நீங்கி, உயர்ந்த ஸுகத்தை அடைகிறான்.[71]

𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ॥௭௨॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍋
𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

---

அழிவில்லாத ஆத்மாவின் உண்மையை அறிந்து, பலன்களை விரும்பாமல், நான் செய்யவில்லை என்கிற நினைவுடன் காமங்களைச் செய்தால், ஆத்மாவின் அறிவு நிலைத்து ஆத்மாவைப் பார்க்கலாம். பிறகு ஸம்ஸாரத்தை அடையமாட்டான். இளவயதில் நல்ல வேலைகளைச் செய்யாமல் கெட்ட வேலைகளைச் செய்து அலைந்தவனும், நல்லவர்களுடன் சேர்க்கை முதலான காரணங்களாலே "இப்படிக் கெட்டுப்போய்விட்டேனே" என்று கிழத்தனத்தில் வருந்தி கீழ்ச்சொன்ன கர்மயோகத்தைச் செய்தாலும், அழிவில்லாத ஸுகமான ஆத்மாவை அடையலாம். இளவயது முதல் இதைச் செய்கிறவனுக்கு ஸுகம் வருமென்று சொல்லவேணுமோ.

இந்த அத்தியாயத்தில் சொன்ன ஸங்கதிகளாவன— 1 ஆத்மாவினுடைய உண்மையான அறிவு 2 சில நினைவுகளுடன் கர்மங்களைச் செய்யவேண்டியது என்கிற கர்மயோகத்தின் விதம். 3

1. இந்த சுலோகத்தில் காமயோகம் சொல்லப்படுகிறது. "எல்லா விஷயங்களையும் விடுகிறானோ" என்பதாலே காமங்களுடைய பலன்களில் ஆசையை விடுவது சொல்லப்பட்டது. ஆசைகளுக்குக் காரணம் பலன்கள் தன்னது என்கிற எண்ணம் அதற்கும் காரணம் உடம்பே ஆத்மா என்கிற எண்ணம். இந்த எண்ணம் போனால் உடம்பைச் சேர்ந்தவைகளைத் தன்னது என்று எண்ணமாட்டான். அந்த எண்ணமில்லாவிட்

இதனால் ஆத்மாவின் அறிவு நிலையாய் நிற்கும் என்பது. 4 அத னால் ஆத்மாவைப் பார்ப்பது. இவைகளை அர்ஜுநனுக்கு உண் டான தப்பு எண்ணத்தைப் போக்குவதற்காக பகவான் அருளிச் செய்து, கடைசியில் ஞானயோகத்தைச் செய்து, அர்ஜுநன் கஷ் டப்படவேண்டாம் என்று அதைச் செய்வதிலிருக்கும் கஷ்டத் தைத் தெளிவாகக் காட்டினார்.

நல்ல ஆசாரியர்களுடைய அநுக்கிரஹத்தாலே (கவலையாலே) ஒருவன் ஆத்மாவைத் தெரிந்து கர்மயோகத்தைச்செய்து ஆத்மா வைப்பார்க்க வேண்டியது.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம: ||

---

டால், பலன்களில் ஆசையை விட்டுவிடுவன். இந்த ஸங்கதி இந்த அத் தியாயம் 47-வது சுலோகத்தின் 1-வது குறிப்பில் சொல்லியிருக்கிறது. அதைப் பார்க்க.

## மூன்றாவது அத்தியாயம்

அவ்வேதாந்தங்களில் ஒருகுறையுமில்லாத எல்லா நல்ல குணங்களோடுங்கூடிய பரப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற பகவானை ஒருவன் அடைந்தால், துக்கம் கலப்பில்லாத அளவில்லாத ஸுகத்தை அடையலாமென்றும், அதை ஆசைப்படுகிறவன் அதற்காக பகவானைத் தியானம் பண்ணவேணுமென்றும், அப்படித் தியானம் பண்ணும்போது, ஜீவாத்மாவை உள்ளபடி பார்த்துத்தான் பண்ணவேணுமென்றும், ஜீவாத்மாவைப் பார்ப்பது தியானத்திற்கு அங்கமென்றும், சொல்லியிருக்கிறது. கீழ் அத்தியாயத்தில் ஜீவாத்மா உடம்பைக்காட்டிலும் வேறு என்றும், அழிவில்லாத வஸ்துவென்றும் சொல்லி, இந்த அறிவுடன் கர்மங்களை அவைகளின் பலன்களில் ஆசையில்லாமல் செய்ய வேண்டுமென்றும், அதினாலே ஞானயோகமுண்டாகி, அந்த ஞான யோகத்தினாலே ஜீவாத்மாவை உள்ளபடி பார்க்கலாமென்றும் சொல்லப்பட்டது. மூன்றாவது அத்யாயம் முதல் நாலு அத்யாயங்களால் கீழ்ச் சொன்ன ஜீவாத்மாவை உள்ளபடி பார்ப்பதையும், அதினுடைய ஸாதனத்தையும் விரிவாய்ச் சொல்லுகிறார்.

அர்ஜுந உவாச

ஜ்யாயஸீ சேத்கர்மணஸ்தே மதா புத்திர்ஜநார்தந ।
தத்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ ॥ ॥௧॥
வ்யாமிச்ரேணேவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே ।
ததேகம் வத நிச்சித்ய யேந ச்ரேயோऽஹமாப்நுயாம் ॥ ॥௨॥

ஆத்மாவைப் பார்ப்பதற்கு கர்மத்தைக்காட்டிலும், ஆத்மாவை நினைப்பது உயர்ந்த ஸாதநம் என்று உமக்குத் தோன்றினால், பல தொந்திரவுகளுடன் கூடிய கர்மத்தை ஏன் என்னைப்பண்ணச் சொல்லுகிறீர்?

கர்மத்தைக் காட்டிலும் ஆத்மாவை நினைப்பது உயர்ந்த ஸாதநம் என்று எவ்விடத்தில் சொல்லியிருக்கிறது? 2-வது

அத்தியாயத்தில் 49வது சுலோகத்தில் சில நினைவுகளோடு செய்த கர்மங்களை உயர்ந்ததென்று சொல்லவில்லையா? உயர்ந்ததென்றால் எந்த விஷயத்தில்? உயர்ந்ததாய் இருந்தாலும், காமத்தை ஏன் செய்யக்கூடாது? அது செய்வதில் என்ன தொந்திரவுகள் இருக்கின்றன? என்று கேள்விகள் உண்டாகும். அதற்காக ஸ்ரீ பாஷ்யகாரர் அர்ஜுனனுடைய அபிப்பிராயத்தை விவரமாக அருளிச் செய்கிறார்

கர்மங்களைச் சொன்னபடி செய்தால், ஆத்மாவின் நினைவு நிலையாய் வரும். அதனால் ஆத்மாவைப் பார்க்கலாம். ஆகையினாலே ஆத்மாவின் நிலையான நினைவு ஆத்மாவைப் பார்ப்பதற்கு கிட்டின உதவி. மேலும், ஆத்மாவின் நினைவு நிலையாய் நிற்கும் காலத்தில், ஆத்மாவைத் தவிர வேறு ஒரு விஷயமும் தோன்றாது ஒரு விஷயமும் தோன்றாமலிருந்தால்தான் ஆத்மாவைப் பார்க்கமுடியும். எல்லா விஷயங்களையும் கவனித்தால்தான் கர்மங்களைச் செய்யமுடியும். ஒரு விஷயத்தையும் கவனிக்காமலிருக்கும்போது வருகிற ஆத்மாவின் பார்வைக்குக் கர்மங்களைச் செய்வது எப்படி உதவும். ஆகையினாலே, ஆத்மாவைப் பார்ப்பதற்கு ஆத்மாவின் நினைவுதான் உயர்ந்த ஸாதனம் என்று நீர் சொல்லியிருக்கையாலே, எல்லாக் கர்மங்களையும் விட்டு ஆத்மாவை நினைக்கும்படி என்னை ஏவவேண்டியது. எதற்காக எல்லா இந்திரியங்களுக்கும் வேலை கொடுக்கிற கர்மங்களைச் செய்யும்படி சொல்லுகிறீர். அவைகள் ஆத்மாவைப் பார்ப்பதற்கு இடைஞ்சலாக இருக்குமல்லவா

ஆகையால், உம்முடைய சொல்லினாலே எனக்கு கலக்கமுண்டாகிறது. இரக்கமுள்ள தேவரீர் என்னை அப்படிச் செய்யமாட்டீர் இரண்டையும் கலந்து பேசி, என்னை நீர் கலக்குகிறீர்போல என்னுடைய புத்திக்குறைவினாலே எனக்குத் தோன்றுகிறது. எனக்கு ஸந்தேஹமில்லாமல் தெளிவு வரும்படி ஒரேவிதமாய்ச் சொல்லும் எந்த வார்த்தையைக் கேட்டு, இதுதான் நான் செய்ய வேண்டியதென்று தீர்மானித்து, அதைச் செய்து நான் க்ஷேமத்தை யடைவேனோ

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾𑌨𑌘 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨 𑌸𑌮𑍍𑌯𑌗𑌵𑌧𑍃𑌤𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 । 𑌪𑍁𑌰𑌾 𑌹𑌿 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑍇, 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌾 𑌯𑌥𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌂 𑌮𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 । 𑌨 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌲𑍌𑌕𑌿𑌕𑌾𑌃 𑌸𑌹𑌸𑌾 𑌸𑌂𑌜𑌾𑌤𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌭𑌿𑌲𑌾𑌷𑌾𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌭𑌿𑌸𑌂𑌹𑌿𑌤𑌫𑌲𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑌵𑍇𑌷𑍇𑌣𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌮𑌲𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌕𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 । “𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃” 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑍈𑌕𑌵𑍇𑌷𑌤𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌇𑌹𑌾𑌪𑌿 “𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾𑌨𑌭𑌿𑌸𑌂𑌹𑌿𑌤𑌫𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌤𑍇𑌨 𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌾𑌕𑌲𑌤𑌾𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍋𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 “𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗 𑌉𑌦𑌿𑌤𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌕𑍍𑌤𑌾 । 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 । 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌃 । 𑌆𑌤𑍍𑌮𑍈𑌕𑌵𑌿𑌷𑌯𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌃 । 𑌅𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 । 𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌾𑌕𑌲𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌽𑌧𑌿𑌕𑌾𑌰𑌃, 𑌅𑌵𑍍𑌯𑌾𑌕𑌲𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌽𑌧𑌿𑌕𑌾𑌰 𑌉𑌕𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌿𑌹 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑌮𑌭𑌿𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

॥௩॥

பகவான் சொல்லுகிறார்:— நான் முன்னாலே சொன்னதை நீ நன்றாய் கவனிக்கவில்லை. இந்த உலகத்தில் எல்லாரும் ஒரே விதமான சக்தியுள்ளவர்களன்று. எல்லாருக்கும் மோக்ஷம் வேணு

மென்று ஆசை பிறந்த உடனேயே ஞானயோகம் செய்ய முடியாது. கர்மங்களை அவைகளின் பலன்களில் ஆசையில்லாமல்; பகவானுடைய பிரீதிதான் வேணுமென்று செய்தால், பகவான் ஸந்தோஷத்தை யடைந்து, மனதிலுள்ள ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற குணங்களைப் போக்கி, இந்திரியங்களை மற்ற விஷயங்களில் போகாமல் அடக்கி, ஆத்மாவின் நினைவு நிலையாய் நிற்கும்படி செய்வன். ஆகையினால், இப்படி மனது அடங்கின பிறகுதான் ஆத்மாவை நினைக்கமுடியும். அதற்கு முன்பு எல்லாரும் கர்மயோகத்தையேதான் செய்ய வேண்டியது. ஆகையால், 1 இந்திரியங்கள் அடங்கினவர்களுக்கு ஞானயோகம், இந்திரியங்கள் அடங்காதவர்களுக்குக் கர்மயோகம் என்று பிரித்தே முன்னாலே சொன்னேன். இந்திரியங்களை அடக்குவதற்கும் அவைகள் உதவிதான். இடஞ்சலன்று. நீ கர்மங்களைச் செய்யாவிட்டால், உன் மனது அடங்காது. இப்போது ஞானயோகம் செய்யஉன்னால் முடியாது. நான் ஸந்தேஹம் வரும்படி சொல்லவில்லை.

பலன்களில் ஆசையில்லாமல், பகவானுடைய பிரீதிதான் வேணுமென்று எண்ணி, கர்மங்களைச் செய்தால், பகவான் ஸந்தோஷப்பட்டு கர்மங்கள் செய்கிறவனுடைய மனதின்கலக்கத்தை போக்குவர் என்று 18-வது அத்தியாயம் 46-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது. இதையே 2-வது அத்தியாயம் 47-வது சுலோகத்தில் "கர்மங்களையே நீ செய்ய வேண்டியது. பலன்களை நீ ஆசைப்படக்கூடாது" என்று சொல்லி, இப்படிக் கர்மங்களைச் செய்தால் புத்தியின் கலக்கம் தீரும். அப்போது அந்த அத்தியா

---

1. கர்மங்களை அவைகளின் பலன்களில் ஆசையில்லாமல், பகவானுடைய பிரீதிதான் வேணுமென்று எண்ணிச் செய்யவேண்டியது. இதற்கு கர்மயோகமென்று பெயர். அப்போது இந்த கர்மங்களை நான் செய்யவில்லை என்று எண்ணவேண்டியது. இந்த எண்ணமானது கர்மயோகதிற்கு அங்கம். அதாவது கர்மயோகம் பலனைக் கொடுப்பதற்கு உதவியாயிருக்கிறது. அந்த எண்ணம் இல்லாமல் போனால், கர்மயோகத்தினால் பலன் வாராது. இந்தஅங்கத்தோடுகூடி கர்மம் செய்வதைக்கர்மயோகம் என்றும், ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை நினைத்துக் கொண்டிருப்பதை ஞானயோகமென்றும் சொல்லுகிறது.

யம் 55-வது சுலோகம் முதல் நாலு சுலோகங்களில் சொல்லப்பட்ட ஆத்மாவை நினைப்பது ஆகிய ஞானயோகத்தைச் செய்யலாம் என்று சொல்லப்பட்டது. [ 3 ]

அத—ஸர்வஸ்ய லௌகிகஸ்ய புருஷஸ்ய மோக்ஷேச்சாயாம் ஜாதாயாம் ஸஹஸைவ ஜ்ஞாநயோகோ துஷ்கர இத்யாஹ—

ந கர்மணாமநாரம்பாந்நைஷ்கர்ம்யம் புருஷோऽஶ்நுதே।
ந ச ஸம்ந்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி ॥ ॥ ४ ॥

ந ஶாஸ்த்ரீயாணாம் கர்மணாமநாரம்பாதேவ புருஷோ நைஷ்கர்ம்யம்-ஜ்ஞாநநிஷ்டாம் ப்ராப்நோதி। ந சாரப்தஸ்ய ஶாஸ்த்ரீயஸ்ய த்யாகாத்। யதோऽநபிஸம்ஹிதபலஸ்ய பரமபுருஷாராதநவேஷஸ்ய கர்மணஸ்ஸித்தஸ்யாத்। அத ஏவ விநா தாம் ந ப்ராப்நோதி। அநபிஸம்ஹிதபலை: கர்மபிரநாராதிதகோவிந்தவிதூதாநாதிகாலப்ரவ்ருத்தாநந்தபாபஸஞ்சயஸ்ய வ்யாகுலேந்த்ரியதயா ஆத்மாவலோகநரூபா ஜ்ஞாநநிஷ்டா து:ஸம்பாதா ॥ ॥ ४ ॥

அவ— உலகத்தில் இருக்கிறவனுக்கு மோக்ஷம் வேணுமென்று ஆசை உண்டான உடனே, கர்மயோகம் செய்யாமல் ஞானயோகத்தைப் பண்ண முடியாதென்று சொல்லுகிறார்—

சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்யாமலும், ஆரம்பித்த கர்மங்களை நிறுத்தியும், ஞானயோகம் செய்ய முடியாது. ஏனென்றால், பகவானுடைய பிரீதியை மாத்திரம் உத்தேசித்து கர்மங்களைச் செய்து, கோவிந்தனை பகவானை ஸந்தோஷப் படுத்தாவிட்டால், நெடுநாளாய் வந்த கணக்கில்லாத பாபங்கள் போகாது. பாபங்கள் போனாலொழிய ஆத்மாவின் நினைவு வாராது. ஆகையினால் கர்மயோகம் செய்யாவிட்டால், மனது தெளியாது. ஞானயோகமும் பண்ணமுடியாது. [ 4 ]

அவ—அத தமேவார்தமாஹ—

𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ॥

𑌨𑌹𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌲𑍋𑌕𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇-𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤 𑌉𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌂 𑌪𑌾𑌪𑌸𑌞𑍍𑌚𑌯𑌂 𑌨𑌾𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑍍 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑍇𑌨 𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌃 ॥ ॥௫॥

அவ— இதற்குக் காரணம் சொல்லுகிறார்—

இந்த லோகத்தில் இருப்பவன் ஒருவனும் ஒரு காலத்திலும் ஒரு க்ஷணமும் ஒரு வேலையையும் செய்யாமல் இருக்க முடியாது. எவனும் தூங்குகிற காலம் தவிர, எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலையைச் செய்துகொண்டேயிருப்பன். ஏனென்றால், ஒரு காரியமும் செய்கிறதில்லையென்று தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கிறவனையும், முன் பண்ணின கர்மங்களுக்குத் தக்கபடி உடம்பில் வளர்ந்து வரும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணங்கள் இவனை இழுத்துக் கொண்டுபோய், தம் தம் வேலைகளைச் செய்யும்படி செய்யும். இவன் அவைகளுக்கு உட்பட்டு விடுவான். ஆகையினால் கீழ்ச் சொல்லியபடி கர்மங்களைச் செய்து, நெடுநாளாய் வருகிற பாபங்களைப் போக்கி, ஸத்வம் முதலான குணங்களை வசப்படுத்திக்கொண்டு, மனது தெளிந்தவனுக்குத்தான் ஞானயோகம் செய்ய முடியும். [5]

𑌅𑌵—𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌤𑍍𑌵𑌮𑌾𑌹—

𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌮𑌨𑌸𑌾 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௬॥

𑌅𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌪𑌾𑌪𑌤𑌯𑌾 𑌅𑌜𑌿𑌤𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌵𑌣𑌤𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌿𑌮𑍁𑌖𑍀𑌕𑍃-

तथानः विषयानेव स्मरन् य आस्ते, अन्यथा सङ्कल्प्या
न्यथा वर्तते इति स मिथ्याचार उच्यते । आत्मज्ञानाय
प्रवृत्तो विपरीतो विनष्टो भवतीत्यर्थः ॥ ||௬||

அவ— கர்மயோகத்தைச் செய்யாமல், ஞானயோகம் செய்ய வேணுமென்று ஆரம்பித்தவன் அந்த எண்ணத்திற்குத் தப்பாக நடக்கிறானென்று சொல்லுகிறார்—

கர்மயோகம் செய்யாவிட்டால் பாபங்கள் போகாது. பாபங்கள் போகாவிட்டால் இந்திரியங்கள் அடங்காது. இந்திரியங்கள் விஷயங்களிலே போகும். ஆகையால் அப்படிப்பட்டவன் ஆத்மாவை நினைக்க ஆரம்பித்தால், மனது நெடுநாளாய் விஷயங்களிலேயே அழுந்தியிருக்கிறபடியால், ஆத்மாவில் செல்லாமல் விஷயங்களையே நினைத்துக் கொண்டிருப்பன். ஆத்மாவை நினைக்க ஆரம்பித்து விஷயங்களை நினைக்கிறபடியால், எண்ணத்திற்கு விரோதமாக நடக்கிறானென்று சொல்லப்படுகிறான் அவன நினைத்தது ஒன்று செய்கிறது ஒன்று. இப்படியிருக்கிறோமென்று அப்போது அவனுக்குத் தெரியாது ஆத்மாவை அறிவதற்கு ஆரம்பித்து அதற்கு இடைஞ்சலான வேலையைச் செய்கிறபடியால், இவன் ஆசைப்பட்ட பிரயோஜனத்தை அடையமாட்டான் [ 6 ]

यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ||௭||

अतः स्वाभाविकविषयसजातीये शास्त्रीये कर्मणि इन्द्रियाण्यात्मावलोकनप्रवृत्तेन मनसा नियम्य स्वत एव कर्मप्रवणैरिन्द्रियैरसङ्गपूर्वकं यः कर्मयोगमारभते, सोऽसम्भाव्यमानप्रमादत्वेन ज्ञाननिष्ठादपि पुरुषाद्विशिष्यते ॥ ||௭||

இந்திரியங்களுக்கு விஷயங்களில் போவதே வழக்கம் அதைத் திடீரென்று நிறுத்த முடியாது அவைகள் இயற்கையாகவே வேலைகளில் படிந்திருக்கின்றன. அவைகளை, முன் செய்து பழகின வேலைகள் போன்ற சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களில்

செலுத்தி, ஆத்மாவைப் பார்க்க வேணுமென்கிற மனதோடே கெட்ட கர்மங்களில் போகாமல் தடுத்து, கீழ்ச் சொன்னபடி பலன்களில் ஆசையில்லாமல் எவன் கர்மயோகம் செய்ய ஆரம்பிக்கிறானோ, அவனுக்கு ஒருவிதமான கெடுதியும் நேராது. ஆரம்பித்த கர்மம் ஒரு நாளும் நிற்காது. ஆகையால், அவன் ஞானயோகம் செய்கிறவனைக் காட்டிலும் உயர்ந்தவன். இருகரையும் ஒத்துப்போகிற வெள்ளத்தில் நீந்தி அக்கரை போகிறவன்போல் ஞானயோகம் செய்கிறவன். பாலம் கடந்து போகிறவன்போல் கர்மயோகம் செய்கிறவன். நீந்துகிறவனுக்கு நடுவில் கை சளைத்தால் தொந்திரவு. மற்றொருவனுக்கு அது இல்லை. [7]

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ।
ஶரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேதகர்மண: ॥ ௮ ॥

நியதம்-வ்யாப்தம் ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டேந ஹி வ்யாப்தம் கர்ம, ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டஸ்யாநாதிவாஸநயா । நியதத்வேந ஸுகரத்வாத் அஸம்பாவிதப்ரமாதத்வாச்ச கர்மண: கர்மைவ குரு । அகர்மண:-ஜ்ஞாநநிஷ்டாயா அபி கர்மைவ ஜ்யாய: । "நைஷ்கர்ம்யம் புருஷோऽஶ்நுதே" இதி ப்ரக்ருதாகர்மஶப்தேந ஜ்ஞாநநிஷ்டோச்யதே । ஜ்ஞாநநிஷ்டாதிகாரிணோऽப்யநப்யஸ்தேந்த்ரியதயா ஹ்யநியதத்வேந து:ஶகத்வாத் ஸப்ரமாதத்வாச்ச ஜ்ஞாநநிஷ்டாயா: கர்மநிஷ்டைவ ஜ்யாயஸீ । கர்மணி க்ரியமாணே சாத்மயாதாத்ம்யஜ்ஞாநேநாந்தர்கதம் ஜ்ஞாநமஸ்யாநந்தரமேவ வக்ஷ்யதே । அத ஆத்மஜ்ஞாநஸ்யாபி கர்மயோகாந்தர்கதத்வாதேவ ஜ்யாயாநித்யர்த: । கர்மணோ ஜ்ஞாநநிஷ்டாயா ஜ்யாயஸ்த்வவசநம் ஜ்ஞாநநிஷ்டாதிகாரிணோ ஸத்யேவோபபத்யதே । யதி ஸர்வம் கர்ம பரித்யஜ்ய, கேவலம் ஜ்ஞாநநிஷ்டாயாமதிகரோஷி, ததாப்யகர்மணஸ்தே ஜ்ஞாநநிஷ்டஸ்ய ஜ்ஞாநநிஷ்டோபகாரிணீ ஶரீரயாத்ராபி ந ஸேத்ஸ்யதி । யாவத்ஸாதநஸமாப்தி ஶரீரதாரணம் சாவஶ்யம் கார்யம் । ந்யாயார்ஜிததநேந மஹாயஜ்ஞாதிகம் க்ருத்வா தச்சி

ஷ்டாஶநேநைவ ஶரீரதா⁴ரணம் கார்யம் | "ஆஹாரஶு-
த்³தௌ⁴ ஸத்த்வஶுத்³தி⁴: ஸத்த்வஶுத்³தௌ⁴ த்⁴ருவா ஸ்ம்ருதி:" இத்யா-
தி³ஶ்ருதே: | "தே த்வக⁴ம் பு⁴ஞ்ஜதே பாபா யே பசந்த்யாத்ம-
காரணாத்" இதி ச வக்ஷ்யதே | அதோ ஜ்ஞாநநிஷ்ட²ஸ்யாபி
கர்மாகுர்வதோ தே³ஹயாத்ராபி ந ஸேத்ஸ்யதி | யதோ
ஜ்ஞாநநிஷ்ட²ஸ்யாபி த்⁴ரியமாணஶரீரஸ்ய யாவத்ஸாத⁴நஸமாப்தி
மஹாயஜ்ஞாதி³நித்யநைமித்திகம் கர்மாவஶ்யம் கர்தவ்யம் | யத-
ஶ்ச கர்மயோகே³ ஸ்வாந்தர்க³தாத்மாநுஸந்தா⁴நதயா ஆத்மயா-
தா²த்ம்யாநுஸந்தா⁴நமப்யஸ்தி | யதஶ்ச ப்ரக்ருதிஸம்ஸ்ரு-
ஷ்டஸ்ய கர்மயோக³: ஸுஶகோऽப்ரமாத³ஶ்ச | அதோ ஜ்ஞாந-
நிஷ்டா²யோக்³யஸ்யாபி ஜ்ஞாநயோகா³த் கர்மயோக³ ஏவ ஜ்யாயாந் |
தஸ்மாத் த்வம் கர்மயோக³மேவ குர்விதி அபி⁴ப்ராய: || ||௮||

அவ— முதலில் ஞானயோகம் செய்யமுடியாது. கர்மயோகம்தான் செய்யமுடியும் என்றும், கர்மயோகத்தில் கெடுதி கிடையாது என்றும் சொல்லப்பட்டது. இப்போது ஞானயோகம் செய்யத் தகுந்தவனும் கர்மயோகம் செய்வது லகுவாயிருப்பதாலும், கெடுதியில்லாமையாலும் அவனுக்குக் கர்மங்களை விடமுடியாதாகையாலும், கர்மயோகத்தையே செய்ய வேணுமென்று சொல்லுகிறார்

உடம்போடு கூடியிருக்கிறவனுக்கு வேலைசெய்து வழக்கம். பாதடித்தாலென்ன? யாகம் செய்தால் என்ன? இரண்டும் இந்திரியங்களின் வேலைதானே. அதை லகுவாகச் செய்யக்கூடும். அது நிற்காமல் நடக்கும். தியானமானால் பழக்கமில்லாததினால், அதை முதலில் செய்வது வருத்தம். அது முழுக்க நடக்காது ஆகையால் தியானத்தைக் காட்டிலும் கர்மம் உயர்ந்தது. கர்மத்தையே நீ செய். கர்மங்களைச்செய்யும்போது ஆத்மாவை உள்ளபடி அறிந்து செய்ய வேண்டியதால், நான் செய்யவில்லை என்கிற எண்ணம் இருக்கவேணுமென்று மேலே சொல்லப்படுகிறது. அதாவது ஸம்ஸாரிகளின் வேலைகளை செய்வது ஆத்மாவுக்கு சுபாவமன்று. உடம்போடு சேர்ந்திருப்பதினாலேதான் அவைகளை ஒருவன் செய்

கிறான். இப்படி நினைப்பதினாலே ஆத்மாவின் நினைவும் கர்மத்தில் அடங்கியிருக்கிறது. இந்த காரணத்தினாலேயும் கர்மயோகமே உயர்ந்தது. இதற்கு இன்னொரு காரணமுமிருக்கிறது. உடம்பை வைத்துக்கொண்டு தானே ஞானயோகம் செய்ய வேண்டும். சாப்பிட்டால்தானே உடம்பு நிற்கும். 1 ஐந்து மஹாயக்ஞங்கள் முதலானவைகளைப் பண்ணி, மிகுதியிருக்கும் ஆஹாரத்தைச் சாப்பிட வேண்டும். ஆஹாரம் கெட்டுப்போனால் மனது கெட்டுப் போகும். மனது கெட்டால் நல்ல நினைவு வாராது. மஹாயக்ஞங்களைப் பண்ணாமல் சாப்பிட்டால், பாபத்தையே ஒருவன் சாப்பிடுகிறானென்று மேலே சொல்லுகிறது. ஆகையால், ஞானயோகம் செய்கிறவனுக்கும் கர்மங்களை விடமுடியாது. ஆகையால், ஞானயோகம் செய்யத்தகுந்தவனும், கீழ்ச்சொன்ன பல காரணங்களாலே கர்மயோகத்தையே செய்யவேண்டும் [8]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] |
[illegible] || ||௧௩||

[illegible]
[illegible]
[illegible]

---

1. கல்யாணம் செய்துகொண்டு மனைவியுடன் இல்வாழ்க்கையில் இருக்கிற ஒவ்வொருவனும், ஆஹாரம் தயாரானபிறகு அதைக்கொண்டு தேவதைகளையும், பித்ருக்களையும், வீட்டிற்குவரும் அதிதிகளையும், மற்றைய எல்லாப் பிராணிகளையும் திருப்தி பண்ணவேண்டியது. இவைகளை முறையே தேவயக்ஞமென்றும், பித்ருயக்ஞமென்றும், மனுஷ்ய யக்ஞமென்றும், பூதயக்ஞமென்றும் சொல்லுகிறது. படித்த வேதத்தை தினம் சொல்லுவதை பிரும்ம யக்ஞமென்று சொல்லுகிறது. இந்த ஐந்தையும் ஐந்து மஹாயக்ஞங்கள் என்று சொல்லுகிறது.

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌚𑌰। 𑌤𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌸𑌾𑌧𑌨
𑌤𑌯𑌾 𑌯𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰। 𑌏𑌵𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌂
𑌗𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑍇 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌕𑌰𑍍𑌮
𑌭𑌿𑌰𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌃 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌸𑍍𑌯 𑌅𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌕
𑌰𑍍𑌮𑌵𑌾𑌸𑌨𑌾𑌮𑍁𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯 𑌅𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌾𑌤𑍍𑌮𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌂 𑌦𑌦𑌾𑌤𑍀𑌤𑍍
𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௯॥

*அவ— கர்மங்களைச் செய்ய வேணுமானால், பணம் ஸம்பாதிப்பது முதலான வேலைகளைச் செய்யவேணுமே. அப்போது, "நான் கெட்டிக்காரன், பணம் என்னுடையது" என்பது முதலான கெட்ட எண்ணங்கள் வருமே. அதனால் மனது கலங்குமே. மோக்ஷம் வேணுமென்று ஆசைப்பட்டவனுக்கும் கர்மங்களுடைய 1 வாஸனையினாலே மேன்மேலும் ஸம்ஸாரம் தொடர்ந்து வருமே. முன்னாலுண்டான வாஸனை ஒழியவில்லையே. இப்போது செய்கிற வேலையினாலே அது வலுப்படுமே என்றால், பதில் சொல்லுகிறார்—*

*யக்ஞம் முதலான சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களுக்காக பணம் சம்பாதிப்பது முதலான் வேலைகளைச்செய்தால், புதுவாஸனை உண்டாகாது. 2 முன் வாஸனையும் வலுப்படாது. உன்னுடைய*

---

1. வாஸனை என்பது பழக்கத்தினால் ஒட்டிக்கொள்வது. ஒருவன் சாப்பிடும்போது நன்றாக செய்யப்பட்ட பருப்புக் குழம்பை கையால் சாப்பிட்டு, சாப்பிட்ட பிறகு கையைத் தேய்த்து அலம்பிவிட்டாலும், கையை மோந்து பார்த்தால் பருப்புக்குழம்பு வாஸிக்கிறது. குழம்பிற்கும், கைக்கும் கால் நாழிகைகூட சேர்க்கையில்லை. அப்படி யிருக்கச் செய்தே தேய்த்து அலம்பியும் போகிறதில்லை. அப்படியிருக்க நெடு நாளாக பிள்ளை, பெண்டாட்டி, பணம், முதலானவைகளில் ஆசை, கோபம், பொறாமை, முதலிய ஸங்கதிகளும், அவைகளினால் ஏற்படும் வேலைகளும் வந்திருப்பதால், அந்தப்பழக்கம் போவது மிகவும் வருத்தம். அந்தப் பழக்கத்தினால் வந்த ஒட்டுதலை வாஸனை என்று சொல்லுகிறது.

2 ஒருவனுக்கு ஒருவேலை கெடுதியைக் கொடுக்கிறதென்றுமில்லை. ஒருவேலை ஸுகத்தைக்கொடுக்கிறதென்றுமில்லை. ஒருவேலை பகவானுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. அதனால் அவன் இவனுக்குத்

பிள்ளை, பெண்டாட்டிகளுக்காக பணம் ஸம்பாதித்தால்தான் கெடுதியுண்டாகும்.

ஆகையினாலே யக்ஞங்களுக்காக வேலைகளைச்செய். செய்யும் போது இந்த வேலைகள் பகவானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாகையால், அந்த வேலைகளே பிரயோஜனம், எனக்கு அவைகளால் வேறு பிரயோஜனமில்லையென்று நினைத்துச் செய். இப்படிக் கர்மங்களைச் செய்தால், பகவான் யக்ஞம் முதலான கர்மங்களினாலே ஸந்தோஷத்தை யடைந்து, நெடுநாளாய் வந்த கர்ம வாஸனையைப் போக்கி, உன்னை ஆத்மாவை உள்ளபடி பார்க்கும் படி செய்வான். [ 9 ]

𑌅𑌥 — 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑍇𑌨𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌧𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌂 𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾, 𑌅𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌚𑌾𑌹—

𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌮𑍇𑌷 𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ॥ ॥௧௦॥

"𑌪𑌤𑌿𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑌿𑌕𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾

---

துக்கத்தைக் கொடுக்கிறான். ஒருவேலையினால் பகவான் ஸந்தோஷத்தை யடைகிறான். அதனால் இவனுக்கு ஸுகத்தைக் கொடுக்கிறான். ஒருவேலை கெட்டது என்பதற்கு பகவானுக்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடியது என்று பொருள். நல்லது என்பதற்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது என்று பொருள். ஒரு பெரிய சேற்றில் இறங்குவது பகவானுக்கு இஷ்டமாயிருந்தால், அந்த சேறு இவன்பேரில் ஒட்டாது. மிகவும் தெளிந்திருக்கிற ஜலத்தில் இறங்குவதும் பகவானுக்கு இஷ்டமில்லாதிருந்தால், உடம்பு முழுக்க சேறாய்விடும். ஆகையால், கெடுதியோ, நல்லதோ இரண்டும் தெய்வத்தின் வருத்தத்தினாலும் ஸந்தோஷத்தினாலுமே யொழிய வேலையினால் அல்ல. ஆகையினால், இந்த வேலைகளில் பகவானுக்கு ஸந்தோஷமிருப்பதால், இந்த வேலைகள் கெட்ட வாஸனைகளைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும், அவை கெட்டவாஸனைகளைக் கொடுக்காது. கொடுக்காததுமன்னியில் முன்னிருந்த கெட்ட வாஸனைகளைப் போக்கி, எல்லையில்லாத ஸுகத்தைக் கொடுக்கும்படியான பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணு

பதிஶப்த: ஸர்வேஶ்வரம் விஶ்வஸ்ய ஸ்ரஷ்டாரம் விஶ்வாத்மாநம் பராயணம் நாராயணமாஹ | புரா-ஸர்க்காலே ஸ பகவான் ப்ரஜாபதி: அநாதிகாலப்ரவ்ருத்தாசித்ஸம்ஸர்க்கவிவஶா உபஸம்ஹ்ருதநாமரூபவிபாகா: ஸ்வஸ்மிந் ப்ரலீநா: ஸகலபுருஷார்த்தாநர்ஹா: அசேதநகல்பா: ப்ரஜா: ஸமீக்ஷ்ய பரமகாருணிக: தது்ஜ்ஜிஜீவயிஷயா ஸ்வாராதநபூதயஜ்ஞநிர்வ்ருத்தயே யஜ்ஞை: ஸஹ தா: ஸ்ருஷ்ட்வா ஏவமுவாச—அநேந யஜ்ஞேந ப்ரஸவிஷ்யத்வம்-ஆத்மநோ வ்ருத்திம் குருத்வம் | ஏஷ வோ யஜ்ஞ: பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷாக்யஸ்ய காமஸ்ய ததநுகுணாநாம் ச காமாநாம் ப்ரபூரயிதா பவது || ||௧௦||

அவ— எந்தப் புருஷார்த்தத்தை விரும்புகிறவனும் மஹா யக்ஞங்களைச் செய்து மிகுந்த ஆஹாரத்தையேதான் சாப்பிடவேணும். அப்படிச் செய்யாமல் சாப்பிட்டு உடம்பை வளர்க்கிறவனுக்கு தோஷம்தான் உண்டு என்று சொல்லுகிறார்—

பகவான் ஒரு காலத்தில் எல்லா உலகங்களையும் துலைத்து விடுகிறான். அப்போது அசேதந வஸ்துக்களில் பிரகிருதி என்பது மாத்திரமும், ஜீவன்களும்தான் இருக்கின்றன. அதைப் பிராகிருத—பிரளயமென்று சொல்லுகிறது. அக்காலத்தில் ஜீவன்கள் உருவமும், பெயருமில்லாமல், நெடுநாளாய் வந்திருக்கிற பிரகிருதியினுடைய ஸம்பந்தத்தாலே அதற்கு உட்பட்டவர்களாய், உடம்பும் இந்திரியங்களும் இல்லாததினாலே, தங்களுக்கு 1 அறிவு என்கிற குணம் இயற்கையாகவே இருந்தபோதிலும், அந்த அறிவினால் ஒரு ஸங்கதியையும் அறியமுடியாமலும், ஒரு புருஷார்த்தத்தையும் அடைய முடியாமலும் அறிவில்லாத வஸ்துக்களைப் போல் இருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து பகவான் மிகவும் இரக்கப்பட்டு, அவர்

1. ஜீவன்களுக்கு கர்மம்அடியோடு போகிறவரையில், அறிவானது இந்திரியங்கள் வழியாகச்சென்று வஸ்துக்களை அறியவேண்டியது. மோக்ஷம் வந்தபிறகு, அறிவு இந்திரியங்களில்லாமலே எல்லா விஷயங்களிலும் பரவுகிறது.

களுக்கு ஸாதகங்களைக் கொடுக்க வேணுமென்று நினைத்து, உலகங்களை மறுபடியும் உண்டுபண்ணி அவர்களுக்கு உடம்புகளையும், இந்திரியங்களையும் கொடுத்து, அவர்கள் தன்னை ஸந்தோஷப்படுத்துவதற்காக 1 யக்ஞங்களையும் ஏற்படுத்தி, அவர்களைப் பார்த்து "இந்தக் கருமங்களால் நீங்கள் க்ஷேமத்தை யடையுங்கள். இந்த யக்ஞங்கள் உங்களுக்கு மோக்ஷத்தையும் அதற்கு உதவியான வஸ்துக்களையும் வேண்டியபடி கொடுக்கும்" என்று சொன்னர்.

[illegible] —

தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: ।
பரஸ்பரம் பாவயந்த: ஶ்ரேய: பரமவாப்ஸ்யத ॥ ||கக||

அநேந தேவதாராதநபூதேந தேவாந்-மச்சரீரபூதாந் மதாத்மகாந் ஆராதயத । "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம்

---

1. யக்ஞம் என்கிற வடமொழிச் சொல்லிற்கு ஒரு தேவதைக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கும் வேலை யென்று பொருள். வேதத்தில் பல பல தேவதைகளுக்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணி அவர்களிடமிருந்து பிரயோஜனங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காக அநேக யக்ஞங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை ஸ்வர்க்கம் முதலான தாழ்ந்த பலன்களை ஆசைப்பட்டவர்களும், மோக்ஷமென்கிற உயர்ந்த பலனை ஆசைப்பட்டவர்களும் செய்ய வேண்டியது. ஆனல் ஸ்வர்க்கம் முதலான பலன்களை விரும்புகிறவர்கள் இந்திரன் முதலான தேவதைகளை மாத்திரம் ஸந்தோஷப் படுத்துகிறார்கள். மோக்ஷத்தை விரும்புகிறவன் இந்திரன் முதலான தேவதைகளுக்கு ஆத்மாவாய், அவர்களுக்குள்ளேயிருந்து அவர்களை ஏவுகிற பகவானுடைய ஸந்தோஷத்தை வேண்டி கர்மங்களைச் செய்கிறார்கள். 7-வது அத்தியாயத்தில் 20-வது சுலோகம் முதல் நாலு சுலோகங்களாலே பகவானே எல்லா தேவதைகளுக்கும் உள்ளிருந்து அவர்களை ஏவுகிறனென்றும், அவன் ஆத்மாவென்றும், அவர்கள் அவனுக்கு உடம்புகள் என்றும் தேவதைகளுக்கு செய்யும் கர்மங்களினுலே அவன் தான் ஸந்தோஷப்படுவதாகவும், அவனே அந்தக் கர்மங்களுக்கு பலன் கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் மோக்ஷம் வேணுமென்கிறவனைப் பற்றியே பேசுவதால், அதற்குத் தகுந்தபடியே இந்த சுலோகங்களுக்கு அர்த்தத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்கிறார்.

ஹோதாரஶ்ச அத்4வர்யவ:’ இதி ஹி ஶ்ரூயதே । யஜ்ஞேநா ராதி4தாஶ்ச தே3வா ஆராத4கா: ஸ்வாராத4நாபேக்ஷிதாந்வா நாதீ3நிஷ்டாந் வர்ஷந்து । ஏவம் பரஸ்பரம் பா4வயந்த: பரம் ஶ்ரேயோ மோக்ஷமவாப்ஸ்யத2 ॥ ॥௧௧॥

அ.— 1 யகஞம் என்பது அக்நியி (நெருப்பி)ல் மந்திரங்களைச் சொல்லி நெய் முதலானவைகளைச் சேர்ப்பது. அது செய்த உடனே போய்விடுமே. அவைகள் வேறு காலத்தில் பலனை எப்படிக் கொடுக்கும் அப்போது அது இல்லையே 2 ஞானத்தாலேதான் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறதே ஸ்வர்க்கங்களைக் கொடுப்பதாகச் சொல்லப்பட்ட யகஞங்கள் எப்படி மோக்ஷத்தைக் கொடுக்கும்? 3 மோக்ஷத்தைக் காட்டிலும் வேறான, பலவிதமான, ஸம்ஸாரிகள் வேண்டுகிற பலன்கள் மோக்ஷத்திற்கு எப்படி உதவும்? அவைகள் அதற்கு இடைஞ்சல்கள் என்றுகூடச் சொல்லலாமே. இப்படி உண்டாகும் சில ஸந்தேஹங்களுக்குப் பரிஹாரம் சொல்லுகிறார்—

எனக்கு உடம்பான தேவதைகளை இந்த யகஞங்களினாலே ஸந்தோஷப்படுத்துங்கள் யகஞங்களினாலே ஸந்தோஷமடைந்த தேவர்கள் தாங்கள் மறுபடியும் ஸந்தோஷப்படுவதற்கு வேண்டிய

---

1. யகஞங்கள் பலனைக் கொடுக்கவில்லை. அவைகள் தேவதைகளுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணுகின்றன தேவதைகள் ஸந்தோஷமடைந்து பலன்களைக் கொடுக்கிறார்கள் இதனாலே முதல் கேள்விக்கு பதில் சொல்லப்பட்டது.

2-வது கேள்விக்கும் பதில்-ஞானத்தினாலே (தியானத்தாலே) பகவான ஸந்தோஷத்தை அடைந்து மோக்ஷத்தைக் கொடுக்கிறான். அந்த ஞானத்திற்குக் காமங்கள் உதவியாயிருக்கின்றன ஆகையினால் அது மோக்ஷத்திற்கு உதவியாகச் சொல்லப்பட்டது.

3-வது கேள்விக்கு பதில்.— ஸந்தோஷமடைந்த தேவதைகளோ, பகவானோ அவரவர்கள் வேண்டின வஸ்துக்களைக் கொடுக்கிறார்கள். மோக்ஷத்தை வேண்டாதவர்களுக்கு ஸம்ஸாரிகள் கோருகிற பலனைக் கொடுக்கிறார்கள் மோக்ஷத்தை வேண்டுகிறவர்களுக்கு அவர்கள் செய்யும் காமங்களுக்கு வேண்டின வஸ்துக்களைக் கொடுக்கிறார்கள்.

எல்லாவற்றையும் உங்களுக்குக் கொடுப்பார்கள் இப்படி ஒரு வருக்கொருவர் செய்து கொண்டு மோக்ஷமென்கிற உயர்ந்த க்ஷேமத்தை அடையுங்கள். [11]

இஷ்டாந்போகாந்ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவி
தா: | தைர்தத்தாநப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தே
ந ஏவ ஸ: || ||௧௨||

யஜ்ஞபாவிதா: யஜ்ஞாராதிதா: மதாத்மகா தேவா: இஷ்டா
ந் போகாந் வோ தாஸ்யந்தே உத்தரோத்தரயஜ்ஞாநுஷ்டாநாபேக்ஷிதம்
மோக்ஷஸாதநம் ச. இஷ்டாந் போகாந் பூர்வபூர்வயஜ்ஞபாவிதா தேவா தாஸ்யந்தே | உத்தரோ
த்தரயாகாபேக்ஷிதாந் ஸர்வாந் போகாந் வோ தாஸ்யந்
இத்யர்த்த: | ஸ்வாராதநார்த்ததயா தைர்தத்தாந் போகாந்
தேப்யோऽப்ரதாய யோ புங்க்தே ஸ்தேந ஏவ ஸ: | ஸ்தேயம்
ஹி நாம அந்யதீயே தத்ப்ரயோஜநே ச வஸ்துநி ஆ
த்மீயதாபுத்திம் க்ருத்வா தேந ஆத்மபோஷணம் |
அதோऽஸ்ய ந ஆமுஷ்மிகபுருஷார்த்தாநர்ஹதாமாத்ரம், அபி
து நிரயகாமித்வம் ச பவிஷ்யதீத்யபிப்ராய: || ||௧௨||

யக்ஞங்களால் ஸந்தோஷப் படுத்தப்பட்ட என்னுடைய உடம்பான தேவதைகள், தங்களை மேன் மேல் ஸந்தோஷப் படுத்துவதற்கு வேண்டிய எல்லா ஸங்கதிகளையும் உங்களுக்குக் கொடுப்பார்கள் இப்படி அவர்கள் கொடுக்கும் திரவியங்களை நீங்கள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது. அப்படிக் கொடுக்காமல் நீங்களே சாப்பிட்டால், திருடர்கள் ஆவீர்கள். திருடு என்பது எது என்றால், ஒருவனுடையதுமாய், அவனுடைய ஸ்வகார்த்திற்காக ஏற்பட்டதுமான வஸ்துவை யாதொரு ஸம்பந்தமில்லாத இன்னொருவன் தன்னுடையது என்று எண்ணி, அதைத் தான் உபயோகப் படுத்திக் கொள்வது ஆகையால் தேவதைகளைக் கீழே சொன்னபடி ஸந்தோஷப் படுத்தாவிட்டால் மோக்ஷம் கிடைக்காது-என்பது மாத்திரமல்ல. நரகமும் வரும்,

அவ — 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌵𑍃𑌣𑍋𑌤𑌿 —

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃 |
𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌘𑌂 𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇 𑌪𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ||

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑍈𑌵 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑍁𑌪𑌾𑌦𑌾𑌯 𑌵𑌿𑌪𑌚𑍍𑌯 𑌤𑍈𑌰𑍍𑌯𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌶𑌰𑍀𑌰𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌸𑍍𑌤𑍁 𑌅𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑍋𑌪𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑍈𑌃 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 | 𑌯𑍇 𑌤𑍁 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌧𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑍋𑌪𑌾𑌦𑌾𑌯 𑌵𑌿𑌪𑌚𑍍𑌯𑌾𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋𑌽𑌘𑌮𑍇𑌵 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 | 𑌅𑌘𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌘𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 | 𑌆𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌃 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌪𑌚𑌨𑍍𑌤𑍇 || ||௧௩||

அவ— இதையே விவரமாகச் சொல்லுகிறார்—

நான் இன்னகாலத்தில் பிறக்கிறேன் என்று ஒரு கட்டுப்பாடு கிடையாது. பிராமணன் முதலான நாலு ஜாதிகளுக்கும், பிரும்மசாரி முதலான நாலு ஆச்ரமங்களில் இருக்கிறவர்களுக்கும், இன்னார், இன்னார், இன்ன இன்ன வேலைகளைச் செய்ய வேண்டியதென்று வேதத்தில் சொல்லப்பட்ட வேலைகள் எப்போது ஸரியாய் நடக்கவில்லையோ, அல்லது அடியோடு போய்விடுகிறதோ, எப்போது செய்யக் கூடாதென்று வேதத்தில் சொல்லப்பட்ட வேலைகள் உண்டாகிறதோ, அப்போது அவைகளைப் பொறுக்காமல் நானே கீழ்ச்சொன்னபடி பிறக்கிறேன். (7)

𑌅𑌵— 𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌾𑌹—

𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥ ॥௮॥

𑌸𑌾𑌧𑌵 𑌉𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌧𑌰𑍍𑌮𑌶𑍀𑌲𑌾 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌾 𑌮𑌤𑍍𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌮𑌨𑍍𑌨𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌾𑌂 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌗𑍋𑌚𑌰𑌤𑌯𑌾 𑌮𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌪𑍋𑌷𑌣𑌾𑌦𑌿𑌕𑌮𑌲𑌭𑌮𑌾𑌨𑌾𑌃 𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌾𑌲𑌂 𑌕𑌲𑍍𑌪𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌶𑌿𑌥𑌿𑌲𑌸𑌰𑍍𑌵𑌗𑌾𑌤𑍍𑌰𑌾 𑌭𑌵𑍇𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌮𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌾𑌲𑌾𑌪𑌾𑌦𑌿𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯, 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚, 𑌕𑍍𑌷𑍀𑌣𑌸𑍍𑌯 𑌵𑍈𑌦𑌿𑌕𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌮𑌦𑌾𑌰𑌾𑌧

நாஶாய, ஆராத்யஸ்வரூபப்ரதர்ஶநேந ஸ்தாபநாய ச, தேவமநுஷ்யாதிரூபேண யுகே யுகே ஸம்பவாமி। க்ருத த்ரேதாதி யுகவிஶேஷநியமோऽபி நாஸ்தீத்யர்த்த꞉ ॥ ॥8॥

*அ-வ—கடைசிக்கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்.*

ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும், அவர்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறவர்களைத் தொலைப்பதற்காகவும், குறைந்தும் அழிந்தும் போன தர்மங்களை உள்ளபடி நிலைநிறுத்துவதற்காகவும் எல்லா யுகங்களிலும் பிறக்கிறேன். 'ஸாதுக்கள்' என்பவர்கள் என்னுடைய ப்ரீதிக்காக எல்லா வேலைகளையும் செய்து, என்னிடத்தில் மிகவும் ப்ரீதியுள்ளவர்களாய், என்னை அடைவதற்குப் பிரயத்னப்பட்டவர்கள். என்னுடைய ஸ்வரூபமும், நான் செய்யும் வேலைகளும் அவர்களுடைய மனதுக்கும், வாக்குக்கும் எட்டவில்லை. என்னைப் பார்ப்பதையே சோறாகவும், தண்ணீராகவும், சந்தனம், புஷ்பம், வெற்றிலைகளாகவும் எண்ணுகிறார்கள். என்னைப் பார்க்காவிட்டால் ஒரு விநாடி எத்தனையோ கோடியுகமாக அவர்களுக்குத் தோன்றி, அவர்கள் உடம்பு முதலானவைகள் தளர்ந்து போகின்றன. ஆகையினால் அவர்களுக்கு என் ஸ்வரூபத்தையும், என் வேலைகளையும் காட்டி, அவர்களுடன் பேசி அவர்களைக் காப்பாற்றுகிறேன். இதுதான் என் அவதாரத்திற்கு முக்கியமான பிரயோஜனம். ஸாதுக்களுக்கு விரோதிகளை அவதாரம் செய்யாமல், என் நினைவினாலேயே தொலைத்துவிடலாம். ஸாதுவைக் கீழே சொன்னபடி ரக்ஷிப்பதை நான் பிறக்காமல் செய்ய முடியாது. இடைஞ்சல் பண்ணுகிறவர்களைத் தொலைப்பது என்பது—கெட்ட காரியங்களுக்கு உதவுகிற உடம்புகளையும், கெட்ட எண்ணங்களையும் போக்குவதுதான். ஒருவன் வேலைக்காகக் கொடுத்த கத்தியைக் கொண்டு எல்லாரையும் வெட்டினால், அந்தக் கத்தியை அவனிடமிருந்து பிடுங்குவதுபோல [8]

ஜந்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத்த்வத꞉ ।
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ॥

பாஷ்யம் கர்மமூலஹேயத்ரிகுணப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்ட
ரூப ஜந்மரஹிதஸ்ய ஸர்வேஶ்வரத்வஸார்வஜ்ஞ்ய ஸத்யஸங்க
ல்பத்வாதிஸமஸ்தகல்யாணகுணகணஸ்ய ஸாதுபரித்ரா
ணமத்ஸமாஶ்ரயணைகப்ரயோஜநம் திவ்யமப்ராக்ருதம் மதஸா
தாரணம் மம ஜந்ம சேஷ்டிதம் ச தத்த்வதோ யோ வேத்தி। ஸ த்ய
க்த்வைதம் தேஹம் புநர்ஜந்ம நைதி। மதீயதிவ்யஜந்ம
சேஷ்டிதயாதாத்ம்யவிஜ்ஞாநேந வித்⁴வஸ்தஸமஸ்தமத்ஸமாஶ்ரயணவி
ரோதிபாப்மாஸ்மிந்நேவ ஜந்மநி யதோதிதப்ரகாரேண மாமா
ஶ்ரித்ய மதேகப்ரியோ மதேகசித்தோ மாமேவ ப்ராப்நோதி॥

*நீங்கள் கர்மத்தினுலே இளப்பமான மூன்று குணங்களுள்ள உடம்பை அடைவது ஆகிய பிறப்பு உள்ளவர்கள். அப்படி நான் பிறந்தவனல்ல. எல்லா உலகங்களையும் ஆளுகிறவன். எல்லாவற்றையும் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறவன். நினைத்தபடி நடத்துகிறவன். இது முதலான உயர்ந்த எல்லா குணங்களும் உடையவன். ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும், அவர்கள் என்னை அறிந்து அடைவதற்காகவும் நான் பிறக்கிறேன். என்னைத் தவிர, இன்னொருவரால் இவ்விதமாக பிறக்க முடியாது. எவன் இவ்விதமான என் பிறப்பையும் என் வேலைகளையும் உள்ளபடி அறிகிறுனோ, அவன் இப்போதிருக்கிற உடம்பினுடைய முடிவிலேயே என்னிடத்திலேயே வந்து சேருவன். அவனுக்கு மறு பிறப்பில்லை.*

*என்னுடைய ஆச்சரியமான பிறப்பையும், வேலைகளையும் அறிவதினுலே, என்னை அடைவதற்கு விரோதியான எல்லா பாபங்களும் போய்,இந்தப் பிறப்பிலேயே சாஸ்திரத்தில் சொல்லியபடி 1 பக்தியோகத்தையோ, சரணுகதியையோ செய்து, என்னைத்*

---

*1 பக்தியோகம் பண்ணுகிறவன் அநேக ஜன்மங்களில் அதைச் செய்து, பகவானிடம் போக வேணுமென்று அளவில்லாத ஆசைப்பட்டு, பகவான் தன்னைக் கூப்பிட்டுக்கொள்ளாமற் போனுல், ஆணையிட்டு அழும்போது, பகவான் அவனைத்தன்னிடம் அழைத்துப்போவன் என்று சொல்லியிருக்கிறது. இவ்வளவு ஆசை ஒரே ஜன்மத்தில் உண்டாகாது. ஆனுல் கீழ்ச்சொல்லியபடி பகவானுடைய பிறப்புகளையும், வேலைகளையும நன்ருய் தியானம் செய்தால், ஒரே ஜன்மத்தில் அந்த ஆசை வந்து விடும்.*

தவிர வேறு ஒரு வஸ்துவிலும் பிரீதியில்லாமல், என்னையே எப்போதும் நினைத்துக்கொண்டு, என்னிடம் வந்து சேருவன். 1 [9]

अव— तथाह—

वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः ॥ ॥१०॥

मदीयजन्मकर्मतत्त्वज्ञानाख्येन तपसा पूताः बहवः मद्भावं संवृत्ताः। तथा च श्रुतिः "तस्य धीराः परिजानन्ति योनिम्" इति। धीराः धीमत्तमाः। योनिं तस्य जन्मप्रकारं जानन्तीत्यर्थः॥ ॥१०॥

அவ—இதையே அடுத்த சுலோகம் சொல்லுகிறது.

2 என்னுடைய பிறப்புகளுடையவும், வேலைகளுடையவும், உண்மையை அறிவது என்கிற தபஸினாலே பரிசுத்தர்களாய் அநேகம் பேர்கள் இப்படி ஆனார்கள். [10]

---

1 நாம் அவதார ஸங்கதியை எவ்வளவு சொன்னாலும், சொல்லே யொழிய மனதில் படுவது கஷ்டம். நாம் சொல்லுவதில் கோடியில் ஒரு பங்கு நம் மனதில் பட்டால், உடனே பகவானிடம் போய் விடலாம். ஆனால் இந்தச் சொல்லும் வீணாகப்போகாது.

2 இந்த சுலோகத்திற்குப் பொழிப்புரை:—"ஆசையும், பயமும், கோபமும் போய், என்னையே நினைக்துக்கொண்டு, என்னையே அடைந்து, அநேகம் பேர்கள் இந்த அறிவாகிய தபஸினாலே பரிசுத்தர்களாய், என்னுடைய தன்மையை அடைந்தார்கள்" (என் மாதிரி ஆனார்கள்).

பகவானிடத்திலே மாத்திரம் அவர்களுக்குப் பிரீதி இருப்பதினாலே, அவர்களுக்கு மற்றவைகளில் ஆசையில்லை. ஆசையினாலே தானே கோபம் உண்டாகிறது. ஆசையில்லாத்தினாலே கோபமும் கிடையாது. விஷயங்கள் கிடைப்பதினாலே ஸந்தோஷமும், அவைகள் கிடைக்காத்தினாலே வருத்தமும் இல்லாமையாலே அவர்களுக்கு பயமுமில்லை. இப்படி ஆசையும், பயமும் கோபமும் இல்லாததை 'என்னைத்தவிர வேறு ஒரு வஸ்துவிலும் பிரீதி யில்லாமல்' என்று கீழ் சுலோகத்தின் வியாக்கியாநத்தில் சொல்லப்பட்டது. என்னை அடைந்து என்பதின் பொருளை "சாஸ்திரத்தில் சொல்லியபடி பக்தியோகத்தையோ சரணாகதியையோ பண்ணி" என்று சொல்லப்பட்டது. தபஸாலே பரிசுத்தர்களாய் என்பதின் பொருளை "எல்லா பாபங்களும் போய்" என்பதினால் சொல்லப்பட்டது.

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் |
மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ: ||

ந கேவலம் தேவமநுஷ்யாதிரூபேணாவதீர்ய மதாஶ்ரயணாபேக்ஷாணாம் பரித்ராணம் கரோமி। அபி து யே மதாஶ்ரயணாபேக்ஷா:, யதா-யேந ப்ரகாரேண-ஸ்வாபேக்ஷாநுரூபம் மாம் ஸங்கல்ப்ய ப்ரபத்யந்தே-ஸமாஶ்ரயந்தே। தாந் ப்ரதி ததைவ தந்மதிப்ரகாரேண பஜாமி-மாம் தர்ஶயாமி। கிம் பஹுநா, ஸர்வே மநுஷ்யா: மதநுவர்த்தநைகமநோரதா மம வர்த்ம ஸ்வபாவம் ஸர்வம் யோகிநாம் வாங்மநஸாகோசரமபி ஸ்வகீயைஶ்சக்ஷுராதிகரணை: ஸ்வாபேக்ஷிதை: ஸர்வஶோ(அ)நுபூய அநுவர்த்தந்தே||

என்னை அடைய வேணுமென்று ஆசைப்பட்டவர்களை நான் தேவனாகவும், மனிதனாகவும் பிறந்து காப்பாற்றுகிறேன் என்பது மாத்திரமில்லை. பின்னையென்ன வென்றால்—ஒருவன் எந்த உருவத்தோடு என்னைப்பார்க்கவேணுமென்று விரும்புகிறானோ,1 அந்த உருவத்தோடு வந்து என்னை அவனுக்குக் காட்டுகிறேன்.

பல வார்த்தைகள் சொல்லி யென்ன? எவனாயிருக்கட்டும், என்னை அடையவேணும், என்னைப்பார்க்கவேணும் என்று நினைத்தால், பிரும்மா முதலானவர்களாலேயும் அறிய முடியாத என்னுடைய எல்லா ஸங்கதிகளையும், அவனுடைய கண் முதலான இந்திரியங்களாலேயே வேண்டியபடி அறியும்படியாகக் காண்பிப்பேன். அவன் அவைகளை அறிந்து ஸந்தோஷப்படுவன். [11]

ஏவ.— இதாநீம் ப்ராஸங்கிகம் பரிஸமாப்ய, ப்ரக்ருதஸ்ய கர்மயோகஸ்ய ஜ்ஞாநாகாரதாப்ரகாரம் வக்தும் தத்யோக்ய

1. ஶ்ரீகிருஷ்ணனை என்னைக்குழந்தையாய்த் தொட்டிலில்படுத்திக் கொண்டிருந்தபடி பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டால், நான் அப்படியே அவனுக்கு ஸேவை ஸாதிக்கிறேன். வீடுகளிலும், ஒரு பிம்பத்தைச் செய்து அதில் நீர் இருக்கவேணுமென்று கேட்டால், அதிலும்வந்திருந்து நான் அவனைக்காப்பாற்றுவேன்,

𑌯𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑍋 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌤𑍍𑌵𑌮𑌾𑌹—

𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤 𑌇𑌹 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 ॥௧௨॥

𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌫𑌲𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇—𑌆𑌰𑌾𑌧𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌨 𑌤𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌨𑌭𑌿𑌸𑌂𑌹𑌿𑌤𑌫𑌲𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 । 𑌕𑍁𑌤 𑌏𑌤𑌤𑍍? 𑌯𑌤𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌶𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 । 𑌮𑌾𑌨𑍁𑌷𑌲𑍋𑌕𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 । 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌲𑍌𑌕𑌿𑌕𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌅𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌪𑌾𑌪𑌸𑌂𑌚𑌯𑌤𑌯𑌾 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌶𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 । 𑌨 𑌤𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌹𑍃𑌦𑌯𑍋 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌂 𑌮𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌮𑌾𑌰𑌭𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥௧௨॥

*அவ—பிரஸ்தாவத்தில் வந்த ஸங்கதியை முடித்து, கர்மயோகம் என்பது வெறும் வேலையல்ல, உயர்ந்த அறிவுடன் செய்யப்படுவதால், உயர்ந்த அறிவுதான் என்று சொல்லுவதற்காக, அப்படிப்பட்ட அறிவுடன் கர்மயோகத்தை செய்கிறவர்கள் அகப்படுவது* 1 *வருத்த மென்று சொல்லுகிறுர்.*

---

1 ஆத்மாவை உள்ளபடி முதலில் அறியவேண்டும். கர்மங்களின் பலன்களில் ஆசையைவிட்டு, பகவானுடைய பிரீதிக்காகவே அவைகளைச் செய்யவேண்டும். நடுவில் வரும் பணம் முதலானவைகளையும், ஸ்வர்க்கம் முதலானவைகளையும் விரும்பாமல், பகவானையே அடைவதுதான் பிரயோஜனமென்று எண்ண வேண்டியது. எந்த வேலை செய்தாலும், வண்டிக்காரனிடம் அகப்பட்ட வண்டிமாடுபோல், நாம் பகவானிடம் அகப்பட்டு அவனாலே வேலைகளைச் செய்விக்கப்படுகிறோம் என்றும் நினைக்கவேண்டியது. இப்படிச் செய்வது கர்மயோகம். இவைகளை வாயால் சொல்வதே கஷ்டம். நினைவு எப்படி வரும். செய்வது எங்கு இருக்கிறது.

எல்லாரும்இநத உலகத்தில பணம் காசுமுதலானஸுகஙகளை யும,ஸ்வர்ககலோகததிய ஸுகஙகளையும ஆசைப்படடு,இநதிரன முதலான தேவதைகளை மாத்திரம பூஜிதது,அவர்களைஸநதோஷப் படுததுகிறார்கள ஒருவனாவது அநத பலன்களை ஆசைப்படாமல், இநதிரன முதலான எலலா தேவதைகளுக்கும் நான் தான ஆதமாவாயிருககிறேனெனறும, எல்லா யகஞஙகளினாலும் நான் தான ஸநதோஷததை யடைகிறேனெனறும எனனை அறிந்து, பூஜிதது, ஸநதோஷப படுததுகிறதிலலை ஏனென்றால், இநதிரன முதலானவர்களை ஸநதோஷபபடுததினால், அவர்கள பிளளை பெண் டாட்டி, சோறு,தண்ணீர,முதலான பலன்களை[1] உடனே கொடுக் கிறார்கள ஜீவன்கள் இது முதல என்று இலலாமல் நெடுநா ளாய கணககில்லாத பாபங்களைச செய்திருக்கிறார்கள. அதனாலே "உடமபு வேறு ஆதமா வேறு உடமபும அதைச்சேர்ந்தவை களும் அழிவுளளவைகள மிகவும தாழநதவைகள. அவை களால் ஆதமாவுக்கு ஒரு பிரயோஜநமுமில்லை ஆத்மா என் பது அழிவில்லாதது மிகவுமுயர்ந்தது. பகவானை அடைய வேண் டிய வஸது, அதற்காகத்தான் வேலைகளைச செய்யவேண்டியது" இது முதலான ஸஙகதிகளை அறிய முடியவிலலை. சீககிரம் உண் டாகிற பிளளை பெண்டாட்டி, மாடு கனறு முதலான பலனக ளைததேடுகிறாரகள. ஒருவனும் ஸமஸாரத்தில வெறுபபுண்டாகி மோக்ஷத்தை ஆசைபபட்டு எனக்கு ஸந்தோஷத்தையுணடு பண் ணும்படி கர்மயோகததைச செயய ஆரமபிககிறதிலலை. [ 12 ]

[illegible]

𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤 𑌇𑌹 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 ॥ ॥௧௨॥

[illegible]

1. இநதிரன் முதலான தேவதைகளிடம் பலனகளை வேண்டுவது ஒருவன ஒரு பணககாரனிடமபோய அவனை ததாறுமாறாய்த் தோத்திரம பணணி, அவனிடமிருநது இரணடணா பெறறு ஸநதோஷப்படுவது போல இருககிறது

கர்மவிபாகேந ச விபக்தம் மயா ஸ்ருஷ்டம் | ஸ்ருஷ்டிக்ரஹணம் ப்ரதர்ஶநார்த்தம், மயைவ ரக்ஷ்யதே, மயைவ சோபஸம்ஹ்ரியதே | தஸ்ய விசித்ரஸ்ருஷ்ட்யாதே: கர்த்தாரமபி அகர்த்தாரம் மாம் வித்தி || ||௧௩||

அவ—பாபத்தினலே அறிவு கெட்டு, கர்மயோகத்தை ஆரம்பிக்கிறதில்லை யென்று சொல்லப்பட்டது. அந்த பாபம் போவதற்கு வழியைச் சொல்லுகிருர்.

பிராமணன் முதலான நாலு ஜாதிகளையும், பிரும்மா முதல் புழுவரையிலுள்ள எல்லா ஜந்துக்களையும் நான் உண்டுபண்ணி, காப்பாற்றி, அழிக்கிறேன். ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற குணங்களில் சிலருக்கு சில குணங்கள் அதிகமாயும், சிலருக்கு குறைவாகவும் இருக்கும்படி செய்கிறேன். அந்த குணங்களுக்குத் தகுந்தபடி, தொழில்களையும் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகையினலே உலகத்தில் ஒருவனைப்போல் ஒருவன் இருக்கவில்லை. ஒருவன் பெரிய பணக்காரன், மற்றொருவன் மிகவும் ஏழை. ஒருவன் மஹா புத்திமான். இன்னொருவன் அடியோடு முட்டாள். இப்படி உலகத்தைப் பலவிதமாகப் பண்ணியிருக்கிறேன். ஆனல் அப்படி நான் பண்ணியிருந்தபோதிலும், நான் பண்ணவில்லை யென்று நினை. [13]

அத— அகர்த்ருத்வமாஹ—

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா ||
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர்ந ஸ பத்யதே ||

யத இமாநி விசித்ரஸ்ருஷ்ட்யாதீநி கர்மாணி மாம் ந லிம்பந்தி—ந மாம் ஸம்பத்நந்தி | ந ஹி மத்ப்ரயுக்தாநி தாநி தேவமநுஷ்யாதிவைசித்ர்யாணி, ஸ்ருஜ்யாநாம் புண்யபாபரூபகர்மவிஶேஷப்ரயுக்தாநீத்யர்த: | அத: ப்ராப்தாப்ராப்தவிவேகேந விசித்ரஸ்ருஷ்ட்யாதே: நாஹம் கர்த்தா | யதஶ்ச ஸ்ருஷ்டா: க்ஷேத்ரஜ்ஞா: ஸ்ருஷ்டிலப்தகரணகளேபரா: ஸ்ருஷ்டிலப்தம் போக்யஜாதம் யதாஸ்வம் ப்ராக்தநஸ்வகர்மாநுகுணம் புஞ்ஜதே | ஸ்ருஷ்ட்யாதிகர்மபலே ச தேஷாமேவ ஸ்ப்ருஹா

ति । न मे स्पृहा । यथाह सूत्रकारः — "वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात्" इति । तथा च भगवान् पराशरः — "निमित्तमात्रमेवायं सृज्यानां सर्गकर्मणि । प्रधानकारणीभूता यतो वै सृज्यशक्तयः ॥ निमित्तमात्रं मुक्त्वैकं नान्यत्किञ्चिदपेक्षते । नीयते तपतां श्रेष्ठ स्वशक्त्या वस्तु वस्तुताम्" इति । सृज्यानां देवादीनां क्षेत्रज्ञानां सृष्टेः कारणमात्रमेवायं परमपुरुषः । देवादिवैचित्र्ये तु प्रधानकारणं सृज्यभूतक्षेत्रज्ञानां प्राचीनकर्मशक्तय एव । अतो निमित्तमात्रं मुक्त्वा सृष्टेः कर्तारं परमपुरुषं मुक्त्वा सृज्यं क्षेत्रज्ञवस्तु देवादिविचित्रभावे नान्यदपेक्षते, स्वगतप्राचीनकर्मशक्त्यैव हि देवादिवस्तुभावं नीयत इत्यर्थः । एवमुक्तेन प्रकारेण सृष्ट्यादेः कर्तारमपि अकर्तारं सृष्ट्यादिकर्मफलसङ्गरहितं च यो मामभिजानाति, स कर्मबन्धारम्भविरोधिभिः फलसङ्गादिभिर्मुक्तः प्राचीनकर्मभिर्न सम्बध्यते, मुच्यत इत्यर्थः ॥ ॥१४॥

அவ—ஒரே வேலையை 'நான் செய்தேன்' 'நான் செய்யவி ல்லை' என்பது எப்படி ஒட்டும்? என்றால் சொல்லுகிறார்—

ஒருவன் தேவனாகவும், மற்றொருவன் மனிதனாகவும் பிறந் திருக்கிறான். இது மாதிரி பேதங்கள் என்னால் ஏற்படவில்லை. ஜீவன்களுடைய புண்ணியத்தாலும், பாபத்தாலும் ஏற்பட்ட வைகள். உதாரணம் ஒரு கொல்லையில் ஒருவன் வெவ்வேறு விதைகளை விதைக்கிறான். அவைகள் பலவிதமாய் முளைக்கின் றன. விதைத்தவன் ஒருவன். பூமி ஒன்று, தண்ணீரும் ஒரே கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டது. எருவும் ஒன்று. எல்லாம் ஒன்றாயிருந்தாலும் விதைகளின் வெவ்வேறு சக்திகளாலே வெவ் வேறு முளைகள் உண்டாகின்றன. அதுபோல. என்னாலே உண்டு பண்ணப்பட்ட ஜீவன்கள் அவரவர்களுக்குப் பிடித்த பண்டங் களை அவரவர்கள் கர்மத்திற்குத் தகுந்தபடி அநுபவிக்க வேண்

டியது. அதற்காக அதற்குத்தகுந்த உடம்புகளையும், இந்த்ரியங்களையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

உடம்புகளும், இந்திரியங்களும், உண்டாவதற்கு நான் பொதுவான காரணம். அவைகள் வெவ்வேறாயிருப்பதற்கு அவரவர்கள் கர்மங்களே காரணம். ஆகையினாலே பலவித பேதங்களை நான் உண்டு பண்ணினாலும், 'நான் உண்டு பண்ணவில்லை' என்று சொன்னேன். மேலும், எனக்கு ஒரு பிரயோஜனத்திலாசையினால், இப்படி பலவிதமான பேதங்களை நான் உண்டு பண்ணவில்லை. உலகத்தில் சில அதிகாரிகள் அவனவனுக்கு யோக்கியதைக்குத்தகுந்தபடி சில வேலைகளைக் கொடுக்கிறார்கள். அதை அவர்கள் தங்கள் பிரயோஜனத்திற்காகச் செய்யவில்லை. வேறு சிலர்கள் வேலை பண்ணிக் கொடுத்து லஞ்சம் வாங்குகிறார்கள். நான் அப்படி ஒரு பிரயோஜனத்தை ஆசைப்பட்டு, பலவித பேதங்களை செய்ய வில்லை. இப்படி யார் என்னை நினைக்கிறானோ, அவனுக்குக் கர்மயோகம் செய்வதற்கு இடைஞ்சலான பாபங்கள் போய் விடும். அதாவது பகவான் எல்லாருக்கும் எல்லாவித உறவாயிருக்கிறான். எல்லாரும் ஸௌக்கியத்தை அடையவேணுமென்று ஆசைப்பட்டு பலவிதமாய்ப் பாடுபடுகிறான். அவனுக்கு ஒருவனிடத்திலும் த்வேஷமில்லை. ஆனால் அவன் அவரவர்களுடைய பாபத்துக்கும் புண்ணியத்திற்கும் தகுந்தபடி ஒருவனை உயர்த்தியாயும்,ஒருவனைத் தாழ்த்தியாகவும் வைக்கிறான். இதை அறிந்தால் அவரவர்கள் தங்கள் பாபத்தை அறிந்து, அதைப்போக்கும் வழியைத் தேடுவர்கள். உலகத்திலும் இதைப்பார்க்கலாம். திருடனை ராஜா தண்டிக்கிறான். பள்ளிக்கூடத்தில் நன்றாய்ப் படித்த பையனுக்கு இனாம்கொடுக்கிறான். ராஜா அவனவனுடைய வேலைக்குத் தகுந்தபடி பலன் கொடுக்கிறான். தண்டிக்கப்பட்டவன் தன்னுடைய குற்றத்தினலேதான் தண்டனை வந்ததென்று நினைத்தால்,திருட்டை நிறுத்தி விடுவன். அப்படியே பகவான், நம்முடைய பாபங்களுக்கு பலன் கொடுக்கிறானென்று எண்ணினால், நாமும் நம்முடைய பாபங்களை நிறுத்த முயற்சிசெய்வோம். தெய்வத்திற்குக்கண் இல்லை யென்று

பகவானை வையமாட்டோம்.[1]

𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 ।
𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂
𑌕𑍃𑌤𑌮𑍍 ॥ ॥௧௫॥

𑌏𑌵𑌂 𑌮𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌧𑍂𑌤𑌪𑌾𑌪𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌨𑍍𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌕𑍃𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌂 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌮𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌕𑌾𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌕𑍁𑌰𑍁 ॥ ॥௧௫॥

இப்படி என்னைத் தெரிந்து கொண்டு, எல்லாப் பாபங்களையும் போக்கி, ஸம்ஸாரத்தைப் போக்கவேணுமென்று ஆசைப்பட்ட முன்னிருந்த பெரியோர்கள் கர்மயோகத்தைச் செய்தார்கள் நீயும் அதே மாதிரி என்னை நினைத்து. பாபத்தைப் போக்கி, முன்னிருந்த விவஸ்வான், மனு முதலான பெரியோர்களுக்கு அப்போதே என்னால் சொல்லப்பட்டு, அவர்களால் செய்யப்பட்டு, நெடு நாளாய் வந்த கர்ம யோகத்தையே கீழ்ச்சொல்லியபடியும், மேல் சொல்லப்போகிறபடியும் செய் (15)

𑌅𑌥 — 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌤𑌾𑌮𑌾𑌹 —

𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌮𑌕𑌰𑍍𑌮𑍇𑌤𑌿 𑌕𑌵𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 ॥

𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌣𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌂𑌰𑍂𑌪𑌮𑍍? 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌕𑌿𑌮𑍍? 𑌅𑌕𑌰𑍍𑌮𑍇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑍃𑌰𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌕𑌿𑌂𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌉𑌭𑌯𑌤𑍍𑌰 𑌕𑌵𑌯𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋𑌽𑌪𑌿 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 𑌯𑌥𑌾𑌵𑌨𑍍𑌨

1. உலகத்தில் படித்தவரோ படிக்காதவரோ யாருக்கும் இது பாபம் என்றும், நாம் பாபத்தைப் பண்ணினோம், பண்ணுகிறோம் என்றும் தோன்றுகிறதே இல்லை இதைத்தானாகவும், பிறர் சொன்னாலும் கவனிக்கிறதில்லை. நான் பாபி என்று மனதார நினைப்பதை மோக்ஷத்திற்கு ஆரம்பமென்று ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்திருக்கிறார்.

ஜாநமிதி। ஸவாஸநம் தத் ஜ்ஞாநம் யத்ஜ்ஞாத்வா ததே ப்ரவக்ஷ்யாமி।
யஜ்ஜ்ஞாத்வாऽநுஷ்டாய அசுபாத் ஸம்ஸாரபந்தாந் மோக்ஷ்யஸே। கர்தவ்யகர்மஜ்ஞாநம் ஹி துரநுஷ்டாநமேவ ॥ ௧௬ ॥

அவ— நான் சொல்லப்போகிற கர்மத்தை அறிவது மிகவும் வருத்தமென்று சொல்லுகிறார்.

ஸம்ஸாரத்தைப் போக்கவேணுமென்று ஆசைப்பட்டவன் செய்யவேண்டிய கர்மம் இன்னது, அது செய்யும்போது நினைக்க வேண்டிய நினைவு இன்னது (அதாவது இன்ன வேலையை இன்ன நினைவுடன் செய்யவேண்டும்) என்கிற இந்த இரண்டு த்விஷய தில் மிகவும் தெரிந்தவர்களும் மயங்குகிறார்கள். அந்த அறிவோடு கூடிய கர்மத்தை நான் உனக்குச் சொல்லுகிறேன். அதை அறிந்து நீ 1. செய்தால், உனக்கு ஸம்ஸாரம் போய்விடும். (16)

அவ— குதோऽஸ்ய துர்ஜ்ஞாநத்வம் இத்யத்ராஹ—

கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண: ।
அகர்மணஸ்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி: ॥ ॥௧௭॥

யஸ்மாந்மோக்ஷஸாதநபூதே கர்மஸ்வரூபே ஏவ போத்தவ்யமஸ்தி। விகர்மணி ச நித்யநைமித்திககாம்யரூபேண தத்ஸாதநத்ரவ்யார்ஜநாத்யாகாரேண ச விவிததாமாபந்நம் கர்ம விகர்ம। அகர்மணி ஜ்ஞாநே ச போத்தவ்யமஸ்தி। கஹநா துர்விஜ்ஞாநா முமுக்ஷோ: கர்மணோ கதி:। விகர்மணி போத்தவ்யம் நித்யநைமித்திககாம்யத்ரவ்யார்ஜநாதௌ கர்மணி பலபேதக்ருதம் வைவித்யம் பரித்யஜ்ய மோக்ஷைகபலதயா ஏகசாஸ்த்ரார்த்தத்வாநுஸந்தாநம்। ததேதத் "வ்யவஸாயாத்மிகா புத்திரேகா" இத்யத்ரைவோக்தமிதி நேஹ ப்ரபஞ்ச்யதே ॥ ॥ ௧௭ ॥

அவ— அந்த ஸங்கதியை அறிவது ஏன் இவ்வளவு வருத்தம் என்றால், சொல்லுகிறார்—

---

1 ஒரு ஸங்கதியை அறிவதனால் மாத்திரம் பிரயோஜநமில்லை. அதைச்செய்தால்தான் பிரயோஜனம் உண்டு. நமக்கு அறிவதே கஷ்டமாயிருக்கிறது. எப்போது செய்யப்போகிறோம்.

ஸம்ஸாரத்தைப் போக்குவதற்கு ஸாதனமான கர்மம் இன்னதென்று அறியவேணும். நித்யம், நைமித்திகம், காம்யம், என்பவைகளையும், அவைகளுக்கு ஸாதனமான பணம் ஸம்பாதிப்பது முதலான வேலைகளையும் அறியவேண்டும். கர்மத்தைச் செய்யும்போது கூட இருக்கவேண்டிய நினைவையும் அறியவேண்டும். ஆகையினால் இவைகளை அறிவது மிகவும் கஷ்டம். நித்யம், நைமித்திகம், காம்யம் என்கிற கர்மங்களையும், அவைகளுக்கு ஸாதனமான பணம் ஸம்பாதிப்பது முதலானவைகளையும் அறிவதாவது அவைகளுக்கு ஏற்பட்ட பலன்களினாலே அவைகள் வெவ்வேறு என்கிற எண்ணத்தை விட்டு, எல்லாம் மோக்ஷம் என்கிற ஒரே பலனைக் கொடுப்பதினால், அவைகள் எல்லாம் ஒரே வகுப்பு என்று எண்ணுவது இது 2-வது அத்தியாயம் 41-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டது (17)

அவ— கர்மாகர்மணோர்வேதிதவ்யமாஹ—

கர்மண்யகர்ம ய: பஶ்யேதகர்மணி ச கர்ம ய: ।
ஸ புத்திமாந்மநுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் ॥ ௧௮ ॥

அகர்மஶப்தேநாத்ர கர்மேதரத் ப்ரஸ்துதமாத்மஜ்ஞாநமுச்யதே। கர்மணி க்ரியமாண ஏவாத்மஜ்ஞாநம் ய: பஶ்யேத்। அகர்மணி சாத்மஜ்ஞாநே வர்தமாந ஏவ ய: கர்ம பஶ்யேத் । கிமுக்தம் பவதி - க்ரியமாணமேவ கர்ம ஆத்மயாதாத்ம்யாநுஸந்தாநேந ஜ்ஞாநாகாரம் ய: பஶ்யேத் । தச்ச ஜ்ஞாநம் கர்மாந்தர்கததயா கர்மாகாரம் ய: பஶ்யேதித்யுக்தம் பவதி । க்ரியமாணே ஹி கர்மணி கர்த்ருபூதாத்மயாதாத்ம்யாநுஸந்தாநேந ததுபயம் ஸம்பந்நம் பவதி । ஏவமாத்மயாதாத்ம்யாநுஸந்தாநகர்பம் கர்ம ய: பஶ்யேத், ஸ புத்திமாந் க்ருத்ஸ்நஶாஸ்த்ரார்தவித்। மநுஷ்யேஷு ஸ யுக்த: மோக்ஷாயார்ஹ: ।
ஸ ஏவ க்ருத்ஸ்நகர்மக்ருத் - க்ருத்ஸ்நஶாஸ்த்ரார்தக்ருத் ॥ ॥ ௧௮ ॥

அவ— மோக்ஷத்திற்கு ஸாதனமான கர்மத்தையும், அது செய்யும்போது இருக்கவேண்டிய நினைவையும் சொல்லுகிறார்—

**மோக்ஷத்திற்கு ஸாதனமான கர்மத்தைச் செய்கிற**

வன் ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி நினைப்பதில்லை, கர்மத்தில் அறிவு இருக்கிறதென்றும், ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி நினைக்கிறவன் கர்மத்தைச் செய்கிறபடியால், அறிவில் கர்மம் இருக்கிறதென்றும் எவன் பார்க்கிறானே, அவன் கெட்டிக்காரன். அதாவது ஆத்மாவின் நினைவு சேர்ந்ததுதான் கர்மம். கர்மத்துடன் சேர்ந்ததுதான் ஆத்மாவின் நினைவு ஆகையால் கர்மமே நினைவு நினைவுதான் கர்மம் கர்மமும், ஆத்மாவின் நினைவும் ஒன்றைவிட்டு ஒன்று இராது ஆத்மாவை உள்ளபடி அறிந்து, கர்மத்தைச் செய்கிறவனுக்கு இரண்டும் ரொம்பிவிடுகிறது. இப்படி எவன் கர்மத்தை ஆத்மாவின் நினைவுடன் சேர்ந்ததென்று பார்க்கிறானே, அவன் சாஸ்திரத்தை உள்ளபடி அறிந்தவன் மனிதர்களுக்குள்ளே அவன்தான் ஸம்ஸாரத்தைப் போக்கக்கூடியவன் அவன் சாஸ்திரத்தில் சொல்லிய எல்லா கர்மங்களையும் செய்கிறவன் 1. (18)

ஏவம் ப்ரத்யக்ஷேண க்ரியமாணஸ்ய கர்மணோ ஜ்ஞாநாகாரதா கதமுபபத்யத இத்யத்ராஹ—

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்பவர்ஜிதா: ॥
ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா: ॥௧௯॥

யஸ்ய முமுக்ஷோ: ஸர்வே த்ரவ்யார்ஜநாதிலௌகிகக ர்மவைதிக நித்யநைமித்திககாம்யரூபகர்மஸமாரம்பா: காமவர்ஜிதா: பலஸங்கரஹிதா: ஸங்கல்பவர்ஜிதாஶ்ச। ப்ரக்ருத்யா தத்குணைஶ்சாத்மாநமேகீக்ருத்யாநுஸந்தாநம் ஸங்கல்ப:, ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாநுஸந்தாநயுக்ததயா தத்ரஹிதா:। தமேவம் கர்ம குர்வாணம் பண்டிதம் கர்மாந்தர்கத

1. நாம இப்போது நம்மைப்பிராமணனாக நினைத்துக்கொள்ளவுமில்லை, பிராமணன் இன்ன வேலை செய்யவேண்டுமென்பதையும் அறியவில்லை. சிலர் அதைச் செய்யவேண்டுமென்று வாயால் சொல்லுகிறார்களேயொழிய, மனதில் படவில்லை. செய்யவேணுமென்று ஆசையுமில்லை. சிலவேளைகளில் ஏதோ மிகவும் சொற்பமான ஆசையால் செய்தாலும், ஆத்மாவின் நினைவுடன் செய்வது அரிது.

த்மயாதாத்ம்யஜ்ஞாநாக்நிநா உபயவிதநகர்மாணம் ஆஹு: தத்த்வஜ்ஞா: । அத: கர்மணோ ஜ்ஞாநாகாரத்வமுபபத்யதே ||௧௯||

அவ— செய்யப்படுகிற கர்மம் வேறு ஆத்மாவின் நினைவு வேறு இப்படியே பார்க்கிறோம் எப்படி கர்மம் நினைவாயிருக்கும் கண்ணாலே பார்ப்பதற்கு விரோதமாக இருப்பதைச் சாஸ்திரத்தைக்கொண்டோ, யுக்தியைக்கொண்டோ எப்படி ஸாதிக்கக்கூடும் ? என்றால் சொல்லுகிறார்.—

ஸம்ஸாரத்தைப் போக்கவேணுமென்று நினைவுள்ளவன் நித்யம், நைமித்திகம், காம்யம் என்கிற கர்மங்களையும், அவைகளுக்கு ஸாதனமான பணம் ஸம்பாதிப்பது முதலான கர்மங்களையும், அவைகளுக்கு ஏற்பட்ட பலன்களில் ஆசையில்லாமல் பகவானுடைய ப்ரீதிதான் வேண்டுமென்றும், உடம்பு வேறு, ஆத்மா வேறு என்கிற எண்ணத்துடனும் செய்கிறான் இப்படிக் கருமங்களைச் செய்கிற அவனைக் கர்மங்களோடு சேர்ந்த ஆத்மாவின் அறிவு என்கிற நெருப்பினால், நெடுநாளாய் வந்த புண்ணியங்களையும், பாபங்களையும் கொளுத்திவிட்டவனென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள் நினைவினால் தான் கர்மம் பாபத்தைப் போக்குகிறது. நினைவுதான் ரஸம் ஆகையினாலே கர்மங்களை நினைவு (ஞானம்) என்று சொல்லுகிறது [ 19 ]

அவ— ஏததேவ விவ்ருணோதி—

த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய: ।
கர்மண்யபிப்ரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித்கரோதி ஸ: ‖

கர்மபலஸங்கம் த்யக்த்வா நித்யத்ருப்த: - நித்யே ஸ்வாத்மந்யேவ த்ருப்த:, நிராஶ்ரய: - அஸ்திரப்ரக்ருதாவாஶ்ரயபுத்திரஹித:, ய: கர்மாணி கரோதி, ஸ கர்மண்யபிப்ரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித்கர்ம கரோதி । கர்மாபதேஶேந ஜ்ஞாநாப்யாஸமேவ கரோதீத்யர்த்த: ॥ ‖ ௨௦ ‖

அவ— இதையே விரிவாகச் சொல்லுகிறார்—

கர்மங்களுக்கு இவ்வுலகத்திலோ, வேறு உலகங்களிலோ

ஏற்பட்ட பலன்களில் ஆசையை விட்டு, அழிவில்லாத ஆத்மாவை நினைப்பதிலேயே ஸந்தோஷத்தை யடைந்து, உடம்பும், உடம்பை சேர்ந்தவைகளும் நிலையானவைகள் அல்லவென்று, அவைகளில் ஆசையில்லாமல், எவன் கர்மங்களைச் செய்கிறானோ, அவன் கர்மங்களையே ஆசைப்பட்டுச் செய்தாலும், கர்மங்களைச் செய்யவில்லை. கர்மம் என்று பெயரை வைத்துக்கொண்டு ஆத்மாவின் நினைவைத் தான் பழக்குகிறான். [20]

पुनरपि कर्मणो ज्ञानाकारत्वमेव विशोध्यते—

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥२१॥

निराशीः निर्गतफलाभिसन्धिः। यतचित्तात्मा-यतचित्तमनाः। त्यक्तसर्वपरिग्रहः-आत्मैकप्रयोजनतया प्रकृतिप्राकृतवस्तुनि ममतारहितः। यावज्जीवं केवलं शारीरमेव कर्म कुर्वन् किल्बिषं - संसारं नाप्नोति- ज्ञाननिष्ठाव्यवधानरहितकेवलकर्मयोगेनैवंरूपेणात्मानं पश्यतीत्यर्थः ॥ ॥२१॥

அவ— மறுபடியும் கர்மங்கள் நினைவாயிருக்கும் என்பதைத் தெளிவாகச் சொல்லுகிறார்—

கர்மங்களுக்கு ஏற்பட்ட பலன்களில் ஆசையில்லாமல், ஆத்மாவைத் தவிர வேறு விஷயங்களில் மனதைப் போகாமல் அடக்கி, ஆத்மா ஒன்றே வேணும் என்கிற நினைவினாலே உடம்பிலும், உடம்பைச் சேர்ந்த வஸ்துக்களிலும், இவைகள் என்னுடையவை என்கிற எண்ணத்தை விட்டு, எவன் செத்துப்போகிறவரையில் உடம்பினாலும், இந்திரியங்களாலும் கர்மங்களையே செய்து கொண்டிருக்கிறானோ, அவன் ஸம்ஸாரத்தைப் போக்குகிறான். அவன் ஞானயோகமில்லாமலே இப்படிப்பட்ட கர்மயோகத்திலேயே ஆத்மாவைப் பார்த்துவிடுகிறான். [21]

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே ॥ ॥௨௨॥

யத்ருச்சோபநதஶரீரதாரணஹேதுவஸ்துஸந்துஷ்ட: । த்வந்த்வாதீத:- யாவத்ஸாதநஸமாப்த்யவர்ஜநீயஶீதோஷ்ணாதிஸஹ: । விமத்ஸர: - அநிஷ்டோபநிபாதஹேதுபூதஸ்வகர்மநிரூபணேந பரேஷு விமத்ஸர: । ஸம: ஸித்தாவஸித்தௌ ச யுத்தாதிகர்மஸு ஜயாதிஸித்த்யஸித்த்யோ: ஸமசித்த:, கர்மைவ குர்வாணோ ஜ்ஞாநநிஷ்டாம் விநாபி ந நிபத்யதே-ந ஸம்ஸாரம் ப்ரதிபத்யதே ॥ ॥௨௨॥

கீழே சொன்னபடி கர்மயோகம் செய்கிறவன் தற்செயலாய்- அதாவது தன் பிரயத்தனம் இல்லாமல், உடம்பை வளர்ப்பதற்கு வேண்டிய வஸ்துக்கள் கிடைத்தால், அவைகளைக்கொண்டு ஸந்தோஷப்படுகிறான் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யும்போது, நடுவில் நேரிடுகிற குளிர் சூடு முதலானவைகளைப் பொறுத்துக் கொள்ளுகிறான் ஒருவனால் தனக்கு ஒரு தொந்திரவு நேரிடும் போது, இது நான் பண்ணின பாபத்தின் பலன் என்று நினைத்து, தொந்திரவு செய்கிறவனிடத்தில் கோபிக்கிறதில்லை. செய்ய வேண்டிய சண்டை முதலான வேலைகளைச் செய்யும்போது, ஜயம் முதலான பலன்கள் கிடைத்தால் ஸந்தோஷமில்லை கிடைக்கா விட்டால் வருத்தமுமில்லை. அவைகளுக்காக அவன் செய்யவில்லையே. மோக்ஷத்திற்காகவன்றோ செய்கிறான். இப்படியிருந்து ஒருவன் கர்மங்களையேசெய்தாலும், ஞானயோகமில்லாமலே ஸம்ஸாரத்தைப் போக்குகிறான் [22]

கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்திதசேதஸ: ।
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே ॥ ॥௨௩॥

ஆத்மவிஷயஜ்ஞாநாவஸ்திதசேதஸ்த்வேந நிர்மமத்வேந ச நிவ்ருத்தேதரஸங்கஸ்ய தத ஏவ நிகிலபந்தமுக்தஸ்ய உக்தலக்ஷண யஜ்ஞாதிகர்மநிர்வ்ருத்த்யர்த்தம் வர்த்தமாநஸ்ய ஸவாஸநம் ப்ராசீநம் கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே-நிஶ்ஶேஷம் க்ஷீயதே ॥ ॥௨௩॥

ஆத்மாவை உள்ளபடி அறிவதிலேயே மனது செல்வதால், வேறுவஸ்துக்களைப்பற்றின ஆசை தன்னடையே போய்விடுகிறது. அதினாலேயே இவனைச்சேர்ந்த எல்லா வஸ்துக்களும் இவனைவிட்டு விடுகின்றன. அதாவது எல்லா வஸ்துக்களுடன் இவன் இருந்தாலும், அவைகளிடத்தில் இவனுக்குப் பிடிமானமில்லை. யக்ஞம் முதலான கர்மங்களைச் செய்வதற்காக அவன் வேலைகளைச் செய்தாலும், அவனுக்குத் தொந்திரவு செய்யக் கூடிய, நெடு நாளாய் வந்த எல்லாக்கர்மங்களும் தானே போய் விடுகின்றன 1 [23]

ஏவம் — ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாநுஸந்தாநயுக்ததயா கர்மணோ ஜ்ஞாநாகாரத்வமுக்தம் | இதாநீம் ஸர்வஸ்ய ஸபரிகரஸ்ய கர்மண: பரப்ரஹ்மபூதபரமபுருஷாத்மகத்வாநுஸந்தாநயுக்ததயா ஜ்ஞாநாகாரத்வமாஹ —

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவிர்ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம் |
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்மஸமாதிநா || ||௨௪||

ப்ரஹ்மார்ப்பணமிதி ஹவிர்விசேஷ்யதே | அர்ப்யதே அநேநேத்யர்ப்பணம் ஸ்ருகாதி, தச்ச ப்ரஹ்மகார்யத்வாத் ப்ரஹ்ம | ப்ரஹ்ம

1 ஆத்மாவைப்பார்க்கவேணுமென்று கர்மயோகம்பண்ணும்போது, மூன்று எண்ணங்கள் இருக்கக்கூடாது. (1) உடம்பே ஆத்மாவென்று எண்ணுவது. (2) உடம்பைச்சேர்ந்தவைகளை தன்னதென்று எண்ணுவது. (3) அவைகளில் ஆசையிருப்பது: முதல் எண்ணத்தினாலே இரண்டாவது எண்ணம் உண்டாகிறது. இரண்டாவது எண்ணத்தினாலே மூன்றாவதான ஆசை உண்டாகிறது. இந்தமூன்றும் ஆத்மாவைப்பார்க்க வேணுமென்று ஆசைப்படுகிறவனுக்கு இருக்கக்கூடாதென்று 2-வது அத்தியாயம்—71—வது சுலோகத்தில் சொல்லப்பட்டது. இங்கே 19-வது சுலோகம்முதல்5 சுலோகங்களில் கர்மயோகம்செய்கிறவனுக்கு இவைகள் இல்லையென்றும், அவன்ஆத்மாவையே பார்த்துக் கொண்டிருக்கிறானென்றும் சொல்லப்படுகிறது. 19-வது சுலோகமும்,23-வது சுலோகமும் கர்மயோகம் செய்தவனுடைய முந்தின கர்மங்களெல்லாம் போய்விடுகின்றன, பாக்கிஒன்றுமில்லை என்றும், 20- வது சுலோகம் அவன் ஒரு கர்மமும் செய்யவில்லை, கர்மம் என்கிற வியாஜத்தை வைத்துக் கொண்டு அவன் நினைவையே பழக்குகிறான் என்றும், 21-22- வது சுலோகங்கள் பந்தம்போவதற்கு ஞானயோகம் வேண்டியதில்லை, கர்ம யோகமே போதுமென்றும் சொல்லுகின்றன.

யஸ்ய ஹவிஷோऽர்பணம் ஸ்ருக் ப்ரஹ்மார்பணம் | ப்ரஹ்ம ஹவி: ப்ரஹ்மார்பணம் ஹவி: ஸ்வயம் ச ப்ரஹ்மபூதம் | ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மபூதேऽக்னௌ ப்ரஹ்மணா கர்த்ரா ஹுதமிதி ஸர்வம் கர்ம ப்ரஹ்மாத்மகதயா ப்ரஹ்மமயமிதி ய: ஸமாதத்தே, ஸ ப்ரஹ்மகர்மஸமாதி:, தேந ப்ரஹ்மகர்மஸமாதிநா ப்ரஹ்மைவ கந்தவ்யம்; ப்ரஹ்மாத்மகதயா ப்ரஹ்மபூதாத்மஸ்வரூபம் கந்தவ்யம் | முமுக்ஷுணா க்ரியமாணம் கர்ம பரப்ரஹ்மாத்மகமேவேத்யநுஸந்தாநயுக்ததயா ஜ்ஞாநாகாரம் ஸாக்ஷாதாத்மாவலோகநஸாதநம், ந ஜ்ஞாநநிஷ்டாவ்யவதாநேநேத்யர்த்த: || ||௨௪||

அவ—உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மாவின் ஸ்வபாவத்தை நினைத்துக் கொண்டு, கர்மங்களைச் செய்யவேண்டுமென்று இது வரையில் சொல்லப்பட்டது, இப்போது எல்லா கருமங்களும், அவைகளைச்சேர்ந்தவைகளும் பகவானுக்கு உருவமாயிருக்கிறது என்கிற நினைவுடன் கர்மங்களைச் செய்யவேணுமென்று சொல்லப்படுகிறது.

எவன் சாஸ்திரத்தில் சொல்லிய ஹோமங்களைச் செய்யும்போது, ஹோமம் செய்யப்பட்ட நெய் முதலான பதார்த்தங்களையும், ஹோமம் செய்வதற்கு உதவியான இலை முதலானதையும், அந்த பதார்த்தங்களை யேற்றுக் கொள்ளுகிற அக்நியையும், ஹோமம் செய்கிற தன்னையும் ப்ரும்மமென்று எண்ணிக்கொண்டு, ஹோமத்தைச் செய்கிறானோ, அவன் பிரும்மமான தன் ஸ்வரூபத்தை அடைகிறான். அதாவது-மோக்ஷத்தை அடையவேணுமென்று ஆசைப்பட்டவன் செய்யும் கர்மமானது பரப்பிரும்மமான பகவானுடைய உருவமென்று 1 எண்ணிச் செய்யப் படுவதால்

1 நம்முடைய உடம்புகளில் ஜீவன்களான நாம் இருப்பதுபோல, பகவான்உலகத்தில் எல்லாவஸ்துக்களிலும் விட்டுப்பிரியாமல் ஆத்மாவாக இருக்கிறான். அவன் ஹோமம்செய்யப்பட்ட நெய்யிலும், ஹோமம் செய்வதற்குஸாதனமான இலையிலும், அக்நியிலும், ஹோமம்செய்கிறவனிடத்திலும் இருக்கிறான். அவைகளெல்லாம் அவனுடைய உடம்புகள். இப்படியே உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களும் பகவானுடைய உடம்புகள். இப்படி

அந்தக்கருமத்தில் அறிவு இருக்கிறது அந்தக கர்மத்தினாலேயே ஞானயோகமில்லாமலேயே நேராக ஆதமாவைப்பார்க்கிறான்.[24]

𑌅𑌵.—𑌏𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌹—

𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌾𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑌾𑌵𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵𑍋𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ॥௨௫॥

𑌦𑍈𑌵𑌂-𑌦𑍇𑌵𑌾𑌰𑍍𑌚𑌨𑌰𑍂𑌪𑌂-𑌯𑌜𑍍𑌞𑌮𑌪𑌰𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇-𑌸𑍇𑌵𑌨𑍍𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵𑍋𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 । 𑌅𑌤𑍍𑌰 𑌯𑌜𑍍𑌞𑌶𑌬𑍍𑌦𑍋 𑌹𑌵𑌿𑌸𑍍𑌸𑍍𑌰𑍁𑌗𑌾𑌦𑌿 𑌯𑌜𑍍𑌞𑌸𑌾𑌧𑌨𑍇 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌵𑌿𑌃' 𑌇𑌤𑌿 𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌯𑌾𑌗𑌹𑍋𑌮𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௨௫॥

அவ— மோக்ஷத்திற்காகச் செய்யும் கர்மங்கள் ஆத்மாவின் அறிவுடன் கூடியிருக்கிறதென்று சொல்லி, கர்ம யோகத்தினுடைய பிரிவுகளைச் சொல்லுகிறார்—

கர்மயோகம் பண்ணுகிறவர்களில் சிலர், பகவானுக்குப்பூஜை செய்கிறது எனகிற யக்ஞத்தைக் கர்மயோகமாகச் செய்கிறார்கள். வேறு சிலர் யாகத்தையும், ஹோமத்தையும் 24-வது சுலோகத்தில் சொன்னபடி செய்கிறார்கள். 1 [25]

யே பகவான எல்லாவஸ்துககளில் இருப்பதாகவும அவைகள அவனுககு உடமபுகள்என்றும, அவைகளுககு அவன் ஆதமாவென்றும வேதமசொலலுகிறது. உடம்பையும ஆத்மாவையும ஒன்றாகசசொலவது லோகததிலும வேததநிலும வழக்கம. ஆகையால் வஸதுக்களே பகவான் என்று சொல்லுகிற இடஙகளுக்கு அந்தவஸ்துககள பகவானுடைய உடம்பென்றே பொருள்கொள்ளவேணும.

1 சாஸ்திரததில் பிராமணன முதலான ஜாதிகளுக்கும, பிருமமசாரி முதலான ஆச்ரமங்களுக்கும தகுநதபடி அநேக காமங்கள் சொல்லப படுகின்றன. அவைகளில் ஒரு காமததைக் கர்மயோகம் செயகிறவன ஆத்மாவைப் பார்ப்பதறகு நேரான ஸாதனமாகச் செய்கிறான். ஆதமாவைப் பார்க்கிறவரையில் அதை ஒரு நாளும் விடாமல் செய்து கொண்டு

ஶ்ரோத்ராதீநீந்த்ரியாண்யந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி |
ஶப்தாதீந்விஷயாநந்ய இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி || ||உசு||

அந்யே ஶ்ரோத்ராதீநாமிந்த்ரியாணாம் ஸம்யமேந ப்ரயதந்தே | அந்யே யோகிந: இந்த்ரியாணாம் ஶப்தாதிவிஷயப்ரவணதாநிவாரணே ப்ரயதந்தே || ||உசு||

வேறு சிலர் காது முதலான இந்திரியங்களை, விஷயங்கள் கிட்ட இருந்தபோதிலும், அவைகளிடத்தில் போகாமல் 1 அடக்குவதாகிய கர்மயோகத்தைச் செய்கிறார்கள். இன்னும் சிலர் சப்தம் முதலான விஷயங்களில் இந்திரியங்கள் போகாமலிருப்பதற்கு, அவைகள் இல்லாத விடத்தில் இருப்பதாகிய கர்மயோகத்தைச் செய்கிறார்கள். [ 26 ]

---

வருகிறான் மற்ற கர்மங்களை அதற்கு அங்கமாகச் செய்கிறான். அதாவது—அந்தக் கர்மத்தினாலே ஆத்மாவைப் பார்ப்பதற்கு அவைகள் உதவி செய்கின்றன. அதாவது அவைகள் பகவானுடைய ப்ரீதிக்கு என்று செய்யப்படுகிறபடியினாலே, பகவான் ஸந்தோஷப்பட்டு ஒவ்வொருநாளும் உடம்பிலுண்டாகும் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களைக் குறைத்து, ஸத்வம் என்கிற குணத்தை அதிகப்படுத்தி, கர்மயோகத்தை வளர்க்கிறான். இவ்விதமாக அந்தக் கர்மங்கள் மோக்ஷத்திற்கு நேரே ஸாதநமான கர்மத்திற்கு உதவி செய்கின்றன. ஆகையாலே அவைகளை அதற்கு அங்கமென்று சொல்லுகிறது. இந்த அர்த்தத்தை இந்த அத்தியாயம் 32-வது ச்லோகத்தில் சொல்லப்போகிறது. ஆத்மாவைப் பார்ப்பதற்கு நேராக ஸாதனமான கர்மங்களின் பிரிவுகள் இது முதல் 31-வது ச்லோகம் வரையில் சொல்லப்படுகின்றன. அவரவர்கள் தங்களுடைய சக்திக்கும் ஆசைக்கும் தகுந்தபடி ஒவ்வொன்றைக் கர்மயோகமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விடத்தில் கர்மயோகத்தின் பிரிவுகளெல்லாம் 'யக்ஞம்' என்றும் ஹோமம் என்றும் சொல்லப்படுகின்றன. யக்ஞம், ஹோமம் என்பது ஒரு தேவதைக்கு ப்ரீதி உண்டாவதற்காக அக்நியில் ஒரு த்ரவியத்தை ஹோமம் செய்வது. ஆகையால் யக்ஞம் ஹோமம் என்று சொல்லும்போது அக்நியையும் சொல்ல வேண்டும் அதனால் ஒவ்வொன்றை ஒவ்வொன்றுக்கு அக்நியாகச் சொல்லுகிறார்.

1 இந்திரியங்களை அடக்குவதென்பது பாபத்தை உண்டாக்கும் விஷயங்களில் இந்திரியங்களை அடியோடு போகாமல் செய்வதும், பாபமில்லாத விஷயங்களில் அதிக ஆவலுடன் செலுத்தாமல் இருப்பதும்,

ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி சாபரே ।
ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே ॥ ॥ 27 ॥

அபரே ஜ்ஞாநதீபிதே மந:ஸம்யமயோகாக்நௌ ஸர்வாணி இந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி ச ஜுஹ்வதி। மநஸ இந்த்ரியப்ராணகர்மப்ரவணதாநிவாரணே ப்ரயதந்தே இத்யர்த்த:॥

இன்னும் சிலர் வலிமையுள்ள மனதை இந்திரியங்களுடையவும், பிராணன்களுடையவும் எல்லா வேலைகளிலும் படியாமல் இருக்கும்படி செய்வதாகிய கர்மயோகத்தைச் செய்கிறார்கள். கர்மங்களைச் செய்யும்போது ஆத்மாவை உள்ளபடி நினைப்பதினாலே மனதிற்கு வலிமை ஏற்படுகிறது. 1 [ 27 ]

த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாऽபரே ।
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச யதய: ஸம்ஶிதவ்ரதா: ॥ ॥ 28 ॥

கேசித் கர்மயோகிநோ த்ரவ்யயஜ்ஞா: ந்யாயதோ த்ரவ்யாணி உபாதாய தேவதாராதநே ப்ரயதந்தே। கேசித் தாநேஷு। கேசித் யாகேஷு। கேசித் ஹோமேஷு। ஸர்வ ஏதே த்ரவ்யயஜ்ஞா:। கேசித் தபோயஜ்ஞா: - க்ருச்ச்ரசாந்த்ராயணோபவாஸாதிஷு நிஷ்டாம் குர்வந்தி। யோகயஜ்ஞாஸ்ததாऽபரே - புண்யதீர்த்தபுண்யஸ்தாநப்ராப்திஷு நிஷ்டாம் குர்வந்தி। இஹ யோகஶப்த: கர்மநிஷ்டாபேதப்ரகரணாத் தத்விஷய:। கேசித் ஸ்வாத்யாயாப்யாஸபரா:। கேசித்

---

1. இந்த இரண்டு சுலோகங்களில் மூன்று கர்மயோகங்கள் சொல்லப் படுகின்றன. முதலில் விஷயங்கள் கிட்ட இருந்தால், அவைகளில் இந்திரியங்கள் போகாமல் தடுப்பது. இரண்டாவதில் விஷயங்கள் கிட்ட இருந்தால், அவைகளில் இந்திரியங்கள் போகுமென்று பயந்து தூரத்தில் போய்விடுகிறது. மூன்றாவதில் இந்திரியங்களுடையவும், பிராணன்களுடையவும் வேலைகளில் மனதைப் போகாமல் தடுப்பது. அவைகளில் இரண்டாவதைக் காட்டிலும் முதல் வேலை கஷ்டம். அதைக் காட்டிலும் மூன்றாவது வேலை இன்னும் கஷ்டம். இந்திரியங்களுடைய வேலை-பார்ப்பது முதலியது. பிராணனுடைய வேலை-மூச்சு விடுவது முதலானது.

ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச | யதய: ஸம்ஶி
தவ்ரதா: [illegible] || ||௨அ||

வேறு சிலர் திரவிய யக்ஞங்களையும், சிலர் தபஸாகிற யக்ஞத்தையும், சிலர் யோகம் என்கிற யக்ஞத்தையும், சிலர் வேதத்தைச் சொல்வதாகிற யக்ஞத்தையும், சிலர் அதின் அர்த்தத்தை அறிவதாகிற யக்ஞத்தையும், கர்மயோகமாகச் செய்கிறார்கள்.

திரவிய யக்ஞமென்பது சாஸ்திரத்தில் சொல்லியபடி பொருள்களை ஸம்பாதித்து, அதைப் 1 பகவானைப் பூஜை செய்வதிலோ, யாகங்களையும், ஹோமங்களையும் செய்வதிலோ, தானம் செய்வதிலோ செலவழிப்பது. தபஸாகிற யக்ஞமென்பது, சாஸ்திரத்திற்கு ஒத்து ஸுகத்தைக் குறைத்துக் கொள்ளுகிறவேலை. அவைகள் 2 கிருச்சிரம், சாந்தராயணம், உபவாஸம் முதலானவை

---

1. பகவானைப் பூஜைசெய்வதையும், யாகத்தையும் ஹோமத்தையும் செய்வதையும், கர்மயோகத்தின் பிரிவுகளாக 25-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது. இங்கே தானமாகிய யக்ஞத்தைச் சொல்லவந்தது. அதைத்தான யக்ஞமென்றுசொல்லாமல், திரவியயக்ஞமென்று சொன்னதின் கருத்து—நியாயமானவழியாய்ப் பொருளைஸம்பாதித்து பகவானுடைய பூஜையையும் யாகங்களையும் ஹோமங்களையும் செய்யவேண்டுமென்றும், இவைகளும் தானயக்ஞமும் - தபோயக்ஞம் முதலானவைகளைக்காட்டிலும் வேறுஎன்றும் காட்டுவதற்காக, திரவிய யக்ஞம் என்கிற பொதுவான சொல்லாலேசொன்னது.

2. கிருச்சிரம் என்பதில் அனேகவிதங்களிருக்கின்றன. அவைகளில் பிராஜாபத்ய- கிருச்சிரம் என்பது பன்னிரண்டு நாளில் முடிக்கப்படுவது. முதல் மூன்று நாள் பகலில் மாத்திரம் சாப்பாடு. அடுத்த மூன்று நாள் ராத்திரியில் மாத்திரம் சாப்பாடு. அடுத்தமூன்றுநாள் யாராவது கொண்டு வந்து கொடுத்ததைச் சாப்பிடுவது. கடைசி மூன்று நாளில் சாப்பாடே யில்லை. சாந்திராயணம் என்பது முப்பது நாளில் முடிக்கக்கூடியது. ஒருவன் ஆஹாரத்தைப் பதினைந்து பாகமாகப் பண்ணிக்கொண்டு, கிருஷ்ணபக்ஷம் பிரதமை முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாகத்தைக் குறைத்துக் கொண்டுவந்து, அமாவாசையன்று கொஞ்சமும் சாப்பாடு இல்லாமலிருந்து, சுக்லபக்ஷம் பிரதமை முதல் ஆஹாரத்தைப்பதினைந்துபாகமாகப் பண்ணிக்கொண்டு,ஒவ்வொரு பங்காக ஏற்றிக்கொண்டு வருகிறது. பூர்ணிமையன்று பூர்ணமான ஆஹாரம்.

கள். யோகமென்பது ஸ்ரீரங்கம் முதலான க்ஷேத்திரங்களுக்கும், கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களுக்கும் போவது. இவர்கள் எல்லாரும் ஆத்மாவைப் பார்ப்பதற்கு முயற்சி செய்கிறவர்கள். அவர்கள் ஒப்புக்கொண்டவிரதத்தை உறுதியாகச்செய்கிறவர்கள்.

𑌅𑌪𑌾𑌨𑍇 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌽𑌪𑌾𑌨𑌂 𑌤𑌥𑌾𑌪𑌰𑍇 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌗𑌤𑍀 𑌰𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 ॥௨௯॥
𑌅𑌪𑌰𑍇 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ।

𑌅𑌪𑌰𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍇𑌷𑍁 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑍇 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌪𑍂𑌰𑌕𑌰𑍇𑌚𑌕𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌭𑍇𑌦𑍇𑌨 । 𑌅𑌪𑌾𑌨𑍇 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌿𑌤𑌿 𑌪𑍂𑌰𑌕𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌽𑌪𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌰𑍇𑌚𑌕𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌗𑌤𑍀 𑌰𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑍀𑌤𑌿 𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑌰𑌾𑌯𑌣𑍇𑌷𑍁 𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌪𑍍𑌯𑌨𑍁𑌷𑌜𑍍𑌯𑌤𑍇 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾 𑌇𑌤𑌿 ॥ ॥௨௯½॥

வேறு சிலர்கள் பிராணாயாமத்தைக் கர்மயோகமாகச் செய்கிறார்கள். அவர்களில் மூன்று வகுப்பு இருக்கின்றன. சிலர் மூச்சை விடுகிறார்கள்—சிலர் மூச்சை எத்துகிறார்கள்—சிலர் இரண்டுமில்லாமல் இருக்கிறார்கள்-இந்த மூன்று பெயர்களும் சாப்பாடு விஷயத்தில் கட்டுப்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். [29½]

𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍋 𑌯𑌜𑍍𑌞𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃 ॥௩௦॥
𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ॥

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌭𑍇𑌦𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌸𑌮𑍀𑌹𑌿𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌏𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 '𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾' 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌹𑌿𑌤𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕 𑌕𑌰𑍍𑌮𑌰𑍂𑌪 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑌃 — 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 । 𑌤𑌤 𑌏𑌵 𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃, 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑍇𑌨 𑌶𑌰𑍀𑌰𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤 𑌏𑌵 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇 𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌾𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௩௦½॥

25-வதுசுலோகம் முதல் இதுவரையில் சொல்லப்பட்ட கர்ம

யோகப்பிரிவுகளில் தங்களுக்குத் 1 தகுந்ததைச் செய்கிறவர்கள் 3-வது அத்தியாயம்-10-வது சுலோகத்தில் எல்லாரும் செய்ய வேணுமென்று சொல்லப்பட்ட மகாயக்ஞம் முதலான நித்யம், நைமித்திகம் என்கிற கர்மங்களை அறிந்து, 2 விடாமல் செய்து கொண்டு, அதனாலே பாபங்களைப்போக்கி, யக்ஞத்தில் 3 மிகுதியான ஆஹாரத்தைச் சாப்பிட்டு, சரீரத்தை வளர்த்துக் கொண்டே கர்மயோகத்தைச் செய்து, அழிவில்லாத ஆத்மாவை உள்ளபடி பார்க்கிறார்கள். [30½]

𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮 ॥

𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌕𑌰𑍍𑌮𑌰𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑌃- 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌲𑍋𑌕𑌃, 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌲𑍋𑌕𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌿 𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌖𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌃 𑌸 𑌨 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿। 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌖𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌃। 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌰 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌃 '𑌅𑌯𑌂 𑌲𑍋𑌕' 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌃 ॥ ॥௩௧॥

மஹாயக்ஞம் முதலான நித்தியகர்மங்களையும் நைமித்திக கர்மங்களையும் 4 செய்யாதவனுக்கு பிருகிருதி மண்டலத்திலுள்ள தர்மம், அர்த்தம், காமம் (அறம், பொருள், இன்பம்) என்கிற பலன்கள் அகப்படாது, இவைகளே அகப்படாவிட்டால்

1. இங்கே சொன்ன கர்மயோகத்தினுடைய பிரிவுகளுக்கு பலனில் வித்யாஸமில்லாமையினாலே ஒருவன் தனக்கு எது இஷ்டமோ அதைச் செய்யலாம் என்று கருத்து.

2. பிராணாயாமத்தைக் கர்மயோகமாகச் செய்கிறவர்களும் யக்ஞங்களைச் செய்ய வேண்டியது என்று இதனால் காட்டப்பட்டது.

3. 3-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தை நினைத்து சொல்லப்பட்டது.

4. நான் கர்மயோகம் செய்கிறேனென்கிற எண்ணத்தினாலே பொதுவான கர்மங்களான நித்ய கர்மங்களையும், நைமித்திக கர்மங்களையும் விட்டவனுக்கு ஒரு பிரயோஜனத்தையும் அடையத் தகுதியில்லை என்று இந்த சுலோகத்தினால் சொல்லப்படுகிறது.

எப்படி அவனுக்கு இவைகளைக் காட்டிலும் வேறான மேலான மோக்ஷமென்பது அகப்படும். [31]

ஏவம் ப³ஹுவிதா⁴ யஜ்ஞா விததா ப்³ரஹ்மணோ முகே² ।
கர்மஜாந் வித்³தி⁴ தாந் ஸர்வாநேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ॥

ஏவம் ஹி ப³ஹுவிதா⁴꞉ கர்மயோகா³꞉ ப்³ரஹ்மணோ முகே² விததா꞉ - ஆத்மயாதா²த்ம்யாவாப்திஸாத⁴நதயா ஸ்தி²தா꞉। தாந் உக்தலக்ஷணாந் கர்மயோகா³ந் ஸர்வாந் கர்மஜாந் வித்³தி⁴ । அஹரஹரநுஷ்டீ²யமாநநித்யநைமித்திககர்மஜாந் வித்³தி⁴ । ஏவம் ஜ்ஞாத்வா யதோ²க்தப்ரகாரேணாநுஷ்டா²ய விமோக்ஷ்யஸே ॥ ॥௩௨॥

கீழச் சொன்ன எல்லா கர்ம யோகங்களின் பிரிவுகளும் ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதற்கு ஸாதனமாய் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும், நித்தியகர்மங்களையும், நைமித்திக காமங்களையும் விடாமல் செய்வதனால், அவைகள் 1 உண்டாகின்றன. நீ இந்த ஸங்கதியைத் தெரிந்து கொண்டு, சொன்னபடி செய்து, ஸம்ஸாரத்தைப் போக்கு [32]

அத²—அந்தர்க³தஜ்ஞாநதயா கர்மணோ ஜ்ஞாநாகாரத்வம் உக்தம், தத்ராந்தர்க³தஜ்ஞாநே கர்மணி ஜ்ஞாநாம்ஶஸ்யைவ ப்ராதா⁴ந்யமாஹ —

ஶ்ரேயாந் த்³ரவ்யமயாத்³யஜ்ஞாஜ்ஜ்ஞாநயஜ்ஞ꞉ பரந்தப ।
ஸர்வம் கர்மாகி²லம் பார்த² ஜ்ஞாநே பரிஸமாப்யதே ॥௩௩॥

உப⁴யாகாரே கர்மணி த்³ரவ்யமயாம்ஶாத் ஜ்ஞாநமயோம்ஶ꞉ ஶ்ரேயாந் । ஸர்வஸ்ய கர்மணஸ்தத³ங்க³பூ⁴தஸ்ய

1. இதனாலே—கீழச்சொன்ன காமயோகத்தின் பிரிவுகள் முக்கியமானது என்றும், நித்தியகாமங்களும், நைமித்திககாமங்களும் அதற்காகச் செய்ய வேண்டியதென்றும்—காட்டப்பட்டது அவைகள் ஒவ்வொருநாளும் உண்டாகும் பாபத்தைப்போக்கி, ஸத்வ குணத்தை வளர்த்து, கர்மயோகம் வளரும்படி செய்கின்றன. அவைகளை ஆத்மாவைப் பார்க்கிறவரையில் செய்ய வேண்டியது.

உபாதே³யஸ்ய ஜ்ஞாநேந பரிகரத்வாத், ததே³வ ஸர்வை: ஸாத⁴நை: ப்ராப்யபூ⁴தம் ஜ்ஞாநம் கர்மாந்தர்க³தத்வேநாப்⁴யஸ்யதே | ததே³வ அப்⁴யஸ்யமாநம் க்ரமேண ப்ராப்யத³ஶாம் ப்ரதிபத்³யதே || ||௩௩||

அவ— கீழே சில நினைவுகளுடன் கர்மங்களைச் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவைகளில் நினைவுதான் முக்கியமென்று சொல்லுகிறார்—

நினைவும், வேலையும் கலந்த கர்மத்தில் திரவியத்தைக் கொடுப்பது முதலான வேலைபாகத்தைக் காட்டிலும், நினைவு பாகம் தான் 1 உயர்ந்தது ஏனென்றால், எல்லாக் கர்மங்களையும் அவைகளினுடைய எல்லா அங்கங்களையும் செய்வது ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதற்காகத்தான். நாளைக்கு வரவேண்டிய ஆத்மாவின் அறிவை வேலை செய்யும் போதெல்லாம் 2 பழக்குகிறோம். இந்தப் பழக்கம் முற்றினால், நாம் அடையவேண்டிய ஆத்மாவின் பார்வை வருகிறது. [ 33 ]

தத்³வித்³தி⁴ ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா |
உபதே³க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத³ர்ஶிந: || ||௩௪||

---

1. நினைவுதான் உயர்ந்தது என்பதற்கு உதாரணம்—ஒரு பணக்காரன் வந்தவர்களுக்கு மரியாதையும் பிரீதியும் இல்லாமல், சுணக்கில்லாத பதார்த்தங்களைச் சமையல் பண்ணி சாப்பாடு போடுகிறான். ஏழையான வேறொருவன் கையில் காசு அதிகமாக இல்லாததினால், ஏதோ அகப்பட்டதைக்கொண்டு 'ஸரியாய் ஒன்றும் செய்வதற்கு இல்லையே' என்று வருத்தப்பட்டு, வந்தவர்களுக்கு பயத்துடனும், பிரீதியுடனும் சாப்பாடு போடுகிறான், ஏழைக்கு ஏராளமான பலன் கிடைக்கிறது. இதில் எத்தனையில் ஒரு பங்கு பணக்காரனுக்கு வரும்? பகவான் 'எனக்குப் பணம் பெரிதல்ல. பிரீதிதான் பெரிது' என்று சொல்லுகிறான்.

2. நமக்கு வேண்டியது ஆத்மாவின் பார்வை. அதற்காக வேலை செய்கிறோம். வேலையை மாத்திரம் செய்யவில்லை, ஆத்மாவை நினைத்துக்கொண்டே அதைச் செய்கிறோம். நமக்கு வேண்டிய பார்வையை இப்படிப் பழக்கிக்கொள்ளுகிறோம். நமக்கு வேண்டியதும் அறிவு. பழக்குகிறதும் அறிவு. ஆகையால் அறிவுதான் முக்கியம்,

ததா³த்மவிஷயம் ஜ்ஞாநம் "அவிநாஶி து தத்³வித்³தி⁴" இத்யார ப்⁴ய "ஏஷா தே(அ)பி⁴ஹிதா" இத்யந்தேந மயோபதி³ஷ்டம் | த து³க்தகர்மணி வர்தமாநஸ்ய விபாகாநந்தரம் காலே கா லே ப்ரணிபாதபரிப்ரஶ்நஸேவாபி⁴ர் விஶதா³காரம் ஜ்ஞாநி ப்⁴யோ வித்³தி⁴ | ஸாக்ஷாத்க்ருதாத்மஸ்வரூபாஸ்து ஜ்ஞாநிந: ப்ர ணிபாதாதி³பி⁴ஸ்ஸேவிதா: ஜ்ஞாநபு³பு⁴த்ஸயா பரித: ப்ருச்ச² தஸ்தவ ஆஶயமாலோக்ய ஜ்ஞாநமுபதே³க்ஷ்யந்தி || ||௩௪||

2-வது அத்தியாயம் 17-வதுசுலோகம் முதல்39-வது சுலோகம்வரையில் ஆத்மாவின்உண்மையைப்பற்றி நான் சொன்னேனே, அதை நினைத்துக்கொண்டே, நான் சொன்னபடி கர்மங்களைச் செய்துகொண்டுவா. அப்படிச்செய்து கொண்டு வரும்போது, உனக்குக்கொஞ்சம் தெளிவும், கொஞ்சம் ஸந்தேஹமும் வரும். ஸந்தேஹப்பட்ட ஸங்கதியை ஆத்மாவை உள்ளபடி அறிந்து பார்த்த பெரியோர்களிடம் கேள். கேட்கும்போது அவர் பெருமையை அறிந்து மனதாலும், வாக்காலும், உடம்பாலும் வணங்கு. ஸந்தேஹப்பட்ட ஸங்கதியை மாத்திரம் குறிப்பிட்டுக் 1 கண்டிப்பாய்க் கேட்காமல், வணக்கத்துடன் கேள். உன்னுடைய வணக்கம் முதலானவைகளால் ஸந்தோஷப்பட்டு, அவர்கள் உண்மை

---

1. உதாரணம்-ஒரு ஸ்திரீ கடுகு கடன் வாங்க பக்கத்து வீட்டிற்குப்போய், அந்த வீட்டுக்காரியின் பெண்ணைப்பற்றி'ரெங்கநாயகி ஸௌக்கியமாயிருக்கிருளா? கடிதாசு வருகிறதா? வெறுமனே தானே இருக்கிருள். ரொம்பநாளாச்சுதே. ஏன் அழைத்துவரவில்லை' என்று சொல்லி, ஸந்தோஷத்தை உண்டுபண்ணி,கடைசியில் ஆத்துக்காரர்கடைக்குப்போயிருக்கிருர். வந்த உடன் கொடுக்கிறேன். கடனுக ஒரு கரண்டி முட்டை கடுகு கொடு' என்று கேட்கிருள். வீட்டுக்காரி இதைக் கடனுகக் கொடுக்க வேண்டுமோ என்று சொல்லி, ஒரு பிடியை அள்ளிப் போடுகிருள். இப்படியே லோகத்தில் யாரும் பிச்சைக்குப் போகும்போது, அவர்களை ஸந்தோஷப்படுத்தி, தங்களுக்கு ஆகவேண்டியதைக் கேட்கிருர்கள். அதுபோல், பெரியோர்களை வணங்கி ஸந்தேஹம் உண்டான இடத்திற்குக் கீழேயே ஒரு வார்த்தையைப்பிரஸ்தாபித்துக் கேட்கவேணும். கச்சேரியில் ஸாக்ஷிக்காரனை வக்கீல் கேட்பதுபோல் கேட்கக்கூடாது.

யான ஸங்கதியை உனக்குச் சொல்லுவார்கள். அப்படி அப்போதப்போது முறைப்படி பெரியோர்களைக் கேட்டுத்தெரிந்துகொள்.

अव — आत्मयाथात्म्यविषयस्य ज्ञानस्य साक्षात्काररूपस्य लक्षणमाह —

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥

यज्ज्ञानं ज्ञात्वा पुनरेवं देवाद्यात्माभिमानरूपं तत्कृतं ममताद्यास्पदं च मोहं न यास्यसि, येन च देवमनुष्याद्याकारेण नानासंस्थितानि सर्वाणि भूतानि स्वात्मन्येव द्रक्ष्यसि । यतस्त्वदन्येषां च भूतानां प्रकृतिवियुक्तानां ज्ञानैकाकारतया साम्यम् । प्रकृतिसंसर्गदोषविनिर्मुक्ततया आत्मस्वरूपं सर्वं समम् इति च वक्ष्यते "निर्दोषं हि समं ब्रह्म, तस्माद् ब्रह्मणि ते स्थिताः" इति । अथो मयि सर्वाणि भूतान्यशेषेण द्रक्ष्यसि—मत्स्वरूपसाम्याच्च परिशुद्धस्य सर्वस्यात्मवस्तुनः । "इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः" इति हि वक्ष्यते । तथा "तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैतीत्यादिषु नामरूपविनिर्मुक्तस्यात्मवस्तुनः परस्वरूपसाम्यमवगम्यते । अतः प्रकृतिविनिर्मुक्तं सर्वमात्मवस्तु परस्परं समं सर्वेश्वरेण च समम् ॥ ॥௩௫॥

அவ— ஆத்மாவை உள்ளபடி பார்க்கும்போது, இன்னமாதிரி இருக்குமென்று சொல்லுகிறார்—

ஆத்மாவை உள்ளபடி நீ பார்த்தால், 'நான் ராஜா, நான் பணக்காரன், அவன் பிச்சைக்காரன், துரியோதனன் முட்டாள், நான் கெட்டிக்காரன், இது என்னுடையது' என்கிற இந்தமாதிரி தப்பெண்ணங்கள் உண்டாகாது. ஆத்மா உடம்பு அன்று என்று தீர்ந்துவிட்டபடியால், எல்லா ஆத்மாக்களும், ஞான ஸ்வரூபமாய்

ஒரே மாதிரியாயிருப்பதால், எல்லா ஆத்மாக்களும் உன்னிடத்தில் இருப்பதாகத்தோன்றும் பிறகு எல்லா ஆத்மாக்களும் என்னிடத்தில் இருப்பதாக உனக்குத் தோன்றும் அதாவது-எல்லா ஆத்மாக்களும் 1 ஞானஸ்வரூபமாகையால், அவர்கள் ஒரே மாதிரி யென்றும்,எல்லாக் கருமங்களும் போனபோது அவர்கள் 2 பரிசுத்தர்களாய் என்னைப்போல் இருப்பார்கள் என்றும் உனக்குத் தோன்றும் ஜீவன்கள் முக்தர்களாகும்போது பகவானைப்போலிருப்பார்கள் என்று 14-வது அத்தியாயம் 2-வது சுலோகத்தில்சொல்லப்படும். முக்தியை அடையும்போது அவர்களுக்கு இப்போது இருக்கிற உருவங்களும், பெயர்களும் போய்விடுமாகையால் எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரியாய் இருப்பார்கள். கர்மங்கள் போய் விட்டபடியால், அவர்கள் பகவானைப்போல ஆய்விடுவார்கள். [35]

---

1. உடம்பு வேறு, ஆத்மா வேறு என்று நாம் அறியாமல், உடம்போடு சேர்ந்திருப்பதால், இவன் தேவன், இவன் மனிதன் என்று நினைக்கிறோம். நாம் கீழ்ச்சொல்லியபடி ஆத்மாவை உள்ளபடி பார்த்தால், நம்மை ஞான ஸ்வரூபமென்று அறிவோம். அப்போது ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, நம்மை அறிந்தபோதே மற்ற ஆத்மாக்களும் இப்படியே ஞானஸ்வரூபமென்று அறிந்து, எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரி என்று அறிந்து கொள்வோம் இப்போது உலகத்தில் படித்தவர்களோ, படிக்காதவர்களோ யாரும் உடம்புவேறு ஆத்மாவேறு என்று சொல்லுகிறார்களே யொழிய பெரும்பாலும் அறியவில்லை என்றே சொல்லலாம் படித்தவர்கள் புஸ்தகங்களுக்கு மனதில் படாமலே விரிவாய அர்த்தம் சொல்லுகிறார்கள் மனதில் படவில்லை என்பதும் தெரியவில்லை. மனதில் பட்டாலும், படவில்லையென்று தெரிந்தாலும் இப்போது வருகிற கோபம் வராது.

2. பகவான் எப்படி அமலமாய (தோஷமில்லாமல்) இருக்கிறானோ, அப்படியே ஜீவன்கள்—முக்தர்களாகிறபோது,அவர்களுடைய எல்லாக் கர்மங்களும் அடியோடு போனபடியால்—தோஷமில்லாதவர்களாக ஆகிறார்கள். இதை அறிந்தவன் தன்னையும் மற்ற ஜீவன்களையும் பகவானைப்போல் தோஷமில்லாமலிருப்பதாகப் பார்க்கிறான் ஜீவன்கள் எல்லாரும் ஒரேமாதிரி என்பதற்கு இரண்டு காரணம்.--(1) உடம்பைக் காட்டிலும் வேறாய் ஞானஸ்வரூபமாய இருப்பது. (2) கர்மங்கள் போனபோது பகவானைப்போல அமலமாயிருப்பது. ஜீவன்கள் எல்லாரும் ஞானஸ்வரூபமாயிருக்கிறார்கள் என்றும், கர்மங்கள் அடியோடு போன

𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥௩௬॥

𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌵𑍃𑌜𑌿𑌨𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌇𑌤 𑌏𑌵 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥ ॥௩௬॥

𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥

𑌸𑌮𑍍𑌯𑌗𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌨𑍍𑌧𑌨𑌸𑌞𑍍𑌚𑌯𑌮𑌿𑌵 𑌆𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑌤𑌮𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌨𑍍𑌤 𑌕𑌰𑍍𑌮𑌸𑌞𑍍𑌚𑌯𑌂 𑌭𑌸𑍍𑌮𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 ॥ ॥௩௭॥

அவ— இந்த வார்த்தையைக் கேட்டவுடன் அர்ஜுநனுக்கு மஹா பாபியான நான் இப்படி ஆத்மாவை எப்போது பார்க்கப் போகிறேன் என்று 1 திகில் உண்டாகிவிட்டது. அதை பகவான் தீர்க்கிறார்.

நீ எல்லா பாபிகளைக்காட்டிலும் மஹாபாபியாயிருந்தாலும், உன்னாலே ஸம்பாதிக்கப்பட்ட அளவில்லாத பாபமாகிற ஸமுத்திரத்தை ஆத்மாவின் உண்மையைப் பார்ப்பதாகிய தெப்பத்தினால் தாண்டிவிடுவாய். வளர்ந்த நெருப்பு அளவில்லாத விறகுகளைசாம்பலாக்குவதுபோல். ஆத்மாவின் உண்மையைப் பார்ப்பது கணக்

---

போது பகவானைப்போல் ஆகிறார்கள் என்றும் இரண்டு ஸங்கதிகள் அறியவேணும். ஜீவன்கள் எல்லாரும் ஞானஸ்வரூபமாயிருப்பதாலே எப்படிஒரேமாதிரியோ, அப்படியே பகவானைப்போலிருப்பதாலும் ஒரேமாதிரி. இரண்டு பழமும் ருசியால் எப்படி ஒரேமாதிரியோ, அப்படியே ஒரேமரத்தில் உண்டானதாலும் ஒரேமாதிரி. அதுபோல.

1. இந்த ஸங்கதியைக் கேட்டவுடன்அர்ஜுநனுக்கு 'நான் பாபி' என்கிற திகில் உண்டானதே.அதுமாதிரி நமக்கு உண்டாகிறதோ?உண்டாகவில்லையே என்றாவது தோன்றுகிறதோ? கீதையை வாசிக்கிறதற்க்காகத்தான் நமக்குத் தெய்வம் தயவுபண்ணவேணும்.

இல்லாத நெடுநாளாய் வந்த எல்லா 1. பாபங்களையும் போக்கி விடும். 2. (36) (37)

ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே ।
தத் ஸ்வயம் யோகஸம்ஸித்த⁴: காலேநாத்மநி விந்த³தி ॥ ||௩௮||

யஸ்மாத் ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் பாபவிநாஶநம் இஹ ஜகதி வஸ்த்வந்தரம் ந வித்யதே । தஸ்மாத் ஜ்ஞாநம் ஸர்வம் பாபம் நாஶயதீத்யர்த²: । தத்-ததாவிதம் ஜ்ஞாநம் யதோபதேஶம் அஹரஹ: அநுஷ்டீயமாந ஜ்ஞாநாகாரகர்மயோகேந ஸம்ஸித்த⁴: காலேந ஸ்வாத்மநி ஸ்வயமேவ லபதே ॥ ||௩௮||

ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதைப்போல் பாபத்தைப் போக்குகிற வஸ்து உலகத்தில் வேறு கிடையாது. ஆகையினால் அது எல்லா பாபங்களையும் போக்கிவிடும். நான் 3. கீழ்ச் சொன்னபடி

---

1. பெருமாளிடத்தில் போவதுதான் நமக்குப் பிரயோஜனம். அதற்குப் புண்ணியமும் இடஞ்சல். பாபமும் இடஞ்சல். புண்ணியம் பண்ணினவன் ஸ்வர்க்கத்திற்குப்போகிறான். பாபம்பண்ணினவன் நரகத்திற்குப் போகிறான். இரண்டுபேர்களாலும் பெருமாளிடத்தில் போகமுடியாது. உதாரணம்— ஒருவன் இரண்டுபேர்களை ஏன் கோவிலுக்குப் போகவில்லையென்று கேட்டான். அவர்களில் ஒருவன் 'நான் மிகவும் ஏழை. வயிற்றுப்பாடு படுவதே எனக்கு வேலையாயிருக்கிறது. கோவிலுக்குப்போகக் காலமில்லை' என்று சொன்னான். மற்றொருவன் 'எனக்கு லக்ஷரூபாய் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது. அதினால் எனக்கு ஒழியவில்லை' என்று சொன்னான். பணமும், பணமில்லாமையும் கோவிலுக்குப்போகிற விஷயத்தில் ஒரேமாதிரி இடஞ்சல்கள். அதுபோல. பெருமாள் தன்னைத்தவிர வேறு பிரயோஜனத்தில் ஆசையுள்ளவனை அழைத்துக்கொள்வதில்லை.

2. முதல் சுலோகத்தில் பாபத்தை ஸமுத்திரமாகவும் ஞானத்தைத் தெப்பமாகவும், 2-வது சுலோகத்தில் பாபத்தை விறகாகவும், ஞானத்தை நெருப்பாகவும் சொல்லியிருக்கிறது. ஸமுத்திரத்தைத் தாண்டினாலும் ஸமுத்திரம் உருப்படியிருக்கிறது. நெருப்பினால் விறகு சாம்பலாய்விட்டால், உருப்படியே இல்லை.

3. அதாவது 'சாஸ்திரத்தினால் அறிந்து, நித்யகர்மங்களுடனும் நைமித்திக கருமங்களுடனும் சேர்ந்து, குறைவில்லாமல், அந்தந்த காலங்களிலே பெரியோர்களைக் கேட்டுத் தெளிந்து' என்று பொருள்.

நினைவுடன் விடாமல் ஒருவன் கர்மயோகத்தைச் செய்துவந்தால், இவ்விதமான ஆத்மாவின் அறிவு[1] தன்னடையேவரும். (38)

𑌅𑌵—𑌤𑌦𑍇𑌵 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑍀𑌕𑌰𑍋𑌤𑌿—

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌲𑌭𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ॥௩௯॥

𑌏𑌵𑌮𑍁𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑍌 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍, 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃-𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑌿𑌯𑌤𑌮𑌨𑌾𑌃 𑌤𑌦𑌿𑌤𑌰𑌵𑌿𑌷𑌯𑌾𑌤𑍍𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 𑌅𑌚𑌿𑌰𑍇𑌣 𑌕𑌾𑌲𑍇𑌨𑍋𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌪𑌾𑌕𑌦𑌶𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌭𑌤𑍇 । 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿-𑌪𑌰𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿॥

அவ— அதையே தெளிவாகச் சொல்லுகிறார்.

பெரியவர்கள் சொன்னதைக் கேட்டு, ஸங்கதிகளை நன்றாய் அறிந்து, அவர்கள் சொன்ன அறிவே தனக்கு வரவேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டு, அதையே எப்போதும் நினைத்து, மற்ற ஸங்கதிகளில் மனதை விடாமல் இருந்தவன் வெகு சீக்கிரத்தில் ஆத்மாவை உள்ளபடி பார்ப்பன். அந்தப் பார்வை வந்தால், எல்லா துக்கங்களும் போய்விடும். உயர்ந்த ஸுகத்தையும் அடைவன். [39]

𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌰𑍋 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

𑌅𑌜𑍍𑌞𑌃-𑌏𑌵𑌮𑍁𑌪𑌦𑍇𑌶𑌲𑌬𑍍𑌧𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑌹𑌿𑌤𑌃 । 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑍇 𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌃-𑌅𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌰𑌃 । 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾-𑌸𑌂𑌶𑌯𑌮𑌨𑌾𑌃 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿-𑌨𑌷𑍍𑌟𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇 𑌆𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌯𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍋 𑌲𑍋𑌕𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿, 𑌨 𑌚 𑌪

1. கர்மயோகத்தை நினைவுடன் செய்கையால், அந்த நினைவு ஒவ்வொருநாளும் வலுப்படுகிறது. ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதற்கு விரோதியான பாபமும் போய் விடுகிறது. இந்த இரண்டு காரணங்களினாலே ஆத்மாவின் பார்வை தானே வருகிறது.

ந: யதோ ஹி காரணபூதா தர்மார்த்தகாமாஶ்ச ந ஸித்த்யந்தி, குதோ மோக்ஷ இத்யர்த்த: । ஶாஸ்த்ரீயகர்மஸித்திரூபத்வாத்தேஷாம் தர்மார்த்தகாமாநாம், ஶாஸ்த்ரீயகர்மஜந்யஸித்தேஶ்ச தேஹாதிரிக்தாத்மநிஶ்சயாயத்தத்வாத் । அதஸ்ஸுகலவோऽபி ஸம்ஶயாத்மநோ ந ஸம்பவதி ॥ ॥௪௦॥

இப்படி பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளாதவனும், அப்படித் தெரிந்து கொண்டாலும், அந்த அறிவை வளர்ப்பதற்கு பரபரப்பில்லாதவனும், அவர் சொன்ன ஸங்கதியில் ஸந்தேஹப் படுகிறவனும், கெட்டுப் போய்விடுவார்கள். பெரியோர்கள் சொன்ன விஷயங்களில் ஸந்தேஹமுள்ளவனுக்கு தர்மம், அர்த்தம், காமம், (அறம், பொருள், இன்பம்) இவைகளே கிடையாது. மோக்ஷ பலன் எப்படி வரும்? ஆத்மாவை நம்பினால் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வேலைகளை ஒருவன் செய்வன். அதைச் செய்தால் தான் எல்லா பலன்களும் கிடைக்கும். ஆத்மாவைப் பற்றி ஸந்தேஹப்பட்டவனுக்கு ஒருவித ஸுகமும் துளிக்கூடக் கிடைக்காது. [ 40 ]

யோகஸந்ந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்நஸம்ஶயம் ।
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய ॥ ॥௪௧॥

யதோக்தயோகேந ஸந்ந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநாகாரதாபந்நகர்மாணம், யதோக்தேந சாத்மஜ்ஞாநேந ஸஞ்சிந்நஸம்ஶயம் ஆத்மவந்தம்-மநஸ்விநம் உபதிஷ்டார்த்தே த்ருடாவஸ்திதமநஸம் பந்தஹேதுபூதாநி ப்ராசீநாநந்தகர்மாணி ந நிபத்நந்தி ॥ ॥ ௪௧ ॥

கீழ்ச் சொன்னபடி நினைவுடன் கர்மங்களைச் செய்பவனையும் ஆத்மாவை உள்ளபடி அறிவதனால், அது விஷயத்தில் ஸந்தேஹமில்லாதவனையும், சொன்ன ஸங்கதிகளில் உறுதியுள்ளவனையும் நெடுநாளாய் வந்த கர்மங்கள் தொந்தரவு பண்ணுது. [ 41 ]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌭𑌾𑌰𑌤 ॥௪௨॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

---

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

---

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌸𑌂𑌶𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾 𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠 । 𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌭𑌾𑌰𑌤𑍇𑌤𑌿 ॥௪௨॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

---

कायशिरोग्रीवं समं-अचलं स्थिरं धारयन्, दिशश्चानवलोकयन्, स्वं नासिकाग्रं संप्रेक्ष्य, प्रशान्तात्मा-अत्यन्तनिर्वृतमनाः, विगतभीः-ब्रह्मचारिव्रतयुक्तो मनः संयम्य मच्चित्तो युक्तः समाहितः मत्पर आसीत-मामेव चिन्तयन्नासीत ॥ ॥१३-१४॥

உடம்பு, தலை, கழுத்து, இவைகளைக் கோணல் இல்லாமலும், அசங்காமலும் இதேமாதிரி நிலையாயிருந்துகொண்டு (சாய்மானம் இருக்கிறபடியால் அசங்காமை நிலையாயிருக்க முடியும்) 2 நாலு பக்கமும் பார்க்காமல் இருப்பதற்காகத் தன் மூக்கின் நுனியைப் பார்த்துக்கொண்டு மிகுந்த ஸந்தோஷமுள்ளவனும் பயமில்லா

---

1 ச்லோகத்தில் 'ஆத்மாவிற்கு சுத்தி உண்டாவதற்காக'' என்கிற பொருளுள்ள சொல் இருக்கிறது. ஆத்மாவிற்கு அசுத்தியானது கர்ம ஸம்பந்தந்தான். இங்கே மனக்கலக்கம் என்கிற அசுத்தி சொல்லவில்லை. ஏனென்றால் மனக்கலக்கம் போனவன்தான் இந்தயோகத்தைச் செய்கிறான்

2. கண்கள் நாலுபக்கமும் போகாமலிருப்பதற்காகத்தான் யோகம் ஆரம்பிக்கிறகாலத்தில் மூக்கின் நுனியைப்பார்ப்பது. கண்ணை மூடிக்கொண்டே வெளியிலிருக்கிற வஸ்துக்களைப்பார்க்காமல் இருக்கலாம். ஆனால் அப்படிச்செய்வதால் தூக்கம் வந்துவிடும் அதற்காக மூக்கின் நுனியைப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியது. தியானம் செய்வதற்கு மூக்கைப்பார்ப்பதும் இடைஞ்சலாகையால், தியானத்திற்கு இடைஞ்சலானியில் கண்களை மூக்கில்வைத்துக்கொள்ளவேண்டுமென்று கருத்து.

மல் 1 ஸ்திரீகளை நினைப்பது, பார்ப்பது, பேசுவது முதலானவை இல்லாமல், மனதை அடக்கி, மிகவும் அழகான என்னுடைய திருமேனியில் அதை நிறுத்தி, ஜாக்கிரதையாய் அதையே நினைத்துக்கொண்டு இருக்கவேண்டும். [13-14]

யுஞ்ஜந்நேவம் ஸதா(ஆ)த்மாநம் யோகீ நியதமாநஸ: ।
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி ॥ ॥௧௫॥

ஏவம் மயி பரஸ்மிந் ப்ரஹ்மணி புருஷோத்தமே மந ஶ்ஶுபாஶ்ரயே ஸதா ஆத்மாநம்-மநோ யுஞ்ஜந் நியதமாநஸ:-மத்ஸ்பர்ஶபவித்ரீக்ருததயா நிஶ்சலமாநஸ: மத்ஸம்ஸ்தாம் நிர்வாணபரமாம் ஶாந்திமதிகச்சதி-நிர்வாணகாஷ்டாரூபாம் மத்ஸம்ஸ்தாம் மயி ஸம்ஸ்திதாம் ஶாந்திமதிகச்சதி ॥ ॥௧௫॥

அவ—ஜீவஸ்வரூபத்தை நினைக்கவேண்டிய காலத்தில் தேவரீரை ஏன் நினைக்கவேண்டும்? என்றால், சொல்லுகிறார்:—

இப்படி மஹாபுருஷனை என்னுடைய அழகாயும் பாபத்தைப் போக்குகிறதுமான திருமேனியை நினைப்பதால் வந்த ஸந்தோஷத்தினால் மனது சுத்தமாகி, ஒரே இடத்தில் நிற்கும்படி சக்தி உண்டாகி, ஜீவனைத்தியானம் செய்து, கடைசியில் என்னைப்போல் பசி தாஹமில்லாதவனாய், எல்லா ஸுகங்களையும் 2 அடைவன்.

---

1. ஸ்தனங்களையுடைய மாம்ச பிண்டத்தை (ஸ்திரீயை) இன்பமாக நினைப்பது, பார்ப்பது, அதுடன்பேசுவது முதலானவைகள் கூடாதென்று கருத்து.

2. இந்த ஆறுசுலோகங்களாலே யோகம் என்கிற தியானம் சொல்லப்பட்டது. தியானம் என்றால் ஒன்றை வேறுஎண்ணம் கலப்பில்லாமல் நினைத்துக் கொண்டிருப்பது. இதுதான் ஸமாதிஎன்பதும். இரண்டிற்கும் வித்யாஸம் என்னவென்றால், ஜீவனுடைய தியானத்தில் வித்தியாஸமில்லை. பகவானுடைய தியானத்தில் உண்டு. அதாவது பகவானுடைய திருமேனியையும்சேர்த்து நினைத்துக்கொண்டிருப்பது தியானம். ஸமாதி யென்பது பகவானுடைய திருமேனியை விட்டு ஸ்வரூபத்தை மாத்திரம் நினைத்துக் கொண்டிருப்பது. தியானம் நிலையாய் நிற்பதற்கு ஆறு அங்கங்கள் வேண்டியது. அவையாவன— யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை. இவை

அத — யோகோத்யோகாரம்பணஸ்ய மநோநைர்மல்ய ஹேத்வாஹாரம் மநஸோ ஹ்யுபவதி ஸாஹாய்யேந ஸ்தித்யர்த்தம் அந்நாதி யோகோபகரணாஹ —

நாத்யஶ்நதஸ்து யோகோऽஸ்தி ந சைகாந்தமநஶ்நத: |
ந சாதிஸ்வப்நஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந ||16||

யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு |
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி து:கஹா ||17||

அத்யஶநாநஶநே யோகவிரோதிநீ, அதிவிஹாராவி

களில யமம்என்பது ஐந்து குணங்கள் அவைகளாவன —1. அஹிம்ஸா —ஒருவனுக்கும் ஒருவிதமான தொந்தரவை உண்டுபண்ணுமை 2. அஸ்தேயம—ஒருவனுடைய சொத்தை அவன் ஸம்மதமில்லாமல் எடுக்காமை. 3. ஸத்தியம—நடந்ததை நடந்தபடியேசொல்வது. 4. பிரம்மசர்யம—ஸதிரீகளை இன்பமாக நினைப்பது பார்ப்பது முதலானவைகளை இல்லாமை. 5. அபரிகரஹம-ஒருவஸதுவிலும தன்னது என்கிற எண்ணமில்லாமை. இந்த அததியாயததில பிருமமசரியம 14-வதுசுலோகததிலும, அபரிக்ரஹம 10-வது சுலோகததிலும சொலலப்பட்டன. இவைகளைச் சொன்னபோதே மற்ற மூன்று குணங்களும் இருக்க வேணுமெனறு விதிதம். நியமம எனபது ஐந்துகுணங்கள். 1. படிததவேததை தினம சொல்லிககொணடிருப்பது. 2 சௌசம அதாவது சுததியாயிருப்பது. 3. ஸந்தோஷம. 4 தபஸ. 5 பகவானிடததில மனதை நிறுததிஅவனை நினைத்துக்கொணடிருப்பது. இந்த ஐந்து குணங்களில் 3 வதும்,5வதும 14 வது சுலோகததில சொலலபபட்டன மற்ற மூனறுகுணங்களும வேண்டுமெனறுவிததம. ஆஸனம் என்கிறஅங்கம விஸ்தாரமாகச சொல்லப்பட்டது. பிராணயாமத்தை இந்தஇடததில சொலலவிலலை. ஆனால் 5-வது அததியாயம 27-வது சுலோகததில சொன்னதை வைததுக்கொள்ளவேணடும. பிரத்தியாஹாரம என்பது சப்தமமுதலானவிஷயங்களில இநதிரியங்களை போகவொட்டாமல் தடுதது மனதிற்கு ஒத்து வேலைசெய்யும்படி செய்வது. இதை 12-வது சுலோகததில் ‘மற்றஇநதிரியங்களை அடக்கி’ என்று சொல்லப்பட்டது தாரணை என்பதுதியானம பண்ணவேண்டிய வஸ்துவில் மனதைநிறுததுவது. இதை 12-வதுசுலோகததிலேயே சொலலியிருக்கிறது. இநத ஆறுஅஙகஙகளும் இருநதால தான் தியானம சரியாய நடக்கும. (விஷ்ணுபுராணம 6-வது அமசம. 7-வது அததியாயம. 36,37,38,43,61,62சுலோகஙகள் )

ஹாரௌ ச | ததா(அ)திஸ்வப்நஜாகரௌ | ததா(அ)த்யா யாஸாநாயாஸௌ | யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தாயாஸஸ்ய யுக்தஸ்வப்நாவபோதஸ்ய ஸகலது:கஹா-பந்தநாஶநோ யோக: ஸம்பந்நோ பவதி || ||௬-௧௭||

அவ—இப்படி யோகத்தை ஆரம்பிக்கும்போது மனதின் தெளிவுக்காக அதைப் பகவானுடைய திருமேனியில் வைத்துத் தியானம் செய்யவேணுமென்று சொல்லி, இப்போது யோகத்திற்கு வேறு ஒரு உதவியைச் சொல்லுகிறார்—

அதிகமாகச் சாப்பிடுகிறதும் அடியோடு சாப்பிடாமல் இருக்கிறதும், அதிகமாய் 1 வேலை செய்கிறதும், கொஞ்சம் கூடவேலை செய்யாமலிருப்பதும், அதிக தூக்கமும், அதிக விழிப்பும், அதிக சிரமும் கொஞ்சங்கூட சிரமமில்லாமலிருப்பதும் யோகத்திற்கு இடைஞ்சல். 2 நிதானமான ஆஹாரம், வேலை, சிரமம், தூக்கம், விழிப்பு இவைகள் உள்ளவனுக்குத்தான். எல்லா துக்கங்களையும் போக்கக்கூடிய யோகமானது ஸரியாய் நடக்கும். [16-17]

யதா விநியதம் சித்தமாத்மந்யேவாவதிஷ்டதே |
நி:ஸ்ப்ருஹ: ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா ||௧௮||

யதா ப்ரயோஜநவிஷயம் சித்தமாத்மந்யேவ விநியதம்-விஶேஷேண நியதம் - நிரதிஶயப்ரயோஜநதயா தத்ரைவ நியதம் நிஶ்சலமவதிஷ்டதே, ததா ஸர்வகாமேப்யோ நி:ஸ்ப்ருஹ: ஸந் யுக்த இத்யுச்யதே-யோகார்ஹ: இத்யுச்யதே ||௧௮||

அவ— இதுவரையில் யோகத்திற்கு வேண்டியவைகள் சொல்லப்பட்டன. இப்போது யோகதசையைச் சொல்லப்போகிறார். அதற்கு முந்தி யோகம் செய்யத் தகுந்த தசையை

1 வேலையென்கிற சொல்லிற்கு சோம்பல் போவதற்காகச் செய்யும் வியாபாரம் என்றுபொருள். சிரமம் என்கிற சொல்லிற்குச் சிரமத்தைக் கொடுக்கும்படியான வியாபாரம் என்றுபொருள்.

2 நிதானம் என்கிறசொல்லினாலே அதிகமும்கூடாது குறைவும் கூடாது என்று காட்டப்படுகிறது. அதிகமும். குறைவும்தோஷங்கள்.

(இருப்பை) கீழே 4-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டதை ஞாபகப்படுத்துகிறார் —

ஆத்மாவைப் பார்ப்பது தவிர, வேறு பிரயோஜனங்களை நினைக்காமல், ஆத்மாவையே மிகவும் உயர்ந்த பிரயோஜனமென்று நினைத்து, எப்போது ஆத்மாவிலேயே மனது அசையாமல் நிற்கிறதோ, அப்போது எல்லா ஆசைகளும் ஒழிந்திருப்பதால், ஆத்மாவைப் பார்ப்பதற்குத் தகுந்தவன் என்று சொல்லப்படுகிறான். [18]

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா |
யோகிநோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந: ||௧௯||

நிவாதஸ்தோ தீபோ யதா நேங்கதே-ந சலதி அசல: ஸப்ரபஸ்திஷ்டதி| யதசித்தஸ்ய-நிவ்ருத்தேதரஸகலசித்தவ்ருத்தே: யோகிந: ஆத்மநி யோகம் யுஞ்ஜத: ஆத்மஸ்வரூபஸ்ய ஸா உபமா| நிவாதஸ்ததயா நிஶ்சலஸ்ய ஸப்ரபதீபவந்நிவ்ருத்தேதரசித்தவ்ருத்திதயா நிஶ்சலோ ஜ்ஞாநப்ரப ஆத்மா திஷ்டதீத்யர்த:|| ||௧௯||

அவ.-யோகதசையை(யோகத்தின் இருப்பை)ச்சொல்லுகிறார்.

காற்று இல்லாத இடத்தில் இருக்கும் விளக்கு எப்படி அசையாமல் 1 வெளிச்சத்துடன் இருக்குமோ, அப்படியே ஆத்மாவைத்தவிர 2 வேறு வஸ்துக்களில் மனதை விடாமல் அடக்கி, யோகம் செய்கிறவனுடைய 3 ஆத்மா இருக்கும் அதா

1. அசையாமல் இருப்பதற்கு மலையை உதாரணமாகச் சொல்லலாம். அப்படிச்சொல்லாமல் விளக்கை உதாரணமாகச் சொன்னதற்குக் கருத்து—அது வெளிச்சத்துடன் இருக்கிறது என்று காட்டுவதற்காக.

2 ச்லோகத்தில் "மனதை அடக்கி" என்கிறசொல்லிற்கு மனதை "ஆத்மாவைத்தவிர வேறுவஸ்துக்களில் போகாமல் அடக்கி, ஆத்மாவில் நிறுத்தி" என்றுபொருள். மனதால் ஒன்றையும் நினைக்கக்கூடாதென்று சொன்னால், 'யோகம் யுஞ்ஜீத' என்கிறசொற்களோடு விரோதிக்கும்.

3 விளக்கைப்போல் ஆத்மா. அதன்வெளிச்சம்போல ஆத்மாவினுடைய ஞானம் என்கிற குணம். காற்றைப்போல் வெளியில் போகும்

வது காற்று இல்லாத இடத்தில் இருப்பதினாலே விளக்கு அசையாமல் வெளிச்சத்தோடு கூடி இருக்கிறது. அப்படியே ஆத்மாவைத்தவிர, வேறு ஒன்றையும் மனதால்நினைக்காதபோது,அவனுடைய ஞானம் என்கிற குணமானது நாலு பக்கமும் போகாமல் ஆத்மாவினிடத்திலேயே நிலையாயிருக்கிறது. அப்போது ஆத்மாவை நன்றாய் பார்க்கிறான். [19]

यत्रोपरमते चित्तं निरुद्धं योगसेवया ।
यत्र चैवात्मनात्मानं पश्यन्नात्मनि तुष्यति ॥ ॥௨௦॥
सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः ॥ ॥௨௧॥
यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥
तं विद्याद्दुःखसंयोगवियोगं योगसंज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्णचेतसा ॥

योगसेवया हेतुना सर्वत्र निरुद्धं चित्तं यत्र योगे उपरमते-अतिशयितसुखमिति रमते, यत्र च योगे आत्मना-मनसा आत्मानं पश्यन् अन्यनिरपेक्षमात्मन्येव तुष्यति। यत्तदतीन्द्रियमात्मबुद्ध्येकग्राह्यमात्यन्तिकं सुखं यत्र च योगे वेत्ति-अनुभवति। यत्र च योगे स्थितः सुखातिरेकेण तत्त्वतस्स्पृहावान्न चलति। यं योगं लब्ध्वा योगाद्विरतस्तमेव काङ्क्षमाणो नापरं लाभं मन्यते। यस्मिंश्च योगे

---

மனது. காற்றடித்தால் விளக்குஅசையும். வெளிச்சம் குறையும். அப்படியே மனது நாலுவஸ்துக்களிலும் போகும்போது ஞானம் என்கிற குணம் மனதுடன்கூடப்போய் ஒன்றிலும் நிறைந்திருக்காது. கர்மம்போகிறவரையில் இந்தகுணம் மனதுவழியாகவே விஷயங்களில் போகும். காற்றின்றால் விளக்குஅசையாமல் வெளிச்சம் நன்றாய்த்தெரியும். அப்படியே மனது ஆத்மாவினிடத்திலேயே இருந்தால், இந்தகுணமும் அதிலேயே நிறைந்து இருக்கும். அப்போது ஆத்மாவை நன்றாயப்பார்க்லாம்.

ஸ்திதோ விசேஷதோ குணவத்புத்ரவியோகாதிநா குரு- ணாபி து:கேந ந விசால்யதே, தம் து:கஸம்யோகவி யோகம்-து:கஸம்யோகப்ரத்யநீகாகாரம் யோகஸம்ஜ்ஞி தம் ஜ்ஞேயம்-வித்யாத்। ஸ ஏவம்பூதோ யோக: ஆரம்பதசா யாம் நிச்சயேந அநிர்விண்ணசேதஸா-ஹ்ருஷ்டசேதஸா யோ கோ யோக்தவ்ய: || ||௨०—௨௩||

அவ—அடுத்த நான்கு சுலோகங்களினுலே ஆத்மாவைப் பார்ப்பதே மிகவும் உயர்ந்த பிரயோஜனமென்று காட்டி, யோக தசையையே விரிவாகச்சொல்லுகிருர்.—

ஆத்மாவைப் பார்ப்பதற்காக, மற்ற விஷயங்களில் போகாத படி அடக்கப்பட்ட மனதானது, யாதொரு யோகஸமயத்தில் ஆத்மாவைப்பார்ப்பது உயர்ந்த ஸுகமென்று ஸந்தோஷப்படுகிற தோ, எந்த யோகத்தில் யோகம் செய்கிறவன் மனதினுல் ஆத்மா வைப் பார்த்துக் கொண்டு வேறு வஸ்துக்களை வேண்டாமல், ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷத்தை அடைகிருனோ, எந்த யோகத்தில் இந்திரியங்களைக்கொண்டு அடைய முடியாத, தன்ன றிவினுலேயே மாத்திரம்அடையக்கூடிய உயர்ந்தஸுகத்தை அநு பவிக்கிருனோ, எந்த யோகத்தில் இருப்பவன் உயர்ந்த ஸுகத்தை அநுபவிப்பதினுலே ஒருக்ஷணங்கூட அதை விடமுடியாமல் இரு க்கிருனோ,எந்தயோகத்தை விட்டபோது-அதாவது அந்த நினைவு கலைந்தபோது-மறுபடியும் அதையே ஆசைப்பட்டுக்கொண்டு, வே று பிரயோஜனத்தை நினைக்கமாட்டானே, எந்த யோகம்செய்கிற போதும் செய்யாதபோதும் மிகவும் குணமுள்ள பிள்ளை இறந்து போனது முதலான பெரிய துக்கத்தினுலும் யோகத்திற்கு விரோ தமானவருத்தத்தை அடைகிறதில்லையோ—அதைத்துக்கத்திற்குச் சத்துருவென்றும், யோகமென்று பெயர் உள்ளது என்றும் நினை. யோகமானது இவ்வளவு மிகவும் உயர்ந்ததென்று ஆரம்பத்திலே யே தீர்மானித்து மிகுந்த ஸந்தோஷத்துடன் அதைச் செய்யவே ண்டியது. 1 [20-23]

---

1. இந்த நாலுசுலோகங்களில் சொல்லிய ஸங்கதிகள்—1. மனது வேறு விஷயங்களில் போகாமல் ஆத்மாவினிடத்திலேயே நின்றுவிடுகி றது. 2. அதற்கு வேறொன்றும் பிடிக்கவில்லை. 3. ஆத்மஸ்வரூபத்தை

ஸங்கல்பப்ரபவாந் காமாம்ஸ்த்யக்த்வா ஸர்வாநஶேஷத: ।
மநஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத: ॥ ॥௨௪॥
ஶநை: ஶநைருபரமேத் புத்த்யா த்ருதிக்ருஹீதயா ।
ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் ॥ ॥௨௫॥

ஸ்பர்ஶஜா: ஸங்கல்பஜாஶ்சேதி த்விவிதா: காமா: । ஸ்பர்ஶஜா: ஶீதோஷ்ணாதய:, ஸங்கல்பஜா: புத்ரக்ஷேத்ராதய: । தத்ர ஸங்கல்பப்ரபவா: ஸ்வரூபேணைவ த்யக்தும் ஶக்யா: । தாந் ஸர்வாந் மநஸைவ ததநந்வயாநுஸந்தாநேந த்யக்த்வா ஸ்பர்ஶஜேஷு அவர்ஜநீயேஷு தந்நிமித்தௌ ஹர்ஷோத்வேகௌ த்யக்த்வா ஸமந்தத: ஸர்வஸ்மாத்விஷயாத் ஸர்வமிந்த்ரியக்ராமம் விநியம்ய, ஶநை: ஶநைர்த்ருதிக்ருஹீதயா விவேகவிஷயயா புத்த்யா ஸர்வஸ்மாதநாத்மந: உபரம்ய ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் ॥ ॥௨௪-௨௫॥

அவ—எந்த வஸ்துவிலும் என்னுடையது என்கிற எண்ணம் இல்லாமை முதலான அங்கங்கள் தனித்தனியாகச் சொல்லப்பட்டன. அவைகளை வருத்தமில்லாமல் தெரிந்துகொள்ளுவதற்காகவும், யோகத்தை ஸுகமாய் செய்யலாமென்று காட்டுவதற்காகவும் அவைகளைச்சேர்த்து இங்கே நினைப்பு மூட்டுகிறார்.—

உலகத்தில் ஸுகங்களும், துக்கங்களும் இரண்டு விதமாய் வருகின்றன—(1)1. நினைவினால்,(2) கண் முதலான இந்திரியங்க

---

யே மிகவும் உயர்ந்தஸுகமாக அநுபவிக்கிறது. 4. அதைநிறுத்த முடிகிறதில்லை, 5. வேறு ஸுகங்களினாலாவது, பெரிய துக்கத்தினாலாவது மனது அதிலிருந்து சலிக்கிறதில்லை.

1. நினைவினால் வருகிறவைகள்—இவன் என்பிள்ளை, இது என்நிலம், இது என் பணம் என்று நினைப்பதினாலே உண்டாகிற ஸுகங்களும், அவைகள் போவதினால் உண்டாகும் துக்கங்களும். இவைகளை என்னுடையவைகள் அன்று என்று எண்ணினால், அடியோடுவிட்டுவிடலாம். இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும் சேர்க்கையினால் உண்டாகும் ஸுகங்களுக்கும், துக்கங்களுக்கும் உதாரணம்—கடுமையானவெய்யிலில் மிகவும்குளிர்ந்த ஜலத்தை மேலே விட்டுக்கொண்டால் உண்டாகும்

ளுக்கும் விஷயங்களுக்கும் சேர்க்கையினால். முதல் விதமான எல்லா ஸுகங்களையும் துக்கங்களையும்—அவைகள் நம்முடையதன்று என்று அடிக்கடி நினைத்து—விடவேண்டியது. இந்த நினைவினால் அதை ஸுகமாய் விடலாம். இரண்டாவது விதமான ஸுகங்களும் துக்கங்களும் நினைவினால் விலக்க முடியாமையால், அவைகளைப் பொறுத்துக்கொண்டு ஸந்தோஷத்தையும் வருத்தத்தையும் அடையாமலிருக்கவேண்டியது. எல்லா இந்திரியங்களையும், எல்லா விஷயங்களிலிருந்து 1 இழுத்து 2 நல்ல யோசனையினாலும் 3 உறுதியினாலும், அவைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் 4 ஒழித்து, மனதை ஆத்மாவினிடத்தில் 5 வை

---

ஸுகம். அதேகாலத்தில் கொதிக்கிற ஜலத்தை விட்டுக் கொண்டால் உண்டாகும துக்கம். இவைகளை விடமுடியாது. ஆனால் இவைகளை அனுபவித்தே தீரவேண்டும் என்று நினைத்துப்பொறுத்தால், அவைகளில் ஸந்தோஷமும், வருத்தமும் உண்டாகாது. உலகத்தில் சொல்லம்பு, வில்லம்பு என்று இரண்டுண்டு. அதில் வில்லம்பைப்பொறுக்கலாம் சொல்லம்பைப் பொறுக்கமுடியாது. வில்லம்பினால் வந்த புண் ஆறிவிடும். சொல்லம்பினால் வந்த மனதின் துக்கம் ஆறாது என்று சொல்வதுவழக்கம். ஆத்மஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவனுக்குச் சொல்லம்பு லக்ஷியமில்லை. எவ்வளவு விவேகியாயிருந்தாலும், உடம்பில் முள்ளுக் குத்தினால் வலிக்கும். அதைக்கஷ்டப்பட்டுப் பொறுத்துக் கொள் என்று சொல்லுகிறார்.

1. இப்படி இந்திரியங்களை விஷயங்களிலிருந்து இழுப்பதற்கு பிரத்யாஹாரம் என்றுபெயர்.

2. யோசனை என்றால் உடம்புவேறு, ஆத்மாவேறு, ஆத்மாவைப்பார்ப்பதுதான் மிகவும் உயர்ந்த பிரயோஜனம் என்கிற நினைவு.

3. உறுதிஎன்பது ஆரம்பித்த நல்லபழக்கத்தை எவ்விதத் தடங்கல் வந்தாலும் விடாமல் செய்யவேணுமென்கிற நினைவு. இது அறிவினால் வரவேண்டியது.

4. ஒழித்து என்கிற சொல்லாலே பிரத்யாஹாரம் என்பது தியானத்திற்கு அங்கமென்று காட்டப்பட்டது. ஸ்நானம் செய்து சாப்பிடு என்றால், ஸ்நானமானது சாப்பாட்டிற்கு அங்கம். அதுபோல்.

5. இதற்குத் தாரணை என்றுபெயர்.

த்து அதைத்தவிர 1 வேறொன்றையும் நினைக்கக்கூடாது. [25]

யதோ யதோ நிஶ்சரதி மநஶ்சஞ்சலமஸ்திரம் ।
ததஸ்ததோ நியம்யைததாத்மந்யேவ வஶம் நயேத் ॥௨௬॥

ஸ்வபாவதயா சஞ்சலம் அஸ்திரம் மந: யதோ யதோ விஷயப்ராவண்யஹேதோர்பஹிர்நிஶ்சரதி । ததஸ்ததோ யத்நேந மநோ நியம்ய ஆத்மந்யேவாதிஶயஸுகபாவநயா வஶம் நயேத் ॥ ॥௨௬॥

நல்லதோ பொல்லாததோ பழகினதோ பழகாததோ மனதானது ஒருவிஷயத்திலும் நிலையாய் நிற்கிறதில்லை. அதுவே அதற்கு வழக்கம். ஆத்மாவை நினைத்துக் கொஞ்சங்கூட பழக்கமில்லை. ஆகையால ஆத்மாவில் மனது நிலையாய் நிற்காமல, விஷயங்களில் ஆசையினால எதிலே போகிறதோ, அதிலிருந்து, ஆத்மாதான் உயர்ந்த ஸுகம் என்று நினைத்து, மிகவும் சிரமப்பட்டு, அதைத்திருப்பி, ஆத்மாவில் வைக்கவேண்டியது. இப்படி எண்ணினால் மனதை ஸுகமாக அடக்கலாம். [26]

ப்ரஶாந்தமநஸம் ஹ்யேநம் யோகிநம் ஸுகமுத்தமம் ।
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூதமகல்மஷம் ॥ ॥௨௭॥

ப்ரஶாந்தமநஸம் - ஆத்மநி நிஶ்சலமநஸம் - ஆத்மந்யஸ்தமநஸம் தத ஏவ தக்தாஶேஷகல்மஷம் தத ஏவ ஶாந்தரஜஸம் - விநஷ்டரஜோகுணம் தத ஏவ ப்ரஹ்மபூதம் - ஸ்வஸ்வரூபேணாவஸ்திதமேநம் யோகிநம் ஆத்மாநுபவரூபம் உத்தமம் ஸுகமுபைதி । ஹீதி ஹேதௌ । உத்தமஸுகரூபத்வாதாத்மஸ்வரூபஸ்யேத்யுக்த: ॥ ॥௨௭॥

மனதை வெளியில் விடாமல் ஆத்மாவிலேயே இருக்கும்

---

1. வேண்டியதோ வேண்டாததோ, இரண்டுமில்லாததோ ஒன்றையும் நினைக்கக்கூடாது. ஆத்மாவைமாத்திரம் நினைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

படி செய்வதால் எல்லா 1 பாபங்களும் போகின்றன. பாபம் போனால் ரஜோகுணம் போய்விடுகிறது. அப்போது யோகம் செய்கிறவன் 2 சுத்தமான தன் ஸ்வரூபத்தைப் பார்க்கிறான். அப்போது ஆத்மாவை அனுபவிப்பதான உயர்ந்த 3 ஸுகம் தன்னடையே வரும். ஆத்மாவென்பது உயர்ந்த ஸுக ஸ்வரூபமாயிருப்பதால். [27]

𑌯𑍁𑌞𑍍𑌜𑌨𑍍𑌨𑍇𑌵𑌂 𑌸𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌵𑌿𑌗𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 ।
𑌸𑍁𑌖𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥ ௨௮ ॥

𑌏𑌵𑌂-𑌉𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑍁𑌞𑍍𑌜𑌨𑍍 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌵𑌿𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌰𑍂𑌪𑌂 𑌸𑍁𑌖𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑌦𑌾 𑌸𑍁𑌖𑍇𑌨 𑌅𑌨𑌾𑌯𑌾𑌸𑍇𑌨 𑌅𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥ ௨௮ ॥

கீழ்ச் சொன்னபடி யோகத்தைச் செய்கிறவன் அதினாலே யே நெடு நாளாய் வந்த எல்லாப் பாபங்களையும் போக்கி, ஆத்மாவைப்பார்ப்பதாகிய அளவில்லாத ஸுகத்தைப் பிரயாஸமில்லாமல் எப்போதும் அனுபவிக்கிறான். 4 [28]

---

1. பஞ்சகவ்யம் சாப்பிட்டவனுக்குப் பாபங்கள் போகுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படியே தன் ஆத்மாவைப்பற்றி யோகம் செய்கிறவனுக்கு அந்தயோகத்தினாலேயே பாபங்கள் போய்விடுமென்று சாஸ்திரம சொல்லுகிறது.பகவான்இப்படிஏற்படுத்தியிருக்கிறான்.

2. சுலோகத்தில் 'பிரும்மபூதம்' என்ற சொல் இருக்கிறது. அதற்கு 'மிகவும் பெரியதாய் ஆகிறான் என்று பொருள். முன்னாலே உடம்பே ஆத்மாவென்று ஒருதப்பெண்ணம் உண்டாகி, ஜீவன் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த இருப்பைக் காட்டிலும் இப்போது ஆத்மாவை உள்ளபடி அறிந்து ஸுகப்படுவதினாலே இப்போதிருப்பை முன்னிருப்பைக்காட்டிலும் பெரிதென்று சொல்லலாம்.

3. சுலோகத்தில் உயர்ந்தஸுகம் வரும்என்று சொல்லியிருக்கிறது. இந்தஸுகம் ஆத்மாவைப் பார்க்கிறஸுகம்தான். விஷயங்களினால் உண்டாகும் ஸுகம் அற்பமாயும் துக்கத்தோடு கலந்து இருப்பதாலும் தாழ்ந்தது. ஆத்மாவைப்பார்ப்பதினால் உண்டாகும் ஸுகம் அளவில்லாமலும் துக்கத்தின் கலப்பில்லாமலும் இருப்பதால் உயர்ந்த ஸுகம்.

4. இந்த சுலோகத்தோடு யோகப்பிரகாரத்தை முடிக்கிறார். "கீழ்ச் சொன்னபடி" என்றது இந்தஅத்தியாயம் 10-வது சுலோகம் முதல்ஆரம்

அவ.— அத² யோக³விபாகத³ஶா சதுஷ்ப்ரகாரா உச்யதே-

ஸர்வபூ⁴தஸ்த²மாத்மாநம் ஸர்வபூ⁴தாநி சாத்மநி ।
ஈக்ஷதே யோக³யுக்தாத்மா ஸர்வத்ர ஸமத³ர்ஶந: ॥ ௨௯ ॥

ஸ்வாத்மந: பரேஷாம் ச பூ⁴தாநாம் ப்ரக்ருதிவியுக்தஸ்வரூபாணாம் ஜ்ஞாநைகாகாரதயா ஸாம்யாத்-வைஷம்யஸ்ய ச ப்ரக்ருதிக³தத்வாத், யோக³யுக்தாத்மா ப்ரக்ருதிவியுக்தேஷ்வாத்மஸு ஸர்வத்ர ஜ்ஞாநைகாகாரதயா ஸமத³ர்ஶந: - ஸர்வபூ⁴தஸ்த²ம் ஸ்வாத்மாநம் ஸர்வபூ⁴தாநி ச ஸ்வாத்மநி ஈக்ஷதே। ஸர்வபூ⁴தஸமாநாகாரம் ஸ்வாத்மாநம்-ஸ்வாத்மஸமாநாகாராணி ச ஸர்வபூ⁴தாநி பஶ்யதீத்யர்த²:। ஏகஸ்மிந்நாத்மநி த்³ருஷ்டே ஸர்வஸ்யாத்மவஸ்துந: தத்ஸாம்யாத்-ஸர்வமாத்மவஸ்து த்³ருஷ்டம் ப⁴வதீத்யர்த²:-"ஸர்வத்ர ஸமத³ர்ஶந:" இதி வசநாத் "யோ(அ)யம் யோக³ஸ்த்வயா ப்ரோக்தஸ்ஸாம்யேந" இத்யநந்தரபா⁴ஷணாச்ச, "நிர்தோ³ஷம் ஹி ஸமம் ப்³ரஹ்ம" இதி வசநாச்ச ॥ ॥௨௯॥

அவ.—மேல் நாலு ச்லோகங்களாலே ஆத்மாவைப் பார்க்கிறவனுக்கு வரும் நாலு படிகளை அடிப்படி முதல் சொல்லுகிறார்.

1 உடம்பைக் காட்டிலும் வேறான தானும் மற்ற ஆத்மாக்களும் ஞானஸ்வரூபம் என்று ஒரே மாதிரி. தேவன், மனிதன் முதலானவேற்றுமை உடம்புகளில்தான் இருக்கிறது த்யானம் செய்து

---

பித்து, இதுவரையில் சொல்லப்பட்டபடி என்று அர்த்தம். இந்த ச்லோகத்தில் நான்கு ஸங்கதிகள் சொல்லப்படுகின்றன—(1) யோகத்தின் மஹிமையினாலே ஆத்மாவின் பார்வை என்கிற உயர்ந்த ஸுகமுண்டாகிறதென்றும் (2) ஆத்மாவைப்பார்த்தபிறகு அந்த ஸுகத்திற்கு அளவில்லை யென்றும், (3) அதற்கு அழிவில்லை யென்றும், (4) அது கஷ்டப்படாமல் வரும் என்றும்.

1. ச்லோகத்தில் 'எல்லா ஆத்மாக்களையும் ஒரேமாதிரியாகப் பார்க்கிறான்' என்று சொன்னது கூடுமென்று காட்டுவதற்காக, ஆத்மாக்கள் இயற்கையாகவே ஒரேமாதிரி என்றும், வேற்றுமை உடம்புகளில்தானிருக்கிறது என்றும் வியாக்கியானத்தில் சொல்லப்பட்டது.

தன்னை உள்ளபடி பார்த்தவன், தானும் எல்லா ஆத்மாக்களும் ஞானஸ்வரூபம் என்று ஒரே மாதிரி என்று பார்க்கிறான். 1எல்லா ஆத்மாக்களில் தான் இருப்பதாகவும் தன்னிடத்தில் எல்லா ஆத்மாக்களும் இருக்கிறதாகவும் பார்க்கிறான், அதாவது எல்லா ஆத்மாக்களை தன்னைப் போலவும், தன்னை எல்லா ஆத்மாக்களைப் போலவும் பார்க்கிறான். அதாவது உடம்பை விட்டுப்பிரிந்த எல்லா ஆத்மாக்களுக்கும் ஞான ஸ்வரூபம் என்பது ஒன்று தான் இருக்கிறது. வேறு பேதம் கிடையாது. ஆகையினால் அவைகள் எல்லோரும் 2. ஒரே மாதிரி என்று பார்க்கிறான். ஆத்மா என்கிற வஸ்துக்களுக்குக் கணக்கில்லை. அவைகளில் ஒன்றாகிய தன்னை உள்ளபடி பார்த்தால்,மற்றவை எல்லாம் அதே மாதிரியாகையால், எல்லா ஆத்மாக்களையும் பார்த்ததாக ஆகிறது.

இந்த சுலோகத்திற்கு எல்லா ஆத்மாக்களும் ஒன்று தான் என்று பொருளல்ல. இங்கே ஆத்மாக்கள் எல்லாம் ஒரே மாதிரி என்றுதான் சொல்லப் படுகிறது. சுலோகத்திலேயே "எல்லாரையும் ஒரே மாதிரியாகப்பார்க்கிறான்" என்று சொல்லியிருப்பதினாலேயும், இந்த அத்தியாயம் 33-வது சுலோகத்தில் "எல்லாரையும் ஸமமாகப் பார்க்கவேணுமென்று சொன்னீரே" என்று அர்ஜுநன் சொல்வதினாலேயும், 5-வது அத்தியாயம் 19-வது சுலோகத்தில் "கர்மம் போய் ஸமமாயிருக்கும் ஆத்மாக்களை பிரும்மம்" என்று சொல்வதினாலேயும் இப்படித்தான் பொருள் கொள்ளவேண்டியது. [29]

---

1. யோகத்தில் ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்ப்பதினாலே எல்லாரையும் ஒரேமாதிரிஎன்று பார்க்கிறான் என்று சொல்லியிருக்கிறது. யாரை யாருக்கு ஸமானமாகப் பார்க்கிறானென்று காட்டுவதற்காக,தான் எல்லாரிடத்தில் இருப்பதாகவும், எல்லாரும் தன்னிடத்தில் இருப்பதாகவும் இந்த சுலோகம் சொல்லுகிறது.

2. யோகம் செய்கிறவன் தன் ஆத்மாவை மாத்திரந்தான் பார்க்கிறான். அவன் தன்னையும், மற்றவர்களையும் ஒரேமாதிரி என்று எப்படிப் பார்க்கக்கூடும்? அதற்கு பதில் சொல்லப்படுகிறது—ஒரே ஜாதி வஸ்துக்களில் ஒரு வஸ்துவைப் பார்ப்பதினாலேயே-ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்கிற பழமொழிப்படி—அந்த ஜாதியில் சேர்ந்த எல்லா வஸ்துக்களும் பார்க்கப்படுகின்றன.

யோ மாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பஶ்யதி |
தஸ்யாஹம் ந ப்ரணஶ்யாமி ஸ ச மே ந ப்ரணஶ்யதி ||30||

ததோ விபாகதஶாபந்நோ மத்ஸாதர்ம்யமுபாகத:, "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" இத்யுச்யமாநம் ஸர்வஸ்யாத்மவஸ்துநோ விதூதபுண்யபாபஸ்ய ஸ்வரூபேணாவஸ்திதஸ்ய மத்ஸாம்யம் பஶ்யந், ய: ஸர்வத்ராத்மவஸ்துநி மாம் பஶ்யதி, ஸர்வமாத்மவஸ்து ச மயி பஶ்யதி-அந்யோந்யஸாம்யாதந்யதரதர்ஶநேந அந்யதரமபீத்ருஶமிதி பஶ்யதி | தஸ்ய ஸ்வாத்மஸ்வரூபம் பஶ்யத: அஹம் தத்ஸாம்யாந்ந ப்ரணஶ்யாமி-நாதர்ஶநமுபயாமி | மமாபி மாம் பஶ்யதோ மத்ஸாம்யாத், ஸ்வாத்மாநம் மத்ஸமத்வேநாவலோகயத: ஸ நாதர்ஶநமுபயாதி ||

அவ.—இதற்கு அடுத்த மேல்படியைச் சொல்லுகிறார்.—

முதல் படியிலிருக்கிறவனைக் காட்டிலும் 1 அதிகப்பழக்கமுள்ளவன் புண்ணியங்களும் பாபங்களும் நீங்கி, ஸ்வரூபத்தோடு இருக்கிற எல்லா ஜீவன்களையும் 2என்(பகவான்) மாதிரிஇருப்ப

1 யோகம் செய்கிறவன் தானும் மற்ற ஆத்மாக்களும் ஞான ஸ்வரூபமென்றும், எல்லாரும் ஒரே மாதிரி என்றும், வெவ்வேறு உடம்புகளில் இருப்பதுதான் ஒருவருக்கொருவர் பேதம் என்றும் தெரிந்த பிறகு, உடம்புகளின் சேர்க்கை ஞான ஸ்வரூபமாயிருக்கிற ஆத்மாவிற்கு எப்படி வந்ததென்று விசாரிக்கிறான். அது அவரவர்கள் கர்மத்தினாலே வந்ததென்றும், புண்ணியமும் பாபமுமாகிய கர்மம் போனால், எல்லாரும் பகவானைப்போல் ஆய் விடுவார்களென்றும் சாஸ்திரத்தினாலே தெரிந்து கொண்டு அதை நினைக்கிறான். அப்போது தன்னைப் பார்க்கும் போது, என்னுடைய கர்மம் போனால் பகவான் மாதிரி ஆய் விடுவேனென்று நினைப்பதினாலே, பகவானுடைய நினைவு வருகிறது.

2 உதாரணமாகச் சொல்லப்பட்டது. எப்படி நான் என்னைப் பார்க்கும்போது அவனையும் என் மாதிரி என்று பார்க்கிறேனோ, அப்படியே அவனும் தன்னை பார்க்கும்போது தன் மாதிரி நான் இருக்கிறேனென்று என்னையும் நினைக்கிறான். பகவான் எல்லாரையும் பார்க்கிறேனென்று சொன்னதனால், பகவானும் ஆத்மாக்களும் ஒரே மாதிரி

தாகப் பார்த்துக் கொண்டு எல்லா ஆத்மாக்களிலும் என்னையும், என்னிடத்தில் எல்லா ஆத்மாக்களையும் பார்க்கிறான். நானும் அவர்களும் ஒரே மாதிரியாய் இருப்பதால், ஒருவரைப் பார்க்கும் போது மற்றவர்களும் இப்படித்தான் இருக்கிறார்கள் என்று பார்க்கிறான். இப்படித் தன்னுடைய ஸ்வரூபத்தைப் பார்க்கிறவனுக்கு நான் மறைகிறதில்லை. தன் மாதிரியாயிருப்பதினாலே என்னை எப்போதும் அவன் பார்க்கிறான். என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிற எனக்கும் என் மாதிரி இருப்பதினாலே அவன் மறைகிறதில்லை. அதாவது அவனை எப்போதும் நான் பார்க்கிறேன். [30]

அவ—ததோऽபி விபாகதஶாமாஹ—

ஸர்வபூதஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வமாஸ்தித: ।
ஸர்வதா வர்தமாநோऽபி ஸ யோகீ மயி வர்ததே ॥ ௩௧ ॥

யோகதஶாயாம் ஸர்வபூதஸ்திதம் மமாஸங்குசிதஜ்ஞாநைகாகாரதயா ஏகத்வமாஸ்தித:—ப்ராக்ருதபேதபரித்யாகேந ஸாம்யம் யோ பஜதே, ஸ யோகீ வ்யுத்தாநகாலேऽபி யதா ததா வர்தமாந: ஸ்வாத்மாநம் ஸர்வபூதாநி ச பஶ்யந் மயி வர்ததே—மாமேவ பஶ்யதி—ஸ்வாத்மநி ஸர்வபூதேஷு ச ஸர்வதா மத்ஸாம்யமேவ பஶ்யதீத்யர்த:॥ ॥௩௧॥

அவ—இதற்கும் மேற்பட்ட படியைச் சொல்லுகிறார்.—

ஆத்மாவிற்கு அடியோடே கர்மம் போன பிறகு, அவனுடைய ஞானம் என்கிற குணமானது ஒருவிதச் சுருக்கமுமில்லாமல் விரிவை அடைகிறது. பகவானுடைய அறிவு போலவே ஆகிறது. பேதமில்லை. இப்படி யோகம் பண்ணுகிற காலத்தில் அந்த குணத்தில் உண்டாகும் தாரதம்மியமில்லாமல், அந்த

---

என்கிற ஸங்கதியானது எல்லாம் தெரிந்த பகவானுக்குத் தோன்றுவதால், உண்மையானது என்று காட்டப்பட்டது. எல்லா ஜீவன்களும் ஒரேமாதிரி என்றும், கர்மம்போன ஜீவன்கள் பகவான்மாதிரி என்றும், 4-வது அத்தியாயத்தில் 35-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது, அது இங்கே விரிவாய்ச் சொல்லப் படுகிறது.

ஆத்மாவைப் பகவான் மாதிரி இருப்பதாக 1 நன்ருய்ப் பார்க்கிறவன், யோகம் நின்று உலகத்தில் வேலைகளைச் செய்யும்போதும், தன்னையும் எல்லா ஆத்மாக்களையும் பார்க்கும்போது அவர்களை பகவானைப்போலவே இருப்பதாகப் பார்க்கிருன். [31]

அவ — 𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌮𑌾𑌹 —

𑌆𑌤𑍍𑌮𑍌𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌸𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃 ॥

𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌚 𑌪𑌰𑍇𑌷𑌾𑌂 𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑌸𑌙𑍍𑌕𑍁𑌚𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌾𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌔𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌚 𑌪𑌰𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌦𑍁𑌃𑌖𑌮𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌸𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌮𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 - 𑌪𑌰𑌪𑍁𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌸𑌮𑌂 𑌸𑍍𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌕𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃-𑌯𑍋𑌗𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌂 𑌗𑌤𑍋 𑌮𑌤𑌃 ॥ ॥௩௨॥

அவ.—எல்லாவற்றிற்கும் மேற்பட்ட படியைச் சொல்லுகிருர்.—

யோகம் செய்கிறவன் தானும் மற்ற ஆத்மாக்களும் ஞான ஸ்வரூபமாயிருப்பதிஞலே ஒரே மாதிரி என்கிற நினைவை நன்ருகப்பழக்கம் செய்வதிஞலே, தன்னிடத்திலும், மற்ற ஆத்மாக்களிடத்திலும் இருக்கும்—பிள்ளை பிறப்பது முதலான ஸுகத்தையும், பிள்ளை சாவது முதலான துக்கத்தையும்— தங்கள் ஒருவருக்கும் அவைகளில் ஸம்பந்த மில்லையென்று— ஸமமாகப் பார்க்கிருன். அதாவது தனக்கு வருகிற பிள்ளை பிறந்த ஸுகத்திலும், பிள்ளை இறக்கும் துக்கத்திலும்—மற்றவர்களுக்கு ஸம்பந்

---

1. நன்ருய்ப் பார்ப்பதிஞலே பழக்கம் முற்றி, ஆத்மாக்களும் பகவானும் ஒரே மாதிரி என்கிற நினைவானது ஒன்றன் பின் ஒன்ருக ஆறுபோல் பெருகிக் கொண்டு வருகிறதாகையிஞலே, யோகம் நின்று வேறு வேலை செய்யும் போதும் இந்த நினைவு தொடர்ந்து வருகிறது.

தமில்லாதது போல — தனக்கும் ஸம்பந்த மில்லாமலிருக்கிறான்1. இப்படிப் பட்டவன் யோகத்தினுடைய உயர்ந்த படியை அடைந்தவன்.2 [32]

அர்ஜுந உவாச—

யோऽயம் யோக³ஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேந மது⁴ஸூத³ந ।
ஏதஸ்யாஹம் ந பஶ்யாமி சஞ்சலத்வாத் ஸ்தி²திம் ஸ்தி²ராம் ॥௩௩॥
சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி² ப³லவத்³த்³ருட⁴ம் ।
தஸ்யாஹம் நிக்³ரஹம் மந்யே வாயோரிவ ஸுது³ஷ்கரம் ॥௩௪॥

யோऽயம் தே³வமநுஷ்யாதி³பே⁴தே³ந ஜீவேஶ்வரபே⁴தே³ந சாத்மஸு பி⁴ந்நேஷ்வேதாவந்தம் காலமநவஸ்தி²தேஷு ஸர்வேஷ்வாத்மஸு ஜ்ஞாநைகாகாரதயா ஸர்வஸாம்யேநாகல்ப்ய வஶ்யதயா சேதஸாம்யேந ஸமத்வ ஸம்ப³ந்தே⁴ந யோ யோக³ஸ்த்வயா ப்ரோக்த:। ஏதஸ்ய யோக³ஸ்ய ஸ்தி²ராம் ஸ்தி²திம் ந பஶ்யாமி, மநஸஶ்சஞ்சலத்வாத் । ததா²ஹி அநவரதாப்⁴யஸ்தவிஷயேஷ்வபி ஸ்வதந்த்ர சஞ்சலம் புருஷேணைகத்ராவஸ்தா²பயிதுமஶக்யம் மந: புருஷம் ப³லாத் ப்ரமத்²ய த்³ருட⁴மந்யத்ர சரதி । தஸ்ய ஸ்வாப்⁴யஸ்தவிஷயேஷ்வபி சஞ்சலஸ்வபா⁴வஸ்ய மநஸஸ்தத்³விபரீதாகாராத்மநி ஸ்தா²பயிதும் நிக்³ரஹம் ப்ரதிகூலமுக²தோ³ஹாவாதஸ்ய வ்யஜநாதி³நேவ ஸுது³ஷ்கரம் மந்யே । மநோநிக்³ரஹோபாயோ வக்தவ்ய இத்யபி⁴ப்ராய: ॥ ||௩௩-௩௪||

---

1. இரண்டாவது படியில் கர்மம் இல்லாமையினாலும், கர்மத்தினால் வரும் அறிவின் வித்தியாஸமில்லாமையினாலும், ஜீவன் பகவான் போலிருக்கிறானென்று யோகி நினைக்கிறான். இப்படியே யோகம் நின்றபோதும் நினைக்கிறான். அது மூன்றாவது படி. நாலாவது படியில் கர்மங்களுடையவும், அறிவுகளுடையவும் வித்தியாஸத்தால் வரும் ஸுகத்திலும் துக்கத்திலும் வித்தியாஸமில்லாமையை நினைக்கிறான்.

2. இது ஜீவாத்ம யோகத்தினுடைய உயர்ந்தபடி. பகவானுடைய யோகத்தைப்பற்றி மேலே சொல்லப்போகிறார்.

அர்ஜுனன் சொல்லுகிறான்—

1 தேவன் முதலான பிரிவுகளாலும், ஜீவன், பகவான் என்கிற பிரிவினாலும், எல்லா ஆத்மாக்களையும் பகவானையும் ஒருவருக்கொருவர் வேறென்று நாளது வரையில் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆகையால் ஞானஸ்வரூபமாயிருப்பதினாலே எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரி என்றும், அடியோடு கர்மம் போன பிறகு எல்லா ஆத்மாக்களும் பகவான் மாதிரி என்றும் எண்ணுவது மிகவும் கஷ்டம். அப்படி ஏதோ கொஞ்சம் நினைவு வந்தாலும், அது 1 நிலையாய் நிற்காது என்று தோன்றுகிறது. ஏனென்றால், மனது ஒரே விஷயத்தில் நிற்கிறதில்லை. நெடு நாளாய் மிகவும் பிரீதியோடு பழகின பிள்ளை, பெண்டாட்டி முதலானவைகளையும் ஒரு நாழிகை விடாமல் நினைப்போமென்றால், மனது நிற்காது. நிறுத்தினாலும் அந்த மனது ஒருவனை பலாத்காரமாய் கலக்கி, இன்னொரு இடத்திற்கு இழுத்துக்கொண்டே போய் விடும். இப்படி இருக்கும் மனதை இதுவரையில் ஒருக்காலும் நினைக்காத கீழ்ச்சொன்ன ஸங்கதியில் நிலையாக நிறுத்துவது என்பது கடுங்காற்றை விசிறியால் தடுப்பதுபோல் முடியாதென்று நினைக்கிறேன். ஆகையினாலே, மனதை அடக்குவதற்கு வழி சொல்லவேணும்.

ஸ்ரீ ப⁴க³வாநுவாச—

அஸம்ஶயம் மஹாபா³ஹோ மநோ து³ர்நிக்³ரஹம் சலம் ।
அப்⁴யாஸேந து கௌந்தேய வைராக்³யேண ச க்³ருஹ்யதே ॥

---

1. நான் அநாதி காலமாய் "அவன் வேறு, இவன் வேறு, நான் வேறு" என்று எண்ணிக்கொண்டு வருகிறேன். என்ன யோஜித்துப்பார்த்தாலும், நான் அழகாயிருக்கிறேன், நான் பணக்காரன், யுத்தத்தில் நான் கெட்டிக்காரன், இவன் அழகில்லாதவன், இவன் பிச்சைக்காரன், இவன் வில்லை தொடத்தகாதவன், இது முதலான எண்ணங்கள் எனக்குப் போகவில்லை. என் மனது அடங்கவில்லை. இப்படி நினைப்பது என்றாலே எப்படி முடியும். எல்லாம் தெரிந்த நீர் தான் இதை நினைக்கவும் சொல்லவும் கூடும்—என்று அர்ஜுனன் கருத்து. இந்த அத்தியாயம் 5-வது 6-வது சுலோகங்களில் யோகத்திற்கு ஸாதநம் சொல்லப்பட்டது. அதையே தெளிவாய்த்தெரிந்து கொள்ளுவதற்காக அர்ஜுனன் கேட்கிறான்.

𑌅𑌸𑌂𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ।
𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑍁 𑌯𑌤𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑍋𑌽𑌵𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑍁𑌪𑌾𑌯𑌤𑌃 ॥௩௬॥

𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌚𑌞𑍍𑌚𑌲𑌤𑌯𑌾 𑌮𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 । 𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌜𑌨𑌿𑌤𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌦𑍋𑌷𑌾𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌜𑌨𑌿𑌤𑌵𑍈𑌤𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑍇𑌨 𑌚 𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍍𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌸𑌂𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾-𑌅𑌜𑌿𑌤𑌮𑌨𑌸𑌾 𑌮𑌹𑌤𑌾𑌪𑌿 𑌬𑌲𑍇𑌨 𑌯𑍋𑌗𑍋 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪 𑌏𑌵 । 𑌉𑌪𑌾𑌯𑌤𑌸𑍍𑌤𑍁 𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 - 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌮𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌰𑍂𑌪𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌰𑍍𑌭𑍇𑌣 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌜𑌿𑌤𑌮𑌨𑌸𑌾, 𑌯𑌤𑌮𑌾𑌨𑍇𑌨 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑍋 𑌯𑍋𑌗𑍋𑌽𑌵𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌃 ॥ ॥௩௫—௩௬॥

பகவான் சொல்லுகிருர்—

மனதுக்கு ஒரு இடத்தில் நிலையாய் நிற்காமல் இருப்பதே ஸ்வபாவமாகையால், அதை அடக்க முடியாது என்கிற விஷயத்தில் ஸந்தேஹமில்லை. அப்படியிருந்தாலும், ஆத்மா உயர்ந்த [1] குணமுள்ளது என்று எப்போதும் நினைத்தால், அதை உள்ளபடி பார்க்கவேணு மென்று ஆசையுண்டாகும். மற்ற விஷயங்களில் உள்ள தோஷங்களைப் பல தடவை நினைத்தால், அவைகளில் வெறுப்புண்டாகும். இந்த ஆசையினுலும், வெறுப்பினுலும் மனதைக் கஷ்டப் பட்டு அடக்கலாம். மனதை அடக்காமல் [2] எவ்வளவு பிரயாஸப பட்டாலும், கீழ்ச்சொன்ன பார்வையை அடைய முடியாது. கீழ் அத்தியாயங்களில் சொன்ன [3]. கர்மயோகத்தினுலே மனதை அடக்கி யோகத்தைப் பழக்குகிறவன் அதையே ஸுலபமாக அடையலாம். [35-36]

---

1. ஆதமாவின் குணங்களாவன—அது அழிவில்லாதது, ஞான ஸ்வரூபம், மிகவும் இன்பமானது, இயற்கையில் கர்மத்திற்கு உட்பட்டதன்று, இயற்கையில் தோஷமில்லாதது—இவை முதலானவைகள்.

2. 'மஹாபாஹோ' (பெரிய கைகளை யுடையவனே) என்று சுலோகத்தில் சொன்னதின கருத்து.—உபாயத்தாலே எது செய்ய முடியுமோ, அதை வலிமையால் செய்ய முடியா தென்று.

3. கர்மயோகமதான மனதை அடக்குவதறகு வழி. முன் சொன்ன ஆசையும வெறுப்பும கர்ம யோகததுக்கு உதவிகள்.

அவ — அத "நேஹாபிக்ரமநாஶோ'ஸ்தி" இத்யாதிநோபஶ்ருதம் யோகமாஹாத்ம்யம் யதாவஜ்ஜ்ஞாதுமர்ஜுந: ப்ருச்சதி । அங்கபூதாத்மஜ்ஞாநதயா யோகஶிரஸ்தயா ச ஹி கர்மயோகஸ்ய மாஹாத்ம்யம் தத்ரோதிதம் | தச்ச யோகமாஹாத்ம்யமேவ—

அர்ஜுந உவாச —

அயதி: ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலிதமாநஸ: ।
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி ||௩௭||
கச்சிந்நோபயவிப்ரஷ்டஶ்சிந்நாப்ரமிவ நஶ்யதி ।
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண: பதி ||௩௮||
ஏதந்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத: ।
த்வதந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே ||௩௯||

ஶ்ரத்தயா யோகே ப்ரவ்ருத்தோ [illegible] யத்நவைகல்யேந யோகஸம்ஸித்திமப்ராப்ய யோகாச்சலிதமாநஸ: காம் கதிம் கச்சதி | உபயவிப்ரஷ்டோ'யம் சிந்நாப்ரமிவ கச்சிந்ந நஶ்யதி | யதா மேகஶகல: பூர்வஸ்மாதப்ராத் விச்சிந்ந: பரம் சாப்ரஶகலமப்ராப்ய மத்யே விநஷ்டோ பவதி, ததைவ கச்சிந்ந நஶ்யதி । கதமுபயவிப்ரஷ்டதா? அப்ரதிஷ்டோ விமூடோ ப்ரஹ்மண: பதீதி | யதாவஸ்திதம் ஸ்வர்காதிஸாதநபூதம் கர்ம பலாபிஸந்திரஹிதஸ்யாஸ்ய புருஷஸ்ய ஸ்வபலஸாதநத்வேந ப்ரதிஷ்டா ந பவதீத்யப்ரதிஷ்ட:, ப்ரக்ராந்தே ப்ரஹ்மண: பதி விமூட: தஸ்மாத் பத: ப்ரச்யுத:। அத உபயவிப்ரஷ்டதயா கிமயம் நஶ்யத்யேவ, உத ந நஶ்யதி। தமேநம் ஸம்ஶயமஶேஷதச்சேத்துமர்ஹஸி। ந ஹ்யத: ப்ரத்யக்ஷேண யுகபத்ஸர்வம் ஸதா பஶ்யதஸ்த்வத்தோ'ந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே ||

அவ.—இரண்டாவது அத்யாயம் 40-வது ச்லோகத்தில் 1. யோகத்தின் பெருமை சொல்லப்பட்டது. அதை உள்ளபடி 'அறிந்துக் கொள்வதற்காக அர்ஜுநன்' கேட்கிறான்.—

1. முன்னே காம யோகத்தின் பெருமையன்றோ சொல்லப்பட்

ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதற்காக யோக(த்யான)த்தை ஆரம்பித்து, வலுவான பழக்கமாகிய ப்ரயத்னக் குறைவினாலே யோகத்தி னுடைய பலனை அடைவதற்கு முன்னாலே அதினின்று மனது 2 சலித்த வனுக்கு 3 கதி என்ன? பெரியமேகத்திலிருந்து பிரிந்த துண்டு மேகம் போல் இரண்டு மில்லாமல் அவன் கெட்டுப்போகிறானா? அதாவது பெரிய மேகத்தை விட்டு துண்டு மேகம் தனியாய் வந்தால், அது முன்னே இருந்த மேகத்துடனும், பின்னே வரும் மேகத்துடனும் சேராமல் நடுவில் உறுப்படி யில்லாமல் போய் விடுகிறது. அது போல 4 கர்மங்களைச் செய்யும் போது ஸ்வர்க்கம் முதலான பலன்களை வேண்டாமென்று விட்டு விட்டான். ஆத்மாவைப் பார்ப்பதற்கோ சரியானபடி யோகத்தைச் செய்ய வில்லை. ஸ்வர்க்கத்திற்கு ஸ்வர்க்கமும் போய் விட்டது. ஆத்மாவின் பார்வையும் வரவில்லை. ஆகையினால் இவன் வீணாய்ப் போய்விடுவனா? அல்லது ஸௌக்கியத்தை அடைவனா? எல்லா ஸங்கதிகளையும் ப்ரத்யக்ஷமாய் ஒரே காலத்தில் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிற உம்மைத் தவிர இந்த ஸந்தேஹத்தைப்போக்குகிறவர்கள் இல்லை. ஆகையால் இந்த ஸந்தேஹத்தைத் தீர்த்துத் தெளிய வைக்கவேணும். [37-38-39]

---

டது. இப்போது கர்ம யோகத்தின் பலனாகிய ஆத்மாவின் பார்வையின் பெருமை சொல்லப்படுகிறது. இதை முன்னாலே சொல்லப் பட்டதாக எப்படி சொல்லலா மென்றால், பதில்—ஆத்மாவைப் பற்றின அறிவு சேர்த்திருப்பதும், த்யாநத்தின் வழியாய் ஆத்மாவின் பார்வையைக் கொடுப்பதும்—என்கிற இந்த இரண்டும்தான் கர்மயோகத்திற்குப் பெருமையாகச் சொல்லப்பட்டது. அது யோகத்தின் பெருமைதான். யோகமாவது ஆத்மாவின் த்யாநம்.

2. யோகததை எல்லா அங்கங்களுடனே செய்ய முடியாதவன்.

3. ஆசைப்பட்ட விஷயங்களின் அநுபவமா? அல்லது மோக்ஷமா? அல்லது நரகமா? இவைகளில் எது ? இந்த ஸங்கதியைத்தான் 38—வது சுலோகத்தில் விரிவாய்ச் சொல்லுகிறார்.

4. கர்ம ஸ்வரூபத்தைச் செய்வதில் ஒரு குறைவுமில்லை. ஆனால் பலன் வேண்டாமென்று விட்டு விட்டபடியால் ஸ்வர்க்கம் முதலான பலன்கள் வராது என்று கருத்து.

ஸ்ரீபகவாநுவாச—

பார்த்த நைவேஹ நாமுத்ர விநாஶஸ்தஸ்ய வித்யதே ।
ந ஹி கல்யாணக்ருத்கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி ॥ ॥௪௦॥

ஶ்ரத்தயா யோகே ப்ரவ்ருத்தஸ்ய தஸ்மாச் ச்யுதஸ்ய உபயத்ர விநாஶோ ந வித்யதே; ப்ராக்ருதஸ்வர்காதி போகாநுபவே ச ஆத்மாநுபவே ச யதாவஸ்திதாநவாப்திரூப: ப்ரத்யவாயாவாப்திரூபஶ்ச விநாஶோ ந வித்யத இத்யர்த்த: । ந ஹி நிரதிஶயகல்யாணரூபயோகக்ருத் கஶ்சித் காலத்ரயேऽபி துர்கதிம் கச்சதி ॥ ॥௪௦॥

அவ: – பகவான் சொல்லுகிறார்—

ஆவலுடனே யோகத்தை ஆரம்பித்து, அதைப்பூர்ணமாகச் செய்ய முடியாதவனுக்கு ஸ்வர்க்கம் முதலான ஸுகங்களின் அனுபவத்திலும், ஆத்மாவைப் பார்ப்பதிலும் கிடையாதது ஒன்றுமில்லை. ஒரு வித கெடுதியும் கிடையாது. கெடுதி என்றால் ஆசைப்பட்ட பலனை அடையாமையும் தொந்தரவைக் கொடுக்கும் தோஷத்தை அடைவதும். மிகுந்த நல்ல காரியமானயோகத்தைச் செய்கிற எவனுக்கும் 1. ஒருக்காலும் கெடுதி கிடையாது. [ 40 ]

கிம்—கதம் பவிஷ்யதீத்யத்ராஹ—

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாநுஷித்வா ஶாஶ்வதீ: ஸமா: ।
ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே ॥

யஜ்ஜாதீயபோகாபிகாங்க்ஷயா யோகாத் ப்ரச்யுதோऽயம் ஸ புண்யக்ருதாம் ப்ராப்யாந் லோகாந் ப்ராப்ய தஜ்ஜாதீயாந் அதிகல்யாணாந் போகாந் யோகமாஹாத்ம்யாதேவ ஸுஞ்ஜாநோ

1. இவ்வளவு நல்ல வேலையை ஆரம்பித்தவன் மூன்று காலத்திலும் நல்லவன். அவனுக்குக் கெடுதல் கிடையாது. ஏனென்றால், வெகு காலமாய் கணக்கில்லாத புண்ணியத்தைப் பண்ணித்தான் இந்த யோகத்தை ஆரம்பிக்கக்கூடும். இப்போது மிகுந்த நல்ல வேலையான யோகத்தைச் செய்கிறான். பின்னும் புண்ணிய லோகத்தை யடைவது, யோகத்தை முடிப்பது, மோக்ஷத்தை அடைவது முதலானவைகள் வாய்க்கின்றன

யாவத்தத்போகத்ருஷ்ணாவஸாநம் ஶாஶ்வதீஸ்ஸமாஸ்தத்ரோஷித்வா தத்போகவித்ருஷ்ண: ஶுசீநாம் ஶ்ரீமதாம்-யோகோபக்ரமயோக்யாநாம் குலே யோகோபக்ரமப்ரஷ்டோ யோகமாஹாத்ம்யாஜ்ஜாயதே ॥ ॥௪௧॥

எந்த விதமான ஸுகத்தில் ஆசையினால யோகத்தை ஸரியாகச் செய்து முடிக்க வில்லையோ அதேமாதிரியான 1 மிகவும் உயர்ந்த ஸுகத்தை இவன் கொஞ்சம் பண்ணின யோகத்திற்காக பகவான் ஸந்தோஷப் பட்டுக் கொடுக்கிறான் அவன் மிகுந்தபுண்ணியம் பண்ணினவர்கள அடையும லோகங்களை அடைந்து,வெகு காலமிருந்து, 2 அதை அனுபவிக்கிறான் அந்த ஸுகத்தை அனுபவித்து,ஆசை 3 அடங்கின பிறகு,யோகத்தை ஆரம்பிக்கத் தகுந்த சுத்தியையும (அநுஷ்டானத்தையும்)ஸம்பத்தையும்(நல்ல அறிவையும்) உடையவர்களுடைய வயிற்றில பிறக்கிறான். இது யோகத்தைக் கொஞ்சம செய்து அதில மனது சலித்தவனுக்கு வருகிற பலன் இது யோகத்தின மஹிமையால் வருகிறது. [41]

அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம் ।
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம யதீத்ருஶம் ॥ ॥௪௨॥

பரிபக்வயோகப்ரச்யுதஶ்ச யோகிநாம் தீமதாம்-யோகம் குர்வதாம் குல ஏவ யோகோபதேஶக்ஷமாணாம் கு

---

1 ஆசைப்பட்ட ஸுகத்தினுடைய ஜாதியாயிருந்தாலும, அந்த ஜாதியில மிகவும உயர்ந்தது. உலகத்திலும் ஒரே ஜாதியான ரஸங்களிலும, வாஸனைகளிலும் சில உயர்ந்தவை, சில தாழ்ந்தவைகளாயிருக்கின்றன.

2 தாமத்திற்காக ஸம்பாதித்த பொருளை தன் ஸுகத்திற்காக செலவழிப்பதுபோல்.

3 ஒருவன ஸ்வர்க்கத்திற்காக புண்ணியமசெய்து ஸ்வர்க்கத்தை அநுபவித்து, அந்த புண்ணியம் செலவழிந்து திரும்பி வருவதுபோல், இவன்யோகத்தின் பெருமை போயத் திரும்பி வரவில்லை அந்தப் பெருமையானது செலவழிந்து போகக் கூடியதல்ல ஸுகத்தை இடைவிடாமல் அனுபவிப்பதினாலே, அதில அலுப்பு வருவதாலும், பிராரப்த கர்மத்தில இருக்கும் புண்ணியத்தினாலே ஸத்வகுணம் மேலிட்டு விவேகமுண்டாவதினாலே ஆசை அடங்குகிறது.

லே பவதி | ததேததுபயவிதம் - யோகஜ்ஞாநாம் யோகி
நாம் ச குலே ஜந்ம லோகே ப்ரக்யாதாநாம் துர்லபதரம்|
ஸர்வத்ர யோகமாஹாத்ம்யக்ருதம் || ||௪௨||

1. யோகத்தை வெகுதூரம் பழக்கி, அது பூர்த்தியை அடைவதற்கு முன்னமே அதிலிருந்து மனது சலித்தவன் யோகத்தைத் தான் பண்ணிக்கொண்டும், பிறருக்கு அதைச் சொல்லிக் கொடுக்க தகுந்தவர்களுமாய் இருக்கிறவர்களுக்கு 2 பிள்ளையாகப் பிறக்கிறான். யோகத்தை ஒருவரிடத்திலிருந்து தெரிந்துகொண்டு ஆரம்பிக்கக்கூடியவர்கள் வயிற்றில் பிறப்பும், யோகத்தைச் செய்கிறவர்கள் வயிற்றில் பிறப்பும்—இந்த இரண்டும் விஷயங்களையே பார்த்துக்கொண்டு மோக்ஷத்தில் ஆசையில்லாமல் இருப்பவர்களுக்கு வருவது மிகவும் அரிது. யோகத்தின் பெருமையாலேதான் வரவேண்டியது. 3 [42]

தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம்|
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந ||௪௩||
பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஶோऽபி ஸ:

தத்ர ஜந்மநி ததேவ பௌர்வதேஹிகம் யோகவிஷயம் புத்திஸம்யோகம் லபதே| தத: ஸுப்தப்ரபுத்தவத் ஸம்

---

1. இந்த ஸங்கதி சுலோகத்தில் சொல்லப்படாமல் போனபோதிலும், முன் சுலோகத்தில் சொன்ன பிறப்பைக் காட்டிலும் உயர்ந்த பிறப்பை இதில் சொல்வதினாலே, அதற்குக் காரணமும் உயர்ந்ததாயிருக்க வேணுமென்று கருத்து.

2. சுலோகத்தில் "யோகிகளுடைய குலத்தில்" என்று சொல்லியிருக்கிறது. அதற்கு யோகம் செய்கிற ஒருவனுடைய பிள்ளை, பேரன் முதலானவர்கள் வயிற்றில் பிறப்பு என்று பொருளல்ல. ஏனென்றால் அதினாலே யோகத்திற்கு அதிக உதவியில்லை. ஆகையினாலே தான் யோகம் செய்து கொண்டும், அதைச் சொல்லிக் கொடுக்க தகுந்தவனுமாய் இருக்கிறவனுக்கு பிள்ளையாய்ப் பிறக்கிறானென்றுதான் பொருள்.

3. முன் சுலோகத்தில் பிறரிடத்தில் போய் யோக விஷயமான உபதேசத்தைப் பெறுவதற்குத் தகுந்தவர்களைச் சொல்லிற்று. இந்த சுலோகத்தில்தாமே உபதேசம்பண்ணத்தகுந்தவர்களைச்சொல்லுகிறது.

ஸம்ஸித்³தௌ⁴ யததே யதா² ஸுப்தப்ரபு³த்³த⁴: ததநந்தரம் கார்யம் ஸமாபயதி தத்³வத்
தே । தேந பூர்வாப்⁴யாஸேந பூர்வயோகவிஷ
யேணாப்⁴யாஸேந ஸ யோகஜிஜ்ஞாஸு: ஹ்யவஶோ'பி யோக
மேவ ஹ்ரியதே । ப்ரவிஷ்டம் ஶப்³த³ப்³ரஹ்மாதிவர்த்ததே॥

அவ—கீழ்ச்சொன்ன பிறப்பினால் மோக்ஷத்திற்கு என்ன உதவி? முன்னே செய்த யோகம் போய்விட்டதே என்றால், சொல்லுகிறார்—

இப்படிப் பிறந்து முன் பண்ணின யோகவிஷயமான நினைவு வந்து, அந்தயோகத்தை ஆரம்பித்து, அதைக் கெடுதியில்லாமல் முடிப்பதற்குத்தகுந்தபடி பிரயத்தனம் பண்ணுகிறான். 1உதாரணம்:—ஒருவன் மிகுந்த ஆசையுடன் ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது, தூக்கம்வந்து அது நின்றுபோய்விட்டாலும், தூக்கத்திலிருந்து எழுந்திருந்தவுடன் ஆசையுடன் அதை

---

1. ஒருவனுக்கு முன் ஜன்மத்திலே உண்டான எல்லா ஸம்ஸ்காரங்களும் மறு ஜன்மத்திலே மறைந்து போவதாலே, முன் ஜன்மத்தில் பண்ணின யோகத்தின் நினைவு இந்த ஜன்மத்தில் எப்படி வரக்கூடும்? என்றால், இதற்கு பதில் தூங்கி எழுந்தவனென்கிற உதாரணத்தினாலே காட்டப்படுகிறது. புண்ணியம் செய்தவர்களுக்கு முன் ஜன்மத்தில் உண்டான நல்ல ஸம்ஸ்காரங்கள் மறைகிறதில்லை என்று கருத்து. ஸம்ஸ்காரமென்பது ஒரு வஸ்துவின் பார்வை முதலானதாலே உண்டாகி, பிறகு அந்த நினைவு மூட்டுகிற அடையாளங்கள் சேர்ந்தால்—மறுபடி அந்த வஸ்துவின் நினைவை உண்டாக்குகிற குணம். வாஸனையென்பது ஒரு அறிவினால், அல்லது வேலையினால் அநேகமாகிற அறிவிலும், வேலையிலும் ஒரு ஆசையை உண்டு பண்ணுவது. ஆகையினால் அறிவு வேறு. ஸம்ஸ்காரம் வேறு, வாஸனை வேறு. முன் ஜன்மத்தின் வாஸனை மறு ஜன்மத்தில் வரும். ஸம்ஸ்காரம் எல்லாருக்கும் வராது. ஆதி பரதர் தான் வளர்த்த மானை நினைத்துக் கொண்டு இறந்தபடியால் மானாகப் பிறந்தார். அப்போது முன் ஜன்மத்தில் செய்ததெல்லாம் அவர் நினைவிற்கு வந்து, மறுபடியும் இப்படிக் கெட்டுப்போகாமலிருப்பதற்கு வேண்டிய பிரயத்தனம் பண்ணினார். விதுரர் உயர்ந்த ஜாதியில் பிறந்து பக்தியோகம் பண்ணி, ஏதோ ஒரு காரணத்தினால், சூத்திர ஜாதியில் பிறந்தார். அந்த ஜன்மத்தில் முன் பண்ணின பக்தியோகத்தின் நினைவு வந்து பக்தி யோகத்தைச் செய்து முடித்தார்.

மறுபடியும் ஆரம்பித்து முடிப்பன். அதுபோல. முன் பண்ணின யோகத்தின் பழக்கம் இவனை அதைப்பண்ணும்படி பலாத்காரமாய் இழுக்கிறது. இவ்விதமான யோகத்தின் பெருமையை ஆதிபரதர், விதுரர், பீஷ்மர் முதலானவர்களுடைய சரித்திரங்களில் பார்க்கலாம். ( 43,43½, )

ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய ஶப்தப்ரஹ்மாதிவர்ததே ॥ ॥௪௪॥

அப்ரவ்ருத்தயோகோ யோகே ஜிஜ்ஞாஸுரபி ததஸ்ஸுஜாதஸ் ஸந்நபி தாதேவ ஜிஜ்ஞாஸாம் ப்ராப்ய கர்மயோகாதிகம் யோகமநுஷ்டாய ஶப்தப்ரஹ்மாதிவர்ததே । ஶப்தப்ரஹ்ம தேவமநுஷ்யப்ருதிவ்யந்தரிக்ஷஸ்வர்காதி ஶப்தாபிதேயம் ப்ரஹ்ம ப்ரக்ருதி: । ப்ரக்ருதிபந்தாந்நிர்முக்தோ தேவமநுஷ்யாதிஶப்தாபிதாநாநர்ஹம் ஜ்ஞாநாநந்தைகதாநம் ஆத்மஸ்வரூபம் ப்ராப்நோதீத்யர்த: ॥ ॥௪௪॥

யோகத்தை ஆரம்பிக்காமல், ஆரம்பிக்க வேணுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்து, அதிலிருந்து மனது சலித்தவன் மறுபடியும் அதே ஆசையை [1] அடைந்து, கர்மயோகம் முதலாய் யோகம் வரையில்செய்து, தேவன், மனிதன் என்று சொல்லக் கூடிய உடம்பையும், அதனால் அநுபவிக்கக்கூடிய ஸ்வர்க்கம் முதலான லோகங்களையும் விட்டு, ஞானஸ்வரூபமாயும், ஆனந்தத்திற்கு ஒரே இருப்பிடமாயும் இருக்கும் ஆத்மாவை உள்ளபடி பார்க்கிறான். [ 44 ]

ப்ரயத்நாத்யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்தகில்பிஷ: ।
அநேகஜந்மஸம்ஸித்தஸ்ததோ யாதி பராம் கதிம் ॥ ॥௪௫॥

யதைவம் யோகஶீலத்வம் ததநேகஜந்மார்ஜித புண்யஸஞ்சயேந ஸம்ஶுத்தகில்பிஷ: ஸம்ஸித்தஜாத: ப்ர-

---

1. யோகம் செய்து கொண்டிருந்து அதிலிருந்து மனது சலித்தவனுக்கு மறுபடியும் யோகம் வருகிறது. யோகம் ஆரம்பித்தவுடன் மனது சலித்தவனுக்கு அதனுடைய ஆரம்பம். யோகம் செய்ய வேணுமென்று ஆசைப்பட்டு மனது சலித்தவனுக்கு அந்த ஆசை வருகிறது. இப்படி அந்தந்த இருப்புக்குத் தகுந்தபடி யோகமோ, யோகத்தின் ஆரம்பமோ, யோகத்தில் ஆசையோ மறுபடியும் வருகிறது.

யத்நாத்³யதமாநஸ்து யோகீ³ ஸம்ஶுத்³த⁴கில்பி³ஷ꞉ அநேகஜந்மஸம்ஸித்³த⁴ஸ்ததோ யாதி பராம் க³திம் ॥ ॥௪௫॥

யோகத்திற்கு இவ்வளவுபெருமை யிருப்பதால் அநேக ஜன்மங்களிலே பண்ணின புண்ணியங்களால் பாபங்கள்போய், யோகம் செய்வதற்குத் தகுந்தவனாகி, அதிகப்பிரயத்தனப்பட்டவன், அதிலிருந்து வேறு ஒரு காரணத்தால் மனது சலித்தாலும், படிபடியும் ஆத்மாவைப் பார்ப்பன். மோக்ஷத்தையும் அடைந்து விடுவன்.

அத²—அதிஶயிதபுருஷார்த²நிஷ்ட²தயா யோகி³நஸ் ஸர்வாதி⁴க்யமாஹ—

தபஸ்விப்⁴யோ(அ)தி⁴கோ யோகீ³ ஜ்ஞாநிப்⁴யோ(அ)பி மதோ(அ)தி⁴க꞉।
கர்மிப்⁴யஶ்சாதி⁴கோ யோகீ³ தஸ்மாத்³யோகீ³ ப⁴வார்ஜுந॥ ॥௪௬॥

கேவலதபோநிஷ்டே²ப்⁴ய꞉ புருஷார்த²ஸாத⁴நத்வேந ஶ்ருதே, ஆத்மஜ்ஞாநவ்யதிரிக்தஜ்ஞாநநிஷ்டே²ப்⁴ய꞉, யஸ்ய கேவலாஶ்வமேதா⁴தி³கர்மநிஷ்டே²ப்⁴ய꞉ தேப்⁴யஸ்ஸர்வேப்⁴யோ(அ)தி⁴கபுருஷார்த²ஸாத⁴நத்வாத், தபஸ்விப்⁴யோ ஜ்ஞாநிப்⁴ய꞉ கர்மிப்⁴யஶ்சாதி⁴கோ யோகீ³। தஸ்மாத்³யோகீ³ ப⁴வார்ஜுந॥ ॥௪௬॥

அவ—கீழ்ச் சொன்ன யோகத்தின் பெருமை தபஸ் முதலானவைகளில் ஒன்றிற்கும் கிடையாது. ஆகையினாலே, யோகம் செய்கிறவன் தபஸ்ஸு முதலானவைகளைச் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று சொல்லி, யோகத்தையும் யோகம் செய்கிறவனையும் ஸ்தோத்திரம் பண்ணி, ஜீவாத்மாவின் யோகத்தைப் பற்றின வார்த்தையை முடிக்கிறார்—

எந்தப் பிரயோஜனங்களை யோகமில்லாத பட்டிணிமுதலான தபஸ்ஸுகளாலேயும், ஆத்மாவின் அறிவைத்தவிர வேறு அறிவினாலேயும், ஆத்மாவின் உள்ளபடி யோகமில்லாத அசுவமேதம் முதலான யக்ஞங்களாலேயும் ஒருவன் அடைகிறானோ—அவைகளெல்லாவற்றைக் காட்டிலும், யோகத்தினாலே வரும் பிரயோஜனம் மிகவும் உயர்ந்தது. ஆகையால் கீழேசொன்ன தபஸ், ஞானம், கர்மம் இவைகள் உள்ளவர்களைக் காட்டிலும் யோகி மிகவும் உயர்ந்தவன். ஆகையினாலே நீ யோகியாக ஆகவேண்டும்.

அத — ஏவம் பரவித்யாங்கபூதம் ப்ரஜாபதிவாக்யோதிதம் ப்ரத்யகாத்மதர்சநமுக்த்வா | அத பரவித்யாம் ப்ரஸ்தௌதி —

யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா |
ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத: ||௪௭||

---

இதி ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
யோகாப்யாஸயோகோ நாம ஷஷ்டோऽத்யாய: ||

---

யோகிநாமிதி பஞ்சம்யர்த்தே ஷஷ்டீ | 'ஸர்வபூதஸ்தமாத்மாநம்' இத்யாதிநா சதுர்விதயா யோகிந: ப்ரதிபாதிதா: | தேஷ்வந்தர்கதத்வாபாவாத் வக்ஷ்யமாணஸ்ய யோகிந: | ந நிர்த்தாரணே ஷஷ்டீ ஸம்பவதி | 'அபி ஸர்வேஷாம்' இதி ஸர்வசப்தநிர்திஷ்டாஸ்தபஸ்வ்யாதய: | தத்ராப்யர்த்தேந ந்யாயேந பஞ்சம்யேவ க்ருஹீதவ்யா | யோகிப்யோऽபி ஸர்வேப்யோ வக்ஷ்யமாணோ யோகீ யுக்ததம: | தத்வபேக்ஷயா அபரதேவ தபஸ்விப்ரப்ருதீநாம் யோகிநாம் ச ந கச்சித்விசேஷ இத்யர்த்த: | மேர்வபேக்ஷயா ஸர்ஷபாணாமிவ | யத்யபி ஸர்ஷபேஷ்வந்யோந்யந்யூநாதிகபாவோ வித்யதே, ததாபி மேர்வபேக்ஷயா ஸர்வஸமநிர்விசேஷா: | மத்கதேநாந்தராத்மநா — அத்யர்த்தப்ரியத்வேந அநந்யஸாதாரணஸௌஹார்த்தயா மத்கதேநாந்தராத்மநா மநஸா, மாஹாத்ம்யாதிசயஸ்திதிவிசேஷாச்ரயஸ்திதம் மநோ [illegible] | அத்யர்த்தப்ரியஸ்ய மம விநா ஆத்மதாரணாஸம்பவாத் மத்கதேந மநஸா, ச்ரத்தாவாந் — அத்யர்த்தப்ரியத்வேந க்ஷணமாத்ரவிச்லேஷாஸஹதயா மத்ப்ராப்தௌ த்வராவாந், யோ மாம் பஜதே — நாநாவித அநந்தமஹாவிபூதிம் அசிந்த்யஸ்வரூபகுணவிபூதி [illegible]

𑌜𑌗𑌦𑍁𑌦𑌯𑌵𑌿𑌭𑌵𑌲𑌯𑌲𑍀𑌲𑌸𑍍𑌯, 𑌅𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌾𑌶𑍇𑌷𑌦𑍋𑌷𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑌃𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌨𑌿𑌧𑌿𑌂, 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑌤𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑍈𑌕𑌰𑍂𑌪𑌾𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑍌𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑍍𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌸𑍌𑌗𑌨𑍍𑌧𑍍𑌯𑌸𑍌𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌯𑍌𑌵𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌗𑍁𑌣𑌨𑌿𑌧𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌂, 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑍍, 𑌅𑌪𑌾𑌰𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌮𑍍, 𑌅𑌨𑌾𑌲𑍋𑌚𑌿𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌶𑍇𑌷𑌲𑍋𑌕𑌶𑌰𑌣𑍍𑌯𑌂, 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌮𑍍, 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑍈𑌕𑌜𑌲𑌧𑌿𑌮𑍍, 𑌅𑌖𑌿𑌲𑌮𑌨𑍁𑌜𑌨𑌯𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑌾𑌂 𑌗𑌤𑌮𑍍, 𑌅𑌜𑌹𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂, 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑍇 𑌅𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌮𑍍, 𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌤𑍇𑌜𑌸𑌾 𑌨𑌿𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌨𑍍𑌤𑌮𑍍, 𑌆𑌤𑍍𑌮𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑌯𑌨𑍍𑌤𑌮𑍍 - 𑌭𑌜𑌤𑍇 - 𑌸𑍇𑌵𑌤𑍇 - 𑌉𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌸 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑍋 𑌮𑌤𑌃 - 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌤𑌏𑌵 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇॥

---

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

---

𑌪𑍍𑌰𑌥𑌮𑌷𑌟𑍍𑌕𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 ॥

---

அவ— மோக்ஷத்திற்காகச் செய்யவேண்டிய பகவானுடைய தியானத்திற்கு உதவியாக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட ஜீவாத்மாவின் உள்ளபடி பார்வை சொல்லப்பட்டது. இதற்குப் பிறகு பகவானுடைய தியானத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார்—

இதுவரையில் சொல்லப்படாத• ஒருயோகியை இப்போது சொல்லப்போகிறேன். அவன் இந்த அத்தியாயம் 29—வது சுலோகம் முதல் நாலுசுலோகங்களால் சொல்லப்பட்ட யோகிகளைக் காட்டிலும், 46—வது சுலோகத்தில் சொன்ன தபஸ்வீ

ஞானமும், கர்மமும் உள்ளவர்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தவன். தபஸ்முதலானவைகள் உள்ளவர்களைக் காட்டிலும் நாலு விதமான யோகிகள் சிறந்தவர்களாயிருந்தாலும், சொல்லப்போகிற யோகியைக்காட்டிலும் மட்டம் என்பதில் எல்லாரும் ஒரே மாதிரி. கடுகில் ஒன்று சிறியதாயும், ஒன்று பெரியதாயுமிருந்தாலும், மலையைக் காட்டிலும் சின்னது என்பதில் எல்லா கடுகுகளும் ஒரேமாதிரிதானே. அதுபோல. அவன் யாரென்றால், என்னிடத்தில் அளவில்லாத பிரீதியுடன் எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டு, ஒருக்ஷணம் என்னை விட்டுப்பிரிந்தால் தாங்கமுடியாதவனாய், என்னை எப்போது அடையப்போகிறேனென்று அவசரப்பட்டு 1எவன் என்னைத்தியானம் பண்ணுகிறானோ அவன். அவன் மிகவும் உயர்ந்தவன் என்று எல்லாவற்றையும் எப்போதும் உள்ளபடி தானாகவே பார்த்துக் கொண்டிருக்கிற எனக்குத் தோன்றுகிறது 2 [ 47 ]

ஸ்ரீ மதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

---

1. முதல் அத்தியாயத்தில் ஆரம்பத்தில் சொன்னபடி ஸ்ரீ பாஷ்யகாரர் பகவானை இங்கே வர்ணிக்கிறார்.

2. அர்ஜுனனுக்கு ஜீவாத்ம யோகத்தைச் சொன்னபோது, அவன் இவ்வளவுதான் நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்று எண்ணமலிருப்பதற்காக, இதற்கு மேற்பட்ட ஒரு யோகத்தை பிரஸ்தாபிக்கிறார். இந்த யோகத்தை 7, 8, 9-வது அத்தியாயங்களில் விவரமாய்ச்சொல்லுகிறார்.

---

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம:

தமிழ் அர்த்தத்துடன் கூடிய

# ஸ்ரீமத்கீதாபாஷியம்.

## இரண்டாவது பாகம்.

( 7-வது முதல் 12-வது அத்தியாயம் உள்பட )

கும்பகோணம்

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

லை ] 1929 [ ரூ. 1—0—0

# குறிப்பு.

(2-வது அத்தியாயம் 28-வது சுலோகம் 43-வது பக்கம் தமிழ் உரைக்குப் பதிலாக கீழ் அச்சிட்டிருப்பதைத் வைத்துக் கொள்ள வேண்டியது)

மனிதன் முதலான உடம்புக்கு இப்போது இருக்கும் உருவம் அதைவிட்டு பிரியாத ஸ்வபாவமல்ல அப்படியே இதற்கு முன்னே இருந்த இருப்பும், இதற்குப் பிற்பாடு வரப்போகிற இருப்பும் ஸ்வபாவமல்ல. ஆகையால் அதற்கு மாறுவது என்பதுதான் ஸ்வபாவம். ஆகையால் இந்த உடம்புக்கு வரப்போகிற மாறுதலைப்பற்றி கவலைப்படக்கூடாது. இந்த உடம்பு உண்டானது தானே. இதற்கு முன்பு இது ஒருவிதமாக இருந்திருக்குமே. அதை இதற்கு ஸ்வபாவமென்று சொல்லுகிறாயோ? அப்படிச் சொன்னால், அந்தஸ்வபாவம்போய், இப்படி உடம்பாக ஆனதற்கு நீ அழவேணும். இப்போது இருக்கும் உருவமே ஸ்வபாவம்; ஒருவித இடைஞ்சலால் மாறுதல் வருகிறது என்று சொன்னால், அந்த இடைஞ்சல் தடுக்க முடியாததாக இருந்தால், அது வந்தே தீரும். துக்கப்படுவதில் பிரயோஜனமில்லை. மேலும் அந்த இடைஞ்சல் போகாதோ. போகக்கூடியதுதானே. அதுபோனால் ஸ்வபாவமான இந்த உடம்பு உருவம் வருகிறது; அழுவானேன். வஸ்துக்களுக்கு மாறுதலே ஸ்வபாவம். ஒருவன் அதைப் பொறுக்காமல் வருத்தப்பட்டால், அவன் எல்லா வஸ்துக்களையும் பார்த்து அழுது கொண்டேதான் இருப்பன். இப்போது புதிதாய் அழவேண்டியதற்கு என்ன காரணம்.

# விஷய அட்டவணை.

## ஏழாவது அத்தியாயம். சுலோகம்.


அவதாரிகை— 1—3

பகவானுடைய பெருமை—

1. எல்லாம் அவனுடைய சொத்து 4—5½
2. எல்லாம் அவனிடமிருந்து உண்டாகி அவனிடம் அடங்குகிறது. 6
3. எல்லா உயர்ந்த குணங்களாலே அவன் எல்லாரையுங்காட்டிலும் மிகவும் உயர்ந்தவன். 6½
4. அவன் எல்லாவற்றிற்கும் ஆதாரன். 7
5. ஆகையால் அவனையே எல்லா சொற்களும் சொல்லுகின்றன. 8—12

பகவானை இப்படி ஜனங்கள் அறியாததற்கு இடஞ்சல் 13—13½

அந்த இடஞ்சல் போகும்வழி—பிரபத்தி பண்ணுகிறது. 14

பிரபத்தி பண்ணுகைக்குக் காரணம் 15

பகவானிடத்தில் பிரபத்தி பண்ணுகிறவர்கள் மூன்று விதம். 16

அவர்களில் ஞானி மிகவும் உயர்ந்தவன். 17—19

ஞானி அகப்படுவது மிகவும் அரிது. 20—28

8-வது அத்தியாயத்தில் சொல்லப்போகிற ஸங்கதிகளின் பிரஸ்தாவம். 29—30


## 8-வது அத்தியாயம்.


(1) ஐசுவரியத்தை அடைய வேணுமென்றும், (2) தன் ஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்கவேணுமென்றும், (3) பகவானிடம் எப்போதுமிருக்கவேணுமென்றும் ஆசைப்படுகிறவர்கள் அறியவேண்டிய ஸங்கதிகள். 1—4

அந்திமஸ்மிருதி. 5—7

இவர்களில் முதல்வகுப்பார் தியானம் பண்ணவேண்டியவிதம் 8—10

இரண்டாவது வகுப்பார் தியானம் பண்ணவேண்டியவிதம். 11—13

மூன்றாவது வகுப்பார் தியானம் பண்ணவேண்டியவிதம். 14

முதல் வகுப்பார் திரும்பி வருகிறார்கள், மற்றவர்கள் திரும்பி வருகிறதில்லை. 15—22

இவர்கள் போகும்வழி—நெருப்பு முதலானதும்; புகை முதலானதும் 23—28

## 9-வது அத்தியாயம்.


அவதாரிகை. 1—3
பகவான் உலகத்தைத் தாங்கும் விதம்—எண்ணத்தாலேதான். 4—6
பகவான் உலகத்தை உண்டு பண்ணி அழிக்கும்விதம். 7—10
ஞானிகளுடைய பெருமை—
1. பகவானை நன்ருய் அறிவது. 11—13
அவர்கள் பகவானை பூஜிக்கிறவிதம். 14—19
2. பகவானைத்தவிர வேறு தேவதையையும் வேறு பலனையும் நினைக்காமை. 20—25
3. பகவானை பூஜிப்பது எளிதானது. 26
பக்தியோகத்துக்கு மிகுந்த உதவி செய்கிற அங்கம்—ஸாத்விகத்தியாகம். 27—28
பகவானிடத்தில் மிகுந்தப் பிரீதி உள்ளவன் எவனும் அவனைப் பஜிக்கத்தகுந்தவன். 29—32½
பக்தியோகவிதி. 33
அதின் ஸ்வரூபம். 34


## 10-வது அத்தியாயம்


அவதாரிகை — 1—2
பகவான் பிரகிருதியையும் ஜீவன்களையுங்காட்டிலும் வேறு ஜாதி. 3
ஜீவன்களுடைய எல்லாப் பிரவிருத்திகளும் பகவானுக்கு அதீநம். 4—6
இப்படி பகவானை அறிவது பக்தி வளருவதற்குவழி. 7
பக்தி வளர்ந்தவன் இருக்கும் இருப்பு. 8—9
அவனுக்கு பகவான் செய்யும் உபகாரம். 10—11
பகவானுடைய விபூதியை (எல்லாரையும் அடக்கி ஆளுவதை) சொல்லும்படி அர்ஜுநன் கேட்பது. 12—18
பகவான் தன்னுடைய விபூதிகளைச் சொல்லுவது. 19—42


## 11-வது அத்தியாயம்.


பகவானைப்பற்றிக் கேட்டபடி பார்க்கவேணுமென்று அர்ஜுநனுடைய வேண்டுதல். 1—4
பகவானுடைய விச்வரூபத்தைப்பார்த்து, அர்ஜுநன் ஆச்சரியத்தையும், பயத்தையும் அடைந்து, உக்கிரமான ரூபத்தைக் காட்டுவதற்குக்காரணம் என்னவென்றுகேட்பது. 5—31
பகவானுடைய பதில். 32—34

அர்ஜுநன் பகவானைஸ்தோத்திரம்பண்ணி, தன்னுடைய குற்றங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, இந்த உருவத்தை மறைத்து, முன் உருவத்தை எடுத்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுவது, 35—46

அர்ஜுநன் கேட்டுக்கொண்டபடி பகவான் செய்தது. 47—51

பகவானை உள்ளபடி அறிந்து, உள்ளபடி பார்த்து, உள்ளபடி அடைவதற்கு பக்தி ஒன்றே வழி. 52—54

பகவானிடத்தில் செய்யும் பக்தியின் படிகள். 55

## 12-வது அத்தியாயம்.

ஜீவஸ்வரூபத்தைப் பார்க்க ஜீவனைத் தியானம் பண்ணுவது மிகவும் கஷ்டமானது. நாள் செல்லும். 1—5

பகவானைப் பார்க்கவேணுமென்று அவனைத் தியானம் பண்ணுவது மிகவும் லகுவானது. சீக்கிரத்தில் அவனைப் பார்க்கலாம். 6—8

பகவானிடத்தில் மனது நிலையாய் இருப்பதற்கு வழி. 9—12

கர்மயோகத்துக்கு வேண்டிய குணங்கள், 13—19

பக்தியோகம் பண்ணுகிறவர்களிடத்தில் பகவானுக்கு மிகுந்தப் பிரீதி. 20

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

---

𑌭𑌾-- 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌷𑌟𑍍𑌕𑍇𑌨 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑍇𑌕𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌦𑌙𑍍𑌗𑌭𑍂𑌤𑌂 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇𑌨 𑌷𑌟𑍍𑌕𑍇𑌨 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌤𑌦𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑍍𑌰 “𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍। 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 “𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿। 𑌸𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 𑌤𑍁 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌪𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌪𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍। “𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌤𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿, 𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾𑌭𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 - “𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 ...𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌲𑍋𑌕𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 । 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃, 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃। 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌰𑍂𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌮𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌾𑌸𑌨𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌵𑌚𑌨𑌂 𑌚 ‘𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾

ப்ராப்யதே | யமேவைஷ வ்ருணுதே தேந லப்⁴யஸ்தஸ்யைஷ
ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாமிதி'' விஶேஷணாச்ச வரே
ணாத்ந: வரணீயத்வ ஹேதுபூ⁴தம் ஸ்வயம் ப்ரியவிஷயஸ்யா
த்யர்த²ப்ரியத்வேந ஸ்வயமத்யர்த²ப்ரியரூபம் ஸ்ம்ருதிஸ
ந்தாநமேவ ஸந் ப்ராப்த்யுபாயோ ஹி நிர்தி³ஶ்யதே | ததே³
வ ஹி ப⁴க்திரித்யுச்யதே | ''ஸ்நேஹபூர்வமநுத்⁴யாநம் ப⁴க்
திரித்யபி⁴தீ⁴யதே'' இத்யாதி³வசநாத் | அத: ''தமேவம் வித்³வாநம்ரு
த இஹ ப⁴வதி | நாந்ய: பந்தா² அயநாய வித்³யதே, நாஹம்
வேதை³ர்ந தபஸா ந தா³நேந ந சேஜ்யயா | ஶக்ய ஏவம்
விதோ⁴ த்³ரஷ்டும் த்³ருஷ்டவாநஸி மாம் யதா² || ப⁴க்த்யா த்வநந்
யயா ஶக்ய அஹமேவம்விதோ⁴ऽர்ஜுந | ஜ்ஞாதும் த்³ரஷ்டும் ச
தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப'' இத்யநயோரேகார்த்²
யம் ஸித்³த⁴ம் ப⁴வதி ||

தத்ர ஸப்தமே தாவத் ஸ்வஸ்வரூபயாதா²த்ம்யம், ப்ரக்ருத்யா திரோதா⁴நம், தந்நிவ்ருத்தயே ப்ரபத்தி:, உபாஸகவிதா⁴பே⁴த:, ஜ்ஞாநிந: ஶ்ரைஷ்ட்²யம் சோச்யதே ||

ஜீவன்கள் அழிவில்லாத ஸுகத்தை அடைவதற்காக, மஹா லக்ஷ்மியோடு கூடின நாராயணனை அடைய வேண்டியது. அதற்காக அவனைத் தியானம் செய்ய வேண்டியது. அந்தத் தியானத்தைச் சொல்லுவதற்காக, ஸ்ரீ கிருஷ்ணபகவான் முதல் ஆறு அத்தியாயங்களினாலே அந்தத் தியானத்திற்கு உதவியான ஜீவாத்மாவின் உள்ளபடி பார்வையையும், ஆத்மாவை உள்ளபடி அறிந்து கர்மங்களைச் செய்வதினால் அந்தப் பார்வை உண்டாகும் என்பதையும் சொன்னார். இப்போது நடுவிலிருக்கும் ஆறு அத்தியாயங்களாலே அடைய வேண்டிய பகவானுடைய ஸ்வரூபத்தையும், பக்தி யென்று சொல்லப்படுகிற தியானத்தையும் சொல்லுகிறார். இந்த ஸங்கதியை 18-வது அத்தியாயத்தில் 46-வது சுலோகம் முதல் ஒன்பது சுலோகங்களினாலே சுருக்கிச் சொல்லப்போகிறார்.

உபநிஷத்துக்களில் "பகவானைப்பற்றின அறிவினால் அவனை அடைய வேண்டும்" என்று சொல்லியிருக்கிறது. இன்னுமொரு இடத்தில் நினைவினால் என்று இருக்கிறது, இன்னுமொரு இடத்தில் இடைவிடாத நினைவினால் என்று இருக்கிறது. வேறு இடத்தில பகவானைப்பார்ப்பதினால் என்று இருக்கிறது. அறிவு, நினைவு, இடைவிடாத நினைவு, பார்வை-என்கிற சொற்களுக்கு ஒரேபொருள் கொள்ள வேண்டியது. ஏனென்றால், வேதத்தில் "பசுவை (நாலுகாலுள்ள பிராணியை)க் கொன்று யாகம் செய்ய வேண்டியது" என்று சொல்லியிருக்கிறது. இன்னுமொரு இடத்தில் "வெள்ளாட்டினுடைய வயிற்றிலிருக்கும் வபையை ஹோமம் பண்ணுவதற்குத் தகுந்த மந்திரத்தைச் சொல்லு என்று அத்வர்யு ஹோதாவை ஏவுகிறான்" என்று சொல்லியிருக்கிறது. அதினால் பசு என்கிற சொல்லுக்கு வெள்ளாடு என்று பொருள் என்று மீமாம்ஸையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதை ஸாமான்னிய—விசேஷ நியாயம் என்று வடமொழியில் சொல்லுகிறார்கள். அதாவது பொதுவான சொல்லுக்கு ஒரு காரணத்தைக்கொண்டு அதின் பொருளில் அடங்கிய ஒரு வஸ்துவை மாத்திரம் பொருளாகக் கொள்ளுவது. அந்த நியாயப்படி இங்கே பொருள் கொள்ள வேண்டும். அறிவு என்பது பொதுவான சொல். அதன் பொருளில் அடங்கினது நினைவு என்பது. அதுவும் பொதுவான சொல். அதில் அடங்கினது இடைவிடாத நினைவு. அது கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாயிருக்கலாம். அல்லது தெளிவில்லாமலிருக்கலாம். ஆகையினாலே இந்தப் பொதுவான சொற்களுக்கெல்லாம் கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாய், இடைவிடாமல் நினைப்பது என்று பொருள்.

மேலும் வேதத்தில் ஒரு இடத்தில், பெரியவர்களிடத்தில் பகவானைப்பற்றி கேட்க வேணுமென்றும், கேட்ட ஸங்கதியை யோசிக்க வேணுமென்றும், பிறகு பகவானைத் தியானம் செய்ய வேணுமென்றும், தியானத்தினால் அவனை அடையலாமென்றும் சொல்லியிருக்கிறது. இன்னொரு இடத்தில் "பகவானைக் கேட்பதினாலும், யோசிப்பதினாலும், தியானம் பண்ணுவதினாலும், அடைய முடியாது. பின்னை எப்படி அடையலாமென்றால், அவன்

எவனைக்கூப்பிடுகிறானோ, அவனால்தான் அவனை அடைய முடியும். அவனுக்குத்தான் அவன் தன்னைக் காட்டுவன்" என்று சொல்லியிருக்கிறது. இப்படி வேதம் சொல்லுகிறதே. நாம் எதைச்செய்கிறது? நாம் தியானம் செய்கிறதா? அல்லது அவனாக நம்மைக்கூப்பிடுவனென்று ஒன்றும் செய்யாமலிருக்கிறதா என்று ஸந்தேஹம் உண்டாகிறது. இந்த ஸந்தேஹத்தைப் பெரியோர்கள் இரண்டு இடங்களையும் ஒட்டி தீர்த்திருக்கிறார்கள். உலகத்தில் ராமன் என்பவன் கிருஷ்ணன் என்பவனை எப்போது கூப்பிடுவன். அவனுக்குக் கிருஷ்ணனிடத்தில் மிகுந்த பிரீதி இருந்தால் தான் கூப்பிடுவன். ராமனுக்கு எப்போது மிகுந்த பிரீதியிருக்கும். கிருஷ்ணனுக்கு ராமனிடத்தில் மிகுந்த பிரீதி இருந்தால் தான் இருக்கும். ஆகையால் நமக்கு பகவானுடைய இடைவிடாத நினைவு மாத்திரம் போதாது. நமக்குப் பிள்ளை பெண்டாட்டிகளிடம் பிரீதி இருப்பதுபோல், பிரீதியோடே நாம் பகவானை இடைவிடாமல் நினைத்தால், அவனுக்கு நம்மிடத்தில் அளவில்லாத பிரீதி உண்டாகும். அப்போது அவன் நம்மைக் கூப்பிடுவன். ஆகையால் பிரீதியுடன் தியானம்பண்ணினால், பகவானை அடையலாம் என்று பொருள் கொள்ள வேணும். அப்படிக் கொண்டால் எல்லாச் சொற்களுக்கும் பொருத்தமான பொருள் ஏற்படும்.

பகவானுக்கு நம்மிடத்தில் அளவில்லாத பிரீதியிருக்கிறது. இது இன்றைக்கோ நேற்றைக்கோ உண்டானதன்று. இதுமுதல் என்று இல்லாத காலமாய் இருக்கிறது. நாமோ அவனை அநாதி காலமாய் தெரிந்து கொள்ளவேயில்லை. அதுவும் தவிர, அவனுக்குப் பிடிக்காத—மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய—வேலைகளைக் கணக்கில்லாமல் செய்திருக்கிறோம். இப்பவும் செய்கிறோம். இப்படி யிருக்கையில், பெரியோர்கள் மூலமாய் அவனைத் தெரிந்து, அவனிடத்தில் கொஞ்சம் பிரீதியை நாம் பண்ணினால், அவன் தயையினாலே நம்மிடத்தில் அளவில்லாத பிரீதியைப் பண்ணி, நம்மைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகிறான். இப்படிப் பிரீதியுடன், கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாய், இடைவிடாமல் நினைப்பதை பக்தி யென்றும், பக்தி யோகம் என்றும் சொல்லுகிறது.

ஏழாவது அத்தியாயத்தில் தியானம் பண்ண வேண்டிய பகவானுடைய ஸ்வரூபத்தின் உண்மையையும், உடம்புடன் சேர்ந்திருப்பதால் அந்த உண்மை நமக்கு மறைந்திருக்கிறது என்பதையும், அந்த மறைவு நீங்குவதற்கு பகவானைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள வேணுமென்பதையும், அவனைத் தியானம் செய்கிறவர்களின் பிரிவுகளையும், அவர்களில் பகவான் தான் வேணுமென்று தியானம் செய்கிறவர்களின் உயர்த்தியையும் சொல்லுகிறார்.

ஸ்ரீபகவாநுவாச—

மய்யாஸக்தமநா: பார்த்த யோகம் யுஞ்ஜந் மதாஸ்ரய: ।
அஸம்ஸயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு ॥

மயி அதிமாத்ரப்ரேம ஸக்தமநா:-அதிப்ரேமைகாதிக்யேந மத்ஸ்வரூபேண மத்குணைஸ்ச சேஷ்டிதேந மத்விபூத்யா ச விஸ்லேஷே ஸதி தத்க்ஷணாதேவ விஸீர்யமாண ஸ்வஸ்வரூபதயா மயி ஸுஸங்கமநா:, மதாஸ்ரய:-ததா ஸ்வயம் ச மயா விநா விஸீர்யமாணதயா மதாஸ்ரய: மதேகாதார:, மத்யோகம் யுஞ்ஜந்-யோகம் ப்ரவ்ருத்த:, யோகவிஷயபூதம் மாம் அஸம்ஸயம்-நிஸ்ஸம்ஸயம் ஸமக்ரம்-ஸகலம் யதா ஜ்ஞாஸ்யஸி - யேந ஜ்ஞாநேநோக்தேந ஜ்ஞாஸ்யஸி| தத்-ஜ்ஞாநம், அவஹிதமநா: ஸ்ருணு ॥ ௧॥

பகவான் சொல்லுகிறார்.

என்னிடத்தில் உயர்ந்தபிரீதி இருப்பதினாலே, என்னுடைய ஸ்வரூபத்தையும், என் குணங்களையும், நான்செய்த வேலைகளையும், என்னுடைய சொத்துக்களையும் விட்டுப் பிரிந்தால், அரைக்ஷணம் கூடத் தாங்கமுடியாமலிருப்பதால், எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டும், என்னால் எப்பொழுதும் தாங்கப்பட்டும் இருந்துகொண்டு, என்னைத் தியானம் செய்ய ஆரம்பிப்பதற்காக ஸந்தேஹமில்லாமல் என்னுடைய எல்லாஸங்கதிகளையும்,எப்படிச்சொன்னால் நீ அறிவாயோ, அந்தமாதிரி சொல்லுகிறேன். நீ மிகவும் ஜாக்கிரதையாய்க்கேள். [ 1 ]

ஜ்ஞாநம் தேऽஹம் ஸவிஜ்ஞாநமிதம் வக்ஷ்யாம்யஶேஷத: |
யஜ்ஜ்ஞாத்வா நேஹ பூயோऽந்யஜ் ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ||

அஹம் தே மத்விஷயமிதம் ஜ்ஞாநம் விஜ்ஞாநேந ஸஹ அஶேஷதோ வக்ஷ்யாமி। விஜ்ஞாநம்-விவிக்தாகாரவிஷயம் ஜ்ஞாநம்| யதாऽஹம் மத்வ்யதிரிக்தாத் ஸமஸ்தாச்சிதசித்வஸ்துஜாதாந்நிகிலஹேயப்ரத்யநீகதயா நவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணாநந்தமஹாவிபூதிதயா ச விவிக்த: - தேந விவிக்தவிஷய ஜ்ஞாநேந ஸஹ மத்ஸ்வரூபவிஷயஜ்ஞாநம் வக்ஷ்யாமி। கிம்பஹுநா? யஜ் ஜ்ஞாநம் ஜ்ஞாத்வா மயி புநரந்யஜ் ஜ்ஞாதவ்யம் நாவஶிஷ்யதே || ||உ||

நான் என்னைப் பொதுவாகவும், விசேஷமாகவும் சொல்லுகிறேன். விசேஷமாவது—உலகத்தில் இருக்கும் அறிவுள்ள ஜீவன்களோ, அறிவில்லாத வஸ்துக்களோ, அவைகளைக் காட்டிலும் நான் வேறு ஜாதியானவன். இருட்டை ஸூர்யன் போக்குவது போல், எல்லாக் கெடுதிகளையும் போக்கக் கூடியவன். எல்லையில்லாத கணக்கில்லாத உயர்ந்த .குணங்கள் என்னிடத்திலிருக்கின்றன. எல்லா உலகங்களும் என்னுடைய ஸொத்து. இந்த மாதிரி ஸங்கதிகள். அதிகமாகச் சொல்லுவானேன்? மறுபடியும் என்னைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய ஸங்கதி மீதியில்லாமல் சொல்லுகிறேன். [ 2 ]

அத — வக்ஷ்யமாணஸ்ய ஜ்ஞாநஸ்ய துர்லபதாமாஹ —

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததி ஸித்தயே |
யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத: || ||௩||

மநுஷ்யா:-ஶாஸ்த்ராதிகாரயோக்யா:, தேஷாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதேவ ஸித்திபர்யந்தம் யததே| ஸித்திபர்யந்தம் யதமாநாநாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதேவ மாம் விதித்வா மத்த: ஸித்தயே யததே| மத்விதாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதேவ தத்த்வதோ யதாவஸ்திதம் மாம் வேத்தி, நகஶ்சிதிதி அபிப்ராய:|. 'ஸ மஹாத்மா ஸுதுர்லப:', 'மாம் து வேத ந கஶ்சந' இதி ஹி வக்ஷ்யதே || ||௩||

அவ—ஒருவனுக்கு நான் சொல்லப்போகிற அறிவுவருகிறது வருத்த மென்று சொல்லுகிருர்.

சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளை நடத்தக்கூடிய ஆயிரம் பேர்களில் ஒருவன்தான் பலன் கிடைக்கும் வரையில் ஒரு வேலையைச் செய்கிருன். அப்படி வேலை செய்கிற ஆயிரம் பேர்களில் ஒருவன்தான் என்னை அறிந்து, என்னிடத்தில் இருந்து பலனை அடைவதற்காகப் பாடுபடுகிருன். என்னை அறிந்த ஆயிரம்பேர்களில் ஒருவன்தான் என்னை 1 உள்ளபடி அறிகிருன்—என்று சொன்ஞர். இப்படிச் சொன்னதிற்கு இப்படிப்பட்ட ஒருவனும் இல்லை யென்று கருத்து. அதாவது அரிது என்று கருத்து. "அப்படிப்பட்ட மஹாத்மா (ரொம்பப் பெரியவன்) அகப்படுவது மிகவும் அரிது" என்றும், "என்னை ஒருவனும் அறியவில்லை" என்றும் மேலே சொல்லப் போகிருர். (சுலோகம்—19-26) [ 3 ]

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥ ॥௪॥

𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑍋𑌪𑌕𑌰𑌣𑌭𑍋𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌗𑌨𑍍𑌧𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌕𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌤𑍇𑌜𑍋𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌕𑌾𑌶𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌹𑌦𑌹𑌂𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑍇𑌣𑌚𑌾𑌷𑍍𑌟𑌧𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌮𑌦𑍀𑌯𑍇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥ ॥௪॥

இந்த ஆச்சரியமான எல்லையில்லாத ஜகத்தானது அநுபவிக்கத் தகுந்த வஸ்துக்களாகவும், அநுபவத்துக்கு உதவிகளாகவும், அநுபவத்துக்கு வேண்டிய இடங்களாகவும் இருக்கிறது அதையுண்டு பண்ணுகிற பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், மனது முதலான இந்திரியங்கள், மஹத், அஹங்காரம்—இப்படி எட்டு விதமாய் பிரிந்திருக்கிற 2 பிரகிருதியானது

1. சுலோகத்தில் பின்பாதி ஒரேவாக்கியமாயிருந்தாலும், அதை இரண்டு வாக்கியமாக வியாக்கியானத்தில் பண்ணியிருக்கிறது. ஏனென்ருல், பொதுவாக அறிந்த பிற்பாடுதானே உள்ளபடி அறிவது கூடும்.

2. பிரகிருதி என்பது ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்று குணங்களையுடைய வஸ்து. அது சுத்தஸத்வம் இருக்குமிடம் தவிர, மற்ற இடங்களில் எங்கும் நிறைந்திருக்கிறது அதினுடைய

1 என்னுடையது என்றுகினை. [4]

---

மூன்று குணங்களும் ஸமமாயிருக்கும்போது, பிரளயம் என்கிற இருப்பு. ஒருகுணம் மேலிட்டு மற்றவைகள் குறைந்து இருக்கும்போது ஜகத்து உண்டாகிறது. ஜகத்து உண்டாகும் விதமாவது:— முதலில் பிரகிருதி மஹத்து என்கிற வஸ்துவாக ஆகிறது. மஹத்து அஹங்காரமாக ஆகிறது. அந்த அஹங்காரம் மூன்று பிரிவாக இருக்கிறது, ஸத்வகுணம் மேலிட்டதும், ரஜஸ்ஸு மேலிட்டதும், தமஸ்ஸு மேலிட்டதும் என்று. ஸத்வகுணம் மேலிட்டதிலிருந்து மனது முதலான பதினொன்று இந்திரியங்கள் உண்டாகின்றன. (7-வது பக்கத்தில் 1-வது குறிப்பைப்பார்க்க). தமோகுணம் மேலிட்டதிலிருந்து ஆகாசமும், அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியும் உண்டாகின்றன. இவைகளைப் பஞ்சபூதங்கள் என்று சொல்லுகிறது. அஹங்காரமானது ஆகாசமாக மாறும்போது, நடுவில் சப்ததந்மாத்திரம் என்கிற ஒரு வஸ்துவாக ஆகி ஆகாசமாக ஆகிறது. அப்படியே மற்றநாலுபூதங்களும் அந்தந்ததந்மாத்திரங்கள்வழியாகஉண்டாகின்றன. ஐந்துபூதங்கள், ஐந்து தந்மாத்திரங்கள், பதினொன்று இந்திரியங்கள், மஹத், அஹங்காரம்—ஆக இருபத்து மூன்று தத்வங்கள். இவைகளுக்குக்காரணமான பிரகிருதியையும்சேர்த்து இருபத்துநாலுதத்வங்கள் என்று சொல்லுகிறது. சுலோகத்தில் காரணமான பிரகிருதியை எட்டுவிதமாய் பிரிந்திருக்கிறது என்று சொன்னது எப்படியென்றால், பதினொன்று இந்திரியங்களை ஒருவகுப்பாகப்பண்ணியும், தந்மாத்திரங்களைப் பூதங்களுடன் சேர்த்தும் எட்டு என்கிற கணக்கு ஏற்படுகிறது. இவைகள் சேர்ந்து பலவிதமான இந்த ஜகத்து உண்டாகிறது. காரணமான இவைகளை உண்டுபண்ணுவதை ஸமஷ்டி-ஸ்ருஷ்டி என்றும், இவைகளிலிருந்துபல்விதமாய் தோன்றுகிற ஜகத்தை உண்டுபண்ணுவதை வியஷ்டி-ஸ்ருஷ்டி என்றும் சொல்லுகிறது. ஸமஷ்டியும், வியஷ்டியும் இன்னதென்று உதாரணத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் சமையல் பண்ணுகிறவன் தனித்தனியாயிருக்கும் உப்பு, புளி, மிளகாய், கடுகு, வெந்தயம், காயம், கறிகாய் முதலான ஸாமான்களைப் பல விதமாய்ச் சேர்த்து, குழம்பு ரஸம், கறி, என்று பெயருள்ள பதார்த்தங்களாகச் செய்கிறான். தனித்தனியாய் இருந்தவைகளை ஸமஷ்டி (பொது) என்றும், அவைகளைச் சேர்த்து உண்டானதை வியஷ்டி-(பிரிந்தவைகள்) என்றும் சொல்லுகிறது. இதுபோல ஒன்றோடொன்று சேராத பூமி முதலானவைகள் ஸமஷ்டி. அவைகளைச் சேர்த்து உண்டான ஜகத்து வியஷ்டி.

1. பிரகிருதி என்னுடையது என்று சொல்வதாலே, அது பகவானைக்காட்டிலும் வேறுஎன்று ஏற்படுகிறது. உலகத்தில் ஸொத்து வேறு, ஸொத்தையுடையவன் வேறு என்று பார்க்கிறோம். அப்படியே பகவான் வேறு, பிரகிருதி வேறு.

அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥௫॥

இயம் அபரா ப்ரக்ருதி:। இதஸ்த்வந்யா-இதோऽசேதநாயா: போக்யபூதாயா: ப்ரக்ருதேர்விஸஜாதீயாகாரா, ஜீவபூதாம் பராம்-தஸ்யா: போக்த்ருத்வேந ப்ரதாநபூதாம் சேதநரூபாம், மதீயாம் ப்ரக்ருதிம் வித்தி। யயேதம்-அசேதநம் க்ருத்ஸ்நம் ஜகத் தார்யதே ॥ ॥௫॥

இது என்னுடைய 1 தாழ்ந்த 2 பிரகிருதி. அறிவுள்ள ஜீவன்களால் அநுபவிக்கப்படுகிற அறிவில்லாத இந்தப் பிரகிருதியைக் காட்டிலும் வேறான—அதை அநுபவிப்பதாலே உயர்ந்ததான அறிவுள்ள ஜீவன்களை 3 என்னுடைய உயர்ந்த மற்றொரு பிரகிருதி

---

1. ஜீவன்கள் அறிவில்லாத வஸ்துக்களை அநுபவிக்கிறார்கள். அநுபவிக்கிற ஜீவன்களை உயர்ந்தவர்களாகவும், அநுபவிக்கப்படுகிற அறிவில்லாத வஸ்துக்களைத் தாழ்ந்தனவாகவும் சுலோகம் சொல்லுகிறது.

2. பிரகிருதி என்கிற சொல்லுக்குக் காரணம் என்று பொருள். அறிவுள்ள ஜீவன்கள்—அறிவு இல்லாத வஸ்துக்கள் இவைகளிரண்டும் சேர்ந்து உலகம் உண்டாகிறது. ஆதலால் உலகத்தை காரியம் (உண்டாகிறது) என்றும், இவை யிரண்டையும் காரணம் (உண்டுபண்ணுகிறது) என்றும் சொல்லுகிறது. அவைகளில் மாறுகிற—அறிவில்லாத வஸ்துக்களை உண்டாகிறது என்று சொல்லலாம். மாறுதலும் அறிவுமில்லாத அறிவுள்ள ஜீவன்களை உண்டாகிறதென்றும் உண்டுபண்ணுகிறதென்றும் சொல்லலாமா? என்றால், பதில்—ஜீவன்களுக்கு இரண்டு விதமான இருப்பு இருக்கிறது. பிரளய காலத்தில் எல்லாரும் ஒரேமாதிரியாகவும், அறிவில்லாத வஸ்துக்களைப் போலவும் இருக்கிறார்கள். ஸிருஷ்டி காலத்தில் வெவ்வேறு உடம்புகளோடும், இந்திரியங்களோடும் சேருகிறார்கள். இந்த சேர்க்கையாலே அவர்களுடைய அறிவிலும், அவர்கள் செய்யும் வேலைகளிலும், அவர்களுடைய அநுபவங்களிலும், பல வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த இருப்பு வியஷ்டியான இருப்பு. முன் இருப்பு ஸமஷ்டி இருப்பு. முன் இருப்பு காரணம். பின் இருப்பு காரியம் (செய்யப்பட்டது). காரணம் என்பது காரியத்துக்கு முன் இருக்கும் இருப்பு.

3. இதனாலே பகவான் ஜீவன்களைக் காட்டிலும் வேறு என்று ஏற்படுகிறது. முன் சுலோகம் அவர் ஜகத்தைக் காட்டிலும் வேறு

யாக நினை. அந்த ஜீவன்களால்தான் இந்த அறிவில்லாத லோகங்கள் 1 தூக்கப்படுகின்றன. [5]

ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய ।
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா ॥ ॥௬॥

ஏதச்சேதநாசேதநஸமஷ்டிரூபமதீயப்ரக்ருதித்வயயோநீநி ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தாநி உச்சாவசபாவேநாவஸ்திதாநி சிதசிந்மிஶ்ராணி மதீயாநி ஸர்வாணி பூதாநீத்யுபதாரய। மதீயப்ரக்ருதித்வயயோநீநி ஹி தாநி மதீயாந்யேவ। ததா ப்ரக்ருதித்வயயோநித்வேந க்ருத்ஸ்நஸ்ய ஜகத: தயோர்த்வயோரபி மத்யோநித்வேந மதீயத்வேந க்ருத்ஸ்நஸ்ய ஜகத: அஹமேவ ப்ரபவோ அஹமேவ ச ப்ரலயோ அஹமேவ ச ஶேஷீத்யுபதாரய। தயோஶ்சிதசித்ஸமஷ்டிபூதயோ: ப்ரக்ருதிபுருஷயோரபி பரமபுருஷயோநித்வம் ஶ்ருதிஸித்தம் । "மஹாநவ்யக்தே லீயதே। அவ்யக்தமக்ஷரே லீயதே। அக்ஷரம் தமஸி லீயதே। தம: பரே தேவ ஏகீபவதி", "விஷ்ணோ: ஸ்வரூபாத்பரதோதிதே த்வே ரூபே ப்ரதாநம் புருஷஶ்ச விப்ர", "ப்ரக்ருதிர்யா மயாக்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ। புருஷஶ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி। பரமாத்மா ச ஸர்வேஷாமாதார: பரமேஶ்வர:। விஷ்ணுநாமா ஸ வேதேஷு வேதாந்தேஷு ச கீயதே" இத்யாதிகா ஹி ஶ்ருதிஸ்ம்ருதய: ॥ ॥௬॥

---

என்று சொல்லிற்று. ஆகையாலே அவர் அறிவுள்ளதோ அறிவில்லாததோ, எல்லாவற்றைக் காட்டிலும் வேறு ஜாதி. ஜீவன்கள் அறிவில்லாத வஸ்துக்களைக் காட்டிலும் வேறு என்று சொல்லப்பட்டது. ஆகையாலே உலகத்தில் மூன்று தத்வங்கள் இருக்கின்றன—பிரகிருதி, ஜீவன்கள், பகவான்—என்று.

1. ஜீவன்கள் தூங்குகிற காலத்தில் அறிவில்லாத வஸ்துக்களை (உடம்புகளை) தங்களுடைய ஸ்வரூபத்தாலே தாக்குகிறார்கள். விழித்துக் கொண்டிருக்கும்போது தங்களுடைய ஸங்கல்பத்தாலே (எண்ணத்தாலே)யும் தூக்குகிறார்கள்.

[1] என்னுடையதான, அறிவுள்ளதும்—அறிவில்லாததும் என்று இருவகைப்பட்ட—ஸமஷ்டியான (பொதுவான) இந்த இரண்டு பிரகிருதிகளால் உண்டான—பிரும்மா முதல் புழுவரையில் உயர்ந்தவைகளாகவும், தாழ்ந்தவைகளாகவுமிருக்கும்—உடம்புடன் சேர்ந்திருக்கிற எல்லாப் பிராணிகளும் என்னுடையது என்றுநினை. என்னுடைய இரண்டு பிரகிருதிகளால் எல்லாமுண்டானபடியாலே அவைகளும் என்னுடையவைகள் தான். இப்படியிருப்பதாலே, அதாவது—ஜகத்து இரண்டு பிரகிருதிகளிலிருந்து உண்டானபடியாலும், அந்த இரண்டு பிரகிருதிகளும் என்னிடமிருந்து உண்டானபடியாலும்—எல்லா லோகங்களும் என்னிடத்திலிருந்து தான் [2] உண்டாகின்றன. என்னிடம்தான் வந்து முடிவில் அடங்குகின்

---

1. முன் இரண்டு சுலோகங்களாலே ஸமஷ்டியான அறிவில்லாத வஸ்துக்களும், ஸமஷ்டியான ஜீவன்களும் பகவானுடைய ஸொத்து என்று சொல்லப்பட்டது. இந்த சுலோகம் அறிவில்லாத வஸ்துக்களும், ஜீவன்களும் சேர்ந்து உண்டான வியஷ்டி வஸ்துக்கள் பகவானுடைய ஸொத்துக்கள் என்று சொல்லுகிறது.

2. இரண்டு பிரகிருதிகளும் பகவானிடமிருந்து உண்டாகின்றன என்று வேதத்தில் எங்கே சொல்லியிருக்கிறது என்றால், பதில்-வேதத்தில் இரண்டு பிரகிருதிகளும் பகவானிடத்தில் பிரளய காலத்தில் லயத்தை அடைகின்றன என்று சொல்லியிருக்கிறது. இதைக்கொண்டு, பகவானிடமிருந்து அவைகள் உண்டாகின்றன என்று வேதத்தினால் சொல்லப்படுகிறதென்று ஒப்புக்கொள்ள வேண்டும். பகவானிடத்தில் இவைகள்லயத்தைஅடைகிறது(அடங்குகிறது)என்பது,பாலில்ஜலத்தை விட்டால்,இதுபால்,இதுஜலம்,என்றுஎப்படிப்பிரித்துஅறியமுடியாதோ அப்படியே பகவானிடத்தில்இந்த இரண்டும் பிரித்துஅறியமுடியாதபடி சேருகிறதுதான்.பாலோடுசேர்ந்த ஜலத்தைஎப்படிப்பால் என்றுசொல்லுகிறோமோ,அப்படியே இரண்டு பிரகிருதிகளோடு சேர்ந்த பகவானைப் பிரும்மம் என்று சொல்லுகிறது. இரண்டுதத்வங்களுக்கும் ஸ்வரூபத்தில் அழிவில்லை.ஆகையாலே அவைகளை நித்தியங்கள் என்றுசொல்லுகிறது. பிரிக்கமுடியாதபடி ஒன்றாயிருப்பதாலே அவைகளை ஒன்று என்றும் சொல்லுகிறது.

பகவான் தான் ஜகத்துக்கு உபாதானகாரணமும், நிமித்தகாரணமும். ஒரு குயவன் மண் கட்டியிலிருந்து சட்டியையும் பானையையும் செய்கிறான். மண்கட்டியை உபாதானகாரணம் என்றும்,குயவனை நிமித்

றன. எல்லாம் என்னுடையவைகளாக இருப்பதாலே நானே 1 சேஷி என்று நினை. ஸமஷ்டியான அறிவுள்ள பிரகிருதியும், அறிவில்லாத பிரகிருதியும் பகவானிடமிருந்து உண்டாகிறது என்பது வேதத்திலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப் பட்டிருக்கிறது. (6)

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித³ஸ்தி த⁴நஞ்ஜய ।

யதா² ஸர்வகாரணஸ்யாபி ப்ரக்ருதித்³வயஸ்ய காரணத்வேந ஸர்வாசேதநவஸ்து ஶேஷிணோ சேதநஸ்யாபி ஶேஷித்வேந ச காரணதயா ஶேஷிதயா சாஹம் பரதர:, ததா² ஜ்ஞாந ஶக்திப³லாதி³ கு³ணயோகே³ந சாஹமேவ பரதர: । மத்தோ³ந்யது³த்க்ருஷ்டம் கிஞ்சித் ஜ்ஞாநப³லாதி³ கு³ணாந்தரயோகி³ பரதரம் நாஸ்தி ॥ ||கா½||

எல்லாவற்றையு முண்டுபண்ணுகிற இரண்டு பிரகிருதிகளை உண்டுபண்ணுகையாலும், எல்லா அறிவில்லாத வஸ்துக்களுக்கு சேஷிகளான ஜீவன்களுக்கும் சேஷியாயிருப்பதாலும், எப்படி நான் பரதரனோ (மிகவும் உயர்ந்தவனோ) 2 அப்படியே, ஞானம், சக்தி, வலிமை, முதலான குணங்களாலேயும் நான்தான் பரதரன்.

---

தகாரணம் என்றும் சொல்லுகிறது. இங்கே இரண்டுகாரணமும் வேறாயிருக்கிறது. இப்படியே உலகத்தில் எங்குமிருக்கிறது. அப்படியிருக்க எப்படி பகவானை இரண்டுகாரணமுமாய் இருக்கக்கூடும் என்றால், பதில்— இரண்டு பிரகிருதிகளோடும் சேர்ந்த பகவானே ஜகத்தாக ஆகிறான். தாயாருடைய கர்ப்பத்தில் வைக்கப்பட்ட ஜீவனோடுகூடிய ரேதஸ்ஸானது குழந்தையாய் வளர்ந்து, வெளியே வந்து, வளர்ந்து பாலனாகவும், யுவாவாகவும் எப்படி ஆகிறதோ; அப்படியே இரண்டுபிரகிருதிகளோடு சேர்ந்திருக்கிற பகவான் மஹத், அஹங்காரம், ஆகாசம் முதலானவைகளாய் வரிசையாய் ஆகி, பிறகுஜகத்தாக ஆகிறான். இதைத்தான் வேதத்தில் "நான் பஹுவாக (பலவஸ்துக்களாக) ஆகவேணும்" என்று பகவான் நினைத்ததாகச் சொல்லியிருக்கிறது.

1. எவனுக்காகவே (அதாவது-எவனுடைய உபயோகத்துக்காகவே) எந்தவஸ்து இருக்கிறதோ, அதை அவனுக்கு சேஷம் என்றும், அவனைச் சேஷி என்றும் சொல்லுகிறது.

2 இது சுலோகத்தில் சொல்லாமல் போனபோதிலும், அப்படியே அர்த்தம் கொள்ளவேணும். முன் சுலோகங்களில் எல்லாவஸ்துக்களுக்கு

1 என்னைத்தவிர குணங்களாலே பரதரமான வஸ்து உலகத்தில் கிடையாது. ( 7 )

மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ॥ ௭ ॥

ஸர்வமிதம் சிதசித்வஸ்துஜாதம் கார்யாவஸ்தம் காரணாவஸ்தம் ச மச்சரீரபூதம் ஸூத்ரே மணிகணவதாத்மதயாவஸ்திதே மயி ப்ரோதம் ஆச்ரிதம் । 'யஸ்ய ப்ருதிவீ சரீரம்... யஸ்யாத்மா சரீரம் .. ஏஷ ஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:' இதி ச்ருதிசதஸித்தமேவமவஸ்தாநம் ச ஜக்த்ஸு ஷ்ரேணாரநயாதிவ்யாஹாராதிஷு விதுஷ ॥ ௭ ॥

உண்டுபண்ணப் பட்டதும், அவைகளை யுண்டுபண்ணுகிறதுமான எல்லாஉலகமும், 2 நூலில் மணிகளை கோர்ப்பதுபோல்,

---

ம் யஜமானனையும், அவைகளை உண்டுபண்ணுகிறவனையும் சொன்னபடியாலே, பகவானை மிகவும் உயர்ந்தவன் என்று ஏற்படுகிறது. அதையே இந்த சுலோகம் உறுதிப்படுத்துகிறதென்றால், அவ்வளவு பிரயோஜனமுள்ளதாக ஆகாது. புதிதான ஸங்கதியைச் சொல்லக்கூடுமேயானால் அதைச்சொல்லுவதுதான் தகுதி. ஆகையாலே குணங்களால் உயர்த்தி சொல்லப்பட்டது.

1. சுலோகத்தில்"பரதரம்" என்றும், "அந்யத்" என்றும் சொற்கள் இருக்கின்றன. "அந்யத்" என்ற சொல்லை "மத்த: "என்ற சொல்லுடன் சேர்தது,என்னைததவிர வேறான மிகவு முயர்ந்த வஸ்து இல்லையென்று அர்த்தம் பண்ணவேணும். அப்படியில்லாமல் என்னைக்காட்டிலும் மிகவு முயர்ந்தது—என்று அர்த்தம் பண்ணினால் "அந்யத்"என்ற சொல் வேண்டியதில்லை. கீழே சொன்னபடி அர்த்தம் பண்ணினால், நான்தான் மிகவும் உயர்ந்தவன் என்று பொருள் கிடைக்கும். ஆகையால்,எனக்குஸமானனும், மேல்பட்டவனு மில்லை என்று ஏற்படும்.

2. நூல் அறுபட்டால் மணிகள் சிதறிப்போய்விடும். உடம்பில் ஆத்மா போய்விட்டால் அது அழிந்துபோய்விடும். அதுபோல் பகவான் இல்லாவிட்டால் உலகம்முடிய சிதறிப்போய்விடும். நூல் உதாரணத்தாலே எப்படி ஒரேநூல் எல்லாமணிகளையும் தூக்குகிறதோ, அப்படியே பகவானும் எல்லா உலகங்களையும் தூக்குகிறான் என்றும், மணிகள் நெருங்கி யிருந்தால் எப்படி நூல் மறைந்திருக்குமோ, அப்படியே பக

என்னிடத்தில் கோர்க்கப் பட்டிருக்கிறது.1 ( 6½ )

---

வான் எல்லா வஸ்துக்களிலு மிருந்தாலும், எல்லாருக்கும் தெரியாமல் மறைந்திருக்கிறான் என்றும், நூலாலே மணிகளுக்கு உபயோகமே யல்லாமல், மணிகளால் நூலிற்கு எப்படி உபயோக மில்லையோ, அப்படியே பகவானாலே எல்லா லோகங்களும தூக்கப்படுகிறதே யல்லாமல், அவன் அவைகளின் அதீனமா யிருக்கவில்லை என்றும் ஏற்படுகிறது.

1. இந்த சுலோகத்தில் எல்லாவஸ்துக்களில் பகவான் நுழைந்து, அவைகளைத் தூக்கிக் கொண்டிருக்கிறானென்று சொல்லியிருக்கிறது. வஸ்துக்களுக்குள்ளே நுழைந்திருப்பது அவைகளை ஏவி அவைகளைக் கொண்டு வேலைசெய்வதற்காக. இப்படி பகவான் எல்லாருடைய ஹிருதயத்தி லிருந்து ஏவி வேலை வாங்குகிறானென்று 18-வது அத்தியாயம் 61-வது சுலோகததில் சொல்லப் போகிறது. 4-வது சுலோகம் முதல் இதுவரையில் பகவானைப் பற்றிச்சொன்னதாவது—பகவான் எல்லாவற்றையும் தூக்குகிறான். எல்லாவற்றையும் ஏவி வேலை வாங்குகிறான். எல்லாம் அவனுடைய ஸொத்து. அதாவது-அவனுக்கு வேலைசெய்து அவனை ஸந்தோஷப் படுத்தவேண்டியது. ஆகையாலே எல்லாம் அவனுக்கு உடம்புகள். அவைகளுக்கு அவன் ஆத்மா. ஆத்மா என்பது-ஒருவஸ்துவைத் தூக்கிக்கொண்டு, அதை ஏவி வேலைவாங்கி, அதைத் தன்னிஷ்டப்படி உபயோகப் படுத்துகிறவன். உடம்பு என்பது—ஒரு அறிவுள்ளவனாலே தூக்கப்பட்டு, அவனால் ஏவப்பட்டு, அவன் இஷ்டப்படி உபயோகிக்கத் தகுந்த வஸ்து.

பகவானே எல்லா வஸ்துக்களாக ஆகிறான் என்று கீழே சொல்லப்பட்டது. இதினாலே அவனுக்கு உடம்பாகிய ஜீவன்களுக்கும், பிரகிருதிக்கும் போல அவனுக்கு மாறுதல் உண்டோ என்று ஸந்தேஹம் உண்டாகலாம். ஜீவன்களுக்கு ஸ்வரூபத்தில் வேறுபாடு இல்லை. அது ஒரேமாதிரியாக இருக்கிறது. ஆனால் அவனுடைய அறிவுஎன்கிற குணமானது சிலவேளைகளில் சுருங்கியும், சிலவேளைகளில் விரிவையடைந்து கொண்டு மிருக்கிறது. பிரகிருதியின் ஸ்வரூபமே மாறி, வேறு உருவங்கள்வந்து, வேறுபெயர்களை அடைகிறது. பகவானுக்கு இந்த இரண்டு விதமானவேறுபாடுகளும் கிடையாது. ஏனென்றால், அவன் ஆத்மாவாகவும், மற்றவைகள் அவனுக்கு உடம்பாகவும் இருக்கின்றன. நம்முடைய உடம்புகளுக்கு குழந்தைப்பருவமும், யௌவனமும், கிழத்தனமும் வருகிறபடியால் அதற்கு மாறுதல் இருக்கிறது. இது அந்த உடம்புக்குள் இருக்கும் ஜீவனுக்குக் கிடையாது. அதுபோல், இந்த சுலோகத்தாலே இன்னொரு ஸங்கதி ஏற்படுகிறது. "ஜீவன்களும், பிரகிருதியும் ஒன்றினால் தூக்கப்படவில்லை, அவைகள்தனியாகவெஇருக்கின்றன" என்றுசிலர் சொல்லுகிறார்கள். அந்தமதம்பிசகுஎன்று காட்டப்படுகிறது.

அவ — அதஸ்ஸர்வஸ்ய ஸர்வாவஸ்தஸ்ய சரீரதயா ஸர்வாவஸ்தப்ரகாரகஸ்தஸ்ய ப்ரகாரஸ் ஸர்வாவஸ்தம் ஜகதவஸ்திதமிதி ஸர்வை: சப்தைஸ்ஸோ'பிதீயத இதி தத்ர தத்ர ப்ரதானான்யாஹ—

ரஸோஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசிஸூர்யயோ:|
ப்ரணவஸ்ஸர்வவேதேஷு சப்த: கே பௌருஷம் ந்ருஷு ||
புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜச்சாஸ்மி விபாவஸௌ|
ஜீவனம் ஸர்வபூதேஷு தபச்சாஸ்மி தபஸ்விஷு || ||௯||
பீஜம் மாம் ஸர்வபூதானாம் வித்தி பார்த்த ஸநாதநம் |
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் || ||௧௦||
பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம் |
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப ||௧௧||

அதே ஸர்வவிலக்ஷணா பாவா: ஸத்த்வாதிகுணா: ஸர்வே ஷட்ஸூத்ரா: சரீரதயா சேஷத்வேனாவஸ்திதா: | ஸர்வஸூத்ரகாரோऽஹமேவாவஸ்தித: || ||அ-௧௧||

அவ—ஆகையால் எல்லாம் பகவானுக்கு உடம்புகள், அவன் அவைகளுக்கு ஆத்மா. ஆகையால் எல்லாம் அவனுக்குப் 1 பிரகாரங்கள். அவன் எல்லாப்பிரகாரமாயிருக்கிறான். எல்லா சொற்களும் அவனையே சொல்லுகின்றன. இந்தக்காரணத்தாலே அந்தந்த சொற்களாலே பகவானையே அடுத்தநாலுசுலோகங்கள் சொல்லுகின்றன—

1. உலகத்தில் ஒரு ரோஜாப்பூவைப் பார்க்கும்போது, "இது ரோஜா, இது சிகப்பு" என்று அறிகிறோம். "சிகப்பு" என்கிற அறிவு சிகப்பு என்கிற குணத்தையும், அது உடையவஸ்துவையும், ரோஜா என்கிற அறிவு ரோஜா என்கிற ஜாதியையும், அதுஉள்ள வஸ்துவையும் காட்டுகின்றன. இருப்பதாகத் தோன்றுகிற சிகப்பு என்கிற குணத்தையும், ரோஜாஎன்கிற ஜாதியையும் "பிரகாரம்" என்றும், அவைகளை உடையதாகத்தோன்றுகிற வஸ்துவை "பிரகாரி" என்றும் வடமொழியில்சொல்லுவதுவழக்கம். அந்தகுணமும்ஜாதியும்அந்தவஸ்துவைவிட்டுத் தனியாய் இருக்கிறதில்லை. அப்படியேபகவானிடத்தில் எல்லாவஸ்துக்

1ரஸம், வெளிச்சம் முதலான 2 விலக்ஷணமான எல்லா வஸ்துக்களும் என்னிடமிருந்துதான் உண்டாகின்றன. என்னுடைய உபயோகத்துக்காகவே தான் இருக்கின்றன. என் உடம்பாகையால் என் அதீனமாகவே இருக்கின்றன. ஆகையால் நானே எல்லாப்பிரகாரமாக இருக்கிறேன்—அதாவது அவையெல்லாம் எனக்குப் பிரகாரம். (8–11)

---

களும் ஒருபோதும் பிரியாமல் இருக்கின்றன. ஆகையாலே அவைகளைக் காட்டும்சொற்களாலே பகவானைவேதமும், வேதமறிந்தவர்களும் சொல்லுவது வழக்கம்.

1. ரஸம், வெளிச்சம் முதலான சொற்களாலே பகவானையே சொல்லுவதற்குக் காரணம் காட்டப்படுகிறது. உலகத்தில் "ராஜா தான் ராஜ்யம்" என்று சொல்லுகிறார்கள். அதற்கு ராஜாவின் அதீனமாக ராஜ்யம் இருக்கிறதென்று பொருள். இங்கே அப்படிப் பொருள் கொள்ளக் கூடாது. முக்கியமான பொருள் கிடைக்கும்போது, அதை விடுவதற்கு நியாயமில்லை.

2. 12-வது சுலோகத்தில் சொல்லப்போகிற ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்ட பதார்த்தங்களைக் காட்டிலும் வேறு என்று பொருள். இந்த நாலு சுலோகங்களில் சொல்லுகிற ரஸம்கந்தம் முதானவைகள் அந்தந்த திரவியங்களுக்கு முக்கியமான குணங்கள்.

சுலோகங்களுக்குப் பொழிப்புரை—ஜலத்திலுள்ள ரஸம் என்கிற குணம் நான். சந்திரனுடையவும் ஸூரியனுடையவும் வெளிச்சம் நான். எல்லாவேதங்களுக்கு முக்கியமான பிரணவமும், ஆகாசத்தில் சப்தம் என்கிறகுணமும், ஜீவன்களிடத்திலுள்ள வேலைசெய்யும் சக்தியும், நான். (குறிப்பு:—ரஸமென்பது ஜலத்தின் முக்கியமானகுணம். ஜலம் நெருப்பிலிருந்து உண்டாகும்போது- நெருப்பிலில்லாமல் ஜலத்துக்கு இந்தகுணம் புதிதாய் உண்டாகிறது. வெளிச்சம்என்பது—அது இருக்கும் ஸூரியனையும் சந்திரனையும் காட்டிலும் வேறான நாலுபக்கத்திலும் பரவுகிற தேஜஸ்ஸான திரவியம். இந்த வெளிச்சத்தைக் கொண்டு ஜகத்துக்குச் சந்திரனும், ஸூரியனும் உபகாரம் பண்ணுகிறபடியாலே அது முக்கியமானது. பிரணவமானது எல்லாவேதங்களின் அர்த்தத்தைச் சுருக்கமாகச் சொல்வதால் அது முக்கியமானது.)

9-வது சுலோகம்-பூமியிலுள்ள நல்லவாஸனையும், அக்னியிலுள்ள கொளுத்துகிற சக்தியும், உடம்போடு கூடிய எல்லா பிராணிகளும்

பிழைத்திருப்பதற்குக் காரணமும், தபஸ்ஸு செய்கிறவர்களின் தபஸ்ஸும் நான். (குறிப்பு—துளஸி முதலானவஸ்துவின் நல்வாஸனையாலே பூமி ஸத்வகுணத்தை அதிகப்படுத்துவதாலும், ஸுகத்தை உண்டு பண்ணுவதாலும் அது முக்கியமான குணம். உடம்போடு கூடிய எல்லாரிடத்திலும் என்று சொல்வதில் பிரும்மா முதலானவர்களைச் சேர்த்து சொல்லப்பட்டது.)

10-வது சுலோகம். அந்தந்த வஸ்துக்களுக்கு இருக்கும் இன்னொரு வஸ்துவாக ஆகிற சக்தியை நான் என்று தெரிந்து கொள். மண்ணோடு சேர்ந்த விதைக்கு மரமாக ஆகிறசக்திபோல. புத்திமான்களுடைய புத்தியாகவும், தேஜஸ்ஸையே ஸ்வபாவமாக உடையவர்களுடைய தேஜஸ்ஸாகவும் நான் இருக்கிறேன். (குறிப்பு-தேஜஸ்ஸு என்பது ஒருவனாலும் அவமானப்படுத்த முடியாதபடி இருப்பது. ஒருவனை அவமானப்படுத்தும் ஸாமர்த்தியம் என்றும் சொல்வது உண்டு.

11-வது சுலோகம் பலமுள்ளவர்களுடைய காமத்தாலும், ராகத்தாலும் விடப்பட்ட பலம் என்கிற குணம் நான் தேவர்களிடத்திலும் மனிதர்களிடத்திலுமிருக்கிற தர்மத்திற்கு விரோதமில்லாத காமமும் நான். (குறிப்பு:—ராகம் என்றால் ஆசை. அதுமுற்றினால் காமமாகிறது. இவைகளோடு சேர்ந்த பலமானது அயலாருக்கு ஹிம்ஸையை உண்டு பண்ணுமாகையால், அதுடன்சேராத—தர்மம் செய்வதற்கு உபயோகமான—பலம் இங்கே சொல்லப்பட்டது. தர்மத்துக்கு விரோதமில்லாத் காமமாவது—ஒருவனுக்குத்தன் மனைவியினிடத்தில் இருக்கும் ப்ரீதி முதலானது.)

வேதத்தில் சிலஇடங்களில் பகவான் வேறு, ஜகத்து வேறு என்று சொல்லியிருக்கிறது. இதைப்பேதச்ருதி என்று சொல்கிறது. வேறு சில இடங்களில் ஜகத்தே பகவான் என்று சொல்லியிருக்கிறது இதை அபேதச்ருதி என்று சொல்லுகிறது. இந்த இரண்டு சுருதிகளுக்கும் பொருந்தும்படியாக அர்த்தம் சொல்லவேண்டியது. உண்மையில் பகவான் வேறு, ஜகத்து வேறு. ஜகத்தைப் பகவானுக்கு உடம்பாகவும், பகவான் ஜகத்துக்கு ஆத்மாவாகவும், ஜகத்துப் பகவானுடனே எப்போதும் சேர்ந்தும், ஒருக்ஷணமும் அவனைவிட்டுப் பிரியாமலும் இருப்பதால், ஜகத்தையே பகவானாகச் சொல்லுகிறது. ஜீவனும், அவன் உடம்பும் எப்போதும் சேர்ந்திருக்கிறபடியால், அவர்களை உடம்பாகச் சொல்லுவது உலக வழக்கம். "நான் மனிதன்" என்று ஒருவன் சொல்லுகிறான். 'நான்" என்பது அழிவில்லாத ஜீவன். 'மனிதன்" என்பது அழியக்கூடிய உடம்பு. இவையிரண்டும் ஒன்றாக இருக்கமாட்டாது.

𑌅𑌥— 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇—

𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌭𑌾𑌵𑌾 𑌰𑌾𑌜𑌸𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌤𑍇 𑌮𑌯𑌿 ॥௧௨॥

𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌰𑌾𑌜𑌸𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌾𑌶𑍍𑌚 𑌜𑌗𑌤𑌿 𑌦𑍇𑌹𑌤𑍍𑌵𑍇𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑍇 𑌭𑌾𑌵𑌾𑌃, 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿। 𑌤𑍇 𑌚 𑌮𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌚 । 𑌨 𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁 — 𑌨𑌾𑌹𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌤𑌦𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃। 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌶𑌰𑍀𑌰𑍇𑌷𑍁 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍁𑌪𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌮𑌮 𑌤𑍁 𑌤𑍇𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌰𑌃। 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌲𑍀𑌲𑍈𑌵 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௧௨॥

தனித்தனியாய்ச் சொல்லுவானேன். உலகத்தில் சில வஸ்துக்களில் ஸத்வகுணமும், சிலவஸ்துக்களில் ரஜோகுணமும்,

---

ஆகையால் நான் உடம்பு என்பதற்கு, உடம்பிலே நான் இருக்கிறேன் என்று பொருள். அப்படியே "ஜகத்து பகவான்" என்றால், ஜகத்தில் பகவான் இருக்கிறான் என்று பொருள். இப்படித்தான் பொருள் கொள்ள வேணுமென்பது "ஜகத்து பகவானுக்கு உடம்பு" என்று சொல்லுகிற சில வேதவாக்கியங்களால் ஏற்படுகிறது. இவைகளுக்குக் கடகச்ருதி என்று பெயர். 4- 5- 6—வது சுலோகங்களில் பேதச்ருதியின் அர்த்தமும், 8—11—வது சுலோகங்களில் அபேதச்ருதியின் அர்த்தமும், 7-வது சுலோகத்தில் கடகச்ருதியின் அர்த்தமும் சொல்லப்படுகிறது.

வேறுசிலர்-"அபேதம் (பேதமில்லாமை) தான் உண்மை. பேதச்ருதி பேதத்தைக்காட்டுகிறது. பேதத்தைத்தெரிந்துகொண்டுதானே அதை இல்லையென்றுசொல்லவேண்டும், அதற்காக"-என்றுசொல்லுகிறார்கள். அது ஸரியானதன்று. ஏனென்றால், பேதம் என்று ஒன்று இருப்பதாக வேறு பிரமாணங்களாலே தெரிந்தாலன்றோ, அதை இல்லையென்று வேதம்சொல்லக்கூடும். பகவானை வேதத்தால் அல்லது அறியமுடியாததாலே அவனுக்கும் உலகத்துக்கும் பேதத்தை வேறுபிரமாணங்களாலே அறியமுடியாது. வேதத்தினாலேயே அதைத் தெரிந்துகொள்ளவேண்டியது. வேதம் முதலில் பேதத்தைச் சொல்லி, பிறகு அதை இல்லையென்று சொன்னால், அது பயித்தியக்காரன் வார்த்தை போலாகும். ஆகையாலே கீழே சொன்னபடிதான் பொருள் கொள்ளவேணும்.

சிலவஸ்துக்களில தமோகுணமும் மேலிட்டிருக்கின்றன. அவைகள் உடம்புகளாகவும், இந்திரியங்களாகவும், அவைகளால் அநுபவிக்கத்தக்கவைகளாகவும், 1 அவைகளை உண்டுபண்ணுகிறவைகளாகவும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் 2 என்னிடமிருந்தே உண்டானவைகள் என்று நினை என் உடம்புகளாய இருப்பதால், என் அதீநமாயுமிருக்கின்றன ஒருக்காலத்திலும் அவைகள் அதீநமாய் நான் இருக்கவில்லை. உலகத்தில ஆத்மாவின அதீநமாக உடம்புகள் இருந்தபோதிலும், உடம்பினாலே ஆத்மாவுக்கு உதவி உண்டு. அப்படி அவைகளாலே எனக்குத் துளிக்கூட உதவி இல்லை அவைகளை நான் விளையாட்டு (லீலை)க்காக வைத்துக் கொண்டிருக்கிறேன். ( 12 )

த்ரிபிர்குணமயைர்பாவைரேபிஸ்ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய: பரமவ்யயம் ॥ ॥௧௩॥

ததேவம் சேதநாசேதநாத்மகம் க்ருத்ஸ்நம் ஜகந்மதீயம் கார்யே காரணே ச மதாத்மகத்வேந மயி ச வர்த்ததே, ஸர்வா வஸ்திதம், மச்சரீரபூதம், மதாத்மகம் சேத்யுக்தமேவ காரணாவஸ்தாயாம் கார்யாவஸ்தாயாம் ச ஸூக்ஷ்மஶரீரதயா ஸ்தூலப்ரகாரோ'வஸ்தித: । அத: காரணத்வேந ஶேஷித்வேந ச ஜ்ஞாநாத்யஸங்க்யேயகல்யாணகுணகணேந ஸ்வாமித்வேந ச ஸர்வை: ப்ரகாரை: பரதர:, ஸத்த்வாத்யுதேநாபி கல்யாணகுணகணேந பரதரம் ந வித்யதே । ஏவம்பூதம் மாம் த்ரிஷு ஸாத்த்விகராஜஸதாமஸகுணமயைர்பாவை: பா-தேவஸாயுஜ்யைர்மோஹிதம் க்ஷணத்வம்ஸிதுர்ணிரூபணாத்மகா ப்ரகாரேஷு பரம்ஸ்ப்ருஷ்டத்வம், க்ஷயம்-ஸஞ்ஜேகாரணமேவ

1. இதனால் ஸமஷ்டி இருப்பு சொல்லப்படுகிறது.

2 "என்னிடமிருந்தே" என்பதாலே உலகத்திற்கு உபாதாக காரணமும், நிமித்தகாரணமும் பகவானே ஒருவனே என்று காட்டப்படுகிறது. மேலும், ஸத்வகுணம் மேலிட்டது முதலான பலவஸ்துக்களைச் சொல்லுவதாலே அந்தந்தத் தருந்த அநேககாரணங்கள் உண்டோ என்ற ஸந்தேஹமும் தீர்க்கப் படுகிறது

[illegible] मोहितं जगन्नाभिजानाति ॥ ॥௧௩॥

அவ—இப்படி பகவானுடைய உண்மையான ஸ்வரூபம் சொல்லப்பட்டது. மேல் பிரகிருதியினாலே அது மறைக்கப்படுகிறது என்று சொல்கிறார்.

இப்படி அறிவுள்ளது, அறிவில்லாததுஎன்று இருவகையான இந்த எல்லா உலகமும் என்னுடையது. அந்தந்த காலத்தில் என்னிடமிருந்துதான் உண்டாகிறது. பிறகு என்னிடம்தான் வந்து அடங்குகிறது. என்னிடத்திலேயே இருக்கிறது, அது எனக்கு உடம்பு. நான் அதுக்கு ஆத்மா. இந்தக்காரணங்களாலே, பிரளயகாலத்தில் அழியாமலிருக்கிற ஜீவன்கள் உருவமாயும் பிரகிருதி உருவமாயும் நான்தான் இருக்கிறேன். இப்போது காணப்படுகிற அநேக வஸ்துக்களின உருவமாயுமிருக்கிறேன். ஆதலால் உண்டு பண்ணுவதாலும், எல்லா வஸ்துக்களையும் உபயோகித்துக் கொள்வதாலும், அறிவு முதலான கணக்கில்லாத உயர்ந்த நல்ல குணங்களாலும் எல்லாவிதத்தாலும் நானே மிகவும் உயர்ந்தவன். என்னிடத்திலிருக்கும் ஒரு ஸங்கதியாலாவது மிகவும் உயர்ந்தவஸ்து வேறொன்றும் கிடையாது. இப்படி ஸத்வம் முதலான மூன்று குணங்களுள்ள மற்ற எல்லாவஸ்துக்களைக் காட்டிலும், என்னிடத்தில் மாத்திரமிருக்கிற நல்லகுணங்களின் கூட்டங்களாலும், 1 பலவிதத்தாலே நான் இன்பமாயிருப்பதினு

1. பிரகிருதியிலிருந்து உண்டான வஸ்துக்கள் சப்தம் முதலான தங்களுடைய குணங்களாலே ஸுகத்தைக்கொடுக்கின்றன. பகவானோ ஞானம் சக்திமுதலான குணங்களாலும், திருமேனியினுடையபலவிதங்களான குணங்களாலும், சுத்த ஸத்வம் என்கிற திரவியத்தினுடைய சப்தம் முதலான குணங்களாலும், பிராகிருத வஸ்துக்களையும் பகவானுடையது என்கிற எண்ணத்தினால் ஸுகத்தைக் கொடுப்பதாகப்பண்ணுகையாலும் பகவான் மிருந்த ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவன். அந்த ஸுகங்களின் உயர்த்திக்கு எல்லையில்லை.

னும் மிகவும் உயர்ந்தவனையும், இவைகளுக்கு ஒருக்காலும் குறைவில்லாதவனையும், எப்போதும் ஒரே மாதிரியாயும் இருக்கிற என்னை-தேவன், மாடு(திர்யக்) மனிதன், மரம்(ஸ்தாவரம்)என்று 1 நான்கு வகைப்பட்ட உலகம், 2 ஸத்வம் முதலான குணங்களால் ஏற்பட்டதாயும், மிகவும் இளப்பமாயும், நிலையில்லாததாயும் அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி உடம்புகளாயும், இந்திரியங்களாயும், பிள்ளை பெண்டாட்டி முதலான அநுபவிக்கத் தகுந்த வஸ்துக்களாயுமிருக்கிற பதார்த்தங்களினாலே 3 மயங்கி அறியவில்லை. (13)

[illegible]

1. சுலோகத்தில் 'இந்த எல்லா ஜகத்' என்ற சொற்கள் இருக்கின்றன. அதில் "எல்லா" என்கிற சொல்லானது தேவஜாதியில் சேர்ந்த பிரும்மா முதலானவர்களை மற்றவர்களுடன் சேர்த்துச் சொல்லுகிறது. "இந்த" என்கிற சொல்லாலே கண்ணாலே பார்க்கப் படுகிற மரம் மாடு மனிதன் முதலான வேறுபாடுகளைக் காட்டுகிறது. "ஜகத்" என்ற சொல்லானது உடம்புகளோடு சேர்ந்த ஜீவன்களைச் சொல்லுகிறது.

2. "ஸத்வம் முதலானகுணங்களால் ஏற்பட்ட" என்பதாலே ஸுகத்தில் துக்கத்தின் கலப்பு சொல்லப்பட்டது. ரஜஸும் தமஸும் துக்கத்திற்கும் மோஹத்திற்கும் காரணம் என்று 14-வது அத்தியாயத்தில் சொல்லப்போகிறார் "கர்மங்களுக்கு தக்கபடி" என்பதாலே இவைகளுண்டாகி போகிறதென்றும், ஆகையாலே நிலையில்லாதது என்றும், இளப்பம் என்றும் ஏற்படுகிறது.

3. சுலோகத்தில் "மூன்று வகையான வஸ்துக்களாலே மயங்கி" என்று சொல்லியிருக்கிறது. அவைகளில் ஸத்வகுணம் மேலிட்டவைகள் ஒருவகை. ஸத்வகுணத்தால் அறிவன்றோ உண்டாகிறது. அதனாலே எப்படி மயக்கமுண்டாகும் என்றால், பதில்--விஷம்கலந்த அன்னத்தில தேனைச்சொட்டவிட்டால் முட்டாளுக்கு அதைச் சாப்பிடவேணுமென்று ஆசைஉண்டாகும். அப்படியே அவனவன் கர்மத்துக்குத் தகுந்தபடி துக்கத்தைக்கொடுக்கக் கூடிய வஸ்துக்களில் துளி ஸுகமிருப்பதாலே,அந்தஸுகத்தின் ஆசையாலே ஜனங்கள் மயங்கக்கூடும். ஸத்வம என்பது ஸுகத்தில் ஆசையை யுண்டு பண்ணும் குணம.

𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑍇𑌷𑍁 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌜𑌨𑌨𑌾𑌯 𑌤𑌦𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌾𑌰𑌃—

𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 ॥ ॥௧௪॥

𑌮𑌮𑍈𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀-𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌮𑌯𑍀, 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍈𑌵𑍀-𑌦𑍇𑌵𑍇𑌨 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌮𑌯𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾 । 𑌸𑌦𑍈𑌵 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾-𑌦𑍁𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌾 । 𑌅𑌸𑍍𑌯𑌾𑌃 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌾𑌸𑍁𑌰𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌤𑍍𑌵𑍇𑌨; 𑌯𑌥𑌾 "𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑌚𑍍𑌛𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯𑌾𑌶𑍁𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 । 𑌬𑌾𑌲𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌤𑌾 𑌦𑍇𑌹𑌮𑍇𑌕𑍈𑌕𑌾𑌂𑌶𑍇𑌨 𑌸𑍂𑌦𑌿𑌤𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 । 𑌅𑌤𑍋 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑍋 𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌾𑌚𑍀 । 𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌾𑌲𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌕𑍇𑌚𑌨 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍌𑌷𑌧𑌾𑌦𑌯𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌾𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑍍𑌯𑌾 𑌏𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌵𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌃 । 𑌤𑌥𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍌𑌷𑌧𑌾𑌦𑌿𑌰𑍇𑌵 𑌚 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌾𑌯𑌾, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌗𑌤𑌸𑍍𑌯𑍈𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌶𑌬𑍍𑌦𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍋 𑌮𑌾𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌔𑌪𑌚𑌾𑌰𑌿𑌕𑌃 । 𑌮𑌞𑍍𑌚𑌾𑌃 𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑍀𑌤𑌿𑌵𑌤𑍍 । 𑌸𑍈𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑍀 𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌾𑌯𑍈𑌵 "𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌿𑌨𑌂 𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌅𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂, 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌭𑍋𑌗𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 । 𑌅𑌤𑍋 𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌾𑌯𑌯𑌾 𑌮𑍋𑌹𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 ॥ ॥௧௪॥

அவ— தேவரீர் இருக்கும்போது எல்லா ஜனங்களுக்கும் மற்ற வஸ்துக்கள் எப்படிப் பிடிக்கின்றன. தேவரீரோ, இயற்கையாகவே அளவில்லாமல், உயர்ந்த ஆநந்தத்தைக் கொடுக்கிறவர், அழிவில்லாதவர். எப்போதும் ஒரேவிதமாயிருப்பவர். உலகத்திலுள்ள வஸ்துக்களைக் காட்டிலும் மிகவும் இன்பமானவர். உலகத்திலுள்ள வஸ்துக்களோ மூன்று குணமுள்ளவைகள். ஆதலால்

துக்கம் கலந்த ஸுகத்தைக் கொடுக்குமவைகள். இளப்பமானவை கள். நிலையில்லாதவைகள் என்றால், பதில் சொல்லுகிறார்—

உலகத்தை யுண்டு பண்ணுவது முதலான வேலைகளை விளையாட்டாகச் செய்து கொண்டிருக்கிற நான் ஸத்வம் முதலான மூன்று குணங்களோடுகூடிய பிரகிருதி என்கிற 1 என்னுடைய வஸ்துவை ஜீவன்களை மயக்கும்படி 2 செய்திருக்கிறேன். ஆகை

1. மாயை என்பது, பிரகிருதி. அதை வைத்துக்கொண்டு வேலை செய்கிறவன் மாயீ. கிருஷ்ணபகவான் தான் மாயீ. மாயீ வேறு, கிருஷ்ணபகவான் வேறு என்று உண்டாகும் ஸந்தேஹத்தைத் தீர்ப்பதற்காக சுலோகத்தில் "மம மாயா" (என்னுடைய மாயை) என்கிற சொல் இருக்கிறது.

2. பகவான் மிகுந்த இரக்கமுள்ளவனல்லவா? எல்லாரையும் காப்பாற்ற வேண்டியவன் எப்படி பிரகிருதியைக் கொண்டு மயக்கலாம்—என்றால், பதில்—உலகத்தில் ஒருகுழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது? அதற்கு நடை பழக்கு வதற்காக ஒரு பொம்மையை முன்னாலே வைக்கிறார்கள். அதை எடுப்பதற்காக ஆசைப்பட்டு குழந்தைத் தட்டுத்தடுமாறி நடந்து வருகிறது. அப்படியே பகவானும் ஜீவன்கள் தன்னைத்தியாகம் செய்வதற்காக வேண்டிய சில குணங்களைப் பழக்கத்திலே ஸம்பாதிக்கும்படி உலகத்திலுள்ள வஸ்துக்களை நம் மனதையும், இந்திரியங்களையும் இழுக்கும்படி செய்திருக்கிறான். அவர்கள் அவைகளால் இழுக்கப்பட்டு அந்தவஸ்துக்களை ஸம்பாதிக்கப் பிரயத்தினப்படுகிறார்கள். இப்படி வேண்டிய குணங்களைப் பழக்கத்திலே அடைகிறார்கள். அந்த குணங்களாவன—கட்டாயம் செய்யவேண்டிய வேலையைச் செய்யும்போது உண்டாகும் வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ளுதல். இதை வடமொழியில் "திதிக்ஷா" என்று சொல்லுகிறது. இரண்டாவது குணம் விடாமுயற்சி. ஒரு வேலையைச் செய்து பலன் பெறாவிட்டாலும், பலன் வருகிறவரையில் திருப்பித் திருப்பி அந்த வேலையைச் செய்வது. இதை "த்ருதி" என்று வடமொழியில் சொல்லுகிறது. செய்யவேண்டிய வேலையில் மனதை வைத்து, வேறொன்றிலும் அதை விடாதிருப்பது. இதை வடமொழியில் "ஜகாக்ரியம்" என்று சொல்லுகிறது. இது மூன்றாவது குணம். இன்னொரு குணம் உத்ஸாஹம். இவை முதலானவை. இவைகளைப் பிச்சைக்குப் போகிறவனிடம் பார்க்கலாம். பிச்சை கேட்கும்போது அவனை வைதால், அதைப் பொறுத்துக் கொள்கிறான். சிலவிடங்களில் ஒரு தடவையில் பிச்சை கிடைக்

யாலே 1 ஒருவனும் அதைத்தாண்ட முடியாது. ஆகையால் என்னுடையமாயையினால்மயங்கிக்கிடக்கிற எல்லா ஜகத்தும்"நான் எல்லையில்லாத ஆநந்தத்தைக் கொடுக்கிறவன்" என்று தெரிந்து கொள்ளவில்லை.

இந்த சுலோகத்தில் இருக்கும் "மாயா"என்கிற சொல்லுக்கு ஆச்சரியமான வேலையைச் செய்கிற வஸ்து என்று பொருள். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் "சம்பரன் என்கிற அஸுரனுடைய ஆயிரம் மாயைகளை பெருமாளுடைய சக்கிரம் அறுத்து விட்டது." என்று சொல்லி யிருக்கிறது. அந்த இடத்தில் மாயா என்பதற்கு ஆச்சரியமான வேலைகளைச் செய்யும் ஆயுதம் என்று பொருள். ஆகையால் அந்த சொல்லுக்குப் பொய் என்று பொருள் இல்லை. இந்திர ஜாலம் செய்கிறவனை மாயாவீ (மாயையுள்ளவன்) என்று சொல்வதுண்டு.பார்க்கிறவர்களுக்குஉண்மையிலில்லாதவஸ்துக்களைத்தோன்றும்படிபண்ணுகிறமந்திரம்,பச்சிலை முதலானவைகளைவைத்துக் கொண்டிருப்பதாலே அவனுக்கு இந்தப் பெயர் வருகிறது. மந்திரம், பச்சிலை முதலானவைகளே அந்த விடத்தில் மாயை. அவைகள் பொய்யன்று அவைகளால் உண்டாகும் புத்தியும் பொய்யன்று. மாயை என்கிற சொல்லை உபயோகப்படுத்துகிற எல்லா

---

காவிட்டாலும் உறுதியுடன் பலதடவை அதே இடங்களுக்குப் போகிறான். பிச்சை வாங்குவதிலேயே அவன் மனது நிற்கிறது. அவன் உத்ஸாஹத்தைச் சொல்ல வேண்டியதில்லை. என்ன மழை பெய்தாலும், என்ன இடி இடித்தாலும், அவன் வேலை நிற்கிறதில்லை.

இப்படிப் பிரகிருதியிலிருந்து உண்டான வஸ்துக்களை ஜீவன்களை இழுக்கும்படி செய்வதாலே அவர்கள் அவைகளிலேயே மூழ்கிப் போவார்கள் என்று அவைகளில் துக்கத்தையும் கலந்து வைத்திருக்கிறான். அவைகளை ஸம்பாதிக்கும்போதும் அநுபவிக்கும்போதும் அவைகளில் உண்டாகும் துக்கத்தைப் பார்த்து, ஜீவன்கள் அவைகளை விட்டுவிட வேணுமென்று பகவானுடைய கருத்து.

1. பகவான் தன் இஷ்டப்படி நடக்கிறவன். அவன் ஒருவராலும் செய்ய முடியாத வேலைகளை செய்யும் சக்தியுள்ளவன். அவன் விளையாட்டுக்காகப்பிரகிருதியை எல்லாரையும் இழுக்கும்படி செய்திருக்கிறான். எல்லா ஜீவன்களும் அவனுக்குள்பட்டவர்கள். எவன் அதைத் தாண்டக்கூடும்?

விடங்களுக்கும் பொருத்தமான ஒரே பொருளைச் சொல்ல வேண்டியது. சில இடங்களில் பொய்யான ஸங்கதியை மாயை என்று சொல்வதுண்டு. அந்த இடங்களில் அந்தப் பொய்யான வஸ்துக்கள் மாயையல்ல. மாயையினால் தோன்றுகின்றன. அதனால் அவைகளை மாயை என்று சொல்லுகிறது. ஒருவன் ஒருவீட்டு ஜனங்களால் தொந்திரவை அடையும்போது, அந்த வீட்டுத்தொந்திரவு தாங்கமுடியவில்லை என்று சொல்லுகிறான். அந்த வீடா தொந்திரவு பண்ணிற்று? அல்ல. வீடு என்கிற சொல்லுக்கு வீட்டிலுள்ள ஜனங்கள் என்று பொருள். அதுபோல் மாயை என்பதற்கு மாயையினால் தோன்றுகிறது என்று பொருள். எல்லா சொற்களுக்கும் இன்ன இன்ன பொருளென்று ஏற்பட்டிருக்கிறது. வீடு என்கிற சொல்லுக்கு வீடுதான் பொருள். அதை முக்கியமான பொருள் என்று சொல்லுகிறது. வீடு என்கிற சொல்லுக்கு வீட்டிலிருப்பவர்களைப் பொருளாகக் கொண்டால், அந்தப் பொருளை கௌணம் என்று சொல்லுகிறது. அவைகளை தோன்றப் பண்ணுகிற மாயை என்கிற வஸ்து உண்மைதான். உபநிஷத்துக்களில் இந்த சொல்லானது பிரகிருதியைச் சொல்லுகிறது. அதை அடக்கி ஆளுகிற பகவானை "மாயீ" (மாயையுடையவன்) என்று சொல்லுகிறது. இது என்ன ஆச்சரியமான வேலையைச் செய்வதென்றால்,நாம் பகவானுடைய ஸ்வரூபத்தை அறியவொட்டாமல் பண்ணுறதும், பிரகிருதியினால் உண்டான பல தொந்தரவுகளைக்கொடுக்கிற பிள்ளை பெண்டாட்டி முதலான வஸ்துக்களை இன்பமென்று நினைக்கும்படி செய்வதும், இதுமுதலானபல வேலைகளைச் செய்கிறது. (13½)

அத — மாயாவிமோசநோபாயமாஹ —

மாமேவ யே ப்ரபத்3யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||௧௪||

மாமேவ - ஸத்யஸங்கல்பம் பரமகாருணிகம் அநாலோசிதவிசேஷாசேஷலோகசரண்யம் யே சரணம் ப்ரபத்3யந்தே, தே ஏதாம் மதீ3யாம் கு3ணமயீம் மாயாம் தரந்தி - மாயாமுத்ஸ்ருஜ்ய மாமேவோபாஸதே இத்யர்த2: ||

||௧௪||

அவ— இந்த மாயையைப் போக்குவதற்கு வழி சொல்லு கிறார்—

1 நினைத்த வேலையை முடிக்கிறவனும் அளவில்லாத தயை யுள்ளவனும், தாரதம்மியம் பார்க்காமல் எல்லாப்பிராணிகளையும் காப்பாற்றுகிறவனுமான 2 என்னையே எவர்கள் கெஞ்சிக்கேட் டுக் கொள்ளுகிறார்களோ, அவர்கள் இந்தப் பிரகிருதியால் மயங் காமல் என்னையே தியானம் செய்கிறார்கள். [14]

அவ—கிமிதி ஸுலபபாவாஸநாவாஸிநீம் ஸுலபத்வகீர்திம் ஸர்வே ந கஸ்மாத் ப்ரபத்³யந்த இத்யத்ராஹ—

ந மாம் து³ஷ்க்ருதிநோ மூடா⁴: ப்ரபத்³யந்தே நராத⁴மா:।
மாயயாऽபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பா⁴வமாஸ்ரிதா: ॥௧௫॥

---

1. நான்போட்ட விலங்கை நான்தான் தறிக்கவேணும். எனக்கு விலங்கு போடுவதில் மாத்திரம் எண்ணமில்லை. கெஞ்சிக்கேட்டுக்கொ ண்டால், முன் எண்ணத்தை மாற்றி விலங்கைத்தறித்து விடுவேன். ஆகையால் என்னைத்தான் கெஞ்சவேணும். என்னைக்கெஞ்சினுல் பிர யோஜனமுண்டு. மயக்கத்தைத் தீர்க்கும் சக்தி மாத்திர மிருந்தால், போதாது. தயையும் கூட இருக்கவேணும். இல்லாவிட்டால் அவனைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுவதில் பிரயோஜனமில்லை தயையிருந்தாலும் "இவனைச்சேர்த்துக் கொள்ளலாம், இவனைச்சேர்த்துக் கொள்ளக் கூடாது" என்று லோகத்தாரைப்போல் கட்டுப்பாடு பண்ணினுல், பொறுக்கமுடியாத குற்றங்களைச் செய்த சிலர் அவனிடம் போகமுடி யாது. ஆகையால் தாரதம்மியம் பாராமல் எல்லாரையும் ரக்ஷிக்கிறவனுய் இருக்கவேண்டும். இந்த குணம் பகவானுக்கு இருக்கிறதென்று காக் கை, குரங்கு (ஸுக்ரீவன்) ராக்ஷஸன் (விபீஷணன்,) த்ரௌபதி முத லானவர்கள் சரித்திரத்தால் நன்றாய் தெரிந்து கொள்ளலாம், "ராவ ணனே வந்தாலும் சேர்த்துக்கொள்வேன்" என்றுசொல்லியிருக்கிறான்.

2. பகவானுடைய ஸ்வரூபத்தை மறைக்கிறபடியால். பிரகிருதி ஒரு திரைபோல் இருக்கிறது. அவனைக்கெஞ்சி கேட்டுக் கொள்ளுகிற வனுக்கு அது மறைக்கிறதில்லை. மறைக்காததும் தவிர அந்தப்பிரகி ருதியே கண்ணுடிபோல் இருந்து பகவானுடைய குணங்களையும் தன் னுடைய கெடுதிகளையும் காட்டுகிறது.

மாம் துஷ்க்ருதிந:-பாபகர்மாணோ மாம் ந ப்ரபத்யந்தே| துஷ்க்ருததாரதம்யாத் சதுர்விதா பவந்தி-மூடா:-நராதமா:-மாயயாபஹ்ருதஜ்ஞாநா:-ஆஸுரம் பாவமாஶ்ரிதா: இதி| மூடா:-விபரீதஜ்ஞாநா: பூர்வோக்தப்ரகாரேண பகவச்சேஷதைகரஸமாத்மாநம் போக்யஜாதம் ச ஸ்வஶேஷதயா மந்யமாநா:| நராதமா:-ஸாமாந்யேந ஜ்ஞாதேऽபி மதீயத்வே மதுந்முக்யாநர்ஹா:| மாயயாபஹ்ருதஜ்ஞாநா:-மத்விஷயம் மதைஶ்வர்யவிஷயம் ச ஜ்ஞாநம் யேஷாம் ததஸம்பாவநாபாதிநீபி: குயுக்திபிரபஹ்ருதம், தே ததோக்தா:| ஆஸுரம் பாவமாஶ்ரிதா:-மத்விஷயம் மதைஶ்வர்யவிஷயம் ச ஜ்ஞாநம் ஸுத்ருடமுபபந்நம் யேஷாம் த்வேஷாயைவ பவதி, தே ஆஸுரம் பாவமாஶ்ரிதா:| உத்தரோத்தரா: பாபிஷ்டதமா:||

அவ—இப்படியிருந்தால் பகவானுடைய தியானத்தை உண்டு பண்ணக்கூடிய பிரபத்தியை அவனிடத்தில் ஏன் எல்லாரும் செய்கிறதில்லை என்றால், சொல்லுகிறார்—

பாபம் பண்ணினவர்கள் என்னிடத்தில் வந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்வதில்லை. அவர்கள் பாபத்தின் தாரதம்மியத்தாலே நாலுவகைப்பட்டவர்கள். (1) மூடர்கள். அதாவது முன் சொன்னபடி நமக்கு யஜமாநனாக பகவான் என்று ஒருவன் இருக்கிறானென்று அறியாமல், இயற்கையாக அவனுக்குச்சேஷமாயிருக்கிற தன்னையும், மற்ற எல்லா வஸ்துக்களையும் தனக்காகவே இருப்பதாக நினைக்கிறவர்கள். (2) நராதமர்கள் 1 (மனிதர்களுக்குள்ளே மிகவும் தாழ்ந்தவர்கள்.) அதாவது—தைவம் என்று ஒன்று

1. அறிவில்லாதவர்களுக்கும் கெட்டயுக்திகளால் அறிவைக்கெடுக்கிறவர்களுக்கும் நடுவில்நராதமன்என்ற சொல்லினாலேபகவானுடைய அறிவுவந்தவரைத்தான் சொல்லவேணும். உபநிஷத்துக்களின் அர்த்தத்தைஸந்தேஹமில்லாமல் தெரியாவிட்டாலும்,எல்லா லோகங்களிலும் பிரஸித்தமான புராணக்கதைகளாலேபகவானைப் பொதுவாகத் தெரியும். ஆனால் அவனுடைய நல்ல குணங்கள் நன்றாய் தெரியாது. அதனால்அவனிடம் போக வேணுமென்று எண்ணமுண்டாக வில்லை. த்வேஷமுமில்லை.

இருப்பதாகப்பொதுவாகத்தெரிந்தாலும், அவனிடம் போகவேணும், அவனை நினைக்கவேணும் என்று எண்ணமில்லாதவர்கள். (3) சாஸ்திரங்களைக் கொண்டு தைவத்தையும், அது எல்லா உலகங்களுக்கும் யஜமானன் என்பதையும் அறியும்போது, "அது எப்படியிருக்கக்கூடும்" என்கிற தப்பு யுக்திகளைக் கொண்டு அதைத் தூஷிக்கிறவர்கள். (4) தைவம் எல்லா உலகத்துக்கும் யஜமானன், எல்லாவற்றையு முண்டு பண்ணுகிறவன் என்று தீர்மானமாய் தெரிந்தும், அவனிடத்தில் த்வேஷம் பண்ணுகிறவர்கள். இவர்களில் முதல் வகுப்பைக் காட்டிலும் இரண்டாவது வகுப்பார்கெட்டவர். இரண்டாவது வகுப்பாரைக் காட்டிலும் மூன்றாவது வகுப்பார் இன்னும் கெட்டவர்கள். நாலாவது வகுப்பார் எல்லாரையும் காட்டிலும் கெட்டவர்கள். 1 [15]

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந|
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப ||

ஸுக்ருதிந:-புண்யகர்மாண:, தே மாம் பஜந்தே| தே ச ஸுக்ருததாரதம்யேந சதுர்விதா:| ஸுக்ருதகரீயஸ்த்வேந ப்ரதிபத்திவைஶேஷ்யாத் உத்தரோத்தராதிகதமா பவந்தி| ஆர்த:-ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைஶ்வர்ய:-புநஸ்தத்ப்ராப்திகாம:| அர்தார்தீ-அப்ராப்தைஶ்வர்யதயா ஐஶ்வர்யகாம:| தயோர்முகபேதமாத்ரம், ஐஶ்வர்யவிஷயதயா ஐக்யாத் ஏகத்வேநாதிகார:| ஜிஜ்ஞாஸு:-ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு:| ஜ்ஞாநமேவ அஸ்ய ஸ்வரூபமிதி ஜிஜ்ஞாஸுரித்யுக்தம்| ஜ்ஞாநீ ச "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்" இத்யாதிநாபிஹிதபகவ

---

1. அறியாதவன் குற்றம் பண்ணுவதைக் காட்டிலும் அறிந்தவன் குற்றம் பண்ணினால், அவனுக்கு அதிக தண்டனை உண்டு. இந்த நியாயப்படி இவர்களுக்கு நல்ல ஞானமிருப்பதே அவர்களை மிகுந்த பாபிகள் என்று சொல்லுவதற்குக் காரணம். ஏனென்றால் அறிவு த்வேஷத்துக்கு மாத்திரம் உதவுகிறது. நன்றாக பகவானை அறிந்தும் அவனை த்வேஷிப்பதற்குக் காரணம் முன்செய்த பாபத்தின் கொடுமை.

சதுர்விதா⁴ ப⁴ஜந்தே மாம் | ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தா²ர்தீ² ஜ்ஞாநீ ச ப⁴ரதர்ஷப⁴ ‖ ‖ ௧௬ ‖

புண்ணியம் பண்ணினவர்கள் என்னிடத்தில் பிரபத்தி பண்ணி, அதாவது என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, என்னையே தியானம் பண்ணுகிறார்கள். அவர்களும் புண்ணியத்தின் தாரதம்மியத்தினாலே நாலுவகைப் பட்டவர்கள். (1) பணம் ஏராளமாய் இருந்து, அது போய், மறுபடியும் அது வேணும் என்று ஆசைப்படுகிறவர்கள். (2) மிகவும் ஏழையாகவே யிருந்து, புதிதாகப் பணம் வேணுமென்று ஆசைப்படுகிறவர்கள். இந்த இரண்டு வகுப்பாரும் ஒரே வகுப்புதான். அவர்களுக்கு வேண்டிய பிரயோஜநம் பணம் மாத்திரம் தான். பணம் என்கிற சொல்லாலே பிரும்மப்பட்டம் வரையிலுள்ள ஸம்பத்தைச் சொல்லுகிறது. (3) உடம்பை விட்டு 1 ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்க வேணுமென்று ஆசைப்படுகிறவர்கள். (4) ஞானிகள். அதாவது—தாங்கள் பகவானுக்காகவே ஏற்பட்டவர்கள் என்று அறிந்து பகவானையே யடையவேணும் என்றும், அவனே எல்லாப் பிரயோஜநங்களுக்கும் மேல்பட்ட பிரயோஜநம் என்றும் எண்ணுகிறவர்கள். அவர்கள் ஜீவாத்மஸ்வரூபத்தை

1. முதலிரண்டு வகுப்பார்கள் வெளியிலிருக்கும் பிரயோஜநங்களை ஆசைப்பட்டவர்கள். ஞானி என்பவர்கள் பகவானை ஆசைப்பட்டவர்கள். ஆகையால் மூன்றாவது வகுப்பார் ஜீவாத்மஸ்வரூபத்தைமாத்திரம் பார்க்கிறவர்கள் என்றே கொள்ளவேணும். ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்ப்பது விஷயங்களைக்காட்டிலும் மிகுந்த ஆனந்தத்தை கொடுக்கக்கூடியது. அதுவும் ஜீவன் அடையவேண்டிய வஸ்து. பணம் வேண்டுகிறவர்களைஒரு வகுப்பாக சொன்னபடியாலே, மூன்றே வகுப்பு ஏற்படுகிறது. இந்த மூன்று வகுப்பைப்பற்றியே எட்டாவது அத்தியாயத்தில் பேசப்போகிறார்.

ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்ப்பதற்கு ஒரு இடம் ஏற்பட்டிருக்கிறது, சிலர் அதற்கு வேண்டிய வேலைகளைச்செய்து, அந்த இடத்திற்குப் போய், கொஞ்சகாலம் ஜீவாத்மஸ்வரூபத்தைப் பார்த்து மறுபடியும் பிறக்கிறார்கள். அவர்களன்று இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டவர்கள். வேறுசிலர் மோக்ஷத்தை அடைவதற்காக, மோக்ஷத்

மாத்திரம் பார்ப்பதில் நிற்காதவர்கள். இவர்களில் முதல் இரண்டாவது வகுப்பாரைக் காட்டிலும் மூன்றாவது வகுப்பார் உயர்ந்தவர். நாலாவது வகுப்பார் எல்லாரைக்காட்டிலு முயர்ந்தவர்] ஏனென்றால், பிரபத்திக்கு வேண்டிய நம்பிக்கை முதலானவைகள் எல்லாருக்கும் இருந்தாலும், அவர்கள் ஆசைப்படும் பலத்தின் பேதத்தால் பிரபத்திகளுக்கு பேதமும், அவைகளைச் செய்தவர்களின் பேதமும் ஏற்படுகிறது. [16]

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤 𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌹𑌂 𑌸 𑌚 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇, 𑌕𑍁𑌤𑌃 ? 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤 𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚-𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌮𑌦𑍇𑌕𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌯𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 ॥ 𑌇𑌤𑌰𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌯𑌾𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌲𑌷𑌿𑌤𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿 𑌮𑌯𑌾 𑌯𑍋𑌗𑌃 । 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋 𑌮𑌯𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌇𑌤𑌰𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌲

---

தைக்கொடுக்கக்கூடிய வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் சிலகாரணத்தால் முன் சொன்ன இடத்துக்குப்போய்,கொஞ்சகாலம் ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்து, பிறகு ஸம்ஸாரத்துக்குத்திரும்பாமல் மோக்ஷத்தை அடைகிறார்கள். அவர்கள்தான் இங்கே சொல்லப்பட்டவர்கள். இவர்களும் ஞானிகளும் மோக்ஷத்தை அடைகிறபடியால், இவர்களை இரண்டுவகுப்பாகப் பிரிக்கலாமோ வென்றால்,பதில்—ஒருவர் கொஞ்சகாலம் பகவானை அனுபவிக்காமல் தன்னைமாத்திரம் பார்த்துக்துக் கொண்டிருக்கிறார். இந்த இளப்பத்தைப்பற்றி இவர்களைத் தனியாக பிரித்தது. இவர்கள் சாஸ்திரத்தினால் ஜீவஸ்வரூபத்தை அறிந்து கர்மயோகத்தையும் ஞானயோகத்தையும் செய்து, ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி பார்த்தார்கள். அதை அனுபவிப்பதில் ஆசை உண்டாயிற்று. அதினால் நான் பிரும்மத்துக்கு உடம்பு என்று தன்னை முக்கியமாகவைத்துத்தியானம்செய்தார்கள்.பிரும்மத்தைச் சேர்த்துத்தியானம்பண்ணினதால், பகவான்ஸந்தோஷத்தைஅடைந்துஅவர்களுக்குமோக்ஷத்தைக் கொடுக்கிறான். தன்ஸ்வரூபத்தைஅனுபவிப்பதில் ஆசையினாலே“நான்” ‘நான்’என்று தன்னை முக்கியமாகத்தியானம் செய்ததற்குதண்டனையாகவும்,தன்னைஅனுபவிப்பதில்ஆவலிருந்ததால்அதைகொடுப்பதற்காகவும் கைவல்லியத்தில் கொஞ்சம்காலம் வைத்து, பிறகு மோக்ஷத்தை கொடுக்கிறான்.

ஷிதே தத்ஸாதநத்வேந மயி ச| அத: ஸ ஏவ விஶிஷ்யதே| கிஞ்ச ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:| அத்யர்த்தஶப்தோऽபி தேயவசந:| ஜ்ஞாநிநோऽஹம் யதா ப்ரிய:, ததா மயா ஸர்வஜ்ஞேந ஸர்வஶக்திநாப்யபிதாதும் ந ஶக்யத இத்யர்த்த:, ப்ரியத்வஸ்யேயத்தாரஹிதத்வாத் | யதா ஜ்ஞாநிநாமக்ரேஸரஸ்ய ப்ரஹ்லாதஸ்ய ‘ஸ த்வாஸக்தமதி: க்ருஷ்ணே தஶ்யமாநோ மஹோரகை:| ந விஜாநாதி காத்ராணி தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்தித:’ இதி| ததைவ ஸ ச மம ப்ரிய: ‖ ‖ ௧௭ ‖

இந்த வகுப்புகளுக்குள் ஞானீ என்பவன் மிகவும் உயர்ந்தவன். ஏனென்றால், என்னை அறிந்தது முதல் ஒருநாளும் அவன் என்னை விடவில்லை. என்னைக்கொஞ்சகாலம் தியானம் செய்தான். பிறகு என்னையே அடைந்தான். மற்ற இரண்டு வகுப்பார்களும் பணம் முதலானவை கைக்கு வந்தவுடன், என்னை விட்டு விடுகிறார்கள். அவர்களுக்குப் பணம் முதலானவைகளிலும், அதைக் கொடுப்பதாலே என்னிடத்திலும் பிரீதி இருக்கிறது. அதுவும்நான் கொடுக்கும்வரையில். ஞானிக்குப் பிரீதிமுழுமையும்என்னிடத்தில் தான் இருக்கிறது. அவனுக்கு என்னைத்தவிர வேறுபிரயோஜநத்தில் ஆசையில்லை. எல்லாம் தெரிந்த என்னாலும் ஞானிக்கு என்னிடத்திலிருக்கிற பிரீதியை இவ்வளவுஎன்று சொல்லமுடியாது. ஏனென்றால், அந்தப் பிரீதிக்கு அளவில்லை. அதைப் பார்க்கும்போது எனக்கு அவனிடத்தில்இருக்கும் பிரீதி மிகவும் கொஞ்சம் என்று தோன்றுகிறது. ஞானிகளுக்குள் மிகவுமுயர்ந்த[1]பிரஹ்லாதன் என்னைநினைத்து ஸந்தோஷப்பட்டுக் கொண்டிருந்ததாலே, பெரிய பாம்பு கடித்ததைக்கூட அறியவி

---

1. பிறந்ததுமுதலே உயர்ந்தஞானமுடையவன். பகவான் எல்லா லோகத்துக்கும் ராஜா அல்லஎன்று தன் தகப்பன் சொன்னதையும் கேட்காதவன். ஆயிரம் வழியாக பயமுறுத்தியும் மனது கலங்காதவன். கொடுமையான துக்கத்திற்குக் காரணம் இருந்தபோதிலும், துக்கத்தை அநுபவிக்க வில்லை. இதற்குக் காரணம் பகவானிடத்தில் இருந்த எல்லையில்லாத ப்ரீதி.

ல்லையாம். ஞானியிடத்தில் எனக்கும் அப்படியே 1 அளவில்லாத ப்ரீதி இருக்கிறது. [17]

உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் ॥௧௮॥

ஸர்வே ஏவைதே மாமுபாஸீநா உதாரா:- வதாந்யா:, யே மத்த: யத்கிஞ்சிதபி ப்ரக்ருஹ்ணந்தி தே ஹி மம ஸர்வஸ்வதாயிந:। ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்- ததாயத்தாத்மதாரணோ ஹமிதி மந்யே। கஸ்மாதேவம்-யஸ்மாதயம் மயா விநா ஆத்மதாரணாஸம்பாவநயா மாமேவாநுத்தமம் ப்ராப்யமாஸ்தித:। அத: தேந விநா மமாப்யாத்மதாரணம் ந ஸம்பவதி, ததோ மமாத்மா ஹி ஸ: ॥ ॥௧௮॥

இவர்கள் எல்லாரும் எனக்கு 2 தங்கள் ஸொத்து முழுமையும் மிகவும் பிரீதியுடன் கொடுக்கிறவர்கள். ஏனென்றால் என்னைத் தியானம் செய்து, என்னிடமிருந்து ஏதாவது ஒன்றை வாங்கிக் கொள்கிறவர்களே எனக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறவர்களாக நினைக்கிறேன். ஆனால் ஞானிதான் எனக்கு ஆத்மா. நான் அவனுக்கு உடம்பு என்று என் எண்ணம். அதாவது—ஆத்மாவாலே தான் உடம்பு நிற்கிறது. அப்படியே அவனாலேதான் நான் இருக்கிறேன். அவனால் என்னை விட்டுப்பிரிந்து அரைவினாடி கூடத் தாங்கமுடியாது. ஆதலால் என்னையே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பிரயோஜனமாக நினைத்திருக்கிறான். நானும்

---

1. ஞானீ பகவானிடத்தில் அவன் ஸ்வரூபத்தையும் அவனுடைய கணக்கில்லாத குணங்களையும், ஸொத்துக்களையும் பார்த்து, பிரீதி பண்ணுகிறான். பகவானுக்கோவென்றால் அவ்வளவு பிரீதியும் ஞானி ஒருவனிடத்திலேயே உண்டாகிறது.

2. என்னை அடைந்தவர்களுக்கு எல்லாபலன்களையும் கொடுப்பது (பரமௌதார்யம்) என்கிற ஒரு ஸங்கதியைத்தான் நான் எனக்கு எல்லா ஸொத்தாகவும் நினைத்திருக்கிறேன். அந்த ஸொத்து என்னிடமிருந்து வாஙருகிறவர்கள் இல்லாமல் போனால், எனக்கு எப்படிக் கிடைக்கும் ஆகையால் என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளுகிறவர்கள் எனக்குஎல்லாஸொத்தையும் கொடுக்கிறவர்கள்.

அவன் இல்லாமல் போனால் அரைநொடிகூட தாங்க மாட்டேன். ஆகையால் அவன் எனக்கு ஆத்மா. [18]

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ १९ ॥

नाल्पसंख्यासंख्यातानां पुण्यजन्मनां फलमिदम् - यन्मच्छेषतैकरसात्मयाथात्म्यज्ञानविपाकं तज्जन्म । अपि तु बहूनां जन्मनां - पुण्यजन्मनामन्ते - अहं वासुदेवशेषतैकरसोऽहं तदायत्तस्वरूपस्थितिप्रवृत्तिः, स चासंख्येयैः कल्याणगुणगणैः परतर इति ज्ञानवान् भूत्वा, वासुदेव एव मम परमप्राप्यं-प्रापकं चान्यदपि मनोरथवर्ति-सर्वं च तत्सर्वमिति मां प्रपद्यते-मामेवाश्रयते । स महात्मा-महामनाः सुदुर्लभः-दुर्लभतरो लोके ।

वासुदेवः सर्वमित्यस्यायमर्थः, "प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहम्" "उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम्" इति प्रक्रमात् । ज्ञानवांस्तु यथोक्तलक्षणवान् । [illegible] । "भूमिरापः" इत्यारभ्य "अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा । अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् जीवभूताम्" इति हि चेतनाचेतनस्य प्रकृतिद्वयस्य परशेषतैकरसतोक्ता ॥ "अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा । मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय" इत्यारभ्य "ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्च ये । मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि" इति प्रकृतिद्वयस्य कार्यकारणोभयावस्थस्य परमपुरुषायत्तस्वरूपस्थितिप्रवृत्तित्वं परमपुरुषस्य च सर्वैः प्रकारैरवस्थितस्य प्रधानत्वं चोक्तम् । अतस्सर्वात्मा ज्ञानीत्युच्यते ॥ ॥ १९ ॥

ஜீவன் என்னுடைய உபயோகத்திற்காகவே தான் ஏற்பட்டவன் என்று தன்னுடைய ஸ்வரூபத்தைஉள்ளபடி அறிந்து, என்னை அடைந்து, என் வேலைகளைத்தான் செய்ய வேணுமென்று எண்ணி, என்னை அடைவதற்கு உதவியான என் தியானத்தை பண்ணுகிறது என்பதற்கு சில ஜந்மங்களில் மாத்திரம் செய்த புண்ணியங்கள் போதாது.1 அநேக ஜந்மங்களில்பண்ணின புண்ணியங்களாலே அந்தஜந்மங்களின் கடைசியில் "நான்பகவானுக்குவேலை செய்வதற்காகவே ஏற்பட்டவன். என்ஸ்வரூபமும், இருப்பும், வேலைகளும் எல்லாம் அவன் அதீநம். அவனிடத்தில் கணக்கில்லாத நல்ல குணங்கள் கூட்டம் கூட்டமாக இருப்பதாலே, அவனே மிகவும் உயர்ந்தவன்'' என்கிற 2 எண்ணம் உண்டாகி, "வாஸுதேவன்தான் நான் அடைய வேண்டிய வஸ்து, அவன்தான் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகக்கூடியவன். அவன்தான் இன்னும் எனக்கு வேண்டிய எல்லா வஸ்துக்களும்" என்று எண்ணி, என்னைத்தியானம் செய்கிறான். இப்படிப்பட்ட பெரிய மனதை உடையவன் உலகத்தில் அகப்படுவது மிகவும் அரிது.

---

1. சுலோகத்தில் அநேகஜந்மங்கள் என்று பொதுவாகச்சொன்ன போதிலும், நல்ல அநேகஜன்மங்கள் என்றுதான் பொருள். ஜந்மங்கள் அதிகமாயிருப்பதாலே ஞானம் வந்துவிடாது. அப்படி வருவதாயிருந்தால், எல்லாரும் பிரயாஸமில்லாமல், ஞானியாக ஆய்விடுவார்களே.

2. ஒருவன் இங்கே சொல்லுகிறபடி ஞானியாவதற்கு இடைஞ்சல் அவன் முன்செய்த பாபம். இந்தப் பாபமானது அனேக ஜந்மங்களில் செய்த புண்ணியங்களாலே போக வேண்டும். இங்கு ஓர் கேள்வி—பாபம் என்பது அதின் பலனை அனுபவிப்பதாலும், அதற்கு ஏற்பட்ட பிராயச்சித்தங்களாலும் போகுமே ஒழிய, புண்ணியத்தினால் எப்படி போகும்—என்று. பதில்—இங்கு புண்ணியம் என்பது பணம் பிள்ளை பெண்டாட்டி முதலானபலன்களுக்காக பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய சிலவேலைகள். இந்த வேலைகளைச் செய்தவர்களுக்கு பகவான் அந்தவேலைகளால்ஸந்தோஷத்தை அடைந்து, அந்தந்த பலன்களைக் கொடுப்பதுமன்றி, மிகுந்த தயையினால் தன்னுடையஉண்மையான அறிவுக்கு இடைஞ்சலான முன்னேசெய்தபாபங்களையும் போக்குகிறான். இதைப் பற்றித்தான் புண்ணியங்களால் பாபம் போகுமென்று சொன்னது. இதற்கு வெகு காலம் ஆகும். அதனாலேதான் வெகு ஜன்மங்களின் கடைசியிலென்று சொல்லி யிருக்கிறது.

"வாஸுதேவன்தான் எல்லாம்" என்று சுலோகத்திலிருப்பதற்குக் கீழ் சொன்னதுதான் பொருள். எல்லா உலகமும் வாஸுதேவன்தான், அதாவது—அவனைத்தவிர வேறு வஸ்து கிடையாது—என்று பொருள் அல்ல. ஏனென்றால் முன் இரண்டு சுலோகங்களில் "ஞானிக்கு என்னிடத்தில் அளவில்லாத ப்ரீதி இருக்கிறதெ"ன்றும், "அவன் என்னைத்தான் மிகவும் உயர்ந்த பிரயோஜநமாக நினைத்துக் கொண்டிருக்கிறான்" என்றும் சொல்லப்பட்டது. இந்த சுலோகத்தில் "ஜ்ஞாநவான்" (ஞானமுடையவன்) என்று சொன்னது முன் சுலோகங்களில் சொன்ன ஞானியைத்தான். மேலும், இந்த அத்தியாயம் 4-வது சுலோகம் முதல் 12-வது சுலோகம் வரையில் அறிவில்லாத பிரகிருதியும், அறிவுள்ள ஜீவன்களும் பகவானுடைய ஸொத்துக்கள், பகவானுக்காகவே ஏற்பட்டவைகள் என்றும், இந்த இரண்டு பிரகிருதியினுடையவும், அவைகளால் உண்டு பண்ணப்பட்ட உலகத்தினுடையவும் ஸ்வரூபமும், இருப்பும், வேலைகளும் பகவானுக்கு அதீநம் என்றும், அவன்தான் எல்லாவிதத்தாலும் உயர்ந்தவன் என்றும் சொல்லப்பட்டது. ஆகையாலே பகவானும் உலகமும் ஒன்றன்று.

அவ— தஸ்ய ஜ்ஞாநிநோ து³ர்லப⁴த்வமேவோபபாத³யதி—

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்³யந்தே(அ)ந்ய
தே³வதா: । தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥

ஸர்வ ஏவ ஹி லௌகிகா: புருஷா: ஸ்வப்ரக்ருத்யா-பாபவாஸநயா கு³ணமய்யா-விஷயா நியதா:-நித்யாந்விதா: தைஸ்தை: ஸ்வவாஸநாநுரூபை: கு³ணமயைரேவ காமை:-இச்சா²விஷயை: தைஸ்தை: ஹ்ருதமத்ஸ்வரூபவிஷயஜ்ஞாநா: தத்தத்காமஸித்³த்⁴யர்த²ம், அந்யதே³வதா:-மத்³வ்யதிரிக்தா: கேவலேந்த்³ராதி³தே³வதா:-தம் தம் நியமமாஸ்தாய - தத்தத்³தே³வதாவிஶேஷமாத்ரப்ரீணநாஸாதா⁴ரணம் நியமமாஸ்தாய, ப்ரபத்³யந்தே-தா ஆஶ்ரித்யார்சயந்தே ॥ ॥௨௦॥

அவ—கீழ்ச்சொன்ன ஞானி அகப்படுவது அரிது என்பதற்கு காரணம் சொல்லுகிறார்.

உலகத்திலிருக்கும் எல்லாப்பிராணிகளும் நெடுநாளாய் வந்த பாபவாஸனையோடு சேர்ந்திருக்கிறார்கள். ஒருவனாவது அதை விட்டவனில்லை. அந்த வாஸனையினால் எல்லாருக்கும் என்னைத்தவிர மற்றஸங்கதிகளிலேயே ஆசையுண்டாகிறது. அந்த ஆசை வலிமை யுள்ளதாயிருப்பதாலே, என் ஸ்வரூபத்தைப் பற்றி அவர்களால் அறிய முடியவில்லை. ஆசைப்பட்ட அந்தந்த வஸ்துக்கள் கிடைப்பதற்காக,என்னைக்காட்டிலும் வேறான இந்திரன்முதலான தேவர்களை,என்னைச் சேர்க்காமல்,சாஸ்திரங்களில் சொலலியபடி, அந்தந்த தேவதைகளுக்கு மாத்திரம் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதற்காக வேலைகளைச்செய்து, அவர்களையே ஸந்தோஷப்படுத்துகிறார்கள். ஆகையால் என்னிடத்தில் ஆசையுள்ளவன் மிகவும் அரிது. ( 20 )

𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥௨௧॥

𑌤𑌾 𑌅𑌪𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌮𑌦𑍀𑌯𑌾𑌸𑍍𑌤𑌨𑌵𑌃 "𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾 𑌮𑌦𑍀𑌯𑌾𑌸𑍍𑌤𑌨𑍁𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌜𑌾𑌨𑌨𑍍𑌨𑌪𑌿 𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌮𑌦𑍀𑌯𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯𑌤𑌸𑍍𑌯𑌾𑌜𑌾𑌨𑌤𑍋𑌽𑌪𑌿 𑌮𑌤𑍍𑌤𑌨𑍁𑌵𑌿𑌷𑌯𑍈𑌷𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑍇𑌤𑌿 𑌮𑌦𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌯 𑌤𑌾𑌮𑍇𑌵𑌾𑌚𑌲𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।

இப்படி அவர்களால் ஸந்தோஷப்படுத்தப்பட்ட இந்திரன் முதலான தேவதைகள் என்னுடைய உடம்புகள் என்று வேதம் சொல்லுகிறது. இந்த ஸங்கதியை அவர்கள் அறியாவிட்டாலும், எவனெவன் எந்த எந்த என்னுடைய உடம்பான அந்தந்த தேவதைகளைப் பிரீதியுடனும் சிரத்தையுடனும் பூஜிப்பதற்கு ஆசைப்படுகிறானோ, அவனுடைய அந்தப்பிரீதியையும் சிரத்தையையும் என் உடம்பைப்பற்றினவையென்று நினைத்து, நானே அவைகளை இடஞ்சலில்லாமலும், நிலையாகவும் செய்கிறேன். ( 21 )

𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇 ।
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍 ॥௨௨॥

ஸ தயா நிர்விக்நயா ஶ்ரத்தயா யுக்தஸ்தஸ்யா ஸம்ப்ரதே-ராராதநம் ப்ரதிஸம்ரம்பதே। தத: தத்தநுபூதாத் தேவதாராதநாத், தாநேவ ஹி ஸ்வாபிலஷிதாந் காமாந் மயைவ விஹிதாந் லபதே। யத்யப்யாராதநகாலே ஆராத்யயோ தேவதா மதீயாஸ்தநவ:, தததவ தததாராதநம் ச மதாராதநமிதி ந ஜாநாதி, ததாபி தஸ்ய வஸ்துதோ மதாராதநரூபத்வாதாராதகாபிலஷிதம் தத் மயைவ விதீயதே ॥ ॥௨௨॥

அவ—என்னைத்தவிர வேறுபலன்களில் ஆசைப்பட்டு, வேறு தேவதையினிடம் ஒருவன் போனாலும், அந்த தேவதையைப்பூஜிப்பது ஸரியாய் நடக்காமல், பலன் கிடைக்காவிட்டால், சாஸ்திரத்தில் கூடாது என்று சொல்லப்பட்டு மிகுந்த துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பாபங்களைச்செய்து, கெட்டுப்போய் விடுவார்களே என்று பயந்து, மிகுந்த கருணையாலே நானே அந்த தேவதைகளைப்பூஜிப்பதற்கு சிரத்தையைக் கொடுத்து, அதின் இடஞ்சலைத்தீர்த்து, ஸரியாய் நடத்தி, அந்தந்த பலன்களையும் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்—

அவன் தடங்கலில்லாத அந்த சிரத்தையோடு கூடினவனாய் என்னுடைய உடம்புகளான அந்தந்த தேவதைகளைப்பூஜிக்கிறான். அதினால் அவன் வேண்டின பலனையும் அடைகிறான். அதை நானே கொடுக்கிறேன். பூஜை செய்யுங்காலத்தில் பூஜை செய்யப்பட்டவர்கள் என் உடம்புகள் என்றும், ஆகையால் அவர்களைப் பூஜைசெய்வது என்னுடைய பூஜையென்றும், அவனுக்குத் தெரியாத போதிலும், உண்மையில் அது என் பூஜையானதால், நான் தான் அவர்களுக்கு பலனைக் கொடுக்கிறேன். (22)

அந்தவத்து ஃபலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் ।
தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி ॥ ॥௨௩॥

தேஷாமல்பமேதஸாம் அல்பபுத்தீநாம் ப்ரஹ்மருத்ராதியாஜிநாம் ததாராதநபலம் அல்பம் அந்தவச்ச பவதி। குத:? தேவாந் தேவயஜோ யாந்தி- யத: ப்ரஹ்மாதீந் தேவாந் தத்யாஜிநோ யாந்தி। ப்ரஹ்மாதயோ ஹி பரிச்சிந்நபோகா: பரிமிதகாலவர்திநஶ்ச।

ததஸ்தத்ஸாயுஜ்யம் ப்ராப்ய தைஸ்ஸஹ ப்ரச்யவந்தே ॥ மத்பக்தா: அபி தேஷாமேவ கர்மணாம் மதாராதநரூபதாம் ஜ்ஞாத்வா பரிச்சிந்நபலஸங்கம் த்யக்த்வா, மத்ப்ரீணநைகப்ரயோஜநா: மாம் ப்ராப்நுவந்தி, ந ச புநராவர்த்தந்தே । "மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே" இதி ஹி வக்ஷ்யதே ॥

அவ—இந்திரன் முதலான தேவதைகளைமாத்திரம் பூஜை செய்கிறவர்களுக்கு தேவரீரே பலன் கொடுத்தால், அவர்களைக் காட்டிலும் தேவரீரையே பூஜிக்கிறவர்களுக்கு என்ன விசேஷம் என்றால், சொல்லுகிறார்—

ஆனால், இந்திரன் முதலானவர்களை மாத்திரம் பூஜை செய்கிறவர்கள் கட்டாயம் அறியவேண்டியதான—அவர்கள் என் உடம்புகள் என்பதை 1 தெரிந்து கொள்ளாதபடியால், அந்தப் பூஜையால் வரப்பட்டப் பிரயோஜநம் கொஞ்சமாயிருக்கும். சீக்கிரமும் போய் விடும். ஏனென்றால், இந்திரன் முதலானவர்களை மாத்திரம் பூஜிக்கிறவர்கள் அவர்கள் இருக்குமிடம் போகிறார்கள். அந்த தேவர்கள் அநுபவிக்கும் ஸுகம் கொஞ்சம். அவர்கள் கொஞ்சகாலம் தானிருப்பார்கள். அவர்கள் இருக்கிறவரைக்கும் இருந்து அவர்களுடன் கூட அவர்களைப்போல் கொஞ்சம் ஸுகத்தை அனுபவித்து, அவர்கள் போகும்போது போய்விடுகிறார்கள். என்னிடத்தில் பிரீதியுள்ளவர்களாய் அந்த கர்மங்கள் தானே எனக்குத் திருப்தியுண்டுபண்ணுகிறது என்று அறிந்து, அவைகளுக்கு ஏற்பட்ட ஸ்வர்க்கம் முதலான கொஞ்சமான பிரயோஜநங்களை

1. சுலோகத்தில் "அல்பமேதஸாம்" என்றுசொல்லி யிருக்கிறது. அதின் பொருள்—அல்பமான இந்திரன் முதலானவர் களிடத்திலும், அவர்கள் கொடுக்கும் பலன்களிலும் மேதை-(எண்ணம்) உள்ளவர்கள்—என்று. தேவர்களிடத்தில் அறிவு (எண்ணம்) என்றால், அவர்களே பலன் கொடுக்கிறார்கள் என்கிற அறிவும், அவர்களுக்கு பகவான் ஆத்மாவாயிருந்து பலனைக் கொடுக்கிறான் என்கிற அறிவில்லாமையும். அவர்கள் கொடுக்கும் பலன்களில் அறிவு (எண்ணம்) என்றால், அவைகளை ஆசைப்படுவதும், அவைகளுக்கு மேற்பட்ட நிலையான ஸுகத்தை அறியாமையும்.

விரும்பாமல், என் ஸந்தோஷத்தை மாத்திரம் ஆசைப்பட்டு, அந்த கர்மங்களைச் செய்கிறவர்கள் என்னிடம் வந்து சேருகிறார்கள். என்னுடையஇருப்பிடத்திற்கு அழிவில்லாமையால்,அவர்கள்என்னிடம் நிலையாயிருப்பார்கள். திரும்பி வருகிறதில்லை. இந்த ஸங்கதியை மேலே எட்டாவதுஅத்தியாயத்தில் 16-வது சுலோகத்தில் சொல்லப்போகிறது. ( 23 )

𑌅𑌥 — 𑌇𑌤𑌰𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌤𑍍𑌵𑌾𑌯 𑌮𑌮 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌵𑌤𑌾𑌰𑌮𑌪𑍍𑌯𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌹 —

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮𑌾𑌵𑍍𑌯𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ॥௨௪॥

𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌤𑍍𑌵𑌾𑌯𑌾𑌜𑌹𑌤𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵 𑌏𑌵 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍂𑌨𑍁𑌰𑌵𑌤𑍀𑌰𑍍𑌣 𑌇𑌤𑌿 𑌮𑌮𑍈𑌵𑌂 𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌰𑌾𑌜𑌸𑍂𑌨𑍁𑌸𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌂-𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌅𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇-𑌨 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑌾𑌰𑌾𑌧𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥ ॥௨௪॥

அவ—எல்லோரும் என்னிடம் வரவேண்டுமென்றுதான் நான் மனிதன் முதலான உருவத்துடன் வந்திருக்கிறேன். இப்படிச்செய்தும், சிலருக்கு அது 1 உபயோகப்படவில்லை என்று சொல்லுகிறார்.

---

1. ஜனங்கள் இந்திரன் முதலான தேவதைகளைப் பூஜிப்பதனால் உண்டான வாஸனையினால், உம்மைப் பற்றித்தெரிந்து கொள்ளவில்லை. தேவரீர் நேராக வராதிருக்கும்போது அந்த வாஸனை இப்படி இடஞ்சல் பண்ணலாம். தேவரீரே மனித உருவமாக வந்து எல்லாருடைய கண்களில் படும்போது, தேவரீரை விட்டு விட்டு இந்திரன் முதலானவர்களிடம் ஏன்போகிறார்கள்என்றால், அதற்குப் பதில்இந்த சுலோகத்தில் சொல்லுகிறது.

சாஸ்திரத்தில் சொல்லிய 1 எல்லா கர்மங்களும் என்னை ஸந்தோஷப்படுத்துவதற்காகத்தான் ஏற்பட்டிருக்கின்றன. நான் எல்லா லோகங்களுக்கும் யஜமானன். என்னையும் என்னுடைய ஸ்வபாவங்களையும் இவ்வளவென்று நினைக்கவும் சொல்லவும் முடியாது. இப்படி உயர்ந்தவனாயிருந்தாலும், மிகுந்த தயையினாலேயும் எல்லோரும் என்னுடைய ஜனங்களாகையாலே—அவர்கள் எப்படி இருந்தாலும் இருக்கட்டும், நான் அவர்களிடம் போக வேண்டியது என்கிற பிரீதியினாலேயும், எல்லோரும் என்னிடம் வருவதற்காகவும் தைவத்தன்மையை விடாமலே நான் வஸுதேவருக்குப் பிள்ளையாக வந்திருக்கிறேன். இந்த ஸங்கதியை அறியாமல், உலகத்தில் ராஜாக்களுக்கு பிள்ளை பிறக்கிறதுபோல் ஏதோ ஒரு கர்மத்தாலே இப்போது வந்து பிறந்திருக்கிறேன் என்று 2 முட்டாள்கள் நினைக்கிறார்கள் அதனாலே என்னிடம் வருகிறதில்லை. என்னைப்பூஜை செய்வதுமில்லை. (24)

அத ஸர்வஸ்ய ந ப்ரகாஶ்யத்வே ஹேதுராஹ—

நாஹம் ப்ரகாஶஸ்ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: ।
மூடோ'யம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ॥௨௫॥

க்ஷேத்ரஜ்ஞாஸாதாரணமநுஷ்யத்வாதிஸம்ஸ்தாநயோகரூபயா மாயயா ஸமாவ்ருதோ'ஹம் ந ஸர்வஸ்ய ப்ரகாஶ: । மயி மநுஷ்யத்வாதிஸம்ஸ்தாநதர்ஶநமாத்ரேண மூடோ'யம் லோகோ மாம் அதிவாய்விந்த்ரகர்மாணமதிஸூர்யாக்நிதேஜ

---

1. ச்லோகத்தில் "பரம் பாவம்" (உயர்ந்த ஸ்வபாவம்) என்று சொற்கள் இருக்கின்றன. அந்த ஸ்வபாவமாவது—எல்லை யில்லாத உயர்த்தியும், எவனும் கிட்ட வரும்படி ஸுலபனாயிருக்கையும். இந்த உயர்த்தியானது சாஸ்திரத்தில்...சொல்லவும் முடியாது" என்கிற வரையில் சொல்லப்பட்டது. கிட்ட வரும்படியான தன்மையானது "மிகுந்த...பிரீதியினாலேயும்" என்கிற வரையில் சொல்லப்பட்டது.

2. "முட்டாள்" என்கிற சொல்லாலே பகவானுடைய அவதாரத்தின் உண்மையைப் பற்றிக்கேட்பதும், நினைப்பதுமில்லையென்றும், மற்றவர்களைக் காட்டிலும் பகவான் வேறு என்று தெரிந்து கொள்ளக்கூடிய அடையாளங்களைக் கண்ணாலே பார்க்கும்போதும் அதை கண்டுபிடிக்க சக்தி யில்லை யென்றும் சொல்லப் பட்டது.

ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம் நிகிலஜகதேககாரணம்
ஸர்வேச்வரம் மாம் ஸர்வஸமாச்ரயணீயத்வாய மனுஷ்யத்வஸம்
ஸ்தானமாஸ்திதம் நாபிஜானாதி ॥ ॥௨௫॥

*அவ—உம்முடைய இந்தஸ்வபாவத்தைத்தேவரீர் ஏன்ஜனங்களுக்குக் காண்பிக்கிறதில்லை. அதாவது—எல்லாரும் நம்மிடம் வரவேண்டுமென்றுதானே தேவரீர் அவதாரம் செய்கிறீர். தேவரீரோ ஒரு தடங்கலில்லாமல் நினைத்தபடி முடிக்கிறவர் அல்லவா உம்முடைய எண்ணம் ஏன் நிறைவேறுகிறதில்லை-என்றால்,சொல்லுகிறார்.—*

*1நான் ஜீவன்களுக்கு மாத்திரம் ஏற்பட்டிருக்கிற மனிதன் முதலான உருவமாய் வந்திருப்பதால், எல்லாருக்கும் நான் தை*

---

*1. சுலோகத்தில் "யோகமாயா" என்றசொல் இருக்கிறது. மாயா என்கிற சொல்லுக்கு ஆச்சரியமான வேலையைச் செய்கிறவஸ்து என்று பொருள். அந்தவஸ்து இங்கே எது என்றால், யோகம்என்கிற சொல்லாலே சொல்லப்பட்ட—மனிதஉருவமும், மனிதன்போல் அலங்காரமும்,பேச்சும். இது ஆச்சரியமான வேலையைச் செய்கிறது. அந்தவேலையாவது—கோவர்த்தனமலையை ஒரு சுண்டுவிரல் நுனியாலே ஏழுநாள் தூக்கியும், சிரமமில்லாமல் இருந்தார் என்பதைத்தவிர, தைவம் என்று தீர்மானிப்பதற்கு வேறு அடையாளம் வேணுமா? அந்த அடையாளத்தையும் தீர்மானிக்க வொட்டாதே பண்ணுகிறதே இந்த மனிதஉருவம். இதுதான் இது செய்கிற ஆச்சரியமான வேலை. மேலும் இது சிலர்க்கு மறைக்கிறது. சிலர்க்கு மறைக்கிறதில்லை. இதுவும் ஒரு ஆச்சரியம். மாயா என்ற சொல்லிற்கு 4—வது அத்தியாயம் 6-வது சுலோகத்தில் எண்ணம் என்றும், 7—வது அத்தியாயம்—17—வது சுலோகத்தில் முக்குணமுள்ள பிரகிருதி என்றும் பொருள் சொல்லப்பட்டது. இந்த அர்த்தங்கள் இங்கே பொருந்தாது. ஏனென்றால், பிரகிருதியால் மறைக்கப்பட்டிருப்பது பகவானுடைய எல்லா இருப்புக்கும் பொதுவானது. அவதாரத்தில் மாத்திரமுள்ளதை இங்கே சொல்லவேண்டியது. அது கீழேசொன்ன மனித உருவம் முதலானவை. எண்ணமும் பகவானுக்கு எப்போது முள்ளது. யோகம் என்கிற சொல்லானது சேர்க்கையைச் சொல்லுகிறது. எதின்சேர்க்கை யென்றால், மனித உருவத்தின் சேர்க்கை என்று இந்த இடத்தால் ஏற்படுகிறது,*

வத்தன்மையுள்ளவன் என்று தெரியவில்லை. 1 முட்டாள் ஜனங்கள் வாயு இந்திரன் முதலானவர்களாலே செய்யமுடியாத வேலைகளை நான் செய்வதையும், ஸூர்யனையும் அக்கினியையும் காட்டிலும் அதிக பளபளப்பாய் நான் இருப்பதையும் பார்த்தும், என் மனித உருவத்தை மாத்திரம் நினைத்து, நானும் மனிதன் தான் என்று தீர்மானித்து, "நான் எல்லா உலகங்களுக்கும் 2 ஒரே காரணம். நான் எல்லாருக்கும் யஜமானன், எல்லாரும் என்னிடம் வருவதற்காக நான் மனித உருவத்துடன் வந்திருக்கிறேன்" என்று 3 அறியவில்லை. (25)

வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந ।
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந ॥௨௬॥

ஸமதீதாநி வர்த்தமாநாந்யநாகதாநி ச ஸர்வாணி பூதாந்யஹம் வேத-ஜாநாமி । மாம் து வேத ந கஶ்சந-மயாநா

---

1. பகவான் எல்லாரும் தன்னிடம் வருவதற்காக எடுத்துக்கொண்ட மனித உருவமே, அவனை விடுவதற்குக் காரணமானுல், இது எவருடைய குற்றம்? என்றால், "முட்டாள் ஜனங்கள்" என்கிற சொல்லாலே பதில் சொல்லப்படுகிறது. பகவான் தன்னுடைய ஸ்வபாவத்தை முழுவதும் மறைக்கவில்லை. மற்றவர்களாலே செய்யக்கூடாத வேலைகளைச் செய்து, மற்றவர்களுக்கில்லாத பளபளப்பைக் காட்டினுர். முட்டாள்கள் மனித உருவம் என்கிற சின்ன ஒரு ஸங்கதியை மாத்திரம் கவனித்து, பகவான் என்று அறியவில்லை. மேகத்தினுல் மறைக்கப்பட்ட ஸூர்யனை மினி மினிப்பூச்சியாக எண்ணுவதுபோல் இது இருக்கிறது.

2. சுலோகத்தில் "அஜம் (பிறப்பில்லாதவன்)" அவ்யயம் (குறைவில்லாதவன்) என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. எல்லா உலகங்களுக்கும் காரணமாயிருப்பதாலே,பகவான் மற்றவர்களைப்போல் கர்மத்தால் பிறப்பில்லாதவன். குறைவில்லை என்பது ஸ்வரூபத்திலும், குணங்களிலும் மாறுதலில்லாமை. மஹாராஜா வாகையாலே தான் அவதாரம் செய்யும் போதும், ஈசுவரத்தன்மையில் ஒன்றையும் விடாமல் வருகிறுன்

3. பின்னை எப்படி அறிகிறுர்கள் என்றால், மற்ற மனிதர்களைப் போல கர்மத்தினுல் பிறப்பும், அறிவுக் குறைவும் உள்ளவனுக எண்ணுகிறுர்கள்.

ஸுந்தரேஷு சோபநேஷு காமரூபயதிஷு ஸம்பந்தேஷு ஸாது
ஜநவஸம் விதம் வாஸுதேவம் ஸர்வஸமாச்ரயணீயத்வாயாவதீர்ணம்
விதித்வா மாமேவ ஸமாச்ரயந் கச்சிந் மத்ஸமாச்ரயணே த்ருதவ்யூஹ: |
அதோ ஜ்ஞாநீ ஸுதுர்லப ஏவ || ||௨௬||

இதற்கு முன்னாலே 1 செத்துப்போன எல்லாப் பிராணிகளையும், இப்போது இருக்கிற எல்லாரையும், நாளைக்கு வரப்போகிற எல்லாரையும் எனக்குத் தெரியும். இப்படி என்னால் அறியப்பட்ட மூன்று காலத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்குள்ளே ஒருவனாவது என்னுடைய ஸொத்தான எல்லாரும் என்னிடம் வருவதற்காகப்பகவானான நான் வஸுதேவருக்குப் பிள்ளையாக வந்திருக்கிறேன் என்று அறிந்து, என்னிடத்திலேயே வருகிறவன் அகப்படவில்லை. ஆகையால் ஞானீ அகப்படுவது மிகவும் அரிது. (26)

அதாஹி,

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத |
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ||௨௭||

இச்சாத்வேஷாப்யாம் ஸமுத்திதேந சீதோஷ்ணாதித்வந்த்வாக்யேந
மோஹேந ஸர்வபூதாநி ஸர்கே ஜந்மகால ஏவ
ஸம்மோஹம் யாந்தி | வேதநீயம் வஸ்து ஸம்பந்தி ... த்வந்த்வ ...
பூர்வபூர்வஜந்மநி யத்விஷயாவிச்சாத்வேஷௌ அப்யஸ்தௌ
தத்விஷயாவேவ, தத்வாஸநயா புநரபி ஜந்மகாலே
தமேவ பூர்வாப்யஸ்தமிச்சாத்வேஷவிஷயபூதேந ஸமுத்திதம்
த்வந்த்வாக்யம் மோஹம் ஜநயதி | தேந மோஹேந ஸர்வபூ
தாநி ஸம்மோஹம் யாந்தி | தத்விஷயமேவ இச்சாத்வேஷஸ்வபாவாநி ப
வந்தி, ந து மத்ஸம்ச்லேஷவியோகஸுகது:கஸ்வபாவாநி | ஜ்ஞாநீ

1. பகவான் தனக்கு எல்லாம் தெரியுமென்று சொன்னது—பகவானைத்தெரிந்து கொள்ளவில்லை என்பது இப்போது மாத்திரமன்று. முன் காலத்திலும் அப்படித்தான் இருந்தது. இனிமேலும் அப்படித்தான் ஆகப்போகிறது—என்பதைக் காட்டுவதற்காக.

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத । ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ॥ ॥௨௭॥

அவ—1 உலகத்தில் அப்படித்தானே இருக்கிறது பாரென்கிறார்.

ஆசையாலும் த்வேஷத்தாலும் 2 உண்டாகிற குளுமை, சூடு முதலான இரண்டு வகைகளாலே எல்லாப் பிராணிகளும் பிறக்கும்போதே 3 மயங்குகிறார்கள். அதாவது—போன ஜன்மத்தில் எந்த வஸ்து பிடித்ததோ, எந்தவஸ்து அலுத்ததோ, அதேமாதிரி வாஸனையாலே பிறக்கிற காலத்திலேயே ஆசையும்அலுப்பும் உண்டாகிறது. அதினாலே ஜனங்கள் மயங்கி, அந்த விஷயங்களில் ஆசையும், அலுப்புமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அந்த வாஸனை எல்லாருக்கும் என்னைத்தவிர மற்ற விஷயங்களிலேயே இருக்கிறது. ஆகையால் ஒருவனும் என்னைவிட்டு வருத்தப்படவுமில்லை. என்னோடு சேர்ந்து ஸந்தோஷப்படவுமில்லை. ஞானியோ என்னோடு சேர்ந்தால்,ஸந்தோஷத்தையும், என்னை விட்டுப் பிரிந்தால், துக்கத்தையும் அடைகிறான். இவ்விதமான தன்மையுடையவன் ஒருவனாவது பிறப்பது மிகவும் அரிது. (27)

---

1. மூன்று காலங்களிலும் எல்லாரும் பகவானை அறியாமலிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறார்.

2. ஒருவன் பிறக்கும்போதே ஒரு வஸ்துவில் ஆசையும், மற்றொரு வஸ்துவில் அலுப்பும் எப்படி உண்டாகும். குழந்தைக்கு பிறந்த உடனே ஒன்றுமே தெரியாதே. ஆகையால் அப்படி உண்டாவதற்குக் காரணமில்லையே. அப்படி உண்டானாலும், பகவான் விஷயத்தில் ஏன் ஆசை வரக்கூடாது? என்றால், பதில் சொல்லுகிறார். முன் ஜன்மத்தில் உண்டான வாஸனை ஜீவனுடன்கூட வருகிறது. அதனாலே ஆசையும் அலுப்பும் பிறந்த உடனேயே வருகின்றன. வாஸனை எந்த வஸ்துவில் இருக்கிறதோ, அதிலேதான் ஆசையுண்டாகும். பகவானிடத்தில் முன் ஜன்மத்தில் ஆசை யில்லாததினால், அந்த் விஷயமான வாஸனை உண்டாகவில்லை. இந்த ஜந்மத்தில் எப்படி பகவானிடத்தில் ஆசை உண்டாகக் கூடும்.

3. இங்கே மயக்கமாவது—இன்பமில்லாதவைகளை இன்பமாக எண்ணுவதும், அலுப்பு வரக்கூடாத வஸ்துவில் அலுப்பு வருவதும்.

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌵𑌨𑍍𑌤𑌗𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ।
𑌤𑍇 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥௨௮॥

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑌂𑌚𑌯𑍇𑌨 𑌗𑍁𑌣𑌮𑌯𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌂 𑌮𑌦𑍁𑌨𑍍𑌮𑍁𑌖𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌅𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌪𑌾𑌪𑌮𑍍, 𑌅𑌨𑍍𑌤𑌗𑌤𑌂-𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 । 𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋 𑌸𑍁𑌕𑍃𑌤𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌗𑍁𑌣𑌮𑌯𑌾𑌨𑍍𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌮𑌹𑌤𑍇 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌯 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 𑌚 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 - 𑌦𑍃𑌢𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇॥ ॥௨௮॥

அவ—எல்லாரும் இப்படி மயங்கினால், எவன் பகவானைத் தியானம் செய்வன்? இந்த அத்தியாயம் 16-வது சுலோகத்தில் நாலு வகுப்பார் பகவானைத் தியானம் பண்ணுவர்கள் என்று சொன்னது எப்படி ஒட்டும் என்றால், சொல்லுகிறார்.—

எவர்களுக்கு 1 வெகு ஜன்மங்களில் பண்ணின உயர்ந்த புண்ணியங்களாலே என்னைத்தவிர மற்றவஸ்துக்களில் ஆசையையும், என்னிடத்தில் அனுப்பையும் உண்டுபண்ணக்கூடிய நெடுநாளாய் வந்த பாபம் போய்விட்டதோ, அவர்கள் என்னைக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டு, மயக்கம் தெளிந்து, அவரவர்கள் பண்ணின புண்ணியத்துக்குத் தகுந்தபடி சிலர் பணத்துக்காகவும், சிலர் ஸம்ஸாரம்போய் ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி அநுபவிப்பதற்காகவும், சிலர் என்னிடம் வருவதற்காகவும் உறுதியுடன் என்னையே தியானம் செய்கிறார்கள். (28)

---

1. சுலோகத்தில் புண்ணிய கர்மங்களைச் செய்தவர்கள் என்று பொதுவாய் சொல்லியிருந்தபோதிலும், பகவானை அறிவதற்கு இடைஞ்சலான பாபத்தைப் போக்குவதற்கு உயர்ந்த புண்ணியம் வேண்டுமென்றும், அது ஒரேஜன்மத்தில் பண்ணினது போதாது என்றும், காட்டுவதற்காக "வெகுஜன்மங்களிலே பண்ணின உயர்ந்த" என்று பாஷியத்தில் சொல்லப்படுகிறது. இந்த ஸங்கதியை இந்த அத்தியாயம் 19-வது சுலோகத்திலும் சொல்லியிருக்கிறது. அதின் கீழே இருக்கும் குறிப்பைப் பார்க்க.

அத² த்ரயாணாம் ப⁴க³வத்³ப⁴ஜமாநாநாம் ஜ்ஞாதவ்யவிஶேஷாநுபாதே³யாம்ஶ்ச ப்ரக்ருதாநாஹ—

ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே |
தே ப்³ரஹ்ம தத்³விது³: க்ருத்ஸ்நமத்⁴யாத்மம் கர்ம சாகி²லம் ||௨௯||

ஜராமரணமோக்ஷாய—ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபத³ர்ஶநாய மாமாஶ்ரித்ய யே யதந்தே| தே தத்³ ப்³ரஹ்ம விது³:, அத்⁴யாத்மம் ச க்ருத்ஸ்நம் விது³:| கர்ம சாகி²லம் விது³: || ||௨௯||

அவ—பகவானைத்தியானம் பண்ணுகிற மூன்று வகுப்பார்களும், அறியவேண்டிய ஸங்கதிகளையும், நினைக்கவேண்டிய ஸங்கதிகளையும்,செய்யவேண்டியவைகளையும் சொல்ல ஆரம்பிக்கிறார்.—

கிழத்தனமும் சாவும் போவதற்காக-அதாவது-உடம்பு முதலான நினைவு இல்லாமல் ஜீவஸ்வரூபத்தை மாத்திரம் நீடித்துப் பார்த்துக்கொண்டிருப்பதற்காக, (கைவல்யத்திற் காக)எவர்கள் என்னைத்தியானம் செய்கிறார்களோ, அவர்கள் அந்த1ப்ரும்மத்தையும்,எல்லா அத்யாத்மத்தையும், எல்லாகர்மங்களையும் அறியவேண்டியது. (29)

ஸாதி⁴பூ⁴தாதி⁴தை³வம் மாம் ஸாதி⁴யஜ்ஞம் ச யே விது³: |
ப்ரயாணகாலே(அ)பி ச மாம் தே விது³ர்யுக்தசேதஸ: ||௩௰||

இதி ஸ்ரீமத்³ப⁴க³வத்³கீ³தாஸூபநிஷத்ஸு ப்³ரஹ்மவித்³யாயாம் யோக³ஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே³ விஜ்ஞாநயோகோ³ நாம ஸப்தமோ(அ)த்⁴யாய: ||

அத்ர ச இதி வாக்யத்³வயேந ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே இதி அந்யோந்யாதி⁴காரிணோ ஜ்ஞாயந்தே | ஸாதி⁴பூ⁴தம் ஸாதி⁴தை³வம் மாமைஶ்வர்யார்தி²நோ யே விது³ரித்யத்⁴யாஹார்ய ப்ரக்ருதைஶ்வர்யார்தி²ந ஏவ| ததா² ஸாதி⁴யஜ்ஞமித்யபி த்ரயாணாமதி⁴காரிணாமவிஶேஷேண விஷயதே, த்ரயாணாம் ஹி நித்யநைமித்திககர்மவை

---

1. இந்த சுலோகத்திலும் அடுத்த சுலோகத்திலும் வருகிற சொற்களுக்கு அடுத்த அத்தியாயத்தின் முதலிலே பகவானே அர்த்தம் சொல்லப்போகிறார்.

𑌸𑌾𑌧𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍇𑌵 𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌤𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌽
𑌪𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 । 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌚𑌕𑌾
𑌰𑌾𑌤𑍍 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌯𑌤𑌮𑌾𑌨𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾
𑌲𑍇 𑌵𑌿𑌦𑍁𑌰𑌿𑌤𑌿 𑌸𑌮𑍍𑌚𑍀𑌯𑌤𑍇 । 𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌪𑍍𑌯𑌧𑍍𑌯
𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌤𑌯𑌾 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

பணத்தை விரும்பித்தியானம் பண்ணுகிறவர்கள், அதிபூதத்தோடும், அதிதைவத்தோடும் கூடிய என்னை அறியவேண்டியது. கீழ்ச்சொன்ன மூன்று வகுப்பார்களும் அதியஜ்ஞத்தோடுகூடிய என்னை அறியவேண்டும். மூன்று வகுப்பார்களும் இறந்துபோகிறகாலத்தில் அவரவர்கள் ஆசைப்படுகிற பிரயோஜனத்துக்குத்தகுந்தபடி என்னை நினைக்கவேண்டும்.

இந்த சுலோகத்தில் பின்பாதியில் இருக்கிற “ச”; என்கிற சொல்லை “தே”, என்கிற சொல்லுடன் சேர்க்கவேண்டியது. அப்போது அவைகளின் பொருள்—அவர்களும்—என்று. அதனாலே 29-வது சுலோகத்தில் சொன்ன ஸம்ஸாரம் போய் ஜீவஸ்வரூபத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுகிறவர்களையும் சேர்த்து, அவர்களும் இறந்துபோகிற காலத்தில் பகவானைத்தாங்கள் விரும்புகிற பிரயோஜனத்துக்குத் தகுந்தபடி நினைக்க வேணுமென்று சொல்லப் படுகிறது. பகவானிடம் போக வேணுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கும் இந்த இரண்டு எண்ணங்களும் வேண்டியபடியால் அவர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது. அந்த இரண்டு எண்ணங்களாவன—பகவான் அதியக்ஞத்துடனே கூடினவன் என்று நினைப்பதும், இறந்துபோகிறகாலத்தில் தாங்கள்விரும்புகிற பிரயோஜனத்துக்குத்தகுந்தபடி பகவானை நினைப்பதும். பகவானை அதியக்ஞத்தோடு கூடியவராக ஏன் நினைக்கவேண்டும்—என்றால், மூன்று வகுப்பார்களும், மஹா யக்ஞம் முதலான நித்திய கர்மங்களையும், நைமித்திக கர்மங்களையும் கட்டாயம் செய்யவேண்டிய தாகையால்.(30)

## அஷ்டமோऽத்யாய: ॥

அவ— ஸப்தமே பரஸ்ய ப்ரஹ்மணோ வாஸுதேவஸ்ய உபாஸ்யஸ்ய நிகிலசேதநாசேதநவஸ்துசேஷித்வம், காரணத்வம், ஆதாரத்வம், ஸர்வசரீரதயா ஸர்வப்ரகாரதயா ஸர்வசப்தவாச்யத்வம், ஸர்வநியந்த்ருத்வம், ஸர்வைச்ச கல்யாணகுணகணைஸ்தஸ்யைவ பரதரத்வம், ஸத்த்வராஜஸதாமஸைர் தேஹேந்த்ரியத்வேந போக்த்ருத்வேந சாவஸ்திதைர் பாவைரநாதிகாலப்ரவ்ருத்ததுஷ்க்ருதப்ரவாஹஹேதுகைஸ்தஸ்ய திரோதாநம், அத்யுத்க்ருஷ்டஸுக்ருதஹேதுகபகவத்ப்ரபத்த்யா தந்நிவ்ருத்தி:, ஸுக்ருததாரதம்யேந ச ப்ரபத்திவைசேஷ்யாதைச்வர்யாக்ஷரயாதாத்ம்யபகவத்ப்ராப்த்யபேக்ஷயோபாஸகபேதம், பகவந்தம் ப்ரேப்ஸோர்நித்யயுக்ததயைகபக்திதயா சாத்யர்த்தம் பரமபுருஷப்ரியத்வேந ச்ரைஷ்ட்யம், துர்லபத்வம் ச ப்ரதிபாத்ய, தேஷாம் த்ரயாணாம் ஜ்ஞாதவ்யோபாதேயபேதாம்ச்ச ப்ராஸ்தௌஷீத் । இதாநீமஷ்டமே ப்ரஸ்துதாந் ஜ்ஞாதவ்யோபாதேயபேதாந்விவிநக்தி.

அர்ஜுந உவாச

கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம ।
அதிபூதம் ச கிம் ப்ரோக்தமதிதைவம் கிமுச்யதே ॥ ௧ ॥

அதியஜ்ஞ: கதம் கோऽத்ர தேஹேऽஸ்மிந்மதுஸூதந ।
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோऽஸி நியதாத்மபி: ॥ ௨ ॥

ஜராமரணமோக்ஷாய பகவந்தமாச்ரித்ய யதமாநாநாம் ஜ்ஞாதவ்யதயோக்தம் தத் ப்ரஹ்ம, அத்யாத்மம் ச கர்ம ச கிமிதி வக்தவ்யம் । ஐச்வர்யார்த்திநாம் ஜ்ஞாதவ்யமதிபூதமதிதைவம் ச கிம் । த்ரயாணாம் ஜ்ஞாதவ்யதயோக்த அதியஜ்ஞசப்தநிர்திஷ்ட: க: । தஸ்ய சாதியஜ்ஞபாவ: கதம் । ப்ரயாணகாலே சைபிஸ்த்ரிபி: நியதாத்மபி: கதம் ஜ்ஞேயோऽஸி ॥ ௨ ॥

அவ—ஏழாவது அத்தியாயத்தில் பரப்பிரும்மமான வாஸுதேவன் தியானம் செய்யத்தருந்தவன்; அவன் அறிவுள்ளதும், அறிவில்லாததுமான எல்லா உலகத்துக்கும் சேஷி; எல்லாவற்றையு முண்டுபண்ணுகிறவன்; எல்லாவற்றையும் தாக்குகிறவன்; எல்லாம் அவனுக்கு உடம்பாயிருப்பதாலே, எல்லாம் அவனுக்கு பிரகாரம்; அதினால் எல்லா சொற்களும் அவனையே சொல்லுகின்றன; எல்லாவற்றையும் அவன் ஏவுகிறான்; கூட்டம் கூட்டமான எல்லா நல்லகுணங்களாலும் அவனே மிகவுமுயர்ந்தவன்; ஸத்வம் முதலானகுணங்களோடு கூடியஉடம்புகளாகவும்,கண் முதலான இந்திரியங்களாகவும்,அவைகளால் அநுபவிக்கத்தகுந்தவைகளாகவும் நெடுநாளாய் வந்த பாபவரிசைகளினாலே உண்டான வஸ்துக்கள் அவனைஉள்ளபடி பார்க்கவொட்டாமல் மறைக்கின்றன; மிகவும் உயர்ந்த புண்ணியத்தாலே அவனைப்பிரபத்தி பண்ணி, அந்த மறைவைப் போக்கவேண்டும்; போக்கி அவனைத் தியானம் பண்ணுகிறவர்கள் புண்ணியங்களின் தாரதம்மியத்தாலே மூன்றுவிதமான பிரயோஜநங்களை விரும்புவதாலே, மூன்றுவிதமாயிருக்கிறார்கள்; அவர்களுக்குள்ளே பகவானை மாத்திரம் ஆசைப்படுகிறவன் அவனை ஒருக்காலும் விடாதபடியாலும், அவனிடத்தில்மாத்திரம் ஆசையுள்ளவனைகையாலும், அவனுக்கு மிகவும் வேண்டியவனயிருப்பதாலும், மிகவும் உயர்ந்தவன்; அப்படிப்பட்டவன் அகப்படுவது மிகவும் அரிது—என்று இவைகளைச்சொல்லி, இந்த மூன்றுபேர்களுக்கும், அறிய வேண்டியவைகளிலும், செய்யவேண்டியவைகளிலும் வேறுபாடு இருக்கிறது என்பதைப் பிரஸ்தாபித்தார். இப்போது எட்டாவது அத்தியாயத்தில் கீழ்ப்பிரஸ்தாபித்த ஸங்கதிகளை விரிவாகச் சொல்லுகிறார்—

அர்ஜுநன் கேட்கிறான்.

கிழத்தனமும், சாவும் போவதற்காக—அதாவது—உடம்பு முதலானவைகளை நினையாமல் ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பதற்காக உண்மைத்தியானம்செய்கிறவர்களால் அறியவேண்டியதாகச் சொன்ன பிரும்மமும்,அத்யாத்மமும், கர்மமும் என்ன? பணத்தை ஆசைப்பட்டவன் அறியவேண்டிய அதிபூதமும்,அதிதைவமும் என்ன ? மூன்றுபேர்களும் அறியவேண்டிய அதியக்

ஞன் என்பவன் யார்? அவன் எதினால் அதியக்ஞன் என்று சொல்லப்படுகிறான்? மூன்று பேர்களும் சாகும் காலத்தில் மனதை அடக்கிக் கொண்டு உம்மை எப்படி அறியவேண்டும்? இவைகளைச் சொல்லவேண்டும் என்று. [1–2]

ஸ்ரீபகவாநுவாச—

அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோऽத்யாத்மமுச்யதே |
பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித: ||௩||

தத் ப்ரஹ்மேதி நிர்திஷ்டம் பரமக்ஷரம்—ந க்ஷரதீத்யக்ஷரம் க்ஷேத்ரஜ்ஞஸமஷ்டிரூபம் | ததா ச ச்ருதி:—"அவ்யக்தமக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே" இத்யாதிகா | பரமக்ஷரம் ப்ரக்ருதிவிநிர்முக்தாத்மஸ்வரூபம் | ஸ்வபாவோऽத்யாத்மமுச்யதே—ஸ்வபாவ: ப்ரக்ருதி: | அநாத்மபூதம் ததாத்மநி ஸம்பத்யமாநம் பூதஸூக்ஷ்மதத்வாஸநாதிகம் பஞ்சாக்நிவித்யாயாம் ஜ்ஞாதவ்யதயோதிதம் | தத்த்வயம் முமுக்ஷுபிஸ்த்யாஜ்யதயா ஜ்ஞாதவ்யதயா ச ஜிஜ்ஞாஸிதம் | பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித:—பூதபாவ: மநுஷ்யாதிபாவ:— ததுத்பவகரோ யோ விஸர்க: "பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீ"தி ச்ருதிஸித்தோ யோஷித்ஸம்பந்தஜ: ஸ கர்மஸம்ஜ்ஞித: | தச்ச ஸர்வம் முமுக்ஷுபிருத்வேஜநீயதயா பரிஹரணீயதயா ச ஜ்ஞாதவ்யதயா ஜிஜ்ஞாஸிதம் | பரிஹரணீயதா சாநந்தரமேவ வக்ஷ்யதே "யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தீ"தி || ||௩||

பகவான் சொல்லுகிறார்—

பிரும்மம் என்று சொன்னது உயர்ந்ததான 1 அக்ஷரம், அதாவது—உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மஸ்வரூபம்.

---

1. அக்ஷரம் என்றால், ஒருவிதமான மாறுபாடில்லாத ஜீவனுடைய பொதுவான ஸ்வரூபம். ஜீவன் கர்மத்தாலே தேவன் முதலான பலவித உடம்புகளை அடைந்து, தேவன் என்றும், மனிதன் என்றும், வெவ்வேறாகச் சொல்லப் படுகிறான். அந்தக் கர்மம் போய்விட்டால், அவனு

அத்யாத்மம் என்பது ஸ்வபாவம்—பிரகிருதி, அதாவது—ஆத்மாவைக் காட்டிலும் வேறாயும், ஆத்மாவுடன் சேர்ந்துமிருக்கிற உடம்பும், அதுடன் கூடியிருப்பதாலே உண்டாகும் அக்ஞானமும், கர்மமும், வாஸனை முதலானதும். இது 1 பஞ்சாக்கினி (ஐந்து அக்கினி) தியானத்தில் அறிய வேண்டியதாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டில் ஒன்றை அடைய வேண்டியதென்றும், ஒன்றைத் தள்ள வேண்டியதென்றும், மோக்ஷத்தை ஆசைப்

---

க்கு உடம்பு கிடையாது. கர்மம் இருக்கும் காலத்திலும், இன்ன உடம்பில்தான் இருக்க வேணுமென்று கட்டுப்பாடுமில்லை. உதாரணம்—கடையில் கத்திரிக்காய் இருக்கிறது. அதைக்கறியாகவும், துவையலாகவும், பச்சடியாகவும், பலவிதமாய்ச் செய்யலாம். கத்திரிக்காய் முன்னாலே எல்லாவற்றிற்கும் பொதுவாயிருந்தது. அதுபோல ஜீவன் பொதுவாயிருக்கிறான். கர்மத்தினால் அந்தந்த உடம்பில் நுழைந்து, அதற்குத் தகுந்த பெயரையடைந்து, அதற்கு உரிய வேலைகளைச் செய்கிறான். கத்திரிக்காயின் உருவம் மாறுகிறது. ஜீவனுக்கு உருவத்தில் மாறுபாடில்லை.

1. வேதத்தில் பஞ்சாக்கினி வித்யையென்று ஒரு தியானம் சொல்லப்படுகிறது. அதில் ஜீவன் சாகிறபோது பெரிய உடம்பைவிட்டுச் சின்ன உடம்புடன் போய், திரும்பி பெரிய உடம்புடன் பிறப்பதை விரிவாய்ச் சொல்லுகிறது. அவன் முதலில் தேவலோகத்திற்குப் போய், உயர்ந்த ஸுகத்தை அநுபவிப்பதற்குத் தகுந்த அழகான உடம்பை அடைகிறான். அங்கு சில காலம் ஸுகத்தை அநுபவித்து, அந்த ஸுகத்தை உண்டுபண்ணின புண்ணியம் செலவழிந்த பிறகு, அந்த உடம்பு போய், சின்ன உடம்புடன்மேகத்திற்கு வந்து சேருகிறான். அப்போது இது மேகம், இது அவன் உடம்பு என்று பிரிக்கக்கூடாதபடி அத்துடன் சேர்ந்திருக்கிறான். இதன் பிறகு மழையுடன் கூட பூமிக்கு வந்து தானியங்களுடன் சேருகிறான். அந்த தானியம் சமைக்கப்பட்டுச் சாப்பிடும்போது, ஒரு ஆணுடைய உடம்பில் வந்து சேருகிறான். பிறகு அவனுடைய ரேதஸ்ஸாக ஆகி, ஒரு பெண்ணுடைய கர்ப்பத்தில் வந்து சேருகிறான். அப்போதுதான் அவனுக்கு மனிதன் (புருஷன்) முதலான பெயர் உண்டாகிறது. ஜீவன் வரிசையாக தேவலோகத்தையும், மேகத்தையும், தானியத்தையும், ஆணையும், பெண்ணையும் வந்துசேருகிறான். இந்த ஐந்தையும் ஐந்து அக்கினியாகச் சொல்லி இவன் அவைகளைச் சேருவதை ஐந்து ஹோமங்களாகச் சொல்லியிருக்கிறது. ஐந்தாவது ஹோமத்தில் அவனுக்குப்புருஷன் என்று பெயர்

படுகிறவன் அறியவேண்டியது. கர்மமென்பது—ஆத்மாவை மனிதன் என்று சொல்லும்படி பண்ணுகிற விஸர்க்கம். அதாவது—ஆணும் பெண்ணும் சேரும்போது, பெண்ணின் உடம்பில் ரேதஸ்ஸை விடுவது. அதுவும், அதைச் சேர்ந்தவைகளும் அருவருக்கக்கூடியதாகையால், விடவேண்டியதென்று அவன் அறியவேண்டியது. விடவேண்டியது என்பதை 11-வது சுலோகத்தில் சொல்லப்போகிறார். [3]

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஶ்சாதிதைவதம் ।
அதியஜ்ஞோऽஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம் வர ॥ ௪ ॥

ஐஶ்வர்யார்தினாம் ஜ்ஞாதவ்யதயா நிர்திஷ்டம் அதிபூதம் க்ஷரோ பாவ:- வியதாதிபூதேஷு வர்தமான: தத்பரிணாமவிஶேஷ: க்ஷரணஸ்வபாவோ விலக்ஷணஶப்தஸ்பர்ஶாதிஸாஶ்ரய: । விலக்ஷணா: ஶப்தாதய: ஸாஶ்ரயா: ஐஶ்வர்யார்திபி: ப்ராப்யத்வேன அநுஸந்தேயா: । புருஷஶ்சாதிதைவதம்- அதிதைவதஶப்தநிர்திஷ்ட: புருஷ: । அதிதைவதம்- தேவதோபரி வர்தமான:, இந்த்ரப்ரஜாபதிப்ரப்ருதிதேவதோபரி வர்தமான:, இந்த்ரப்ரஜாபதிப்ரப்ருதீனாம் போக்யஜாதாத் விலக்ஷணஶப்தாதேர் போக்தா புருஷ: । ஸ ச போக்த்ருத்வாவஸ்தா ஐஶ்வர்யார்திபி: ப்ராப்யதயாऽநுஸந்தேய: । அதியஜ்ஞோऽஹமேவ- அதியஜ்ஞஶப்தநிர்திஷ்டோऽஹமேவ । அதியஜ்ஞ:- யஜ்ஞைராராத்யதயா வர்தமான: । அத்ர இந்த்ராதௌ மம தேஹபூதே ஆத்மதயாऽவஸ்திதோऽஹமேவ யஜ்ஞைராராத்ய இதி மஹாயஜ்ஞாதிநித்ய

---

வருகிறது என்றும் சொல்லியிருக்கிறது. தேவலோகத்தை விட்டுக் கர்ப்பத்தில் வந்துசேருகிற வரையில், ஜீவனுக்கு அறிவில்லாததினால் ஸுகமும் துக்கமுமில்லை. இந்த ஸங்கதியைத் தெரிந்துகொண்டு, ஒருவன் பெரிய உடம்போடும், சின்ன உடம்போடும் சேர்ந்திருப்பதில் வெறுப்புண்டாகி, உடம்பை அடியோடு தொலைப்பதற்கு முயற்சி செய்யவேண்டியது. இதைத்தான் இந்த சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑍍
𑌅𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑍇𑌯𑌮𑍇𑌤𑌤𑍍 ॥ ॥௪॥

பணத்தை ஆசைப்படுகிறவன் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட அதிபூதமென்பது—பிரகிருதி என்கிற அறிவில்லாத வஸ்துவாலுண்டானை—அழிவு முதலான மாறுபாட்டை அடையக்கூடிய—உயர்ந்த வர்ணம், வாஸனை, ரஸம் முதலானவைகளும், அவைகளையுடைய வஸ்துக்களும். அவன் இவைகளை அடைய வேண்டுமென்றிருப்பதால், அவைகளைத்தான் நினைக்க வேண்டியது. அதிதைவம் என்பது—இந்திரன், பிரும்மா, முதலானவர்களைக்காட்டிலும் உயர்ந்தஸுகங்களை அநுபவிக்கிறவனைதான். இவன் அந்த ஸுகங்களை அநுபவிக்கப் போகிறவனாகத் தன்னை நினைக்கவேண்டியது. அதியக்ஞம் என்பது—நான்தான் (பகவான்). ஏனென்றால், யக்ஞம் முதலான நல்ல கருமங்களினாலே பூஜிக்கப்படுகிறவன். என்னுடைய உடம்புகளான இந்திரன் முதலான எல்லா ஜீவன்களுக்கும் ஆத்மாவாயிருந்து, நான்தான் யக்ஞங்களால்பூஜிக்கப்படுகிறேன்—என்பதை மஹாயக்ஞம்முதலானநித்தியம், நைமித்திகம் என்கிற கர்மங்களைச் செய்யும்போது மூன்றுபேர்களும் நினைக்கவேண்டியது. (4)

𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌸 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ॥௫॥

𑌇𑌦𑌮𑌪𑌿 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿, 𑌸 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿— 𑌮𑌮 𑌯𑍋 𑌭𑌾𑌵𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌤𑌂 𑌯𑌾𑌤𑌿, 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌤𑍍𑌤𑍇, 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌯𑌥𑌾 𑌆𑌦𑌿𑌭𑌰𑌤𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌹𑌰𑌿𑌣𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌾𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌃 ॥ ॥௫॥

இப்போது சொல்லப் போகிறதும் மூன்றுபேர்களுக்கும் பொது. எவனுக்குச்செத்துப் போகிறகாலத்தில் வேறு நினைவுவராமல் என் நினைவுமாத்திரம் வருகிறதோ, அவன்தான் 1 என்மாதிரி

1. சுலோகத்தில் "மத்பாவம்" என்ற சொல் இருக்கிறது. அதில் பாவசப்தத்திற்கு ஸ்பாவம் (தன்மை)என்று பொருள். அதாவது'—

ஆகிறான். என்னைப் பெரியபணக்காரன் என்று நினைத்தால், பணக்காரனாக ஆகிறான். என்னையே அடையவேணுமென்றுநினைத்தால், என்னையே அடைகிறான். தனக்குவேண்டிய என்னிடத்திலிருக்கிற ஸங்கதியை நினைப்பதினால், அது அவனுக்கு வருகிறது. ஆதிபாதன் (ஜடபாதர்) என்பவர் ஒருமானை வளர்த்துக் கொண்டு வந்து, செத்துப்போகிறகாலத்தில் அதையே நினைத்து, அடுத்தஜந்மத்தில் மானாகப் பிறந்தாராம். (5)

அத — ஸர்வஸ்மிந்விஷயே ஸஜாதீயாகாராபாதநம் அந்த்யப்ரத்யயஸ்ய ஸ்வபாவ இதி ஸாமாந்யேநாஹ—

யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம் |
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித: || ‖௬‖

---

எனக்குஎன்னதன்மையிருக்கிறதோ,அதேமாதிரி தன்மையைஅடைகிறான்.இந்தசொல்லிற்கு பகவானாகவேஆய்விடுகிறான் என்று பொருளன்று. அப்படிப் பொருள் சொல்வது வேதத்திற்கு விரோதம். இந்தசொல்லிற்கு பகவான் மாதிரியாயிருக்கிறான் என்று பொருள்கொள்ளாமல் வேறு பொருள் சொல்லமுடியாது. ஏனென்றால்—பகவானுடையதன்மையை அடைகிறது என்றால் என்ன? குளவியின் கூட்டில் வைக்கப்பட்ட புழு குளவிஜாதியாக ஆய்விடுகிறதே. அதுபோல பகவான் எப்படி ஈசுவரனோ (அடக்கி ஆளுகிறவனோ) அப்படி இவனும் இன்னொரு ஈசுவரனாக ஆய்விடுகிறான் என்றால், அப்போது இரண்டு ஈசுவரன் இருப்பதாக ஏற்படுமே. மேலும், மூன்றுபேர்கள் பகவானைத்தியானம் பண்ணுகிறார்கள்—பணத்தை ஆசைப்படுகிறவன்; தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்க ஆசைப்படுகிறவன்; பகவானுடனே எப்போதும் கூடஇருக்கவேணும் என்று ஆசைப்படுகிறவன். இவர்கள் மூன்றுபேர்களும் தியானம் பண்ணி வெவ்வேறு ஈசுவரனாகப்போய்விட்டால், இந்த மூன்றுபேர்களுக்கும் பலனில் என்ன வித்தியாஸம். பலன் ஒன்றாயிருந்தால், தியானம் பண்ணுகிறவர்களுக்கு மூன்றுபிரிவு சொன்னதுதான் எப்படிக்கூடும். ஆகையால் எவன் பகவானை எந்த ஸங்கதியோடு நினைக்கிறானோ, அதேமாதிரி ஸங்கதிதான் வரும். அவனையும் பகவானையும் வேறாகக் காட்டக்கூடிய குணங்கள் இருக்கவே இருக்கின்றன. அவைகள் போகிறவையல்ல. இந்தஸங்கதி பாஷ்யத்தில் காட்டிய உதாரணத்தாலும் ஏற்படுகிறது. ஜடபாதர் எந்தமானை நினைத்தாரோ, அந்தமானாக ஆய்விடவில்லை,அதுபோல உருவம் வந்தது

अन्ते-अन्तकाले यं यं वापि भावं स्मरन् कलेवरं त्यजति, तं तं भावमेव मरणादूर्ध्वमेति । अन्त्यप्रत्ययश्च पूर्वभावितविषय एव जायते ॥ ॥६॥

அவ—செத்துப் போகிறகாலத்தில் உண்டாகும் நினைவுக்கு ஒரு சக்தி இருக்கிறது. அதாவது-ஒருவன் எந்த ஸங்கதியை நினைக்கிறானோ, அதேமாதிரி ஸங்கதியை அவனுக்கு வரும்படி செய்கிறது-என்று, அதைத் தெளிவாய்ச் சொல்லுகிறார்—

ஒருவன் செத்துப்போகிற காலத்தில் எந்த எந்த ஸங்கதியை நினைத்து சாகிறானோ, அதேமாதிரி ஸங்கதியையே செத்தபிறகு அடைகிறான். இருக்கும் காலத்தில் எதை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறானோ, அதின் நினைவுதான் செத்துப்போகிற காலத்தில் வரும். [6]

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च ।
मय्यर्पितमनोबुद्धिर्मामेवैष्यस्यसंशयः ॥ ॥७॥

यस्मात्पूर्वकालाभ्यस्तविषय एवान्त्यप्रत्ययो जायते, तस्मात्सर्वेषु कालेषु-आप्रयाणादहरहर्मामनुस्मर। अहरहरनुस्मृतिकरं युद्धादिकं वर्णाश्रमानुबन्धि श्रुतिस्मृतिचोदितं नित्यनैमित्तिकं च कर्म कुरु । एवं [illegible] मय्यर्पितमनोबुद्धिरन्तकाले च मामेव स्मरन् यथाभिमतप्रकारं मां प्राप्स्यसि । नात्र संशयः ॥ ॥७॥

ஆகையால், செத்துப் போகிறவரையில் ஒவ்வொருநாளும் என்னையே நினை. 1 எப்பொழுதும் அந்த நினைவை உண்டுபண்

1. சுலோகத்தில் "என்னை நினை, சண்டைப்படு" என்று சொல்லியிருக்கிறது. நினைப்பதற்கு பலன் சொல்லியிருக்கிறது. அதாவது கடைசியில் அந்தநினைவுவருகிறது என்று. சண்டைப்படு என்பதற்குப்பலன் சொல்லவில்லை. இரண்டுவேலைகளைச் சேர்த்துச் சொல்லி,ஒன்றுக்கு மாத்திரம் பலனைச் சொன்னால், மற்றொன்று அதற்கு அங்கம், அதாவது—அதற்கு உதவிசெய்கிறது—என்று ஒருநியாயம். இந்தநியாயப்படி சண்டைப்படுவது நினைப்பதற்கு அங்கம். அதைக்காட்டுவதற்காகத்தான் "நினைவைஉண்டுபண்ணக்கூடிய" என்று சொல்லியிருக்கிறது.

ணக்கூடிய—நீ செய்யவேண்டியதாகச் சாஸ்திரத்தில் சொல்லிய— சண்டை முதலான நித்திய கர்மங்களையும், நைமித்திக கர்மங்களையும் முறைப்படி செய், இந்த மாதிரி உன் மனதையும் எண்ணத்தையும் 1 என்னிடத்தில் கொடுத்து, செத்துப்போகிற காலத்தில் என்னையே நினைத்தால், நீ வேண்டிய பலனை அடைவாய். இதில் ஸந்தேஹமில்லை. [7]

அவ— ஏவம் ஸாமாந்யேந ஸ்வப்ராப்யப்ராப்திரந்த்ய ப்ரத்யயாயத்தேத்யுக்த்வா, தஸ்யைவ ப்ரயாணகாலாநுஸந்தாநப்ரகார ஸித்த்யம் வக்துமுக்தே ஐஶ்வர்யார்த்திநாமநு ஸந்தாநப்ரகாரம், யோகாநுஸந்தாநம் ப்ரயாணப்ரகாரம் சாஹ—

அப்யாஸயோகயுக்தேந சேதஸா நாந்யகாமிநா ।
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தாநுசிந்தயந் ॥௮॥

அஹரஹரப்யாஸயோகாப்யாம் யுக்ததயா நாந்யகாமிநா சேதஸா ப்ரயாணகாலே பரமம் புருஷம் திவ்யம் வக்ஷ்யமாணப்ரகாரம் அநுசிந்தயந் தமேவ யாதி । தத்ஸமாநைஶ்வர்யவிஶிஷ்டதயா தத்ஸ்தாநாகாரோ பவதி । அப்யாஸ:- நித்யநைமித்திகாவிருத்தேஷு ஸர்வேஷு காலேஷு மநஸோபாஸ்யஸம்ஶீலநம் । யோகஸ்து அஹரஹர் யோககாலே அநுஷ்டீயமாநம் யதோக்தலக்ஷணமுபாஸநம் ॥ ॥௮॥

அவ—கீழ்ச் சொன்ன மூன்று பேர்களும் செத்துப்போகிற காலத்தில் வரும் நினைவினால் தான் தங்களுக்கு வேண்டிய ஸங்கதிகளை அடைகிறார்கள் என்று பொதுவாகச் சொல்லி, அவர்கள் செய்கிற தியானத்தில் உள்ள வேறுபாட்டைச் சொல்ல ஆரம்பிக்கிறார். பணத்தைவிரும்புகிறவன் நினைக்கவேண்டிய விதத்தையும், அந்த நினைவுக்குத் தகுந்தபடி செத்துப்போகிற காலத்தில் நினைக்க வேண்டிய விதத்தையும் சொல்லுகிறார்.

---

1. மனதைக் கொடுப்பது—நினைப்பது. புத்தியைக் கொடுப்பது பகவான் நினைத்தஸங்கதியைக் கொடுப்பார் என்கிற தீர்மானம்.

நாள்தோறும் அப்யாஸத்தையும், யோகத்தையும் செய்வதால், என்னைத்தவிர வேறொன்றையும் நினைக்காத மனதால், செத்துப்போகிற ஸமயத்தில் மேலே சொல்லுகிறபடி என்னையே அடைகிறான். அதாவது—ஜடபரதர் மான் உருவத்தை அடைந்தது போல், ஐசுவரியத்தை யுடையவனாக என்னை நினைத்து, என்னைப் போல் ஐசுவரியத்தை அடைகிறான். அப்யாஸம் என்றால், பழக்கம். அதாவது—யோகம் செய்யாத காலத்திலும், சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளைச் செய்து மீந்த காலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டிருப்பது. யோகம் என்றால், ஒரு காலத்தில் தியானம் செய்ய வேண்டிய முறைப்படி என்னை இடைவிடாமல் நினைப்பது. [8]

𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍁
𑌸𑍍𑌮𑌰𑍇𑌦𑍍𑌯𑌃 | 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯
𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 || ||௯||

𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌽𑌚𑌲𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗
𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 | 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 || ||௧௦||

𑌕𑌵𑌿𑌂-𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌮𑍍 | 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂-𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌮𑍍| 𑌅𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌂-𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑍍| 𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌂-𑌜𑍀𑌵𑌾𑌦𑌪𑌿 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌮𑍍|𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌧𑌾𑌤𑌾𑌰𑌂-𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌰𑌮𑍍| 𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂-𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 | 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍- 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑍍 | 𑌤𑌮𑍇𑌵𑌂𑌭𑍂𑌤𑌮𑌹𑌰𑌹𑌰𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨𑌾𑌧𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌅𑌚𑌲𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯-𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌯𑍋𑌽𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 | 𑌸 𑌤𑌮𑍇𑌵𑍋𑌪𑍈𑌤𑌿 - 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 - 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 || ||௧௦||

பணத்தை வேண்டுகிறவன் பகவானை எல்லாம் தெரிந்தவராகவும், எப்பொழுதுமிருக்கிறவராகவும், எல்லாலோகங்களையும் அட

விஸ்தாரமாகக் கேட்டேன். 1 தாமரை யிதழ்போன்ற கண்களை உடையவரே! எல்லா உலகமும் எப்பொழுதும் உம்முடைய உப யோகத்துக்காகவே இருக்கிறது. ஞானம், பலம் முதலான நல்ல குணங்களின் கூட்டங்களாலே நீர் தான் மிகவும் உயர்ந்தவர். எல்லா உலகத்தையும் தூக்குகிறீர். உம்மால் தான் எல்லா உலக மும் ஒரு ஸங்கதியை நினைப்பது, இமைக் கொட்டுவது முதலான எல்லா வேலைகளையும் செய்கிறது. இது முதலான 2 எப்பொ ழுது மிருக்கிற அளவில்லாத உம்முடைய பெருமைகளையும் கேட் டேன் இவைகளைக் கேட்டேன் [2]

𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌽𑌽𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌰𑍂𑌪𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ॥

𑌹𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰! 𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌧𑍃𑌤𑌂, 𑌯𑌥𑌾𑌽𑌽𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 । 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮! 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑍇! 𑌤𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑌂-𑌤𑍍𑌵𑌦𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌪𑌾𑌲𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑍇 𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌭𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌤𑍍𑌵𑍇 𑌪𑌰𑌤𑌰𑌤𑍍𑌵𑍇 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌤𑍍𑌵𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 ॥ ॥௩॥

(முன் பக்கத்தின் குறிப்பு.) 1 அர்ஜுனனுக்குச் சண்டையில் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுவதற்காக மாத்திரம் சொன்னதல்ல என்று கருத்து.

1. இதனால் தாமரைக்கண்ணோடு கூடிய அப்ராக்ருதமான திரு மேனி க்ருஷ்ணாவதாரத்திலும் இருந்ததென்று தெளிவாய் காணப்பட் டதாக ஏற்படுகிறது

2 சுலோகத்தில் பெருமையை 'அவ்யயம்' என்றுசொல்லியிருக்கி றது. அதற்கு 'குறைவில்லாத'' என்று பொருள். காலத்திலும், விஷ யத்திலும், கணக்காலும், உயர்த்தியாலும் அந்தப்பெருமைக்கு அள வில்லை அதாவது—பகவானுடைய பெருமை எப்போதுமிருக்கிறது. அறிவு, அழகு, ஸொத்து முதலிய எல்லா விஷயங்களிலும் பெருமையுள் ளவன். இத்தனை விஷயங்களில்தான் பெருமையிருக்கிறதென்று விஷ யங்களுக்குக் கணக்கில்லை. பெருமைக்கு அளவுமில்லை—என்று கருத்து.

வராகவும், ஒவ்வொரு நாளும் ப்ரீதியுடன் தியானம் செய்யவேண்டியது. அந்தப் பழக்கத்தாலே ஸம்ஸ்காரம் 1 வலுத்து வேறொன்றையும் நினையாத மனதால் செத்துப் போகும் காலத்தில் புருவங்களுக்கு நடுவில் பிராணனை வைத்து, அந்த இடத்திலேயே 2 பகவானை அப்படியே நினைத்து உடம்பை விட்டால், என்னைப் போல 3 ஐசுவரியத்தை அடைகிறான். [9—10]

அவ— அத கைவல்யார்த்திநாம் ஸ்மரணீயமாஹ—

யதக்ஷரம் வேதவிதோ வதந்தி விசந்தி யத்யதயோ வீதராகா: । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ॥ ॥௧௧॥

யதக்ஷரம் அஸ்தூலத்வாதிகுணகம் வேதவிதோ வதந்தி। வீதராகாஸ்ச யதயோ யதக்ஷரம் விசந்தி। யதக்ஷரம் ப்ராப்தும் இச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி। தத்பதம் ஸங்க்ரஹேண தே ப்ரவக்ஷ்யே। பத்யதே கம்யதே சேதஸேதி பதம்- ததிதம் வேதாந்தவேத்யம் [illegible]க்ஷரம் யதோபாஸ்யம் ததா ஸங்க்ஷேபேண ப்ரவக்ஷ்யாமீத்யர்த்த: ॥ ॥௧௧॥

---

வஸ்துக்களுக்கும் காரணமான பிரகிருதி என்கிற திரவியத்தைச் சொல்லுகிறது. அதைக்காட்டிலும் மேலான என்றால் சுத்தஸத்வம் என்ற திரவியத்தாலுண்டானது என்று ஏற்படுகிறது. அதிலிருந்து உண்டான திருமேனியானது காமத்துக்குக் உட்பட்டதன்று. அழிவில்லாதது. ஒருவிதக்குற்றமு மில்லாதது. அது அனேகஸூரியர்கள் சேர்ந்தது போல் அளவில்லாத பிரகாசத்தை யுடையது.

1. யோகத்தைச் சொல்லுகிற இடங்களில் புருவங்களுக்கு நடுவில், பிராணனை அசையாமல் வைக்கவேணும் என்று சொல்லியிருக்கையால், அதை இங்கே சொல்லி இருக்கிறது.

2. புருவங்களின் நடுவில்தான் பகவானையும் இருப்பதாக நினைக்க வேணும். பகவானுக்கு வேறுஇடத்தைச் சொல்லாததினாலும், யோகத்தைச்சொல்லுமிடங்களில் இந்த இடத்தையே சொல்லியிருப்பதாலும், பகவானுக்கும் இதுவே இடம்.

3. ஐசுவரியத்துக்காகக் கீழ்ச்சொன்ன குணங்களோடு பகவானை த்தியானம் பண்ணுகிறவனுக்கு பகவானைப் போல ஐசுவரியம் மாத்திரம் வருமே ஒழிய, பகவானுடைய குணங்கள் வாராது. மோக்ஷத்திற்காக பகவானைத்தியானம் பண்ணுகிறவனுக்கு குணங்களும் வரும்.

அவ — ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்க ஆசைப்படுகிறவர்கள் நினைக்கவேண்டிய விதத்தைச் சொல்லுகிறார் —

1 அஸ்தூலத்வம் (பெருமை யில்லாமை) முதலான குணங்களுள்ளதாக எந்த அக்ஷரத்தை (பிரும்மத்தை) வேதமறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, மற்ற வஸ்துக்களில் ஆசை யில்லாதவர்கள் எந்த அக்ஷரத்தை அடைகிறார்களோ, எந்த அக்ஷரத்தை அடைய வேணுமென்று ஆசைப்பட்டு, ஸ்திரீயை நினைப்பது முதலியவைகளைச்செய்யாமலிருக்கிறார்களோ, அந்த நானாகிற-எல்லா வேதாந்தங்களாலும் அறியத் தகுந்த— 2 அக்ஷரத்தை எப்படித் தியானம் செய்யவேண்டுமோ, அப்படிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். [11]

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणमास्थितो योगधारणाम् ॥ ௧௨ ॥
ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥ ௧௩ ॥

सर्वाणि श्रोत्रादीनीन्द्रियाणि ज्ञानद्वारभूतानि संयम्य- स्वव्यापारेभ्यो विनिवर्त्य, हृदयकमलनिविष्टे मय्यक्षरे मनो निरुध्य, योगाख्यां धारणामास्थितः- मय्येव निश्चलां स्थितिमास्थितः, ओमित्येकाक्षरं ब्रह्म मद्वाचकं व्याहरन्, वाच्यं मामनुस्मरन्, आत्मनः प्राणं मूर्ध्न्याधाय, देहं त्यजन् यः प्रयाति । स याति परमां गतिम् – प्रकृतिवियुक्तं मदाकारसदृशमपुनरावृत्तिमात्मानं प्राप्नोतीत्यर्थः । 'यस्य सर्वे

1. தன் (ஆத்ம) ஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்கவேணு மென்று ஆசைப்படுகிறவன் தியானம் செய்யவேண்டிய பகவானுடைய குணங்கள்—முண்டக உபநிஷத்தில் முதல் முண்டகத்தில் சொன்ன இது பருத்ததுமன்று, இது சின்னதுமன்று, இதுமுதலான குணங்கள்.

2. இங்கே ஸ்வரூபத்தில் ஒருவிதமான மாறுதலில்லாத பகவானுடைய ஸ்வரூபத்தின் தியானம் சொன்னது--ஸ்வரூபத்தில் மாறுதலில்லாத ஜீவனுடைய ஸ்வரூபத்தை அடைவதற்காக.

𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿’’𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇॥

அறிவுக்கு வழிகளான காது முதலான இந்திரியங்களை அவைகளின் விஷயங்களில் போகாமல் 1 அடக்கி, ஹிருதயகமலத்தில் இருக்கும் அக்ஷரமாகிய என்னிடத்தில் மனதை 2 நிறுத்தி, என்னையே 3 நிலையாய் தியானம் பண்ணுகிறவன் என்னைச் சொல்லுகிற ஒற்றை எழுத்தான பிரணவத்தைச் சொல்லிக் கொண்டு, அந்த எழுத்துக்குப் பொருளான என்னை நினைத்துக் கொண்டு, தன் 4 பிராணனைத் தலையில் வைத்து, உடம்பைவிடவேண்டியது. அவன் உயர்ந்த இடத்தை அடைகிறான். அதாவது—பிரகிருதியின் நினைவில்லாமல் என்னைப் போலிருக்கிற மறுபடியும் திரும்பி வருவது இல்லாத 5 ஜீவஸ்வரூபத்தை அடைகிறான். அதாவது

---

1. இப்படி அடக்குவதை பிரத்யாஹாரம் என்று சொல்லுகிறது.

2. சுலோகத்தில் மனதை ஹிருதயத்தில் வைத்து என்றிருக்கிறது. அதற்கு மனது என்கிற இந்திரியத்தை ஹ்ருதயம் என்கிற இடத்தில்வைத்து—அதாவதுமனதால்ஹிருதயத்தைநினைத்து—என்று தான்பொருளாகும். பகவானுடையதியானத்தைசொல்லவந்தஇடத்தில் ஹிருதயத்தைத் தியானம்பண்ணும்படி சொல்லுவதுஸரியன்று. ஆகையால் மனதை ஹிருதயத்திலிருக்கும் பகவானிடத்தில் வைத்து என்று பொருள்கொள்ள வேணும்.

3. பிரத்யாஹாரம், தாரணை, தியானம் என்று யோகத்தின் படிகள் சொல்லியிருக்கின்றன. பிரத்யாஹாரம் என்பது கண்முதலான இந்திரியங்களை அடக்குவது. தாரணை என்பது மனதைத் தியானிக்க வேண்டியவஸ்துவைத் தவிர வெளியில்போகாதபடி அதில் நிறுத்துவது. தியானம் என்பது வேறுவஸ்துவின் நினைவு கலக்காமல் ஒன்றையே நினைப்பது. இந்தஇடத்தில் தாரணம் என்று சொன்னது இரண்டாவதான தாரணையைச் சொல்லவில்லை. அதற்கு அடுத்தபடியான தியானத்தைச் சொல்லுகிறது.

4. மோக்ஷத்தை ஆசைப்பட்டவனுடைய பிராணன் உடம்பை விட்டுப் போகும் காலத்தில் தலைவழியாய் போகவேண்டியதாகையால், "பிராணனைத்தலையில்வைத்து" என்று சொல்லியிருக்கிறது.

5. ஆத்மாவை மாத்திரம் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டவன் அடையவேண்டியது தன் ஸ்வரூபம் மாத்திரம்தான். ஆனால்இவன் தன்

பார்க்கிறான். அடியோடு கர்மம்போன ஜீவஸ்வரூபத்தை உயர்ந்த அடையவேண்டிய வஸ்துவாக மேலே 24-வது சுலோகத்தில் சொல்லப் போகிறது. (12—13)

அவ.— ஏவமைஶ்வர்யார்த்திந: கைவல்யார்த்திநஶ்ச ஸ்வப்ராப்யாநுகுணம் பகவதநுசிந்தநப்ரகார உக்த: | அத ஜ்ஞாநிநோ பகவதநுசிந்தநப்ரகாரம் ப்ராப்திப்ரகாரஞ்சாஹ—

அநந்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: ||௧௪||

நித்யஶ: ஸர்வதா ஸததம் ஸர்வகாலம் அநந்யசேதா: ய: மாம் ஸ்மரதி, அத்யர்த்தமத்ப்ரியத்வேந மயா விநா ஆத்மதாரணமலபமாநோ நிரதிஶயப்ரியாம் ஸ்ம்ருதிம் ய: கரோதி, தஸ்ய நித்யயுக்தஸ்ய நித்யயோகம் காங்க்ஷமாணஸ்ய யோகிநோ(அ)ஹம் ஸுலப: — அஹமேவ ப்ராப்ய:, ந மத்பாவைஶ்வர்யாதிக:; ஸுலபஶ்ச தத்வியோகமஸஹமாநோ(அ)ஹமேவ தம் வ்ருணே | மத்ப்ராப்த்யநுகுணோபாஸநவிபாகம் தத்ப்ரதிபந்தகநிரஸநம் அத்யர்த்தமத்ப்ரியத்வாதிகம் அஹமேவ ததாமீத்யர்த்த: | "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:" இதி ஹி ஶ்ரூயதே | வக்ஷ்யதி ச "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் | ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே || தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: | நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா" இதி || ||௧௪||

அவ—இப்படி பணத்தையும், தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பதையும் அடைய வேண்டியவர்கள் பகவானைத் தியானம் பண்ணவேண்டிய விதம் சொல்லப் பட்டது. இப்போது ஞானி பகவானைத் தியானம் செய்யும் விதத்தையும், பிராப்யத்தை அடைகிற விதத்தையும் சொல்லுகிறார்—

---

ஸ்வரூபத்தைமாத்திரம் கொஞ்சகாலம் அநுபவித்து, பிறகு பகவானிடம் போகிறான். ஸம்ஸாரத்துக்கு இவன் திரும்பி வருகிறதில்லை. ஆகையாலே ஜீவஸ்வரூபத்தையும் உயர்ந்த இடமாகச்சொல்லிற்று.

ஆரம்பித்தது முதல் பிறகு ஒருக்காலமும் விடாமல், அதாவது—பணம், தன்னைமாத்திரம் அநுபவிப்பது ஆகியபிரயோஜனங்களை விரும்பாமல்,பகவானைத் தவிர இன்னொரு இடத்தில் மனதை வைக்காமல்—என்னிடத்தில் அளவில்லாத ஆசையிருப்பதனால், என்னை அரைக்ஷணம் நினைக்காத போனால் தாங்கமுடியாமல், எவன் அளவில்லாத பிரீதியுடன் தியானம்செய்கிறானோ, எப்போதும் என்னுடனே இருக்கவேணுமென்று ஆசைப் பட்டுக்கொண்டிருக்கிற அந்த யோகி என்னைத் தான் அடைகிறான். கீழே சொன்ன இரண்டு பேர்களைப் போல் என் மாதிரியான ஐசுவரியம் முதலானவைகளை அடைகிறதில்லை. பிரயாஸமில்லாமலும் என்னை அடைகிறான். என்னை ஆசைப்படாமல் ஐசுவரியம் முதலானவைகளை ஆசைப் படுகிறவர்களுக்குப் பிரயாஸம் அதிகம். என்னையே அடையவேணுமென்று தியானம் பண்ணுகிறவனைவிட்டு என்னால் பிரியமுடியவில்லை. ஆகையால் அவனுடைய தியானத்தைச் சீக்கிரம் 1 பழுக்கும்படி செய்கிறேன். அதற்கு 2 இடஞ்சலையும் போக்குகிறேன். அவனுக்கு என்னிடத்தில் அளவில்லாத பிரீதியையும் கொடுக்கிறேன். என்னோடுகூட பரமபதத்தில் ஒரு கட்டிலில் அவன் உட்காருகிறவரையில் நடுவில் அவனால் செய்ய முடியாத—செய்யவேண்டிய—எல்லா வேலைகளையும் செய்கிறேன். இந்த வேலையை என்னுடைய சுமையாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். 3 (14)

---

1. பழுக்கும்படிசெய்வதாவது—நினைவு வேறு எண்ணங்கலக்காமல் ஒரே கம்பிபோலிருக்கும்படியும், கண்ணால் பார்ப்பதுபோல் தெளிவாயிருக்கும்படியும் செய்வது, பகவானைப் பார்க்க வேணுமென்று அதிகமான ஆவலை யுண்டுபண்ணுவது முதலானவைகளைச் செய்வது.

2. இடஞ்சல்கள்—கெட்ட கர்மங்கள், ரஜோகுணம்—தமோகுணம்மேலிடுதல், ஆசையும், த்வேஷமும், மயக்கமுமுண்டாவது முதலானவைகள்.

3. இங்கே சொன்னவைகளெல்லாம் வெறும் ஸ்தோத்திரமன்று, அப்படியே வேதம் சொல்லுகிறது. இதே ஸங்கதியை 10-வது அத்தியாயத்தில் 10-வது சுலோகத்தில் சொல்லப் போகிறது. பணத்தையும ஆத்மஸ்வரூபம் மாத்திரத்தின் பார்வையையும் ஆசைப்படுகிறவர்கள் தியானம் பண்ண வேண்டிய பகவானுடைய குணங்கள் இன்னது

அவ— அத: பரமைஶ்வர்யார்தின: கேவலாத்மார்தினஶ்ச புனராவ்ருத்திம், பகவந்தம் ப்ராப்தஸ்ய அபுனராவ்ருத்திம் சாஹ—

மாமுபேத்ய புனர்ஜன்ம து:காலயமஶாஶ்வதம் |
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாம் கதா: ॥ ௧௫ ॥

மாம் ப்ராப்ய புனர்ஜன்மாகிலது:காலயமஶாஶ்வதம் ந ப்ராப்னுவந்தி। யத ஏதே மஹாத்மான:- மஹாமனஸ:, யதாவஸ்தித மத்ஸ்வரூபஜ்ஞானா அத்யர்த்தமத்ப்ரியத்வேன மயா வினா ஆத்மதாரணமலபமானா மய்யாஸக்தமனஸோ மதாஶ்ரயா:, மாமேவ பரமஸம்ஸித்திரூபம் மாம் ப்ராப்தா: ॥ ௧௫ ॥

அவ—அவரவர்கள் அந்தந்த வேலைகளைச் செய்ய ஆரம்பிப்பதற்குமுன் அவைகளால் வரும் பிரயோஜனங்களின் ஸங்கதிகளை அவசியம் அறியவேண்டியது. ஆகையால் இதன் பிறகு இந்த அத்தியாயத்தின் மேல்பாகத்தில் ஞானியும், ஆத்மாநுபவத்தை மாத்திரம் ஆசைப் படுகிறவனும் தங்கள் பிரயோஜனங்களை அடைந்த பிறகு திரும்பி வருகிறதில்லை என்றும், பணத்தை ஆசைப்பட்டவன், அதை அடைந்து மறுபடியும் பிறக்கிறானென்றும் சொல்லுகிறார்—

என்னை அடைந்தவர்கள் எல்லா துக்கங்களுக்கும் இருப்பிடமாயும் நிலையில்லாததுமான பிறப்பை மறுபடியும் அடைகிறதில்லை.

---

என்று கீழே சொல்லப்பட்டது. பகவானையே ஆசைப்படுகிறவர்கள் இன்ன குணங்களுடன் தியானம் பண்ணவேண்டியது என்று இங்கே சொல்லவில்லை. உபநிஷத்துக்களில் அனேக விதமானத் தியானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தந்தத் தியானத்தைச் செய்யும்போது, அதற்கு ஏற்பட்ட குணங்களுடன் தியானம்செய்யவேண்டியது என்று நினைத்து, அவைகளை இங்கே தனியாகச்சொல்லவில்லை என்றுதோன்றுகிறது. இந்தசுலோகத்தின் அவதாரிகையில், "பகவானைத்தியானம்செய்யும் விதத்தையும்" என்று சொன்னது எது வென்றால், தியானத்தை ஆரம்பித்ததுமுதல் எப்போதும் பகவானையே நினைத்துக் கொண்டிருப்பது, மற்றதையும், மற்றப் பிரயோஜனங்களையும் நினைக்கக்கூடாது என்பது முதலானவை.

னென்றால், அவர்கள் பெரிய மனதுடையவர்கள்; என்னை உள்ளபடி அறிந்தவர்கள்; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினாலே என்னைவிட்டிருந்தால், ஒரு நிமிஷம்கூடத் தாங்க முடியாதவர்கள்; இவர்கள் என்னிடத்திலேயே மனதை வைத்து, என்னையே தியானம் செய்து, உயர்ந்த பிரயோஜனமான என்னை அடைந்திருக்கிறார்கள். [15]

அத ஐஶ்வர்யகதிம் ப்ராப்தாநாம் பகவந்தம் ப்ராப்தாநாம் ச புநராவ்ருத்தௌ அபுநராவ்ருத்தௌ ச ஹேதுமாஹ—

ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்திநோऽர்ஜுந ।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே ॥ ௧௬ ॥

ஸப்ரஹ்மலோகா: லோகா: ப்ரஹ்மாண்டோதரவர்திநோ போகைஶ்வர்யாபந்நாநாம் புநராவர்திநோ விநாஶிந:। ஐஶ்வர்யகதிம் ப்ராப்தாநாம் ப்ராப்யஸ்தாநவிநாஶாத் விநாஶித்வமவர்ஜநீயம்। மாம் ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம் நிகிலஜகதுத்பத்திஸ்திதிலயலீலம் பரமகாருணிகம் ஸதைகரூபம் ப்ராப்தாநாம் விநாஶப்ரஸங்காபாவாத் தேஷாம் புநர்ஜந்ம ந வித்யதே ॥ ॥ ௧௬ ॥

அவ—ஐசுவரியத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறார்கள் என்பதற்கும், பகவானை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறதில்லை என்பதற்கும் காரணத்தைச் சொல்லுகிறார்—

1 பிரும்மலோகம் உள்பட 2 பிரும்மாண்டத்தின் நடுவிலுள்ள—லோகத்திற்கும் ஐசுவரியத்திற்கு திருப்பிடமான—எல்

---

1. பிரும்மலோகம் உள்பட என்பது சுலோகத்திலிருக்கிற "ஆ" என்ற சொல்லுக்குப் பொருள்.

2. பிரும்மாண்டம் என்பது பிரும்மாவின் வீடு. பிரகிருதி பெரிய ஸமுத்திரம், பிரும்மாண்டங்கள் அதிலுண்டாகும் குமிழிகள். இப்படியானால் அதற்குள் இருப்பவர்கள் அழிந்து போவார்கள் என்று சொல்லவேண்டுமோ.

லா லோகங்களும் ஒரு காலத்தில் அழிந்துவிடுகின்றன. அதனால் அவைகளை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறார்கள். வீடு இருந்த விடம்தெரியாமல் அழிந்துபோனால், அதிலிருந்தவர்கள் இன்னொருஇடம் போகமாட்டார்களோ. என்னுடைய இடமான பரமபதம் நிலையானது. அதற்கு ஒருக்காலும் அழிவில்லை. அந்தஇடத்தில் 1 எல்லாம் தெரிந்த—நினைத்தபடி தவறாமல் நடத்துகிற—எல்லாலோகங்களையு முண்டுபண்ணி, காப்பாற்றி, அழிப்பதை விளையாட்டாகச் செய்கிற—அளவில்லாத தயையுள்ள—எப்போதும் ஒருமாதிரியாயிருக்கிற—என்னை அடைந்தவர்களுக்கு அழிவுக்குப் பேச்சேயில்லாமையாலே, மறுபடியும் பிறப்பே கிடையாது.[ 16 ]

அத — ப்ரஹ்மலோகபர்யந்தாநாம் லோகாநாம் ததந்தர்வர்திநாம் ச ப்ரஹ்மாதீநாம் பரமபுருஷஸங்கல்பக்ருதாம் உத்பத்திவிநாசகாலவ்யவஸ்தாம் ஆஹ —

ஸஹஸ்ரயுகபர்யந்தமஹர்யத்ப்ரஹ்மணோ விது: ।
ராத்ரிம் யுகஸஹஸ்ராந்தாம் தேऽஹோராத்ரவிதோ ஜநா: ॥

அவ்யக்தாத்வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே ।
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே ॥௧௭॥

பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே।
ராத்ர்யாகமேऽவஶ: பார்த ப்ரபவத்யஹராகமே ॥௧௮॥

யே மநுஷ்யாதிசதுர்முகாந்தாநாம் ஸங்கல்பக்ருதாஹோராத்ரவ்யவஸ்தாவிதோ ஜநா:, தே ப்ரஹ்மணஶ்சதுர்யு

---

1. பகவானிடம் போனவன் மறுபடி பிறக்கிறதில்லை என்பதற்கு காரணங்கள் இந்த சொற்களாலே சொல்லப்படுகின்றன. பகவானைத்த விரமற்றவர்களுக்கு எல்லாம் தெரியாது. நினைத்தபடி செய்யமுடியாது. பகவானாலுண்டு பண்ணப் பட்டவர்கள். இரக்கமில்லாதவர்கள். ரஜஸ்ஸும் தமஸ்ஸு முள்ளவர்களாய், அதனால் ஆசையும்த்வேஷமும் உள்ளவர் களாயிருப்பார்கள். அவர்கள் ஒரேமாதிரியாய் இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட தாழ்ந்த தேவதையை .யடைந்தவன் அந்ததேவதையாலேயோ, மற்றவர்களாலேயோ அந்தவிடம் விட்டுத் திரும்பிவரக்கூடும். இடமும் நிலையில்லை, அவர்களும் நிலையில்லை,

வஸ்ய யதஹ:, தத்யுகஸஹஸ்ராவஸாநம் விது:, ராத்ரிம் ச ததாவிதாம் । தத்ர ப்ரஹ்மணோऽஹராகமஸமயே த்ரைலோக்யாந்தர்வர்தீநி தேஹேந்த்ரியபோக்யபோகஸ்தாநாநி வ்யக்தயஸ்தத்வஸ்தாவிஶேஷாதவ்யக்தாத் ப்ரபவந்தி । ததைவாவ்யக்தாவஸ்தாவிஶேஷே ராத்ர்யாகமஸமயே ப்ரலீயந்தே । ஸ ஏவாயம் கர்மவஶ்யோ பூதக்ராமோऽஹராகமே பூத்வா பூத்வா ராத்ர்யாகமே ப்ரலீயதே । புநரஹராகமே ப்ரபவதி । ததா வர்ஷஶதாவஸாநரூபயுகஸஹஸ்ராந்தே ப்ரஹ்மலோகபர்யந்தா லோகா: ப்ரஹ்மா ச “ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே, ஆபஸ்தேஜஸி லீயந்தே” இத்யாதிக்ரமேண அவ்யக்தாக்ஷரதம:பர்யந்தம் பரஸ்மிந் ப்ரஹ்மணி ப்ரலீயந்தே । ஏவம் உத்பத்திவிநாஶஸ்ய க்ருத்ஸ்நஸ்ய காலவ்யவஸ்தயா உத்பத்திப்ரலயயோகித்வாத் ப்ரஹ்மலோகாதிவிநாஶயோகித்வாச்ச ஐஶ்வர்யகதிம் ப்ராப்தாநாம் புநராவ்ருத்திரபரிஹார்யா । த்வாம் ப்ராப்தாநாம் து ந புநராவ்ருத்திப்ரஸங்க: ॥ ॥௧௭—௧௮—௧௯॥

அ—பிரும்மலோகம் உள்பட எல்லா லோகங்களும், அவைகளிலிருக்கிறவர்களும் இத்தனை இத்தனை காலமிருந்து அழிய வேண்டியதென்று பகவான் ஏற்பாடு செய்திருக்கிறான் என்று சொல்லுகிறார்—

மனிதன் முதல் பிரும்மா வரையிலுள்ளவர்களுக்கு என்றுமே ஏற்படுத்தப்பட்ட நாள் கணக்கை அறிந்தவர்கள், பிரும்மாவின் ஒரு பகல் ஆயிரம் சதுர்யுகம் (நாலுயுகங்கள்) என்று அறிகிறார்கள். ராத்திரியும் அதேமாதிரி. பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம் என்கிற லோகங்களில் 1 உடம்புகளாகவும், இந்திரியங்க

1. சுலோகத்தில் “அவியக்தாத்” என்றும், “வயக்தய:” என்றும் இரண்டு வடமொழிச்சொற்கள் இருக்கின்றன. இவைகளில் ‘அவ்யக்த” என்றசொல்லுக்கு மூலப்பிரகிருதி யென்றும், “வியக்தய:” என்றசொல்லுக்கு அதிலிருந்து உண்டான மஹத் முதலானவைகள் என்றும் பொருள் ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் அப்படிப்பொரு

ளாகவும், அநுபவிக்கக்கூடிய வஸ்துக்களாகவும், அநுபவத்துக்கு வேண்டிய இடங்களாகவும் இருக்கிற எல்லா வஸ்துக்களும் பிரும்மாவுக்குப் பொழுது விடிகிற காலத்தில் பிரகிருதியினால் ஏற்பட்ட அவனுடைய உடம்பிலிருந்து உண்டாகின்றன. அஸ்தமன காலத்தில் அந்த உடம்பிலேயே அடங்கிவிடுகின்றன. இந்த மூன்றுலோகத்திலிருக்கும் கர்மத்துக்கு உட்பட்ட-1எல்லாப்பிராணிகளும் பிரும்மாவுக்குப் பொழுதுவிடியும் போது உண்டாகி, அஸ்தமன் காலத்தில் செத்து, மறுபடியும் பொழுதுவிடியும்போது உண்டாகிறார்கள். இவையெல்லாம் இப்படி உண்டாகிறதும் போகிறதுமாயிருக்கின்றன. பிரும்மாவுக்கு 2 நூறுவர்ஷமான பிறகு, பிரும்மலோகம் வரையிலுள்ள லோகங்களும், 3 அதை

---

ல்லை. ஏனென்றால், இந்த இடம் பிரும்மாவுக்குப் பொழுது விடிகிற காலத்தில் உண்டாகிறவைகளைச் சொல்லுகிறது. மஹத் முதலானவைகள் பிரும்மா உண்டாவதற்கு முன்பே உண்டானவைகள். அவ்யக்த என்பது—பிரும்மாவின் உடம்பாக ஆகியிருக்கிற பிரகிருதியையும், "வியக்தய:" என்பது பிரும்மாவினால் உண்டுபண்ணப்பட்ட எல்லாவஸ்துக்களையும் சொல்லுகின்றன.

1. இங்கு "அவச:" என்ற சொல்லுக்கு ஒருவருக்கும் உட்படாதவனென்று பொருளல்ல. பிறக்கிறான், சாகிறான் என்று சொல்லுகையால், தன் அதீனமில்லை—கர்மத்துக்கு உட்பட்டவன் என்றுபொருள்.

2. மேழசொன்னபடி, உலகமுண்டாவதையும் அழிவதையும் நைமித்திகப்பிரளயம் என்று சொல்லுகிறது. இதைச்சொன்னவருக்கு பிராகிருதப்பிரளயத்தையும் சொல்வதில் கருத்து. பிராகிருதப்பிரளயம் என்றால் பிரும்மாண்டமும் அழிந்துபோவது. அப்போது பிரும்மாவினுடைய இடத்துக்கும் பிரும்மாவுக்கும் அழிவு ஏற்படும். இதுவே கீழ் 16-வதுசுலோகத்தில் சொல்லப்பட்டது.

3. பூமியானது ஜலமாக ஆகிறது. ஜலம் நெருப்பாகவும், நெருப்பு காற்றாகவும் ஆகின்றன. இந்தவரிசையாய் எல்லாம் பிரகிருதியாக ஆகி, அதுவும், ஜீவன்களும் பகவானிடத்தில் சேர்ந்துவிடுகின்றன. மண் ஜலமாவதுபோல பிரகிருதிக்கும் ஜீவன்களுக்கும் அழிவில்லை. அவைகளுக்கு பகவானிடம் சேர்க்கைதான். அப்போது அவைகளைத் தனி உருவாக அறியமுடியாது. இப்படி பூமிமுதலானவைகளே அழிந்தால், அவைகளின் சேர்க்கையாலுண்டான பிரும்மாண்டத்திற்கும், பிரும்மாவினுடைய உடம்புக்கும் அழிவுண்டென்று சொல்லவேண்டுமோ.

யுண்டாக்கும் வஸ்துக்களில் வரிசையாய் அடங்கி, கடைசியில் என்னிடம் வந்து சேருகின்றன. பிருமாவும் போய்விடுகிறார். இப்படி என்னைத்தவிர எல்லா வஸ்துக்களுக்கும் ஒரு காலத்தில் என்னிடத்திலிருந்து பிறப்பும், என்னிடத்தில் வந்து அடங்கு வதும் இருக்கிறபடியாலே, அவர்களுக்கு அழிவு கட்டாயம் வந்தே தீரும் ஆகையால் ஐசுவரியத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்காமலிருக்க முடியாது. எனக்கும் என்னிடத்துக்கும் இப்படி அழிவில்லாமையாலே, என்னிடம் வந்தவர்களுக்கு மறு பிறப் பில்லை. [17-18-19]

அத² கைவல்யம் ப்ராப்தாநாமபி அபுநராவ்ருத்தி ரஸ்தீத்யாஹ—

பரஸ்தஸ்மாத்து பா⁴வோ(அ)ந்யோ(அ)வ்யக்தோ(அ)வ்யக்தாத் ஸநாதந: |
யஸ்ஸ ஸர்வேஷு பூ⁴தேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி ||

அவ்யக்தோ(அ)க்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் க³திம் |
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்³தா⁴ம பரமம் மம || ||௨௧||

தஸ்மாத் அவ்யக்தாத்-அசேதநப்ரக்ருதிரூபாத் புருஷார்த²தயா பர:-உத்க்ருஷ்டோ பா⁴வ:-ஜ்ஞாநைகாகாரதயா தஸ்மாத்³விஸஜாதீய:| அவ்யக்த:-கேநசித் ப்ரமாணேந ந வ்யஜ்யத இத்யவ்யக்த:-ஸ்வஸம்வேத்³யஸ்வாஸாதா⁴ரணாகார இத்யர்த²: | ஸநாதந:-உத்பத்திவிநாஶாநர்ஹதயா நித்ய:| யஸ்ஸர்வேஷு வியதா³தி³பூ⁴தேஷு ஸகாரணேஷு ஸகார்யேஷு விநஶ்யத்ஸு தத்ர தத்ர ஸ்தி²தோ(அ)பி ந விநஶ்யதி| ஸோ(அ)வ்யக்தோ(அ)க்ஷர இத்யுக்த:-‘‘யே த்வக்ஷரமநிர்தே³ஶ்யமவ்யக்தம் பர்யுபாஸதே, கூடஸ்தோ²(அ)க்ஷர உச்யதே’’ இத்யாதி³ஷு| தம் வேத³வித³: பரமாம் க³திமாஹு: | அயமேவ ‘‘ய: ப்ரயாதி த்யஜந் தே³ஹம் ஸ யாதி பரமாம் க³தி’’மித்யத்ர பரமக³திஶப்³த³நிர்தி³ஷ்டோ(அ)க்ஷர:| ப்ரக்ருதிஸம்ஸர்க³வியுக்த: ஸ்வரூபேணாவஸ்தி²த ஆத்மேத்யர்த²:| யமேவம்பூ⁴தம் ஸ்வரூபேணாவஸ்தி²தம்

ப்ராப்ய ந நிவர்த்தந்தே | தத் தாம பரமம் மம - பரம் நியமந
ஸ்தாநம் | அசேதநப்ரக்ருதிரேகம் நியமநஸ்தாநம் | தத்ஸம்ஸ்ருஷ்ட
ரூபா ஜீவப்ரக்ருதிர்த்விதீயம் நியமநஸ்தாநம் | அசித்ஸம்ஸர்கவி
யுக்தம் ஸ்வரூபேணாவஸ்திதம் முக்தஸ்வரூபம் பரமம் நிய
மநஸ்தாநமித்யர்த்த: | தச்ச மம நாராயணஸ்ய | அத்ர
ப்ரகாசவாசீ தாமசப்த: | ப்ரகாசஸ்வரூப ஜ்ஞாநமேவேத்யர்த்த: |
ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டாத் பரிச்சிந்நஜ்ஞாநரூபாதஸ்யாபரி
ச்சிந்நஜ்ஞாநரூபதயா முக்தஸ்வரூபம் பரம் தாம || உக ||

அவ—கைவல்லியத்தை (ஜீவாத்மாமாத்திரத்தின் அநுபவத்தை) அடைந்தவர்களும் மறுபடியும் பிறக்கிறதில்லை என்று சொல்லுகிறார்—

கீழே அவ்யக்தம் என்று சொல்லப்பட்ட அறிவில்லாத பிரகிருதியைக் காட்டிலும் ஜீவன் என்கிற வஸ்து உயர்ந்தப் பிரயோஜநமாயிருப்பதாலே, உயர்ந்தது. எப்போதும் அறிவுள்ளதாயிருக்கையாலே பிரகிருதியைக்காட்டிலும் அது வேறுஜாதி. சப்தம் முதலிய பிராமாணங்களால் ஜீவன் என்று ஒன்று ஏற்பட்டாலும், நான் என்று தன்னாலே தான் தனக்குத் தோன்றுகிறது. பிறப்புக்கும் அழிவுக்கும் தகுதியில்லாமையால், நித்தியம் என்று சொல்லப்படுகிறது. அது அக்ஷரம்-அதாவது 1 எல்லா உடம்புகளிலிருந்தாலும் அவைகள் அழியும்போது அது

---

1. சுலோகத்தில் "பூதேஷு" என்கிற சொல் இருக்கிறது. அது பூமி முதலான ஐந்து மஹாபூதங்களைச் சொல்லி, அவைகளால் உண்டான உடம்புகளைச்சொல்லுகிறது. உடம்புகள் எல்லாம் அழியும்போதும், அதிலிருக்கும் ஜீவனுக்கு அழிவில்லை. ஜீவன் அழிவில்லைஎன்று இங்கேசொல்லுவானேன் என்றால், பதில்—எள்ளில் எண்ணெயிருக்கிறது. எள்ளை நெருப்பில்போட்டால், எள்ளும் எண்ணெயும் சாம்பலாய் விடுகிறது. அதுபோல உடம்புகளில் ஜீவனிருப்பதாலே, ஒரு உயிர் பிராணியை நெருப்பில்போட்டால், உடம்புகள் சாம்பலாவதுபோல- அதிலுள்ள ஜீவனுக்கும் அழிவுண்டோவென்று ஸந்தேஹம் உண்டாகக் கூடும். அதைத்தீர்ப்பதற்காக அதற்கு அழிவில்லை என்று இங்கே சொல்லப்பட்டது.

க்கு அழிவில்லை. 12-வது அத்தியாயம் 3-வது சுலோகத்திலும், 15-வது அத்தியாயம் 16-வது சுலோகத்திலும், இது அக்ஷரம் என்று சொல்லப்படுகிறது. வேதம்தெரிந்தவர்கள் இதைப் பரமகதியாக (உயர்ந்த அடையத்தகுந்த வஸ்துவாக)ச் சொல்லுகிறார்கள். இந்த அத்தியாயம் 13-வது சுலோகத்தில் இதையே "பரமகதி" என்கிற சொல்லாலே சொல்லியிருக்கிறது. அதாவது—பிரகிருதியை விட்டுப் பிரிந்த சுத்தமான ஜீவ ஸ்வரூபம். இப்படிப்பட்ட ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறதில்லை. அது என்னுடைய ஸொத்துக்களில்மிகவுமுயர்ந்தது அதாவது—அறிவில்லாத பிரகிருதி என்பது ஒரு ஸொத்து. அத்துடன் சேர்ந்திருக்கிற ஜீவன் இரண்டாவது. 2 முக்தன்--அதை விட்டுப் பிரிந்த ஜீவன் மூன்றாவது. இவன் இவைகளுக்குள் மிகவும் உயர்ந்தவன். ஏனென்றால், இவன் மறுபடியும் பிறக்கிறதில்லை.

---

1. மோக்ஷத்தை அடைந்தவனும் பகவானுக்கு உட்பட்டவன்தானே. ஒருவருக்கு முட்படாதபகவான் அவனைமறுபடியும் ஸம்ஸாரத்தில் தள்ளக்கூடாதோ? ஸ்வர்க்கத்துக்குப்போனவர்களை இந்திரன் மறுபடியும் பூமியில் தள்ளிவிடுகிறானென்று சொல்லியிருக்கிறதே. ஒருவருக்குட்பட்ட இந்திரனே இப்படிச்செய்தால்,ஒருவருக்கு முட்படாத பகவான் என்னசெய்யக்கூடாதுஎன்றுஸந்தேஹமுண்டாகலாம். அதைத்தீர்ப்பதற்காகசுலோகத்தில் "மறுபடியும் பிறக்கிறதில்லை" என்றுசொல்லியிருக்கிறது. ஒருவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதற்கு கர்மம் தான்காரணம். பகவானுக்கு உட்பட்டிருப்பது அல்ல. கர்மமோ அடியோடுபோய்விட்டது. பகவானுடைய தயையோ அளவில்லாதது. அது அவனுக்கு இயற்கையாக உள்ளது. அவன் எப்படி ஜீவனை ஸம்ஸாரத்திற்கு அனுப்புவன். இந்தஸந்தேஹத்தை இன்னொருவிதமாயும் தீர்க்கலாம்—ஒருவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவராமலிருப்பதற்குக் காரணம்—பகவானை அடைவது மாத்திரமன்று. ஜீவன் ஜீவனுடையஸ்வரூபத்தை அடைவதும் காரணம், அதை அடைந்தவனுக்குத்திரும்பி வருகிற பேச்சே கிடையாது.

2. ஏழாவது அத்தியாயம் 5—வது சுலோகத்தில் ஜீவன் பகவானுடையஸொத்து என்று சொல்லப்பட்டதே. அதை இங்கேமறுபடியும் சொல்லுவானேன்? என்றால், பதில்—அந்தஇடத்தில் ஸமஷ்டி ஜீவனைச்சொன்னது.அதாவது—தேவன் முதலான உடம்புகளில் நுழையாமல் பிரகிருதியுடன் சேர்ந்த ஜீவனைச்சொன்னது. இந்த இடத்தில் மோக்ஷத்தை அடைந்தவனும் பகவானுக்கு ஸொத்து என்று சொல்லுகிறது.

சுலோகத்தில் "பரமம் தாம" என்கிற சொற்கள் இருக்கின்றன. அவைகளுக்கு மிகவுமுயர்ந்த ஸொத்து என்று அர்த்தம் பண்ணி, கீழேவியாக்கியாநம் பண்ணப்பட்டது. "தாம" என்கிற சொல்லானது வெளிச்சத்தையும் சொல்லுகிறது. அந்த வெளிச்சம் என்பது இங்கே அறிவு. பிருகிருதியுடன் சேர்ந்திருக்கும் ஜீவனுக்கு அறிவு கொஞ்சமாயிருக்கிறது. மோக்ஷத்தை அடைந்தவனுடைய அறிவுக்கு அளவில்லை. ஆகையால் அளவில்லாத வெளிச்சமுடையவன் என்றும்சொல்லலாம். [20-21]

அத— ஜ்ஞாநிந: ப்ராப்யம் து தஸ்மாதத்யந்தவிலக்ஷணமித்யாஹ ||—

புருஷஸ்ஸ பர: பார்த்த பக்த்யா லப்யஸ்த்வநந்யயா |
யஸ்யாந்த:ஸ்தாநி பூதாநி யேந ஸர்வமிதம் ததம் ||௨௨||

"மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய | மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ, மாமேப்ய: பரமவ்யயம்" இத்யாதிநா நிர்திஷ்டஸ்ய யஸ்யாந்த:ஸ்தாநி ஸர்வாணி பூதாநி, யேந ச ஸர்வேண பரேண ஸர்வமிதம் ததம், ஸ பர: புருஷ: "அநந்யசேதாஸ்ஸததம்" இத்யநந்யயா பக்த்யா லப்ய: || ||௨௨||

அவ—ஞானி அடையும் வஸ்து முன்னே சொல்லப்பட்ட ஜீவனைக்காட்டிலும் மிகவும் உயர்ந்ததென்று சொல்லுகிறார்.—

"என்னைக் காட்டிலுமுயர்ந்த வஸ்து இல்லை" என்றும் (7-வது அத். 7-வது சு.) "எல்லாவற்றைக்காட்டிலும் நான்[1] உயர்ந்தவன்" என்றும் (7-வது அத். 13-வது சு.) சொல்லப்பட்ட

---

1. சுலோகத்தில் "து" என்கிற சொல் இருக்கிறது. அது முன் சொன்னதைக் காட்டிலும் சொல்லப்போவது வேறு என்று காட்டுகிறது. முன் இரண்டு சுலோகங்களில் ஜீவஸ்வரூபம் சொல்லப்பட்டது. இந்த சுலோகம் பகவானைச் சொல்லுகிறது. ஜீவஸ்வரூபத்தைக் காட்டிலும் பகவான் மிகவுமுயர்ந்தபிரயோஜனம் என்று ஏற்படுகிறது. "து" என்கிற சொல் வேறு என்று தானே சொல்லும். அது உயர்ந்தது என்றுசொல்லுமோ என்றால், உயர்ந்ததுஎன்பதற்குஅடையாளங்கள் சுலோகத்தில் இருக்கின்றன-(1) வேறுஒருபிரயோஜனத்தையும்ஆசை

யாதொரு பகவானுக்கு உள்ளேயிருக்கிறதோ எல்லாவுலகமும்; எந்த பகவானால் எல்லா உலகமும் நிரம்பியிருக்கிறதோ, இப்படிப்பட்ட உயர்ந்த பகவானை என்னை 8—வது அத்தியாயம் 14—வது சுலோகத்தில் சொன்னபடி வேறொரு பிரயோஜனத்தையும் ஆசைப்படாதவர்கள் அடைகிறார்கள். [22]

[illegible]

ப்படாமல் செய்த பக்தியாலே அடையக்கூடியது என்று சொல்லியிருப்பது. (2) புருஷன் என்கிற சொல். அது பகவானைத்தான் சொல்லுகிறது. எப்படியென்றால், ஹிருதயத்திலிருக்கிறவன், எல்லா வஸ்துக்களாலும் நிறைந்தவன். அவனுக்கு ஒரு வஸ்து இல்லையென்று கிடையாது, எப்போது மிருப்பவன், அளவில்லாத பதார்த்தங்களைக் கொடுக்கிறவன்" என்று அந்தச் சொல்லுக்குப் பொருள். இப்படிப்பட்டவன் பகவான்தான். சுலோகத்தில் "யஸ்யாந்த:" "யேநஸர்வம்" என்று சொல்லியிருக்கிறது. அதற்கு "எந்த உயர்ந்தவனுக்குள் எல்லா உலகமுமிருக்கிறதோ, எவனால் எல்லா உலகமும் நிறைந்திருக்கிறதோ" என்று பொருள். எந்தவனே தெரிந்தவனைத்தான் யாதொருவன் என்று சொல்லுகிறது வழக்கம். பகவானிடத்தில்தான் எல்லா உலகமுமிருக்கிறதென்றும், அவனால்தான் எல்லாஉலகமும் நிறைந்திருக்கிறதென்றும் உபநிஷத்துக்களிலும் 7-வது அத்தியாயம் 7-வது சுலோகத்திலும் சொல்லியிருக்கிறது.

வித்யாயாஞ்ச "இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புரு-
ஷவசஸோ பவந்தீ"தி, "ரமணீயசரணா: கபூயசர-
ணா:" இதி புண்யபாபஹேதுகோ மநுஷ்யாதிபாவோ-
ஶாஸ்வேவ ஸம்ஸாரஸம்ஸ்பர்ஶாநாம், ஶ்ருத்வந்தஸ்த தத்வ-
ஷ்வஜ்ஞாதத்வமிதி விவிக்தாத்மவேதகேஷ்வயம், "தத்ய இத்தம்
விது:—தேऽர்சிஷமபிஸம்பவந்தி, இமம் மாநவமாவர்தம்
நாவர்தந்தே" இதி விவிக்தவித்வத்ஸாதி த்யாஜ்யதயா
ப்ராப்யதயா ச இத்தம் விதுஷோऽர்சிராதிநா கச்சந்தி ந ச
புநராவர்தந்த இத்யுக்தமிதி கம்யதே। ஆத்மயாதாத்ம்யவி-
த: பரமபுருஷநிஷ்டஸ்ய ச "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதீ"தி
ப்ரஹ்மப்ராப்திவசநாத் வித்யாந்தரநிஷ்டஸ்யாபி ப்ரஹ்மாத்மகதயா
ப்ரஹ்மஶேஷதைகரஸத்வேநாநுஸந்தேயத்வம்- தத்ர ஆத்மயா
தாத்ம்யஶேஷதைகரஸத்வஞ்ச "ய ஆத்மநி திஷ்டந்—யஸ்யா
த்மா ஶரீர"மித்யாதிஶ்ருதிஸித்தம் ||

யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகிந: ।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப ||௨௩||
அக்நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் |
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: || ௨௪ ||

அத்ர காலஶப்தோ மார்கஸ்யாஹ:ப்ரப்ருதிஸம்வத்ஸராந்த
காலாபிமாநிதேவதாபூயஸ்தயா மார்கலக்ஷணார்த:। ய
ஸ்மிந்மார்கே ப்ரயாதா யோகிநோऽநாவ்ருத்திம், புண்யகர்மா
ணஶ்சாவ்ருத்திம் யாந்தி, தம் மார்கம் வக்ஷ்யாமீத்யர்த:। அக்நிர்ஜ்யோ
திரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணமிதி ஸம்வத்ஸராதீநா
முபலக்ஷணம் ||

அவ—ஜீவாத்மாவின் உண்மையை அறிந்தவனும், பகவானைத்தி
யானம் செய்கிற ஞானியும் போகிற-அந்த 1 அர்ச்சிராதி என்கிற-
வழியைச் சொல்லுகிறார். அர்ச்சிராதி (வெளிச்சம் முதலான) வழி

1. வெளிச்சம் முதலான வழியைச்சொன்னது பிரும்மத்தைத்
தியானம் பண்ணுகிறவர்கள் தினம்தோறும் நினைத்துக்கொண்டிருப்ப

பகவானுடையஇடம் போகிறவனுக்கு எப்படி உண்டோ, அப்படியே ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் அடைகிறவனுக்கு முண்டு. அந்த வழியால்போனவன் திரும்பிவருகிறதில்லை. இந்த இரண்டு ஸங்கதிகளையும் வேதமே பஞ்சாக்கினி வித்யையைச்சொல்லுகிற இடத்தில் சொல்லியிருக்கிறது. (இந்த அத்தியாயம் 3-வது சுலோகம் 2—வது குறிப்பைப் பார்க்க). ஜீவன் உடம்பை விட்டுப் புறப்பட்டு ஸ்வர்க்கதிற்குப் போய், திரும்பி வந்து, பிறக்கிற விதத்தைச் சொல்லி, மேலே ஜீவனுடையவும், பிரகிருதியினுடையவும் உண்மையைச்சொல்லி, அவைகளில் பிரகிருதியை விடவேண்டியதென்றும், உண்மையான ஜீவஸ்வரூபத்தை அடைய வேண்டுமென்றும் அறிந்து, எவர்கள் தியானம் பண்ணுகிறார்களோ—அவர்களையும், "எவர்கள் காட்டிலிருந்து கொண்டு பகவானைச் சிரத்தையுடன் தியானம் செய்கிறார்களோ, அவர்களையும்-அமானவன் இந்த வழியால் பகவானிடம் சேர்க்கிறான். அவர்கள் ஸம்ஸாரமாகிய சுழலுக்குத் திரும்பி வருகிறதில்லை." என்று சொல்லியிருக்கிறது. இவர்களில் முதலில் சொன்னவர்கள் ஜீவாத்மஸ்வரூபத்தை தியானம் செய்கிறவர்கள். அவர்களையும், பகவானைத் தியானம் பண்ணுகிறவர்களையும் வேதம் பிரித்தே சொல்லுகிறது. ஜீவாத்மஸ்ரூபத்தைத் த்தியானம் பண்ணுகிறவர்கள் தங்களைப் பகவானுடைய உடம்புகளாகவும் தியானம் செய்யவேண்டியது. இல்லாவிட்டால் இந்த வழியும், இதுவழியால் பகவானை அடைவதும் கிடைக்காது. இவையிரண்டும் இவர்களுக்கு இருக்கிறதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. அந்தத் தியானத்தில் பகவானும் சேர்ந்திருப்பதால், தங்கள் ஸ்வரூபத்தை மாத்திரம் கொஞ்சகாலம் அநுபவித்தபிறகு பகவானிடம் போகிறார்கள். பகவானுக்கு ஜீவன்கள் உடம்புகள் என்பதுதான் ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபம். இப்படியே வேதம் அந்தர்யாமி பிராம்மணத்தில் சொல்லியிருக்கிறது.

---

தற்காக. மற்றொருவழியைச் சொன்னது—அது இளப்பமானது; அந்த வழி நாம் போகக்கூடாது என்று எண்ணுவதற்காக.

எந்த 1 வழியால் போகிற யோகிகள் ஸம்ஸாரத்தையடையமாட்டார்களோ, அந்த வழியையும், எந்த வழியால் போன 2 புண்ணியம் செய்தவர்கள் இந்தஉலகத்துக்கு திரும்பி வருகிறார்களோ, அந்தவழியையும் சொல்லுகிறேன். அதாவது—நெருப்பாகிய வெளிச்சம், பகல், சுக்லபக்ஷம், (வளர்பிறை) உத்தராயணம்—இந்தவழியால் போகிற யோகிகள் திரும்புகிறதில்லை. பிரும்மத்தைத்தியானம் பண்ணுகிறவர்கள் தான் இந்த வழியில் போவார்கள். பிரும்மத்தைக்கட்டாயம் அடைவார்கள். பிரும்மத்தை அடையாதிருக்கமாட்டார்கள். நெருப்பின் வெளிச்சம் முதலான நான்கைச் சொன்னதைக் கொண்டு அவைகளுக்கு மேலே யிருக்கிற 3 வர்ஷம் முதலானவைகளைச் சொன்னதாக வைத்துக் கொள்ள வேண்டியது. [ 23–24 ]

தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம் ।
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே ॥
[illegible] யத்ர [illegible] லோகாதே: ப்ராப்ய
[illegible] । [illegible] விஷய: ॥௨௫॥

1. 23-வது சுலோகத்தில் "காலே" என்ற சொல் இருக்கிறது. அது வழியைத்தான் சொல்லுகிறது. காலத்தைச் சொல்லவில்லை. ஏனென்றால், 24-வது சுலோகத்தில் நெருப்பாகிய வெளிச்சம் என்று ஆரம்பித்து 27-வது சுலோகத்தில் "ஸ்ருதீ" (வழி) என்று முடிக்கிறது. அதைக்காலம் என்று சொல்லுவானேன் என்றால், இந்தவழியில் காலத்துக்கு அபிமானியான தேவதைகள் பலர் இதில் போகிறவனை நடத்துகிறார்கள். அதனால் அந்தச்சொல்லை உபயோகித்தது.

2. சுலோகத்தில் "யோகிந: " என்ற சொல்லிற்கு ஞானிகள் என்றும், புண்ணியகர்மத்தின் ஸம்பந்தமுள்ளவர்கள் என்றும் பொருள்.

3. உத்தராயணத்துக்குமேலே, வர்ஷம், வாயு, ஸூரியன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், பிரஜாபதி. இவர்கள் பகவானாலே ஏவப்பட்டு அவரிடம் போகிறவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்கு வடமொழியில் "ஆதிவாஹிகர்கள்" என்றுபெயர். அவர்களில் மின்னலென்பவனை வைகுண்டத்திலிருக்கும் நித்தியஸூரி என்று வேதமே சொல்லுகிறது. அவனுக்கு அமாநவன் என்றுபெயர். அவனோடு சேர்த்துச்சொல்லியிருப்பதாலே, மற்றவர்களும் நித்தியஸூரிகள். சிலர் அல்லவென்றும் சொல்லுகிறார்கள்.

புண்ணியம் செய்து புகை, ராத்திரி, கிருஷ்ணபக்ஷம், [1] தக்ஷிணாயநம், இந்த வழியால் போகிறவன் சந்திரனை அடைந்து திரும்பி வருகிறான். (25)

𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌗𑌤𑍀 𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 𑌜𑌗𑌤𑌶𑍍𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍇 𑌮𑌤𑍇 ।
𑌏𑌕𑌯𑌾 𑌯𑌾𑌤𑍍𑌯𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌯𑌯𑌾𑌽𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 ॥௨௬॥

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌅𑌰𑍍𑌚𑌿𑌰𑌾𑌦𑌿𑌕𑌾, 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌧𑍂𑌮𑌾𑌦𑌿𑌕𑌾 । 𑌶𑍁𑌕𑍍𑌲𑌯𑌾𑌽𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌯𑌾𑌤𑌿। 𑌕𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌏𑌤𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌗𑌤𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍇 𑌮𑌤𑍇 । "𑌤𑌦𑍍𑌯 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌯𑍇 𑌚𑍇𑌮𑍇𑌽𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌤𑌪 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌷𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌥 𑌯 𑌇𑌮𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮 𑌇𑌷𑍍𑌟𑌾𑌪𑍂𑌰𑍍𑌤𑍇 𑌦𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇 𑌧𑍂𑌮𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑍀"𑌤𑌿 ॥ ॥௨௬॥

இந்த இரண்டு வழிகளில் ஒன்று [2] வெளுப்பு. ஒன்று கருப்பு. நெருப்பு முதலான வழி வெளுப்பு. புகை முதலான வழி கருப்பு. வெளுப்பு வழியால் போனவன் திரும்பி வருகிறதில்லை. இது ஜீவனுடைய உண்மையை அறிந்து, அவனை பகவானுடைய உடம்பென்று தியானம் பண்ணுகிறவர்களுக்கும், பகவானை ஜீவன்களுக்கு ஆத்மாவென்று தியானம்பண்ணுகிறவர்களுக்கும் ஏற்பட்டது. கருப்பு வழியால் போனவன் திரும்பிவருகிறான். இது ஸ்வர்க்கம் முதலான லோகங்களை அடைவதற்காக புண்ணியம் செய்தவர்களுக்கு ஏற்பட்டது. இந்த இரண்டுவழிகளும் அழிவில்லாதவைகள். அதாவது உலகத்துடன் உண்டாகின்றன—உலகத்துடன் போகின்றன என்று வேதம் சொல்லுகிறது. (26)

---

1. இவைகளுக்குமேலே பித்ருலோகமும் ஆகாசமும் இருக்கின்றன.

2. இந்த வழிகளை வெளுப்பு என்றும், கருப்பு என்றும் சொல்வதற்குக் காரணம்—ஒன்றில் சுக்லபக்ஷமிருப்பதும், மற்ற ஒன்றில் கிருஷ்ணபக்ஷம் இருப்பதும். ஒன்று சுத்தமாயிருப்பதும், மற்றொன்று அசுத்தமாயிருப்பதும் என்றும் சொல்லலாம்.

நைதே ஸ்ருதீ பார்த2 ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந ।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக3யுக்தோ ப4வார்ஜுந ॥ ||உ௭||

நைதே மார்கௌ ஜாநந் யோகீ வ்யாமோஹம் ந முஹ்யதி । ஸமதி ஸம்ஸாரே ஶ்ரேயஸ்கர மார்க3 ஜ்ஞாநம் । தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக3யுக்தோ ப4வ ॥ ||உ௭||

இந்த இரண்டு வழிகளில் ஒன்று இளப்பமானது, தள்ளவேண்டியதென்றும், மற்றொன்று உயர்ந்தது எடுத்துக்கொள்ளவேண்டியதென்றும் அறிந்து, உயர்ந்தவழியை எப்பொழுதும் தியானம் பண்ணுகிறவன் செத்துப் போகிறகாலத்தில் மயங்குகிறதில்லை. அதாவது அவன் தனக்கு ஏற்பட்ட தேவயாநம் என்று சொல்லப்பட்ட வெளுப்பு வழியை அறிந்து அதாலேயே போகிறான். ஆகையால் ஒவ்வொருநாளும் வெளுப்பான வழியைத் தியானம் செய்துகொண்டிரு. (27)

ஸவ — ஸமாத்4யாயாபொக்தஸ்யாத்4யாயார்த2ஸ்ய ப்ரஶம்ஸா —

வேதே3ஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ தா3நேஷு
யத் புண்யப2லம் ப்ரதி3ஷ்டம் । அத்யேதி தத் ஸர்வமித3ம் விதி3த்வா
யோகீ3 பரம் ஸ்தா2நமுபைதி சாத்3யம் ॥ உ௮ ॥

இதி ஸ்ரீமத்3ப4க3வத்3கீ3தாஸூபநிஷத்ஸு ப்3ரஹ்மவித்3யாயாம் யோக3
ஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே3 அக்ஷரப்3ரஹ்ம
யோகோ3 நாமாஷ்டமோ(அ)த்4யாய:॥

ஸம்யக்3 ஜ்ஞாநஸாத4நாயாத்4யாயார்தா2வேதா3த்4யயநஸ யஜ்ஞ த வா
தா3நேஷு யத் ஸர்வேஷு யத் புண்யப2லம் ப்ரதி3
ஷ்டம் । இத3மத்4யாயத்3வயோக்தம் ஸம்யக் ப்ரஶ்நார்த2ம் விதி3த்வா தத்
ஸர்வமதீத்ய தத3நந்தரம் ஸம்யக் ஜ்ஞாநபூர்வகம் தத் ஸர்வம் த

ஸர்வமத்யேதி । யோகீ ஜ்ஞாநீ ச பூத்வா ஜ்ஞாநிந: ப்ராப்யம் பரமாத்யம் ஸ்தாநமுபைதி ॥ ॥உஅ॥

இதி ஸ்ரீமத்பகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீகீதாபாஷ்யே அஷ்டமோऽத்யாய: ॥

---

அவ—7-வது அத்தியாயத்திலும், இந்த அத்தியாயத்திலும் சொல்லப்பட்ட ஸங்கதிகளை அறிவதற்குப் பிரயோஜநம் சொல்லுகிறார்—

இந்த இரண்டு அத்தியாயங்களில் சொன்ன பகவானுடைய பெருமையை அறிவதால் வரும் பிரயோஜநம்—நாலுவேதங்களை ஒவ்வொருநாளும் சொல்வதாலும், யக்ஞத்தையும் தபஸ்ஸையும் தானத்தையும் இவைபோன்ற புண்ணியகர்மங்களைச் செய்வதாலும் என்ன பிரயோஜநங்கள் கிடைக்குமென்று சாஸ்திரம் சொல்லுகிறதோ, அவைகளைக்காட்டிலும் கோடிபங்கு உயர்ந்தது. இதை அறிவதே உயர்ந்த ஸுகம். அதை அநுபவிக்கிறவன் மற்றப்பிரயோஜநங்களைத் திருணமாக எண்ணுவன். அவன் ஞானியாக ஆகி, ஞானிகள் அடையும்படியான உயர்ந்ததும் எப்பொழுதுமிருப்பதுமான ஸ்ரீவைகுண்டத்தை அடைகிறான். (28)

---

## குறிப்பு.

---

கீழே 24-வது சுலோகத்தில் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டுப் பகவானைத் தியானம் செய்கிறவன் வெளிச்சம் முதலான வழியால் பகவானிடம் போகிறானென்றும், அவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லையென்றும் சொல்லப்பட்டது. அவன் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டபடியால், பகவானிடம் நேராகப் போகிறதில்லை. நடுவில் தங்கியிருந்து, கொஞ்சகாலம் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்து ஸுகத்தை அநுபவித்து, பிறகு பகவானிடம்போகிறான். இந்த அநுபவத்துக்குக் கைவல்லியம் என்று பெயர். அதாவது—பகவானையும் பிரகிருதியையும் நினையாமல் தன் ஸ்வரூபத்தைமாத்திரம் அநுபவிப்பது.

2. இந்த அநுபவம் தூக்கத்தில் அநுபவிக்கும் ஸுகத்தைப்போல் இருக்கிறது. தூங்கி எழுந்தவன் மிகவும் ஸுகமாய் தூங்கினேன் என்றுசொல்லுகிறான். அப்போது தன்னைமாத்திரம் அறிகிறான். வேறொன்றையும் அறிகிறதில்லை. கைவல்லியத்தை அநுபவிக்கிறவனும் தன்னை மாத்திரம் பார்க்கிறான். வேறொன்றையும் பார்க்கிறதில்லை. தூங்குகிற ஸுகத்துக்கும் கைவல்லிய ஸுகத்துக்கும் கொஞ்சம் வித்தியாஸமுண்டு. தூக்கத்தினால் வரும் ஸுகம் தெளிவில்லாததும், கொஞ்சகாலமும் தானிருக்கும். கைவல்லிய ஸுகம் தெளிவாயும் நீடித்துமிருக்கும். அது 6—வது அத்தியாயம் 20-வது முதல் நாலு சுலோகங்களில் சொல்லப்பட்ட ஸுகம்போல் அளவில்லாததாயிருக்கும். தூக்கத்தில் வரும் ஸுகம் இவ்வளவு உயர்ந்ததன்று.

3. அந்த கைவல்லிய ஸுகமும் பகவானை இரண்டு விபூதிகளுடனும் சேர்த்து அநுபவிப்பதைக்காட்டிலும் மிகவும் தாழ்ந்தது. ஆகையாலே வெளிச்சமான வழியால் போனவனுக்கு இந்த ஸுகம் நீடித்திருக்காது. அவனைப் பகவான் சீக்கிரம் தன்னிடம் அழைத்துக்கொள்வன்.

4. எவன் தன் ஸ்வரூபத்தைமாத்திரம் அனுபவிக்கவேணுமென்று ஆசைப்பட்டு, தான் பகவானுக்காக இருக்கிறவன் என்றும், பகவானுக்குட்பட்டவனென்றும் தன் ஸ்வரூபத்தை முழுவதும் அறியாமல், உடம்பைக்காட்டிலும் வேறான தன் ஸ்வரூபத்தைமாத்திரம் தியானம் பண்ணுகிறானோ, அவனுக்கும் கைவல்லியானுபவம் வருகிறது. ஆனால் அவன் தியானத்தில் பகவானைச்சேர்த்து கொள்ளாததினாலே, வெளிச்சம் முதலான வழி அவனுக்குக்கிடையாது. ஆகையாலே அவன் இந்த அநுபவம் ஆனபிறகு மறுபடியும் பிறக்கிறான்.

5. தியானத்தில் பகவானைச் சேர்க்கிறவனுக்கும், பகவானைச்சேர்க்காதவனுக்கும் உண்டாகும் கைவல்லியானுபவம் வைகுண்டமென்கிற தேசத்தில் இருக்கக்கூடாது. ஏனென்றால், பரமபதம்என்பது அளவில்லாத உயர்ந்த இடம். ஒருவன் அந்த இடத்தில் மட்டமான ஸுகத்தை நிலையாக அநுபவிக்கிறதாக இருந்தால், அந்த இடத்திற்கு உயர்த்தி எப்படி? அங்கும் ஸுகங்களுக்குத்தாரதம்மியமிருந்தால், பிரகிருதி மண்டலத்திற்கும், அதற்கும் வித்தியாஸம் என்ன? மேலும், அதை அநுபவித்து ஒருவன் ஸம்ஸாரத்துக்குத்திரும்பிவரவேண்டியது. வைகுண்டலோகத்துக்குப் போனவனோ திரும்பிவருகிறதில்லை. ஆதலால் கைவல்லியாநுபவமானது பிரகிருதி மண்டலத்திலேயே இருக்கவேண்டியது.

6. இப்படியிருக்க, ஸ்ரீ பாஷ்யகாரர் ம[illegible]தைச் சேர்ந்த சிலர் கைவல்லியமென்கிற அநுபவம் நிலையாயிருக்கும் என்றும், அதை அநுப

விச்ருமிடம் வைகுண்டமென்றும் சொல்லுகிறார்கள். கீழே சொன்ன காரணங்களாலே இது பிசகு. இது தவிர, தத்வத்தையும், ஹிதத்தையும் அவர்கள் வேறாக எண்ணுகிறார்கள். தத்வம் என்றால், அந்தந்த வஸ்துக்களின் உண்மை. ஹிதமென்றால், அடையவேண்டிய பிரயோஜனங்களுக்காகச்செய்யவேண்டிய வேலை. ஸ்ரீபாஷியகாரர் மதத்தில் பகவானை நாராயணன் எல்லாருக்கும் தகப்பன் என்றும், மஹாலக்ஷ்மீ தாயாரென்றும், ஜீவன்களை அவர்களுக்குப் பிள்ளையென்றும் சொல்லியிருக்கிறது. மஹாலக்ஷ்மியைத் தைவவகுப்பில் சேர்த்திருக்கிறது. இது வேதத்துக்கும், ருஷிகளுடைய வார்த்தைகளுக்கும், நம்முடைய பெரியோர்களின் வார்த்தைகளுக்கும் பொருந்தியிருக்கிறது. அப்படியிருக்க அவர்கள் மஹாலெக்ஷ்மியை ஜீவனென்று சொல்லி, பிள்ளை வகுப்பில் சேர்க்கிறார்கள். மேலும் நாம் பகவானிடத்தில் போவதற்காகச் செய்யவேண்டிய வேலை சரணாகதி. கீதையில் கடைசி சுலோகத்தில் இதைச் செய்யவேண்டியதாக ஸ்ரீபகவான் சொல்லுகிறார். அவர்கள் "இதைச் செய்யவேண்டியதில்லை, பகவானே தன்னுடைய ஸொத்தான நம்மைத்தானே காப்பாற்றுவான்" என்று சொல்லுகிறார்கள். அவர்களில் சிலர் சரணாகதி செய்யவேண்டியதை ஒப்புக்கொண்டு, பஞ்சஸம்ஸ்காரம் செய்யும்போதே (சங்கு சக்கிரங்களை தரித்துக்கொள்வது முதலானது) இது செய்யப்படுகிறதென்றும், இன்னும் சிலர் ஸ்ரீ பாஷியகாரர் நமக்காக முன்னேயே செய்துவிட்டாரென்றும் சொல்லுகிறார்கள்.

7. வேதத்துக்கு வெவ்வேறாக அர்த்தம்சொல்வதாலே மூன்று மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றான விசிஷ்டாத்வைத மதம் என்பது ஸ்ரீ பாஷியகாரரால் நன்றாய் வெளியிடப்பட்டது. அதைச்சேர்ந்த எல்லாரும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டியது. இப்படியிருக்க, இதிலேயே இரண்டு மதங்கள் ஏற்பட்டிருக்கிறது வருத்தத்தைக் கொடுக்கிறது. இப்படி அனேக மதங்கள் உலகத்தில் ஏற்படுவதற்குக்காரணம்-எந்தமதம் நல்லது என்று கவனிக்காமலிருப்பதுதான். அதற்கும் காரணம் ஆத்மாவின் ஸௌக்கியத்தைப்பற்றி சிரத்தைக்குறைவு. அதுவும்தவிர, ஒருவன் ஒருமதத்தின் உண்மையை அறிந்து, அதனால் ஸுகத்தை அநுபவித்தால், அவனுக்கு மற்றவர்களும் இப்படியநுபவிக்கவில்லையே யென்று அவர்களிடத்தில் தடுக்கமுடியாத-அளவில்லாத-தயையுண்டாகும். ஆகையால் நல்லமதத்தை அடைந்தும், அதின் உண்மையை அறிந்து ஸுகப்பட்டு, மற்றவர்களிடத்தில் எல்லையில்லாத தயை யுள்ளவர்கள் இப்போது அரிதாயிருக்கிறார்கள். இரண்டு மதக்காரர்கள் சேர்ந்து வார்த்தை சொல்வது முடியவில்லை. கலியுகத்தில் நல்

ஸஸங்கதிகள் நடப்பது மிகவும் அரிது. ஆனாலும் அடியோடு இல்லையென்றும் சொல்லமுடியாது. நல்லவர்களும் இருப்பார்கள். நல்லஸங்கதிகளை விசாரித்து அறிந்து நிலையான லோகத்தை அடைவார்கள். அப்படி ஸ்ரீ ஆசார்யர்களும் பகவானும் கிருபை பண்ணவேணும்.

---

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

---

எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று

---

उपासकभेदनिबन्धना विशेषाः प्रतिपादिताः। इदानीमुपास्यस्य परमपुरुषस्य माहात्म्यम्, ज्ञानिनां च विशेषं विशोध्य, भक्तिरूपस्योपासनस्य स्वरूपमुच्यते।

श्रीभगवानुवाच—

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्॥
॥ १ ॥

इदं तु ते गुह्यतमं भक्तिरूपमुपासनाख्यं ज्ञानं विज्ञानसहितम्—उपासनगतविशेषज्ञानसहितम् अनसूयवे ते प्रवक्ष्यामि। मद्विषयं सकलेतरविसजातीयमपरिमितप्रकारं माहात्म्यं श्रुत्वा एवमेव सम्भवतीति उन्नयमानाय ते प्रवक्ष्यामीत्यर्थः। यज्ज्ञानमनुष्ठानपर्यन्तं ज्ञात्वा मत्प्राप्तिविरोधिनः सर्वस्मादशुभान्मोक्ष्यसे॥ ॥१॥

தியானம் செய்கிறவர்களுடைய பிரிவுக்குத் தகுந்தபடி அவர்கள் அறியவேண்டியவைகளும், செய்யவேண்டியவைகளும் சொல்லப்பட்டன. இப்போது, தியானம் செய்யத் தகுந்த பகவானுடைய பெருமையையும், ஞானியினுடைய உயர்த்தியையும் தெளிவாகச் சொல்லி, பக்தி யென்கிற தியானத்தினுடைய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது.

பகவான் சொல்லுகிறார்—

மிகவும் 1 ரஹஸ்யமான பக்தி யென்கிற தியானத்தை அதின் எல்லா ஸங்கதிகளுடன் பொறாமைப்படாதவனான உனக்

1. கீழே சொன்ன கர்மயோகம் ரஹஸ்யமானது. ஞானயோகம் அதைக்காட்டிலும் ரஹஸ்யமானது. சொல்லப்போகிற தியானம் இவையிரண்டைக்காட்டிலும் மிகவும் ரஹஸ்யமானது இந்த ஸங்கதி சுலோகத்தில் "து" என்றசொல்லால் காட்டப்பட்டது. இதைக் கேட்க வேண்டுமென்று மிருந்த ஆவலுண்டாவதற்காகவும், இதைக் கண்டவர்

குச் சொல்லுகிறேன். என்னைத் தவிர வேறொருவருக்கும் இல்லாத—அனேக விதமான—என்னுடைய பெருமையைக் கேட்டு, இப்படி இருக்குமா என்று ஸந்தேஹப்படாமல் நீ நம்புகிறாய். ஆகையால் நீ இதைக் கேட்பதற்குத் தகுந்தவன். எல்லாவற்றையும் ஸுகமாக உனக்குப் புரியும்படி சொல்லுகிறேன். எந்த ஸங்கதியையறிந்து, அறிந்தபடி செய்து, 1 என்னை அடைவதற்கு இடைஞ்சலான 2 எல்லாப்பாபங்களையும் போக்கப்போகிறாயோ.[1]

ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம் ॥

ராஜவித்யா-வித்யாநாம் ராஜா। ராஜகுஹ்யம்-குஹ்யாநாம் ராஜா। ராஜ்ஞாம் வித்யா வா ராஜவித்யா। ராஜாநோ ஹி விஸ்தீர்ணாகாதமநஸ:; மஹாமநஸாமியம் வித்யேத்யர்த:। மஹாமநஸ ஏவ ஹி கோபநீயகோபநகுஶலா இதி தேஷாமேவ குஹ்யம்। உத்தமம் பவித்ரம்-மத்ப்ராப்திவிரோத்யஶேஷகல்மஷாபஹம்। ப்ரத்யக்ஷாவகமம்-அவகம்யத இத்யவகமோ விஷய:; ப்ரத்யக்ஷபூதோ மதாத்மகோ விஷயோ யஸ்ய ஜ்ஞாநஸ்ய தத் ப்ரத்யக்ஷாவகமம்; பக்திரூபேணோபாஸ்யமாநோऽஹம் ததாநீமேவோபாஸிது: ப்ரத்யக்ஷதாமுபயாமீத்யர்த:। ததாபி தர்ம்யம்-தர்மாதநபேதம்। தர்மஸ்ய ஹி நி:ஶ்ரேயஸஸாதநத்வம்। ஸ்வரூபேணைவாத்யர்தப்ரியத்வாத் ததாநீமேவ ஸாக்ஷாத்காரவத்தயா ஸ்வயம் நி:ஶ்ரேயஸரூபமபி நிரதிஶயநி:ஶ்ரேயஸரூபாத்யந்தி

களுக்குச் சொல்லாமல் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவும் இது சொல்லப்படுகிறது.

1. பக்தி உண்டாவதற்கு விரோதியான பாபங்களைப் போக்குவது கர்மயோகம் முதலானவை. பகவானை அடைவதற்கு விரோதியான பாபங்களைப் போக்குவது சொல்லப்போகிற பக்தி.

2. பாபம் என்கிற சொல்லாலே ஸ்வர்க்கம் முதலானதைக்கொடுக்கும் புண்ணியமும் சொல்லப்படுகிறது. இதை 58—வது பக்கத்துக் குறிப்பில் பார்க்க.

மத்ப்ராப்திஸாதனத்வாத் தர்ம்யம்| அத ஏவ ஸுஸுகம் கர்தும் – ஸுஸுகோபாதானம். அத்யர்த்தப்ரியத்வேனோபாதேயம் | அவ்யயம் – அக்ஷயம். மத்ப்ராப்திம் ஸாதயித்வாபி ஸ்வயம் ந க்ஷீயதே | ஏவம்ரூபமுபாஸனம் குர்வதோ மத்ப்ரதானே க்ருதேऽபி ந கிஞ்சித் க்ருதம் இதி மே ப்ரதிபாதீத்யர்த்த: || ||உ||

சொல்லப்போகிற தியானமானது எல்லாத் தியானங்களுக்குள்ளே 1 உயர்ந்தது. எல்லா ரஹஸ்யங்களுக்குள்ளும் 2 உயர்ந்தது. என்னை அடைவதற்கு இடைஞ்சலான எல்லாப்பாபங்களையும் போக்கக்கூடியது. இந்தத் தியானத்தைச் செய்யும்போது, செய்கிறவனுக்கு அப்போதே கண்ணால் காணப்படுவதுபோல் தியானம் செய்யப்பட்ட நான் தோன்றுகிறேன். அது தியான காலத்தில் மிகுந்த ஸுகமாயிருப்பதும் தவிர, அளவில்லாத ஸுகமான மோக்ஷத்தையும் கொடுக்கிறது. இந்த ஸங்கதிகளாலே அதைச் செய்வது மிகவும் இன்பமாயிருக்கும். பலனைக் கொடுத்தும், அழிந்து போகிறதில்லை 3 அதாவது—என்னைத் தியானம் செய்தவனுக்கு

---

1. சுலோகத்தில் "ராஜவித்யா" என்கிற சொல்லுக்கு இது பொருள். ராஜாக்களுடைய வித்தை என்றும் பொருள் கொள்ளலாம். ராஜாக்களுடைய வித்தை என்று சொன்னதாலே, மற்ற இரண்டு வர்ணத்தாரும் இதைச் செய்யக் கூடாதென்று கருத்தன்று. இதைப் பெரிய ஆழமான மனதுடையவர்களாலேதான் செய்யமுடியும். ராஜாக்கள்தான் அப்படிப்பட்டவர்கள். அதனாலேதான் இதை அவர்களுடைய தென்று சொல்லிற்று அப்பேர்ப்பட்ட மனதுடைய மற்ற இரண்டு வர்ணத்தாரும் இதைச் செய்யலாம்.

2. இந்தும் ராஜாக்களுடைய ரஹஸ்யம் என்றும் பொருள் கொள்ளலாம். பெரிய ஆழமான மனதுடையவர்கள்தான் நல்ல ஸங்கதிகளைக் கண்டவர்களுக்குச் சொல்லாமல் ரக்ஷிப்பார்கள். இவ்விதமான மனதில்லாதவர்கள் நல்லதோ—பொல்லாததோ--மனதில்பட்டால், தாங்காமல் அதைச் சீக்கிரம் வெளியிடுவார்கள்.

3. எந்தக்கர்மமும் அதின் பலனைக் கொடுத்ததும் போய்விடும். இந்தத்தியானமோ பலன் கொடுத்த பிறகும் போகிறதில்லை. அதாவது மோக்ஷமாகிற பலனும் இதற்குப் போதாதென்று கருத்து.

நான் மோக்ஷத்தைக் கொடுத்தும், "ஐயோ! இவனுக்குத்தகுந்த படி நான் ஒன்றும் செய்யவில்லையே" என்று எனக்குத் தோன்று கிறது. [2]

𑌅𑌶𑍍𑌰𑌦𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 ॥௩॥

𑌅𑌸𑍍𑌯 - 𑌉𑌪𑌾𑌸𑌨𑌾𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 - 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌰𑍂𑌪𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌨𑌾𑌯𑌾𑌸𑍇𑌨𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌯𑍋𑌗𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌅𑌶𑍍𑌰𑌦𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 - 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌤𑍍𑌵𑌰𑌾𑌰𑌹𑌿𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌃 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍂𑌪𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇। 𑌅𑌹𑍋 𑌮𑌹𑌦𑌿𑌦𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥௩॥

என்னைப்பற்றின இந்தத்தியானமென்கிற தர்மமானது-அதை செய்கிறவர்களுக்கு என்னிடத்தில் அளவில்லாத பிரீதியிருப்ப தால்-மிகவும் இன்பமாயும், அளவில்லாத ஸுகமான மோக்ஷத் தைக் கொடுப்பதாயும், பலனைக் கொடுத்தும் அழிவில்லாததாயு மிருக்கிறது. இதைச் செய்யத் 1தகுந்த நிலைமையை யடைந்தும், நம்புதலோடு இதைச் செய்யவேணுமென்று பரபரப்பில்லாதவர் கள் என்னை அடையாமல், யமனைப்போல் நடுக்கத்தைக்கொடுக்கக் கூடிய ஸம்ஸாரத்தில் முழுகிக் கிடக்கிறார்கள். 2 இந்த ஆச்சரி யத்தை என்ன என்று சொல்லுவேன். [3]

---

1. இந்த யுத்தகளத்தில் லக்ஷக்கணக்காய் இருக்கிற ஜனங்களுக் குள்ளே இதைச்செய்யக்கூடியவர்கள் இருந்தாலும்,பெரியோர்களிடம் இதைக் கேட்கவில்லை. கேட்டாலும், கவனிக்கவில்லை. கவனித்தா லும், நம்புதலில்லை. நம்பிக்கையிருந்தாலும், இதைச் செய்வதில் பர பரப்பில்லை.

2. இந்தத்தியானம் செய்யும்போதே அளவில்லாத ஸுகத்தைக் கொடுக்கிறது. பிறகு அளவில்லாத ஸுகமான மோக்ஷத்தையும் கொ டுக்கிறது. செய்வதில் கஷ்டமுமில்லை. ஸம்ஸாரமோ அளவில்லாத துக்கத்தைக் கொடுக்கிறது. இந்த இரண்டுக்கு மிருக்கும் வித்தியா ஸத்தைத் தெரிந்தும், தியானத்தைவிட்டு, ஸம்ஸாரத்தையே மிகவும் ஆசையுடனேபற்றுகிறார்களேயென்றுபகவானுக்கே ஆச்சரியமுண்டாகி,

𑌶𑍃𑌣𑍁 𑌤𑌾𑌵𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌸𑍍𑌯 𑌮𑌮𑌾𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍍—

𑌮𑌯𑌾 𑌤𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 ।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥௪॥

𑌨 𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌭𑍃𑌨𑍍𑌨 𑌚 𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑍋 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃 ॥௫॥

𑌇𑌦𑌂-𑌚𑍇𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍, 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾-𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌣𑌾 𑌤𑌤𑌮𑍍-𑌅𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌧𑌾𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌯𑌮𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 “𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍-𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦, 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍—𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦𑍇”𑌤𑌿 𑌚𑍇𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑌵𑌸𑍍𑌤𑍁𑌜𑌾𑌤𑍇𑌷𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌣𑌾 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌾 । 𑌤𑌤 𑌏𑌵 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿-𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌯𑌿 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌣𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑌿 । 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 “𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍—𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿, 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍-𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑍀”𑌤𑌿 𑌶𑌰𑍀𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨𑌿𑌯𑌾𑌮𑍍𑌯𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌾𑌤𑍍𑌤𑌦𑌾𑌯𑌤𑍍𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌨𑌿𑌯𑌮𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑍇, 𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 । 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃-𑌅𑌹𑌂 𑌤𑍁 𑌨 𑌤𑌦𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃। 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌤𑍈𑌰𑍍𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍁𑌪𑌕𑌾𑌰 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨 𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿-𑌨 𑌘𑌟𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌜𑌲𑌾𑌦𑍇𑌰𑌿𑌵 𑌮𑌮 𑌧𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌕𑌥𑌂? 𑌮𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 । 𑌪𑌶𑍍𑌯 𑌮𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌯𑍋𑌗𑌮𑍍-𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌤𑍍𑌰𑌚𑌿𑌦𑌸𑌮𑍍𑌭𑌾𑌵𑌨𑍀𑌯𑌂 𑌮𑌦𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌪𑌶𑍍𑌯 ।

---

இப்படிச் சொன்னது. இது பாபத்தின் பெருமை. ச்லோகத்தில் "பரம்தப" என்ற சொல் இருக்கிறது. அதற்குச் சத்ருக்களைக் கொளுத்துகிறவன் என்று பொருள். நீ வெளியேயிருக்கிற உன் சத்ருக்களைக் கொளுத்துவதுபோல்,, உள்ளேயிருக்கிற—பரபரப்பில்லாமைக்குக் காரணமான—உன் சத்ருக்களையும் நீ கொளுத்தவேணுமென்று கருத்து.

கொடவேஸ யோக: ? ஸூதஸூ ந்ந ஸூதஸ்தோ ம மாத்மா ஸூதஸாவந:— ஸவேஷாம் ஸூதாநாம் ஸ ங்கல்ப மாத்ரேண தா ரகோ நியந்தா ச ஸேவ மம யோக: । மமைவ ஸூதஸாவந: மம ஸங்கல்பஸ்ம வம ஸூதாநாம் ஸாவயிதா தாரயிதா நியந்தா ச ॥ ॥ச—ரு॥

அவ—அடைய வேண்டியவனுன என்னுடைய நினைக்கமுடி யாத பெருமையைச் சொல்லுகிறேன். கேள்—

அறிவுள்ளது, அறிவில்லாதது என்று இருவகையான இந்த எல்லா உலகத்துக்குள்ளும், நான் ஒருவனுக்கும் தெரியாமல், அதை த்தூக்குவதற்காகவும், ஏவுகிறதற்காகவும் யஜமானனுயிருந்து [1] நிறைந்திருக்கிறேன். ஆகையால் எல்லா வஸ்துக்களும் உள்ளே யிருந்து ஏவுகிற என்னிடத்தில் இருக்கின்றன. அதாவது—என் அதீனமாயிருக்கின்றன. நான் அவைகளில் இல்லை. அதாவது— அவைகளின் அதீநமாயில்லை. என் இருப்புக்கு அவைகளால் துளிக்கூட உபகாரமில்லை. (4)

ஆனால் அவைகள் என்னிடத்தில் இல்லை, அதாவது— ஜலத்தைக் குடம் தூக்குவதுபோல், அவைகளை நான் [2] தூக்கவில்லை.

---

1. ஆகாசம் என்பது எங்கும் நிறைந்திருக்கிறது. ஆனால் அது ஒன்றையும் ஏவுகிறதில்லை. ராஜா தன் ஜனங்களை ஏவுகிறான் ஆனால் அவன் எங்கும் நிறைந்திருக்கவில்லை. பகவானே ஆகாசம்போல் எங்கும்நிறைந்து, ராஜாவைப்போல் எல்லாரையும் ஏவுகிறான். இப்படியே உபநிஷத்து ஒருவஸ்துவாலும் அறியப்படாமல் அதற்குள்ளேயிருந்து அதை ஏவுகிறானென்று சொல்லுகிறது. இப்படியே எல்லாம் பகவானுக்கு உடம்பென்றும், அவனால் ஏவப்படுகிறதென்றும், சொல்லுவதாலே, அவைகளுடைய இருப்பும் பகவானுககு அதீநமென்று சொன்னதாக ஆகிறது.

2. முதல் சுலோகத்தில் என்னிடத்தில் எல்லா வஸ்துக்களுமிருக்கின்றன என்று சொன்னதால், பகவான் எல்லாவற்றையும் தூக்குகிறானென்றும்,இரண்டாவது சுலோகத்தில் அவைகள் என்னிடத்தில் இருக்கவில்லையென்றும் சொன்னதால், அவன் தூக்கவில்லையென்றும் ஏற்படுகிறது.இவைகள் ஒன்றுக்கொன்றுவிரோதியாதோவென்றால்,பதில்-

பின்னையெப்படியென்றால்-எல்லாவற்றையும் நினைவினால் தாங்குகிறேன். என்னைத் தவிர இன்னொருவனிடத்தில் இருக்குமோ என்று நினைக்க முடியாத-என்னிடத்தில் மாத்திரமுள்ள—ஆச்சரியமான நினைவைப்பார். அந்த நினைவு என்னவென்றால் - உண்டாகிற எல்லா வஸ்துக்களும் உண்டாகட்டும்; அவைகள் இருக்கும்வரையில் ஒரு குறைவுமில்லாமலிருக்கட்டும்; அவைகளுக்கு ஏற்பட்ட வேலைகளை அவைகள் ஸரியானபடி செய்யட்டும்; ஸூரியன் முதலான வஸ்துக்கள் கீழே விழாமல் அங்கேயே இருக்கட்டும்—இவைமுதலான எண்ணங்கள். அந்த நினைவுகளின்படி எல்லா வேலைகளும் நடக்கின்றன. என் நினைவுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. [4–5]

ஸர்வஸ்யாஸ்ய ஸ்வஸங்கல்பாயத்தஸ்திதிப்ரவ்ருத்தித்வே நிதர்ஶநமாஹ—

யதாऽऽகாஶஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹாந்।
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய ॥௬॥

யதா ஆகாஶேऽநாலம்பநே மஹாந் வாயு: ஸ்தித: ஸர்வத்ர கச்சதி। ஸ து வாயுர்நிராலம்பநோ மதாயத்தஸ்திதிரித்யவஶ்யாப்யுபகமநீய:- மயைவ த்ருத இதி விஜ்ஞாயதே। ததைவ ஸர்வாணி பூதாநி தாந்யத்ருஷ்டே மயி ஸ்திதாநி மயைவ த்ருதாநீத்யுபதாரய। யதாஹுர்வேதவித: "மேகோதய: ஸாகரஸந்நிவ்ருத்திரிந்தோர்விபாக: ஸ்புரிதாநி வாயோ:। வித்யுத்விபங்கோ கதிருஷ்ணரஶ்மேர்விஷ்ணோ

குடம் ஜலத்தைத் தாங்குவதுபோல் நான் தாங்கவில்லை. நினைவினால் தாங்குகிறேன். மேலும், குடம்போல் ஒருவனுக்கு உட்பட்டுத் தாங்கவில்லை. ஒருவனுக்கும் உட்படாமல் தாங்குகிறேன். அதாவது-ஒரு குடத்தில் ஜலத்தை வைத்தால், அந்தக் குடத்தினால் ஜலத்தைத் தாங்காமலிருக்க முடியாது. அதுபோலல்ல நான். வேணுமென்றால் தாங்குவேன். வேண்டாமென்றால் நினைத்தபோதே கீழேபோட்டுவிடுவேன். நான் ஒருவனுக்கும் உட்படாதவன். ஆகையால் முன்சொன்ன விரோதமில்லை.

விதிருதா: பூமைதி ஊயா: ” இதி । விஷ்ணோர்நந்தஸ்யா
ரணாநி ஹோராஸ்த்யயாண்யர்த்தமாஸா: । ஶ்ருதிரபி “ ஏதஸ்ய
வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ
வித்ருதௌ திஷ்டத:, பீஷாஸ்மாத்வாத: பவதே । பீஷோ
தேதி ஸூர்ய: । பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச” இத்யாதிகா ॥ ௬ ॥

அவ—னினைவினால் எல்லா வேலையும் செய்யப்படுகிறது என்பதற்கு உதாரணம் சொல்லுகிறார்—

ஒருவிதமான 1 பிடிப்பில்லாத இடத்தில், அதாவது ஆகாசத்தில், ஒருபெரியகாற்று இருந்துகொண்டு எங்கும் போகிறதே. அதை யார் தூக்குகிறார்கள். ஒருவனும் தூக்காமல் ஒருபிடிப்புமில்லாமல் எப்படி நிற்கும். ஆகையால் அதை நான்தான் தூக்குகிறேன்; என்னால்தான் நிற்கிறது என்று ஒப்புக்கொள்ளவேணும். அதுபோல 2 எல்லா உலகத்தையும் நான்தான் தூக்குகிறேன். ஆனால் என்னை ஒருவனுக்கும் தெரியாது. இப்படியே வேதத்தை நன்றாய் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்:— “ஆகாசத்தில் திடீரென்று ஒரு நிமிஷத்தில் ஜலம் நிறைந்த மேகங்கள் வருகின்றன. ஸமுத்திரத்தில் பெரிய பெரிய அலைகள் ஓயாமல் வந்துகொண்டிருந்தாலும், கரைக்கு வந்து திரும்பி விடுகின்றன. சந்திரன் வரவர வளர்ந்து நிறைந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து போகிறது. ஒரு விநாடிக்கு முன் இலைகூட

1. இந்த சுலோகத்தில் “வாயு: ஆகாசஸ்தித:” என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஆகாசத்திலிருக்கும் காற்றுஎன்று ஏற்பட்டபொருள். இவ்விடத்தில் அப்படிப்பொருளல்ல. பின்னை என்னவென்றால்-ஒருவிதமான பிடிப்புமில்லாத காற்று என்று பொருள். வேறு ஒன்றால் தூக்கப்படாமலும், ஏவப்படாமலும் உம்மாலேயே தூக்கப்படுவதும் ஏவப்படுவதுமான ஒருபொருளைக்காட்டும் என்ற கேள்விக்குப்பதிலாக அப்படிப்பட்ட பொருளைக் காட்டுகிறது இந்த சுலோகம். ஆகையால் காற்றை ஆகாசம் தூக்குகிறது என்று சொல்வது ஒட்டாது.

2. ஒரு பெரிய பக்ஷியின் உடம்பு ஒரு விதமான பிடிப்பில்லாத இடத்தில் இருந்துகொண்டு பறக்கிறது. அதின் உடம்பில் ஜீவாத்மா இல்லாவிட்டால், அது நிற்குமோ? பறக்குமோ? அதுபோல்.

அசங்கவில்லை; திடீரென்று பெருங்காற்று அடிக்கிறது. திடீரென்று மின்னல் உண்டாகிறது. ஒருநாள்கூடத் தவறாமல் காலையில் ஸூரியன் கிளம்புகிறான். இவையெல்லாம் ஸ்ரீமானான நாராயணனுடைய ஆச்சரியமான சக்தியினாலுண்டாகின்றன" என்று. இப்படியே வேதத்திலும் "எல்லா லோகங்களும் பகவானுடைய ஆக்ஞையினால் இருக்கின்றன" என்றும், "ஸூரியன், இந்திரன், அக்கினி, காற்று, யமன் முதலானவர்கள் எந்த வேளையில் எந்தக் குற்றம் வருமோவென்று பகவானுக்கு நடுங்கி, தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள்" என்றும் சொல்லியிருக்கிறது. 1 [6]

𑌏𑌵𑌂 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑍋𑌕𑍍𑌤𑌾 । 𑌤𑌥𑌾 𑌤𑌤𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌲𑌯𑌾𑌵𑌪𑍀𑌤𑍍𑌯𑌾𑌹—

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍌 𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ ௭ ॥

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾𑌂-𑌮𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌭𑍂𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂-𑌤𑌮𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌾𑌂-𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑌿𑌭𑌾𑌗𑌾𑌨𑌰𑍍𑌹𑌾𑌂 𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌯𑍇-𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌵𑌸𑌾𑌨𑌸𑌮𑌯𑍇 𑌮𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌿। 𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍌 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 । 𑌯𑌥𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃 "𑌆𑌸𑍀𑌦𑌿𑌦𑌂 𑌤𑌮𑍋𑌭𑍂𑌤𑌮𑍍, 𑌸𑍋𑌽𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿। 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑌪𑌿 "𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾 । "𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 - 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇, 𑌤𑌮𑌃 𑌪𑌰𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿" 𑌇𑌤𑌿 ॥ ௭ ॥

---

1. 7-வது அத்தியாயம் 7-வது சுலோகத்தில் பகவான் எங்கும் நிறைந்து, எல்லாவற்றையும் தாங்குகிறானென்று சொல்லப்பட்டது. அதையே இங்கே சொல்லி, இரண்டு ஸங்கதிகளைப் புதிதாகச் சொல்லுகிறார். அவையாவன—(1) பகவான் எல்லாவற்றையும் எண்ணத்தினால் தான் தாங்குகிறான். (2) அவனை ஒருவனுக்கும் தெரியாது-என்று. இந்த இரண்டாவது ஸங்கதி நூலில் கோத்த மணி உதாரணத்தாலும் ஏற்படும். ஆனால் அதை இங்கே வெளிப்படையாகச் சொல்லுகிறது.

அவ:—தன்னைத்தவிர வேறொன்றை எதிர்பார்க்கவேண்டாமல் இருக்கிற பகவானுடைய நினைவினால் எல்லாம் இருக்கிறதென்றும், அந்தந்த வேலையைச்செய்கிறதென்றும் சொல்லப்பட்டது. அப்படியே அவருடைய நினைவினாலேதான் எல்லாஉலகங்களும் உண்டாகி, அழிகின்றன என்றும் சொல்லுகிறார்—

1 குந்தியின்பிள்ளையே! பிரும்மாவுக்கு நூறுவயதாகி முடிகிற்காலத்தில் அசைகிறது, அசையாதது என்று இருவகைப்பட்ட இப்போதிருக்கும் எல்லாவஸ்துக்களும், இப்போதிருக்கும் உருவங்களையும் பெயர்களையும் விட்டு, என் எண்ணத்தால் என்னுடைய உடம்பாயும்—தமஸ் என்று சொல்லப்பட்டதுமான பிரகிருதி என்கிற வஸ்துவாக ஆய்விடுகிறது. மறுபடியும் பிரும்மாவை உண்டுபண்ணுவதாகிற ஸ்ருஷ்டிகாலம் வரும்போது, அந்தப்பிரகிருதியிலிருந்தே முன்னிருந்ததுபோலவே வெவ்வேறு உருவங்களையும் பெயர்களையும் உள்ளவஸ்துக்களை உண்டுபண்ணுகிறேன். இந்தஸங்கதி மநுஸ்மிருதியிலும்வேதத்திலும்சொல்லியிருக்கிறது. (7)

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந: |
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் || ||அ||

ஸ்வகீயாம் விசித்ரபரிணாமிநீம் ப்ரக்ருதிமவஷ்டப்ய- அஷ்டதா பரிணமய்ய இமம்-சதுர்விதம் தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராத்மகம் பூதக்ராமம் மதீயாயா மோஹிந்யா: குணமய்யா: ப்ரக்ருதேர்வஶாதவஶம் புந: புந: காலே காலே விஸ்ருஜாமி || ||அ||

ஆச்சரியங்களான வெவ்வேறு பதார்த்தங்களாக ஆகிற பிரகிருதி என்கிற என்னுடையதான வஸ்துவை 2 எட்டு

---

1. நீ குந்தியின் உடம்பிலிருந்துஉண்டானதை நீ அறியாவிட்டாலும், வேண்டியவர்கள் சொல்லைக்கேட்டு நீ நம்புகிறாய். அப்படியே என் உடம்பிலிருந்து இந்த உலகம் உண்டானதென்று என் சொல்லைக்கேட்டு நீ நம்பு என்று கருத்து.

2. 7-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சொன்னபடி எட்டுவிதம் இதினால் ஸமஷ்டி வ்ருஷ்டி செய்வது சொல்லப்பட்டது.

விதமாக முதலில் ஆக்குகிறேன். அவைகளிலிருந்து காணப்படுகிற தேவன்—பக்ஷி—மனிதன்—மரம்—என்று நாலுவிதமான எல்லாப்பிராணிகளையும் வெவ்வேறு உருவம், பெயர், இடம், காலம், அநுபவம், இவைகளுள்ளவைகளாக அப்போதப்போது திரும்பத் திரும்ப உண்டுபண்ணுகிறேன். ஸத்வம் முதலான மூன்று குணங்களோடு கூடியதும், எல்லாரையும் மயக்குகிறதுமான என்னுடைய பிரகிருதிக்கு அவைகள் உட்பட்டிருக்கின்றன. அவைகளால் அதை மீறமுடியாது. (8)

அவ—ஏவம் தர்ஹி விஷமஸ்ருஷ்ட்யாதீநி கர்மாணி தே நைர்க்ருண்யாத்யாவஹாநீதி ஶங்காம் வ்யுதஸ்யதி—

ந ச மாம் தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய |
உதாஸீநவதாஸீநமஸக்தம் தேஷு கர்மஸு || ௯ ||

ந ச தாநி-விஷமஸ்ருஷ்ட்யாதீநி கர்மாணி மாம் நிபத்நந்தி-மயி நைர்க்ருண்யாதிகம் நாவஹந்தி| யத: க்ஷேத்ரஜ்ஞாநாம் பூர்வக்ருதாந்யேவ கர்மாணி தேவாதிவிஷமபாவஹேதவ:, அஹம் து தத்ர வைஷம்யே அஸக்த: தத்ரோதாஸீநவதாஸீந: | யதோக்தம் ஸூத்ரகாரை: “வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத், ந கர்மாவிபாகாதிதி சேந்நாநாதித்வாத்” இதி || ௯ ||

அவ—இந்த உலகமானது பேசத்தெரிந்ததும், பேசத்தெரியாததும், ஏழையும், பணக்காரனும், வியாதியும், உடம்பு ஸௌக்கியமும், அழகும், கண்ணுக்குப்பிடிக்காமையும்— இவையுள்ளதாயும் என்று இப்படிப்பலவிதமாயிருக்கிறது. இவைகளைப் பகவான் உண்டுபண்ணுகிறான் என்றால், அவனுக்குச்சிலரிடத்தில் ஸ்நேஹமும், சிலரிடத்தில் த்வேஷமும், சிலரிடத்தில் தயையில்லாமையும் ஆகியகெடுதல்கள் இருப்பதாகஏற்படுமே என்றால், சொல்லுகிறார்—

கீழ்ச்சொன்னபடி உலகத்தைப் பலமாதிரியாக நான் உண்டுபண்ணுவதால், என்னிடத்தில் இரக்கமில்லாமை, பக்ஷபாதம் பண்ணுகை என்கிற குற்றங்கள்வராது. ஏனென்றால், ஜீவன்கள்

நெடுநாளாய் ஒன்றின்பின் ஒன்றாக வரிசையாகச் செய்துவந்த கர்மங்களே அந்த தாரதம்மியங்களுக்குக் காரணம். நானாகச்செய்யவில்லை. ஒருவனை இளப்பமாகவோ, உயர்ந்தவனாகவோ பண்ணவேண்டு மென்று எனக்கு ஆசை யில்லை. 1 யார் எப்படியிருந்தாலெனக்குஎன்ன? என்றுஇருப்பவன்போல் இருக்கிறேன். வேதத்திற்கு அர்த்தமான பிரும்மஸூத்ரங்களிலும் இந்த ஸங்கதி சொல்லியிருக்கிறது. (9)

மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் |
ஹேதுநாநேந கௌந்தேய ஜகத் விபரிவர்த்ததே || ||க0||

தஸ்மாத் க்ஷேத்ரஜ்ஞகர்மாநுகுணம் மதீயா ப்ரக்ருதி: ஸத்யஸங்கல்பேந மயாத்யக்ஷேணேக்ஷிதா ஸசராசரம் ஜகத் ஸூயதே | அநேந க்ஷேத்ரஜ்ஞகர்மாநுகுணமதீக்ஷணேந ஹேதுநா ஜகத்பரிவர்த்ததே இதி மதீயம் ஸத்யஸங்கல்பத்வம் வைஷம்யநைர்க்ருண்யாதிதோஷரஹிதத்வமித்யாதிகம் ச ஸர்வதேவஸ்ய மமைஶ்வரம் யோகம் பஶ்ய | யதாஹ ஶ்ருதி: “அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:, மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்” இதி || ||க0||

அவ—உண்டாகும் வஸ்துக்களின் தாரதம்மியங்கள் கர்மத்தால் ஏற்படுகிறதென்றால், எப்போதும் மாறுகிற தன்மையுள்ள பிரகிருதி தானாகவே கர்மத்தினாலே அந்தந்த வஸ்துக்களாக ஆகட்டுமே; அதில்உம்முடையவேலை எதற்கு? என்றால்,சொல்லுகிறார்—

நினைத்தபடி நடத்துகிற யஜமானனான என்னால் ஜீவன்களுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி—என்னுடைய உடம்பான-பிர

1. ஒருவன் ஒருவேலையைச் செய்யும்போது மற்றொருவன் அதைக் கவனிக்காமல் இருந்தால், அவன் அந்த வேலையைச் செய்ததாகவும் செய்வித்ததாகவும்எப்படிஏற்படாதோ, அப்படியே பகவான் உலகத்தை உண்டுபண்ணுகிறபோது, அதின் தாரதம்மியத்தை உண்டுபண்ணவேண்டுமென்று அவனுக்கு எண்ணமில்லாமையால், அவன் உதாஸீனன். அதாவது—அவன் செய்தவனுமல்ல. செய்வித்தவனுமல்ல.

கிருதியானது இன்னின்ன வஸ்துக்களை யுண்டுபண்ணட்டுமென்று நினைக்கப்பட்ட எல்லா உலகத்தையும் உண்டுபண்ணுகிறது. உலகத்தில் ஒருவேலைக்காரன் நல்லது பண்ணினாலும், கெட்டது பண்ணினாலும், அதைப்பார்த்து யஜமானன் தானே பலனைக் கொடுக்கிறான். அதுபோல உலகத்திலிருக்கும் தாரதம்மியங்கள் கர்மங்களினால் உண்டானதாயிருந்தாலும், அவைகளை அறிவுள்ள ஒருவன்தானே உண்டுபண்ணவேணும். ஆதலால் நான்தான் அவைகளை உண்டுபண்ணினேன். அறிவில்லாத கர்மமே யுண்டுபண்ணுமா? இப்படி என் நினைவினால் இந்த உலகமானது திரும்பித் திரும்பி வருகிறது. ஆதலால் நான்உலகத்திற்கு யஜமானன், நினைத்தபடி நடத்துகிறவன். பக்ஷபாதம் முதலான குற்றமில்லாதவன். இவைமுதலான என்னுடைய ஈசுவரத் தன்மையைப்பார்[1]. 7-வது சுலோகத்தில் நான்தான் உலகத்தை உண்டுபண்ணுகிறேன் என்று சொன்னதை இங்கே முடிக்கிறார். (10)

அவஜாநந்தி மாம் மூடா⁴ மாநுஷீம் தநுமாஶ்ரிதம் ।
பரம் பா⁴வமஜாநந்தோ மம பூ⁴தமஹேஶ்வரம் ॥ ‖௧௧‖

பரம் மம பூ⁴தமஹேஶ்வரம் ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம் நிகி²லஜக³தே³ககாரணம் பரமகாருணிகதயா ஸர்வஸமாஶ்ரயணீயத்வாய மாநுஷீம் தநுமாஶ்ரிதம் ஸ்வக்ருதை: பாபகர்மபி⁴ர்மூடா⁴: அவஜாநந்தி ப்ராக்ருதமநுஷ்யஸமம் மந்யந்தே। பூ⁴தமஹேஶ்வரஸ்ய மமாபாரகாருண்யௌதா³ர்யஸௌஶீ

1. 7-வது அத்தியாயத்தில் 6-வது சுலோகத்தில் உலகமானது பகவானிடமிருந்து உண்டாகி, அவனிடத்திலேயே பிரளயகாலத்தில் வந்துஅடங்குகிறது என்று சொல்லப்பட்டது. அதையேஇந்த இடத்தில் 7-வது சுலோகம் முதல் நான்கு சுலோகங்களால் சொல்லுகிறார். இங்கே அதிகமாய் சொல்லுகிறவைகளாவன.—உலகம் பகவானுடைய உடம்பான பிரகிருதியிலிருந்து உண்டாகிறது. முதலில் ஆகாசம் முதலான ஸமஷ்டிகள் உண்டாகின்றன. அவைகளிலிருந்து வியஷ்டியான வெவ்வேறு வஸ்துக்கள் உண்டாகின்றன. உண்டாகும் தாரதம்மியங்களுக்குப் பகவான் காரணமன்று. ஜீவன்களுடைய கர்மங்கள்தான் காரணம். அப்படியிருந்த போதிலும், பகவானுடைய ஸங்கல்பமில்லா விட்டால் உலகம் உண்டாகாது—என்று.

ஹ்ருஷ்டாஸ்வாத்மீயஸ்வரூபம் மநுஷ்யஸம்ஸ்தாநமாஶ்ரயணீயம்
பரம் பாவமஜாநந்தோ மநுஷ்யஸம்ஸ்தாநமாத்ரேண
மாம் இதரஸஜாதீயம் மத்வா திரஸ்குர்வந்தீத்யர்த: ॥ ॥௧௧॥

அவ—ஞானிகளுடைய பெருமையைச் சொல்லுவதற்காக, பகவானை உள்ளபடி அறியாதவர்களுடைய ஸ்வபாவத்தைச் சொல்லுகிறார்—

இப்படி எல்லா உலகங்களுக்கும் நான் பெரிய ராஜவாயும், எல்லாம் தெரிந்தவனுயும், நினைத்தபடி நடத்துகிறவனுயும், எல்லா உலகங்களையும் ஒருவனுய் உண்டுபண்ணுகிறவனுயும், அளவில்லா ததயையினுலே எல்லாரும் என்னிடம் வருவதற்காக 1 மனித உருவத்தை உடையவனுயு மிருக்கிற என்னை மூடர்கள் தாங்கள் பண்ணின பாபங்களினுலே உலகத்திலிருக்கும் மனிதர்களுக்குள் நானும் ஒருவன் என்று நினைத்து, என்னுடைய உயர்ந்த தன்மையை அறியாமல், மனிதஉருவத்தை மாத்திரம்பார்த்து, 2 அலக்ஷியம் பண்ணுகிறுர்கள். என்னுடைய உயர்ந்த தன்மையாவது—கேட்டதைக் கொடுப்பது, தாழ்ந்தவர்களுடனும் இடைவிடாமல் பழகுவது, குற்றங்களைப்பார்க்காமல் ஜனங்களிடத்தில் ஆசையுள்ளவனுயிருப்பது. என் ஸொத்தான எல்லாமனிதர்களும் என்னிடம் வருவதற்காக மனித உருவத்துடன் லோகத்தில் வந்திருப்பதும். கீழ்ச்சொன்ன குணங்கள்என்னை இப்படிவரும்படி செய்தது. (11)

மோகாஶா மோககர்மாணோ மோகஜ்ஞாநா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா: ॥

---

1. பகவானுடைய திருமேனி மனித உருவம் போலிருந்த போதிலும், அதுவேறுஜாதியானவஸ்துவி (சுத்தஸத்வத்தி) லிருந்துஉண்டானது. ஒருகுடம்மண்ணுல்செய்யப்பட்டது. ஒன்று தங்கத்தால்செய்யப்பட்டது. இவையிரண்டுக்கும்உருவமும் பெயரும் ஒரேமாதிரியாயிருந்தாலும், அவைகள் வெவ்வேறு ஜாதியான வஸ்துக்களால் செய்யப்பட்டன. அதுபோல.

2. பகவானுடைய உருவம் மனித உருவம் போலிருக்கிறது. அதினுல் அவனிடம் காணப்படுகிற-மற்றவர்களைக் காட்டிலும் உயர்த்திக்கு அடையாளங்கள் மனதில் படாமல், அவனை மற்றவர்களைப் போல் எண்ணுவது. இது தான் அலக்ஷியம் பண்ணுவது.

மம மநுஷ்யத்வே பரத்வப்ரதிபத்திவிரோதிநீம் ராக்ஷஸீமாஸுரீம் ச மோஹிநீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: மோகாஶா: - மோகவாஞ்சிதா: நிஷ்பலவாஞ்சிதா:, மோககர்மாண: - மோகாரம்பா:, மோகஜ்ஞாநா: - ஸர்வேஷு மதீயேஷு சராசரேஷு அர்த்தேஷு விபரீதஜ்ஞாநதயா நிஷ்பலஜ்ஞாநா:, விசேதஸ: - ததா ஸர்வத்ர விகதயாதாத்ம்யஜ்ஞாநா: மாம் ஸர்வேஶ்வரமிதரஸமம் மத்வா மயி யத்கிஞ்சித் குர்வதே - யத்கிஞ்சித்ப்ரவர்த்தந்தே, தத் ஸர்வம் மோகம் பவதீத்யர்த்த: ॥ ‖ ௧௨ ‖

நான் மனிதஉருவமாக இருக்கச்செய்தேயும், என்னிடத்தில் காணப்படும் அளவில்லாத தனை முதலான பெருமையை அறியவொட்டாமல் செய்கிற ரஜோகுணமும், தமோகுணமும் மேலிட்டிருக்கிறஸ்வபாவத்தைச்சிலர் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆசைப்படும் பலன்கள் கிடைக்கிறதில்லை. அவர்கள் ஆரம்பித்த வேலைகள் நடக்கிறதில்லை. என்னுடையதான எல்லா உலகங்களையும் பற்றி உள்ளபடி அறியாமல் 1 தப்பாக நினைக்கிறபடியால், அவர்களுக்கு அறிவு இருந்தும் பிரயோஜநமில்லை. அப்படியே எல்லா விஷயத்திலும் உண்மையை யறியாதவர்கள், எல்லா லோகங்களுக்கும் ராஜாவான என்னை மற்றவர்களைப்போல நினைத்து, என்விஷயத்தில் என்னவேலைகளைச் செய்ய நினைக்கிறார்களோ, பொதுவாய் எந்த பலனைக் குறித்து வேலையை ஆரம்பிக்கிறார்களோ, 2 அவைகள் எல்லாம் வீணாய்ப்போகின்றன. (12)

1. தப்பாக நினைப்பதாவது—பகவானுக்கு உட்பட்டதை அவனுக்குஉட்படாததென்றும்,பகவானுடைய சொத்தைத் தன்னதென்றும், ஸ்வயம்பிரகாசமாயும் அழிவில்லாததுமான ஜீவஸ்வரூபத்தைத்தழுவியத்தோன்றுத அழிவுள்ளஉடம்பாகஎண்ணுவதும், நிலையில்லாத பலனை நிலையுள்ளதாக எண்ணுவதும்.

2. பகவான் ராமாவதாரம்பண்ணினபோது, ராவணன் பகவானைக் கொல்லவேணுமென்று நினைத்தான். அவன் நினைவெல்லாம் தப்பாயிருந்தபடியால், அவனுடைய ஒரு வேலையும் அவன் நினைத்தபடி நடக்க

மஹாத்மாநஸ்து மாம் பார்த தைவீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: ।
பஜந்த்யநந்யமநஸோ ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம் ॥ ॥௧௩॥

யே து ஸ்வக்ருதை: புண்யஸஞ்சயை: மாம் ஶரணமுபகம்ய வித்வஸ்தஸமஸ்தபாபபந்தா: தைவீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: மஹாத்மாந:, தே பூதாதிமவ்யயம் வாங்மநஸாபரிச்சேத்ய நாமகர்மஸ்வரூபம் பரமகாருணிகதயா ஸாதுபரித்ராணாய மநுஷ்யத்வேநாவதீர்ணம் மாம் ஜ்ஞாத்வா அநந்யமநஸோ மாம் பஜந்தே, அத்யர்த்தமத்ப்ரியத்வேந மத்பஜநேந விநா மநஸ ஸ்வாத்மந: பாஹ்யகரணாநாம் ச தாரணமலபமாநா மத்பஜநைகப்ரயோஜநா பஜந்தே ॥ ॥௧௩॥

அவ— இப்படி உம்மைஅவமானம் செய்கிறமூடர்கள் நிறைந்த உலகத்தில் நீர் ஏன்அவதாரம் பண்ணினீர்; ஒரு பிரயோஜநமும் இல்லையேஎன்று கேட்டால், என்னையுள்ளபடி அறிந்த சில பெரியோர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்காக நான் அவதாரம் செய்திருப்பதாலே, அதற்குப் பிரயோஜநமுண்டென்றுகாட்டி, அவர்களின் நடவடிக்கையைச் சொல்லி, பக்தியைச் சொல்லுகிறார்—

அனேக ஜந்மங்களிலே பண்ணின கணக்கில்லாத புண்ணியங்களால் என்னைத் தைவம் என்று அறிந்து, என்னைப் பிரபத்திபண்ணி (கெஞ்சிக் கேட்டுக்கொண்டு), எல்லா பாபங்களும் நீங்கி, ஸத்வகுணம் மேலிட்ட சில பெரியோர்களுமிருக்கிறார்கள். அவர்கள் எல்லா உலகத்தை உண்டு பண்ணினவனும், ஒருவித 1 கெடுதியில்லாதவனும், மனதாலே நினைக்கவும், வாயால் சொல்லவும் முடியாத குணங்களையும், வேலைகளையும் உடையவனும் ஆயிருந்தும், அளவில்லாத தயையினால் ஸாதுக்களைக்கா

---

யில்லை. உண்மையான அறிவில்லாமையாலே தப்பான எண்ணமுண்டாகிறது. அதினால் ஆரம்பித்த வேலை நடக்கிறதில்லை. நடந்தாலும், ஆசைப்பட்ட பலன் கிடைக்கிறதில்லை.

1. அவதாரத்திற்குக்காரணம் தயை. கர்மமன்று. ஆசையால் ஞானத்தின் குறைவு முதலான கெடுதல்களில்லை.

ப்பாற்றுவதற்காக நான் மனிதனாகப் பிறந்திருக்கிறேனென்று அறிந்து, என்னிடத்தில் இருக்கும் அளவில்லாத பிரீதியினாலே என்னை ஒரு விநாடி நினையாவிட்டால், கண் முதலான இந்திரியங்களும், மனதும், ஆத்மாவும் தாங்கமுடியாமல், என்னை நினைப்பதையே பிரயோஜநமாக எண்ணித் தியானம் செய்கிறார்கள் (13)

ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: ।
நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥௧௪॥

அத்யர்த்தமத்ப்ரியத்வேந மத்கீர்த்தநயதநநமஸ்காரைர்விநா க்ஷணமாத்ரேऽப்யாத்மதாரணமலபமாநா: | மத்குணவிஶேஷவாசீநி மந்நாமாநி ஸ்ம்ருத்வா புலகாஞ்சிதஸர்வாங்கா ஹர்ஷகத்கதகண்டா: நாராயண-க்ருஷ்ண-வாஸுதேவேத்யேவமாதி ஸததம் கீர்த்தயந்த:, ததைவ யதந்த: மத்கர்மஸு அர்ச்சநாதிகேஷு ததுபகாரகேஷு ச பவநநந்தநவநகரணாதிகேஷு ச த்ருடஸங்கல்பா யதமாநா:, பக்திபாராநமிதமநோவாக்காயா: அவநௌ அஷ்டாங்கஸ்பர்ஶிஶிரோபிர்மாம் நமஸ்யந்தஶ்ச அநவரதம் ஸ்வாமிநம் ஸ்துவந்தஶ்சாநந்தமநுபவந்தோ மாமுபாஸதே; ஸததம் ச நித்யயுக்தா:-நித்யயோகம் காங்க்ஷமாணா: க்ருதாந்தம் தாஸ்யவ்யவஸாயிந உபாஸதே ॥ ॥௧௪॥

[1] என்னிடத்தில்அளவில்லாத பிரீதியிருப்பதனாலே, என் பெயர்களைச் சொல்லுவது, என் வேலைகளைச் செய்யப்பிரயத்தனப்படுவது, என்னைவணங்குவது—இவைகள் இல்லாவிட்டால் ஒருவிநாடியில் எத்தனையோ ஒரு பாகங்கூட ஆத்மா தாங்காமல், என்னுடைய உயர்ந்தகுணங்களைச் சொல்லுகிற பெயர்களை நினைத்து, உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலடைந்து, ஸந்தோஷத்தினால் தொண்டை தழுதழுத்து, நாராயண! கிருஷ்ண! வாஸுதேவ! இவை முதலான

1, கீழ் சுலோகத்தில் தியானம் செய்கிறார்கள் என்று தியானத்தைச் சொன்னார். அதுவே அளவில்லாத பிரீதியுடனே செய்யப்படுகிறதென்றும், அதுவே பகவானுடைய திருநாமங்களைச் சொல்லவும், அவனுடைய வேலைகளைச் செய்யவும், அவனை வணங்கவும் தூண்டுகிறது என்று இந்த சுலோகம் சொல்லுகிறது.

எம்பெயர்களை 1 எப்பொழுதும் சொல்லுகிறார்கள். அப்படியே என்னைப் பூஜிப்பது, அதற்கு உதவியான—கோவில் கட்டுவது, புஷ்பத் தோட்டம் போடுவது—முதலான வேலைகளில் மிகவும் 3 உறுதியோடு பிரயத்நம் பண்ணுகிறார்கள். மிகுந்த பக்தியாலே மனதோடும், கட்டாயம் ஸேவிக்கவேணுமென்கிற எண்ணத்தோடும், தாங்கள் பகவானைச் சேர்ந்தவர்கள் என்கிற நினைவோடும், இரண்டு கால்களையும், இரண்டு கைகளையும் நீட்டி, தலையையும் பூமியில் வைத்து, இப்படி எட்டு அங்கங்களோடு புழுதி, சேறு, கல், பூமியிலிருப்பதைக் கவனிக்காமல், ஒருகனமுள்ள கம்பைப் பூமியில் போட்டால் போல், முழு உடம்பையும் தரையில் போட்டு நமஸ்காரம் செய்கிறார்கள். இப்படி என்னுடன் எப்போதுமிருக்க வேணுமென்று ஆசைப்பட்டு, ஆத்மா இருக்கிற வரையில் எனக்கு வேலை செய்ய வேண்டுமென்று உறுதியோடு என்னை எப்போதும் தியானம் செய்கிறார்கள். (14)

ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம் ॥௧௫॥

அந்யேऽபி மஹாத்மாந: மத்கீர்த்தநாதிபி:, ஜ்ஞாநாக்யேந யஜ்ஞேந ச யஜந்தோ மாமுபாஸதே । கதம், பஹுதா ப்ருதக்த்வேந - ஜகதாகாரேண விஶ்வதோமுகம் - விஶ்வப்ரகாரமவஸ்திதம், மாமேகத்வேநோபாஸதே । ஏததுக்தம் பவதி ஸ்ருஷ்ட்யாதௌ நாமரூபவிபாகாநர்ஹஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீர: ஸத்யஸங்கல்ப: விவிதவிசித்ரஸ்தூலஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீர: ஸ்யாமிதி ஸங்கல்ப்ய, ஸ ஏக ஏவ தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராக்யவிசித்ரஜகச்சரீரோऽவதிஷ்டத இத்யநுஸந்தாநா: மாமுபாஸத இதி ॥ ॥ ௧௫ ॥

---

1. எப்பொழுதும்—தனியாய் இருக்கும்போதும், ஜனங்கள் கூட இருக்கும் பொழுதும். இதனால் பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவதற்கு வெட்கப்படவில்லை என்றும், ஒருவனுக்காகச் சொல்லவில்லையென்றும் காட்டப்படுகிறது.

1 வேறு சில பெரியோர்கள் கீழ் சுலோகத்தில் சொன்னபடியும், 2 நினைவு ரூபமான யக்ஞத்தினாலும் என்னை ஸந்தோஷப்படுத்திக் கொண்டு, தியானம் செய்கிறார்கள். எப்படி யென்றால், எல்லா உலக உருவமாகப் பல விதமாயிருக்கிற என்னை ஒரேவிதமாகத் தியானம் பண்ணுகிறார்கள். அதாவது—பிரளய காலத்தில் பகவானென வாஸுதேவன்தான், 3 தனித்து இருப்பதாகச் சொல்லமுடியாத பிரகிருதி-ஜீவன்கள் ஆகிய இரண்டு உருவமுள்ளவனாயிருந்தான். அப்போது அவைகளுக்கு வெவ்வேறான உருவம்களும் பெயர்களும் இல்லை. அவைகள் மிகவும் ஸூக்ஷ்மமாய் (சின்னதாய்) இருந்தன. பிறகு, பலவிதமான உருவங்களும் பெயர்களுமுடைய உலக உருவமாக ஆகவேணுமென்று நினைத்து, நினைத்தபடி நடத்துகிறவனாகையாலே, அவன் ஒருவனே தேவன்-பக்ஷி-மனிதன்-மரம்-என்று சொல்லப்படுகிற ஆச்சரியமான உலகவடிவாக இருக்கிறான்—என்று நினைத்து, அவர்கள் தியானம் செய்கிறார்கள். (15)

ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம்—

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம் ।
மந்த்ரோऽஹமஹமேவாஜ்யமஹமக்நிரஹம் ஹுதம் ॥ ௧௬ ॥

---

1. இந்த சுலோகத்தில் சொல்லுகிறவர்கள் பகவானைப் பூர்ணமாகத் தியானம் பண்ணுகிறவர்கள். அதாவது—எல்லா உலக உருவமாக இருக்கிறானென்று தியானம்செய்கிறார்கள்.

2. 13-வது சுலோகத்தில் பகவானை நினைப்பதையே பிரயோஜனம் என்றும், 14-வது சுலோகத்தில், பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவது முதலான பக்திக்குக்கிட்டினவைகளோடு தியானத்தைச் செய்யவேண்டுமென்றும்சொல்லி, இந்தசுலோகத்தில்தியானம் பண்ணப்பட்ட பகவானைத்தியானம்பண்ணவேண்டியவிதம்சொல்லப்படுகிறது.

3. பிரகிருதியும், ஜீவன்களும் அழிவில்லாதவைகள். பிரளயகாலத்தில் அவைகள் பகவானிடம் சேர்ந்திருக்கின்றன. ஆனால், சேர்ந்திருக்கின்றன என்று சாஸ்திரத்தைக் கொண்டு அறியவேணுமேயொழிய, பாலில் சேர்ந்த ஜலத்தைப் போலத் தனித்துக் காணமுடியாது.

அஹம் க்ரது:- அஹம் ஜ்யோதிஷ்டோமாதிக: க்ரது:। அஹம் மஹாயஜ்ஞ:। அஹமேவ பித்ருகணபுஷ்டிதா ஸ்வதா। ஔஷதம் ஹவிஶ்சாஹமேவ। அஹமேவ மந்த்ர:। அஹமேவாஜ்யம்। உபலக்ஷணார்த்தமிதம் - ஸோமாதிகம் ச ஹவிரஹமேவேத்யர்த்த:। அஹமாஹவநீயாத்யக்நி:। ஹோமோऽப்யஹமேவ॥ ॥௧௬॥

அவ.—நானே எல்லா உலக வடிவாகவும் இருக்கிறேன் என்று சொல்லுகிறார்—

ஜ்யோதிஷ்டோமம் முதலான யாகங்களும் நான்தான். ஐந்து மஹாயஜ்ஞங்களும் நான்தான். பித்ருதேவதைகளை வளர்க்கிற ஸ்வதை என்பதும் நான்தான். பயிர் முதலானவைகளிலிருந்து உண்டாகிற மாவு-சோறு முதலான ஹவிஸ்ஸும் நான்தான். ஹவிஸ்ஸைக் கொடுக்கும் காலத்தில் சொல்லுகிற மந்திரம் என்கிற சொற்களும் நான்தான். நெய்யும் நான்தான. ஸோமம் முதலான ஹவிஸ்ஸும் நான்தான். இந்த ஹவிஸ்ஸை வாங்கிக் கொள்ளுகிற ஆஹவநீயம் என்கிற நெருப்பும் நான்தான். நெருப்பில் ஹவிஸ்ஸைப் போடுவதென்கிற ஹோமமும் நான்தான். [ 16 ]

பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:।
வேத்யம் பவித்ரமோங்கார ருக் ஸாம யஜுரேவ ச ॥ ॥௧௭॥

அஸ்ய ஸ்தாவரஜங்கமாத்மகஸ்ய ஜகத: தத்ர தத்ர பித்ருத்வேந மாத்ருத்வேந தாத்ருத்வேந பிதாமஹத்வேந ச வர்த்தமாநோऽஹமேவ। அத்ர தாத்ருஶப்தோ மாதாபித்ருவ்யதிரிக்தே உத்பத்திப்ரயோஜகே சேதநவிஶேஷே வர்த்ததே। யத்கிஞ்சித் வேதவேத்யம் பவித்ரம் தத்ஸர்வமஹமேவ। வேதே ச வேத்ய: ப்ரணவோऽஹமேவ। ருக்ஸாமயஜுராத்மகோ வேதஶ்சாஹமேவ॥ ॥௧௭॥

அசைகிறது—அசையாதது என்று இருவகையான இந்த உலகத்தில் 1 தகப்பன், தாய், இவர்களைத் தவிர ஒருவன் உண்டாவத

1. தகப்பன், தாய் முதலானவர்களுக்குள்ளே அந்தர்யாமி (உள்ளேயிருந்து ஏவுகிறவன்) ஆய் இருந்துகொண்டு நான் [illegible]

ற்குஉ தவியானவன், பாட்டன் எல்லாரும் நான்தான். ஜீவன்களுடைய தோஷத்தைப் போக்குவதாக வேதத்தாலே அறியப்படுகிறதும் நான்தான் வேதத்துக்கு ஆதாரமான பிரணவமும் நான்தான் ருக்-ஸாமம-யஜுஸ்-என்கிற வேதத்தின் பிரிவுகளும் நான்தான்

𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ॥௧௮॥

𑌗𑌮𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌗𑌤𑌿𑌃- 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 𑌭𑌰𑍍𑌤𑌾-𑌧𑌾𑌰𑌯𑌿𑌤𑌾, 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃-𑌶𑌾𑌸𑌿𑌤𑌾, 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀-𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃- 𑌵𑌾𑌸𑌸𑍍𑌥𑌾𑌨𑌂- 𑌵𑍇𑌶𑍍𑌮𑌾𑌦𑌿, 𑌶𑌰𑌣𑌂- 𑌇𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌕𑌤𑌯𑌾𑌽𑌨𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌤𑌯𑌾 𑌚 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌶𑍍𑌶𑌰𑌣𑌂 𑌸 𑌏𑌵 । 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍- 𑌹𑌿𑌤𑍈𑌷𑍀। 𑌪𑍍𑌰𑌭𑌵𑌪𑍍𑌰𑌲𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌤𑍍𑌰𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑌵𑌪𑍍𑌰𑌲𑌯𑌯𑍋𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌅𑌹𑌮𑍇𑌵। 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂-𑌨𑌿𑌧𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 𑌬𑍀𑌜𑌂-𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌯𑌰𑌹𑌿𑌤𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌅𑌹𑌮𑍇𑌵 ॥ ॥௧௮॥

அவரவர்களுக்கு ஒவ்வொரு காலத்தில் அடையவேண்டிய இடமும் நான்தான். எல்லா வஸ்துக்களைத் தூக்குகிறவனும், எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிறவனும், எல்லாஸங்கதிகளையும் நேராகப் பார்க்கிறவனும், வீடு முதலான இருப்பிடமும் [illegible] வைகளை ஸம்பாதித்துக் கொடுப்பதற்காகவும், [illegible]வுகளைப் போக்குவதற்காகவும் ஜனங்களால் அடையப்படுகிற ஜீவனும் நான்தான். உலகத்துக்கு க்ஷேமத்தை நினைக்கிறவனும் நான்தான். உலகம் உண்டாகுமிடமும், அடங்குகிற இடமும் நான்தான். உண்டாகிற வஸ்துக்களும், அழியும் வஸ்துக்களும் நான்தான். எல்லா வஸ்துக்களையும் அழிவில்லாமலிருந்து உண்டு பண்ணுகிறதும் நான்தான். (18)

𑌤𑌪𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌹𑌂 𑌵𑌰𑍍𑌷𑌂 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌚 ।
𑌅𑌮𑍃𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌸𑌦𑌸𑌚𑍍𑌚𑌾𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨 ॥ ॥௧௯॥

---

ளையும் செய்கிறான். அதாவது—தகப்பனாயிருந்து உண்டுபண்ணுகிறான், சோறாகவும், தண்ணீராகவுமிருந்து அவர்களை வளர்க்கிறான்.

[illegible] ॥ ॥௧௯॥

அவ—கீழ் மூன்று சுலோகங்களாலே உலகத்தில் உயர்ந்ததாகச் சொல்லப்படுகிற யாகம் முதலான வஸ்துக்கள் பகவானுடைய அதீநம் என்று சொல்லப்பட்டது. இந்தசுலோகத்தில் அவைகளுடைய வேலைகளும் பகவானுடைய அதீந மென்று சொல்லப்படுகிறது—

நெருப்பு, ஸூரியன் முதலான வடிவாயிருந்து நானே எல்லா உலகங்களையும் தபிக்கும்படி செய்கிறேன். கோடை முதலான காலத்தில் அடியோடு மழையில்லாமல் செய்வதும் நான்தான். மழைகாலத்தில் மழைபெய்கிறதும் நான்தான். பிராணிகளுக்குப் பிழைப்பை யுண்டுபண்ணுவதும், சாவை யுண்டுபண்ணுவதும் இந்த இரண்டும் நான்தான். ஒவ்வொன்றாகச் சொல்லுவானேன். இப்போதிருக்கிற எல்லா வஸ்துக்களும் நான்தான். சென்றகாலத்தில் போனவைகளும், வருங்காலத்தில் வரப்போகிறவைகளும் நான்தான். அறிவுள்ளது அறிவில்லாதது என்று இருவகைப்பட்டவைகள் எல்லாம் எப்போதும் என் உடம்பாகையாலே, எல்லாம் எனக்குப் பிரகாரங்களாயிருக்கின்றன. இந்தமாதிரி நான்ஒருவனே பல வடிவாக இருப்பதால், எல்லாமாக இருப்பவன் நான் ஒருவன் என்று நினைத்துத் தியானம் செய்கிறார்கள். (19)

[illegible] —

त्रैविद्या मां सोमपाः पूतपापा यज्ञैरिष्ट्वा
स्वर्गतिं प्रार्थयन्ते । ते पुण्यमासाद्य सुरेन्द्र
लोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान् ॥ ॥௨௦॥

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पु
ण्ये मर्त्यलोकं विशन्ति । एवं त्रयीधर्ममनुप्रप
न्ना गतागतं कामकामा लभन्ते ॥ ॥௨௧॥

ऋग्यजुस्सामरूपास्तिस्रो विद्यास्त्रिविद्यम् । केवलं त्रिविद्यानिष्ठास्त्रैविद्याः, न तु त्रय्यन्तनिष्ठाः । त्रय्यन्तनिष्ठा हि महात्मानः पूर्वोक्तप्रकारेण निखिलवेदवेद्यं मामेव ज्ञात्वाऽतिमात्रप्रियमत्कीर्तनादिभिर्ज्ञानयज्ञेन च मत्प्राप्त्या मामेवोपासते । त्रैविद्यास्तु वेदोदितकेवलेन्द्रादियागशिष्टं सोमं पिबन्तः पूतपापाः स्वर्गादिप्राप्तिविरोधिपापात् पूताः केवलमिन्द्रादिदेवत्यतयाऽनुसंहितैर्यज्ञैर्वस्तुतस्तद्रूपं मामिष्ट्वा, तथाविधं मामजानन्तः स्वर्गतिं प्रार्थयन्ते । ते पुण्यं दुःखासंभिन्नं सुरेन्द्रलोकं प्राप्य, तत्र दिव्यान् देवभोगानश्नन्ति । ते तं विशालं स्वर्गलोकं भुक्त्वा तदनुभवहेतुभूते पुण्ये क्षीणे पुनरपि मर्त्यलोकं विशन्ति । एवं त्रय्यन्तविज्ञानविधुराः काम्यस्वर्गादिकामाः केवलं त्रयीधर्ममनुप्रपन्नाः गतागतं लभन्ते । अल्पास्थिरस्वर्गादीननुभूय पुनः पुनर्निवर्तन्त इत्यर्थः ॥ ॥௨௦-௨௧॥

அவ—பகவானை அநுபவிப்பது ஒன்றினாலே மாத்திரம் ஸாகல்யத்தை அடைகிற—மிகவும் பெரியவர்களான—ஞானிகளுடைய நடவடிக்கையை இப்படிச் சொல்லி, அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக, இப்படியான பலன்களை ஆசைப்படுகிற மூடர்களுடைய நடவடிக்கையைச் சொல்லுகிறார்—

உலகத்தில் அநேகம்பேர்கள் வேதத்தில் முன்பாகத்தில் சொல்லப்படுகிற இந்திரன் முதலான தேவதைகளை மாத்திரம் குறித்துச் செய்கிற ஸோமயாகங்களில், அவர்களுக்கு ஸோம ரஸத்தைக் கொடுத்து, அதின் மீதியைத்தாங்கள் சாப்பிட்டு, அதினால் ஸ்வர்க்கம் முதலானவைகளை அடைவதற்கு இடைஞ்சலான பாபங்களைப் போக்கி, ஸ்வர்க்கம் முதலான பலன்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். உண்மையில் அந்த தேவதைகளுக்கு ஆத்மாவாக இருக்கிற நான்தான் அந்த யாகங்களால் ஸந்தோஷமடைந்தேன். ஆனால் நான் ஆத்மா என்றும், நான்தான் ஸந்தோஷமடைந்தேன் என்றும், யாகம் செய்கிறவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் ஒருவித துக்கம் கலப்பில்லாத ஸுகமுள்ள தேவலோகத்தை அடைந்து, தேவதைகள் அநுபவிக்கிற உயர்ந்த ஸுகங்களை முன் செய்த புண்ணியங்களுக்குப் பலனாக அநுபவிக்கிறார்கள். இப்படி ஸ்வர்க்கலோகத்தில் கிடைக்கும் பெரிதான ஸுகங்களை அநுபவித்து, அந்த அநுபவத்துக்குக் காரணமான புண்ணியம் செலவழிந்த பிறகு மறுபடியும் இந்த மனிதலோகத்திற்கே வருகிறார்கள். வேதத்தின் கடைசியான உபநிஷத்துக்களில் சொன்ன ஸங்கதிகளை அறியாமல், இப்படி மிகவும் இளப்பமான ஸ்வர்க்கம் முதலான பலன்களை ஆசைப்பட்டு, வேதத்தில் முன்பாகத்தில் சொன்ன தர்மங்களை மாத்திரம் செய்து, [1] அல்பமாயும் நிலையில்லாததுமான ஸ்வர்க்கம் முதலான ஸுகங்களை அநுபவித்து, திரும்பித் திரும்பி வருகிறார்கள். [20–21]

ஸ்வ— மஹாத்மநஸ்து நிரதிசயப்ரியாநவதிகாதிசய [illegible] ஸ்வாநந்யாவத [illegible] தேஷாம் விசேஷம் தர்சயதி—

---

1 தேவலோகத்தில் ஸுகத்தை அநுபவிக்கும்போது, அது அதைக்காட்டிலும் மேலான பிரும்மா முதலானவர்களுடைய ஸுகங்களை நினைக்கும்போது, கொஞ்சமாயிருப்பதாலே, துக்கமாகத் தோன்றும். அது நிலையில்லாதிருப்பதை நினைக்கும்போது, இன்னம் துக்கமாயிருக்கும். அது முடியும்போது மிகவும் துக்கமாயிருக்கும். பிறகு எத்தசாலபோல் போவது வருவது, திரும்பிவந்து கர்ப்பத்தில் இருப்பது, வியாதியினால் கஷ்டப்படுவது, சாகத்தில் கஷ்டத்தை அநுபவிப்பது இவை முதலான கஷ்டங்களைச் சொல்லத் [illegible] முடியாது.

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 |
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ||

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌃- 𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌃- 𑌮𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌆𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌲𑌾𑌭𑌾𑌤𑍍 𑌮𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑍈𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾 𑌮𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌯𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 - 𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇-𑌅𑌨𑍍𑌯𑍂𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 | 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂-𑌮𑌯𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍋𑌗𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑍍, 𑌅𑌹𑌂 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑍋𑌗𑌮𑍍, 𑌅𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌂 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌚 𑌵𑌹𑌾𑌮𑌿 || ||௨௨||

அவ—கீழ்ச் சொன்ன பெரியோர்களாவென்றால், அளவில்லாத ஸுகமான என்னுடைய தியானத்தைச் செய்து, அளவில்லாத ஆநந்தமான என்னை அடைந்து, மறுபடியும் இந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லை என்று அவர்களுடைய 1 பெருமையைக் காண்பிக்கிறார்—

பெரியோர்கள் ஒரு விநாடிகூட என்னை நினைக்காத போனால் தாங்காமல், என்னை நினைப்பதையே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பிரயோஜநமாக எண்ணி, எல்லா உயர்ந்த குணங்களோடும், எல்லா ஸொத்துக்களோடும்கூடின என்னை ஒன்றையும் விடாமல் தியானம் செய்கிறார்கள். எப்போதும் என்னுடனே இருக்கவேணுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற அவர்களை நான் என்னிடம் 2 அழைத்துக் கொண்டு, அளவில்லாத ஸுகத்தைக் கொடுத்து, அந்த ஸுகத்திற்கு ஒரு குறைவும் வாராதபடி பண்ணுகிறேன். [ 22 ]

1. அந்தப்பெருமைக்கு இரண்டு காரணம்—1 அவர்கள் செய்யும் உபாயமும் ஸுகமாயிருப்பது. 2 அவர்கள் அடையும் பலனும் அறிவில்லாததும், ஒருவிதக்குற்றமில்லாததும், அளவில்லாததுமான ஆநந்தமாயிருப்பது.

2. சுலோகத்தில் "யோகக்ஷேமம்" என்று சொல் இருக்கிறது. யோகம் என்றால் புதிதாய் ஒன்றைக் கொடுப்பது. க்ஷேமம் என்றால், அதைக் குறைவில்லாமல் காப்பாற்றுகிறது. மோக்ஷத்தை ஆசைப்பட்ட

யேऽப்யந்யதேவதாபக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: |
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் || ||23||

யே த்விந்த்ராதிதேவதாபக்தா: கேவலத்ரயீநிஷ்டா: ஶ்ரத்தயாந்விதா: இந்த்ராதீந் யஜந்தே, தேऽபி பூர்வோக்தேந ந்யாயேந ஸர்வஸ்ய மச்சரீரதயா மதாத்மகத்வேந இந்த்ராதிஶப்தாநாம் ச மத்வாசித்வாத் மாமேவ யஜந்தே | அபித்வவிதிபூர்வகம் யஜந்தே—இந்த்ராதீநாம் தேவதாநாம் மச்சரீரதயா ஸ்வயம் யதாவதஜ்ஞாத்வா 'சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:' இத்யாதீநி விததி; ந தத்பூர்வகம் யஜந்தே | வேதாந்தவாக்யஜாதம் ஹி பரமபுருஷஶரீரதயா அவஸ்திதாநாம் இந்த்ராதீநாம் ஆராத்யத்வம் விதததாத்மத்வஸ்ய பரமபுருஷஸ்யைவ ஸாக்ஷாதாராத்யத்வாதிவிஷயாணி | சதுர்ஹோதார: க்ருஷ்ணோதரஸம்பவந்த ஸாதீநி கர்மாணி, யத்ர பரமாத்மந்யாத்மதயாவஸ்திதே ஸந்த்யேவ தச்சரீரபூதேந்த்ராதிதேவைஸ் ஸம்பதம் கச்சந்தி—இந்த்ராதிதேவாநாம் ஆராதநாந்யேதாநி கர்மாணீதி ஜ்ஞாநம் ஸம்பதம் கச்சந்தீத்யர்த்த: || ||23||

அவ—எல்லா தேவதைகளும் பகவானுக்கு உடம்புகள் தானே. ஆகையால் 20-வது சுலோகத்தில் சொன்னபடி யாகம் செய்கிறவர்கள் பகவானைத்தானே ஸந்தோஷப் படுத்துகிறார்கள். இது பகவானுக்குத் தெரியுமே. அவர்களுக்கும் ஏன் பகவான் மோக்ஷத்தைக் கொடுத்து, அதைக் குறைவில்லாமல் காப்பாற்றக் கூடாது? என்றால், பதில் சொல்லுகிறார்—

இந்திரன் முதலான தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய், வேதத்தில் முன் பாகத்தில் சொல்லிய கர்மங்களை மாத்தி

---

வர்களுக்கு வேறு ஸுகங்களைக் கொடுத்து, அவைகளைக் காப்பாற்றுவது நியாயமில்லை. ஆகையால் இங்கே யோகம் என்கிற சொல்லுக்கு பகவானை அடையும்படி செய்வதும், க்ஷேமம் என்கிற சொல்லுக்கு அதற்குக் குறைவு வாராமல் செய்வதும்—என்றுதான் பொருள் கொள்ளவேணும்.

ர்ம் சிரத்தையோடு செய்து, அவர்களை மாத்திரம் எவர்கள் ஸந்தோஷப்படுத்துகிறார்களோ, அவர்களும் என்னைத்தான் ஸந்தோஷப்படுத்துகிறார்கள். ஏனென்றால், அந்த இந்திரன் முதலான தேவதைகள் என்னுடைய உடம்புகள். நான் அவர்களுக்கு ஆத்மா. அவர்களைச் சொல்லும் சொற்களுக்கும் நானே பொருள். ஆனால் அந்தக் கர்மங்கள் எனக்குப் பூஜை யென்றும், அவைகளால் நானே தான் ஸந்தோஷப்படுகிறேன் என்றும் அவர்கள் அறியவில்லை. உபநிஷத்து இந்திரன் முதலான தேவதைகளுக்கு கர்மங்கள் பூஜையாகும் விதத்தை எப்படிச் சொல்லுகின்றனவோ, அதைத் தெரிந்து அவர்கள் பூஜை செய்யவில்லை. உபநிஷத்துக்கள் - அந்தக் கர்மங்கள் பகவானுக்கு உடம்பான இந்திரன் முதலானவர்களுக்குப் பூஜையாயிருக்கின்றன; ஆகையால் அவர்களுக்கு ஆத்மாவான பகவானுடைய 1 பூஜையாகத்தான் ஆகிறது—என்று சொல்லுகிறது. [23]

𑌅𑌵 — 𑌅𑌤𑍋 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌆𑌰𑌾𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌆𑌰𑌾𑌧𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿, 𑌤𑍇 𑌚 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌫𑌲𑌭𑌾𑌗𑌿𑌨𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌶𑍍𑌚 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌦𑌾𑌹 —

𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 ।
𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥ ॥௨௪॥

𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 - 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌾 𑌚𑌾𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௨௪॥

அவ—ஆகையால் கீழ்ச்சொல்லியபடி வேதத்தினுடைய முன் பாகத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்கிறவர்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலான கர்மங்கள் இந்திரன் முதலான தேவதைகளுக்கு ஆத்மாவாயிருக்கிற பகவானுடைய பிரீதியை யுண்டுபண்ணுகிறவைகள்; இந்தக் கர்மங்களால் பகவான் தான் பிரீதியை அடைகிறான் என்று அறியவில்லை. அதனால் அந்தக் கர்மங்களால்

---

1. கலெக்டர் சேவகன் நம்முடைய வீட்டிற்கு வந்தால், அவனுக்கு மரியாதை கலெக்டரிடத்தில் கௌரவத்தினால் பண்ணுகிறோம். அவனுக்குப் பண்ணுகிற மரியாதை கலெக்டருடையதுதான். அதுபோல.

கொஞ்சமாயும் நிலையில்லாதவைகளாயுமிருக்கிற பலன்களை அடைகிறார்கள் அடிக்கடி ஸம்ஸாரத்திற்குத் திரும்பியும் வருகிறார்கள் என்று சொல்லுகிறார்—

இந்திரன் முதலானவர்களை மாத்திரம் உத்தேசித்துப் பண்ணப்பட்ட யாகங்களுக்கும் 1 நான்தான் பலன் கொடுக்கிறேன். அவைகளால் ஸந்தோஷமடைகிறவனும் நான்தான். [24]

𑌅𑌵 — 𑌅𑌹𑍋 𑌮𑌹𑌦𑌿𑌦𑌂 𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍! — 𑌯𑌦𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍇𑌦𑍇𑌨 𑌕𑍇𑌚𑌿𑌦𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌫𑌲𑌭𑌾𑌗𑌿𑌨𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌶𑍍𑌚 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿। 𑌕𑍇𑌚𑌨𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌫𑌲𑌭𑌾𑌗𑌿𑌨𑍋𑌽𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌶𑍍𑌚 𑌭𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌹 —

𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍍 ॥

𑌵𑍍𑌰𑌤𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌾𑌚𑍀। 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌦𑌰𑍍𑌶𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌯𑌜𑌨𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌃, 𑌤𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿। 𑌯𑍇 𑌚 𑌪𑌿𑌤𑍃𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌯𑌜𑌨𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑍇 𑌚 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌃𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌦𑍀𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾 𑌭𑍂𑌤𑌯𑌜𑌨𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑍇 𑌤𑍁 𑌤𑍈𑌰𑍇𑌵 𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌪𑌿𑌤𑍃𑌭𑍂𑌤𑌶𑌰𑍀𑌰𑌕𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇, 𑌤𑍇 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 । 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌦𑍇𑌵𑌾𑌦𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍈𑌸𑍍𑌸𑌹 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂 𑌭𑍋𑌗𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌾𑌲𑍇 𑌤𑍈𑌸𑍍𑌸𑌹 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑌸𑍍𑌤𑍁

1. இந்திரன் முதலானவர்களை மாத்திரம் ஸந்தோஷப் படுத்துகிறோமென்று நினைத்துச்செய்யப்பட்டகர்மங்களுக்கும், என்னுடைய ஆராதநம் என்று நினைத்துச் செய்யப்பட்ட கர்மங்களுக்கும் நான்தான் பலன் கொடுக்கிறேன். அவைகளுக்குப் பலன் கொடுக்கிறவன் வேறு; இவைகளுக்குப் பலன் கொடுக்கிறவன் வேறு என்று எண்ணக்கூடாது.

[illegible — three lines of Sanskrit verse/commentary in Grantha script] ॥ ॥ ௨௫ ॥

அவ—இதென்ன பெரிய ஆச்சரியம்! ஒரே வேலையை இரண்டு பேர்கள் செய்கிறார்கள். அவர்களுடைய நினைவின் தாரதம்மியத்தினால், ஒருவன் மிகவும் கொஞ்சமான நிலையில்லாத பலனை அடைந்து, மறுபடியும் பூமியில் பிறக்கிறான். மற்றொருவன் எல்லையில்லாமல் உயர்த்தியுள்ள—அழிவில்லாத—மஹாநந்தமான பரமபுருஷனாகிற பிரயோஜநத்தை அடைந்து, மறுபிறப்பில்லாமல் இருக்கிறானென்று சொல்லுகிறார்—

தர்சம், பூர்ணமாஸம் முதலான கர்மங்களாலே இந்திரன் முதலான தேவதைகளை ஸந்தோஷப் படுத்துகிறேன் என்று நினைத்து, எவர்கள் அந்தக் கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் இந்திரன் முதலான தேவதைகளிடம் போகிறார்கள். அதே மாதிரி பித்ருக்களையும், யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுக்கள், பிசாசங்கள் முதலான பிராணிகளையும் உத்தேசித்து, அந்தந்தக் கர்மங்களைச் செய்கிறவர்கள் அவரவர்களிடம் போகிறார்கள். எவர்கள் அந்தக் கர்மங்களாலேயே இந்திரன் முதலான தேவதைகளுக்கும், பித்ருக்களுக்கும், யக்ஷஸ்ஸு முதலான பூதங்களுக்கும் ஆத்மாவான பகவானான வாஸுதேவனை ஸந்தோஷப் படுத்துகிறோம் என்று நினைத்து, அந்தக்கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் என்னிடம் வருகிறார்கள். தேவர் முதலானவர்களை அடைந்தவர்கள் அவர்களுடனேகூட கொஞ்ச ஸுகத்தை அநுபவித்து, அவர்கள் சாகிறபோது அவர்களுடன்கூடச் சாகிறார்கள். என்னை ஸந்தோஷப்படுத்துகிறவர்கள் 1 பிறப்பும் சாவுமில்லாத—எல்லாம்

1. மற்றவர்கள் ஏன் திரும்பிவருகிறார்கள் என்றால், அவர்கள் அடையும் தேவதைகளுக்கு அழிவுண்டு. அவர்களுக்குத் தங்கள் இடத்தில் நிலையாயிருப்பதற்கு இடஞ்சல் இன்னதென்று தெரியாது. தெரிந்தாலன்றோ போக்கலாம். போக்க சக்தியும் கிடையாது. பகவானுக்கோ அழிவில்லை, அவன் எல்லாம் அறிந்தவன். அவனுக்கு ஒரு கஷ்ட

தெரிந்த—நினைத்தபடி நடத்துகிற-ஸமுத்திரத்தில் ரத்னங்கள் போல அளவில்லாமல் உயர்ந்த-கணக்கில்லாத-நல்ல குணங்கள் கூட்டம் கூட்டமாய் இருக்கிற-அளவில்லாத ஆநந்தமான-என்னை அநுபவித்துத் திருப்புகிறதில்லை. [ 25 ]

𑌅𑌵 — 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌯𑌮𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌹 —

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ ॥௨௬॥

𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌲𑌭𑌂 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌾 𑌫𑌲𑌂 𑌵𑌾 𑌤𑍋𑌯𑌂 𑌵𑌾 𑌯𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿-𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍋 𑌯𑍋 𑌮𑍇 𑌪𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌦𑌦𑌾𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌤𑍍𑌵𑌰𑍂𑌪𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑌸𑌃 𑌤𑌤𑍍—𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑍍, 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑍁𑌦𑌯𑌵𑌿𑌭𑌵𑌲𑌯𑌲𑍀𑌲𑌃 𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋𑌽𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌯𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌗𑌣𑌃 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌮𑌨𑍋𑌰𑌥𑌪𑌥𑌦𑍂𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍇𑌵𑌾𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌧𑌰𑍍𑌮𑍇 "𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌗𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌵𑍈 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍" 𑌇𑌤𑌿 ॥

அவ—என்னைப் பூஜிப்பவர்களுக்கு இன்னொரு விசேஷமும் இருக்கிறதென்று சொல்லுகிறார்—

எல்லாருக்கும் ஸுலபமாக அகப்படக் கூடியதான இலையையோ, அல்லது பூவையோ, அல்லது பழத்தையோ, அல்லது ஜலத்

---

த்தையும் போக்க சக்தியுள்ளவன். ஆகையால் அவனிடம் போனவர்கள் திரும்பி வருவதில்லை. அவனிடத்தில் போனவர்கள் அடையும் ஸுகத்திற்கு அளவில்லை. பகவான் ஒருவனுக்கும் உட்படாதவனுகையாலே, திருப்பி விடுவேனென்கிற ஸந்தேஹமும் வேண்டியதில்லை. "பக்தர்களைத் திருப்பி அனுப்புகிறதில்லை" என்கிற எண்ணத்தையும் தவறாமல் நிறைவேற்றுகிறவன்.

தையோ, 1 எவன் 2 பக்தியுடன் கொடுக்கிறானோ, 3 நல்ல மன துடன் மிகுந்த பிரீதியோடு கொடுக்கப்பட்ட அதை எனக்கு நெடுநாளாய் ஆசைப்பட்டுக்கிடைக்காமலிருந்து கிடைத்தது போலும், ஒருக்காலும் கிடைக்காதது கிடைத்தது போலும் ஸந்தோஷப்பட்டு, சாப்பிடுகிறேன். அதாவது-அதைத் தகுந்தபடி அநுபவிக்கிறேன். பக்தியோடு கொடுப்பதாவது—என்னிடத்தில் அளவில்லாத பிரீதியாலே அதை எனக்குக் கொடுக்காவிட்டால் ஆத்மா தாங்காமல், அதினால் ஒரு காரியம் ஆகவேணுமென்று நினைக்காமல், கொடுப்பதையே பிரயோஜநமாக எண்ணிக் கொடுப்பது. 4 நான் எல்லா உலகங்களுக்கும் மஹாராஜாவாயும், எல்லா உல

---

1. "எவன்" என்று பொதுவாய்ச் சொன்னதாலே, குற்றம்பண்ணினவனோ, குற்றம் பண்ணாதவனோ, கெட்டிக்காரனோ, முட்டாளோ என்கிற பிரிவுகளைப் பகவான் பார்க்கிறதில்லையென்று காட்டப்படுகிறது.

2 இதனால் ஒரு பலனை அடைவதையும், ஒரு தோஷத்தைப் போக்குவதையும் நினைக்காமல் கொடுக்க வேண்டியதென்று காட்டப்பட்டது.

3 மனதுக்கு நன்மையாவது—அவைகளைக் கொடுப்பதையே பிரயோஜநமாக நினைக்கையாகிற தெளிவுள்ளதாயிருக்கை. சுலோகத்தில் "பிரயத" என்ற சொல் இருக்கிறது. அதற்கு சுத்தமான என்று பொருள். சுத்தியாவது—புண்ணியமான வேலைகளைச் செய்யும்போதும், அவைகளால் மோக்ஷம் தவிர வேறு பலனை அடைய வேணுமென்று எண்ணாமை.

4 மிகவும் இளப்பமான இலைமுதலான வஸ்துக்கள்பகவானுக்குத் தகுந்தவைகளன்று என்று காட்டுவதற்காக, சுலோகத்தில் "நான்"என்கிற சொல் அவன்பெருமையைச் சொல்லுகிறதென்று ஸ்ரீபாஷ்யகாரர் சொல்லுகிறார். (1) இந்திரன் முதலான தேவதைகள் தங்களுடைய சக்தி வளருவதற்காக யாகங்களில் கொடுக்கிற ஹவிஸ்ஸுக்களைப்பெற்றுக் கொள்ளுகிறார்கள்; மனிதன் சோறு தின்பதுபோல பகவான் அப்படியன்று. அவன் எல்லா லோகங்களையும் எப்போதும அடக்கி ஆளுகிற சக்தியுள்ளவன். அதை வளர்க்க வேண்டியதில்லை. இயற்கையாகவே இருக்கிறது. (2) யாரும் அவனால் உண்டுபண்ணப்பட்டவைகளைத்தான் அவனுக்குக் கொடுக்கிறார்கள். கொடுப்பதற்கு முன்பும் அவனதுதான்

களங்களையும் நினைத்த மாத்திரத்தாலே விளையாட்டாக உண்டு பண்ணி, காப்பாற்றி, அழிக்கிறவனாயும், நினைத்தமாத்திரத்தில் எல்லா பதார்த்தங்களையும் அடையக் கூடியவனாயும், நினைத்தபடி நடத்துகிறவனாயும், அளவில்லாமல் உயர்ந்த கணக்கில்லாத நல்ல குணங்களைக்கூட்டம் கூட்டமாயுடையவனாயும், அளவில்லாமல் உயர்ந்த—இயற்கையாயிருக்கிற—ஆநந்த ரூபமான—என்னை அநுபவித்துக் கொண்டிருப்பவனாயு மிருந்தபோதிலும், அவன் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு அளவில்லாத ஸந்தோஷத்தை யடைகிறேன் மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில் அப்படியே சொல்லியிருக்கிறது—பகவானைத் தவிர வேறு தேவதையையும், பகவானிடத்திலும் அவனைத் தவிர வேறு பிரயோஜநத்தையும் நினைக்காதவர்கள் அவனை உத்தேசித்து எந்த வேலைகளைசெய்தாலும்,

---

அவைகள். (3) யார் எதைக் கொடுத்தாலும், அது அவனுக்கு வேண்டியதில்லை. அவன எல்லாம் நிறைந்தவன். (4) உலகத்தில் ஒருவனால் அடையமுடியாத வஸ்துவை அவனுக்கு மற்றொருவன் கொடுத்தால், அதை ஸந்தோஷமாக வாங்கிக் கொள்ளுவன். நினைத்தமாத்திரத்தில் எல்லா காரியத்தையும் முடிக்கக்கூடிய பகவானால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. (5) ஒருவனுக்கு ஸந்தோஷக் குறைவு இருந்தால், ஒன்றைக்கொடுத்து அந்த ஸந்தோஷக் குறையைத்தீர்க்கலாம். பகவானோ, அவனுடைய ஸ்வரூபத்தையும், குணங்களையும் பார்த்து, அளவில்லாத ஆநந்தத்தை அநுபவிக்கிறான். அவனுக்கு ஒருவர் கொடுக்கிற பதார்த்தங்களால் என்ன அதிக ஸந்தோஷமுண்டாகப் போகிறது (6) பகவானுக்கு இவ்விதமான ஆநந்தம் நேற்று இருந்தது, இன்றைக்கு இல்லையென்றால், அதை மறுபடியும் வருவிப்பதற்காக ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும் அவனுக்கு இருக்கும் ஆநந்தமோ ஒரு நாளும் போகக் கூடியதல்ல. இயற்கையாகவே யிருக்கிறது. இப்படி எந்த விதத்தாலும் ஒரு பதார்த்தத்தாலும் பகவானுக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. இப்படி யிருந்த போதிலும், கையாலாகாத பசித்தவன் எங்கே கஞ்சி வருகிறதென்று எதிர்பார்த்து, வந்ததை ஆவலுடன் எப்படி வாங்கிக் கொள்ளுவனோ, அப்படி பக்தன் கொடுத்த எதையும் ஆவலுடன் பகவான் பெற்றுக் கொள்ளுகிறான். அவனுக்குப் பதார்த்தம் பெரிதன்று. பக்திதான் வேண்டியது—என்று "நான்" என்கிற சொல்லாலே காட்டப்பட்டது.

அந்த வேலைகளை அவன் 5 தானாகவே தலையாலே வணங்கிப் பெற்றுக்கொள்ளுகிறான்—என்று. 6 [26]

---

5 பகவானுக்குக் கொடுக்கவுயர்ந்த வஸ்துக்கள் அகப்படாமல், ஒருவன் இலைமுதலானவைகளைச் சாப்பிடவேணுமென்று கொடுத்தால், அதைப் பகவான் அமிருதத்துக்கு மேற்பட்டதாக நினைத்துச்சாப்பிடுவன். இப்படி பகவான்செய்வதற்கு பக்தன் "சாப்பிடத்தகுந்த வஸ்துக்கள் கொடுப்பதற்குஇல்லையே, இலையைச்சாப்பிடச் சொல்லவேண்டியிருக்கிறதே" என்று அளவில்லாமல் வருத்தப் படவேண்டியது. துர்வாஸ மஹருஷி இருபத்தைந்து நாழிகைக்குப்பலபேர்களுடன் வந்து, தர்மபுத்திரனை ஆஹாரம் போடவேணுமென்று கேட்டபோது, திரௌபதி பகவானைப் பிரார்த்திக்க, அக்ஷயபாத்திரத்தில் ஒட்டியிருந்த சிறு கீரையினால் பகவான் ஸந்தோஷமடைந்தானும். அப்படியே கஜேந்த்ராழ்வான் கொடுத்த புஷ்பத்தினாலும், சபரியென்ற வேடச்சி கொடுத்த பழத்தாலும், குசேலர் கொடுத்த அவலினாலும் அளவில்லாத ஸந்தோஷத்தை அடைந்தான்.

6 11-வது சுலோகம் முதல் இந்த சுலோகம் வரையில் ஞானிகளின் பெருமையைக் காட்டுவதற்காக, மற்றவர்களின் இளப்பம் சொல்லப்பட்டது. அவர்கள் மூன்று ஸங்கதிகளால் இளப்பமானவர்கள். (1) பகவானை உள்ளபடி அறியாமல், அவனுடைய மனித உருவத்தைப்பார்த்து அலக்ஷியம் பண்ணுகிறார்கள். இது 7-வது அத்தியாயம் 24-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது. இங்கே அதிகமாய்ச் சொல்லுவது என்னவென்றால், அவர்கள் என்ன வேலைகளை ஆரம்பித்தாலும், முடிவிற்கு வரமாட்டாது. முடிவுக்கு வந்தாலும், பலன் கிடைக்காது—என்பது. இது 12-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது (2) அவர்கள் ஸ்வர்க்கம் முதலான தாழ்ந்தபலன்களை அடையவேணுமென்று ஆசைப்பட்டு, பகவானுடைய உடம்புகளான தேவதைகளை மாத்திரம் ஸந்தோஷப்படுத்துகிறார்கள் என்றும், அவர்கள் அடையும் பலன்கள் கொஞ்சம் என்றும் 7-வது அத்தியாயத்தில் 20-வது சுலோகம் முதல் நான்கு சுலோகங்களால் சொல்லப்பட்டது. இங்கே அதுவே 20—21-வது சுலோகங்களில் சொல்லப்பட்டது. இவர்கள் செய்யும் யாகங்களையே ஞானிகள் செய்து பகவானிடம்போய், ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லையென்றும், இப்படிபகவான் அவரவர்களின் நினைவுக்குத் தக்கபடி ஒரே மாதிரி கர்மங்களுக்கே வெவ்வேறு பலன்களைக் கொடுக்கிறான் என்றும் காட்டுவது அதிகமான ஸங்கதி. (23-24-25 சுலோகம்) (3) ஞானிகளைத் தவிர மற்றவர்கள்-வேதத்தில் எந்த எந்த பதார்த்தங்களைக்கொண்டு தேவதைகளை ஸந்தோஷப்படுத்த வேணுமென்று சொல்லியிருக்கிறதோ, அவைகளையே தேடிக்கொடுக்க வேண்டியது. அவைகள்

ஏவம்— யஸ்மாத் ஜ்ஞாநிநாம் இதரேஷாம் சாராதநப்ரகார வைஷம்யம் விசேஷ:, தஸ்மாத் த்வம் ச ஜ்ஞாநீ பூத்வா உக்தலக்ஷண பக்திஸஹித: ஆத்மீய: கீர்த்தநயஜநார்சநப்ரணாமாதிகம் ஸததம் குர்வாணோ லௌகிகம் வைதிகம் ச நித்யநைமித்திகம் கர்ம ச உபயம் குர்வித்யாஹ—

யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் |
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் || ||௨௭||

யத்-தேஹயாத்ராசேஷபூதம் லௌகிகம் கர்ம கரோஷி, யச்ச தேஹதாரணாயாச்நாஸி. யச்ச வைதிகம் ஹோமதாநதப:ப்ரப்ருதி நித்யநைமித்திகம் கர்ம கரோஷி, தத்ஸர்வம் மதர்பணம் குருஷ்வ. அர்ப்யத இத்யர்பணம், ஸர்வஸ்ய லௌகிகஸ்ய வைதிகஸ்ய ச கர்மண: கர்த்ருத்வம் போக்த்ருத்வம் ஆராத்யத்வம் ச யதா மயி ஸமர்பிதம் பவதி, ததா குரு | ஏததுக்தம் பவதி—யஜ்ஞதாநாதிஷ்வாராத்யதயா அந்வீயமாநாநாம் தேவாதீநாம் கர்த்ருத்வம் போக்த்ருத்வம் ச ஆதீயதயா ஆத்மஸ்வரூபஸ்யாபி மத்ப்ரவர்த்யதயா ச ஆ

அகப்படாவிட்டால, எந்தப் பதார்த்தங்களை அவைகளுக்குப் பதிலாக (பிரதிநிதி) வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி யிருக்கிறதோ, அவைகளையே ஸம்பாதிக்க வேணும். ஞானிகளுக்கு அப்படி ஒருவிதக் கட்டுப்பாடில்லை. அவர்கள் எதைக் கொடுத்தாலும், பகவான் பெற்றுக் கொள்ளுகிறான். சுலோகத்தில் சொன்ன இலை முதலானவைகளையெல்லாம் சேர்த்துக் கொடுக்க வேண்டியது என்று பொருளல்ல. ஏதாவதொன்றைக் கொடுத்தால் போதும். இப்படியே—பூர்ண கும்பத்தை (ஜலம் நிறைந்த குடத்தை) க்காட்டுவதையும், திருவடியில் தீர்த்தத்தைச் சேர்ப்பதையும், "ஸௌக்கியமாய்வந்தீரா" என்று கேட்பதையும் தவிர, பகவான் வேறொன்றையும் விரும்புகிறதில்லை என்று சொல்லி யிருக்கிறது. பகவான் அவ்வளவு ஸுலபனாயிருக்கிறான். ஞானிகளுக்கும் மற்றவர்களுக்கும் அடைய வேண்டிய பலன்களில் வித்தியாஸமிருப்பது போல, செய்ய வேண்டிய உபாயத்திலும்வித்தியாஸம் இருக்கிறதென்று இந்த சுலோகம் சொல்லுகிறது. ஞானிகளுக்கு வரும் பலன் எல்லா விதத்தாலும் உயர்ந்தது. மற்றவர்களுக்கு வரும் பலன் எல்லா விதத்தாலும் தாழ்ந்தது. ஞானிகள் செய்யும் உபாயம் மிகவும் லகுவானது. மற்றவர்கள் செய்யும் உபாயம் மிகவும் கஷ்டமானது.

मय्येव सर्वशेषिणि सर्वकर्तरि सर्वं च कर्तारं स्वात्मानमाराधकं च, आराध्यं च देवताजातं आराधनं च कृत्स्नं समर्पय । तव [illegible] [illegible] इति ॥ ॥௨௭॥

அவ—ஞானிகள் என்கிற பெரியோர்களுடைய பெருமையை என்னால கூட மனதால் நினைக்கவும், வாயால் சொல்லவும் முடியாது. ஆகையால் நீயும் ஞானியாக ஆகி, கீழே சொன்னபடி பக்தி தாயகாமல், நீயும் உன்னைச்சேர்ந்தவர்களும் என்னை வணங்கி, வாயால் என் பெயர்களைச்சொல்லி, உடம்பினால் என்னை நமஸ்காரம் பண்ணுவது முதலான வேலைகளைச் செய்துகொண்டு, சாப்பிடுவது முதலானஉலகத்தைச்சேர்ந்த வேலையையோ, வேதத்தில் சொல்லிய ஸந்தியாவந்தநம் முதலான நித்தியம்-நைமித்திகம் என்று சொல்லப்படுகிற கர்மங்களையோ, எல்லாவற்றையும் நான் மேல்சொல்லப் போகிறபடி செய் என்று சொல்லுகிறார்—

1 சாப்பாட்டுக்காக பணம் ஸம்பாதிப்பது முதலான வேலைகளையும், உடம்பு இருப்பதற்காகச் சாப்பிடுவது முதலான வேலைகளையும், வேதத்தில் சொல்லிய ஹோமம், தானம், தபஸ்ஸு முதலான நித்திய நைமித்திகங்களையும், அதாவது எல்லாவற்றையும், நீ என்னிடத்தில் கொடு. யாகம்-தானம் முதலான கர்மங்களினாலே ஸந்தோஷத்தை அடைகிற தேவதைகளும், கர்மங்களைச் செய்து ஸுகத்தை அநுபவிக்கிற நீயும் என்னுடைய ஸொத்து. எல்லாஉலகங்களுடைய ஸ்வரூபமும், இருப்பும், வேலைகளும்என் அதீனமாய் இருக்கின்றன. ஆகையால் எல்லா உலகங்களுக்கும் உயர்ந்தசேஷி (பாத்யஸ்தன்) ஆயும், எல்லா வேலைகளையும் நடத்திவைக்கிறவனாயும் இருக்கிறேன். வேலை செய்து தேவதைகளை

---

1, ஞானிகளுடைய பெருமை சொல்லப்பட்டது. மேலே பக்தி யோகத்தைச் சொல்லுவதற்காக அதற்கு உதவியான நினைவு விதிக்கப் படுகிறது. இது 3-வது அத்தியாயத்தில் 30-வது சுலோகத்தில் முன்பே சொல்லப்பட்டது. அந்த இடத்தில் கர்மயோகத்திற்கு உதவியாகச் சொல்லிற்று. இங்கே பக்தியோகத்துக்குஉதவியாகச்சொல்லப்படுகிறது.

ஸந்தோஷப்படுத்தி. ஸுகத்தை அநுபவிக்கிற உன்னையும், ஸந்தோஷப்படுத்தப்பட்ட எல்லா ஜந்துக்களையும், ஸந்தோஷத்தையுண்டுபண்ணுகிற எல்லாவேலைகளையும் என்னிடத்தில் கொடு. அதாவது- எல்லாம் என் அதீநம் என்றும், என்னுடையஉபயோகத்திற்காகவே இருக்கிறதென்றும் மிகுந்த பிரீதியுடன் நினை [27]

ஶுபாஶுபஃலைரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தநை: ।
ஸந்ந்யாஸயோகயுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥

ஏவம் ஸந்ந்யாஸாக்யயோகயுக்தமநா: க்ருத்ஸ்நம் ஶேஷதாரதியாத்மைகஸ்வம் கர்ம ச ஸர்வம் மதாராதநரூபம் ஸந்த்யஜந் லௌகிகம் வைதிகம் ச கர்ம குர்வந். ஶுபாஶுபஃலைரநந்தை: ப்ராசீநகர்மபந்தநைர்மத்ப்ராப்திவிரோதிபிஸ்ஸர்வைர்மோக்ஷ்யஸே । தைர்விமுக்தோ மாமேவோபைஷ்யஸி ॥ ||௨௮||

கீழ்ச்சொன்னபடி எப்பொழுதும் உன்னை என் அதீநமாகவும், என்னுடைய உபயோகத்துக்காகவே இருக்கிறவனாகவும், நீ செய்கிற எல்லாவேலைகளும் என் பிரீதிக்காகத்தான் என்றும் [1] நினைத்து, உலகத்து வேலைகளையும், சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளையும் நீ செய்தால், துக்கத்தையும், மட்டமான ஸுகத்தையும் கொடுக்கக்கூடியவைகளாயும், நெடுநாளாய் வந்தவைகளாயும், கணக்கில்லாதவைகளாயும், என்னிடத்தில் வரவொட்டாமல்பண்ணுகிறவைகளுமான புண்ணியம்-பாபம் என்று சொல்லப்படுகிற

---

1. சுலோகத்தில் “ஸந்நியாஸயோக” என்கிற சொல் இருக்கிறது. இதில் “ஸந்நியாஸ” என்கிற சொல் ஞானயோகத்தையும், “யோக” என்கிற சொல் கர்மயோகத்தையும் சொல்லவில்லை “யோக” என்கிற சொல்லுக்கு இந்த இடத்தில் நினைவு என்று பொருள் எந்த நினைவு என்றால் கீழ் சுலோகத்தில் சொல்லப்பட்ட ஸமர்ப்பணமாகிற நினைவு-அதாவது-செய்யப்படும் வேலையையும், வேலை செய்வதையும் அதின் பலனையும் பகவானிடத்தில் கொடுப்பது இதுதான் “ஸந்நியாஸ” என்கிற சொல்லால் சொல்லப்படுகிறது.

*எல்லா கர்மங்களும் உன்னைத் தன்னடையே விட்டுப்போய்விடும். அவைகள் போய்விட்டால், 1 என்னையே அடைவாய்.* [28]

[illegible]

[illegible]

*அவ—உலகத்தில் என்னைத் தவிர வேறு ஒருவரிடத்திலும் இல்லாமல், எனக்கு மாத்திரமுள்ள-மிகவுமுயர்ந்த-2 ஒரு ஸ்வபாவத்தைச் சொல்லுகிறேன் கேள்—*

உலகத்தில்—தேவர்கள்—மனிதர்கள்—மாடு முதலானவைகள்—மரம் முதலானவைகள்—இப்படி நாலுவகைப்பட்ட பிராணிகளுக்

---

1. பகவான்-வேலைகளைச் செய்விப்பதுபோலும், பலனைக்கொடுப்பதுபோலும் பலனாகவுமிருக்கிறான் என்று இத்தால் காட்டப்படுகிறது. இதற்கு வேறு விதமாயும் அர்த்தம் பண்ணலாம். அதாவது—வேறு பலனை நடுவில் அநுபவித்து, தாமதமில்லாமல் நேராகவே அவனிடம் போவது—என்று.

2. 26-வது ச்லோகத்தில்—இலை முதலான வஸ்துக்களை இது கிடைக்கக் கூடியது, இது கிடைக்கக்கூடாதது. இதுஉயர்ந்தது-இது

குள்ளே சிலர் 1 பிறப்பினுலும், உருவத்தினுலும், ஸ்வபாவத்தினு லும், அறிவினுலும் மிகவும் உயர்ந்தவர்களாயும், சிலர் இளப்ப மானவர்களாயும் இருக்கிறுர்கள். அவர்கள் 2 என்கிட்ட வரும் விஷயத்தில் அவர்களெல்லாரிடத்திலும் நான் ஒரேமாதிரியாயி ருக்கிறேன். அதாவது—இவன் பிறப்பு முதலானவைகளாலே மிகவும் இளப்பம். என்னிடம் வரக்கூடாது, என்று நினைத்து என்னிடம் வந்தவனை அருவருப்புப் பட்டு நான் விடமாட்டேன் அப்படியே என்னிடம் வந்தான் என்கிறது தவிர, இவன் பிறப்பு முதலானவைகளாலே மிகவுமுயர்ந்தவன் என்று அவனுடைய உயர்த்தியைப்பார்த்து,அவனை நான் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை

தாழ்ந்தது-என்று தாரதம்மியங்களைப் பார்க்காமல் பெற்றுக் கொள்ளு கிறுன் பகவான்—என்று சொல்லப்பட்டது. இதனுல் பகவான் ஸுலப னென்று சொன்னதாயிற்று. அதாவது அவனை ஸ்வாதீனப்படுத்து வது வருத்தமன்று என்று. அடுத்த சுலோகத்தில் ஒருவித நினைவைச் சொல்லி, அதனுல் பகவான் அதிகமாய் ஸந்தோஷப்படுகிறுன் என்று சொல்லப்பட்டது. அதனுல் பகவான் ஸுலபனுயிருக்கிறுன் என்றுகீழ்ச் சொன்னது உறுதிப்படுத்தப் பட்டது. 29-வது சுலோகத்தில்பக்தியண் ணுகிறவர்களுடைய பிறப்பு முதலானவைகளாலே உண்டாகும் தாரதம் மியங்களைக் கவனிக்காமல், பக்தர்களுடன்கலந்திருக்கிறுனென்று சொ ல்லப்படுகிறது. இதனுல் ஸௌசீல்யம்என்ற குணம் சொல்லப்பட்டதாக ஆகிறது. ஸௌசீல்யம் என்பது-மிகவும் தாழ்ந்தவர்களுடன் இடைவி டாமல் அருவருப்பில்லாமல் கலந்திருப்பது.

1. பிறப்பினுல் உயர்ந்தவன் தேவன். மட்டமானவன் மனிதன்; மனிதர்களுக்குள் பிராம்மணன் உயர்ந்தவன், சண்டாளன் தாழ்ந்தவன்; உருவத்தினுல் உயர்ந்தவன் அழகுள்ளவன்; தாழ்ந்தவன் குரூபி; ஸ்வ பாவத்தினுல் உயர்ந்தவன் ஸத்வகுணம் மேலிட்டவன்; ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டவன் தாழ்ந்தவன்.

2. தேவர்களும் பக்தியோகம் பண்ணலாம் என்று வேதாந்தத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மாடு முதலானவைகளுக்குள், கஜே ந்திராழ்வான் (யானை), ஸுக்ரீவன் (குரங்கு) முதலான மிகுந்த புண் ணியமுள்ளவர்கள் பகவானை அறிந்து அடைந்தார்கள் என்று பிரஸித்த ம். சாபத்தால் மரமாகப் பிறந்தவைகளுக்கு அறிவு இருந்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன. ஆகையால் பகவானை அடைவது எல்லா வகுப்பிலும் கூடும். அடைவது (ஸமாச்ரயணம்) என்பது மன தின் வேலை, அதாவது-நினைப்பது.

அந்த உயர்த்திக்காக அவனைக் கௌரவிக்கமாட்டேன். பின்னை என்னவென்றால், என்னிடத்தில் அளவில்லாத பிரீதியாலே என்னை நினைக்காமல் போனால் ஆத்மா தரிக்காமல், என்னை நினைப்பதையே பிரயோஜனமாக நினைத்து, எவன் பிரீதியுடன் என்னை நினைக்கிறானோ, அவன் எல்லாவிதத்தாலும் உயர்ந்திருந்தாலும், தாழ்ப்பமாயிருந்தாலும், 1எனக்கு ஸமானனானவன்போல் கூசமில்லாமல் என்னிடத்திலேயே இருக்கிறான். நானும் அவன் விஷயத்தில் என்னைக் காட்டிலும் உயர்ந்தவனிடத்தில் போலே (தகப்பனிடத்தில் நல்ல பிள்ளை இருப்பது போல) இருப்பேன் [29

அவ— தத்ராபி—

அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥ ௩௦ ॥

தத்ர தத்ர ஜாதிவிசேஷ [illegible] வாசேஷ: பரிஹரணீயஸ்து, [illegible] காரேண [illegible] ஸஜதே [illegible] வேத; ஸாதுரேவ ஸ: [illegible] ஸம்யக் வ்யவஸித: [illegible] தவாதத:? ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: [illegible] வ்யவஸாய

---

1. இங்கே ஒரு கேள்வி—பகவானை எல்லா விதத்தாலும் உயர்ந்தவனாகவும், யஜமானனாகவும் நினைத்துத் தியானம் [illegible] பகவானிடத்தில் தோழன்போல் எப்படியிருக்கக்கூடும் என்று. இதற்குப் பதில்—"நானும் இருப்பேன்" என்று. [illegible] திரியால் அவனிடத்தில் அவர்கள் தோழர்கள் [illegible]. தனனுடைய உயர்த்தியை நினைத்து அவர்கள் பயப்ப[illegible] அவன் இருக்கிறான். பகவான் இருக்கிற இருப்பிலே [illegible] முண்டாகிறதில்லை. பகவான் கோகுலத்தில் [illegible]. இடைச்சிகளால் கட்டுப்பட்டு அடிபட்டான். [illegible] யோட்டினான். ஆகையால் அவர்கள் பயப்படவில்லை. [illegible] ட்டினால் நடுங்குகின்றனர். கொண்டாடும்போது [illegible] வர்களிடத்தில் பயமில்லாதிருக்கின்றனர். கொண்டாட்டத்திலே பயம் போய்விடும்.

ஸாம்யஸ்லீதிக:, ஸர்வ ந நிகிலஜகதேககாரணஸ்ய த: ஸ
ரம் பூத்வா நாராயணபராவதாரவதிரஸ்மாகி ஜ்ஜ ஹரார ஜுத்
ஸாஹ்ய: ஜ்த பாரஜம் ஸ்வத்ருதித்தி ஸவெவுதுதுஷ்ராமா
யத் வ்ருதவ யஸேஹ க்ருத:, தக்தாயம் வாநந்ருவுயொஜநம்
தாஜ்ஞாரம் ஹஜநம் தவ்ருஹி, அதஷாயரெவ பஹாஜ்ஞெ
வ்ருஷ்டு! ஈஷிது வ்ருவஹாயெ தக்தாயெயு வொகஜூக்ஷாரஹஜெந
ஷம்வஜெ ஸதி சஷ்யாவாரவ்ருதிக ஜ்ஞஹு வெகக்ஷுருதி ந
ஹீஈயதாரநாஷரணீய:, கவி தாவைஹாஜ்ஜேவ்ருவ வெதியு:॥

---

எல்லாவிதத்தாலும் உயர்ந்த பகவான் ராமன்கிருஷ்ணன் முதலான அவதாரங்களில் இந்தமாதிரி இருந்தான். அவன் அப்படியிருந்தது-நாம் பகவானுடைய இந்த குணத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவனிடத்தில் அளவில்லாத பக்தி பண்ணுவதற்காகவும், நாமும் தாழ்ந்தவர்களிடத்தில் இப்படி இருப்பதற்காகவும் தான். பகவான் அப்படியிருந்ததை சொல்லுகிறோமேயொழிய கவனிக்கவில்லை. கவனித்தால் ஆழ்வார்கள் போல் தபிக்க மாட்டோமா? நாம் இருக்க வேண்டியதையும் கவனிக்கவில்லை. எல்லா விதத்திலும் உயர்ந்த பகவான் இப்படி இருக்கும்போது, ஒருவித உயர்த்தியுமில்லாமலிருக்கிற நாம் கர்வப்படுவதற்கு என்ன நியாயம். நம்மை இளப்பமென்று நாம் தெரிந்து கொள்ளாதவரையில், நமக்கு இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸுகமில்லை. நம்மால் பிறருக்கும் ஸுகத்தை யுண்டுபண்ண முடியாது. வித்வான் என்ற சொல்லுக்கு தன்இளப்பத்தை அறிந்தவன் என்றுதான்பொருள். இந்த நினைவைப் பகவானும் ஆசாரியர்களும் தான் உண்டுபண்ண வேண்டும்.

என்னுடைய பக்தர்களை என்னைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக நினைக்கிறேன் என்று பகவான் சொல்லுகிறபடியால், அவர்களுக்குள்ளே ஜாதி முதலியவைகளாலே தாரதம்மியம் வைப்பதுபகவானுக்கு இஷ்டமாகுமோ? என்றால், பதில்—இவ்விடம் பக்தியின் பெருமையையும், பக்தியினால் பகவானுக்கு எல்லாரிடத்திலும் ஒரே மாதிரி ஸந்தோஷமுண்டாகிற தென்பதையும் மாத்திரம் சொல்ல வந்ததேயொழிய, அவரவர்களுக்கு ஜாதி முதலியவைகளும், அதற்குத் தகுந்த நடவடிக்கைகளும் போய், எல்லாரும் ஒரேமாதிரியாக ஆகிறார்கள் என்று சொல்ல வந்ததன்று.

அவ—1 இன்னுமொரு ஸங்கதி.

ஒவ்வொரு ஜாதிக்காரர்கள் 2. இன்னின்னதைச் செய்யவேண்டும், இன்னின்னதைச் செய்யக்கூடாது என்று ஏற்பட்டிருக்கிறது. அந்தப்படி நடக்காமலிருக்கிற ஒருவன் 3. கீழ்ச்சொன்னபடி என்னிடத்தில் அளவில்லாத பிரீதியுடனே என்னைத் தியானம் பண்ணுவதொன்றையே பிரயோஜநமாக எண்ணித்தியானம் செய்தால், அவன் எனக்கு வேண்டியவர்களுக்குள் மிகவுமுயர்ந்தவன். அவனை யாரும் மரியாதை செய்யவேண்டும். அவன் முன்னால் சொல்லப்பட்ட ஞானிகளுக்கு ஸமானமானவன். தப்பாக நடக்கிறவனிடத்தில் உமக்கு எப்படி உயர்ந்த பிரீதி உண்டாயிற்று? நாங்கள் அவனைக் கொண்டாடுவது எப்படி? என்றால், பதில் சொல்லுகிறார். அவனுடைய எண்ணம் மிகவும் நல்லதாயிருக்கிறதன்றோ? அதாவது—பகவான் எல்லா உலகத்தையும், ஒருவனாகவே உண்டுபண்ணுகிறான். அளவில்லாமல் உயர்ந்தவன். அவன் நாராயணன்தான் என்று வேதம் சொல்லுகிறது. எல்லா லோகங்களும் அவன் ஸொத்து. அவன் எனக்கு 4 யஜமாநன்.

---

1. பகவானிடம் யாரும் போகலாம். அவன் யாரையும் சேர்த்துக் கொள்ளுவன். அவன் பக்தியைத்தான் பார்ப்பன். பிறப்பு முதலான தாரதம்மியங்களைக் கவனிக்கிறதில்லை என்று சொல்லப்பட்டது. இடத்தைப் பிசகையும் அவன் கவனிக்கிறதில்லையென்று இந்த சுலோகம் சொல்லுகிறது.

2. பிராமணனுக்கு மாம்ஸத்தைச் சாப்பிடுவதும், கள்ளைக் குடிப்பதும் கூடாது. சூத்திரனுக்கு அவைகள் குற்றமன்று. சூத்திரனுக்கு காராம்பசுவின் பாலைச் சாப்பிடுவது கூடாது. பிராம்மணனுக்கு அது நல்லது.

3. கீழ்ச் சொன்னபடி—16-வது சுலோகத்தில் சொன்னபடி.

4. மிகுந்த பாபியான என்னைத் தள்ளாமல், தன் பக்தர்களில் சேர்த்துக் கொண்டு, தன் ஸொத்தான என்னைத் தன்னிடம் கொண்டு போவதற்கு, அவன்தானே வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறான் என்று கருத்து.

அவன் எனக்கு 1 ஆசாரியன். அவன் எனக்கு ஸுஹ்ருத். அதனாலே நான் கணக்கில்லாத குற்றங்களைப் பண்ணினாலும், கோபங்கொள்ளாமல் மனதுகலங்காமல், எல்லாஸுகங்களையும் எனக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறான். 2 அவன் தான் எனக்கு உயர்ந்த இன்பம். அவனைத்தவிர வேறு எந்தபதார்த்தமும் இன்பமன்று. இப்படி எண்ணுகிறான் அவன். இந்த எண்ணம் ஒருநாளும் 3 அடையமுடியாதது. அதனால் என்னை நினைப்பதையே பிரயோஜனமாக எண்ணி இடைவிடாமல் நினைக்கிறான். ஆகையாலே அவன் நல்லவன்தான். கௌரவம்பண்ணவேண்டியவன்தான். இவ்விதமான எண்ணமும் அதனாலுண்டான இடைவிடாத தியானமும் உண்டானபிறகு, நடத்தைப் பிசகு என்பது மிகவும் சிறிய குற்றம். அதைக்கொண்டு அவனை 4 அலக்ஷியம் பண்ணக்கூடாது. அவன்மரியாதைபண்ணத்தகுந்தவன்தான்.[30]

---

1. மிகுந்த மூர்க்கனான எனக்கு நல்ல அறிவைக் கொடுத்து, பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறானென்று கருத்து.

2. நான் முன்பு மிகவும் இளப்பமான-துக்கத்துடன் கலந்த-நிலையில்லாத-துளி ஸுகத்தில் பற்றுள்ளவனாயிருந்தேன். அப்படியிருந்த எனக்கு அளவில்லாமல் உயர்ந்த-ஒரு குற்றமுமில்லாத-நிலையான-ஸுக ஸமுத்திரமாகிய தன்னைக் காட்டித்தன்னை இன்பமாகப் பண்ணினான் என்று கருத்து. பகவான் ஆசாரியனென்றும், தன்னிடத்தில் நல்ல எண்ணமுள்ளவன் என்றும் சொன்னதாலே, அவன் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகிறவன் என்று சொல்லப்பட்டது. அவனே இன்பம் என்று சொன்னதாலே, அடையவேண்டிய பலனும் அவனே என்று காட்டப்பட்டது.

3 மிகவும் உயர்ந்த அநுஷ்டானம் பண்ணுகிறவர்களும் இவ்விதமான எண்ணமில்லாமலிருக்கிறார்கள். மிகவும் கெட்ட நடவடிக்கை உள்ளவர்களுக்கும் இந்த எண்ணமிருக்கிறது. எண்ணம் பெரிதேயல்லாமல் நடத்தை பெரிதல்ல. சீமைக்கமலம் விளைகிற இடமாயிருந்தாலும், அங்கு இருக்கும் கருங்கல் சல்லியை எடுப்போமா? குப்பையிலிருக்கும் ரத்னத்தை விடுவோமா? எண்ணம் ரத்னம்போல். நடத்தையில்லாதவன் குப்பைபோல். அநுஷ்டானம் பண்ணுகிறவன் சீமைக்கமலமிருக்குமிடம்போல். நல்ல எண்ணமில்லாமை கருங்கல் சல்லிபோல்.

4. அலக்ஷியம் பண்ணுவது பெரிய குற்றமாகும். பகவானுடைய மனது புண்ணாய்விடும்.

அத² — நநு 'நாவிரதோ து³ஶ்சரிதாந்நாஶாந்தோ நாஸமாஹித:। நாஶாந்தமநஸோ வாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத்' இத்யாதி³ஶ்ருதே: து³ராசாரஸ்ய [illegible] —

க்ஷிப்ரம் ப⁴வதி த⁴ர்மாத்மா ஶஶ்வச்சா²ந்திம் நிக³ச்ச²தி।
கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே ப⁴க்த: ப்ரணஶ்யதி॥ ॥31॥

மத்ப்ரியத்வகாரிதாநந்யப்ரயோஜநமத்³ப⁴ஜநேந விதூ⁴தபாப தஸ்யைவ [illegible] க்ஷிப்ரம் த⁴ர்மாத்மா ப⁴வதி - க்ஷிப்ரமேவ விரோதி⁴ரஹிதஸபரிகரமத்³ப⁴ஜநைகமநா ப⁴வதி। ஏவம்ரூபப⁴ஜநமேவ ஹி 'த⁴ர்மஸ்யாஸ்ய பரந்தப' இத்யத்ர த⁴ர்மஶப்³தோ³தி³தம்। ஶஶ்வச்சா²ந்திம் நிக³ச்ச²தி - ஶாஶ்வதீமபுநராவர்த்திநீம் ஶாந்திம் விரோத்⁴யாசாரநிவ்ருத்திம் க³ச்ச²தி। கௌந்தேய! த்வமேவாஸ்மிந்நர்தே² ப்ரதிஜ்ஞாம் குரு - மத்³ப⁴க்த உபக்ராந்தோ விரோத்⁴யாசாரமிஶ்ரோऽபி ந நஶ்யதி, அபி து மத்³ப⁴க்திமாஹாத்ம்யேந ஸர்வம் விரோதி⁴ஜாதம் நாஶயித்வா ஶாஶ்வதீம் விரோதி⁴நிவ்ருத்திமதி⁴க³ம்ய க்ஷிப்ரம் பரிபூர்ணப⁴க்திர்ப⁴வதீதி ॥ ॥31॥

அவ—உபநிஷத்தில் "எவன் கெட்டசெய்கைகளை நிறுத்தவில்லையோ, எவன் ஆசையினுடையவும், கோபத்தினுடையவும் வேகத்தைத் தடுக்கவில்லையோ, எவன் மனது பலவிஷயங்களில் அலைந்துகொண்டிருக்கிறதோ, இவைகளாலே எவனுடையமனது தியானம்பண்ணவேண்டிய விஷயத்தில் நிலையாய் நிற்கவில்லையோ, அவனாலே தியானம்பண்ணி பகவானை அடையமுடியாது" என்று சொல்லியிருக்கிறது ஆகையாலே 1 நடவடிக்கைக் குறைவானது பகவானுடைய தியானத்தை வளரவொட்டாமல் செய்யுமே? அவனுக்குக் குறைவு வந்துவிடுமே? என்றால், பதில் சொல்லுகிறார்—

1. கீழ் சுலோகம் பகவானிடத்தில் பக்தியுள்ளவன் கெட்ட காரியங்களைச் செய்தாலும், அவனை மற்றவர்கள் கௌரவம் பண்ணவேணுமென்று சொல்லிற்று. அவன் காரியத்திற்கு (தியானத்திற்கு) குறைவில்லை என்று சொல்லுகிறது இந்த சுலோகம்.

என்னிடத்தில் மிகுந்த பிரீதியாலே என்னைத் தியானம் செய்ய ஆரம்பித்து, அந்தத்தியானத்தையே உயர்ந்த பிரயோஜனமாக அவன் எண்ணுகிறான். அவனுக்கு அந்தத்தியானத்தாலே எல்லா பாபங்களும் [1] போய், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற குணங்களும் அடியோடுபோய், வெகு சீக்கிரத்தில் [2] ஒருவித இடஞ்சலில்லாமல், எல்லா அங்கங்களுடன் என்னைத்தியானம் பண்ணவேணுமென்கிற எண்ணம் வந்துவிடும். என்னை அடைவதற்கு இடஞ்சலான நடவடிக்கையும் [3] போய்விடும். மறுபடியும் ஒருக்காலும் வராது. இந்த விஷயத்தில் [4] நீயே பிரதிக்ஞைபண்ணு—பகவானைத்தியா

---

1. தியானத்தாலே தியானத்திற்கு இடஞ்சல்கள் போகும்என்று சொன்னது எப்படிக்கூடும்? என்றால், பதில்—எல்லா அங்கங்களுடன் கூடிய தியானத்தை அடையவேண்டியது. ஆரம்பிக்கிற காலத்தில் இருந்த கொஞ்சமான பக்தியானது பூர்ணமான பக்தியையுண்டாக்குகிறது. கொஞ்சபக்தி காரணம். பூர்ணபக்தி காரியம்.

2. சுலோகத்தில் "தர்ம ஆத்மா" என்ற இரண்டுசொற்கள் இருக்கின்றன. தர்மம் என்ற சொல்லிற்கு "ஒருவித இடஞ்சலில்லாமல் எல்லா அங்கங்களுடன் தியானம்" என்றுதான் பொருள். இதையே இந்த அத்தியாயம் 3-வது சுலோகத்தில் "தர்ம" என்ற சொல்லாலே சொல்லியிருக்கிறது. இந்த அத்தியாயமும் இவ்விதமான தியானத்தைத்தான் சொல்லுகிறது. ஆத்மா என்ற சொல்லும் தியானத்திற்கு உதவியான மனதைச் சொல்லுகிறது. 13-வது சுலோகத்தில் "(அநந்யமநஸ:) வேறொன்றிலும் மனதை வைக்காதவர்கள்" என்றும், கடைசி சுலோகத்தில் (மந்மநாபவ) "என்னிடத்திலேயே மனதைவை" என்றும் முன்பும் பின்பும்சொல்லியிருக்கிறது.

3. உம்மை தியானம்பண்ண ஆரம்பிப்பதின் பெருமையாலே அதற்கு இடஞ்சலான பாபம் போகட்டும். கெட்ட நடவடிக்கைகள், தொடர்ந்து வந்துகொண்டிருக்கையாலும், "ஐயோ! இவைகளைச் செய்கிறேனே" என்கிற வருத்தமில்லாமையாலும், அவைகளைத் தெரிந்தே செய்கையாலும், அவைகள் என் இடஞ்சல்களாக ஆகமாட்டாது என்றால், பதில் சொல்லுகிறார்—அவைகளும் போய்விடும் என்று. பக்தி பாபத்தைப், அதனாலுண்டாகிற கெட்ட காரியங்களையும் போக்கும்.

4. பகவான் நான் பிரதிக்ஞை பண்ணுகிறேன் என்று சொல்லாமல், "நீ பிரதிக்ஞைபண்ணு, என்று சொன்னதின் கருத்து—தான்

ணம் பண்ண ஆரம்பித்தவன் அதற்கு இடைஞ்சலான கெட்ட காரிய ங்களைச் செய்தாலும், அவனுக்கு ஒரு குறைவும் வரா... அவ னுக்கிருக்கும் பக்தியானது எல்லா இடைஞ்சல்களையும் ... மறுபடியும் வரவொட்டாமலும் செய்து,1 பக்தியைப்பூர்ணம ... விடும்—என்று. அது அந்த பக்தியின் பெருமை. [ 31 ]

மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோ
நய: | ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்தேऽபி யாந்தி
பராம் கதிம் ||௩௨|| கிம் புனர்ப்ராஹ்மணா: புண்யா ப4க்
தா ராஜர்ஷயஸ்ததா | அநித்யமஸுகம் லோகமிமம்
ப்ராப்ய பஜஸ்வ மாம் || ||௩௩||

---

பண்ணுவதைக் காட்டிலும் இதைக்கேட்கிற அர்ஜுனன் பிரதிக்ஞை செய்தால், ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கை வரும்—என்று. பகவான் சொல்லாமலே "உம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஒருகுறைவும் வராது" என்று அர்ஜுனன் தானாகவே தன்னுடைய அநுபவத்தைக் கொண்டு சொல்லியிருக்க வேண்டும். அவனுக்கு அப்படிச் சொல்லத் தெரியாமல் வாய்திறக்காமலிருந்தான். பகவான் அவனுக்குச் சொல்லிக்கொடுக்கிறான்.

1. மிகவும் பகவத்பக்தர்கள் கெட்ட காரியங்களைச்செய்து—அந்த பக்தியின் பெருமையால் மறுபடியும் ஸௌக்கியத்தை அடைந்தார்கள். உதாரணம் (1) உபரிசரவஸு என்ற ராஜா ஆகாசத்தில் விமானத்துடன் போகும்சக்தியுள்ளவனாயிருந்தான். தேவதைகளுக்கும் ருஷிகளுக்கும் உண்டாயிருந்த சண்டையில் தேவதை சக்ஷியில் சேர்ந்து பொய் சொன்னானென்று ருஷிகளால் சபிக்கப்பட்டு கீழே விழுந்து விட்டான். முன் பண்ணின தியானத்தின் பெருமையால் முன்போலானான் என்று பாரதத்தில் சொல்லியிருக்கிறது. (2) பிரஹ்லாதன் பகவானிடத்தில் உயர்ந்த பக்தியுள்ளவர்களுக்கு உதாரணமாகச் சொல்லப்படுகிறவன். அவன்ஒருக்கால் பகவானிடம் சண்டைக்குப்போனான். மறுபடியும் சீக்கிரம்நல்லஅறிவு வந்தது. (3) க்ஷத்ரபந்து என்பவன் மிகுந்த பாபங்களைச் செய்துகொண்டிருந்தான். பகவானுடைய திருநாமத்தை ஒரு பெரியவர் உபதேசித்தார். அதைச் சொல்லிக்கொண்டேயிருந்ததனால், மறுபிறப்பில் முன்பிறப்பையும் அப்போது பண்ணின பாபத்தையும் நினைத்து, வருத்தப்பட்டு, பகவானிடத்தில் பிரபத்திபண்ணி அவனிடம்போய்ச் சேர்ந்தான்.

𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 । 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌯𑍋𑌨𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌶𑍍𑌚 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌰𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯𑌾𑌭𑌿𑌹𑌤𑌤𑌯𑌾 𑌅𑌸𑍁𑌖𑌂 𑌚𑍇𑌮𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌸𑍍𑌵 ॥ ௩௨-௩௩ ॥

அவ—கீழிரண்டு சுலோகங்களால் நடுவில் வந்த பாபமும் பகவானை அடைவதற்கு இடைஞ்சலன்று என்று சொல்லப்பட்டது. இப்போது பிறப்பாலேயே மிகுந்த பாபிகளானவர்களும், பகவானை நினைப்பதனால் அவனை அடையலாம் என்று முன் சொன்னதை விரிவாய்ச் சொல்லி, பிறப்பு முதலியவைகளால் உயர்த்தியையும், நிறைந்த பக்தியையும் உடையவர்களுக்குப் பகவானை அடைவதற்குக் கேட்பானேன் என்றும் சொல்லி, பிறப்பு முதலானவைகளால் உயர்ந்த நீ பலனை அடைவதில் ஸந்தேஹமில்லாமல், பக்தி யோகத்தைச் செய் என்று சொல்லுகிறார்—

ஸ்திரீகளும், 1 வைசியர்களும், சூத்திரர்களும், இளப்பமான பிறப்பை யுடையவர்கள். ஆனபோதிலும் என்னை அடைந்து உயர்ந்த பதவியை அடைகிறார்கள். நல்ல பிறப்புகளையுடைய பிராம்மணர்களும், நல்ல தபஸ்ஸு பண்ணுகிற ராஜாக்களும் என்னை தியானம் செய்து நல்ல கதியை அடைகிறார்கள் என்பதற்குக் கேட்பானேன். நீ நல்ல தபஸ்ஸு உள்ள ராஜாவாக இருக்கிறாய். ஆகையால் 2 நிலையில்லாமலும், மூன்று விதமான தொந்தரவுகளுடன் கூடியும் இருப்பதால், ஸுகமில்லாததாயும் தாழ்ந்ததாயும் மிகவும் இளப்பமாயிருக்கிற இந்த லோகத்தை அடைந்திருக்கிற நீ என்னைத் தியானம் பண்ணு [32–33]

1. பிராமணன் முதலான மூன்று ஜாதியில் சேர்ந்த வைசியர்கள் பகவானை தியானம்பண்ணுவதற்குத் தகுந்தவர்களாயிருந்தாலும், ஸத்ரம் என்கிற யாகங்களைச் செய்வதற்குத் தகாதவர்களானதால் சூத்திரர்களுடன் அவர்களைச் சேர்த்துச் சொல்லியிருக்கிறது

2. இங்கே மூன்று தோஷங்கள் காட்டப்படுகின்றன—நிலையில்லாமை, துக்கத்தோடு கூடியிருக்கை, கொஞ்ச ஸுகமுள்ளதாயிருக்கை. இவைகளை நினைத்தால், பகவானைத் தியானம் பண்ணுவதில் ஆசையுண்டாகும் என்று கருத்து.

௩௪— 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 —

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 ।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ॥௩௪॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍈𑌕𑌤𑌾𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍇 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑍇𑌕𑌕𑌾𑌰𑌣𑍇 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌦𑌲𑌾𑌮𑌲𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑍇 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌨𑍀𑌲𑌜𑍀𑌮𑍂𑌤𑌸𑌂𑌕𑌾𑌶𑍇 𑌯𑍁𑌗𑌪𑌦𑍁𑌦𑌿𑌤𑌦𑌿𑌨𑌕𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑌦𑍃𑌶𑌤𑍇𑌜𑌸𑌿 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌹𑍋𑌦𑌧𑌾𑌵𑍁𑌦𑌾𑌰𑌪𑍀𑌵𑌰𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑌾𑌵𑌤𑍍𑌯𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑍇 𑌅𑌮𑌲𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌕𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌹𑌾𑌰𑌕𑍇𑌯𑍂𑌰𑌕𑌟𑌕𑌭𑍂𑌷𑌿𑌤𑍇 𑌅𑌪𑌾𑌰𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑌾𑌵𑌨𑌾𑌲𑍋𑌚𑌿𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌶𑍇𑌷𑌲𑍋𑌕𑌶𑌰𑌣𑍍𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌿 𑌤𑍈𑌲𑌧𑌾𑌰𑌾𑌵𑌦𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍇𑌨 𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑌨𑌾 𑌭𑌵 । 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 — 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 — 𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 — 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 — 𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌦𑌨𑍁𑌭𑌵𑌕𑌾𑌰𑌿𑌤𑌮𑌦𑍍𑌯𑌜𑌨𑌪𑌰𑍋 𑌭𑌵 । 𑌯𑌜𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌶𑍇𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌔𑌪𑌚𑌾𑌰𑌿𑌕𑌸𑌾𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌾𑌦𑌿 𑌸𑌕𑌲𑌭𑍋𑌗𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌰𑍂𑌪𑍋 𑌹𑌿 𑌯𑌾𑌗𑌃 । 𑌯𑌥𑌾 𑌮𑌦𑌨𑍁𑌭𑌵𑌜𑌨𑌿𑌤𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌾𑌰𑌿𑌤𑌮𑌦𑍍𑌯𑌜𑌨𑌪𑌰𑍋 𑌭𑌵𑌸𑌿, 𑌤𑌥𑌾 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 — 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 — 𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌦𑌨𑍁𑌭𑌵𑌕𑌾𑌰𑌿𑌤𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑍇𑌷𑌶𑍇𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌵𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑍍𑌯𑌨𑍍 𑌮𑌯𑌿 𑌸𑍁𑌤𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌹𑍍𑌵𑍀𑌭𑌾𑌵𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁 । 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 — 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌯𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍌 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 । 𑌮𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑌂

ஸாவதா⁴நோ மதா³ஶ்ரயணம் [illegible] | ஸர்வாத்மாநம் [illegible] ஸ்வாத்மஶேஷதயா [illegible] மந: ப்ராப்ஸ்யஸி | ஆத்மஶப்³தோ³ மநோ விஷய: | ஏவம் [illegible] மநஸா மாம் த்⁴யாத்வா [illegible] மத்பராயணோ மாமேவ ப்ராப்ஸ்யஸீத்யர்த²: | ததே³வம் லௌகிகாநி ஶரீரதா⁴ரணார்தா²நி வைதி³காநி ச நித்யநைமித்திகாநி கர்மாணி மத்ப்ரீதயே மச்சே²ஷதைகரஸோ மயைவ காரித இதி குர்வந் ஸததம் மத்கீர்தநயஜநநமஸ்காராதி³காந் ப்ரீத்யா குர்வாணோ மந்நியாம்யம் நிகி²லம் ஜக³ந் மச்சே²ஷதைகரஸமிதி சாநுஸந்தா⁴ய அத்யர்த²ப்ரியமத்³கு³ணக³ணம் சாநுஸந்தா⁴யாஹரஹருக்தலக்ஷணமித³முபாஸநமுபாத³தீ³தா²: ததோ மாமேவைஷ்யஸி ||

இதி ஶ்ரீமத்³ப⁴க³வத்³ராமாநுஜவிரசிதே ஶ்ரீமத்³கீ³தாபா⁴ஷ்யே நவமோऽத்⁴யாய:

---

அவ—தியானம் (பக்தி) என்பது இன்னதென்று சொல்லுகிறார்—

என்னை இடைவிடாமல் நினை. அதாவது—எண்ணெயைக் கரண்டியினால் தூக்கிவிட்டால் ஒரேசம்பியாய் விழுவதுபோல், இன்னொரு வஸ்துவின் நினைவு கலக்காமல், என்னையே நினை நினைக்கும்போது என்னிடத்தில் அளவில்லாத பிரீதியோடு நினை. இந்தநினைவினால் அளவில்லாத பிரீதியுண்டாகி, அந்தப்பிரீதி உள்ளடங்காமல், என்னை ஸந்தோஷப்படுத்துவதற்காக 1 எப்படிப்பல வேலைகளைச் செய்வா

1. சுலோகத்தில் "மத்யாஜீ" என்கிற சொல் இருக்கிறது. அதற்கு என்னுடைய யாகத்தைச் செய் என்று பொருள். யாகம் என்பது தேவதையை ஸந்தோஷப் படுத்துவதற்காக பதார்த்தங்களைக் கொடுப்பது. இங்கே பகவானுக்கு சந்தனம் புஷ்பம் முதலானவைகளையும், அறுசுவைகளோடுகூடிய அன்னத்தையும், விசிறி, சாமரம் முதலானவைகளையும் கொடுத்து ஸந்தோஷப்படுத்துவது.

யோ, அப்படி என்னை நினை. இப்படிச்செய்தும் திருப்தி அடையாமல், உனக்குள் இருந்து உன்னையேவுகிற என்னுடைய அளவில்லாத உயர்த்தியையும், உன்னுடைய அளவில்லாத இளப்பத்தையும் மனதார நினை, என்னை விட்டு க்ஷணகாலம்கூட இருக்க உன்னால் தாங்கமுடியாதவனாக இரு. இப்படி மனது ஏற்பட்டால், என்னிடமே வந்து சேருவாய். இடைவிடாமல் என்னை நினைத்து; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியைப் பண்ணி, உயர்ந்தபதார்த்தங்களை எனக்குக் கொடுத்து ஸந்தோஷப்படுத்தி, என்னை வணங்கி, 1 என்னைவிட்டுத் தாங்கமுடியாமல் இருந்து என்னையே அடைவாய்.

2 ஆகையாலே 3 சாப்பாடு முதலான உலகத்து வேலைகளையும், ஸந்தியாவந்தனம் முதலிய நித்திய நைமித்திக கர்மங்களையும், என்பிரீதிக்காக, என்னுடைய வேலைகளைச் செய்வதற்கு கிடைத்ததே என்று ஸந்தோஷத்துடனும், நான்தான் அந்த வேலைகளைச் செய்கிறேன் என்றும் நினைத்து செய்து கொண்டு, எப்போதும் பிரீதியுடனே என்னை மனதால் நினைத்து, வாயால் என் பெயர்களைச் சொல்லி, உடம்பால் என் வேலைகளைச்செய்து கொண்டு, எல்லா உலகங்களும் என் 4 அதீனம் என்றும், என்னு

---

1. இப்படி இருப்பது பக்தியின் உயர்ந்தபடி. இதற்குமேல் பகவானை அடையவேண்டியதுதான்.

2. பக்தி இன்னதென்றும், அதற்கு உதவிகள் இன்னவையென்றும், உதவிகளுக்கு உதவி செய்கிறது இன்னதென்றும், அதின் பலன் இன்னதென்றும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட முக்கியமான அர்த்தங்களை வருத்தமில்லாமல் தெரிந்து கொள்வதற்காகச் சுருக்கமாய்ச் சொல்லி, அத்தியாயத்தை முடிக்கிறார். ஆகையாலே—துக்கம் நிறைந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் நீ விழுந்திருப்பதினாலும், நான் ஸௌலப்யம் முதலான குணங்களோடு கூடியவனாய், உன்னை ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து தூக்குகிறவனாயிருப்பதாலும், நீ செய்ய வேண்டிய பக்தியாகிய உபாயம் மிகவும் ஸுகமாய் செய்யத்தகுந்ததாகையாலும்.

3. இது 27-வது சுலோகத்தின் பொருள்.

4. இது 4-வது சுலோகத்தின் கருத்து.

டைய உபயோகத்திற்காகவே ஏற்பட்டன என்றும், நினைத்து என்னிடத்திலிருக்கும் அளவில்லாமல் உயர்ந்த குணங்களின் கூட்டங்களை மிகவும் 1 இன்பமாக நினைத்து, 2 நாள்தோறும் கீழே சொன்னபடி என்னைத்தியானம் செய்து வந்தாயேயானால், அழிவில்லாத அளவில்லாத ஸுகமான என்னிடம் வந்து சேருவாய்.

உபநிஷத்துக்களில் தியானம் பண்ண வேண்டியவைகளாகவும், அதற்கு உதவி செய்கிறவைகளாகவும் சொல்லப்பட்ட பகவானுடைய ஸ்வரூபம், திருமேனி, குணங்கள், இவைமுதலானவைகளும் சுலோகத்திலிருக்கிற "நான்" என்கிற சொல்லாலே காட்டப்பட்டன என்று ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம் பற்றி, அவைகளை அருளிச் செய்கிறார். அவைகளாவன—3 பகவான் லோகங்களுக்கு யஜமானர்களாயிருக்கிற எல்லாருக்கும் யஜமானன். 4 ஒருவித குற்றங்களும் கிட்டவர முடியாதவன். எல்லா நல்ல குணங்களுக்கும் ஒரே இருப்பிடம். 5 எல்லாம் தெரிந்தவன். நினைத்தபடி நடத்துகிறவன். எல்லா உலகங்களையும் ஒருவனாகவே உண்டுபண்ணுகிறவன். அவனைத்தான் பரம்பிரும்மமென்றும், புருஷோத்தமன் என்றும் உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. அவனுடைய கண்கள் பெரிய ஆழமுள்ள தண்ணீர் நிறைந்த

1. இது 26—29-வது சுலோகங்களின் பொருள்.

2. நாள்தோறும்— கடைசி உடம்பைவிட்டுப் போகிறவரையில்.

3. சக்தியில்லாதவனுக்கு வேலை செய்வதனால்ஒருபிரயோஜனமும் கிடைக்காது. இந்தப் பிரும்மாண்டத்திலிருக்கிற பிரும்மா முதலானவர்களுக்கு வேறு பிரும்மாண்டங்களில் அதிகாரம் கிடையாதே. அப்படிப்பட்ட பிரும்மா முதலானவர்கள் எல்லாருக்கும் எப்படி மோக்ஷம் கொடுக்கக் கூடும்.

4. குற்றமுள்ளவனும் குணமில்லாதவனுமான ஒருவனைநினைத்துப் பிரயோஜனமில்லை. ஒரு குற்றமில்லாதவனும், எல்லாகுணங்கள் உள்ளவனும், தொந்தரவுகளில்லாதவனும், அவைகளைப்போக்குமவனும், அளவில்லாத இன்பமா யிருப்பவனுமானவனைத்தான் தியானம் செய்ய வேண்டியது.

5. பகவானுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவனுக்கு ஒத்தாசை செய்ய ஒருவனும் வேண்டியதில்லை. இந்த இரண்டு குணங்களும் மோக்ஷத்தைக் கொடுக்க உபயோகமானவைகள்.

அவ—இப்படிப் பகவானிடத்தில் பக்தி உண்டாவதற்கும், அது வளருகிறதற்கும்—மற்ற ஒருவருக்குமில்லாத உயர்ந்த நல்ல குணங்கள் கூட்டங் கூட்டங்களாய் பகவானுக்கு ஸ்வபாவமாயிருக்கின்றன என்றும்; அவன் அறிவுள்ளது, அறிவில்லாதது என்று இரண்டு வகையான எல்லாவற்றிற்கும் ஆத்மா; எல்லா உலகமும் அவனுக்கு உடம்பு; ஆதலால் அவைகளின் ஸ்வரூபமும்,

இருப்பும், லீலைகளும் அவனதீனமென்றும்—சொல்லப்பட்டது. இந்த ஸங்கதிகளை அர்ஜுநன் பகவானிடத்திலிருந்து கேட்டு, இது உண்மைதான், ஸந்தேஹமில்லையென்று நம்பி, பகவானை கீழ்ச்சொன்ன ஸங்கதிகளுடன் கண்ணால் பார்க்க வேணுமென்று ஆசை உண்டாகி, சொல்லுகிறான்—

உடம்பே ஆத்மா என்று தப்பாக நினைத்து மயங்கினஎன்னை அனுக்கிரஹிக்கிறது என்கிற ஒரே பிரயோஜனத்திற்காகத் தான், 1 யிருந்த தயையினுலே, மிகவும் ரஹஸ்யமான, (ஒருவனுலும் அறியமுடியாத) ஆத்மாவைப் பற்றின வார்த்தைகளை 2-வது அத்தியாயம் 11-வது சுலோகம் முதல் 6-வது அத்தியாயம் 46-வது சுலோகம் வரையில் சொன்னீர். அதனால் எனக்கு இருந்த ஆத்மாவைப் பற்றின மயக்கங்கள் எல்லாம் இருந்த விடம் தெரியாமல் போய் விட்டன. [ 1 ]

அவ—ததாஹ—

பவாப்யயௌ ஹி பூதாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ
மயா। த்வத்த꞉ கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥ ௨॥

ததா ஸர்வேஶ்வரஸ்ய இதரஸமஸ்த வஸ்து விலக்ஷணஸ்ய த்வத்த꞉ ஸர்வேஷாம் பூதாநாம் த்வத்த꞉ உத்பத்திப்ரலயௌ ஸர்வாத்மத்வேந விஸ்தரஶோ மயா ஶ்ருதௌ ஹி। கமலபத்ராக்ஷ! தவாவ்யயம் நித்யம் ஸர்வேஶ்வரத்வ ஶேஷித்வம் ஜ்ஞாநபலாதி கல்யாணகுணகணைஶ்ச ஸர்வாதாரத்வம் ப்ரவர்த்தகத்வம் இத்யாதி ஸர்வம் த்வத்ப்ரவர்த்திதத்வம் ச ஸர்வத்ர ப்ரவர்த்திதத்வாத்யபரிமிதம் மாஹாத்ம்யம் ச ஶ்ருதம்। ஹிஶப்தோ வக்த்ரே அநுவதநேந த்யோதநார்த꞉ ॥ ॥ ௨ ॥

அவ—அப்படி மயக்கம் தெளிந்தபோது—

உம்மிடத்தில் ஆத்ம விஷயங்களைக் கேட்டது போல, 7-வது அத்தியாயம் முதல் 10-வது அத்தியாயம் வரையில்—உம்மைத் தவிர எல்லா உலகங்களும் பரமாத்மாவான உம்மால் உண்டாகி,

விஸ்தாரமாகக் கேட்டேன். 1 தாமரை யிதழ்போன்ற கண்களை உடையவரே! எல்லா உலகமும் எப்பொழுதும் உம்முடைய உபயோகத்துக்காகவே இருக்கிறது. ஞானம், பலம் முதலான நல்ல குணங்களின் கூட்டங்களாலே நீர் தான் மிகவும் உயர்ந்தவர். எல்லா உலகத்தையும் தூக்குகிறீர். உம்மால் தான் எல்லா உலகமும் ஒரு ஸங்கதியை நினைப்பது, இமைக் கொட்டுவது முதலான எல்லா வேலைகளையும் செய்கிறது. இது முதலான 2 எப்பொழுது மிருக்கிற அளவில்லாத உம்முடைய பெருமைகளையும் கேட்டேன். இவைகளைக் கேட்டேனே. [2]

ஏவமேதத்யதாऽऽத்த த்வமாத்மானம் பரமேஶ்வர |
த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைஶ்வரம் புருஷோத்தம ||

ஹே பரமேஶ்வர! ஏவமேதத் த்வயோக்தம், யதாऽऽத்த த்வமாத்மானம் ப்ரவீஷி | புருஷோத்தம! ஆஶ்ரிதவாத்ஸல்யஜலதே! தவைஶ்வரம்-அஸாதாரணம் ஸர்வஸ்ய ப்ரஶாஸித்ருத்வே பாலயித்ருத்வே ஸ்ரஷ்ட்ருத்வே ஸம்ஹர்த்ருத்வே பர்த்ருத்வே கல்யாணகுணாகரத்வே பரத்வே ச ஸகலேதரவிஸஜாதீயத்வே அவஸ்திதம் ரூபம் த்ரஷ்டும் ஸாக்ஷாத்கர்த்தும் இச்சாமி || ||௩||

---

(முன் பக்கத்தின் குறிப்பு.) 1. அர்ஜுனனுக்குச் சண்டையில் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுவதற்காக மாத்திரம் சொன்னதல்ல என்று கருத்து.

1. இதனால் தாமரைக்கண்ணோடு கூடிய அப்பிராகிருதமான திருமேனி கிருஷ்ணாவதாரத்திலும் இருந்ததென்று தெளிவாய் காணப்பட்டதாக ஏற்படுகிறது.

2. சுலோகத்தில் பெருமையை 'அவ்யயம்' என்றுசொல்லியிருக்கிறது. அதற்கு "குறைவில்லாத" என்று பொருள். காலத்தினாலும், விஷயத்தினாலும், கணக்காலும், உயர்த்தியாலும் அந்தப்பெருமைக்கு அளவில்லை. அதாவது—பகவானுடைய பெருமை எப்போதுமிருக்கிறது. அறிவு, அழகு, ஸௌந்தர்ய முதலிய எல்லா விஷயங்களிலும் பெருமையுள்ளவன். இத்தனை விஷயங்களில்தான் பெருமையிருக்கிறதென்று விஷயங்களுக்குக் கணக்கில்லை. பெருமைக்கு அளவுமில்லை—என்று கருத்து.

எல்லா லோகத்துக்கும் பெரிய ராஜாவே! உம்மைப்பற்றி எப்படிச் சொன்னீரோ, அது ஸரிதான் என்று எனக்கு உறுதியாய்த் தோன்றுகிறது. தன்னை அடைந்தவர்களிடத்தில் குற்றத்தை லக்ஷியம் பண்ணாமல், அளவில்லாமல் பிரீதி பண்ணுகிறவரே! கீழ்ச் சொன்ன உமக்கு மாத்திரமுள்ள எல்லா ஸங்கதிகளுடன் கூடிய உம்முடைய உடம்பைப் பார்க்கவேணுமென்று ஆசைப்படுகிறேன். அதாவது—கீழ்ச்சொன்ன எல்லா ஸங்கதிகளையும் 1 உடம்பால் நீர்நடத்தி2காட்டவேணும்—என்று ஆசைப்

---

1. உதாரணம்—பந்தயக்குதிரையில் ஏறி ஆச்சரியமாய் ஸவாரிபண்ணுவேன் என்று ராமன் என்பவனோடு கிருஷ்ணன் என்பவன் சொன்னால், ராமன்—அப்படி நீங்கள் ஸவாரி பண்ணுவதைப் பார்க்க ஆசையாயிருக்கிறது; அப்படிப் பண்ணிக் காண்பிக்கவேணும் என்று—கிருஷ்ணனிடம் சொல்லுவதுபோல இருக்கிறது இங்கே அர்ஜுனன் கேட்பது.

2. இவைகளை உடம்பால் காட்டுவதாவது—உடம்பைப்பார்க்கும்போது தோன்றுகிற குணங்கள்,உடம்பினுடைய இருப்பு,செய்யும் வேலைகள் இவைகளால் கீழ்ச்சொன்ன ஸங்கதிகள் பகவானுக்கு இருக்கின்றன என்று தோன்றப் பண்ணுகை. (1) உடம்பைக் காட்டினமாத்திரத்திலேயே கெட்ட எண்ணத்தைப் போக்கி நல்லவேலையை செய்யும்படி செய்கை. (2) பகவான் தன் திருமேனியைக் காண்பித்த மாத்திரத்தால், ஸத்வகுணத்தை வளர்த்து, அதற்குத் தகுந்தவேலைகளைச் செய்விப்பது.(3) தன்தொப்புளிலிருந்து பிரும்மாவையும்,முகம்முதலான அவயவங்களிலிருந்து பிராமணன் முதலான ஜாதிகளையும் உண்டுபண்ணுவதைக்காட்டுவது. (4)அழிப்பதை—சண்டைக்கு வந்திருக்கும் சிலராஜாக்களைவாயில் போட்டுக் கடிப்பதாகக் காண்பிப்பது. (5)தாக்குகிறதை—தன் திருமேனியில்ஒருமூலையில்எல்லாஉலகமுமிருப்பதாகக்காண்பிப்பது.(6) உயர்ந்த நல்ல குணங்களுக்கு இருப்பிடமாயிருப்பதை ராமன் முதலான அவதாரங்களில் ஸீதையைக் காணாதபோது அழுதது முதலான வேலைகளால் குணங்களை மறைத்தது போலில்லாமல் குணங்களை உள்ளபடி காட்டுகை. (7) பிரும்மாமுதலான எல்லா லோகங்களும் தன்திருமேனியில் ஒரு மூலையில் அடங்கி இருப்பதாகக் காட்டுவதாலே,தான் எல்லாரைக் காட்டிலும் எல்லா விதத்தாலும் மிகவும் உயர்ந்தவனென்று தோன்றப்பண்ணுவது.(8) இது கீழ்ச்சொன்ன எல்லாவற்றையும்(ஏழையும்) சேர்த்துச்சொன்னது. அல்லது ;அவைகளால் ஏற்பட்டது. அல்லது சுலோகத்திலுள்ள "பரமேசுவர, புருஷோத்தம" என்கிற சொற்களின் கருத்தாகவுமாம்.

படுகிறேன். ஸங்கதிகளாவன:—(1) எல்லா லோகத்தையும் அடக்கி ஆளுவது; (2) காப்பாற்றுவது; (3) உண்டுபண்ணுவது; (4) அழிப்பது; (5) தாங்குவது; (6) உயர்ந்த குணங்களுடன் கூடியிருப்பது; (7) எல்லாரைக் காட்டிலும் எல்லாவிதத்தாலும் மிகவும் உயர்ந்தவராக இருப்பது; (8) இந்த எல்லா ஸங்கதிகளாலும் பிரும்மா முதலான எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் வேறு ஜாதியாக இருப்பது 1. [3]

𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿 𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

𑌪𑍍𑌰𑌭𑍋—𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃, 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑍃, 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑌭𑍂𑌤𑌂 𑌤𑍍𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌮𑌯𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 । 𑌤𑌤𑍋 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 ! 𑌯𑍋𑌗𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑌃, "𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌨𑌿𑌧𑍇 ! 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂—𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 । 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑍍, 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௪ ॥

2 ஹே பிரபோ! உம்மைத் தவிர மற்றொருவருக்கு வாலாமோ என்று நினைக்கவும் முடியாத—ஞானம், பலம் முதலான மிகவுமுயர்ந்த—நல்ல குணங்களுக்கு இருப்பிடமானவரே! கீழ்ச் சொன்ன எல்லா ஸங்கதிகளுடன் கூடிய தேவரீருடைய திருமேனியை என்னால் பார்க்கமுடியுமென்று தேவரீர் திருவுள்ளத்தில் பட்டால், அதைத் தேவரீருடைய ஸங்கதிகளில் துளிக்கூட விடாமல் காண்பிக்கவேணும். [4]

---

1. இந்த மூன்று சுலோகங்களாலே மூன்று ஸங்கதிகள் காட்டப்படுகின்றன—(1) பகவான் செய்த உபகாரத்தை அறிந்தது. (2) அவன் சொன்ன வார்த்தையை நம்பினது. (3) அவனிடத்தில் பக்தியுள்ளவனாக இருந்தது—என்று.

2. இந்தச் சொல்லாலே பகவான் ஒன்றை எண்ணினால், அதை அவன் கட்டாயம் செய்து முடிப்பனென்று காட்டப்படுகிறது.

𑌅𑌵— 𑌏𑌵𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇𑌨 𑌹𑌰𑍍𑌷𑌗𑌦𑍍𑌗𑌦𑌕𑌣𑍍𑌠𑍇𑌨 𑌪𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿 𑌚 ॥ ॥௫॥

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌣𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 । 𑌅𑌥 𑌶𑌤𑌶𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌶𑍍𑌚 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿-𑌨𑌾𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌣𑌿, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿-𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌿, 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿-𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌦𑌿𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌪𑌶𑍍𑌯 ॥ ॥௫॥

அவ—இந்தமாதிரி மிகுந்த ஆசையுடன், ஸந்தோஷத்தினால் தொண்டை தழதழுத்து, அர்ஜுனன் வணங்கிக்கேட்டுக்கொள்ள பகவான் சொல்லுகிறார்—

எல்லா உலகங்களுக்குமிருப்பிடமான என்னுடைய உருவங்களைப்பார். பிரகிருதியினால் செய்யப்படாத—அநேக விதங்களான—வெளுப்பு கருப்பு முதலான பல வர்ணங்களோடு கூடிய—அநேக காலங்களில் தேவதையாகவும், மனிதனாகவும், மிருகங்களாகவும் நான் செய்த—அவதார ரூபங்களை நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் காண்பிக்கிறேன். பார். [5]

𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌸𑍂𑌨𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌮𑌰𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌮𑌮𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌹𑍇 𑌪𑌶𑍍𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶, 𑌵𑌸𑍂𑌨𑌷𑍍𑌟𑍌, 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍇𑌕𑌾𑌦𑌶, 𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌦𑍍𑌵𑍌, 𑌮𑌰𑍁𑌤𑌶𑍍𑌚𑍈𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌮𑍍 । 𑌇𑌹 𑌜𑌗𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌚 𑌯𑌾𑌨𑌿 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍍𑌵𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯 ॥ ॥௬॥

அவைகளில் என்னுடைய ஒரு உடம்பில் பன்னிரண்டு ஆதித்தியர்களையும், எட்டு வஸுக்களையும், பதினொரு ருத்திரர்களையும், இரண்டு அச்வினீ தேவதைகளையும், நாற்பத்தொன்பது மருத்துக்களையும் பார், பிரதானமான சிலர்களை மட்டும் சொன்னேன். இன்னும் இந்த உலகத்தில் கண்ணால் எவைகளைப் பார்க்கிறாயோ, சாஸ்திரத்தினால் எவைகளைக் கேட்கிறாயோ, அவைகள் எல்லாவற்றையும், எந்த லோகங்களிலும் முன்பு காணப்படாதவைகளும், எந்த சாஸ்திரங்களிலும் முன்பு கேட்கப்படாதவைகளுமான அநேக ஆச்சரியங்களையும் பார். 1 [6]

𑌇𑌹𑍈𑌕𑌸𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑍍𑌯 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ।
𑌮𑌮 𑌦𑍇𑌹𑍇 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ॥ ॥௭॥

𑌇𑌹-𑌮𑌮 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌹𑍇 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌥𑌮𑍍-𑌏𑌕𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌂 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌶𑍍𑌯 । 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿, 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌕𑌦𑍇𑌹𑍈𑌕𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌮𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯 ॥ ॥௭॥

இந்த என்னுடைய உடம்பில், அதிலும் ஒரு மூலையில், ஜங்கமம் (அசைகிறது), ஸ்தாவரம் (அசையாதது) என்று இருவகையான எல்லா உலகங்களையும் பார். இன்னும் உனக்கு எவைகளைப் பார்க்க வேணுமென்று ஆசையிருக்கிறதோ, அவைகளையும் நாளைக்கு உனக்கு வரப்போகிற ஜயம் முதலானவைகளையும் பார்.

𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥௮॥

𑌅𑌹𑌂 𑌮𑌮 𑌦𑍇𑌹𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌅𑌨𑍇𑌨-𑌨𑌿𑌯𑌤𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑌾 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌮𑌾𑌂-𑌤𑌥𑌾𑌭𑍂𑌤𑌂 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌮𑌪𑌰𑌿𑌮𑍇𑌯𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇 । 𑌤𑌵 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍-𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂 𑌮𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌦𑌦𑌾𑌮𑌿 । 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍-𑌮𑌦𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌪𑌶𑍍𑌯 । 𑌮𑌮𑌾𑌨𑌨𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌯𑍋𑌗𑌮𑌨𑌨𑍍𑌤𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௮॥

---

1. அநேக விதமான உடம்புகளைக் காட்டுவதாகச் சொன்ன போதிலும், அவைகள் எல்லாவற்றையும் ஒரே உடம்பில் காட்டுகிறார்.

நான் என்னுடைய இந்த உடம்பின் ஒரு மூலையில் எல்லா உலகங்களையும் காண்பிக்கப் போகிறேன். அவைகளை இப்போதிருக்கிற உன் கண்ணால் பார்க்கமுடியாது. இந்தக் கண்ணுக்கு அவ்வளவு சகதி கிடையாது. அதற்கு இன்ன ஜாதியைத்தான் பார்க்கலாம் என்று கட்டுப்பாடும், பார்க்கக்கூடியவைகளிலும் இவ்வளவைத்தான் பார்க்கலாம் என்று கணக்கும் உண்டு. இப்போது நான் காண்பிக்கப்போகிற உடம்போ கணக்கில்லாத எல்லா உலகங்களோடும் கூடியிருக்கிறது. உலகத்திலிருக்கிற எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் வேறுமாதிரியாயிருக்கிறது. அதற்காக, என்னைப் பார்க்கத் தகுந்ததாயும், சுத்த ஸத்வம் என்கிற திரவியத்தினால் செய்யப்பட்டதுமான கண்ணைக் கொடுக்கிறேன். அதனால் எனக்கு மாத்திரமுள்ள எல்லா குணங்களையும், எல்லாவுலகங்களையும் நான் ஆளுவதையும் பார். [8]

सञ्जय उवाच—

एवमुक्त्वा ततो राजन् महायोगेश्वरो हरिः ।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥ ९ ॥

एवमुक्त्वा सारथ्ये अवस्थितः पार्थमातुलजः महायोगेश्वरो हरिः—महाश्चर्ययोगानामीश्वरः परब्रह्मभूतो नारायणः, परमैश्वर्यम्—स्वासाधारणं रूपं पार्थाय—पितृष्वसुः पुत्राय दर्शयामास, तच्च दिव्यविविधविस्मयाश्रयं विश्वस्य प्रशासितृ च रूपम् ॥ ॥ ९ ॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

இந்தமாதிரி சொல்லி, வண்டியோட்டிக்கொண்டிருந்த—அர்ஜுநனுக்கு அம்மான் பிள்ளையான—கிருஷ்ணன் உருவமான—எல்லா ஆச்சரியங்களையும் நடத்தக்கூடியவனான—பரபிரும்மமான நாராயணன் மிகவும் உயர்ந்த ஈசுவரன் என்று காட்டக் கூடியதும், தனக்கு மாத்திரம் ஏற்பட்டதுமான ஒரு உடம்பைத் தன் அத்தை பிள்ளையான அர்ஜுநனுக்குக் காண்பித்தான். அந்த

உடம்பில் அநேகவிதமான ஆச்சரியமான எல்லாஉலகங்கள் இருக்கின்றன. அது எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுகிறது. [9]

அவ— தத்ரூபம்—

அநேகவக்த்ரநயநம் அநேகாத்புததர்ஶநம் |
அநேகதிவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம் || ||௧௦||
திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தாநுலேபநம் |
ஸர்வாஶ்சர்யமயம் தேவமநந்தம் விஶ்வதோமுகம் || ||௧௧||

தேவம்-த்யோதமாநம்| அநந்தம்-காலத்ரயவர்த்திநிகிலஜகதாஶ்ரயதயா தேஶகாலபரிச்சேதாநர்ஹம்| விஶ்வதோமுகம்-விஶ்வதிக்வர்த்திமுகம் | ஸ்வாபாவிகதிவ்யரூபஸம்ஸ்தாநதிவ்யாபரணாயுதாந்விதம் || ||௧௧||

அவ—அந்த உருவம் சொல்லப்போகிற மாதிரி இருக்கிறது—அதின் பளபளப்பைச் சொல்லி முடியாது. மிகவும் அளவில்லாத ஆச்சரியமானதாயிருக்கிறது. மூன்று காலத்திலுமிருக்கிற எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமாகையால், அது இடத்தாலும், காலத்தாலும், அளவிடத் தகுந்ததன்று. அந்த உடம்புக்கு எல்லா திக்குக்களிலும் முகங்கள் இருக்கின்றன. முகங்கள்தோறும் கண்கள், அதற்குத்தகுந்த உயர்ந்த வஸ்திரங்கள், சந்தனம் முதலிய வாஸனைத் திரவியங்கள், மாலைகள், நகைகள், ஆயுதங்கள் இவைகளோடுகூடியிருக்கிறது அந்த உடம்பு. [10,11]

அவ— தாமேவ தேவஸ்ய நிரதிஶயத்யோதமாநதாம் விவ்ருணோதி—

திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா |
யதி பா: ஸத்ருஶீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மந: || ||௧௨||

தேஜஸோऽபரிமிதத்வதர்ஶநாயேதம் | அக்ஷயதேஜஸ்ஸ்வரூபமித்யர்த்த: || ||௧௨||

அவ—பளபளப்பு என்பதை விரிவாய்ச் சொல்லுகிறார்—

ஆயிரம் சூரியன்கள் ஒரேகாலத்தில் ஆகாசத்தில் கிளம்பினால், அவைகளின் பளபளப்பு எப்படி இருக்குமோ, அப்படி

இருக்கிறது. இதுவும் ஒரு வார்த்தைக்குச் சொன்னதே யொழிய, அதின் பளபளப்புக்கு அளவில்லை. [12]

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌸𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑌨𑍇𑌕𑌧𑌾 ।
𑌅𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌸𑍍𑌤𑌦𑌾 ॥ ॥௧௩॥

𑌤𑌤𑍍𑌰—𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍂𑌦𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍍𑌕𑍇 𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌯𑍁𑌧𑍋𑌪𑍇𑌤𑍇 𑌸𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌾𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑌿𑌵𑍍𑌯𑌶𑌰𑍀𑌰𑍇, 𑌅𑌨𑍇𑌕𑌧𑌾 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑍍—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌦𑌿𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌵𑌰𑍍𑌗𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌾𑌤𑌾𑌲𑌾𑌤𑌲𑌵𑌿𑌤𑌲𑌸𑍁𑌤𑌲𑌾𑌦𑌿𑌭𑍋𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑍋𑌪𑌕𑌰𑌣𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍— “𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇”, “𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃”, “𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃”, “𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃”, “𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌯𑌾 𑌭𑍂𑌤𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 । 𑌵𑌿𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍇𑌕𑌾𑌂𑌶𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌜𑌗𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌉𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌏𑌕𑌸𑍍𑌥𑌮𑍍—𑌏𑌕𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌮𑍍, 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍋 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌲𑌬𑍍𑌧𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌦𑌿𑌵𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍 ॥ ।௧௩।

எல்லையில்லாத நீளமும் அகலமுமுடையதும், கணக்கில்லாத திருக்கைகள், முகங்கள், கண்கள், வயிறுகள் இவைகளை உடையதும், அளவில்லாத பளபளப்புள்ளதும், கணக்கில்லாத உயர்ந்த ஆயுதங்களோடு கூடியதும், தனக்குத்தகுந்த கணக்கில்லாத உயர்ந்த நகைகள், மாலைகள், வஸ்திரங்கள், சந்தனம் முதலான வாஸனைத்திரவியங்கள் இவைகளுள்ளதும், அளவில்லாத ஆச்சரியமாயு மிருக்கிற பகவானுடைய மிகவு முயர்ந்த அந்தத் திருமேனியிலே பிரும்மா முதலான—அநேகவிதமாயும் ஆச்சரியமுமான—தேவன், மனிதன், மாடுமுதலானது, மரம்முதலானது—என்று

பிரிவுள்ள அநுபவிக்கிற ஜீவன்கள், பிருதிவீ, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், பாதாளம், அதலம், விதலம், ஸுதலம் முதலான அநுபவத்துக்கு ஏற்பட்ட இடங்கள், அநுபவிக்கத்தகுந்த வஸ்துக்கள், அனுபவத்துக்கு உதவிகள்—இந்தமாதிரி பிரிவுள்ள பிரகிருதி, ஜீவன்கள் இரண்டும் கலந்த எல்லா லோகங்களையும் 10—வது அத்தியாயத்தில் சொன்னபடி ஒரு மூலையிலே இருப்பதாக பகவானுடைய அனுக்கிரஹத்தாலே அவரைப் பார்க்கும்படியான உயர்ந்த கண்ணை அடைந்த அர்ஜுனன் பார்த்தான் [13]

𑌤𑌤𑌸𑍍𑌸 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑌰𑍋𑌮𑌾 𑌧𑌨𑌂𑌜𑌯𑌃 |
𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑌭𑌾𑌷𑌤 ‖ ‖௧௪‖

𑌤𑌤𑍋 𑌧𑌨𑌂𑌜𑌯𑍋 𑌮𑌹𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍈𑌕𑌦𑍇𑌶𑍇𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌭𑍂𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌿𑌤𑌾𑌰𑌂 𑌚𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌤𑌮𑌾𑌨𑌨𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌗𑌣𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑌰𑍋𑌮𑌾 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑌭𑌾𑌷𑌤 ‖ ‖௧௪‖

பிறகு அர்ஜுனன் மிகவும் ஆச்சரியமான எல்லா உலகங்களையும் தன்னுடைய திருமேனியின் ஒருமூலையிலே வைத்துக்கொண்டும், எல்லா உலகங்களையும் நடத்திக் கொண்டும், மிகவும் ஆச்சரியமான—கணக்கில்லாத—ஞானம் முதலான நல்ல குணங்களை கூட்டங் கூட்டமாய் தன்னிடத்தில் வைத்துக் கொண்டும் இருக்கிற பகவானைப்பார்த்து, திகைத்து, மயிர்க்கூச்சல் அடைந்து, கீழே விழுந்து, ஸேவித்து, கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறான்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌵 𑌦𑍇𑌵 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾
𑌭𑍂𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌙𑍍𑌘𑌾𑌨𑍍 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥
𑌮𑍃𑌷𑍀𑌂𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌰𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍 ‖ ‖௧௫‖

𑌦𑍇𑌵 𑌤𑌵 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 | 𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌸𑌙𑍍𑌘𑌾𑌨𑍍| 𑌤𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌮𑌣𑍍𑌡𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌮𑍍 | 𑌤𑌥𑍇𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂 𑌕𑌮𑌲𑌾

ஸர்வாந் ப்ரஹ்மாணம் ப்ருதகீசம்-சதுர்முகமண்டஸ்தம் | ததா தேவ ஷிஸ்ருஷ்டாந் ஸர்வாந் ருஷீந் உரகாம்ச்ச வாஸுகிதக்ஷக ப்ரப்ருதீந் தீப்தாந் || ||கரு||

ஏ பிரபுவே! உம்முடைய திருமேனியில் எல்லா தேவர்களையும், கூட்டம் கூட்டமாய் எல்லாப் பிராணிகளையும், பதினான்கு லோகங்கள் அடங்கிய பிரும்மாண்டத்துக்குத் தலைவனான நான்முகனையும், அந்தப்பிரும்மாவின் இஷ்டப்படி நடக்கிற சிவனையும், தேவருஷி முதலான எல்லா ருஷிகளையும், வாஸுகி தக்ஷகன் முதலான ஜ்வலித்துக் கொண்டிருக்கிற பாம்புகளையும் பார்க்கிறேன்.

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் பச்யாமி த்வாம் ஸர்வ
தோऽநந்தரூபம் | நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவா
திம் பச்யாமி விச்வேச்வர விச்வரூப || ||கசு||

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் அநந்தரூபம் த்வாம் ஸர்வத: பச்யாமி | விச்வேச்வர-விச்வஸ்ய நியந்த: | விச்வரூப-விச்வசரீர! யதஸ்த்வமநந்த:, அதஸ்தவ நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவாதிம் ச பச்யாமி || ||கசு||

கைகளும், வயிறுகளும், முகங்களும், கண்களும், எத்தனையோ உள்ளவரும், எல்லையில்லாத திருமேனி உள்ளவருமான உம்மை எங்கும் பார்க்கிறேன். எல்லா லோகத்தையும் அடக்கி ஆளுகிறவரே! எல்லா உலகத்தையும் உடம்பாக உடையவரே! உமக்கு அளவில்லாதபடியாலே, உமக்கு இது முதல் என்றும், இது நடுவு என்றும், இது முடிவு என்றும் தெரியவில்லை. இவைகள் இருந்தால், நீர் கொடுத்த கண்ணால் பார்க்கமுடியும். [16]

கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச தேஜோராசிம் ஸர்வ
தோ தீப்திமந்தம் | பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தா
த்தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் || ||கஎ||

தேஜோராசிம் ஸர்வதோ தீப்திமந்தம் ஸமந்தாத் துர்நிரீக்ஷ்யம் தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் த்வாம் கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச பச்யாமி || ||கஎ||

ஓரே தேஜஸ்ஸாகவும், எங்கும் பரவியிருக்கும் காந்தியுள்ளவராகவும், பதினைந்து நாழிகையில் இருக்கும் ஸூரியனைப்போல பார்க்கமுடியாத திருமேனியை உடையவராயும், ஜ்வலித்துக் கொண்டிருக்கிற அக்கினிபோன்றவராயும், இன்ன விதமென்றும் இவ்வளவு என்றும் அளவிட முடியாதவராயுமிருக்கிற உம்மைக் கிரீடங்களையும், கதைகளையும், சக்கிரங்களையும் உடையவராயும் பார்க்கிறேன். உம்மிடத்தில் முன்னே பார்த்த சக்கிரம் முதலான ஆயுதங்களைப் பார்த்தபடியால், நீ கிருஷ்ணன்தான் என்று தோன்றுகிறது. உம்முடைய கிரீடத்தைப் பார்க்கிறபோது எல்லா உலகங்களுக்கும் ராஜாவென்றும் தெரிகிறது [ 17 ]

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம்
நிதானம் | த்வமவ்யய꞉ ஶாஶ்வததர்மகோப்தா ஸநாதநஸ்த்வம்
புருஷோ மதோ மே || ||௧௮||

உபநிஷத்ஸு "த்வே வித்யே வேதிதவ்யே" இத்யாதிஷு வேதிதவ்யதயா நிர்திஷ்டம் பரமக்ஷரம் த்வமேவ । த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதானம் - விஶ்வஸ்யாஸ்ய பர ஆதாரபூதஸ்த்வமேவ । த்வமவ்யய꞉ - வ்யயரஹித꞉ - யத்ஸ்வரூபோ யத்குணோ யத்விபவஶ்ச த்வம், தேநைவ ரூபேண ஸர்வதாऽவதிஷ்டஸே । ஶாஶ்வததர்மகோப்தா - ஶாஶ்வதஸ்ய நித்யஸ்ய வைதிகஸ்ய தர்மஸ்ய அவதாராதிபிர் கோப்தா | ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே - "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்", "பராத்பரம் புருஷம்" இத்யாதிஷ்வபிஹித꞉ ஸநாதந꞉ புருஷஸ்த்வமேவேதி மே மத꞉ - ஜ்ஞாத꞉ । யதுகுலதிலகஸ்த்வமேவம்பூத இதாநீம் ஸாக்ஷாத்க்ருதோ மயேத்யர்த꞉ ||௧௮||

உபநிஷத்துக்களில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட உயர்ந்த அக்ஷரம் என்பவர் நீர்தான். இந்த எல்லா உலகங்களையும் நீர்தான் முக்கியமாகத்தாங்குகிறீர். (அதாவது உடம்பை ஜீவன் தாங்குகிறான். அவனையும் நீர் தாங்குகிறீர்) உமக்கு ஒருவிதமான மாறுதலும் கிடையாது. அதாவது—உம்முடைய

1 ஸ்வரூபத்துக்கும், உம்முடைய குணங்களுக்கும், உம்முடைய 2 ஸொத்துக்களுக்கும் ஒருக்காலும் அழிவில்லை. அநாதியான வேதத்தில் சொன்ன தர்மங்களை இதுபோன்ற அவதாரங்களாலே நீர்தான் காப்பாற்றுகிறீர். உபநிஷத்துக்களில் நித்தியனாகவும், பெரியவனாகவும் சொல்லப்பட்டவர் நீர்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. முன்னே கிருஷ்ணனாக இருந்தவர்தான் இப்போது இந்த மாதிரி இருக்கிறீர் என்று இந்தக்கண்ணாலே பார்க்கிறேன். [18]

அநாதிமத்யாந்தமநந்தவீர்யமநந்தபாஹும் ஶஶிஸூர்ய
நேத்ரம்| பஶ்யாமி த்வாம் தீப்தஹுதாஶவக்த்ரம் ஸ்வதே
ஜஸா விஶ்வமிதம் தபந்தம் ॥ ॥௧௯॥

அநாதிமத்யாந்தம் - ஆதிமத்யாந்தரஹிதம், அநந்தவீர்யம் - அநவதிகாதிஶயவீர்யம்| வீர்யஶப்த: ப்ரதர்ஶநார்த்த:| அநவதிகாதிஶயஜ்ஞாநபலைஶ்வர்யவீர்யஶக்திதேஜஸாம் நிதிரித்யர்த்த:| அநந்தபாஹும் - அஸங்க்யேயபாஹும்| இதமபி ப்ரதர்ஶநார்த்தம்| அநந்தபாஹூதரவக்த்ராதிகம்| ஶஶிஸூர்யநேத்ரம் - ஶஶிவத் ஸூர்யவச்ச ப்ரஸாதப்ரதாபயுக்தநேத்ரம்| தேவாதீந் அநுகூலாந் நமஸ்காராதி குர்வாணாந் ப்ரதி ப்ரஸாத:; தத்விபரீதாந் அஸுரராக்ஷஸாதீந் ப்ரதி ப்ரதாப:| "ரக்ஷாம்ஸி பீதாநி திஶோ த்ரவந்தி ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா:" இதி ஹி வக்ஷ்யதே| தீப்தஹுதாஶவக்த்ரம் - தீப்தகாலாநலவத் ஸம்ஹாராநுகுணவக்த்ரம்| ஸ்வதேஜஸாவிஶ்வ

1. ஒருமாம்பழத்தை நாலுநாள் கூட வைத்திருந்தால், அது அழுகிப்போகிறது. ஒரு ஜீவன் ஒருக்கால் உயர்ந்த அறிவும், உயர்ந்த ஸொத்துக்களும் உள்ளவனாக இருக்கிறான். அவனுக்கே இன்னொரு ஸமயத்தில் அறிவு, பலம், ஸொத்துக்கள் எல்லாம் போய்விடுகின்றன. உமக்கு அப்படியில்லை.

2. பாஷ்யத்தில் 'விபவ' (ஸொத்து) என்கிற சொல் இருக்கிறது. ஸொத்துக்கு அழிவில்லையென்று சொல்லுவதால், அது நித்திய விபூதியாயிருக்கவேண்டும். இரண்டு விபூதியையும் சொல்லுவதானால், அழிவில்லையென்பதற்குத் திரவியத்தின் ஸ்வரூபத்திற்கு அழிவில்லையென்று பொருள்.

ஷம் தபந்த்ர-தேஜஃப்ராஹித்வேந வாக்யேஷு ஸ்வகீயேந தே
ஜஸா விஶ்வமிதம் தபந்தம் த்வாம் பஶ்யாமி - அநாதிமத்யாந்தம் ஸ
ர்வஸ்ய ஸ்ரஷ்டாரம் ஸர்வஸ்யாதாரபூதம் ஸர்வஸ்ய ப்ர
ஶாஸிதாரம் ஸர்வஸ்ய ஸம்ஹர்தாரம் ஜ்ஞாநாத்யபரிமித
குணஸாகரம் ப்ரதிஷ்டாரஹிதம் அநந்தவீர்யத்வேந ஸம
க்ஷாம் யதோபதேஶம் ஸாக்ஷாத்கரோமீத்யர்த்தঃ | அநக
ஷிநுதிவ்யதேஹே கநேநகோதராதிகம் கதம்? உதரமேவ
த்வதே - அநகஸாக்ஷித்வதேஶாத நஞ்சவரிணோதவ்யுபே
ஷதா யதோதிதோதாதாயஃ, கயஶ்வ யதோதிதத்வாதாஃ।
தச்சக்ஷுஷ்மந்தே நேத்ரூபதிஷ்வ ந விரோயஃ ॥௧௯॥

நீர் முதலும், நடுவும், முடிவுமில்லாதவர். அளவில்லாமல் உயர்ந்தஅறிவு, பலம் முதலான குணங்களுக்கு இருப்பிடம். உம்முடைய கைகள் முதலான அவயவங்களுக்குக் கணக்கில்லை. உம்முடைய கண்கள் சந்திரன்போல வணங்குகிறவர்களுக்கு குளிர்ந்தும், வணங்காதவர்களுக்கு ஸூரியன்போல கடுமையாகவுமிருக்கின்றன. உம்முடைய முகங்கள் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற பிரளயகாலாக்கினிபோல் உலகத்தை அழிக்கும்போலிருக்கின்றன. எல்லா உலகத்தையும் அவமானப்படுத்தும்படியான ஸாமர்த்தியத்தாலே, உலகத்தைக் கொளுத்துகிறீர்போலிருக்கிறது. இப்படி உம்மைப் பார்க்கிறேன். கீழே எந்தஸங்கதிகளைப்பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டேனோ, அந்தஸங்கதிகளை எல்லாம் நீர் சொன்னபடியே கண்ணால் பார்க்கிறேன். அதாவது- எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுபவரும், தாங்குகிறவரும், அடக்கியாளுகிறவரும், அழிக்கிறவரும், அறிவு முதலான கணக்கில்லாத- அளவில்லாத குணங்களுக்கு ஸமுத்திரம் போன்றவருமான உம்மைப்பார்க்கிறேன். ஒரு உடம்பிலே அநேக வயிறு முதலானவைகள் என்னமாக இருக்கும் என்றால்—எல்லையில்லாமல்பெரிதான ஒரே இடுப்பிலிருந்து அநேக வயிறுகள் மேலே கிளைத்து இருக்கின்றன. கீழேயும் அநேக கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு முகத்துக்கும் இரண்டு கண்கள் இருக்கின்றன.

அவ— ஏவம்பூதம் த்வாம் த்ருஷ்ட்வா தேவாதயோऽஹம் ச ப்ரவ்யதிதா ஸ்ம இத்யாஹ—

த்யாவாப்ருதிவ்யோரிதமந்தரம் ஹி வ்யாப்தம் த்வயைகேந
திஶஶ்ச ஸர்வா: । த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவே
தம் லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந் ॥ ॥௨௦॥

த்யுஶப்த: ப்ருதிவீஶப்தஶ்சோபயாவதிபூதாநாமூர்த்வாதஸ்தநாநாம் ச லோகாநாம் ப்ரதர்ஶநார்த: । த்யாவாப்ருதிவ்யோரந்தரம் ஹ்யவகாஶ: । யஸ்மிந்நவகாஶே ஸர்வே லோகாஸ்திஷ்டந்தி, ஸர்வோऽயமவகாஶோ திஶஶ்ச ஸர்வாஸ்த்வயைகேந வ்யாப்தா: । த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதமநந்தாயாமவிஸ்தாரமத்யத்புதமத்யுக்ரம் ச ரூபம் த்ருஷ்ட்வா லோகத்ரயம் ப்ரவ்யதிதம்—யுயுத்ஸயா ஆகதேஷு ப்ரஹ்மாதிதேவாஸுரபித்ருகணஸித்தகந்தர்வயக்ஷராக்ஷஸேஷு ப்ரதிகூலாநுகூலோதாஸீநரூபம் லோகத்ரயம் ஸர்வம் ப்ரவ்யதிதமத்யந்தபீதமபூத் । மஹாத்மந் அபரிச்சேத்யமநோவ்ருத்தே । ஏதேஷாமப்யர்ஜுநஸ்யேவ விஶ்வாஶ்ரயரூபஸாக்ஷாத்காரஸாதநம் திவ்யம் சக்ஷுர்பகவதா தத்தம் । கிமர்தமிதி சேத் — அர்ஜுநாய ஸ்வைஶ்வர்யம் ஸர்வம் ப்ரதர்ஶயிதும் । அத உக்தம் "த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந்" இதி ॥ ॥௨௦॥

அவ—இந்த மாதிரியான உம்மைப்பார்க்கும் போது, இந்திரன் முதலான தேவர்களும் நானும் நடுங்குகிறோம். நடுங்குகிறதில் அவர்களுக்கும் எனக்கும் வாசியில்லை என்று அர்ஜுநன் சொல்லுகிறன்—

பூமிக்குக் கீழ்ப்பட்ட எல்லா லோகங்களிலும், பூமியிலும், பூமிக்கு மேற்பட்ட எல்லா உலகங்களிலும், எல்லா திக்குகளிலும் நீர் ஒருவரே நிறைந்து இருக்கிறீர். எல்லையில்லாத நீளமும் அகலமுமுள்ள, மிகுந்த ஆச்சரியத்தையும், மிகுந்த பயத்தையும் கொடுக்கிற இந்த உடம்பைப் பார்த்து மூன்றுவிதமான லோகமும்

நடுங்குகின்றன. அதாவது—இந்தச் சண்டையைப் பார்க்கிறதற்காக பிரும்மாமுதலான தேவர்களும், அஸுரர்களும், பிதுருக்களும், ஸித்தர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும் எல்லாரும்வந்திருக்கிறார்கள். இவர்களில்சிலர் உம்மிடத்தில் பிரீதியுள்ளவர்கள். சிலர்த்வேஷமுள்ளவர்கள். சிலர்இரண்டுமில்லாதவர்கள். இப்படிமூன்றுவிதமான இந்தஎல்லாரும்நடுங்குகிறார்கள். உம்முடைய எண்ணத்தை அளவிடமுடியாது. பகவான் அர்ஜுநனுக்குத்தன்னுடைய பெருமையைக் காட்டுவதற்காக கீழ்ச்சொன்ன பிரும்மாமுதலான எல்லாருக்கும் உயர்ந்த கண்ணை அர்ஜுனுக்குக்கொடுத்ததுபோல் கொடுத்துஇருக்கிறார். மனிதர்களுக்குக் கொடுக்கவில்லை-என்று அவர்கள் பார்த்ததாகச்சொல்லாததினாலே ஏற்படுகிறது. ஸஞ்யஜருக்குமட்டும் வியாஸருடைய அனுக்கிரஹத்தினாலே இந்தரூபம் முதலானது தோன்றிற்று. பிரும்மா முதலானவர்களுக்கு இந்த உயர்ந்த கண்ணைக்கொடுத்தார். ஏனென்றால் அவர்களும் நடுங்குவது முதலானதை அர்ஜுநன் பார்ப்பதற்காக. [20]

அமீ ஹி த்வா ஸுரஸங்கா விஶந்தி கேசித்பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி। ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா: ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ॥ ॥௨௧॥

அமீஸுரஸங்கா: உத்க்ருஷ்டாஸ்த்வாம் விஶ்வாஶ்ரயமவலோக்ய ஹ்ருஷ்டமனஸஸ்த்வதந்திகம் விஶந்தி। தேஷ்வேவ கேசிதத்யுக்ரம் த்வாகாரமவலோக்ய பீதா: ப்ராஞ்ஜலய: ஸ்வஜ்ஞானானுகுணம் ஸ்துதிரூபாணி வாக்யானி க்ருணந்தி-உச்சாரயந்தி। அபரே மஹர்ஷிஸங்கா: ஸித்தஸங்காஶ்ச பராவரதத்வயாதாத்ம்யவித: ஸ்வஸ்தீத்யுக்த்வா புஷ்கலாபிர்பகவதனுரூபாபி: ஸ்துதிபி: ஸ்துவந்தி ॥ ॥௨௧॥

உயர்ந்தவர்களான இந்த தேவக்கூட்டங்கள் எல்லாஉலகங்களையும் தாங்குகிற இந்தத் திருமேனியை ஸேவித்து, மிகுந்த ஸந்தோஷத்துடன் உம்மண்டையில் வருகிறார்கள். அவர்களுக்குள் சிலர் பயந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, அவர்களுக்குத் தெரிந்த

வரையில் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். உலகத்தில் உயர்ந்த வஸ்துக்களையும், இளப்பமான வஸ்துக்களையும் உள்ளபடி கண்டு பிடித்த பிருகுமுதலான சில பெரியருஷிகளின் கூட்டங்களும், ஸநகர்முதலான ஸித்தர்கள் கூட்டங்களும் 1 க்ஷேமமுண்டாக வேணுமென்று சொல்லி, பிறகு பகவானுக்குத் தகுந்தபடி அதிகமாக ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். [21]

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾 𑌵𑌸𑌵𑍋 𑌯𑍇 𑌚 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌽𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌮𑌰𑍁𑌤𑌶𑍍𑌚𑍋𑌷𑍍𑌮𑌪𑌾𑌶𑍍𑌚 । 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷𑌾𑌸𑍁𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 ॥௨௨॥

𑌊𑌷𑍍𑌮𑌪𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑌃, "𑌊𑌷𑍍𑌮𑌭𑌾𑌗𑌾 𑌹𑌿 𑌪𑌿𑌤𑌰𑌃" 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 ॥

வஸுக்கள் முதலான 2 எல்லோரும் உம்மைப்பார்த்து, திகைத்து, உம்மையே பார்க்கிறார்கள். [22]

𑌰𑍂𑌪𑌂 𑌮𑌹𑌤𑍍𑌤𑍇 𑌬𑌹𑍁𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌬𑌹𑍁𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌾𑌦𑌮𑍍 । 𑌬𑌹𑍂𑌦𑌰𑌂 𑌬𑌹𑍁𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑌰𑌾𑌲𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌹𑌮𑍍 ॥

𑌬𑌹𑍍𑌵𑍀𑌭𑌿𑌰𑍍𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌭𑌿𑌰𑌤𑌿𑌭𑍀𑌷𑌣𑌾𑌕𑌾𑌰𑌂 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌹𑌂 𑌚 𑌤𑌵𑍇𑌦𑍃𑌶𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾, 𑌅𑌤𑍀𑌵 𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾 𑌭𑌵𑌾𑌮𑌃 ॥

॥௨௩॥

சண்டையைப் பார்ப்பதற்கு வந்திருக்கிற—கீழ் சொல்லப்பட்ட மூன்று விதமான எல்லாரும், நானும், உம்முடைய முகத்தி

---

1. வேலைக்காரன் யஜமானனைக் கண்டவுடன் சொல்ல வேண்டிய சொல்.

2. எல்லோரும்—ருத்திரர்கள், ஆதித்தியர்கள், வஸுக்கள், ஸாத்தியர்கள், விசுவேதேவர்கள், அசுவினீ தேவதைகள், மருத்துக்கள், பிதுருக்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ஸித்தர்கள்—என்று.

விருக்கிற அநேகமான 1. தெத்துப்பல்லுக்களாலே மிகவும் பயத்தை உண்டு பண்ணுகிற இவ்விதமான உருவத்தைப் பார்க்கிறபோது நடுங்குகிறோம். [23]

𑌨𑌭𑌃𑌸𑍍𑌪𑍃𑌶𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌮𑌨𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌾𑌨𑌨𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌵𑌿𑌶𑌾𑌲
𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌧𑍃
𑌤𑌿𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 𑌶𑌮𑌂 𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 ॥ ॥௨௪॥

𑌨𑌭𑌃𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌃 ‘𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑍇 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍’, ‘𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍’, ‘𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑌃 𑌪𑌰𑌾𑌕𑍇’ ‘𑌯𑍋 𑌅𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌂, 𑌗𑍁𑌣𑌤𑍍𑌰𑌯𑌾𑌤𑍀𑌤𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌾𑌸𑍀; 𑌸𑌵𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍇𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯, 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑌯𑌾 𑌨𑌭𑌃𑌸𑍍𑌪𑍃𑌶𑌿𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍; ‘𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌿𑌦𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 । 𑌦𑍀𑌪𑍍𑌤𑌮𑌨𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌾𑌨𑌨𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌵𑌿𑌶𑌾𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾, 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾-𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌭𑍀𑌤𑌮𑌨𑌾𑌃, 𑌧𑍃𑌤𑌿𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌮𑌿-𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌣𑌂 𑌨 𑌲𑌭𑍇 । 𑌮𑌨𑌸𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌶𑌮𑌂 𑌨 𑌲𑌭𑍇 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋-𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌨𑍍! 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑌮𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌘𑍋𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾, 𑌪𑍍𑌰𑌶𑌿𑌥𑌿𑌲𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌯𑌵𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌸𑌂𑌜𑌾𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

எங்கும் நிறைந்தவனே! பரமபதத்தளவும் போயிருப்பதும், ஜ்வலித்துக் கொண்டிருப்பதும், வெளுப்பு, சிகப்பு, கருப்பு முதலான அநேக வர்ணங்களுள்ளதும், வாயைத்திறந்து கொண்டிருப்பதும், அகன்ற கண்கள் ஜ்வலித்துக்கொண்டிருப்பதுமான உம்முடைய உடம்பைப் பார்த்து, நான் மிகவும் 2 நடுநடுங்குகிறேன். எனக்குத் தைரியம் போய்விட்டது. உடம்பு பதறுகிறது. மன

1. தெத்துப்பல் என்றால், புலி, காடி, சிங்கம், குரங்கு, பாம்பு முதலானவைகளுக்கெல்லாம் கடைவாயில் நீளமாய் இரண்டு பக்கத்திலும் பல்லுக்கள் இருக்கும். அவைகள்

2. பயந்தவன் ஒருவனாய் இருட்டில் போனால், திரும்பிப் பார்த்தாலும் பயப்படுவன், பார்க்காத பொழுதும் பயப்படுவன், அதுபோல

தும், இந்திரியங்களும் வியாகுலங்களா (கலங்கி) யிருக்கின்றன. கண்ணால் பார்த்தாலும் பயமாயிருக்கிறது. பார்க்காதபோனாலும் பயமாயிருக்கிறது. [24]

தம்ஷ்ட்ராகராலானி ச தே முகானி த்ருஷ்ட்வைவ காலானலஸந்நிபானி |
திசோ ந ஜாநே ந லபே ச சர்ம ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ || ||25||

யுகாந்தகாலாநலவத் ஸர்வஸம்ஹாரே ப்ரவ்ருத்தானி அதிகோராணி தவ முகானி த்ருஷ்ட்வா திசோ ந ஜாநே | ஸுகம் ச ந லபே | ஜகந்நிவாஸ, தேவேச-ப்ரஹ்மாதீநாம் ஈச்வராணாம் அபி மஹேச்வர | மாம் ப்ரதி ப்ரஸந்நோ பவ, யதா அஹம் ப்ரக்ருதிம் கதோ பவாமி, ததா குர்வித்யர்த: ||25||

பிரளயகாலத்தில் பிரும்மலோகம்முதல் எல்லா உலகங்களையும் துலைப்பதற்காக ஒரு நெருப்பு கிளம்புகிறது என்று சொல்லியிருக்கிறது. அதுபோல எல்லா உலகங்களையும் துலைப்பதற்காகக்கிளம்பியவைகள்போல் இருக்கின்றன உம்முடைய முகங்கள். இவைகளைப்பார்த்த யாரும் நடு நடுங்குகிறார்கள். அப்படிப்பட்ட முகங்களைப்பார்த்து, எனக்குக்கிழக்கு மேற்குத் தெரியவில்லை. ஸந்தோஷமில்லை. எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமானவரே! எல்லா உலகங்களுக்கும் ராஜாக்களான பிருமாமுதலானவர்களுக்கும் உயர்ந்த ராஜாவே! என் விஷயத்தில் தயவுபண்ணவேணும். என்னை முன்போல் ஆகும்படி பண்ணவேணும். அதாவது—ஸந்தோஷமாகத் தைரியத்துடன் உம்மிடத்தில் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தேன். இப்போது அவை எல்லாம் போய்விட்டது. இதேமாதிரி அரை நாழிகை இருந்தால் செத்துப்போய் விடுவேன். இதைப்போக்கி, முன்போல் பண்ணவேணும். [25]

ஏவம் ஸர்வஸ்ய ஜகத: ஸ்வாயத்தஸ்திதிப்ரவ்ருத்தித்வம் தர்சயந், பார்த்தஸாரதி ராஜவேஷச்சந்நாஸுராம்சாநாம் தார்த்தராஷ்ட்ராணாம் யௌதிஷ்டிரேஷ்வநுப்ரவிஷ்டாநாம் ச ஸர்வேஷாம் ஸம்ஹாரேண பூபாராவதரணம் ஸ்வஸங்கல்பேந கரிஷ்யமாணம் பார்த்தாய தர்சயாமாஸ |

ஸர்வ லோகாச்ரயத்வம் ஸர்வஸ்ய ப்ரஶாஸித்ருத்வாதிகம் ஸர்வைச்வர்யம் ஸாக்ஷாத்க்ருத்ய, தஸ்மிந்நேவ ஸர்வஸ்மிந் ஸர்வாத்மநி பார்த்தஸாரதௌ ராஷ்ட்ராதீநாம் ஸம்ஹாரம் அநாகதமபி தத்ஸங்கல்பேந ப்ரவ்ருத்தம் வக்ஷ்யமாணம் பச்யந்நிதம் ப்ராஹ—

அமீ ச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ராஸ்ஸர்வே ஸஹைவாவநிபாலஸங்கை: । பீஷ்மோ த்ரோண: ஸூதபுத்ரஸ்ததாஸௌ ஸஹாஸ்மதீயைரபி யோதமுக்யை: ॥

வக்த்ராணி தே த்வரமாணா விசந்தி தம்ஷ்ட்ராகராலாநி பயாநகாநி । கேசித்விலக்நா தசநாந்தரேஷு ஸந்த்ருச்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை: ॥ ॥௨௭॥

அமீ த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா: துர்யோதநாதயஸ்ஸர்வே, பீஷ்மோ த்ரோணஸ்ஸூதபுத்ர: கர்ணஶ்ச, தத்பக்ஷீயா அவநிபாலஸங்காஶ்ச, அஸ்மதீயைரபி கைஶ்சித்யோதமுக்யைஸ்ஸஹ த்வரமாணா தம்ஷ்ட்ராகராலாநி பயாநகாநி தவ வக்த்ராணி விநாசாய விசந்தி । தத்ர கேசிச்சூர்ணிதைருத்தமாங்கைர்தசநாந்தரேஷு விலக்நாஸ்ஸந்த்ருச்யந்தே ॥ ॥௨௬-௨௭॥

அவ—கீழ்ச்சொன்னபடி எல்லா உலகங்களின் இருப்பும், அதின் வேலைகளும், தன் அதீநமென்று பகவான் அர்ஜுநனுக்குக் காண்பித்தான். துரியோதநன் முதலானவர்களும், தரும புத்திரர் கக்ஷியில் சேர்ந்த சிலபேர்களும் ராஜஉருவமே யொழிய, அஸுரர்கள். அவர்களைக் கொன்று பூமியின் சுமையைப் போக்குவதற்காகப் பகவான் கிருஷ்ணனாய் அவதரித்தான். தன்னுடைய அந்த இஷ்டத்தைத்தானே செய்யப் போகிறதாகவும் அர்ஜுநனுக்குக் காண்பித்தான். அந்த அர்ஜுநனும் பகவான் எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுகிறது முதலான எல்லா ஆளுகையைக் கண்ணாலே பார்த்து, விளக்கு வெட்டிப் பூச்சிகள் விளக்கில் வந்து விழுந்து சாவதுபோல், அந்த பகவானுடைய வாயில் துரியோதநன் முதலானவர்கள் ஓட்டமாய் ஓடி வந்து விழுந்து

சாவதை, வரப்போகிறதாக இருந்தாலும், பகவான் அநுக்ரஹத்தாலே கிடைத்த திவ்யக் கண்ணாலேபார்த்துச் சொல்லுகிறான்.

இந்தத் துரியோதநன்முதலான த்ருதராஷ்டிரனுடையஎல்லாப்பிள்ளைகளும், பீஷ்மரும், த்ரோணரும், கர்ணனும், இன்னும் அவன்கக்ஷியில் சேர்ந்த எல்லா ராஜாக்களுடைய கூட்டங்களோடேயும், நம்முடைய கக்ஷியில் இருக்கும் சிலபேர்களோடேயும் மிகுந்த வேகமாய், தெத்துப்பல்லுகளைப் பார்க்கச்செய்தே நடுக்கத்தை உண்டுபண்ணுகிறவைகளான உம்முடைய வாய்களில் சாவதற்காக நுழைகிறார்கள். அவர்களில் சிலபேர்களின் மண்டைகள்பல்லாலேகடிபட்டுபற்களின் இடுக்குகளில் ஈஷிக்கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றன. (26-27)

𑌯𑌥𑌾 𑌨𑌦𑑀𑌨𑌾𑌂 𑌬𑌹𑌵𑍋𑌽𑌮𑍍𑌬𑍁𑌵𑍇𑌗𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑍇𑌵𑌾𑌭𑌿
𑌮𑍁𑌖𑌾 𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌤𑌵𑌾𑌮𑑀 𑌨𑌰𑌲𑍋𑌕𑌵𑑀𑌰𑌾 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌭𑌿𑌵𑌿𑌜𑍍𑌵𑌲𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௨௮॥

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌦𑑀𑌪𑍍𑌤𑌂 𑌜𑍍𑌵𑌲𑌨𑌂 𑌪𑌤𑌙𑍍𑌗𑌾 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌶𑌾𑌯 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌵𑍇
𑌗𑌾𑌃 । 𑌤𑌥𑍈𑌵 𑌨𑌾𑌶𑌾𑌯 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌤𑌵𑌾𑌪𑌿 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾
𑌣𑌿 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌵𑍇𑌗𑌾𑌃 ॥ ॥௨௯॥

𑌏𑌤𑍇 𑌰𑌾𑌜𑌲𑍋𑌕𑌾 𑌬𑌹𑌵𑍋 𑌨𑌦𑑀𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑌾𑌹𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌿𑌵, 𑌪𑍍𑌰𑌦𑑀𑌪𑍍𑌤𑌜𑍍𑌵𑌲𑌨𑌮𑌿𑌵 𑌚 𑌪𑌤𑌙𑍍𑌗𑌾𑌃 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌭𑌿𑌵𑌿𑌜𑍍𑌵𑌲𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌤𑍍𑌵𑌰𑌮𑌾𑌣𑌾 𑌨𑌾𑌶𑌾𑌯 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 ॥௨௮-௨௯॥

இந்த வெகு ராஜக்கூட்டங்கள் ஸமுத்திரத்தில் அநேகம் ஆறுகள் போலவும், ஜ்வலித்துக்கொண்டிக்கிற நெருப்பில் விளக்குவெட்டுப்பூச்சிகள் போலவும், உம்முடைய ஜ்வலித்துக்கொண்டிருக்கிற திறந்த வாய்களில் தாங்களாகவே வெகுவேகமாய் தாங்கள் அழிவதற்காகப்போய் நுழைகிறார்கள். 1 [28-29]

1. ஆறு உதாரணத்தாலே ஒருவன் தனக்கு வரும் கெடுதலிலிருந்து தானாக விலகமுடியாதென்றும், விளக்கு வெட்டுப்பூச்சி உதாரணத்தாலே, அந்தக் கெடுதலையும் தானாக ஆசைப்பட்டு ஒருவேலையைச்செய்து வருவித்துக்கொள்ளுகிறான் என்றும் காட்டப்படுகிறது. மேலும். முதல் உதாரணத்தாலேஎத்தனை பேர்கள்வந்து நுழைந்தாலும்,பகவான்

லேலிஹ்யஸே க்³ரஸமாந꞉ ஸமந்தால் லோகாந் ஸமக்³ராந்
வத³நைர்ஜ்வலத்³பி⁴꞉ | தேஜோபி⁴ராபூர்ய ஜக³த் ஸமக்³ரம்
பா⁴ஸஸ்தவோக்³ரா꞉ ப்ரதபந்தி விஷ்ணோ || ||௩௦||

ராஜலோகாந் ஸமக்³ராந் ஜ்வலத்³பி⁴ர்வத³நைர்க்³ரஸமாந꞉ கோபவேகேந தத்³ருதி⁴ராவஸிக்தமோஷ்டபுடாதி³கம் லேலிஹ்யஸே - புந꞉ புநர்லேஹநம் கரோஷி | தவாதிகோ⁴ரா பா⁴ஸ꞉ ஸமக்³ரம் ஜக³த் தேஜோபி⁴ராபூர்ய ஸந்தப்தம் ப்ரதபந்தி || ||௩௦||

அ.— உலகத்தில் வஸ்துக்கள் தாமாக அழிகிறதா? அவைகளை ஈசுவரன் அழிக்கிறானா? தாமாக அழிகிறதானால், அழிக்கிற வேலை ஈசுவரனுடையது என்று சொல்லுவது ஒட்டாதே. இவர்கள் தாங்களாக நுழைகிறார்கள் என்று சொல்வது எப்படி?— என்றால் சொல்லுகிறார்.

1. ஜ்வலிதங்களாகக்கொண்டிருக்கிற வாய்களாலே சண்டைக்கு வந்திருக்கிற எல்லா ராஜக்கூட்டங்களையும் சாப்பிட்டுக்கொண்டு, கோபம் தாங்காமல், உதட்டில் வருகிற அவர்களின் ரத்தத்தை நாக்கால் அடிக்கடி நக்குகிறீர். உம்முடைய மிகவும் கடுமையான காந்திகளால், பங்குனி மாதத்தில் பதினைந்துநாழி வெய்யிலால் போல், எல்லா உலகங்களும் நிறைந்து சாப்பிடுவதற்குச் சமைக்கப்படுவதுபோலிருக்கின்றன. அதாவது— பிரும்மா முதலானவர்களாலும் அந்தக் காந்தியைத் தாங்கமுடியவில்லையென்று கருத்து. [30]

---

நிறைகிறதில்லை என்றும், இரண்டாவது உதாரணத்தாலே நாசம் உடனே உண்டாகிறதென்றும் காட்டப்படுகிறது. ஒன்று தண்ணியினால் சாகிறதென்றும், ஒன்று நெருப்பினால் சாகிறதென்றும் காட்டப்படுகிறது.

1. உலகத்தைப் பகவான் அழிப்பதற்குக் காரணம் அந்தந்த ஜீவன்களின் கொடுமையான கர்மங்கள் (வேலைகள்). அவைகளாலே கோபித்துக்கொண்டு பகவான் அழிக்கிறான். இவர்களைப் பகவான்தான் தன்வாயில் தானே வந்துவிழும்படி செய்கிறான்.

ஆக்²யாஹி மே கோ ப⁴வாநுக்³ரரூபோ நமோऽஸ்து தே தே³வவர ப்ரஸீத³ | விஜ்ஞாதுமிச்சா²மி ப⁴வந்தமாத்³யம் ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் || ||௩௧||

“த³ர்ஶயாத்மாநமவ்யய”மிதி தவைஶ்வர்யம் நிரங்குஶம் ஸாக்ஷாத்கர்தும் ப்ரார்தி²தேந ப⁴வதா நிரங்குஶைஶ்வர்யம் த³ர்ஶயதாऽதிகோ⁴ரரூபமித³மாவிஷ்க்ருதம் | கிமதிகோ⁴ரரூப: கோ ப⁴வாந் - கிம் கர்தும் ப்ரவ்ருத்த இதி ப⁴வந்தம் ஜ்ஞாதுமிச்சா²மி | தவாபி⁴ப்ரேதாம் ப்ரவ்ருத்திம் ந ஜாநாமி | ததா³க்²யாஹி மே | நமோऽஸ்து தே தே³வவர ப்ரஸீத³ - நமஸ்தேऽஸ்து ஸர்வேஶ்வர | ஸர்வம் கர்தும் கேநாபி⁴ப்ராயேணேத³ம் ஸம்ஹாரரூபமாவிஷ்க்ருதமிதி த்வாம் ப்ரஸாத³ம் குரு ஸ்வ || ||௩௧||

நீர் தடங்கலில்லாமல் எல்லா உலகங்களையும் ஆளுவது முதலானவைகளைப் பார்க்க ஆசைப்பட்டு, அதைக்காட்டவேணுமென்று வேண்டினேன். தேவரீர் அதைக்காட்டினீர். நானும் அதைப் பார்த்தேன். ஆனால் யாரும் மிகவும் நடுங்கக்கூடிய இந்த உடம்பைக்காண்பித்தீர். இவ்வளவு கடுமையான உடம்போடுகூடிய நீர் யார்? நீர் என்னவேலை செய்கிறதற்கு ஆரம்பித்திருக்கிறீரோ. 1 அது எனக்குத் தெரியவில்லை அதை எனக்குச் சொல்லவேணும். எல்லா உலகங்களுக்கும் மஹாராஜாவே! உம்மை நான் ஸேவிக்கிறேன். இந்த எண்ணத்தினாலே 'எல்லா உலகங்களையும்

1. நான் உம்மிடத்தில் பக்தியுள்ளவனாதலால், நடுக்கத்தை உண்டு பண்ணும் உருவத்தை எனக்குக்காட்டமாட்டீர். காட்டினதற்குக் கருத்து என்ன?' என்று அதின் கருத்தை அறியாமையால் அர்ஜுநன் கேட்கிறான். அவனுக்கு உபதேசம் பண்ணினதாலேயும், தான் கேட்டுக்கொண்டபடி பகவான் தன்னைக் காட்டினதாலும், அவர் பகவான் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் உம்முடைய ஸ்வரூபம் என்ன, உம்முடைய பெயர் என்ன? என்று அவன் கேட்கவில்லை. ஆகையால் வியாக்கியானத்தில் முன் சொன்னபடியே பொருள்கொள்ளவேணும். "உம்முடைய பிரவிருத்தியை நான் அறியவில்லை" என்று சுலோகத்தில் சொல்லியிருப்பதாலும் இது ஏற்படுகிறது.

அழிக்கத்தகுந்த இந்த ரூபத்தைக் காட்டினேன்" என்று சொல்லி, முன்போல் எல்லா உலகங்களுக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய திருமேனியோடு ஸேவை ஸாதிக்கவும்வேணும். [31]

ஏவம் — ஆஶ்ரிதவாத்ஸல்யாதிரேகேண விஶ்வைஶ்வர்யம் தர்ஶயதா பகவதா அத்யந்தகோரரூபாவிஷ்கரணே கோऽபிப்ராய இதி ப்ருஷ்டோ பகவாந் ஸ்வாபிப்ராயமாஹ— பார்த்தோத்யோகேந விநாபி தார்த்தராஷ்ட்ரப்ரமுகமஶேஷம் ராஜலோகம் நிஹந்துமஹமேவ ப்ரவ்ருத்த இதி ஜ்ஞாபநாய கோரரூபாவிஷ்கார:, தஜ்ஜ்ஞாபநம் ச பார்த்தஸ்ய யுத்தோத்ஸாஹஜநநாயேதி—

ஶ்ரீ பகவாநுவாச—

காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்தோ லோகாந்ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்த: । ருதேऽபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே யேऽவஸ்திதா: ப்ரத்யநீகேஷு யோதா: ॥ ௩௨ ॥

கலயதி—கணயதீதி கால: । ஸர்வேஷாம் தார்த்தராஷ்ட்ரப்ரமுகாணாம் ராஜலோகாநாமாயுஷோऽவஸாநம் கணயந்நஹம் தத்க்ஷயக்ருத் கோரரூபேண ப்ரவ்ருத்தோ ராஜலோகாந் ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்தோऽஸ்மி । அதோ மத்ஸங்கல்பாதேவ த்வாம்ருதேऽபி—த்வதுத்யோகமந்தரேணாபி ஏதே தார்த்தராஷ்ட்ரப்ரமுகா: ப்ரத்யநீகேஷு அவஸ்திதா யோதா:, ஸர்வே ந பவிஷ்யந்தி—விநங்க்ஷ்யந்தி ॥ ௩௨ ॥

அவ— என்னிடத்திலிருக்கும் கணக்கில்லாத குற்றங்களைப் பாராட்டாமல், அளவில்லாதப் பிரீதிபண்ணி, எல்லா லோகங்களையும் ஆளுவதை எனக்குக் காட்டுகிற தேவரீர் எல்லாரும் பயப்படக்கூடிய ரூபத்தைக் காண்பிப்பதற்குக் கருத்து என்ன என்று அர்ஜுநனால் கேட்கப்பட்ட பகவான் தன் எண்ணத்தைச் சொல்லுகிறார். உன்னுடைய பிரயத்தினமில்லாமலேயே துரியோதனன் முதலான எல்லா துஷ்டராஜாக்களையும் நானே கொல்ல ஆரம்பி

த்திருக்கிறேனென்று உனக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்த உருவத்தைக் காட்டினேன். அப்படித் தெரியப்படுத்துவதும் உன்னைச் சண்டைக்குக் கிளப்புவதற்காக என்று சொல்லுகிறார் –

பகவான் சொல்லுகிறார்—

துரியோதனன் முதலான எல்லா துஷ்டராஜாக்களின் ஆயுஸ்ஸு இப்போது முடிகிறது என்று எண்ணி, அவர்களைக் கொல்லுவதற்காக இந்த பயங்கரமான உருவத்துடன் வளர்ந்து, ஆசையுடன் இவர்களைக் கொல்ல ஆரம்பித்திருக்கிறேன். ஆகையால் என் எண்ணத்தினாலேயே, உன் பிரயத்தினம் இல்லாவிட்டாலும், உன்னுடைய சத்துருக்களான துரியோதனன் முதலானவர்கள் எல்லாரும் மடியப்போகிறார்கள். [32]

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஶோ லபஸ்வ ஜித்வா ஶத்ரூந் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம் | மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந் || ||33||

தஸ்மாத்த்வம் தாந் ப்ரதி யுத்தாயோத்திஷ்ட | தாந் ஶத்ரூந் ஜித்வா யஶோ லபஸ்வ | யதேஷ்டம் ராஜ்யம் ச ஸம்ருத்தம் புங்க்ஷ்வ | மயைவைதே க்ருதாபராதா: பூர்வமேவ நிஹதா: ஹநநே விநியுக்தா: | த்வம் து தேஷாம் ஹநநே நிமித்தமாத்ரம் பவ, மயா ஹந்யமாநாநாம் ஶஸ்த்ராதிஸ்தாநீயோ பவ | ஸவ்யஸாசிந் ! "ஷச ஸமவாயே" | ஸவ்யேந ஶராஸநஸசநஶீல: ஸவ்யஸாசீ-ஸவ்யேநாபி கரேண ஶராஸநாக்ருஷ்டஶர: கரத்வயேந யோத்தும் ஸமர்த இத்யர்த: || ||33||

அவ— என்பிரயத்தினமில்லாமலே துரியோதனன் முதலானவர்கள் மடிவார்களானால், என்னை ஏன் கிளப்புகிறீர் என்றால், சொல்லுகிறார்—

ஆகையாலே நீ அவர்களுடன் சண்டைக்கு 1 கிளம்பு. அவர்களை ஜயித்து கீர்த்தியை அடை. நியாயமாய் கிடைக்கிற எல்லா

1. உன்னைக் கிளப்புவது என்னிடத்தில் பக்தியுள்ள உனக்கு ஜயத்தையும், கீர்த்தியையும். கொடுப்பதற்காக.

ஸுகங்களாலும் நிறைந்த ராஜ்ஜியத்தையும் அநுபவி. கொடுமையான குற்றங்களைப் பண்ணியிருக்கிற இவர்களை நான் முன்னமேயே கொல்லுவதாகத் தீர்மானித்துவிட்டேன். நீ பேருக்குத்தான் இருக்கவேணும். வெட்டுகிறவனுக்குக் கத்தியிருப்பதுபோல்; கையாலே முறிக்கத் தகுந்தவனுக்குக் கோடாலி போல். 1 இடது கையால்கூட பாணத்தைவிடத் தகுந்தவனே! ஸாமிகையாயிற்று. இரண்டு கைகளாலும் சண்டை போடு. [33]

𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌚 𑌭𑍀𑌷𑍍𑌮𑌂 𑌚 𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌣𑌂 𑌤𑌥𑌾𑌽𑌨𑍍𑌯𑌾
𑌨𑌪𑌿 𑌯𑍋𑌧𑌵𑍀𑌰𑌾𑌨𑍍 । 𑌮𑌯𑌾 𑌹𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌜𑌹𑌿 𑌮𑌾 𑌵𑍍𑌯
𑌥𑌿𑌷𑍍𑌠𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌜𑍇𑌤𑌾𑌸𑌿 𑌰𑌣𑍇 𑌸𑌪𑌤𑍍𑌨𑌾𑌨𑍍 ॥ ॥௩௪॥

𑌦𑍍𑌰𑍋𑌣𑌭𑍀𑌷𑍍𑌮𑌕𑌰𑍍𑌣𑌾𑌦𑍀𑌨𑍍 𑌕𑍃𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌤𑌯𑌾 𑌮𑌯𑍈𑌵 𑌹𑌨𑌨𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌤𑍍𑌵𑌂 𑌜𑌹𑌿- 𑌤𑍍𑌵𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌃 । 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌬𑌨𑍍𑌧𑍂𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌭𑍋𑌗𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌕𑌥𑌂 𑌹𑌨𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑍀𑌤𑌿 𑌮𑌾 𑌵𑍍𑌯𑌥𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 । 𑌤𑌾𑌨𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌭𑌯𑍇𑌨 𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑍍𑌨𑍇𑌹𑍇𑌨 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌚 𑌵𑍍𑌯𑌥𑌾𑌂 𑌮𑌾 𑌗𑌾𑌃 । 𑌯𑌤 𑌏𑌤𑍇 𑌕𑍃𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌤𑌯𑌾 𑌮𑌯𑍈𑌵 𑌹𑌨𑌨𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 । 𑌅𑌤𑍋 𑌵𑌿𑌗𑌤𑌵𑍍𑌯𑌥𑍋 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌰𑌣𑍇 𑌸𑌪𑌤𑍍𑌨𑌾𑌨𑍍 𑌜𑍇𑌤𑌾𑌸𑌿- 𑌜𑍇𑌷𑍍𑌯𑌸𑌿। 𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌧𑍇 𑌨𑍃𑌶𑌂𑌸𑌤𑌾𑌶𑌙𑍍𑌕𑌾 । 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌜𑌯𑌶𑍍𑌚 𑌤𑌵 𑌦𑍃𑌷𑍍𑌟 𑌏𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ॥ ॥௩௪॥

பெரியதான குற்றங்களைப் பண்ணினபடியால், கொலை பண்ணவே என்றால் தீர்மானிக்கப்பட்ட துரோணர், பீஷ்மர், கர்ணன் முதலானவர்களையும் நீ கொல்லு. உயர்ந்த ஸுகங்களை அனுபவிக்கவேணுமென்று எண்ணிக்கொண்டிருக்கிற ஆசாரியர்களையும், பந்துக்களையும், இன்னும் மற்றப் பேர்களையும் பாபம் வருமோ என்று 2 பயத்தினாலும், பந்துக்கள் என்கிற ஸ்நேஹத்தினாலும்,

1. பூமியின் சுமையைப் போக்குவதற்காகத்தான் உன்னை இரண்டு கையாலும் பாணம் போடும்படி பண்ணியிருக்கிறேன் என்று கருத்து.

2. ஒருவேளையில் பயப்படுவது தைவத்துக்கு வருத்தம் வருமோ என்பதற்காகத்தானோ. நீ அவர்களைக் கொல்லுவது எனக்கு ஸந்தோஷம். நீ அவர்களைக் கொல்லாத போனால் தான் வருத்தம்.

தையினும்—என்னமாய்க் கொல்லுவது—என்று வருத்தப் படாதே. குற்றம் பண்ணினதால் அவர்களைக் கொலை பண்ண வேணுமென்று நான் தீர்மானித்து விட்டேன். ஆகையால் கொஞ்சங்கூட யோசிக்காமல் சண்டையோடு நீ கட்டாயம் சத்துருக்களை ஜயிப்பாய் இவர்களைக் கொல்லுவதினால் உனக்குத் துளிக்கூட ஒருகுற்றமுமுண்டாகாது. (34)

ஸஞ்ஜய உவாச —

ஏதச்ச்ருத்வா வசநம் கேசவஸ்ய க்ருதாஞ்ஜலிர்வேபமா
நா: கிரீடீ | நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம் ஸக
த்கதம் பீதபீத: ப்ரணம்ய || ||௩௫||

ஏதத்-ஆச்ரிதவாத்ஸல்யஜலதே: கேசவஸ்ய வசநம் ச்ருத்வா, அர்ஜுநஸ்ஸ நமஸ்க்ருத்ய, பீதபீதோ பூயச்ச ப்ரணம்ய, க்ருதாஞ்ஜலிர்வேபமாந: கிரீடீ ஸகத்கதமாஹ ||

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

தன்னை 1 அடைந்தவர்களிடத்தில் குற்றம் பாராமல், பிரீதிபண்ணுகிற பகவானுடைய இந்த வார்த்தையை அர்ஜுநன் கேட்டவுடன், அவரை 2 ஸேவித்து, மிகவும் பயந்து மறுபடியும் ஸேவித்து, கைகளைக் கூப்பிக்கொண்டு, உடம்பெல்லாம்நடுங்கி, 3 கிரீடமுள்ளவன் தொண்டை தழுதழுத்துச் சொல்லுகிறான். (35)

---

1. அர்ஜுநன் கேட்டவுடன் பகவான் தன் திருமேனியைக் காட்டினான். அப்படியே தேவரீர் கருத்து என்னவென்று கேட்டவுடன் அதையும் சொன்னான். இது அவனிடமிருந்த வாத்ஸல்யம் என்கிற குணத்தாலே செய்யப் பட்டது.

2. முதல் ஸேவை பகவானுடைய வார்த்தையைக் கேட்டவுடன் பரவசமாய்ச்செய்யப் பட்டது. மறுபடி ஸேவையும் கைகூப்புதலும் அவனிடத்தில் சொல்லுவதற்காக. இதனால் பெரியவர்களிடத்தில் ஒருவிஷயத்தைத் தெரியப் படுத்தவேணுமானால், முதலில் ஸேவித்து கையைக் கூப்பிக் கொண்டு தெரியப் படுத்தவேணும் என்று காட்டப் படுகிறது.

3. பகவானை இப்படி வணங்கினபடியால், அர்ஜுநனுக்குத் தான் கிரீடம் தரும் என்றும், கிருஷ்ணனை வணங்காத உன்பிள்ளையான துரியோதனனுக்கு அது தகாதென்று, அர்ஜுநனை கிரீடி (கிரீடமுள்ளவன்) என்று சொன்ன ஸஞ்ஜயனுக்குக் கருத்து.

[illegible] ॥௩௬॥

[illegible] ॥௩௬॥

இந்தச் சண்டையைப் பார்ப்பதற்காக வந்திருக்கிற இந்திரன் முதலானவர்களெல்லாரும் தேவரீருடைய அநுக்கிரஹத்தால், தேவரீர் எல்லா உலகங்களுக்கும் மஹாராஜா என்பதைப் பார்த்து, உம்முடைய அளவில்லாத கீர்த்தியைக் கண்டு மிகவும் ஸந்தோஷப்படுகிறார்கள். அதாவது—இன்பமான மாப்பிள்ளையைப் பார்த்ததுபோல், அவர்கள் கண்களும் மனதும் களிக்கின்றன. மிகவும் அன்புள்ள தாய் தகப்பனைப் பார்த்த குழந்தைகள் போல், உம்மிடத்தில் மிகுந்த ஆசையாயுமிருக்கிறார்கள். ராக்ஷஸர்கள் உம்மைக் கண்டு நடுங்கி, ஓடுகிற இடம் தெரியாமல், எல்லா திக்குகளிலும் ஓடுகிறார்கள். ஸித்தர்கள் முதலான எல்லாரும் கூட்டங்கூட்டமாய் ஸேவிக்கிறார்கள். இவர்கள் இந்த மாதிரி செய்கிறது அதிசயமென்ன? நியாயம் தானே. [36]

[illegible]—

[illegible] ॥௩௬½॥

[illegible] ॥௩௬½॥

அநந்த தேவேச ஜகந்நிவாஸ த்வமக்ஷரம் ஸதஸத் தத்பரம்
யத் | த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய விச்வ
ஸ்ய பரம் நிதாநம் || ||௩௭||

அநந்த, தேவேச, ஜகந்நிவாஸ! த்வமக்ஷரம் — ந க்ஷரதீத்யக்ஷரம் ஜீவாத்மதத்த்வம், "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாதிச்ருதிஸித்தோ ஜீவாத்மா ஹி ந க்ஷரதி| ஸதஸச்ச த்வமேவ ஸதஸச்சப்தநிர்திஷ்டம் கார்யகாரணபாவேநாவஸ்திதம் ப்ரக்ருதிதத்த்வம் நாமரூபவிபாகவத்தயா கார்யாவஸ்தம் ஸச்சப்தநிர்திஷ்டம், தத்விரஹாத்தயா காரணாவஸ்தமஸச்சப்தநிர்திஷ்டம் ச த்வமேவ | தத்பரம் யத் — தஸ்மாத் ப்ரக்ருதேः ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டாஜ்ஜீவாத்மந: பரம் அந்யந்முக்தாத்மதத்த்வம் யத், தத்பி த்வமேவ| த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதாநம் — நிதீயதே த்வயி விச்வமிதி த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதாநம், சரீரபூதஸ்யாத்மதயா பரமாதாரபூதஸ்த்வமேவேத்யர்த்த: || ||௩௭||

வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம த்வயா ததம் விச்வ
மநந்தரூப || ||௩௮||

ஜகதி ஸர்வோ வேதிதா வேத்யம் ச ஸர்வம் த்வமேவ | ஏவம் ஸர்வாத்மதயாऽவஸ்திதஸ்த்வமேவ பரம் ச தாம ஸ்தாநம், ப்ராப்யஸ்தாநமித்யர்த்த: | த்வயா ததம் விச்வமநந்தரூப — த்வயா ஆத்மநா விச்வம் சிதசிந்மிச்ரம் ஜகத் வ்யாப்தம் ||

அவ—நியாயம்தான் என்பதற்கு காரணங்கள்சொல்லுகிறான்—

எல்லா விதத்தாலும் எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவரே! மஹாபுருஷனே! நான்முகனையும் உண்டுபண்ணினவரான உம்மை நான்முகன் முதலானவர்கள் ஏன் வணங்கமாட்டார்கள். ஒரு விதத்தாலும் அளவில்லாதவரே! எல்லா தேவர்களுக்கும் ராஜாவே! எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமானவரே! ஸ்வரூபத்தில் மாறுபாடில்லாத ஜீவன்களும் நீர்தான். உலகத்தை உண்டுபண்ணுகிற காலத்தில் பூமி முதலான பெயர்களையும், அந்தந்த உரு

வங்களையும் அடைந்த "ஸத்" என்று சொல்லப்பட்ட பிரகிருதி யும் நீர்தான். பிரளயகாலத்தில் பூமி, ஜலம், நெருப்பு முதலான பெயர்களும், அதததன் உருவங்களும் இல்லாமல், இவை எல்லா வற்றையும் உண்டு பண்ணக்கூடிய விரிவை அடையாத நிலைமை யுள்ள "அஸத்" என்று சொல்லப்பட்ட பிரகிருதி யென்பதும் நீர்தான். அந்தப் பிரகிருதியைக் காட்டிலும், அத்துடன் சேர்ந் திருக்கிற ஜீவன்களைக் காட்டிலும் உயர்ந்த- மோக்ஷத்தை அடைந்த —ஜீவன்களும் நீர்தான். அதாவது—இவையெல்லாம் உம்மு டைய உடம்புகள். ஆகையாலே நீர் எல்லா உலகத்தையும் உண்டு பண்ணி ஸந்தோஷப்படுகிறவர். இது முதல் என்றில்லாமல் இருக் கிற புருஷன். எல்லா உலகங்களும் உம்முடைய உடம்புகள். ஆத் மாவாயிருந்து அவைகளைத் தாங்குவதால், அவைகளைத் தாங்குகிற வஸ்துக்களுக்குள் நீர்தான் உயர்ந்தவர். உலகத்திலிருக்கும் அறி வுள்ள ஜீவன்களும், அவர்களால் அறியப்படும் வஸ்துக்களும் நீர் தான். எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற நீர்தான் எல்லாராலும் அடைய வேண்டிய உயர்ந்த இடமாயுமிருக்கிறீர். எல்லா உலகத்துக்கும் ஆத்மாவாக இருந்து கொண்டு எங்கும் நிறைந்திருக்கிறீர். [37–38]

௩௯—அத ஏவ வாய்வாதி ஶப்தவாச்யத்வமித்யாஹ—

வாயுர்யமோऽக்நிர்வருணஶ்ஶஶாங்க: ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச ॥ ௩௯ ॥

ஸர்வேஷாம் ப்ரபிதாமஹஸ்த்வமேவ-பிதாமஹ: ப்ரஜாபதி: ஸர்வேஷாம் ப்ரஜாநாம் பிதர: ப்ரஜாபதய:; ப்ரஜாபதீநாம் பிதா ஹிரண்யகர்ப்ப: ப்ரஜாநாம் பிதாமஹ: । ஹிரண்யகர்ப்பஸ்யாபி பிதா த்வம் ப்ரஜாநாம் ப்ரபிதாமஹ: । பிதாமஹாதீநாமாத்மதயா தத்தச்சப்தவாச்யத்வமேவேத்யர்த்த: ॥ ௩௯ ॥

அவ—உலகத்தில் வழங்குகிற எல்லாச் சொற்களுக்கும் நீர் தான் பொருள் என்று சொல்லுகிறான்—

1. வாயுவும், யமனும், அக்கினியும், வருணனும், சந்திரனும், எல்லா உலகங்களுக்கும் தகப்பன்களான தக்ஷன் முதலான பிர

1. எல்லாச் சொற்களுக்கும் நீர்தான் பொருள். வாயு என்கிற

ஜாபதிகளுக்கும், தகப்பனான நான்முகனும் நீர்தான். அவருக்குத் தகப்பனான நீர் எல்லாருக்கும் கொள்ளுத்தாதா. [38½]

நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: புநஶ்ச பூயோऽபி நமோ நமஸ்தே |
நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ||௩௯½||

அத்யத்புதாகாரம் பவந்தம் த்ருஷ்ட்வா, ஹர்ஷோத்புல்ல நயநோऽத்யந்தஸாத்வஸாவநதஸர்வாங்கோ நமஸ்கரோமி ||

மிகவும் ஆச்சரியமான திருமேனியுள்ள உம்மைப் பார்த்து, ஸந்தோஷத்தாலே, கண்கள் மலர்ந்து, அளவில்லாத பயத்தினாலே வணங்கி, நாலு பக்கங்களிலும் நமஸ்காரம் பண்ணுகிறேன். [39½]

அநந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி த
தோऽஸி ஸர்வ: | ||௪௰||

அநந்தவீர்ய ! அபரிமிதவிக்ரமஸ்த்வம்-ஸர்வம் ஆத்மதயா ஸமாப்நோஷி । தத்ஸர்வேஷாம் ஸர்வம் சிதசித்வஸ்துஜாதம் ஆத்மதயா ஸமாப்நோஷி. அதஸ்ஸர்வஸ்ய சிதசித்வஸ்துஜாதஸ்ய ஶரீரதயா ப்ரகாரதயா ஸர்வப்ரகாரஸ்ஸர்வஶப்தாபிதேயோऽஸீத்யர்த: | 'ஸர்வம் ஸமஸ்தம், யோऽயம் தவாகதோ தேவ ஸமீபம் தேவதாகண: ஸ த்வமேவ ஜகத்ஸ்ரஷ்டா யத: ஸர்வகதோ பவாந்' - 'த்வயா ததம் விஶ்வமநந்தரூப', 'ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:' இதி ச || ||௪௰||

அளவில்லாத வீரியமென்கிற குணமுள்ளவரே! அதாவது-எவ்வளவு பெரிய வேலைகளைச் செய்தாலும், துளிக்கூட களைப்பில்லாதவரே! நீர் அளவில்லாத பராக்கிரமமுள்ளவர். எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவான நீர் எல்லா உலகங்களையும் உடம்புகளாக அடைந்திருக்கிறீர். அதினால் எல்லா உலகங்களாயுமிருக்கிறீர்.

---

சொல் உடம்புக்குப் பெயர். அது உடம்புக்கு ஆத்மாவான ஜீவனைச் சொல்லி, ஆத்மாவாகையால் ஜீவனைச் சொல்லுவது போல, அவனுக்கும் ஆத்மாவான பகவானைச் சொல்லுகிறது.

எல்லா உலகங்களும் உமக்கு உடம்பாயிருந்து பிரகாரமாயிருப்பதால், எல்லாப் பெயர்களும் எல்லா உலகங்களாகிற பிரகாரங்களுடன், பிரகாரியாகிய உம்மைச் சொல்லுகின்றன.1 [10]

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி | அஜாநதா மஹிமாநம் தவேதம் மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி || ||௪௧||

யச்சாவஹாஸார்த்தமஸத்க்ருதோஸி விஹாரசய்யாஸந போஜநேஷு | ஏகோऽதவாப்யச்யுத தத்ஸமக்ஷம் தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் || ||௪௨||

தவ அநந்தவீர்யஸ்யாமிதவிக்ரமஸ்ய ஸர்வாத்மந: ஸ்ரஷ்டுர் காதிகஸ்ய இமம் மஹிமாநம் அஜாநதா மயா ப்ரமாதாத்-மோஹாத், ப்ரணயேந-சிரபரிசயேந வா ஸகேதி மம வயஸ்ய இதி மத்வா, ஹே க்ருஷ்ண! ஹே யாதவ! ஹே ஸகே! இதி மயி ப்ரஸபம்-விநயாபேதம் யதுக்தம், யச்ச பரிஹாஸார்த்தம் ஸஹைவ ஸத்காரார்ஹ-ஸ்த்வமஸத்க்ருதோஸி, விஹாரசய்யாஸநபோஜநேஷு ஸஹக்ருதேஷ்வேகாந்தே வா ஸமக்ஷம் வா யதஸத்க்ருதோஸி, தத்ஸர்வம் க்ஷாமயே த்வாமஹம் க்ஷாமயே ||

அளவில்லாத வீரியம், அளவில்லாத பராக்கிரமம், (எல்லா சத்துருக்களையும் ஜயிப்பது) எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவாயிருப்பது, எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுவது-இவை முதலான இப்போது பார்த்த-உம்முடைய பெருமையை நான் அறியாமல், 2 தப்பு எண்ணத்தாலேயோ, வெகுநாளாய் பழகினத்தாலேயோ, எனக்குத் தோழன் என்று நினைத்து, ஏ கிருஷ்ணா!

1. கீழே பல இடங்களில் பகவானே ஜீவன், அவனே பிரகிருதி, அவனே வாயு என்று சொல்லியிருக்கிறது. அவனை இப்படிச் சொன்னது அவைகளுக்கு ஆத்மாவாயிருப்பதால் என்பதை ஸ்ரீ கிருஷ்ணனே கீதையிலேயே ஸந்தேஹம் வராதபடியும், இன்னொருவர் அர்த்தம் சொல்ல வேண்டாதபடியும், வேறுவிதமான அர்த்தம் சொல்லக் கூடாதபடியும் தெளிவாகச் சொன்னார்.

2. தப்பு எண்ணமாவது—பகவானை கிருஷ்ணனை மனித ஜாதி என்று நினைப்பது முதலானவை.

ஏ யாதவ! ஏ தோழனே! இதுபாதிரி வணக்கமில்லாமல் என்ன என்ன சொன்னேனோ; எப்பவும் மரியாதை பண்ணத் தகுந்த உம்மை மரியாதைக்குறைவாய் பரிஹாஸத்துக்காக என்னென்ன சொன்னேனோ; அதாவது—மாடு மேய்த்தாயிற்றா? வெண்ணை திருடியாயிற்றா? இவை முதலானவைகளைச் சொன்னேனோ; உம்மோடு விளையாடின போதும், நீரும் நானும் படுத்துக்கொண்டும், உட்கார்ந்துகொண்டும் இருந்தபோதும், சாப்பிடுகிறபோதும் நீரும் நானும் தனியாய் இருந்த போதும், அன்னியர்கள் பத்துப் பேர் பார்த்திருக்கும் போதும், என்னென்ன மரியாதைக் குறைவு பண்ணினேனோ. அவைகளெல்லாவற்றையும் ஒருவராலும் அறிய முடியாத உம்மைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். செய்த தப்புக்களை நினைக்கும்போது நடுங்குகிறது. பிரும்மா முதலானவர்கள் படும் பாட்டைப் பார்த்தால் நான் எவ்வளவு? [ 41-42 ]

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஶ்ச
குருர்கரீயாந் | ந த்வத்ஸமோऽஸ்த்யப்யதிக꞉ குதோऽ
ந்யோ லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரபாவ || ‖௪௩‖

அப்ரதிமப்ரபாவ! த்வமஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய பிதாஸி | அஸ்ய லோகஸ்ய குருஶ்சாஸி | அத ஏவ த்வமஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய கரீயாந் பூஜ்யதம꞉ | ந த்வத்ஸமோऽஸ்த்யப்யதிக꞉ குதோऽந்யோ லோகத்ரயேऽபி, காருண்யாதிநா கேநாபி குணேந ந த்வத்ஸமோऽஸ்தி, குதோऽப்யதிக꞉ || ‖௪௩‖

தேவரீர் மாதிரி பெருமையுள்ளவர்கள் உலகத்தில் ஒருவருமில்லை. அசைகிறது—அசையாதது—என்று இருவகையுள்ள எல்லா உலகங்களுக்கும் நீர்தான் தகப்பனார். இந்த உலகத்துக்கு நீர்தான் ஆசாரியன் ஆகையால் நீர்தான் எல்லாவிதத்தாலும் இந்த உலகங்களுக்கு மிகுந்த மரியாதை செய்யத் தகுந்த பெரியவர் இந்த உலகம் உம்மைத்தான் மரியாதை செய்யவேண்டியது உமக்கு அப்புறம்தான் மற்றவர்கள். தயைமுதலான ஒருகுண

தினாலாவது உம்மைப்போல் உலகத்தில் ஒருவருமில்லை. எல்லா குணங்களாலும் உம்மைப்போல் யார் இருக்கப்போகிறார்கள். அப்படியிருக்க, உமக்குமேற்பட்டவர்கள் எங்கு இருக்கப்போகிறார்கள். [43]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌕𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹
𑌮𑍀𑌶𑌮𑍀𑌡𑍍𑌯𑌮𑍍 । 𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌖𑍇𑌵 𑌸𑌖𑍍𑌯𑍁𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌦𑍇𑌵 𑌸𑍋𑌢𑍁𑌮𑍍 ॥ ॥௪௪॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌿𑌤𑌾, 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑌮𑍋 𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂, 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌮𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑍋𑌽𑌸𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍀𑌶𑌮𑍀𑌡𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌚 𑌕𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 । 𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌖𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌵𑌾 𑌸𑌖𑌾 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿, 𑌤𑌥𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍋𑌢𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ॥௪௪॥

நீர் எல்லா உலகங்களுக்கும் தகப்பனார். மரியாதை பண்ண வேண்டியவர்களுக்குள் மிகவும் உயர்ந்தவர். ஆசாரியன். தயை முதலான குணங்களால் எல்லாரைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவர். ஆகையால் எல்லா உலகங்களுக்கும் ராஜாவாயும், எல்லாராலும் எல்லா விதத்தாலும் ஸ்தோத்திரம் பண்ணக்கூடியவராயுமிருக்கிற உம்மை மனதாரச்சரணாகதி பண்ணி, உம்மைத் தவிர வேறு கதியில்லையென்பதைக் காட்டுவதற்காக கீழே படுத்து, உம்மை ஸந்தோஷப்படுத்துகிறேன். உலகத்தில் தகப்பனிடத்தில் பிள்ளை குற்றம் பண்ணினாலும், தோழனிடத்தில் ஒரு தோழன் குற்றம் பண்ணினாலும், அவர்கள் பிறகு மனதார வருத்தப்பட்டு வணங்கி, உண்மையாக மன்னிக்கவேணுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டால், எப்படித் தகப்பனும், தோழனும் அவர்கள் விஷயத்தில் ஸந்தோஷப்பட்டு தயவுபண்ணுவார்களோ; அப்படியே அளவில்லாத தயையுள்ளவரும், எனக்கு மிகவும் வேண்டியவருமான நீர் உமக்குமிகவும் வேண்டியவனும், கெஞ்சுகிறவனுமான என்னுடைய எல்லாக்குற்றங்களையும் பொறுத்துக்கொள்ளவேணும். [44]

அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோऽஸ்மி த்ருஷ்ட்வா பயேந ச
ப்ரவ்யதிதம் மநோ மே | ததேவ மே தர்ஶய தேவ
ரூபம் ப்ரஸீத தேவேஶ ஜகந்நிவாஸ || ||௪௫||

அத்ருஷ்டபூர்வம் அத்யத்புதம் அத்யுக்ரம் ச தவ ரூபம்
த்ருஷ்ட்வா, ஹ்ருஷிதோऽஸ்மி – ப்ரீதோऽஸ்மி | பயேந ப்ரவ்யதிதம்
ச மே மந: | அதஸ்த்வதீயம் தவ ஸாதாரணம் ரூபம் மே த
ர்ஶய | ப்ரஸீத தேவேஶ ஜகந்நிவாஸ மயி ப்ரஸாதம்
குரு | தேவாநாம் ப்ரஹ்மாதீநாமபீஶ, நிகிலஜகதாஶ்ரய
பூத || ||௪௫||

இதுவரையில் ஒருவராலும் பார்க்கப்படாததும், அளவில்லாத ஆச்சரியப் படக்கூடியதும், பிரும்மா முதலானவர்களையும் நடுங்கப்பண்ணுவதுமான உம்முடைய திருமேனியை ஸேவித்து, ஒரு பக்கத்தில் அளவில்லாத ஸந்தோஷமிருக்கிறது. ஒருபக்கத்தில் அளவில்லாத பயத்தினால் மனது நடுங்கிறது. ஆகையால் எல்லாருக்கும் அளவில்லாத ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய முன்னிருந்த திருமேனியைக் காண்பிக்க வேணும். பிரும்மா முதலானவர்களைக்கூட அடக்கி ஆளுபவனே! எல்லா உலகங்களையும் தாங்குகிறவனே! என்விஷயத்தில், தயைபண்ணவேணும்.[45]

கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தமிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம்
ததைவ | தேநைவ ரூபேண சதுர்புஜேந
ஸஹஸ்ரபாஹோ பவ விஶ்வமூர்தே || ||௪௬||

ததேவ ரூபம் கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தம் த்வாம்
த்ரஷ்டுமிச்சாமி | அதஸ்தேநைவ ரூபேண சதுர்புஜேந சது
ர்புஜேந ரூபேண யுக்தோ பவ | ஸஹஸ்ரபாஹோ வி
ஶ்வமூர்தே–இதாநீம் ஸஹஸ்ரபாஹுத்வேந விஶ்வஶரீ
ரத்வேந த்ருஶ்யமாநரூபஸ்த்வம் தேநைவ ரூபேண யு
க்தோ பவேத்யர்த: | ||௪௬||

இப்போது கணக்கில்லாத கைமுதலான அவயவங்களோடு கூடினவராயும், எல்லா உலகங்களையும் உடம்பாக வைத்துக்கொ

ண்டிருக்கிறவராயும் உம்மைப்பார்க்கிறேன். தேவரீர் இந்த உருவத்தைமாற்றி, முன்போல் கிரீடம், கதை, சக்கிரம், நாலுகைகள்—இவைகளோடு ஸேவைஸாதிக்கவேணும். [46]

ஶ்ரீபகவாநுவாச—

மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேதம் ரூபம் பரம் தர்ஶிதமாத்மயோகாத் । தேஜோமயம் விஶ்வமநந்தமாத்யம் யந்மே த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம் ॥ ௪௭ ॥

யந்மே தேஜோமயம்-தேஜஸாம் ராஶிம், விஶ்வம்-ஸர்வாத்மபூதம், அநந்தம்-அந்தரஹிதம், ஆத்யம்-ஆதிரஹிதம் । த்வதந்யேந மத்பக்திரஹிதேந கேநாபி ந த்ருஷ்டபூர்வம் ரூபம் ததிதம் ப்ரஸந்நேந மயா மத்பக்தாய தே தர்ஶிதம் । ஆத்மயோகாத்—ஆத்மநஸ் ஸத்யஸங்கல்பத்வயோகாத் ॥ ௪௭ ॥

பகவான் சொல்லுகிறார்—

ஆயிரம் ஸூரியன்கள் உதித்ததுபோல்காந்தியுள்ளதும், எல்லா உலகங்களையும் தாங்குவதும், முதல் நடு, முடிவு (அடிநடு நுனி) என்கிற மூன்றுமில்லாததும், என்னைத்தவிர மற்றஎல்லா உலகங்களுக்கும் முன்னே இருப்பதும், உன்னைத்தவிர வேறொருவராலும் இதுவரையில் பார்க்கப்படாததுமான இந்த என்னுடையஉருவத்தை, உன்னுடைய பக்தியினால் நான்மிகவும்ஸந்தோஷத்தை அடைந்து, 1 நான் நினைத்தபடி நடத்துகிறவனாகையாலே, உனக்குக் காட்டினேன். [47]

அத—அநந்யபக்திவ்யதிரிக்தைஸ்ஸர்வைரபி ஸாதநைர்யதாவதவஸ்திதோऽஹம் த்ரஷ்டும் ந ஶக்ய இத்யாஹ—

1. இந்த உடம்பை உன்னுடைய இந்தக்கண்ணால் பார்க்கமுடியாது. பார்க்கக்கூடிய கண்ணை என்னைத்தவிர வேறொருவரால் கொடுக்கமுடியாது. அதையும் இந்த உடம்பில் வைக்கமுடியாது. நான் நினைத்தபடி செய்கிறவனாகையால், இதைச்செய்தேன் என்றுகருத்து.

ந வேத³யஜ்ஞாத்⁴யயநைர் ந தா³நைர் ந ச க்ரியாபி⁴ர் ந
தபோபி⁴ருக்³ரை: । ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ரு
லோகே த்³ரஷ்டும் த்வத³ந்யேந குருப்ரவீர ॥ ॥ ௪௮ ॥

ஏவம்ரூப:- யதா²வஸ்தி²தோ(அ)ஹம் மயி ப⁴க்திமத: த்வதி³தரேண ஐகாந்திகாத்யந்திகப⁴க்திரஹிதேந கேநாபி வேதா³த்⁴யயநயஜ்ஞாதி³பி⁴: கேவலைர் த்³ரஷ்டும் ந ஶக்ய:॥

அ॥—என்னைத்தவிர வேறு தேவதையையும், வேறுபிரயோஜநத்தையும் நினைக்காதவர்களால்தான் என்னை இதுமாதிரி உள்ளபடி பார்க்கமுடியும். அப்படி இல்லாதவர்கள் எவ்விதக்காரியங்களைச்செய்தாலும், பார்க்கமுடியாதென்று சொல்லுகிறார்—

என்னுடைய எல்லாவங்கங்களையும் உள்ளபடி காட்டக்கூடிய இந்த உருவத்தை உனக்கு என்னிடம் பக்தி இருப்பதுபோல் பக்தியில்லாத இன்னொருவனுலே எல்லா வேதங்களைச் சொல்லுவது, யாகங்களைப்பண்ணுவது, தானங்களைச் செய்வது, கடுமையான தபஸ்ஸைச்செய்வது, இன்னம் மற்ற நல்லவேலைகளைச் செய்வது—இவைமுதலானவைகளால் மாத்திரம் பார்க்கமுடியாது. அதாவது—முன் சொன்னபக்தியுடன் சேராத இவைகளால் மாத்திரம் பார்க்கமுடியாது. [48]

மா தே வ்யதா² மா ச விமூட⁴பா⁴வோ த்³ருஷ்ட்வா ரூபம்
கோ⁴ரமீத்³ருங்மமேத³ம் । வ்யபேதபீ⁴: ப்ரீதமநா: புந
ஸ்த்வம் ததே³வ மே ரூபமித³ம் ப்ரபஶ்ய ॥ ॥ ௪௯ ॥

கோ⁴ரம் ஈத்³ருக் மம இத³ம் ரூபம் த்³ருஷ்ட்வா தே யா வ்யதா², யஶ்ச விமூட⁴பா⁴வோ வர்ததே, தது³ப⁴யம் மா பூ⁴த்। த்வயா(அ)ப்⁴யஸ்தபூர்வமேவ ஸௌம்யரூபம் த³ர்ஶயாமி । ததே³வேத³ம் மம ரூபம் ப்ரபஶ்ய ॥ ॥ ௪௯ ॥

எல்லோருக்கும் பயத்தை உண்டுபண்ணுகிற இந்த உருவத்தைப்பார்ப்பதினுல் உண்டான உன் வருத்தமும், அதினுலுண்டான மயக்கமும் உனக்குவேண்டாம். இதைமறைத்து, வெகுநாளாய் பழகின—ஸந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய-உருவத்தையே காண்பிக்கிறேன். அதைப்பார். [49]

सञ्जय उवाच —

इत्यर्जुनं वासुदेवस्तथोक्त्वा स्वकं रूपं
दर्शयामास भूयः । आश्वासयामास च भीतमेनं
भूत्वा पुनः सौम्यवपुर्महात्मा ॥ ॥५०॥

एवं प्रार्थितो भगवान् वसुदेवसूनु-
रर्जुनम्, भूयः स्वकीयमेव चतुर्भुजं रूपं दर्शया-
मास । अपरिमितस्वरूपदर्शनेन भीतमेनं पुन-
रपि परिमितसौम्यवपुर्भूत्वा आश्वासयामास च ।
महात्मा-सत्यसंकल्पः । अस्य सर्वेश्वरस्य परमपु-
रुषस्य परस्य ब्रह्मणो जगदुपकृतिमर्त्यस्य
वसुदेवसूनोस्तदानीमेव स्वकीयं रूपम् । कं-
साद्भीतवसुदेवप्रार्थनेन आकंसवधादु-
पसंहृतं, पश्चादाविष्कृतं च । “जातोऽसि देव
देवेश शङ्खचक्रगदाधर । दिव्यं रूपमिदं देव प्र-
सादेनोपसंहर, उपसंहर विश्वात्मन् रूपमे-
तच्चतुर्भुजम्” इति हि प्रार्थितम् । शिशुपालस्यापि
द्विषतोऽनवरतभावनाविषयस्तच्चतुर्भुजमेव वसु-
देवसूनो रूपम् “उदारपीवरचतुर्बाहुं
शङ्खचक्रगदाधरम्” इति । अतः पार्थेनापि “तेनैव
रूपेण चतुर्भुजेन” इत्युच्यते ॥ ॥५०॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

நினைத்தபடி நடத்துகிறவனான பகவான் அர்ஜுநனைப்பார்த்து இந்தமாதிரிசொல்லி, முன்இருந்த நாலுகைகளோடு கூடிய உருவத்தையே காண்பித்தான். அப்பா! புதிதாய் காண்பித்த என் திருமேனியைப் பார்த்து பயந்தாயே என்றுசொல்லி ஸமாதாநமும் பண்ணினான். கம்ஸனைக் கொல்லுகிறவரையில், வஸுதேவர் கேட்டுக்கொண்டபடியால், இரண்டுகைகளைமறைத்து, இரண்டு கைகளோடு எல்லாருக்கும் கிருஷ்ணன் ஸேவை ஸாதித்தான். பிறகு கைகளை மறைக்கவில்லை. சிசுபாலனும் நான்கு கைகளுடன்

ள திருமேனியைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான். அதினால் நான்கு கைகளுள்ள உருவம்தான் பகவானுக்கு எப்பவும் இருப்பதாக ச்லோகத்தில் சொல்லப்பட்டது.

அர்ஜுந உவாச—

த்ருஷ்ட்வேதம் மாநுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜநார்தந|
இதாநீமஸ்மி ஸம்வ்ருத்தஸ் ஸசேதா: ப்ரக்ருதிம் கத: ॥ ॥௫௧॥

அநந்யஸாதாரணஸௌந்தர்யஸௌகுமார்யலாவண்யாதியுக்தம் ததைவ அஸாதாரணம் மநுஷ்யத்வஸம்ஸ்தாநஸம்ஸ்திதம் அதிஸௌம்யம் இதம் தவ ரூபம் த்ருஷ்ட்வா இதாநீம் ஸசேதாஸ் ஸம்வ்ருத்த:, ப்ரக்ருதிம் கதச்ச ॥ ॥௫௧॥

அர்ஜுநன் சொல்லுகிறான்—

அளவில்லாத அழகு, மெதுவாயிருப்பது, இன்பமான பளபளப்பு முதலான குணங்களோடு கூடியதும், உம்மைத்தவிர வேறொருவனுக்குமில்லாததும், மனிதஉருவம் போன்றதும், எல்லாருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதுமான இந்தத் திருமேனியை ஸேவித்த பிறகுதான் என் மனது என்னிடம் வந்தது. இப்போதுதான் பாட்டிலே போட்டது. இப்போதுதான் என் நிலைமை எனக்கு வந்தது. [51]

ஸ்ரீபகவாநுவாச—

ஸுதுர்தர்சமிதம் ரூபம் த்ருஷ்டவாநஸி யந்மம ।
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சநகாங்க்ஷிண: ॥

ஈத்ருசம் ஸர்வஸ்ய ப்ரசாஸநத்வஸ்திதம் ஸர்வாச்ரயம் ஸர்வகாரணபூதம் ரூபம் யத் த்ருஷ்டவாநஸி, தத் ஸுதுர்தர்சம் தேநாபி த்ருஷ்டும் சக்யம் । அஸ்ய ரூபஸ்ய தேவா அபி நித்யம் தர்சநகாங்க்ஷிண:, ந து த்ருஷ்டவந்த: ॥

பகவான் சொல்லுகிறார்—

சற்று முன்பு பார்த்தாயே, அந்தத் திருமேனியானது ஒருவனாலும் பார்க்க முடியாது. தேவதைகளெல்லாரும்கூட எப்போ

ழுதும் இதைப் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டார்களேயொழிய, இதுவரையில் ஒருவரும் பார்த்ததில்லை. [52]

அவ— குத இத்யத்ராஹ—

நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ॥
பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

வேதைரத்யாபந ப்ரவசநாத்யயநஶ்ரவணஜபவிஷயைஸ்தபோபிர்தாநைர்ஹோமைஶ்ச மத்பக்திவிரஹிதை: கேவலைர்யதாவதவஸ்திதோऽஹம் த்ரஷ்டும்ந ஶக்ய: । அநந்யயா து பக்த்யா தத்த்வதஶ்ஶாஸ்த்ரைர்ஜ்ஞாதும், தத்த்வதஸ்ஸாக்ஷாத்கர்தும் தத்த்வத: ப்ரவேஷ்டும் ச ஶக்ய: । ததா ச ஶ்ருதி: 'நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்' இதி ॥ ॥ ௫௪ ॥

அவ—ஏனென்றால்—

என்னிடத்தில் முன்சொன்ன பக்தியில்லாமல், எல்லா வேதங்களையும் தான் கற்று, அயலாருக்குச் சொல்லிக்கொடுப்பதினாலும், அவைகளைக் கேட்பதினாலும், அவைகளை ஜபம் செய்வதாலும், அவைகளின் அர்த்தங்களைச் சொல்லுவதாலும், யாகம், தானம், ஹோமம், தபஸ்ஸு இவைகளைப் பண்ணுவதாலும், உள்ளபடி என்னைப் பார்க்க முடியாது. முன்சொன்னபடி பக்தி இருந்தால், (அதாவது உலகத்தில் எல்லாரைக் காட்டிலும் நான் உயர்ந்தவன் என்று எண்ணி, என்னைத்தவிர வேறு ஒருவரைப் பூஜியாமலும், என்னைத்தவிர வேறு பிரயோஜனங்களை விரும்பாமலும், அவைகளில் அலுப்புமிருந்து என்னிடத்தில் பக்தி பண்ணுதல்) சாஸ்திரங்களுக்கு அர்த்தம் தப்பாக தோன்றாமல் ஸரியாகத் தோன்றி, அந்த சாஸ்திரங்களைக் கொண்டு என்னை உள்ளபடி அறியலாம். பிறகு அப்படியே தியானம் செய்து, அந்தத் தியானம் முற்றும்

போது என்னை உள்ளபடி பார்க்கலாம். பிறகு அளவில்லாமல் என்னிடத்தில் ஆசையுண்டாகி, என்னிடம் வந்துநிலையாக இருக்கலாம். 1 இத்தௌங்கதியை உபநிஷத்து சொல்லுகிறது [53–54]

மத்கர்மக்ருந்மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித: ।
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ ।55।

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே விஶ்வரூபஸந்தர்ஶநயோகோ நாமைகாதஶோऽத்யாய:॥

வேதாத்யயநாதீநி ஸர்வாணி கர்மாணி மதாராதநரூபாணீதி ய: கரோதி, ஸ மத்கர்மக்ருத் । மத்பரம:- ஸர்வேஷாம் ஆரம்பாணாம் அஹமேவ பரமோத்தேஶ்யோ யஸ்ய, ஸ மத்பர: । மத்பக்த:- அத்யர்த்த மத்ப்ரியத்வேந மத்கீர்த்தநஸ்துதித்யாநார்ச்சநப்ரணாமாதிபிர்விநா ஆத்மதாரணம் அலபமாநோ மதேகப்ரயோஜநதயா ஸததம் தாநி கரோதி, ஸ மத்பக்த: । ஸங்கவர்ஜித:- மதேகப்ரியதயா இதரஸங்கமஸஹமாந: । நிர்வைர: ஸர்வ

---

1. பக்தியில் மூன்று படிகள் இருக்கின்றன.—(1) பக்தி, (2) பரபக்தி, (3) பரமபக்தி—என்று (1) பக்தியாவது—பகவானிடத்திலிருக்கும் பிரீதி. அதனால் சாஸ்திரத்தைக்கொண்டு பகவானை உள்ளபடி அறிய வேணுமென்று ஆசை உண்டாகின்றது. (2) ஆசை உண்டாய் பகவானை உள்ளபடி அறிந்து, மிகுந்த பிரீதியுடன் அவனை இடைவிடாமல் நினைப்பது பரபக்தி. இதனால் பகவானை உள்ளபடி பார்க்கவேண்டுமென்று ஆசை உண்டாகிறது. (3) மிகுந்த ஆசையுண்டாய் பகவானை உம்மை எனக்குக்காட்டவேணுமென்று கேட்கிறான். அப்போது பகவான் தயவுபண்ணி தன்னுடைய ஸங்கதிகளில் துளிக்கூட விடாமல் கொஞ்சகாலம் தன்னை உள்ளபடி காட்டுகிறான். அதற்குப் பரஞானம் என்றுபெயர். அவனை அப்படி பார்த்தவுடன், இவனுக்கு இப்படிப்பார்த்துக்கொண்டு அவனிடத்திலேயே இருக்கவேணுமென்று அளவில்லாத தாங்க முடியாத ஆசையுண்டாகிறது. அது பரமபக்தி. அதனால் அவன் என்னை இப்பொழுதே உம்மிடம் அழைத்துக் கொள்ள வேணுமென்று அளவில்லாமல் நிர்பந்தப்படுத்துகிறான். உடனே பகவான் அவனைத் தன்னிடம் அழைத்துக் கொள்ளுகிறான்.

பூதேஷு மத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:கஸ்வபாவ
த்வாத் ஸ்வது:கஸ்ய ஸ்வகர்மநிமித்தத்வாநுஸந்தாநாச்ச ஸர்வ
பூதாநாம் பரமபுருஷபரதந்த்ரத்வாநுஸந்தாநாச்ச
ஸர்வபூதேஷு வைரநிமித்தாபாவாத் தேஷு நிர்வைர:
ய ஏவம்பூத: ஸ மாமேதி — மாம் யதாவதவாப்நோதி,
நிரஸ்தாவித்யாத்யஶேஷதோஷகந்தோ மதேகாநுபவோ ப
வதீத்யர்த: ॥ ௫௫ ॥

இதி ஶ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶ்ரீமத்கீதாபாஷ்யே
ஏகாதஶோऽத்யாய: ॥

---

அ.வ—பக்தியினை அடைவதற்கு உதவியான உயர்ந்த படியைச் சொல்லுகிறார்—

வேதத்தைச் சொல்லுவது முதலான சாஸ்திரத்தில் சொல்லிய எல்லா வேலைகளும் என்னுடைய ஸந்தோஷத்திற்காகத்தான் என்று நினைத்து, எவன் அவைகளைச் 1 செய்கிறானோ; எல்லா வேலைகளுக்கும் நான்தான் 2 பிரயோஜநம் என்று எவன் நினைக்கிறானோ; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினால் 3 என் பெயர்களைச் சொல்லுவது, என்னை ஸ்தோத்திரம் பண்ணுவது, என்னை நினைப்பது, என்னைப் பூஜிப்பது, என்னை ஸேவிப்பது முதலான வேலைகளை அரை விநாடி செய்யாவிட்டால், தாங்காமல் தவித்து, 4 என்னையே பிரயோஜநமாக எண்ணி, இவைகளை எப்போதும்

---

1. இதைத்தான் "மத்கர்மக்ருத்" (என்னுடைய வேலைகளைச் செய்கிறவன்) என்று சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

2. வேலைகளைச் செய்கிறவன் என்று சொன்னபோது, அவைகளின் பலன் நினைவுக்கு வந்தது. அதைச் சொல்லுகிறார்.

3. உலகத்தாருக்குச் சாப்பாடு முதலானவைகள் போல பக்தனுக்கு இவைகள்.

4. தாஹமெடுத்தவன் நல்ல அமிருதம் போன்ற ஜலத்தை ஒரே தாரையாய் குடிக்கும் போது, தொண்டையில் ஏதாவது மாட்டிக் கொண்டு, அதற்குத் தடங்கல் நேர்ந்தால், எப்படித் துடிப்பானோ, அப்படி

செய்கிறானோ; பகவானைப் பரமபதத்தில் பூர்ணமாக அநுபவிப்பதில் ஆசையாலே, இந்த உலகத்தில் பகவான் எதிரில் வந்தாலும், அன்புள்ளவனாயிருக்கிறானோ, 1 பல காரணங்களால் ஒருவரிடத்திலேயும் கொஞ்சங்கூட த்வேஷமில்லாமலிருக்கிறானோ; அப்படிப்பட்டவன் இது முதலென்று இல்லாத அறிவில்லாமையும், கர்மங்களும், வாஸனைகளும் எல்லாம் அடிபோடு போய், உள்ளபடி என்னை அடைகிறான். அதாவது—என்னை உள்ளபடி எப்பவும் எல்லா ஸங்கதிகளுடன் துளிக்கூட விடாமல், மிகவும் இன்பமாக அநுபவிக்கிறான். இது உண்டானால், பிறகு ஒருக்காலும் போவதில்லை.

---

1. இவ்விதமான பக்தியுள்ளவன் ஒருவரிடத்திலும் த்வேஷம் பண்ணாமலிருப்பது சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு இருப்பதனால் மாத்திரம் அல்ல. அதற்குக் காரணமேயில்லை. அதாவது (1) எப்பொழுதும் பகவானையே நினைத்து ஸுகப் படுவதினால், இவனுக்கு ஸம்ஸாரஸங்கதிகள் ஒன்றினாலும் துளிக் கூட ஸுகமும் துக்கமும் கிடையாது. துக்கமுண்டானாலன்றோ அதைச் செய்தவர்களிடத்தில் த்வேஷம் உண்டாகும். (2) தனக்கு பகவானை நினைத்து வரும் ஸுகத்தைக் கெடுப்பவர்களிடத்திலும் "இது தன் குற்றத்தினால் வருகிறது" என்று நினைத்தும், எல்லா உலகமும், எல்லா வேலையையும் பகவானால் ஏவப்பட்டுச்செய்கிறதென்று நினைத்தும் அவர்களிடத்தில்த்வேஷம்பண்ணுகிறதில்லை. உதாரணம்-ஒருவன் சாட்டையால் அடித்தால், அடிபட்டவன் பயித்தியமில்லாமலிருந்தால், சாட்டையின் பேரில் கோபித்துக் கொள்ளுவானோ; அதுபோல. (3) உலகமெல்லாம் பகவானுடைய உடம்பு என்கிற நினைவினால், ஒருவரை த்வேஷித்தால்பகவானை த்வேஷித்ததாக அன்றோ ஆகிறது என்று நினைத்து, ஒருவரிடத்திலும் த்வேஷிப்பதில்லை.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

## ஸாதநபேதாத்யாய: ||

அத — ஶக்தியோகநிஷ்டாநம் ப்ராப்யஸித்தஸ்ய ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ஹ்யநந்தஸ்ய நாராயணஸ்ய நிருபாதிகைஶ்வர்யஞ்ச ஸாக்ஷாத்தத்ப்ராப்தியோக்யாய அநவதிகாதிஶயகாருண்யாதிகுணவத்த்வேந ஸர்வேஶ்வரத்வம் ஸத்யஸங்கல்பத்வேந ஸர்வஶக்தித்வஞ்ச யதாவத் ப்ரதிபாதிதம் | உக்தஞ்ச ததேதத் ஸர்வம் ப்ராப்யப்ராப்தி ... ||

அத ப்ராப்த்யுபாய: —

ஏவம் ஸர்வோபாயாநாம் ஸாதநாநாம் ப்ராப்யஸ்ய ... |
... ||க||

ஏவம் ... ப்ராப்யம் ... ஸாதநம் ... ||க||

அவ—பக்தியோகம் பண்ணி அடைய வேண்டிய பரப் பிரும்மமாயும், பகவானுமான நாராயணனுடைய ஒரு குறைவதனு மில்லாத ஐச்வரியத்தைக் கண்ணாலே பார்க்க வேணுமென்று ஆசைப்பட்ட அர்ஜுனனுக்கு அளவில்லாத-கருணை, வேண்டியதைக் கொடுப்பது, எளியவர்களுடன் பழகுவது—இவை முத லான குணங்களுக்கு ஸமுத்திரமாயும், நினைத்தபடி நடத்துகிற வனுமான பகவான் தன்னுடைய ஐச்வரியத்தை உள்ளபடி காண் பித்தார். பகவானை உள்ளபடி அறிவதும், உள்ளபடி பார்ப் பதும், உள்ளபடி அடைவதும் (யோகத்தால்) மற்ற தேவதையை யும், வேறு பிரயோஜனத்தையும் நினைக்காமல், அவனிடத்தில் ஒருக்காலும் முடிவில்லாத பக்தி பண்ணினாலொழிய முடியாதென் றும் சொன்னார். பிறகு ஜீவாத்மாவைப் பார்ப்பதற்காக ஜீவாத் மாவைத் தியானம் செய்வதைக்காட்டிலும், பகவானை அடைவதற் காக பகவானைத் தியானம் செய்வது உயர்ந்தது. (அதாவது— பகவானுடைய தியானம் அவனைச் சுருக்கக் கொடுக்கும்; அதைச் செய்வதில் வருத்தமில்லை; அது உயர்ந்த ஸுகமாயிருக்கும்) என் றும்; ஜீவாத்மாவைத் தியானம் செய்கிறது வருத்தம்; அதனால் பலன் கிடைக்க வெகுநாளாகும் என்றும்; பகவானைத் தியானம் செய்வதற்கு இன்னது வழியென்றும்; அதைச் செய்ய முடியா மல் போனால், ஜீவாத்மாவைப் பார்ப்பதற்கு அதைத் தியானம் பண்ணவேணுமென்றும்; அதற்கு இன்னது வேண்டியதென் றும் சொல்லுகிறார். பகவானுடைய தியானத்திற்கு ஒருவித மான உயர்த்தி 6-வது அத்தியாயம் கடைசி சுலோகத்தில் சொல் லப் பட்டது. அதாவது—அடையவேண்டிய பலமான ஜீவனைக் காட்டிலும் எல்லாவிதத்தாலும் பகவான் உயர்ந்தவன் என்று. இங்கே சொல்லப் படும் உயர்த்தி அதல்ல; அது வேறு.

அர்ஜுனன் சொல்லுகிறான்—

கீழ் அத்தியாயம் கடைசி சுலோகத்தில் சொல்லியபடி உம் மையே மிகவும் உயர்ந்த பிரயோஜனமாக எண்ணி, அளவில்லாத ஸொத்துக்களுடனும் அளவில்லாத உயர்த்தியையுடைய குணங் களுடனும் எவர்கள் பக்தியோடு உம்மை முறைப்படி தியானம் பண்ணுகிறார்களோ; கண் முதலான இந்திரியங்களினால் உள்ள

படி பார்க்க முடியாத ஜீவாத்ம ஸ்வரூபத்தை எவர்கள் தியானம் செய்கிறார்களோ; இந்த இருவகையாருக்குள் யார் உயர்ந்தவர்? அதாவது—எவர்கள் சீக்கிரம் பலனை அடைகிறார்கள். [1]

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌯𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌪𑌰𑌯𑍋𑌪𑍇𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌾 𑌮𑌤𑌾𑌃 ॥௨॥

𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌨𑍋 𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌪𑌰𑌯𑍋𑌪𑍇𑌤𑌾𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃—𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍋𑌗𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌃 𑌯𑍇 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇—𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌮𑌨𑍋 𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌯𑍇 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍍 । 𑌤𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌾 𑌮𑍇 𑌮𑌤𑌾𑌃 𑌮𑌾𑌂 𑌸𑍁𑌖𑍇𑌨𑌾𑌚𑌿𑌰𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௨॥

பகவான் சொல்லுகிறார்—

என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினால், என்னையே அடையவேண்டிய பிரயோஜநமாக நினைத்து, மிகுந்த சிரத்தையோடு, எப்பொழுதும் என்னுடனேயே இருக்கவேணுமென்று ஆசைப்பட்டு, என்னைத் தியானம் செய்கிறவர்கள் பிரயாஸமில்லாமலும், சீக்கிரமாயும் என்னை அடைகிறார்கள். ஆகையால் என்னைப்பற்றின தியானமே உயர்ந்தது. [2]

𑌯𑍇 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌮𑌚𑌲𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥ ௩ ॥
𑌸𑌨𑍍𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃 ॥௪॥
𑌕𑍍𑌲𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌗𑌤𑌿𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌂 𑌦𑍇𑌹𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ॥௫॥

𑌯𑍇 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍। 𑌅𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌂—𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌯𑌤𑌯𑌾 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑍍। 𑌅𑌤 𑌏𑌵 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑌿𑌕𑌰𑌣𑌾𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚— 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌮𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌤𑌯𑌾 𑌤𑍇𑌨 𑌤𑍇𑌨

[illegible] ॥ ௩-௪-௫ ॥

ஜீவஸ்வரூபம் 1 உடம்பைக்காட்டிலும் வேறானதால், அது உடம்பைச் சொல்லுகிற தேவன், மனிதன்முதலான சொற்களுக்குப் பொருளல்ல என்றும்; அந்தக்காரணத்தாலேயே கண்முதலான இந்திரியங்களால் அறியமுடியாதது என்றும்; தேவன் முதலான எல்லா உடம்புகளிலும் இருந்தாலும், அவைகளைக்காட்

1. ஜீவன் எல்லா உடம்பைக்காட்டிலும் வேறாகையால், அது ஒரு உடம்புக்கு மாத்திரம் ஏற்பட்டதில்லை. ஆகையால் அதைப் பொதுவென்று சொல்லியிருக்கிறது.

டிலும் வேறுஜாதியென்றும்; ஆகையால் அந்தந்த உடம்பாகவே இருக்கலாமோவென்று நினைக்கத்தகாதது என்றும்; அதினாலே யே அது எடுத்துக்கொள்ளும் எல்லாஉடம்புகளுக்கும் பொது என்றும்; அறிவில்லாத வஸ்துக்கள்போல் அதின் ஸ்வரூபத்துக்கு மாறுதலில்லை என்றும்; அதினால்தான் அது அழிவில்லாதது என்றும்; கண்முதலான இந்திரியங்களை அவைகளின் வேலைகளில் விடாதபடி நன்றாகஅடக்கி, எல்லாஉடம்புகளிலிருக்கும் எல்லா ஆத்மாக்களும் ஞானஸ்வரூபமாயிருப்பதால், ஒரேமாதிரி என்று நினைத்து, ஒருபிராணிக்கும் ஒருவிதமான தொந்தரவையும் செய்யாமல், யார் த்யானம் செய்கிறார்களோ; 1 அவர்களும் என்னை அடைகிறார்கள் தான். அதாவது—2 என்னைப்போன்ற ஸம்ஸாரமில்லாத ஜீவனைப்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வருத்தம் அதிகம். ஆத்மஸ்வரூபத்தைக் கண்முதலானவைகளால் அறிய முடியாமையால், உடம்பையே ஆத்மாவாக நினைத்திருக்கிறவர்களுக்கு அதைக்காட்டிலும் வேறான ஆத்மாவென்று ஒருவஸ்து இருக்கிறதென்று நினைவு வருகிறதே வருத்தம். ஆகையால் ஜீவனைத் தியானம்பண்ணி, அவனைப்பார்ப்பது ஷாமதிக்கும். [3-1-5]

அத—[illegible]

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸம்ந்யஸ்ய மத்பரா꞉ |
அநந்யேநைவ யோகேந மாம் த்யாயந்த உபாஸதே ||

---

1. "அவர்களும்" என்கிற இடத்தில் "உம்" என்பதற்கு பகவானைக்காட்டிலும் வேறொன்றை அடையவேண்டியதாகத் தீர்மானித்தவர்களும் என்று பொருள்.

2. சுலோகத்தில் "என்னையேஅடைகிறார்கள்" என்று சொல்லியிருந்தாலும், "என்னை" என்பதற்கு என்னைப்போன்ற ஜீவனை என்று தான் பொருள். 14-வது அத்தியாயத்தில் 2-வது சுலோகத்தில் ஜீவனைப் பகவானைப்போன்றவன் என்றே சொல்லப்போகிறார். அப்படியே வேதமும் சொல்லுகிறது. அடையப்போகிற ஜீவாத்மஸ்வரூபத்தை இங்கே "அக்ஷரம்" என்று சொல்லுகிறது. 15—வது அத்தியாயத்தில் 16—வது சுலோகங்களில் "அக்ஷரம்" என்று சொல்லப்பட்டவனைக்காட்டிலும் பகவான் வேறு என்று சொல்லப்போகிறார். ஆகையால் இதுதான் பொருள்.

தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்।
பவாமி ந சிராத்பார்த்த மய்யாவேசிதசேதஸாம் ||௭||

யே து லௌகிகாநி தேஹயாத்ராஶேஷபூதாநி தேஹதாரணாயாஶநாதீநி கர்மாணி, வைதிகாநி ச யாகதாநஹோமதப:ப்ரப்ருதீநி ஸர்வாணி ஸகாரணாநி ஸோத்தேஶ்யாநி கர்த்ருத்வஸஹ மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:- மதேகப்ராப்யா:, அநந்யேநைவ யோகேந அநந்யப்ரயோஜநேந யோகேந மாம் த்யாயந்த உபாஸதே த்யாநார்ச்சநப்ரணாமஸ்துதிகீர்த்தநாதீநி ஸ்வயமேவாத்யர்த்தப்ரியாணி ப்ராப்யஸமாநி குர்வந்தோ மாமுபாஸதே த்யாயந்தி | தேஷாம் மத்ப்ராப்திவிரோதிதயா ம்ருத்யுபூதாத் ஸம்ஸாரஸாகராதஹமசிரேண காலேந ஸமுத்தர்தா பவாமி ||௬-௭||

அவ—பகவானைத்தியானம் பண்ணுகிறவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பதைத் தெளிவாய்ச் சொல்லுகிறார்—

எவர்கள் உலகத்தின் வேலைகளையும், (சாப்பிடுவதும், அதற்குவேண்டிய வேலைகளும்,) வேதத்தில் சொல்லிய யாகம்—தானம்—ஹோமம்—தபஸ்ஸு முதலான எல்லாவேலைகளையும், அவைகளுக்கு உதவிகளான ஸந்தியாவந்தநம் முதலானவைகளோடும், அவைகளுக்கு ஏற்பட்ட பலன்களோடும் சாஸ்திரத்தைக்கொண்டு என்னை உள்ளபடி நினைப்பதினால் என்னிடத்தில்வைத்து1, என்னை ஒருவனையே பிரயோஜனமாக நினைத்து, என்னைநினைப்பது, பூஜிப்பது, வணங்குவது, ஸ்தோத்திரம்பண்ணுவது, என்பெயர்களைச் சொல்லுவது முதலானவேலைகளை அளவில்லாத ப்ரீதியுடன் என்னை அடைவதுபோலவே நினைத்துச் செய்துகொண்டு, என்னைத்தியானம் செய்கிறார்களோ; அவர்களை என்னை அடைவதற்கு இடைஞ்சலான ஸம்ஸாரமென்கிற ஸமுத்திரத்திலிருந்து சீக்கிரம் தூக்கிவிடுவேன் அவர்களை விட்டிருப்பது என்னால் தாங்கமுடியாது

[ 6–7 ]

1. 9—வது அத்தியாயத்தில் 27—வது சுலோகத்திலசொன்னபடி.

𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌮𑌨 𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵 𑌮𑌯𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯 ।
𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌅𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥௮॥

𑌅𑌤𑌃𑌽𑌤𑌿𑌶𑌯𑌿𑌤𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑍁𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌮𑌨 𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵-𑌮𑌯𑌿 𑌮𑌨𑌸𑍍𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁। 𑌮𑌯𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯-𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁। 𑌅𑌤𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑌿-𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑌨𑍋 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௮॥

ஆகையால் நான் உயர்ந்த பிரயோஜனமா யிருப்பதாலும், பிரயாஸமில்லாமலும், சீக்கிரமாயும் கிடைக்கக்கூடியவனாகையாலும், நான்தான் அடையவேண்டிய பிரயோஜநங்களுக்குள் உயர்ந்தவன் என்று தீர்மானித்து, என்னிடத்திலேயே மனதை வை. அதாவது—என்னையே தியானம் செய்ய ஆரம்பி. என்னிடத்திலேயே 1 இருக்கப்போகிறாய். இதில் ஸந்தேஹமில்லை. [8]

𑌅𑌥 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 𑌮𑌯𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌧𑌨𑌂𑌜𑌯 ॥௯॥

𑌅𑌥 𑌸𑌹𑌸𑍈𑌵 𑌮𑌯𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 । 𑌤𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌮𑌾𑌮𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛-𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯 𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯 𑌶𑍌𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌤𑍍𑌵 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌤𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵 𑌸𑌕𑌲𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌯𑌗𑍁𑌣𑌸𑌾𑌗𑌰𑍇 𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑍇 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑍇𑌮𑌗𑌰𑍍𑌭 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛 ॥

அவ—என்னையே நினைஎன்று பகவான் சொன்னதைக்கேட்டவுடன், அர்ஜுனன் மலைத்தான்—நமக்கோ எவ்வளவோ சபலங்

1. ஆரம்பித்தவுடனேயே முக்தன்போலவே ஆய்விடுவாய். அல்லது—நல்ல ஆசாரியனிடமிருக்கும் சிஷ்யன்போலவும், நல்ல தகப்பனிடம் இருக்கும்பிள்ளைபோலவும் பயமில்லாமல் இருப்பாய்.

கள் இருக்கின்றனவே; கண் முதலானவைகளாலே அநுபவிக்கக்கூடிய கெட்டவஸ்துக்களையே நெடுநாளாய் வந்தபழக்கத்தினால் மனது நினைக்கிறதே; உம்மை இப்போதுதான் பார்த்தேனே ஒழிய, நெடுநாளாய் பார்க்கவில்லையே; மனது உம்மிடத்தில் எப்படி நிலையாய் இருக்கும்—என்று. அதைப்பார்த்து தியானத்திற்கு உபாயம் பகவான் சொல்லுகிறார்—

தியானமென்பது இன்னொருவஸ்துவின் நினைவுகலக்காமல் ஒரேவஸ்துவை நினைப்பது. இப்படி என்னைத்தியானம் செய்ய முடியாமல்போனால், ஓடிப்போகும் மனதைத் திருப்பிக்கொண்டு வந்து, என்னிடத்தில் ஒருக்காலத்திலும் ஒருவிதக்குற்றமும் இல்லாமையையும், அளவில்லாமல் உயர்ந்த—எனக்கு இயற்கையாகவுள்ள—எல்லா நல்லகுணங்களையும் நினைத்து, அளவில்லாத பிரீதியுடன் என்னை நினைத்துப் பழக்கு. அந்தப் பழக்கத்தினால் பிறகு மனது என்னிடத்திலேயே நிலையாய் நிற்கும். அதனால் என்னை அடையலாம். நினைக்க வேண்டிய குணங்களாவன—திருமேனியின் அளவில்லாத அழகு; தாழ்ந்தவர்களுடன் இடைவிடாமல் பிரீதியுடன் பழகுவது; எல்லாரும் நன்றாயிருக்கவேணுமென்று எண்ணுவது; குற்றங்களைப் பார்க்காமல் எல்லாரிடத்திலும் ஆசை; எல்லாரிடத்திலுமிரக்கம்; மிகவும்இன்பமாயிருப்பது; ஒன்றாலும் கலங்காத மனது உள்ளவனாயிருப்பது; அளவில்லாமல் கொடுப்பது; பயமில்லாமல் எந்த சத்துருக்களுடனும் சண்டைக்குப்போவது; எந்த வேலையாலும் களைப்பை அடையாமை; சண்டையில் விரோதிகளைத் தவறாமல் ஜயிப்பது; எல்லாவற்றையும் நன்றாய் அறிவது; அநுபவிக்கக் கூடிய வஸ்துக்களுக்கு அழிவில்லாமை; நினைத்ததை முடிப்பது; எல்லாரையும் அடக்கி ஆளுவது; எல்லாவற்றையும் உண்டு பண்ணுவது—இவை முதலானவைகள். இவ்விதமான கணக்கில்லாத குணங்களுக்கு பகவான் இருப்பிடம். ஆறுகளுக்கு ஸமுத்திரம்போல். [9]

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌪𑍍𑌯𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑍋 𑌭𑌵 ।
𑌮𑌦𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌵𑌨𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥௧௦॥

kim evam aviratasnehānuvṛttasmṛtyabhyāse 'py asamartho 'si? tarhi matkarmaparamo bhava | madīyāni karmāṇi — ālayanirmāṇodyānakaraṇapradīpāropaṇamārjanābhyukṣaṇopalepanapuṣpāharaṇapūjāpravartananāmasaṅkīrtanapradakṣiṇastutinamaskārādīni | tāny atyarthapriyatvenācara | atyarthapriyeṇa madartham api karmāṇi kurvan acirād abhyāsayogapūrvikāṃ mayi sthirāṃ bhaktim avāpya matprāptirūpāṃ siddhim avāpsyasi || ||௧௦||

அ.வ—நெடுநாளாய் பழகினதும், கண்ணாலே பார்க்கக் கூடியதும், சீக்கிரம் அடையக் கூடியதுமான-இப்போது இன்பமாகத் தோன்றுகிற-வஸ்துக்களில் மனது படிந்திருக்கிறதே; அவைகளை விட்டு இழுக்க முடியுமா ? நீர் குற்றமில்லாதவராயும், குணமுள்ளவராயும் இருந்த போதிலும், நீர் சொன்னபடி நினைத்துப் பழக்கம் பண்ணமுடியாது. மனதுக்கு வேலைகளைச் செய்வதில்தான் வாஸனை உண்டாயிருக்கிறது. ஆகையால் வேலைகளில்தான் மனது செல்லும். இப்படி அர்ஜுனனுக்கு எண்ணமிருப்பதை அறிந்து, பழக்கம் பண்ணுவதற்கு வழி சொல்லுகிறார்—

இப்படி அளவில்லாத பிரீதியுடன் நினைத்துப் பழக்குவதற்கு முடியாமல் போனால், கோவில் கட்டுவது, புஷ்பத் தோட்டம் போடுவது, கோவிலுக்கு விளக்குப் போடுவது, கோவில்களைப் பெருக்கி, தெளித்து, மெழுகுவது, புஷ்பங்கள் கொண்டுவருவது, என்னுடைய பூஜையை ஸரியாக நடத்துவது, என் பெயர்களைச் சொல்லுவது, பிரதக்ஷிணம்—ஸ்தோத்திரம்—நமஸ்காரம் முதலானவைகளைச் செய்வது—இவை முதலான என் வேலைகளை அளவில்லாத பிரீதியுடன் செய். இப்படிச் செய்தால், சீக்கிரத்தில் கீழ்ச் சொன்ன 1 பழக்கம் பண்ணமுடியும். பிறகு படிப்படியாய் என்னை அடையலாம். [ 10 ]

1. இப்படிச் செய்யும் வேலைகளில் ஒவ்வொன்றும் பாபத்தைப் போக்கக்கூடியதாகையாலும், ஒவ்வொரு வேலையிலும் பகவானை நினைப்பதாலும், பகவானுடைய தியானத்தின் (நினைவின்) பழக்கம் சீக்கிரம் வந்து விடுமென்று கருத்து.

அதைதத³ப்யஶக்தோ(அ)ஸி கர்தும் மத்³யோக³மாஶ்ரித: |
ஸர்வகர்மப²லத்யாக³ம் தத: குரு யதாத்மவாந் ||௧௧||

அத² மத்³யோக³மாஶ்ரித்யைதத³பி கர்தும் ந ஶக்நோஷி - மத்³கு³ணாநுஸந்தா⁴நக்ருதமதே³கப்ரியத்வாகாரம் ப⁴க்தியோக³மாஶ்ரித்ய ப⁴க்தியோகா³ங்க³பூ⁴தம் மத³ர்த²கர்மாபி கர்தும் ந ஶக்நோஷி? ததோ(அ)க்ஷரயோக³மாத்மஸ்வபா⁴வாநுஸந்தா⁴நரூபம் பரப⁴க்திஜநநம் பூர்வஷட்கோதி³தமாஶ்ரித்ய தத்ஸாத⁴நதயா ஸர்வகர்மப²லத்யாக³ம் குரு | உக்தியோகேந மதே³கப்ராப்யதாபூ⁴தம் ஹி பூர்வக்ஷீணாஶேஷபாபஸ்யைவ ஜாயதே | யதாத்மவாந் - யதமநஸ்க: - ததா³நபி⁴ஸம்ஹிதப²லேந மதா³ராத⁴நரூபேணாநுஷ்டி²தேந கர்மணா விநஷ்டாவித்³யாதி³ஸர்வாந்த:கரணதோ³ஷோ நிவ்ருத்தாவித்³யாதி³ ஸர்வதிரோதா⁴நோ மச்சே²ஷதைகஸ்வரூபம் ப்ரத்யகா³த்மாநம் ஸாக்ஷாத்க்ருத்ய மயி பராம் ப⁴க்திம் ஸ்வயமேவ லப்ஸ்யதே | ததா²(அ)வக்ஷ்யதி "ஸ்வகர்மணா தமப்⁴யர்ச்ய ஸித்³தி⁴ம் விந்த³தி மாநவ:" இத்யாரப்⁴ய "விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்³ரஹ்மபூ⁴யாய கல்பதே | ப்³ரஹ்மபூ⁴த: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி | ஸமஸ்ஸர்வேஷு பூ⁴தேஷு மத்³ப⁴க்திம் லப⁴தே பராம்" இதி ||

||௧௧||

அவ—ஸம்ஸாரிகளுக்கு தன் பிரயோஜநத்துக்காகவே காரியங்களைச் செய்யத் தோன்றுகிறது; அவன் உமக்காக எப்படி வேலை செய்யக் கூடும். அதுவும் அளவில்லாத ப்ரீதியுடன் எப்படிச் செய்ய முடியும் என்றால், அதற்கு ஸாதநவரிசைகளில் ஆரம்பத்திலிருக்கும் எல்லா உபாயத்திற்கும் அடிப்படியான கர்மயோகத்தை நினைப்பு மூட்டுகிறார்—

என்னுடைய உயர்ந்த குணங்களை நினைத்து, என்னிடத்தில் மாத்திரம் பிரீதி பண்ணுவதான பக்தியோகத்தைச் செய்ய ஆரம்பித்து, அந்த தியானமென்கிற மாத்துக்கு 1 முளைபோன்ற இந்த

1. பக்தி யோகத்திற்கு உதவிகள் அனேகம் படிகள் இருக்கின்றன. அவைகளில் இதற்குக் கீழ்படி கிடையாதென்று கருத்து.

என் வேலைகளையும் மிகுந்த பிரீதியுடன் செய்ய முடியாமல் போனால், என்னுடைய தியானத்துக்கு உதவியாக உன் ஆத்ம ஸ்வரூபத்தை முதல் ஆறு அத்தியாயங்களில் சொன்னபடி உள்ளபடி பார்க்க வேணுமென்று நினைத்து, அதற்கு உபாயமாகக் கர்மயோகத்தைச் செய். அதாவது—பலன்களை விரும்பாமல், மனதை அடக்கி, என் பிரீதிக்காகவே கர்மங்களைச் செய். அப்படிச் செய்தால்தான் எல்லாப்பாபங்களும் போகும். அப்போதுதான் என்னிடத்தில் அளவில்லாத பிரீதிவந்து, என்னையே அடையவேண்டுமென்று நினைவு உண்டாகும். இல்லாதுபோனால் உண்டாகாது. அந்த நினைவு வருவது லேசா? அந்தக் கர்மங்களால் ஆத்மத்தியானம் வரும். தியானத்தால் அறியாமை முதலான எல்லா மறைவுகளும் நீங்கி, எனக்கு வேலை செய்வதற்காகவே ஏற்பட்டிருக்கிற உன் (ஜீவ) ஸ்வரூபத்தை உள்ளபடி பார்க்கலாம். பார்த்ததும் என்னுடைய தியானம் தன்னடையாகவே வரும். இந்த ஸங்கதியை 18-வது அத்தியாயம் 54-வது சுலோகத்தில் சொல்லப் போகிறார். [ 11 ]

श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छान्तिरनन्तरम् ॥

अत्यर्थप्रीतिविरहिताक्कृशाभ्यासात् स्वात्मज्ञा साक्षरयाथात्म्यानुसन्धानरूपं तदपरोक्ष्य ज्ञानमेवात्महितत्वे विशिष्यते । अपरोक्षज्ञानादपि निष्पन्नात्तदर्शनोपायभूतं ध्यानमेवात्महितत्वे विशिष्यते । तस्माद्ध्यानादपि निष्पन्नात्तदुपायभूतं फलत्यागेनानुष्ठितं कर्मैव विशिष्यते । अनभिसंहितफलानुष्ठितात् कर्मणोऽनन्तरमेव निरस्तपापतया मनसः शान्तिर्भविष्यति । शान्ते मनसि आत्मध्यानं सम्पत्स्यते । ध्यानाच्च तदपरोक्ष्यम् । तदपरोक्ष्यात्परा भक्तिरिति भक्तियोगाभ्यासाशक्तस्यात्मनिष्ठैव श्रेयसी । आत्मनिष्ठस्याप्यशान्तमनसो निष्ठाप्राप्तये अनभिसंहितफलकर्मनिष्ठैव श्रेयसीत्यर्थः ॥ ॥ ௧௨ ॥

அ.—பக்தியைப்பண்ண முடியவில்லையே என்கிற வருத்தத்தைப் போக்குவதற்காகவும், அப்புலியானைப் பிடிப்பதற்காகக் கையைத் தூக்கும் குழந்தைகள்போல், முடியாத வேலையை ஆரம்பிப்பதைத் தடுப்பதற்காகவும், பக்திக்கு உதவியான ஸாதநங்களில் அவனவனுக்குத் தகுந்ததைக் கஷ்டமில்லாமல் செய்யலாம் என்று ஸ்தோத்திரம் பண்ணி, கீழ்ச் சொன்னதை உறுதிப்படுத்துகிறார்—

அளவில்லாத பிரீதி இல்லாமல் வருத்தப்பட்டு, என்னுடைய நினைவைப் பழக்குவதைக்காட்டிலும், [1]ஜீவாத்மஸ்வரூபத்தை உள்ளபடி நினைத்து அதை உள்ளபடி பார்ப்பதே ஒருவனுக்கு மிகவும் நல்லது. இந்தப் பார்வை வாராமல் போனால், அதற்கு ஸாதநமான ஜீவாத்மத்தியானம் செய்வதே நல்லது. அந்தத் தியானமும் வாராமல்போனால், பலன்களை விரும்பாமல் என்னுடைய பிரீதிதான் வேண்டுமென்று நினைத்து கர்மங்களைச் செய்தால், எல்லா பாபங்களும் போய், மனது அடங்கும். மனது அடங்கினால், ஜீவாத்மாவைத் தியானம் பண்ணலாம். தியானத்தால் அதைப் பார்க்கலாம். பார்த்தால் என்னைத் தியானம் செய்யலாம். ஆகையால் என்னுடைய தியானத்தைப் பழக்க முடியாதவனுக்கு ஜீவாத்மாவைத் தியானம் செய்வதே மிகவும் நல்லது. மனது அடங்காதபோனால், அதுவும் முடியாதவனுக்கு ஆத்மத்தியானத்துக்காக ஆத்மாவின் நினைவுடன் பலன்களை விரும்பாமல் கர்மம் செய்வதே நல்லது.

[12]

அவ.— அநபிஸம்ஹிதபலகர்மநிஷ்டஸ்யாநுஷ்டேயாந் குணாநாஹ—

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச |
நிர்மமோ நிரஹங்காரஸ்ஸமது:கஸுக: க்ஷமீ || ௧௩ ||

---

1. முதல் ஆறு அத்தியாயங்களில் ஜீவாத்ம ஸ்வரூபத்தைப் பார்ப்பதும், ஏழாவது அத்தியாயம் முதல் பத்தாவது அத்தியாயம் வரையில் பகவானைத் தியானம் செய்வதும் சொல்லப்பட்டன. ஒன்று மற்றொன்றுக்கு உதவி என்று மூலத்தில் சொல்லப்படவில்லை. அது இங்கே சொல்லப்படுகிறது.

ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஶ்சய: |
மய்யர்பிதமநோபுத்திர்யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ||௧௪||

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் — த்வேஷவிஷயபூதேஷ்வபி ஸர்வேஷு பூதேஷு அத்வேஷ்டா | மதபராதாநுகுணம் ஈஶ்வரப்ரேரிதாந்யேதாநி பூதாநி த்விஷந்த்யபகுர்வந்தீதி அநுஸந்தாய தேஷு த்விஷத்ஸு அபகுர்வத்ஸு ச ஸர்வேஷு மைத்ரீம் மதிம் குர்வந் மைத்ர: | தேஷ்வேவ து:கிதேஷு கருணாம் குர்வந் கருண: | நிர்மம: — தேஹேந்த்ரியேஷு தத்ஸம்பந்திஷு ச நிர்மம: | நிரஹங்கார: — தேஹாத்மாபிமாநரஹித: | தத ஏவ ஸமது:கஸுக: — ஸங்கல்பமூலயோ: ஸுகது:கயோர்ஹர்ஷோத்வேகரஹித: | க்ஷமீ — ஸ்பர்ஶப்ரபவயோரபரிஹார்யயோரபி தயோர்விகாரரஹித: | ஸந்துஷ்ட: — யத்ருச்சோபநதேந யேந கேநாபி தேஹதாரணத்ரவ்யேண ஸந்துஷ்ட: | ஸததம் யோகீ — ஸததம் ப்ரக்ருதிவியுக்தாத்மாநுஸந்தாநபர: | யதாத்மா — நியமிதமநோவ்ருத்தி: | த்ருடநிஶ்சய: — அத்யாத்மஶாஸ்த்ரோதிதேஷ்வர்தேஷு த்ருடநிஶ்சய: | மய்யர்பிதமநோபுத்தி: — பகவாந் வாஸுதேவ ஏவ அநபிஸம்ஹிதபலேநாநுஷ்டிதேந கர்மணா ஆராத்யதே; ஆராதிதஶ்ச ஆத்மாவலோகம் ஸாதயிஷ்யதீதி மய்யர்பிதமநோபுத்தி: | ய ஏவம்பூதோ மத்பக்த: ஸ ச மத்யோகேந மாம் பஜமாநோ ய:, ஸ மே ப்ரிய: || ||௧௩-௧௪||

அ-வ—பலன்களை விரும்பாமல் கர்மம் செய்கிறவனுக்கு வேண்டிய குணங்களைச் சொல்லுகிறார்—

(1) மனதால் த்வேஷம் செய்கிறவர்கள், வாயாலும், உடம்பாலும் தொந்தரவு பண்ணுகிறவர்கள் எல்லாரிடத்திலும், நம்முடைய பாபங்களுக்காகப் பகவான் அவர்களைக்கொண்டு நமக்கு இப்படிச் செய்கிறானென்று நினைத்து, த்வேஷம் பண்ணுமலிருப்பது. (2) இதுவும் தவிர அவர்கள் க்ஷேமத்தை நினைப்பது. (3) அவர்களுக்கு ஏதாவது தொந்தரவு வந்தால், ஐயோ! என்று

இரங்கி நம்மால் ஆனவரையில் உதவி செய்வது. (4) உடம்பையும், இந்திரியங்களையும், அவைகளைச்சேர்ந்த பிள்ளை பெண்டாட்டி முதலானவைகளையும் தன்னுடையவைகள் என்று நினைக்காமை. அதாவது—ஒருவனுக்கு இவைகளைப் பகவான் 1இரவலாகக் கொடுத்திருக்கிறனென்று நினைப்பது (5) உடம்பை ஆத்மாவாக எண்ணுமை, உடம்பு வேறு, அதிலிருக்கும் நான் என்கிற ஆத்மா வேறு என்கிற நினைவு வேணும். சொல்லுவது போதாது. (6) நினைவினுல் உண்டாகும் ஸுகத்திலும், துக்கத்திலும், ஸந்தோஷமும், வருத்தமும் இல்லாமை. அதாவது—இந்த ஸுகமும் துக்கமும் நினைவால் ஏற்படுகிறவைகள். அதாவது—ஒரு ரூபாய் கெட்டுப் போனால், மனது புண்ணுக ஆகிறது. ஒரு ரூபாய் வந்தால், ஸந்தோஷமாயிருக்கிறது. இந்த இரண்டும் உடம்பில் சிரங்கு வெடித்தது போலும், சந்தனம் பூசினது போலுமில்லை. ஆகையால் இந்த இரண்டும் நினைவினுல் உண்டாகிறது. இந்த ஆருவது குணம் கீழ்ச் சொன்ன 4-5-வது குணங்கள் வந்தால் வரும் (7) உடம்பில் காயம் படுவது முதலானவைகளால் உண்டாகும் துக்கத்தினுல் ஓச்சலும், சந்தனம் பூசுவது முதலானவைகளால் உண்டாகும் மனதுக்கு இருமாப்பும் (கொழுப்பும்) இல்லாமை. (8) தற்செயலாய் கிடைத்தவைகளைக் கொண்டு உடம்பை வளர்த்து, அது கொஞ்சமென்றும், அதிகம் என்றும், ரஸமுள்ளதென்றும், ரஸமில்லாததென்றும் பாராமல் ஸந்தோஷப்படுவது. (9) எப்பொழுதும் உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மாவை நினைத்துக் கொண்டிருப்பது. இதினுல் வாஸனை பலப்பட்டு யோகத்துக்கு உதவியுண்டாகும். (10) எப்பொழுதும் ஆத்மாவைத்தவிர வேறு விஷயத்தில் போகாதபடி மனதை அடக்குவது. இதுவும் யோகத்துக்கு உதவி. (11) உபநிஷத்துக்களில் சொல்லுகிற ஸங்கதிகளில் நல்ல நம்புதல். (12) பலன்களை விரும்பாமல் கர்மங்களைச் செய்தால், அவைகளால் பகவான் ஸந்தோஷத்தை அடைந்து,

---

1. இப்படி நினைத்தால், தனக்குப் பண்டங்கள் கெட்டுப்போனுல் துக்கம் வராது. ஒருவன் நம்முடைய வீட்டில் ஒரு பெட்டியை வைத்து, மறுபடியும் எடுத்துக்கொண்டு போனுல், நமக்குத் துக்கம் வருமோ. அது போல,

நமக்கு ஆத்மாவின் உள்ளபடி பார்வையைக் கட்டாயம் கொடுப்பன் என்ற எண்ணமும், நம்புதலும்—இவை முதலான குணங்கள் உள்ளவனாய் எவன் கர்மயோகம் செய்து என்னிடத்தில் பக்தி பண்ணுகிறானோ; அவனிடத்தில் எனக்குப் ப்ரீதி.    [13-14]

யஸ்மாந்நோத்₃விஜதே லோகோ லோகாந்நோத்₃விஜதே ச ய: |
ஹர்ஷாமர்ஷப₄யோத்₃வேகை₃ர்முக்தோ ய: ஸ ச மே ப்ரிய: ||

யஸ்மாத் காரணபூ₄தாத் லோகோ நோத்₃விஜதே; யோ லோகோத்₃வேக₃கரம் கர்ம கிமபி ந கரோதீத்யர்த₂: | லோகாச்ச காரணபூ₄தாத் நோத்₃விஜதே, யம் ப்ரதி ஸர்வோ லோக உத்₃வேக₃கரம் கர்ம ந கரோதி, ஸர்வாவிரோதி₄த்வநிஶ்சயாத் | அதஏவ ச கஞ்சந ப்ரதி ஹர்ஷேண கஞ்சந ப்ரத்யமர்ஷேண கஞ்சந ப்ரதி ப₄யேந கஞ்சந ப்ரத்யுத்₃வேகே₃ந ச முக்த: | ஸ ஏவம்பூ₄தோ மத்₃ப₄க்தோ மம ப்ரிய: ||    ||15||

(13) 1 உலகத்திற்கு மனவருத்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒருவேலையையும் செய்யாமை. இவன் இப்படி இருந்தால், இவனால் ஒருவனுக்கும் ஒருவித இடஞ்சலுமில்லை என்று எண்ணி, உலகத்தார் இவனுக்கு மனவருத்தத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு வேலையை எப்படிச் செய்யாமலிருப்பார்களோ, அப்படி இருக்கை. ஒருவனிடத்தில் ஸந்தோஷமும், ஒருவனிடத்தில் பொறாமையும், ஒருவனிடத்தில் பயமும், ஒருவனிடத்தில் அருவருப்புமில்லாமை2. இப்பேர்ப்பட்டவனிடத்திலும் எனக்குப் ப்ரீதி.    (15)

அநபேக்ஷ: ஶுசிர்த₃க்ஷ உதா₃ஸீநோ க₃தவ்யத₂: |
ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃ யோ மத்₃ப₄க்த: ஸ மே ப்ரிய: ||    ||16||

அநபேக்ஷ:—ஆத்மவ்யதிரிக்தே க்ருத்ஸ்நே வஸ்துந்யநபேக்ஷ: |
ஶுசி:—ஶாஸ்த்ரவிஹிதத்₃ரவ்யவர்தி₄தகாய: | த₃க்ஷ:—ஶாஸ்த்ரீய

1. 4-வது குணம் முதலானவைகளின் பலன் 13-வது குணம்.

2. 13-வது குணத்தின் ... [illegible]

க்ரியோபாதாநஸமர்த:| உதாஸீந:| கதவ்யத:-ஶாஸ்த்ரீயக்ரியாநிர்வ்ருத்த்யவர்ஜநீயஶீதோஷ்ணபருஷஸ்பர்ஶாதிது:கேஷு வ்யதாரஹித:| ஸர்வாரம்பபரித்யாகீ-ஶாஸ்த்ரீயவ்யதிரிக்தஸர்வகர்மாரம்பபரித்யாகீ | யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: || ||௧௬||

அ:—தன் ஸ்வரூபத்தை உள்ளபடி பார்ப்பதில் மாத்திரம் ஆசையிருப்பதால், சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளை மாத்திரம் நன்றாய் கவனிக்கிறானென்றும், மற்ற வேலைகளில் கொஞ்சமேனும் ஆசையில்லை என்றும் சொல்லுகிறார் —

(14) ஆத்மாவைத் தவிர வேறு ஒரு வஸ்துவிலும் ஆசையில்லாமை. (15) சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வஸ்துக்களைச் சாப்பிட்டு உடம்பை வளர்க்கை. (16) சாஸ்திரத்தில் சொல்லுகிற வேலைகளைச் செய்வதில் கெட்டிக்காரத்தனம். (17) சாஸ்திரத்தில் செய்யவேண்டுமென்றும், செய்யக் கூடாதென்றும் சொன்ன வேலைகளைத்தவிர மற்ற வேலைகளைக் கவனிக்காமலிருப்பது. (18) சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளைச் செய்யும் பொழுது, நடுவில் கட்டாயம் வரக்கூடியகுளிர்—சூடு—உடம்புக்குக் காயம் முதலானவைகளைப்பற்றி வருத்தப்படாமை. (19) சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளைத் தவிரமற்ற ஒரு வேலையையும் கவனித்தாலும், செய்ய ஆரம்பிக்காமை. இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடம் பக்தி பண்ணுகிறானோ; அவனும் எனக்கு வேண்டியவன். [16]

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி |
ஶுபாஶுபபரித்யாகீ பக்திமாந்ய: ஸ மே ப்ரிய: ||௧௭||

யோ ந ஹ்ருஷ்யதி-யந்மநுஷ்யாணாம் ஹர்ஷநிமித்தம் ப்ரியஜாதம் தத்ப்ராப்ய ய: கர்மயோகீ ந ஹ்ருஷ்யதி | யச்சாப்ரியம், தத்ப்ராப்ய ந த்வேஷ்டி | யச்ச மநுஷ்யாணாம் ஶோகநிமித்தம் பார்யாபுத்ரவித்தக்ஷயாதிகம் தத்ப்ராப்ய ந ஶோசதி| ததாவிதமப்ராப்தம் ச ந காங்க்ஷதி | ஶுபாஶுபபரித்யாகீ-பாபவத் புண்யஸ்யாபி பந்தஹேதுத்வாவிஶேஷாதுபயபரித்யாகீ | ய ஏவம்பக்திமாந் ஸ மே ப்ரிய:|| ||௧௭||

(20) மனிதர்கள் எந்த வஸ்துவை அடைந்து, ஸந்தோஷப்படுவார்களோ, அது தற்செயலாய் வந்தாலும், ஸந்தோஷப்படாமை. (21) எந்த வஸ்துவைக்கண்டு பொறுக்க மாட்டார்களோ, அது வந்தாலும் பொறுமையில்லாமை. (22) பிள்ளை, பெண்டாட்டி சாகிறது, பணம் போகிறது முதலானவைகள் நேர்ந்தால், துக்கப்படாமை. (23) அந்தப் பிள்ளை பெண்டாட்டி முதலானவைகள் இல்லாதபோது அவைகளை ஆசைப்படாமை. (24) ஆத்மாவைப் பார்ப்பதற்கு இடைஞ்சலாயிருப்பதினால், பாபமும் புண்ணியமும் ஒரே மாதிரியென்று நினைத்து, பாபத்தைப்போல் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய புண்ணியங்களையும் செய்யாமை. எப்படிப் பாபம் பண்ணுவதில்லையோ; அப்படியே பிள்ளை முதலான பலன்களைக் கொடுக்கக்கூடிய புண்ணியங்களையும் ஆத்மாவைப் பார்ப்பதற்கு இடைஞ்சல் என்கிற எண்ணத்தினாலே பண்ணாமை. இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடத்தில் பக்தியுள்ளவனோ; அவனும் எனக்கு வேண்டியவன். [17]

ஸம: ஶத்ரௌ ச மித்ரே ச ததா² மாநாபமாநயோ: ।
ஶீதோஷ்ணஸுக²து:³கே²ஷு ஸம: ஸங்க³விவர்ஜித: ॥ ௧௮ ॥

துல்யநிந்தா³ஸ்துதிர்மௌநீ ஸந்துஷ்டோ யேநகேநசித் ।
அநிகேத: ஸ்தி²ரமதிர்ப⁴க்திமாந்மே ப்ரியோ நர: ॥ ௧௯ ॥

“அத்³வேஷ்டா ஸர்வபூ⁴தாநாம்” இத்யாதி³நா ஶத்ருமித்ராதி³ஷு த்³வேஷாதி³ரஹிதத்வமுக்தம் । அத்ர தேஷு ஸந்நிஹிதேஷ்வபி ஸமசித்தத்வம் ததோऽப்யதிரிக்தோ விஶேஷ உச்யதே । க்ருதிர் ஸ்தி²ரமதித்வேந நிகேதநாதி³ஷ்வஸக்தத்வமநிகேத: । ததை²வ மாநாபமாநாதி³ஷ்வபி ஸுக²து:³க²ஸம்பந்தே⁴ऽபி ஸஹிஷ்ணுர்யோ ஸ மே ப்ரிய: ॥ ௧௮-௧௯ ॥

(25) ஒன்றிலும் பற்றில்லாமையாலே, சத்துருக்களும், ஸ்நேஹிதர்களும் கௌரவம் பண்ணினாலும், இளப்பம் பண்ணினாலும், குளிரிலும், சூட்டிலும், ஸுகத்திலும், துக்கத்திலும் ஒரேமாதிரியாயிருக்கை. (26) ஆத்மாவின் நினைவு நிலையாய் இருப்பதால்,

வீடு முதலானவைகளில் பற்று இல்லாமை (27) ஒருவன் வைதாலும், ஸ்தோத்திரம் பண்ணினாலும், பேசாமல் இருப்பது. (28) உலகத்தாரைப்போல, ஸ்தோத்திரம் பண்ணுகிறவர்களை ஸ்தோத்திரம் பண்ணுவதும், வைகிறவர்களை வைவது மில்லாமை. (தற்செயலாய்) கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்படுவதால், ஒரு வஸ்துவுக்காக ஸ்தோத்திரம் செய்வதும், கொடுக்காவிட்டால வைகிறதுமில்லாமை இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடத்தில் பக்தி பண்ணுகிறானோ; அவனும் எனக்கு வேண்டியவன். 1

---

1. 13-வது சுலோகம் முதல் எட்டு சுலோகங்களும் பக்தனைச் சொல்லுகின்றன. அவைகளில் எழு சுலோகங்கள் கர்மயோகம் பண்ணுகிறவனைக் சொல்லுகின்றன. அவனும் பக்தன்தான். பக்தியில்லாமல் ஞான யோகமும், கர்ம யோகமும் செய்ய முடியாது. எட்டாவது சுலோகம் அவனைக்காட்டிலும் வேறான பக்தியோகம் செய்கிறவனைச் சொல்லுகிறது. இவன் வேறு என்பது அந்த சுலோகத்திலிருக்கிற-வேற்றுமையைக்காட்டுகிற—"து" என்கிற சொல்லாலும், பக்தர்களை "மத்பரமா:" (என்னையே உயர்ந்தப் பிரயோஜநமாக எண்ணுகிறவர்கள்) என்றும், எனக்கு மிகவும் வேண்டியவர்கள் என்றும் சொல்லுவதாலும், ஏற்படுகிறது.

கர்மயோகம் செய்கிறவன் தன்னை (1) உடம்பைக்காட்டிலும் வேறு; (2) பகவானுக்கு உட்பட்டவன்; (3) அவனுக்காகவே இருக்கிறவன்—என்று அறிந்து, பகவானைத்தவிர வேறொன்றிலும் ஆசை யில்லாமல், கர்மங்களை அவன் ஸந்தோஷத்துக்காகவே செய்யவேண்டியது. தான் உடம்பைக்காட்டிலும் வேறு என்கிற நினைவு ஐந்தாவது குணம். இந்த நினைவு யோகம் செய்யும்காலத்தில் நிலையாயிருப்பதற்காக, யோகம் செய்யாத வேளைகளிலும் இதை நினைத்துக்கொண்டிருப்பது 9-வது குணம். இதற்காகவே மனதை வெளியே விடாமையாகிய 10-வது குணம். ஆத்மாவின் நினைவு நிலையாயிருந்தால், வீடு முதலானவைகளிலும், தன் உடம்பு, இந்திரியங்கள், உடம்பைச் சேர்ந்தவைகள் இவைகளிலும் பற்றில்லாமையாகிய 4-வது, 26-வது குணங்கள் வரும். நல்லதும் பொல்லாததுமான விஷயங்களில் ஒரேமாதிரியாயிருப்பதாகிய 6, 7, 20—23, 25, 27-வது குணங்கள் தானே வரும். உடம்பு இருப்பதற்காக மாத்திரம் சாப்பாடு வேண்டுமானதால், 8-வது குணம் வரும். அதினால் 28-வது குணமும் வந்துவிடும். தானும் மற்றவர்களும் பகவானுக்கு உட்பட்டவர்கள், அவன் உடம்புகள் என்று அறிவதனால், 1-2-3-வது குணங்களும், 13-வது குணமும் வந்துவிடும். இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம்

ஶ்லோ—அக்ஷராத்மநிஷ்டாத் பக்தியோகநிஷ்டஸ்ய ஶ்ரைஷ்ட்யம் ப்ரதிபாத்ய ப்ரக்ருதமுபஸம்ஹரதி—

யே து தர்ம்யாம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே|
ஶ்ரத்ததாநா மத்பரமா பக்தாஸ்தே(அ)தீவ மே ப்ரியா: ॥ ||௨௦||

ஓம் தத்ஸதிதி ஶ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே பக்தியோகோ நாம த்வாதஶோ(அ)த்யாய:॥

தர்ம்யம் சாம்ருதம் சேதி தர்ம்யாம்ருதம், யே து ப்ராப்யஸமம் ப்ராபகம் பக்தியோகம் யதோக்தம் "மய்யாவேஶ்ய மநோ யே மாம்" இத்யாதிநோக்தேந ப்ரகாரேணோபாஸதே, தே பக்தா: அதிதராம் மம ப்ரியா: ॥ ||௨௦||

இதி ஶ்ரீபகவத்ராமாநுஜ விரசிதே ஶ்ரீமத்கீதாபாஷ்யே த்வாதஶோ(அ)த்யாய: ॥

---

சாஸ்திரத்தில் நம்பிக்கை—11-வது குணம். இதினாலேயே சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு, 16-வது சுலோகத்தில் சொன்ன 14-வது முதல் 19-வது வரையில் உள்ள குணங்களைத் தேடுவன். பகவானுக்காகவே தான் இருப்பதை அறிந்தால், அவனிடத்திலேயே மனதும், எண்ணமும் வைக்கப்படும்—12-வது குணம். ஸ்வர்க்கம் முதலானவைகளுக்கு வேலை செய்யமாட்டான்—24-வது குணம். இப்படி இந்த சுலோகங்களில் சொல்லப்பட்ட 28 குணங்களும் கர்ம யோகத்திற்கு உதவியானவைகள்.

முதல்படியான கர்மயோகம் செய்கிறவனுக்கும்கூட இவைகள் வேண்டுமானால், மோக்ஷத்திற்காக பக்தி பிரபத்தி செய்கிறவனுக்கு இவை வேண்டாமோ? இவர்களுக்கு இவைகள் இருக்கின்றனவா? இல்லையா என்று தாங்களாவது, பிறர்களாவது பார்த்தார்களோ? பார்த்து இல்லையென்று அறிந்தார்களோ? வருத்தம் கிடக்கட்டும். நல்ல ஆசாரியர்களும் தாயார் பெருமாளும் காப்பாற்ற வேணும்.

அவ—ஆத்மாவைத் தியானிப்பவனைக் காட்டிலும் என்னை (பகவானை)த் தியானம் செய்கிறவன் உயர்ந்தவன் என்று சொல்ல ஆரம்பித்தார். 1 அதை இப்போது முடிக்கிறார்—

2 என்னை அடைவதற்குஉதவியான என்னுடையத் தியானத்தை என்னை அடைவதை (மோக்ஷத்தை)ப் போல் நினைத்து, இந்த அத்தியாயம் 2-வது சுலோகத்தில் சொன்னபடி எவர்கள் செய்கிறார்களோ; அவர்கள் எனக்கு அளவில்லாமல்3 வேண்டியவர்கள்.

ஸ்ரீ மதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

பனிரெண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அர்ஜுனன் ஒரு கேள்வி கேட்டான். அதற்குப் பதில் 2-வது முதல் ஏழு சுலோகங்களாலே பக்தி யோகமே உயர்ந்தது என்று பகவான் சொன்னார். அதை இங்கே முடிக்கிறார். நடுவில் பதினொன்று சுலோகங்கள் பக்தி யோகம் செய்யமுடியாமையின் பிரஸ்தாபத்தால் வந்தவைகள்.

2. இந்த சுலோகம் 2-வது சுலோகம் சொன்னதையே சொல்லுகிறது.

3. கர்மயோகம் செய்கிறவர்கள் பகவானுக்கு வேண்டியவர்களானது 7-வது அத்தியாயம் 18-வது சுலோகத்தில் சொன்ன உதாரத்வத்தைப்பற்றி. அதாவது பக்தனுக்கு வேண்டியதைக் கொடுத்ததினால். பக்தியோகம் பண்ணுகிறவன் மிகவும் வேண்டியவனாயிருப்பது அதே சுலோகத்தில் சொன்ன பகவானுக்கு ஆத்மாவாயிருப்பதால்,

தமிழ் அர்த்தத்துடன் கூடிய

# ஸ்ரீமத்கீதாபாஷியம்.

மூன்றாவது பாகம்.

(13-வது முதல் 18-வது அத்தியாயம் உள்பட)

கும்பகோணம்
ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

1929

விலை] [ரூ. 0—12—0

# 18-வது அத்தியாயம், 16-வது சுலோகத்தின் குறிப்பின் கடைசியில் (பக்கம் 626) இதைச் சேர்க்கவேண்டியது.

இங்கே ஒரு கேள்வி—ஜீவனுக்கு நல்லதோ, பொல்லாததோ, தன் இஷ்டப்படி ஒரு வேலையைச் செய்ய சக்தி இருக்கிறது. பகவான் அவனைத் தடுக்கிறதில்லை. தடுக்காமலிருப்பதோடு, அந்தந்த வேலைகளுக்கு உத்திரவும் கொடுத்து, அதைக்கூட இருந்து நடத்துகிறார் என்று சொல்லுகிறீர். அப்படியானால், ஒரு ஜீவன் நல்ல வேலையைச் செய்வானேன். ஒரு ஜீவன் கெட்ட வேலையைச் செய்வானேன்? என்று.

பதில்.—அவனவன் முன்னாலே செய்த கர்மங்களினாலே பகவானுக்குக்கோபமும், ஸந்தோஷமும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளாலே ஒருவன் நல்லதையும், ஒருவன் பொல்லாததையும் செய்கிறான்—என்று.

(பகவானுடைய கோபத்துக்கும் ஸந்தோஷத்துக்கும் அதிருஷ்டமென்றும், கர்மமென்றும் பெயர். ஸந்தோஷத்தை நல்ல அதிருஷ்டமென்றும், நல்ல கர்மமென்றும், கோபத்தைத் துரதிருஷ்டமென்றும், துஷ்கர்மமென்றும் சொல்லுகிறது.)

2. இன்னொருகேள்வி—(1) அதிருஷ்டங்களினால் ஜீவன்களுக்கு நல்ல வேலையும், பொல்லாத வேலையும் ஏற்படுமேயானால், ஜீவனுக்கு இஷ்டப்படி நல்லதோ, பொல்லாததோ, ஒரு வேலையைச் செய்ய சக்தி இருக்கிறது என்பது எப்படி? (2)அதிருஷ்டங்களினாலே ஜீவனகள் ஏவப்படுவார்களேயானால், செய்யென்று விதிப்பதும், செய்யாதே என்று தடுப்பதுமானசாஸ்திரம்எதற்கு? ஏனென்றால், நல்லதைச்செய்கிறவனை செய் என்றுசாஸ்திரம் ஏவவேண்டாம்; கெட்டதைச் செய்கிறவனை செய்யாதே என்கிற சாஸ்திரத்தினால் தடுக்கமுடியாது—என்று.

(1) பதில்.—அதிருஷ்டத்தினால் ஜீவனுக்கு நல்லதோ, பொல்லாததோ இரண்டிலொன்றைச் செய்யத் தோன்றுகிறது. அதனால் அவனுடைய சக்திக்கு என்ன குறைவு; சக்தி குறைந்தால், எப்படிச செய்ய முடியும். (2) சாஸ்திரமெனபது ஒரு யஜமானனுடைய உத்திரவு. அது 'செய்' என்றும், 'செய்யாதே' என்றும் இருவகையாக இருக்கிறது. 'செய்' என்பதைச் செய்தால், ஸுகம் கிடைக்கும். 'செய்யாதே' என்பதைச் செய்தால், துக்கம் கிடைக்கும். இந்த இரண்டு ஸங்கதிகளும சாஸ்திரம் இல்லாமல் போனால் எப்படித் தெரியும். இவைகளைத் தெரிவிப்பதுதான் சாஸ்திரத்திற்குப் பிரயோஜனம். சாஸ்திரம் ஏவுகிறதுமில்லை. தடுக்கிறதுமில்லை. துரதிருஷ்டத்தினால் கெட்டவேலையைச் செய்கிறவனுக்கு சாஸ்திரம் வேண்டியதில்லை. நல்ல அதிருஷ்டத்தினால் நல்ல வேலையைச் செய்கிறவனுக்குச் சாஸ்திரம் கட்டாயம் வேண்டும்.

நல்ல அதிருஷ்டம் ஒருவனை ஸோமயாகத்தைச் செய்விக்கிறது. இப்படிச் செய்; இப்படிச் செய்யாதே என்கிற சாஸ்திரத்தை அறிந்து தானே, அவன் அதைச் செய்யவேண்டும். அதற்காகவும் சாஸ்திரம் வேண்டும்.

உலகத்தில் ஒரு யஜமானன் வேலைக்காரர்களுக்கு இதைச் செய்; இதைச் செய்யாதே என்று உத்திரவு பண்ணுகிறான். நல்ல வேலைக்காரன் செய்யென்பதைச் சொன்னபடி செய்து, யஜமானனை ஸந்தோஷப்படுத்தி, அதனால் ஸுகத்தை அடைகிறான். கெட்ட வேலைக்காரன் செய்யாதே என்பதைச் செய்து, யஜமானனுக்குக் கோபத்தை உண்டாக்கி, அதனால் கஷ்டங்களை அனுபவிக்கிறான். உத்திரவினால்தான் யஜமானனுடைய இஷ்டமும், வருத்தமும் வேலைக்காரனுக்குத் தெரிகின்றன. இது போல்தான் யஜமானனாகிய தெய்வம் ஜீவன்களாகிய வேலைக்காரர்களுக்கு உத்திரவு செய்திருக்கிறது. அதற்குத்தான் சாஸ்திரம் என்று பெயர்.

உலகத்து யஜமானனுக்கும். தெய்வத்திற்கும் வித்தியாஸம் என்னவென்றால்—உலகத்தில் வேலைக்காரன் செய்கிற தப்புக்கள் யஜமானனுக்குத் தெரியாது. வேலைக்காரனுடைய தப்பினால் யஜமானனுக்குக் கெடுதியுண்டு. அதனால் வேலைக்காரனுடைய தப்பு யஜமானனுக்குத் தெரிந்தால், அந்த வேலையை நிறுத்திவிடுவான். தெய்வத்துக்கு ஜீவன்கள் செய்கிற எல்லா வேலைகளும் தெரியும். அவர்களுடைய தப்புக்களினால் தெய்வத்திற்கு ஒரு கெடுதியுமில்லை. அதனால் இவர்களைத் தடுக்கிறதில்லை. ஜீவன்களுடைய நன்மைக்காகத்தான் தெய்வம் உத்திரவு பண்ணியிருக்கிறது, தன் லாபத்துக்காக இல்லை. உலகத்து வியாபாரத்தை நன்றாய் கவனித்தால், கீழ்ச்சொன்ன கேள்விகளுக்கெல்லாம் பதில் நன்றாய் ஏற்படும். உலகமும் சாஸ்திரமும் ஒன்று.

3. மறுபடியும் ஒரு கேள்வி—சாஸ்திரமே வேண்டியதில்லை. ஒரு அதிருஷ்டம் முன் அதிருஷ்டத்தினால் உண்டாகிறது. அது அதற்கு முன் அதிருஷ்டத்தினால் என்று ஏன் சொல்லக்கூடாது—என்று.

பதில்.—இப்படியானால், உலகத்து வேலைகளிலும் " இதைச் செய், இதைச் செய்யாதே" என்று சொல்லாமலே ஒருவன் ஒரு வேலையைச் செய்யலாம். உதாரணம்—ஒரு வேலைக்காரனை யஜமானன் மாட்டைக் கொண்டுவா என்று சொல்லாமலே, வேலைக்காரன் தன் அதிருஷ்டத்தினாலோ, யஜமானன் அதிருஷ்டத்தினாலோ மாட்டைத் தானே கொண்டுவரலாமே?

4. இன்னுமொரு கேள்வி—அதிருஷ்டமே யஜமானனை மாட்டைக் கொண்டுவா என்று ஏவப்பண்ணுகிறது; வேலைக்காரனையும் உத்திரவைக் கேட்டு, மாட்டைக் கொண்டுவரும்படி செய்கிறது என்று ஏன் சொல்லக்கூடாது—என்று.

பதில்.—அப்படியே அதிருஷ்டம்தான் வைதிகமான வேலைகளிலும் 'இதைச் செய்; இதைச் செய்யவேண்டாம்' என்று சாஸ்திரம் சொல்லும்படியும், அதைக் கேட்டு அதின்படி ஒருவன் வேலை செய்யும்படியும் செய்கிறது. ஆகையால் ஒருவன் அதிருஷ்டத்தினால் வேலை செய்தாலும், சாஸ்திரத்திற்கு இடம் உண்டாகிறது.

# அட்டவணை.


## 13—வது அத்தியாயம்.

| | சுலோகம். |
|---|---|
| உடம்பு வேறு ஆத்மாவேறு—க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன். | 1 |
| இரண்டும் பகவானுக்கு உட்பட்டவைகள். | 2 |
| க்ஷேத்திரதின் ஸ்வரூபம். | 3—6 |
| ஆத்மாவை உள்ளபடி அறிவதற்கு ஸாதநங்கள். | 7—11 |
| க்ஷேத்திரக்ஞனுடைய ஸ்வரூபம். | 12—18 |
| க்ஷேத்திரம், க்ஷேததிரக்ஞன்—இவைகளுடைய சேர்க்கை அநாதி—அவைகளின் வேலைகள் வேறு. | 19—20 |
| சேர்க்கை தொடர்ந்து வருவதற்குக் காரணம். | 21—25 |
| க்ஷேத்திரம்—க்ஷேத்திரக்ஞன்—இரண்டும் சேராத வஸ்து உலகத்திலில்லை. | 26 |
| இரண்டும் வேறென்று நினைக்கும் வழி. | 27—34 |

## 14—வது அத்தியாயம்.

| | |
|---|---|
| க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன்—இவைகளுடைய சேர்க்கை பகவானால் உண்டாகிறது—பிரளயகாலத்தில் | 1—3 |
| நித்தியஸிருஷ்டியில் | 4 |
| ஸத்துவம் முதலான மூன்று குணங்கள்—அவைகளின் வேலைகள். | 5—9 |
| ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்தில் மேலிடுகிறது—இதை அவைகளின் வேலைகளால் தெரிந்துகொள்ளலாம். | 10—13 |
| மரணகாலத்தில் மேலிடுகிற குணத்தின் வேலை. | 14—20 |
| இந்த குணங்களை ஜயித்ததற்கு அடையாளங்கள். | 21—27 |

## 15—வது அத்தியாயம்.

| | |
|---|---|
| ஸம்ஸாரம் அரசமரம்போன்றது—இரண்டுக்கும் வித்தியாஸம். | 1—2½ |
| ஸம்ஸாரமாகிய அரசமரத்தை வெட்டும் வழி. | 3—5 |
| முக்தனுடைய ஸ்வரூபம். | 6—11 |
| சந்திரன் முதலானவைகளும் பகவானுக்கு உட்பட்டவைகள். | 12—14 |
| எல்லாம் பகவானுடைய ஆளுகைக்கு உள்பட்டது—எல்லா வேதங்கள் சொல்லுவதும் அவரைத்தான்—எல்லா பலன்களைக் கொடுப்பவரும் அவர்தான். | 15 |
| பகவான் புருஷோத்தமன் என்பது—அதற்குக் காரணம். | 16—20 |

## 16—வது அத்தியாயம்.

| | |
|---|---|
| தைவப்பிறப்பு, அஸுரப்பிறப்பு-என்று பிறப்பு இருவகை—அவைகளில் காணப்படும் குணங்கள்— | 1—6 |
| அஸுரப் பிறப்புள்ளவர்களுக்கு அடையாளம். | 7—18 |
| அவர்களுக்குப் பகவான் செய்யும் தண்டனை. | 19—20 |
| ஒருவன் விடவேண்டிய மூன்று கெட்ட குணங்கள்:—ஆசை, கோ | |

பம், லோபம்—இவைகளில்லாதவனுக்குக்கிடைக்கும்பலன். 21—22
சாஸ்திரத்தைக்கொண்டே எதையும் தெரிந்துகொள்ள வேண்டியது. 23—24

## 17—வது அத்தியாயம்.

சாஸ்திரம் சொல்லாததைச் சிரத்தையோடு செய்தாலும் பலனில்லை. மூன்றுவிதச் சிரத்தை. 1—6
மூன்றுவித ஆஹாரங்கள். 7—10
மூன்றுவித யக்ஞங்கள். 11—13
மூன்றுவித தபஸ்ஸு-மனதினால், வாக்கினால், உடம்பினால் செய்யப்படுவது. 14—16
அது ஸத்துவம் முதலான குணங்களாலே மூன்று விதம். 17—19
மூன்றுவித தானங்கள். 20—22
வைதிகமான கர்மங்களின் அடையாளங்கள்—பிரணவம்-தத்-ஸத்-இவைகளின் சேர்க்கை—சேர்க்கையின் வழி. 23—28

## 18—வது அத்தியாயம்.

தியாகம்-ஸந்நியாஸம்—இந்த இரண்டும் ஒன்றுதான்—அதின் ஸ்வரூபம். 1—12
ஜீவனுடைய கர்த்ருத்துவம் பகவானுக்கு அதீனம். 13—17
மூன்றுவித ஞானம். 18—22
மூன்றுவித கர்மங்கள். 23—25
மூன்றுவித கர்த்தா. 26—28
மூன்றுவித புத்தி. 29—32
மூன்றுவித திருதி. 33—35
மூன்றுவித ஸுகம். 36—39
மூன்று குணங்களில்லாதவர் இல்லை. 40
பிராம்மணன் முதலான ஜாதிகளின் குணங்கள்—அவர்கள் செய்யும் வேலை. 41—44
அவனவன் தன் வேலைகளைச் செய்வதினால் படிப்படியாயுண்டாகும் பலன். 45—55
காம்மியகர்மங்களையும் சொல்லியபடி செய்வதின் பலன். 56—57
பகவான் சொன்னபடி செய்யாததினால் வரும் கெடுதி. 58—62
முடிவு—பக்தியோகத்தின் உபதேசம். 63—65
சரணாகதி—சரமசுலோகம். 66
ஸ்ரீ கீதையை எவருக்கு உபதேசம் செய்யலாம், எவருக்கு உபதேசிக்கக்கூடாது. 67—68
ஸ்ரீகீதையை உபதேசம் பண்ணுவதாலும்; அதைக் குருவினிடத்தில் படிப்பதாலும், அதைக் கேட்பதாலும் பகவானுக்கு உண்டாகும் ஸந்தோஷம். 69—71
பகவானுடைய உபதேசத்தினால் அர்ஜுனனுக்கு உண்டான நன்மைகள். 72—73
திருதராஷ்டிரன் முதன் முதலில் கேட்டதற்கு ஸஞ்ஜயனின் பதில்— 74—78

# த்ரயோதஶோऽத்யாய:

பூர்வஸ்மிந் ஷட்கே பரமப்ராப்யஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ பகவதோ வாஸுதேவஸ்ய ப்ராப்த்யுபாயபூதம் பக்திரூபம் பகவதுபாஸநம் வக்தும் தத³ங்கபூதம் ப்ராப்து: ப்ரத்யகாத்மநோ யாதாத்ம்யதர்ஶநம் ஜ்ஞாநயோககர்மயோகலக்ஷணநிஷ்டாத்வயஸாத்யமுக்தம் | மத்யமே ச பரமப்ராப்யபூதபகவத்தத்த்வயாதாத்ம்ய தந்மாஹாத்ம்யஜ்ஞாநபூர்வகைகாந்திகாத்யந்திகபக்தியோகநிஷ்டா ப்ரதிபாதிதா | அதிஶயிதைஶ்வர்யாபேக்ஷாணாமாத்மகைவல்யமாத்ராபேக்ஷாணாம் ச பக்தியோகஸ்தத்தத³பேக்ஷிதஸாதநமிதி சோக்தம் | இதாநீமுபரிதநே ஷட்கே ப்ரக்ருதிபுருஷதத்ஸம்ஸர்கரூபப்ரபஞ்சேஶ்வரதத்யாதாத்ம்யகர்மஜ்ஞாநபக்திஸ்வரூபததுபாதாநப்ரகாராஶ்ச ஷட்கத்வயோதிதா விஶோத்யந்தே | தத்ர தாவத் த்ரயோதஶே தேஹாத்மநோ: ஸ்வரூபம், தேஹயாதாத்ம்யஶோதநம், தேஹவியுக்தாத்மப்ராப்த்யுபாய:, விவிக்தாத்மஸ்வரூபஸம்ஶோதநம், ததாவிதஸ்யாத்மநஶ்சாசித்ஸம்பந்தஹேது:, ததோ விவேகாநுஸந்தாநப்ரகாரஶ்சோச்யதே—

ஸ்ரீபகவாநுவாச—

இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே |
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித: ||

இதம் ஶரீரம்—"தேவோऽஹம் மநுஷ்யோऽஹம் ஸ்தூலோऽஹம் க்ருஶோऽஹமிதி" ஆத்மநா ஸஹ ஸாமாநாதிகரண்யேந ப்ரதீயமாநம்—ஆத்மநோ போக்துர்போகக்ஷேத்ரமிதி ஶரீரமித்யபிதீயதே | ஏதத்-அவயவஶ: ஸங்காதரூபேண ச "இதமஹம் வேத்மீ"தி யோ வேத்தி, தம்-வேத்யபூதாதஸ்மாச்சரீராதர்தாந்தரபூதம் க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:-ஆத்மயாதாத்ம்ய

𑌵𑌿𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌦𑍇𑌹𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌘𑌟𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 “𑌦𑍇𑌵𑍋𑌽𑌹𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌘𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌜𑌾𑌨𑌾𑌮𑍀”𑌤𑌿 𑌦𑍇𑌹𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌤𑍍𑌤𑍇; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌦𑍇𑌹𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌦𑍇𑌹𑌮𑌪𑌿 𑌘𑌟𑌾𑌦𑌿𑌕𑌮𑌿𑌵 𑌇𑌦𑌮𑌹𑌂 𑌵𑍇𑌦𑍍𑌮𑍀𑌤𑌿 𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌯𑌾 𑌵𑍇𑌦𑌿𑌤𑌾𑌽𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌤𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌯𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑌪𑌿 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌦𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌭𑍂𑌤𑌂, 𑌤𑌥𑌾 𑌘𑌟𑌾𑌦𑌿𑌰𑌿𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌭𑍂𑌤𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌦𑌪𑌿 𑌵𑍇𑌦𑌿𑌤𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍋𑌽𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌭𑍂𑌤𑌃 । 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌶𑍍𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑍈𑌕𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌯𑌾 𑌤𑌦𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌾 । 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌰𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑌿𑌕𑌰𑌣𑌾𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌯𑍋𑌗𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌮𑌨𑍋𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌾𑌦𑍇𑌵 𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑌿𑌤𑌾𑌰𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌥𑌾 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 “𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 । 𑌵𑌿𑌮𑍂𑌢𑌾 𑌨𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌃” 𑌇𑌤𑌿 ॥ ॥௧॥

அவ— முதல் ஆறு அத்தியாயங்களில்—அடைய வேண்டியவைகளுக்குள் மிகவும் உயர்ந்த பரப்பிரும்மமும் பகவானுமான வாஸுதேவனை அடைவதற்காகச் செய்யவேண்டிய பக்தி என்கிற உபாஸநத்திற்கு அங்கமான (உதவியான) ஜீவனை உள்ளபடி பார்ப்பதை ஞானயோகத்தாலும், கர்மயோகத்தாலும் அடையலாம் என்று சொன்னார். நடு ஆறு அத்தியாயங்களில்,—அந்த பகவானின் உண்மையையும், அவனுடைய பெருமையையும் அறிந்து, அவனைத்தவிர வேறு தேவதையையும், பிரயோஜநத்தையும் நினைக்காமல், அவனையே தியானம் செய்யவேண்டுமென்று சொன்னார். பிரும்மபட்டத்தைக்காட்டிலும் உயர்ந்த பணத்தையும், தன்னை மாத்திரம் அநுபவிப்பது ஆகிய கைவல்லியம் என்பதையும் பக்தியோகத்தினாலே அடையலாம் என்றும் சொன்னார். இப்பொழுது கடைசி ஆறு அத்தியாயங்களில், கீழ் பன்னிரண்டு அத்தியாயங்களில் சொல்லிய ஸங்கதிகளைத் தெளிவாய் விசாரிக்கிறார். அவைக

ளாவன—பிரகிருதி, ஜீவன்—இவைகளின் சேர்க்கையான உலகம், ஈசுவரன்—இவர்களுடைய உண்மை; கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம்—இவைகளின் ஸ்வரூபம்; இவைகளைச் செய்யும் வழி—என்று.

அவைகளில் 13-வது அத்தியாயத்தில், உடம்பு, ஆத்மா இவைகளின் ஸ்வரூபமும், உடம்பினுடைய உண்மையும், உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மாவை உள்ளபடி பார்ப்பதற்குச் செய்யவேண்டியவைகளும், அந்த ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபமும், இயற்கையில் குற்றமில்லாத ஆத்மா உடம்புடன்சேர்ந்ததற்குக் காரணமும், ஆத்மா உடம்பைக்காட்டிலும் வேறு என்று அறியும் வழியும் சொல்லப்படுகின்றன—

பகவான் சொல்லுகிறார்—

உலகத்தில் ஜனங்கள் 'நான் தேவன், நான் மனிதன், நான் பெருத்தவன், நான் இளைத்தவன்' என்று ஸுகத்தையும், துக்கத்தையும் அநுபவிக்கிற ஆத்மாவோடு ஒன்றாக உடம்பைச் சொல்லுகிறார்கள். இந்த உடம்பை—அதின் உண்மையை அறிந்தவர்கள் அந்த ஆத்மாவைக்காட்டிலும் 1 வேறு என்றும், அது அவனுக்கு ஸுகத்தையும், துக்கத்தையும் அநுபவிப்பதற்கு 2 க்ஷேத்திரம்(இடம்) ஆயிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்கள் அந்த உடம்பை "என் உடம்பு" என்று முழுவதையும், "என் தலை, என் கை" என்று ஒவ்வொரு பாகத்தையும் 3

1 ஒரு வீட்டிலிருந்து ஸுகத்தை அநுபவிப்பவன் எப்படி அந்த வீட்டைக்காட்டிலும் வேறோ, அப்படியே உடம்பிலிருந்து ஸுகத்தை அநுபவிப்பவனும் உடம்பைக்காட்டிலும் வேறு.

2 க்ஷேத்திரம் என்ற சொல்லுக்கு வயல் என்றும் பொருள் கொள்ளலாம். எப்படி வயலில் நெல் விளைகிறதோ, அப்படியே உடம்பு கர்மங்களின் பலன்களும்,மேல்கர்மங்களுக்கு விதையான வாஸனைகளும் உண்டாகும் இடமானதால்,அதைக்ஷேத்திரம் (வயல்) என்றுசொல்லலாம்.

3 ஆத்மா அறிகிறது; உடம்பு அறியப்படுகிறது. ஆகையால் இவையிரண்டும் வேறு. ஒருவன் எதிரே நிற்கும் பொருளை அறியும் பொழுது, 'மனிதனை நான் இதைப்பார்க்கிறேன்.'' என்று என்னுகிறான். அப்பொழுது மனிதன் என்கிற உடம்புக்கும், 'நான் என்கிற

''நான் அறிகிறேன்'' என்று நான் என்கிற அறிகிறவனை அறிகிறபடியால், அறியப்படும் உடம்பைக்காட்டிலும் வேறானவன் என்றும், க்ஷேத்ரஜ்ஞன் (உடம்பை அறிகிறவன்) என்றும் சொல்லுகிறார்கள். [1]

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥ २ ॥

देवमनुष्यादिसर्वक्षेत्रेषु वेदितृत्वैकाकारं क्षेत्रज्ञं च मां विद्धि मदात्मकं विद्धि । "क्षेत्रज्ञं चापि" इत्यपिशब्दात् क्षेत्रमपि मां विद्धीति प्रतीयते । यथा क्षेत्रं क्षेत्रज्ञविशेषणतैकस्वभावतया तदपृथक्सिद्धसंस्थानाकारमेव निष्ठम्, तथा क्षेत्रं क्षेत्रज्ञं च मद्विशेषणतैकस्वभावतया मदपृथक्सिद्धसंस्थानाकारमेव निष्ठं विद्धि । वक्ष्यति हि क्षेत्रज्ञानां सर्वावस्थानां क्षराक्षरशब्दनिर्दिष्टयोः सर्वावस्थयोः भगवदात्मकत्वम् "द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च । क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः । यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः । अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥" इति । पृथिव्यादिसंघातरूपस्य क्षेत्रस्य क्षेत्रज्ञस्य च भगवच्छरीरतैकस्वरूपतया भगवदात्मकत्वं श्रुतयो वदन्ति — "यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवी

---

ஆத்மாவுக்கும் வேற்றுமை தோன்றாது. ஆனாலும் மனிதன் என்கிற என் உடம்பை நான் பார்க்கிறேன் என்கிறபொழுது, உடம்பு வேறாகவும், ஆத்மா வேறாகவும் தோன்றுகிறது. அப்பொழுதுதான் அந்த வேற்றுமை தோன்றும். ஆகையால் அவையிரண்டும் வேறுதான்.

[illegible]

𑌅𑌤𑍍𑌰𑍇𑌦𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵–𑌅𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑍇𑌶𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌵𑍇𑌕𑌮𑌾𑌹𑍁𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 "𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑍀 𑌸𑍃𑌜𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍋 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃, 𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌿𑌨𑌂 𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍, 𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃 𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃"। 𑌅𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰 𑌇𑌤𑌿 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇। 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌹𑌰𑌤𑍀𑌤𑌿 𑌹𑌰𑌃। "𑌸 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌰𑌣𑌾𑌧𑌿𑌪𑌾𑌧𑌿𑌪𑍋 𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌜𑍍𑌜𑌨𑌿𑌤𑌾 𑌨 𑌚𑌾𑌧𑌿𑌪𑌃, 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑌤𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍇𑌶𑌃, 𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌶𑌿𑌵𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍, 𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑍌 𑌦𑍍𑌵𑌾𑌵𑌜𑌾𑌵𑍀𑌶𑌨𑍀𑌶𑍌, 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚𑍇𑌤𑌨𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑍋 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌯𑍋 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍, 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌭𑍋𑌗𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌮𑌤𑍍𑌵𑌾, 𑌪𑍃𑌥𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌜𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿, 𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿, 𑌅𑌜𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂 𑌬𑌹𑍍𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌸𑌰𑍂𑌪𑌾𑌮𑍍। 𑌅𑌜𑍋 𑌹𑍍𑌯𑍇𑌕𑍋 𑌜𑍁𑌷𑌮𑌾𑌣𑍋𑌽𑌨𑍁𑌶𑍇𑌤𑍇 𑌜𑌹𑌾𑌤𑍍𑌯𑍇𑌨𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌭𑍋𑌗𑌾𑌮𑌜𑍋𑌽𑌨𑍍𑌯𑌃, 𑌗𑍌𑌰𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌤𑍀 𑌸𑌾 𑌜𑌨𑌿𑌤𑍍𑌰𑍀 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌿𑌨𑍀, 𑌸𑌮𑌾𑌨𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋𑌽𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃। 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌮𑍀𑌶𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃॥

𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 "𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾। 𑌅𑌪𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍। 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌮𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾𑌮𑍍। 𑌕𑌲𑍍𑌪𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍌 𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥ 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌵𑌷𑍍𑌟𑌭𑍍𑌯 𑌵𑌿𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃। 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑌿𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌵𑌶𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌵𑌶𑌾𑌤𑍍। 𑌮𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑍂𑌯𑌤𑍇 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍। 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌨𑍇𑌨 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌜𑌗𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑌾𑌦𑍀 𑌉𑌭𑌾𑌵𑌪𑌿।

[illegible]

[illegible]

[illegible]

அத꞉ கார்யாவஸ்தம் காரணாவஸ்தம் ச ஜகத் ஸ ஏவேத்யாஹு꞉ "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம், ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோ(அ)ஸ்ருஜத" இத்யாரப்ய, "ஸந்மூலா꞉ ஸோம்யேமா꞉ ஸர்வா꞉ ப்ரஜா꞉ ஸதாயதனா꞉ ஸத்ப்ரதிஷ்டா꞉" "ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி ஶ்வேதகேதோ" இதி। ததா "ஸோ(அ)காமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி ஸ தபோ(அ)தப்யத ஸ தபஸ்தப்த்வா இதம் ஸர்வமஸ்ருஜத" இத்யாரப்ய, "ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத்" இதி। அத்ராபி ஶ்ருத்யந்தரஸித்தவிதேத꞉ பரமபுருஷஸ்ய ச ஸ்வரூபவிவேக꞉ ஸாதித꞉। "ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி", "தத்ஸ்ருஷ்ட்வா ததேவானுப்ராவிஶத் ததனுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத், விஜ்ஞானம் சாவிஜ்ஞானம் ச ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத்" இதி ச। "அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஶ்ய" இதி ஜீவஸ்ய ச ப்ரஹ்மாத்மகத்வம் "ததனுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத் விஜ்ஞானம் சாவிஜ்ஞானம் ச" இத்யனேன கார்யாவஸ்தாதப்ரஹ்மஶரீரபாவஸ்தைம்யநதீதி விஜ்ஞாயதே। ஏவம் ஸர்வத்ரைவ நாமரூபவ்யாகரணம் "தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத்தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத" இத்யாதாவபி த்ரஷ்டவ்யம்। அத꞉ கார்யாவஸ்த꞉ காரணாவஸ்தஶ்ச ஸ்தூலஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீர꞉ பரமபுருஷ ஏவேதி காரணாத் கார்யஸ்யானன்யத்வேன காரணவிஜ்ஞானேன கார்யஸ்ய ஜ்ஞாததயைகவிஜ்ஞானேன ஸர்வவிஜ்ஞானம் ஸமீஹிதமுபபன்னதரம்॥

"ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணீ"தி திஸ்ரோ தேவதா இதி ஸர்வமசித்வஸ்து நிர்திஶ்ய தத்ர ஸ்வாத்மகஜீவானுப்ரவேஶேன நாமரூபவ்யாகரணவசனாத், ஸர்வே ச வாசகா꞉ ஶப்தா꞉ அசித்ஜீவவிஶிஷ்டபரமாத்மன ஏவ வாசகா இதி காரணாவஸ்தபரமாத்மவாசினா ஶப்தேன கார்யவாசிந꞉ ஶப்தஸ்ய

[illegible]

ரூபம் ஜ்ஞாநைகநிரூபணீயம் ஸ்வப்ரகாஶதயா ஜ்ஞாந ஸ்வரூபம் சேத்யஸ்யாபிப்ராயோऽவகந்தவ்ய: | ''யஸ் ஸர்வஜ்ஞ ஸ்ஸர்வவித், பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச, விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்'' இத்யாதிகா ஜ்ஞாத்ருத்வம் போதயந்தி | ''ஸத்யம் ஜ்ஞாநம்'' இத்யாதிகாஶ்ச ஜ்ஞாநைகநிரூபணீயதயா ஸ்வப்ரகாஶதயா ச ஜ்ஞாநஸ்வரூபதாம் | ''ஸாரகாத்மக வஹ்நேஸ்ஸ்யாத், கநேருஷ்ண வஹ்நேஸ்ஸ்யாத், தந்மாத்ரரூபாஹ்யம் ஸ்யாத்ப்ரதீயதே, ஸ்வதந்த்ர வஸ்து ரூபம் ப்ரதீதே யதே விஜ்ஞாநே ஜ்ஞேயம் ஸர்வம் விஜ்ஞாதம் பவதி, ஸர்வம் தம் பராத்மாநம் ஜ்ஞாநம் ஸர்வம் வேத தஸ்ய ஸர்வா ஸதஸ்ய ஸர்வதோமுகஸ்ய நிஸ்ஸ்வஸிதமேதத்ருக்வேத:'' இதி ப்ரஹ்மண ஸ்ஸர்வஜ்ஞத்வம் ஸர்வஶக்தித்வம் ஸர்வரூபதயா நாநாப்ரகாரஸம்ஸ்திதத்வம் தத்ர தத்ர ஸுஸ்பஷ்டம் ப்ரதிபாத்யதே | ''த்ருஶ்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்ஶிபி:, நேஹ நாநாஸ்தி கிஞ்சந, யத்ர ஹி த்வைதமிவ பவதி, ததிதர இதரம் பஶ்யதி | யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேந கம் பஶ்யேத்'' இத்யாதிநா | நபாநந்: ''பஹு ஸ்யாம் ப்ரஜாயேய'' இத்யாதிஶ்ருதிஸித்தம் ஸர்வஸங்கல்பக்ருதம் ப்ரஹ்மணோ நாநாகார ரூபஸம்ஸ்தாநம் நாநாப்ரகாரத்வம் நிஷித்யதே | ''யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத்'' இதி நிஷேதவாக்யாரம்பே ச ததுபபாதிதம் – ''ஸர்வம் தம் பராதாத்யோऽந்யத்ராத்மநஸ்ஸர்வம் வேத, தஸ்ய ஹ வா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஸ்ஸ்வஸிதமேதத்ருக்வேத:'' இத்யாதிநா |

ஏவம் விவிக்தஸ்வரூபயோ: ஸ்வபாவயோ: ச பத்தயோ: கார்யகாரணபாவம் கார்யகாரணயோர நந்யத்வம் பத்தயோஶ்ச ஸம்ஸர்கஸ்ய அநாதித்வம் ப்ரதிபாதயிஷ்யந் தத்ர ப்ரகரணாநுபந்தஸ்ய ஜ்ஞாநஸ்ய பலம் ப்ரஹ்மஜ்ஞாநபாவஸ்ய நித்யத்வம் வக்தும் ஸர்வோபகாரகாத்மந: ப்ரஹ்மணோ ப்ராப்யத்வம் ச ஸங்க்ஷேபேண ப்ரதிபாதயதி

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரே
ஷு பாரத || || ௨ ||

தேவன்—மனிதன் முதலான எல்லா உடம்புகளிலும் இருக்கும்—அறிவையே இயற்கையாகவுடைய—க்ஷேத்ரக்ஞர்களையும், அந்த உடம்புகளையும் நான் என்று நினை. அதாவது—அந்த இரண்டும் எனக்கு உடம்புகள் என்று எண்ணு. "க்ஷேத்ரக்ஞர்களையும்" என்பதில் "உம்" என்கிற சொல்லாலே, க்ஷேத்ரங்களையும், (உடம்புகளையும்) நினை என்று ஏற்படுகிறது. உடம்பானது ஜீவனைவிட்டுப் பிரிந்திருக்காமலும், அவனுக்குப் பிரகாரமாகவேயுமிருக்கிறது. ஆகையாலே இந்த இரண்டையும் ஒன்றாகச் சொல்லுவது வழக்கம். அப்படியே உடம்புகளும், ஜீவன்களும் பகவானை விட்டு ஒருக்காலும் பிரிகிறதில்லை. அவனுக்குப்பிரகாரமாகவேயும் இருக்கின்றன 1 ஆகையாலே அவைகளையும் பகவானையும் ஒன்றாகச் சொல்லுகிறது. இப்படிச் சொல்லாமல், ஜீவனும், பகவானும் ஒன்று என்று பொருள் கொண்டால், 15-வது அத்தியாயத்தில் 16-வது சுலோகம் முதல் மூன்று சுலோகங்களில் பத்தர், முக்தர் என்று இருவகைப்பட்ட ஜீவன்களைக்காட்டிலும் நான் வேறுபட்டவன் என்று பகவான் சொல்லியிருப்பது விரோதிக்கும். ஐந்து பூதங்கள் சேர்ந்து உண்டான உடம்புகளும், அவைகளுக்கு ஆத்மாவான ஜீவன்களும் பகவானுக்கு எப்பொழுதும் உடம்பாகவே

---

1 உடம்பையும் அதிலிருக்கும் ஜீவனையும் ஒன்றாகச் சொல்லுவதற்கு எது காரணமோ, அதுவே இந்த இரண்டையும் பகவானையும் ஒன்றாகச் சொல்லுவதற்குக் காரணம். அந்தக் காரணமாவது—உடம்பு ஜீவனை விட்டுப்பிரிந்திருக்காது. அப்படியே உடம்பும் ஜீவனும் பகவானைவிட்டுப் பிரிந்திருக்கமுடியாது. நம்முடைய உடம்பு ஒருக்கால் ஜீவனை விட்டுப்பிரிகிறது. இந்த இரண்டும் பகவானை விட்டு ஒருக்காலும் பிரிகிறதில்லை.

ஒரு வீட்டில் ஒரு மனிதன் இருந்தபோது அவனையும், வீட்டையும் கண்ணாலே வெவ்வேறாகப் பார்க்கிறோம். வீடுபோலிருந்த உடம்பு கண்ணுக்குத் தோன்றுகிறது. அதற்குள் இருந்த ஆத்மா கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால் ஆத்மாவை உடம்பாகவே நினைக்கிறோம். எப்பொழுதும் வீட்டையும், அதிலிருப்பவனையும் வெவ்வேறு

இருக்கின்றன என்று வேதங்கள் சொல்லுகின்றன. அதினால் தான் எல்லா உலகத்தையும், பகவானையும் ஒன்றாகச் சொல்லுகிறது. இந்த கீதையிலேயே 10-வது அத்தியாயத்தில் முதலில் 20 வது ச்லோகத்தில், பகவான் "நான் எல்லாவற்றிற்கும் ஆத்மா" என்று சொல்லி, கடைசியிலும் (39,42-ச்) "எல்லாவற்றையும் நான் தாங்கிக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி, நடுவில் "நான் சூரியன், நான் சந்திரன், நான் மலை, நான் ஸமுத்திரம்" என்று உலகத்தையும் தன்னையும் ஒன்றாகச் சொல்லியிருக்கிறார். உடம்பும், ஜீவனும் வேறென்றும், அந்த இரண்டும் என்னுடைய உடம்பென்றும் நினைப்பதுதான் ஸரியானதென்றும் 1 அவசியம் வரவேண்டியதென்றும் என்னுடைய அபிப்பிராயம்.

இந்த ச்லோகத்துக்குச் சிலபேர் சொல்லுகிறார்கள்—என்னை ஜீவனாக நினையென்று சொன்னபடியால், ஜீவனும் பிரும்மமும் ஒன்றென்று ஏற்படுகிறது. எப்படி ஒன்றாகும் என்றால்—பிரும்மமானது, ஈச்வரனாயிருக்கும்போதே, தன்னை அறியாமையாலே ஜீவனாக ஆகிறது. அந்த அக்ஞானம் போவதற்காக ஒன்றென்று உபதேசம் பண்ணுகிறார். உலகத்தில் கயிற்றைப் பாம்பாக நினைத்தவனுக்கு உண்மையை அறிந்தவனும், பொய் சொல்லாதவனுமான ஒருவன் "அப்பா! இது கயிறு, பாம்பு அன்று" என்று சொன்னால், அந்த தப்பு நினைவுபோகிறது. அதுபோல உண் பல தடவை கண்டு, வேறென்று தீர்மானித்திருக்கிறபடியால், ஒரு வீட்டில் கண்ணால் காணமுடியாத ஒரு ஜாலக்காரனோ, அல்லது பிசாசோ உள்ளேயிருந்து கத்தினால், அந்த வீடு கத்துகிறதென்று ஒருவரும் சொல்லுகிறதில்லை. உடம்பில் இருக்கும் ஆத்மாவை ஒருவரும் ஒருக்காலும் பார்க்காதபடியால், உடம்பே பேசுகிறது, அதுவே அறிகிறது, அதுவே சாப்பிடுகிறது என்று சொல்லுகிறார்கள். உடம்பு அடியோடு கீழே விழுந்தால், அதற்கு இருந்த அறிவு போய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள்.

1 இந்த அறிவே சாஸ்திரத்தில் சொல்லிய எல்லா வேலைகளுக்கும் உதவியானது. ஆகையாலே எல்லாருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. ஆதலால் இதுவே எல்லாருக்கும் வரவேண்டியது என்று எல்லாருடைய க்ஷேமத்தையும் நினைக்கிறபகவானுடைய எண்ணமென்று கருத்து.

மையை அறிந்தவனும், பொய் சொல்லாதவனுமான பகவானுடைய உபதேசத்தினால், பிரும்மத்தினுடைய அக்ஞானம் போகிறது—என்று.

அவர்களைக் கேட்கவேணும்—இப்போது உபதேசம் பண்ணுகிற-பகவானும், எல்லா உலகத்துக்கும் மஹாராஜாவாயுமான—வாஸுதேவன் ஆத்மாவை உள்ளபடி பார்த்து, அக்ஞானம் போனவனா, இல்லையா?—என்று. அக்ஞானம் போயிருந்தால், 'நான் ஒருவன்தான் இருக்கிறேன், வேறொன்றும் கிடையாது' என்று தன்னை அறிந்திருக்கும்போது, தன்னைக்காட்டிலும் வேறாக அர்ஜுனன் முதலானவர்களைப் பார்ப்பதும், அவர்களுக்கு உபதேசிப்பதும் நடக்காது. அக்ஞானம் இருந்தால்தானே இன்னொருவர் இருப்பதாகத் தோன்றும். இவருக்குத்தான் அக்ஞானம் போய்விட்டதே. அக்ஞானம் போகாமலிருந்தால், உள்ளபடி அறியாத இவர் இன்னொருவருக்கு எப்படி உபதேசம் பண்ணுகிறது. 4-வது அத்தியாயம் 34-வது சுலோகத்தில் "உண்மை அறிந்தவர்கள் உபதேசிப்பார்கள்" என்று சொல்லியிருக்கிறாரே. ஆகையாலே கீழ்ச்சொன்ன வார்த்தைகள் வேதம் ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், யுக்தி, தங்களுடைய முன் பின் வார்த்தைகளுக்கு விரோதம்—இவைகளைக்கவனியாமல் சொல்லப்பட்டவை[1].

---

1. பகவான் உலகத்தில் பலபேர்களைக் கொண்டு பல மதங்களை ஏற்படுத்தியிருக்கிறார். எதற்காக என்றால், உண்மையைக் கண்டு பிடிக்கும் சக்தி எந்த ஜீவன்களுக்கு இருக்கிறதென்றுபார்ப்பதற்காக.உதாரணம். உலகத்தில் வழுக்குமரம் என்று ஒன்றை ஏற்படுத்தி, அதின் நுனியில் கால் ரூபாயைக்கட்டி வைக்கிறது. அந்த மரத்தை முதலில் ஸந்நமாய் இழைத்து, அதின்மேல் ஆமணக்கெண்ணெயைத்தடவி, அதின்பேரில் புளியங்கொட்டைப் பசையைத்தடவி, அதில் ஒருவன் ஏறும்போது ஜலத்தை வாரி இறைப்பது வழக்கம். அப்படிச் செய்யும்போதும், ஒரு கெட்டிக்காரன் அதில் ஏறி அந்த ரூபாயைக்கொண்டுவந்து விடுகிறான். அவன் படுகிறபாடு அந்தக் கொஞ்ச ரூபாய்க்கா? அன்று. தன் ஸாமர்த்தியத்தைக் காண்பிப்பதற்காக. அதுபோல. மிகவுமுயர்ந்த புத்திமான்களுக்கு உதாரணமாகச்சொல்லப்படுகிற பிருஹஸ்பதி உடம்பைத்தவிர வேறொன்றும் கிடையாது என்கிற சார்வாகமதத்தை ஏற்படுத்தினார். அவ்வளவு புத்தியில்லாவிட்டால், இந்த மதத்தை ஏற்படுத்த முடியாது.

வேதம் முதலானவைகளுக்கு விரோதமில்லாத உண்மையான அர்த்தம் எதுவென்றால்—(1) அறிவில்லாதது, (2) அறிவுள்ள ஜீவன்கள், (3) இந்த இரண்டிற்கும் யஜமானனை பிரும்மம், இந்த மூன்றையும், முறையே அநுபவிக்கத்தகுந்தது, அநுபவிக்கிறவர்கள், இந்த இரண்டையும் அடக்கி ஆளுகிறவன்—என்று வெவ்வேறாக சில வேதவாக்கியங்கள் சொல்லுகின்றன. இந்த கீதையிலும் சொல்லியிருக்கிறது. (7-அ,4-5-சு;9-வது அத்,7-8-10-சு; 13-வது அத்-19-சு;14-வது அத்,3-சு). அந்த இரண்டும் பகவானுக்கு உடம்பாயிருப்பதால் அவனுக்கு அதீநமாயிருப்பதாலே, அவனைவிட்டுப் பிரியாமலிருக்கிறதென்றும், அவன் அவைகளுக்கு ஆத்மாவென்றும் சில வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. ஒரு ஸமயத்தில் அறிவில்லாத வஸ்துக்களும், அறிவுள்ள ஜீவன்களும் ஒன்றோடொன்று சேர்ந்து, தேவன்-மனிதன்-மாடு முதலானது-மரம் முதலானது-என்று இந்த நான்கு பிரிவோடு இப்போது காணப்படுகிற உலகமாக ஆகிறது. இதை ஸிருஷ்டி காலம் என்று சொல்லுகிறது. இன்னொரு காலத்தில் அறிவில்லாத வஸ்துக்கள் பிரகிருதி என்கிற ஒரே வஸ்துவாயும், ஜீவன்கள் தேவன் முதலான உடம்புகளும், இந்திரியங்களுமில்லாமல் பிரகிருதியோடு சேர்ந்து, அறிவில்லாதவைகள் போலவும் இருக்கின்றன. இவையிரண்டும் தனித்துச் சொல்ல முடியாதபடி பிரும்மத்துடன் சேர்ந்திருக்கிறது. இதைப் பிரளயகாலம் என்று சொல்லுகிறது. உலகமாயிருந்த அந்த இரண்டை காரியம் (உண்டானது) என்றும், பிரகிருதியும்,: உடம்பில்லாத ஜீவன்களுமாயிருந்த அந்த இரண்டை காரணம் (உண்டுபண்ணுகிறது) என்றும் சொல்லுகிறது. காரியமாயிருக்கும்போது அவைகள் ஸ்தூலமாயும் (பெரிதாயும்), காரணமாயிருக்கும்போது ஸூக்ஷ்மமா (சின்

---

இந்த மாதிரி மதங்களுக்குள் உண்மையான மதம் இன்னதென்பதைத் தைவத்தினுடையவும், தைவத்தை நன்றாய் அறிந்து, ஸாக்ஷாத்கத்தை அடைந்த பெரியோர்களுடையவும் பெரிய அருளினாலும், உபதேசத்தாலும் அறியவேணும். அறிவது மிகவும் வருத்தம். அதை அறியவிரும்புகிறவனுக்கு துளியேனும் கோபம், பிடிவாதம் முதலான கெட்டகுணங்கள் கூடாது,

னதா)யுமிருக்கின்றன. இவையிரண்டும் எப்போதும் (அதாவது சின்னதாயிருக்கும்போதும், பெரிதாயிருக்கும்போதும்) பகவானுக்கு உடம்பாயிருக்கிறது என்றும், பகவான் அவைகளுக்கு ஆத்மாவென்றும் சில வாக்கியங்கள் சொல்லுகின்றன. அதாவது—இப்போது பலவிதமாய் காணப்படும் உலகம் பிரளய காலத்தில் இன்னொரு வஸ்துவோடு சேர்ந்திருக்கச் செய்தேயும், சேர்ந்திருக்கிறதென்று அறியமுடியாத பிரும்மமாயிருந்தது. அப்படியிருந்த பிரும்மம் "நான் 1 பலவிதமான உலகமாக ஆகவேணுமென்று ஒரு ஸமயத்தில் எண்ணி, உடனே தேஜஸ்ஸை உண்டுபண்ணிற்று" என்று சொல்லியிருக்கிறது. முதலில் இந்த உலகம்

---

1 பிரும்மம் தன் உடம்புகளைக் கொண்டு தானே உலகத்தை உண்டுபண்ணுகிறது என்பதை ஜீவன்கள் அறிவதற்காக வேதம் உதாரணமாகச் சிலந்தைப் (எட்டுக்கால்) பூச்சியைச் சொல்லுகிறது. அந்தப் பூச்சி தன் வாயில் வருகிற நூலைக் கொண்டு தன் கால்களாலே சாப்பாட்டுக்காகவும், தன் இருப்பிடத்துக்காகவும் ஒரு பெரியவலை பின்னுகிறது. பிறகு ஒருசமயத்தில் அந்த நூலை விழுங்கி விடுகிறது. எப்படியென்றால், சின்னப் பூச்சிகள் அந்த வலையில் விழுகின்றன. நூலில் பிசுக்குஇருப்பதால், அந்தப் பூச்சிகள் மாட்டிக்கொள்ளுகின்றன. அந்த வலையின் நடுவிலிருக்கிற சிலந்தைப் பூச்சி உடனேவந்து, தன்வாயிலிருக்கும் நூல்களைக் கொண்டு காலால் அந்தப் பூச்சியை மூடிவிட்டு, பிறகு அதைச் சாப்பிடுகிறது. அந்த வலைக்கு வேண்டியதிரவியமும் (உபாதானகாரணம்), உண்டு பண்ணுகிற அறிவுள்ளதும் (நிமித்தகாரணமும்) அந்தப் பூச்சியே. அது தன் உடம்பினால் தானே வலைபின்னுவது போல், பிரும்மமும் தன் உடம்பைக் கொண்டே தானே இந்த உலகத்தை உண்டுபண்ணிற்று. ஒரு உதாரணத்தின் ஸங்கதி முழுவதையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. சிலவற்றைத்தான் எடுத்துக் கொள்ளவேணும். அந்தப் பூச்சியிலிருக்கும் ஜீவன் அந்தப் பூச்சி உடம்பைவிட்டுப் பிரியக் கூடியது. இந்தப் பிரகிருதி, ஜீவன்—ஆகிய தன் உடம்பான இந்த இரண்டையும் விட்டு பிரும்மம் ஒருக்காலும் பிரிகிறதில்லை. அந்தப் பூச்சி வலையை ஒரு இடத்தில் மாட்டிப் பின்னுகிறது. உலகத்தை உண்டு பண்ணுவதற்கு பிரும்மத்துக்கு தன் உடம்புகளைத் தவிர வேறொரு வஸ்துவும் வேண்டாம். தன்உடம்பைக்கொண்டேதானே ஒருவஸ்துவை உண்டுபண்ணுவதற்கு மாத்திரம் அந்தப் பூச்சி உதாரணம். பகவான் தன் உண்மையை ஜீவன்கள் அறியவேணுமென்று கவலைப் படுவதற்கு அளவில்லை.

பிரும்மமாயிருந்தது என்றும், பிறகு நான் உலகமாக ஆகவேணுமென்று எண்ணி, அப்படி எண்ணின பிரும்மம் தேஜஸ்ஸை உண்டு பண்ணிற்று என்றும் சொன்னால், அது தேஜஸ்ஸாக ஆயிற்று என்றுதான் பொருள். அதாவது தேஜஸ்ஸே உருவமாக ஆயிற்று. அந்தப் பிரும்மம் "ஜீவனாகிய நான் உடம்புகளில் நுழைந்து, உருவங்களையும், பெயர்களையும் அடையவேணும்" என்று நினைத்தது என்றும் சொல்லியிருக்கிறது. இதனால் உடம்பு வேறு; அதில் நுழைந்த ஜீவன் வேறு; இவையிரண்டுக்கும் ஆத்மாவான தைவம் வேறு—ஆக மூன்று வஸ்து இருக்கிறதாக ஏற்படுகிறது. மனிதன் என்கிற உடம்பில் ஜீவன் நுழைந்திருப்பதால், மனிதன் என்கிற பெயர் ஜீவனுக்கு வந்தது. இவையிரண்டிலும் தைவம் நுழைந்திருப்பதால், மனிதன் என்கிற பெயர் தைவத்துக்கும் வந்தது. இந்த உருவமும், இந்தப் பெயரும் தைவத்தினுடையது. இதுமாதிரியே எல்லா உருவங்களும் எல்லாப் பெயர்களும் தைவத்தினுடையது. ஆகையால் "தைவமே உலகமாக இருக்கிறது" என்பதற்கு இதுதான் பொருள்.

ஒரு பெரியவர் ஒருவரைப் பார்த்து, "எந்த ஒரு வஸ்துவை அறிந்தால், இந்த எல்லா உலகமும் அறியப்பட்டதாக ஆகுமோ, அதை உன் குருவினிடத்தில் கேட்டாயா!" என்று கேட்டார். பிரும்மத்தை அறிந்தால் உலகத்தை அறிந்ததாக எப்படி ஆகுமென்றால் ஸூக்ஷ்மமாக (சின்னதாக) இருந்த பிரும்மமே ஸ்தூலமாக (பெரிதான உலகமாக) ஆனபடியால், பிரும்மத்தை அறிந்தால், உலகத்தையும் அறிந்ததாக ஆகிறது. இப்படி ஆகிறபடியால் தான் அந்தப்பெரியவர் அப்படி கேட்டார். உலகத்தில் சட்டிப்பானைக்கு மண்ணை உபாதானகாரணம் என்று சொல்லுகிறது. அதாவது எந்த வஸ்து எந்தவஸ்துவாக ஆகிறதோ, அது அதற்கு உபாதானகாரணம். கட்டியாக இருந்த மண்தான் சட்டிப்பானையாக ஆயிற்று.

---

எந்த உதாரணத்தைக் காட்டுவோம். எந்த வேலையைச் செய்வோம். எந்தக் கதையை எழுதுவோம். வேதத்தில் சொல்லியபடி எந்தப் பூச்சியைக் காண்பிப்போம், இன்னும் எந்த அநுபவத்தைக் கொடுப்போம், என்று நினைத்து, எல்லா வேலைகளையும் செய்கிறான். வேதம் இந்த உதாரணத்தைக் காட்டியதால் இது தோன்றுகிறது.

அந்த கட்டியான மண்ணைச் சட்டிப்பானையாகப் பண்ணின குயவனை அதற்கு நிமித்தகாரணம் என்று சொல்லுகிறது. இந்த இடத்தில் மண்ணுக்குப் குயவனுக்கும் தொட்டுப்பண்ணினது தவிர வேறு உறவு கிடையாது. ஆகையால் சட்டிப்பானைக்கு உபாதான காரணம் வேறு; நிமித்தகாரணம் வேறு. காணப்படும் உலகத்தை யுண்டுபண்ணுகிறதான பிரகிருதியும், ஜீவனும் தைவத்துக்கு எப்பொழுதும் உடம்பாயிருந்து, தைவத்தைவிட்டு ஒருக்காலும் பிரியாதிருப்பதாலும், அந்த தைவமே உலகத்துக்குக் குயவன் ஸ்தானத்திலிருப்பதாலும், உண்டான உலகமும் தைவத்துக்கு உடம்பாக இருப்பதாலும், உலகத்துக்கு உபாதானகாரணமும், நிமித்தகாரணமும் பிரும்மமே உண்டானதும் பிரும்மம்; உண்டு பண்ணினதும் பிரும்மம்.

பிரகிருதி அறிவில்லாதது. ஜீவன்கள் தைவத்தினால் கொடுக்கப்பட்ட அறிவுள்ளவர்கள். தைவத்திற்கு எப்பொழுதும் அறிவு இருக்கிறது. ஜீவனுக்குப்போல் அது ஒருக்கால் சுருங்கி, ஒருக்கால் விரிவையடைகிறது என்று கிடையாது. தைவத்தின் அறிவு எப்போதும் சுருங்காமலே இருக்கிறது. அந்த அறிவு ஒருவரால் கொடுக்கப்பட்டதுமன்று இப்படிப்பட்ட மூன்று வஸ்துக்களும் எப்போதும் சேர்ந்திருந்து, பெரிதான உலகமாக ஆனால், ஒன்றின் குணம் இன்னொன்றுக்கு வந்துவிடாதோ? சிகப்புச்சாயமுள்ள நூலோடு வெள்ளை நூலைச் சேர்த்துத் தண்ணீரில் நனைத்தால், சிகப்புச்சாயம் வெள்ளை நூலில் வரவில்லையோ; அதுபோல—என்றால்—கொஞ்சம் தண்ணீரில் உப்பு—புளி—மிளகாய்—மூன்றைச் சேர்த்துக் கரைத்தால், இந்த மூன்றையும் அந்தத் தண்ணீரை விட்டு எப்போதாவது பிரிக்கமுடியுமா; அப்படிப் பிரிக்கமுடியாமல் சேர்ந்திருக்கிற இவை மூன்றில் உப்பு புளியாகுமா? புளி உப்பாகுமா? ஒரு ரஸம் இன்னொரு ரஸமாகுமோ? நன்றாகச் சாயம் ஏற்றப்பட்ட வெள்ளை—சிகப்பு—கருப்பு—என்கிற மூன்றுவித நூற்களால் ஒரு துணியை நெய்தால், இந்த மூன்று நூல்களும் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தாலும், ஒருவித நூல் இன்னொருவித நூலாகுமோ? ஆகாது. அதுபோலவும். கீழ்ச்சொன்ன மூன்று வஸ்துக்களிலும் ஒன்றின் ஸ்வபாவம் இன்னொன்றுக்குவருகிறதில்

லை. உதாரணத்தில் மூன்று வஸ்துக்கள் ஒரு ஸமயம் தனியாக இருக்கும். ஒரு ஸமயம் சேரும். கீழ்ச்சொன்ன இந்த மூன்றும் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கின்றன. இதுதான் உதாரணத்துக்கும் இதுக்கும் வித்தியாஸம்.

குழந்தையாயிருந்த ஜீவன் ஆளாகவும், கிழவனாகவும் ஆகிறபோது, மாறுபாடு உடம்பில்தானே ஒழிய, ஜீவஸ்வரூபத்தில் எப்படி இல்லையோ, அதுபோல் பிரகிருதியாயிருந்த பிரும்மம் உலகமாக ஆனாலும், பிரும்மத்தில் மாறுபாடு இல்லை. ஆகையால் பிரும்மத்துக்கு மாறுபாடில்லை என்கிற வேதத்துக்கு விரோதமில்லை. பிரகிருதியாயிருந்த பிரும்மம் உலகமாக ஆனதால், பிரும்மம் உண்டாயிற்று என்றும் சொல்லலாம். பிரும்மம் உண்டாயிற்று என்பதற்கு பிரகிருதி உருவமான பிரும்மம் உலக உருவமாயிற்று என்று பொருள்.

பிரும்மத்துக்குக் குணமில்லையென்று ஒரு இடத்திலும், இன்னொரு இடத்தில் பாபம், கிழத்தனம், சாவு, துக்கம், பசி, தாஹம்- இவைகள் இல்லையென்று சொல்லி, ஸத்தியகாமன் (நிலையான அநுபவிக்கத்தகுந்த வஸ்துக்களை யுடையவன்) என்றும், ஸத்தியஸங்கல்பன் (நினைத்தவேலையைத் தவறாமல் நடத்துபவன்) என்றும் இரண்டு ஸங்கதிகள் சொல்லியிருக்கின்றன. இந்த இடத்தில் கெட்ட குணங்களை இல்லையென்று சொல்லி, நல்ல குணங்களைச் சொன்னதினாலே, குணமில்லை என்கிற சொல்லுக்கு கெட்ட குணங்கள் இல்லை என்றுதான் பொருள் கொள்ளவேணுமென்று வேதத்தினாலேயே ஏற்படுகிறது ஒரு இடத்தில் பிரும்மம் அறிவு என்று சொல்லியிருக்கிறது. அதற்கு அறிவு உள்ளவன் என்றுதான் பொருள். பிரும்மத்திற்கு அறிவு என்கிற குணம் மிகவும் உயர்ந்ததாயும் முக்கியமாயுமிருப்பதால், அதை அந்த குணமாகவே சொல்லிற்று; அதற்கு உதாரணம்—உயர்ந்த ஒட்டு மாம்பழத்தை இது நல்ல தித்திப்பு என்றும், உயர்ந்த அழகுள்ள ஒருவனை இவன் நல்ல அழகு என்றும், பாஷியம் அய்யங்காரைப் பார்த்து லா (சட்டப்) போகிறது என்றும் சொல்வதுபோல. உலகத்தில் யாரிடத்தில் எந்த குணம் மிகவும் உயர்ந்ததாக இருக்கிறதோ, அவரை அந்த குணமாகவே சொல்வது வழக்கம். இன்னொரு

விதம்—ஞானம் என்பதற்கு தானாகத்தோன்றுகிறது என்றும் பொருள். இதனாலேயும் அனாத ஞானம் (அறிவு) என்று சொல்லியிருக்கிறது. அதைத் தவிர பிருஹ்மத்துக்கு அறிவு இல்லையென்று சொல்லமுடியாது. ஏனென்றால் வேதம் முழுமையும் பிருஹ்மத்தை "அறிவுள்ளது" என்றும், "ஆசைப்பட்டது" என்றும், "பார்த்து" என்றும் சொல்லுகிறது.

உலகத்தில் பிருஹ்மத்தைக்காட்டிலும் வேறான வஸ்து இல்லையென்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறது. அதற்கு-எல்லாம் பிருஹ்மத்துக்கு உருவமாகையால், பிருஹ்மம் நுழையாதவஸ்து இல்லையென்று பொருள். உதாரணம்:—பத்து பிராமணர்கள் இருக்கும்போது, இதில் ஒருவன் பிராமணர்கள்மாத்திரம் கேட்கத்தக்க ஸங்கதியை சொல்ல ஆரம்பிக்கும் ஸமயத்தில், நாலுபக்கமும் பார்த்து, இங்கே அன்னியர்கள் ஒருவரும் இல்லையே என்று கேட்கிறான். இந்த இடத்தில் அன்னியர்கள் என்பதற்கு வேறு என்று பொருள்கொள்ளக்கூடாது. ஏனென்றால்வெவ்வேறானபத்துப்பேர்கள் இருக்கிறார்களே. ஆகையால் அன்னியர்கள் என்பதற்கு பிராமணரல்லாதவர்கள் என்று பொருள். அதுபோல. எல்லா உலகத்தையும் பிருஹ்மத்தின் உருவம் என்கிற ஸங்கதியால் ஒன்றாகப் பார்க்கவேணும். வேறாகப் பார்த்தால், ஸம்ஸாரியாவன் என்று சொல்லியிருக்கிறது. இதே ஸங்கதியை இன்னொரு இடத்திலும் சொல்லியிருக்கிறது. அதாவது-எந்த வஸ்துவை பிருஹ்மத்தைக் காட்டிலும் வேறாகஒருவன்நினைத்தானே, அது அவனை அவமானம் செய்துவிடும். அதாவது-அந்த நினைவு தப்பானதால், அவமானம் வந்துவிடும். ஆகையால் அறிவுள்ளது. அறிவில்லாதது, தைவம் என்கிற மூன்றும் வெவ்வேறென்றும், இவைகளுடைய ஸ்வபாவம் வெவ்வேறென்றும், பிருஹ்மம் உண்டுபண்ணுகிறது, மற்றவைகள் உண்டாகிறவைகளென்றும், உண்டுபண்ணினதும் உண்டானதும் ஒன்றென்றும் சொல்லுகிற எல்லா வேதங்களுக்கும் ஒருவிதமான விரோதமுமில்லையென்று வேதங்களாலேயே ஏற்படுகிறபடியால், பிருஹ்மத்துக்கு அறிவில்லையென்றும், சிலவஸ்துக்களின் சேர்க்கையால் பிருஹ்மமே வேறாகிறதென்றும்—இவைமுதலான வார்த்தைகளுக்கு இடமேயில்லை. வேதங்கள் ஒன்றோடொன்று பொருந்த

வில்லையென்று எண்ணி, பொருத்தம் பண்ணுவதற்காகத் தான் இந்தமாதிரி பெரியோர்கள் சொல்லுகிறார்கள். [2]

தத் க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஶ்ச யத் |
ஸ ச யோ யத்ப்ரபாவஶ்ச தத்ஸமாஸேந மே ஶ்ருணு ||௩||

தத் க்ஷேத்ரம் யச்ச-யத் த்ரவ்யம் | யாத்ருக்ச-யேஷாமாஶ்ரயபூதம் | யத்விகாரி-யே சாஸ்ய விகாரா: | யதஶ்ச-யதோ ஹேதோரிதமுத்பந்நம் | யஸ்மை ப்ரயோஜநாயோத்பந்நமித்யர்த: | யத் ஸ்வரூபம் சேதம் | ஸ ச ய:-ஸ ச க்ஷேத்ரஜ்ஞோ ய:-யத்ஸ்வரூப: | யத்ப்ரபாவஶ்ச-யே சாஸ்ய ப்ரபாவா: | தத் ஸர்வம் ஸமாஸேந-ஸம்க்ஷேபேண வததோ மே ஶ்ருணு || ||௩||

க்ஷேத்திரம் (இடம்) என்று சொல்லப்பட்ட அந்த உடம்பு என்ன திரவியம்? அதில் இருக்கப்பட்ட வஸ்துக்கள் என்ன? அதனால் என்ன உண்டாகின்றன? என்ன பிரயோஜனத்துக்காக உண்டாயிற்று? அதின் ஸ்வரூபம் என்ன? க்ஷேத்திரக்ஞன் (இடத்தை அறிந்தவன்) என்று சொல்லப்பட்ட அதற்கு ஆத்மாவான ஜீவனுடைய ஸ்வரூபம் என்ன? அவனுடைய உயர்ந்தஸங்கதிகள் என்ன? இவை எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன் 1 [3]

அவ— தான் சொல்லப்போகிற ஸங்கதிகள் இதிஹாஸம், புராணம், மீமாம்ஸை (அதாவது யுக்தி)-இவைகளுக்கு ஒத்ததான தங்களால் சொல்லப்படுகின்றன என்று சொல்லுகிறார்—

ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக் |
ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர்விநிஶ்சிதை: ||௪||

இதம் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயாதாத்ம்யம் ருஷிபி:-பராஶரா திபி: பஹுதா-பஹுப்ரகாரம் கீதம் | [illegible]

---

1. இரண்டாவது அத்தியாயத்தில் உடம்புவேறு ஜீவன்வேறு என்றும், ஏழாவது அத்தியாயம் ஆரம்பத்தில் இரண்டும் பகவானுக்கு உடம்புகள் என்றும் சொல்லப்பட்டது. அந்தஸங்கதிகளையே இந்த அத்தியாயம் முதல் இரண்டுசுலோகங்களாலே சொல்லி, உடம்புவேறு ஜீவன் வேறு என்பதை இந்த அத்தியாயத்திலும், இந்தஇரண்டைக்காட்டிலும், பகவான் வேறு என்பதை 15-வது அத்தியாயத்திலும் விரிவாய்ச்சொல்லப்போகிறது.

[illegible]

நிர்ணயோ த³ர்ஶித:| "ந வியத³ஶ்ருதே:" இத்யாரப்⁴ய க்ஷேத்ரப்ர காரநிரூபணமுக்தம் | "நாத்மா ஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்⁴ய:" இத்யாரப்⁴ய "ஜ்ஞோ(அ)த ஏவ" இத்யாதி³பி⁴: க்ஷேத்ரஜ்ஞயாதா² த்ம்ய நிர்ணய உக்த:| "பராத்து தச்ச்²ருதே:" இதி ப⁴க³வத்ப்ரவர்த்ய த்வேந ஸர்வாத்மகத்வமுக்தம்| ஏவம் ப³ஹுதா⁴ கீ³தம் | க்ஷேத்ர ஜ்ஞயாதா²த்ம்யம் மயா ஸங்க்ஷேபேண ஸமுச்யமானம் ஶ்ருண்வித்யர்த²: || ||௪||

கீழ்ச்சொன்னதும் சொல்லப்போகிறதுமான உடம்பினுடையவும் ஜீவனுடையவும் உண்மையைப்பற்றி, பராசரர் முதலான அநேகருஷிகள் அநேகவிதமாக, அதாவது-பலவிதமான உதாரணங்களைக்காட்டி., சொல்லியிருக்கிறார்கள். ஒருஜீவன்உடம்பையும் இந்திரியங்கள் முதலானவைகளையும் கொண்டு, உயர்ந்த ஸ்தானத்தை அடையவேண்டுமென்பதற்கு உதாரணமாக ஒருவன் வண்டி,குதிரை, கடிவாளம், வண்டிக்காரன், நல்லசாலை—இவைகளைக் கொண்டு சேரவேண்டிய இடத்துக்குப் போகுவதைச் சொல்லுகிறார்கள். உடம்பை வண்டியாகவும், ஜீவனை வண்டிக்கு யஜமானனாகவும், புத்தியை வண்டிஓட்டுகிறவனாகவும், மனதைக்கடிவாளமாகவும், இந்திரியங்களைக் குதிரைகளாகவும் இந்திரியங்களால் அறியப்படும் விஷயங்களைச் சாலைகளாகவும் சொல்லுகிறார்கள். ருக்வேதம் முதலான நான்கு வேதங்களும் உடம்பையும் ஆத்மாவையும் வெவ்வேறாகச் சொல்லுகின்றன. ஒருராஜாவைப் பார்த்து ஜடபரதர் என்பவர் "காணப்படுகிற உன்உடம்பு வேறு. அதில் இருக்கும் நீ என்கிற ஜீவன் வேறு" என்று சொன்னார். இந்த வெவ்வேறான உடம்பும் ஜீவனும் பகவானுடைய உடம்பென்றும் சொன்னார்கள். ஒரு இடத்தில் முதலில் உடம்பைச் சொல்லி, பிறகு அதற்குள்ளிருக்கும் பிராணனைச்சொல்லி, பிறகு மனதைச் சொல்லி, பிறகு ஜீவனைச்சொல்லி, இவைவெல்லாவற்றிற்கும் ஆத்மாவாகப் பகவானைச் சொல்லியிருக்கிறது. வேதங்களின் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக வியாஸரால் செய்யப்பட்ட பிரும்ம ஸூத்ரங்களாலும் யுக்திகளால் நன்றாக விசாரித்து இந்தஸங்கதிகள் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றன. இப்படிப் பலவிதமாய்ச் சொ

ல்லப்பட்ட உடம்பினுடையவும், ஜீவனுடையவும் உண்மையை 1 நான் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும்சொல்லப்போகிறேன். அதைக் கேள். [4]

𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂𑌕𑌾𑌰𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 ।
𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌦𑌶𑍈𑌕𑌂 𑌚 𑌪𑌂𑌚 𑌚𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍋𑌚𑌰𑌾𑌃 ॥௫॥

𑌇𑌚𑍍𑌛𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃 𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌂𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌏𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌸𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥௬॥

𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂𑌕𑌾𑌰𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍇𑌵𑌚𑍇𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌰𑌂𑌭𑌕𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿। 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌤𑍇𑌜𑍋𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌕𑌾𑌶𑌾𑌃-𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑌿। 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌃-𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌃। 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃-𑌮𑌹𑌾𑌨𑍍। 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂-𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃। 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌦𑌶𑍈𑌕𑌂 𑌚 𑌪𑌂𑌚 𑌚𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍋𑌚𑌰𑌾 𑌇𑌤𑌿-𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌿। 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌪𑌂𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿। 𑌵𑌾𑌕𑍍𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌪𑌾𑌯𑍂𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌪𑌂𑌚 𑌕𑌰𑍍𑌮𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌤𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌦𑌶। 𑌏𑌕𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑌃। 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍋𑌚𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌂𑌚 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌰𑍂𑌪𑌰𑌸𑌗𑌨𑍍𑌧𑌾𑌃। 𑌇𑌚𑍍𑌛𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃 𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑌿𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌿𑌕𑌾𑌰𑌾 𑌉𑌚𑍍𑌯𑌂𑌤𑍇। 𑌯𑌦𑍍𑌯𑌪𑍀𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌧𑌰𑍍𑌮𑌾𑌃-𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍀𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌿𑌕𑌾𑌰𑌾 𑌉𑌚𑍍𑌯𑌂𑌤𑍇। 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌧𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌂 “𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌹𑍇𑌤𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇” 𑌇𑌤𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇। 𑌸𑌂𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌧𑍃𑌤𑌿𑌃- 𑌆𑌧𑌾𑌰𑌃, 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌸𑍍𑌯 𑌭𑍋𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌸𑌾𑌧𑌨𑌤𑌯𑌾 𑌚𑍇𑌤𑌨𑌸𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑌤𑌯𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑌂𑌘𑌾𑌤𑌃। 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌰𑌬𑍍𑌧𑌮𑍍 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌭𑍂𑌤𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌵𑌿𑌕𑌾𑌰𑌿𑌸𑌂𑌘𑌾𑌤

1 வேதம் முதலானவைகள் இதை மிகவும்விரிவாய்சொல்லியிருக்கிறபடியால், கொஞ்சம் தெரிந்தவர்களால் இதைத்தெளிவாய் அறியமுடியாது. ஆகையால் எல்லாம் தெரிந்த நான் அதைச்சுருக்கமாயும், மிகவும் தெளிவாயும் சொல்லுகிறேன் என்றுகருத்து.

ஸங்காதரூபம் வேதநாஸுகதுஃகோபபோகாஶ்ரயார்த்த ஸ்வப்ரயோஜநம் க்ஷேத்ரமித்யுக்தம் பவதி। ஏதச்ச க்ஷேத்ரம் ஸமாஸேந ஸம்க்ஷேபேண ஸவிகாரம் ஸகார்யமுதாஹ்ருதம்॥

ப்ருதிவீ முதலான ஐந்துபூதங்கள், தாமஸஅஹங்காரம், மஹத், ப்ரக்ருதி என்கிற திரவியங்களால் உடப்பு செய்யப்பட்டது. பதினொரு இந்திரியங்களும், ஐந்து ஞானஇந்திரியங்களால் அறியப்படுமதான ரூபம்முதலானஐந்துவஸ்துக்களும், அந்தஉடம்பில் இருப்பவைகள். ஆசை, த்வேஷம், ஸுகம் துக்கம் இவைகள் உடம்பின் சேர்க்கையால் ஆத்மாவுக்கு உண்டாகின்றன. ஜீவன் இந்தலோகத்தில் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்கும், மோக்ஷத்தை அடைவதற்கும் உதவியாக அவனுக்கு உடம்பு இருப்பிடமாக இருக்கிறது. இது கீழ்ச்சொன்ன ப்ருத்வீ முதலானவைகளுடைய சேர்க்கை. இப்படி உடம்பினுடைய உண்மையைச் சுருக்கமாகச்சொன்னேன். [5–6]

அத க்ஷேத்ரகார்யேஷு ஆத்மஜ்ஞாநஸாதநதயோபாதேயா குணாஃ ப்ரோச்யந்தே—

அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்।
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹஃ॥

அமாநித்வம்-உத்க்ருஷ்டஜநேஷ்வவதீரணாரஹிதத்வம்। அதம்பித்வம்-தார்மிகத்வயஶஃப்ரயோஜநதயா தர்மாநுஷ்டாநம் தம்பஃ, தத்ரஹிதத்வம்। அஹிம்ஸா-வாங்மநஃகாயைஃ பரபீடாரஹிதத்வம்। க்ஷாந்திஃ-பரைஃ பீட்யமாநஸ்யாபி தேஷு அவிக்ருதசித்தத்வம்। ஆர்ஜவம்-பராந்ப்ரதி வாங்மநஃகாயவ்ருத்தீநாமேகரூபதா। ஆசார்யோபாஸநம்-ஆத்மஜ்ஞாநப்ரதாயிநி ஆசார்யே ப்ரணிபாதபரிப்ரஶ்நஸேவாதிநிரதத்வம்। ஶௌசம்-ஆத்மஜ்ஞாநததுபாயயோக்யதா ஶாஸ்த்ரஸித்தா வாங்மநஃகாயகதா। ஸ்தைர்யம்-அத்யாத்மஶாஸ்த்ரோதிதேஷ்வர்த்தேஷு நிஶ்சலத்வம்। ஆத்மவிநிக்ரஹஃ-ஆத்மவ்யதிரிக்தவிஷயேப்யோ மநஸோ நிவர்த்தநம்॥ ‖ ௭ ‖

அவ —உடம்பினுடைய சேர்க்கையால் ஜீவனுக்கு அநேக குணங்கள் உண்டாகின்றன. அவைகளுக்குள் ஆத்மாவை அறிவதற்கு உதவியான குணங்களைச் சொல்லுகிறார்—

(1)உயர்ந்தவர்களை அலட்சியம் 1 செய்யாமலிருப்பது; (2) நல்லகாரியங்களைக்கீர்த்திக்காக 2 செய்யாமலிருப்பது; (3)மனஸ்ஸு, வாக்கு, உடம்பு-இவைகளால்பிறருக்குதொந்தரவு3பண்ணுமலிருப்பது;(4) பிறர்தொந்தரவு பண்ணினுலும், அவர்களிடத்தில் மனது கலங்காமலிருப்பது; (5) பிறர்கள் விஷயத்தில் மனஸ்ஸு, வாக்கு, உடம்பு-மூன்றும4ஒத்திருப்பது; அதாவது-வாயினுலும், உடம்பினுலும், ஒருவனைக்கொண்டாடும்போது,மனதும் அந்த வேலைகளுக்கு ஒத்திருக்கவேண்டியது; (6) ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கிற ஆசாரியனிடத்தில் ஸேவிப்பது, வணக்கத்துடன் தெ

---

1. நான்படித்தவன், நல்லகுலத்தில்பிறந்தவன், பணக்காரன். என்று ஒருவன் தன்னை எண்ணுவதாலே கர்வமுண்டாகும். அதனுல் பெரியவர்களை அலக்ஷியம் செய்ய நேரிடும். இந்தக்கர்வமும், அதின்வேலையான அலக்ஷியம் செய்வதுமில்லாமை.

2. நல்லகாரியங்களை வேதம் செய்யும்படியாகச் சொல்லுகிறது, ஆனகயாலே அவைகளைச் செய்யவேண்டியது என்கிற எண்ணத்துடன் அவைகளைச்செய்ய வேண்டியது. நாலுபேர்என்னைக்கொண்டாடவேணுமென்று எண்ணிச்செய்யாமலிருக்கை.

3. தொந்தரவு (ஹிம்ஸை)என்ற சொல்லுக்கு தொந்தரவை உண்டுபண்ணுவதற்காகவேசெய்யும்வேலை என்று பொருள். வைத்தியன் கொஞ்சம் தொந்தரவைக் கொடுத்து, ஸுகத்தை உண்டுபண்ணுகிறபடியாலே, அந்த தொந்தரவு ஹிம்ஸையன்று. இங்கே "பிறருக்கு" என்று சொன்னபோதிலும், சாஸ்திரத்தில் சொல்லாத விதமாய் ஒருவன் தனக்குச் செய்யும் தொந்தரவும் ஹிம்ஸைதான். அதுவும்கூடாது.

4 மனது இருக்கவேண்டிய விதம்—ஆசைமுதலானவை இல்லாமை. வாக்கு இருக்கவேண்டிய விதம்—பொய்சொல்லாமை முதலானவைகள். உடம்பு இருக்கவேண்டிய விதம்—சாஸ்திரம் சாப்பிடக்கூடாதென்று சொன்னவைகளைச் சாப்பிடாமலிருப்பது முதலானவைகள். மனது, வாக்கு, உடம்பு இப்படி இருக்கவேணுமென்று பிரத்யக்ஷத்தாலும், யுக்தியாலும் கண்டுபிடிக்கமுடியாது. சாஸ்திரத்தைக்கொண்டு தான் அறியவேண்டியது,

ரியாத ஸங்கதிகளைக் கேட்பது, அவருக்கு வேலைசெய்வது, இவைமுதலானவைகளில் ஆசை; (7) ஆத்மாவை அறிவதற்கும், அந்த அறிவுக்கு உதவியான காரியங்களைச்செய்வதற்கும் மனதும், வாக்கும், உடம்பும் எப்படி இருக்கவேணுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதோ அப்படி இருப்பது; (8) ஆத்மாவைப்பற்றி சாஸ்திரத்தில் சொல்லிய ஸங்கதிகளை நன்றாய் அறிந்து, அதில் ஸந்தேஹமில்லாமல் 1 உறுதியாய் நம்புவது; (9) ஆத்மாவைத் தவிர மற்றஸங்கதிகளிலிருந்து மனதைத் திருப்புவது. [7]

இந்த்ரியார்த்தேஷு வைராக்யமநஹங்கார ஏவ ச।
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்சநம் ॥ ௮ ॥

இந்த்ரியார்த்தேஷு வைராக்யம்—ஆத்மவ்யதிரிக்தேஷு விஷயேஷு ஸதோஷதாநுஸந்தாநேந உத்வேஜநம்। அநஹங்கார:—அநாத்மநி தேஹே ஆத்மாபிமாநரஹிதத்வம்। ப்ரதர்சநாயேதம்—அநாத்மீயேஷு ஆத்மீயாபிமாநரஹிதத்வம் ச விவக்ஷிதம்। ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்சநம்—ஸசரீரத்வே ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கரூபஸ்ய தோஷஸ்யாவர்ஜநீயத்வாநுஸந்தாநம் ॥ ॥ ௮ ॥

(10) ஆத்மாவைத்தவிர மற்றவிஷயங்களில்இருக்கும் 2குற்றங்களைப்பார்த்து 3 அருவருப்புப்படுகை; (11) உடம்பை ஆத்மாவாக எண்ணுகையும், உடம்பைச்சேர்ந்த வஸ்துக்களை தன்னுடையவைகள்என்றுஎண்ணுகையும்; (12) ஜீவனுக்குஉடம்புஇருக்கும்போது,

1. வேதத்தை ஒப்புக்கொள்ளாதவர்களுடையவும், வேதத்தை ஒப்புக்கொண்டு தப்பாக அர்த்தம் சொல்லுகிறவர்களுடையவும் பேச்சுக்களைக் கேட்டு கலங்காமலிருப்பது.

2. குற்றங்களாவன—அவைகளால் வரும் ஸுகமானது நிலையில்லாதது; வருத்தப்பட்டுத் தேடவேண்டியது; துக்கத்தோடு கலந்திருப்பது முதலானவைகள்.

3. இப்படி எண்ணுவதாலே உடம்பின் சேர்க்கை அடியோடு போகவேணுமென்கிற எண்ணம்வந்து வலுப்படும்.

பிறப்பு, சாவு, கிழத்தனம், வியாதி, இன்னும் பலதுக்கங்கள்-இவை முதலானதொந்தரவுகள் 1வராமலிருக்காது என்றெண்ணுகை [8]

அஸக்திரநபிஷ்வங்க³: புத்ரதா³ரக்³ருஹாதி³ஷு |
நித்யஞ்ச ஸமசித்தத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு || ||௯||

அஸக்தி: - ஆத்மவ்யதிரிக்தபரிக்³ரஹேஷு ஸங்க³ரஹிதத்வம்| அநபிஷ்வங்க³: புத்ரதா³ரக்³ருஹாதி³ஷு-தேஷு ஶாஸ்த்ரீயகர்மோபகரணத்வாதிரேகேண ஶ்லேஷரஹிதத்வம்| ஸமசித்தத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு-தேஷு ஹர்ஷோத்³வேக³ரஹிதத்வம்|| ||௯||

(13) ஆத்மாவைத்தவிர மற்றவஸ்துக்களில்2ஆசையில்லாமை; (14)பிள்ளை,பெண்டாட்டி, வீடுமுதலானவைகளில்3சாஸ்திரத்தில் சொன்னவேலைகளுக்கு உதவியாக வைத்துக்கொள்ளுவது தவிர, அதிகப்பிடிப்பில்லாமை; (15) மனதுக்குப் பிடித்தஸங்கதிகள் வந்

1. சுலோகத்தில் தொந்தரவுகளை எண்ணுவது என்று சொல்லியிருந்தபோதிலும், அரிசியை எடுத்துக்கொண்டு உமியைத்தள்ளுவது போல, உடம்பை வைத்துக்கொண்டுதொந்தரவுகளைத் தள்ளமுடியாதென்று காட்டுவதற்காக, பாஷ்யத்தில் "வராமலிருக்காது" என்று சொல்லியிருக்கிறது. எண்ணுவது (அநுதர்சநம்) என்பது-அடிக்கடி நினைப்பது.

2. கண்முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும் சேர்க்கையினால் வரும் ஸுகங்களில் ஆசையில்லாமை 10-வது குணமாகச் சொல்லப்பட்டது. இங்கே நினைவினால் வருகிற ஸுகங்கள் சொல்லப்படுகின்றன. 202-வதுபக்கம் 1-வது குறிப்பைப்பார்க்க.

3. நினைவினால்வரும் ஸுகங்களில் ஆசையை (பிள்ளை, பெண்டாட்டி, வீடுமுதலானவைகளில் ஸங்கத்தை) விடவேண்டுமென்றால், கிருஹஸ்தாசிரமத்திலிருக்கிறவனுக்கு அவைகளில் ஆசையைவிட வேண்டியதாக நேரிடுமே. விட்டால், அவன் வேலைகள் எப்படிநடக்கும் என்றால், பதில்—செய்யவேண்டிய வேலைகளுக்கு உதவியான வஸ்துக்களை அடியோடு விடவேண்டியதென்று கருத்து அல்ல. அந்த வேலைகளைச் செய்வதற்காக அவைகளிடத்தில் நமக்கு எவ்வளவு பிரீதி வேணுமோ, அவ்வளவுதான் அவைகளில் பிரீதிவைத்துக் கொள்ளவேணும். அதற்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது. இதைக்காட்டுவதற்காக சுலோ

தால், ஸந்தோஷமில்லாமையும், மனதுக்குப் பிடிக்காத ஸங்கதிகள் வந்தால், வருத்தமில்லாமையும்1; [9]

மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ |
மயி-ஸர்வேச்வரே ச ஐகாந்த்யயோகேந ஸ்திரா பக்தி:||
விவிக்ததேசஸேவித்வமரதிர்ஜநஸம்ஸதி || ||௰||
ஜநவர்ஜிததேசவாஸித்வம்| ஜநஸம்ஸதி அப்ரீதி: ||௰||

(16) வேறு ஒருவரை 2 நினைக்காமல், எல்லா உலகத்துக்கும் ராஜாவான என்னிடத்தில் நிலையான பக்தி; (17) ஜனங்களில்லாத இடத்தில்வஸிப்பது; (18) ஆத்மாவைப்பற்றி நினைவில்லாத பத்துப் பேர்கூடியிருக்கிற இடத்தில் அலுப்பு. [10]

அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த்ததர்சநம் |
ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யததோ(அ)ந்யதா ||௧௧||
ஆத்மநி ஜ்ஞாநம் அத்யாத்மஜ்ஞாநம் தந்நிஷ்டத்வம்| தத்த்வஜ்ஞாநார்த்தத-
ர்சநம்-தத்த்வஜ்ஞாநப்ரயோஜநம் யத்தர்சநம் தந்நிரதத்வமித்யர்த்த:||

---

கத்தில் "அநபிஷ்வங்க:" (அதிகப் பிரீதியில்லாமை) என்று சொல்லப்பட்டது.

1. வீதியில்போகிறபோது, ஒருவரைக்கண்டால், அவர் நம்மை மரியாதை பண்ணவேணுமென்று தோன்றுகிறது. அதனால் உடம்புக்கு என்ன? ஒன்றுமில்லை. பண்ணினால் ஸந்தோஷப்படுவது; இல்லாவிட்டால், வருத்தப்படுவது—இவை முதலானவைகள் இல்லாமலிருப்பது. இங்கேகினைவினால் வரும் ஸுகங்களிலும், துக்கங்களிலும் மனது கலங்காமை சொல்லப்படுகிறது. உடம்பில் வஸ்துக்களின் சேர்க்கையாலுண்டாகும் ஸுகங்களும் துக்கங்களும் கட்டாயம் வருத்தத்தை யுண்டாக்கும். அதனால் மனது கலங்காமலிருக்கமுடியாது. ஆதலால் அவைகளை இங்கே சொல்லவில்லை. இந்த சுலோகத்தில் பிள்ளை,பெண்டாட்டிகளைச் சொல்லியிருப்பதால், இப்படித்தான் பொருள்கொள்ளவேணும்.

2. பகவானைத்தவிர மற்ற தேவதைகளிடத்தில் இருக்கும் பக்தி அடியோடு போவதற்கும், அது பகவானிடத்தில் நிலையாய் நிற்பதற்கும் உபயோகமான பகவானுடைய குணம் "என்னிடத்தில்" என்கிறசொல்லால் சொல்லப்படுகிறதென்று கருத்து. வேறு தேவதைகளிடத்தில் பக்தி இல்லாமலிருந்தால் தான் பகவானிடத்தில் பக்தி நிலையாய் நிற்கும்.

ஜ்ஞாயதேऽநேநேதி ஜ்ஞாநம் - ஆத்மஜ்ஞாநஸாதநமி
த்யர்த²꞉| க்ஷேத்ரஸம்ப³ந்தி⁴ந꞉ ஸ்வபா⁴வவிஶேஷா꞉ க்ஷேத்ரிணோ ஜ்ஞாநோபயோகி³
நம் ப்ரோக்தமேவாத்மஜ்ஞாநோபயோகி³ | ஏதத்³வ்யதிரிக்தம்
ஸர்வம் க்ஷேத்ரகார்யமாத்மஜ்ஞாநவிரோதீ⁴த்யஜ்ஞாநம் ||௧௧||

(19) ஆத்மாவின் அறிவு எப்பொழுதும் இடைவிடாமல் இருந்துவருவது; (20) ஆத்மாவின் உண்மையை அறிவிக்கக்கூடிய விசாரத்திலேயே ஆசையுள்ளவனாக இருப்பது. இவைஎல்லாம் ஆத்மாவைப்பார்ப்பதற்கு உதவியானவை. ஆத்மாவுக்குஉடம்பின் சேர்க்கையால் உண்டாகின்றன. இவைதவிர மற்றவைகள் அதற்கு இடைஞ்சல். 1 [ 11 ]

1. 7—வது சுலோகம் முதல் இந்த சுலோகம் வரையில் ஆத்மாவைப் பார்ப்பதற்கு உதவியாக 20 குணங்கள் சொல்லப்பட்டன. அவைகளில் ஆத்மா உடம்பைக் காட்டிலும் வேறு என்கிற நினைவு 11-வது குணம். இந்த நினைவு வலுத்து, உடம்பை அடியோடு விட்டுவிடவேணுமென்று பறபறப்பு உண்டாவதற்காக உடம்புடன் சேர்ந்திருக்கிற வரையில் பிறப்பு முதலான தொந்தரவுகள் கட்டாயம் இருக்குமென்று அடிக்கடி நினைக்கவேண்டியது. இது 12—வது குணம். ஆத்மாவின் உள்ளபடி அறிவு மாத்திரம் போதாது. அதை எப்போதும் இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருக்கவேணும். இது 19—வது குணம். வேறொன்றை நினைப்பது இதற்கு இடைஞ்சல். இதில்லாமலிருப்பது 9—வது குணம். ஆத்மாவை நினைத்துக் கொண்டிருப்பதற்கு ஜனக்கூட்டமும் இடைஞ்சல். அதற்காக ஜனமில்லாத இடத்தில் இருக்கவேண்டியது. இது 17—வது குணம். ஜனங்கள் ஸத்வகுணம் மேலிட்டவர்களாயிருந்தால், அவர்களுடன சேர்க்கையால் ஆத்மாவின் நினைவுக்குஉதவி உண்டாகும். அவர்களுடன் மாத்திரம சேர்ந்திருப்பது 18—வது குணம். எந்த நினைவும் ஆத்மாவினுடைய உண்மையான அறிவு நிலையாய் நிற்பதற்கு உதவியாயிருக்க வேண்டியது. வேறு நினைவு கூடாது. இது 20—வது குணம். ஆத்மாதவிர மற்றவைகளில் ஆசையை விடவேண்டியது. இது 10, 13, 14, 15-வது குணங்களாகச் சொல்லப்பட்டது. நல்ல காரியங்களைச் செய்கிறானென்று நாலுபேர் கொண்டாடுவதை ஆசைப்படக்கூடாது. கொண்டாடுவதும் ஒரு பலன்தான. இந்த ஆசையில்லாமையை 2-வது குணமாகச சொல்லியிருக்கிறது. எல்லாரும் பகவானுடைய உடம்பாயிருப்பதாலே, அவர்களுக்கு அநுகூலமாயிருக்கவேண்டியது. ஆகையால் நமக்கு ஒருவன தொந்தரவு செய்தாலும், அவனுக்குத் தொந்

௧௨ — अथ “एतद्यो वेत्ती”ति वेदितृक्षेत्रज्ञत्वे-नोक्तस्य क्षेत्रज्ञस्य स्वरूपं विशोध्यते —

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वाऽमृतमश्नुते ।
अनादि मत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥ ॥௧௨॥

अमानित्वादिभिः साधनैर्ज्ञेयं — प्राप्यं यत्प्रत्यगात्मस्वरूपं तत्प्रवक्ष्यामि । यज्ज्ञात्वा जन्मजरामरणादिप्राकृतधर्मरहितममृतमात्मानं प्राप्नोति । अनादिमदादिरस्य न विद्यते तदनादि । अस्य हि प्रत्यगात्मन उत्पत्तिर्न विद्यते । तत एवान्तो न विद्यते । श्रुतिश्च “न जायते म्रियते वा विपश्चि”दिति । मत्परं — अहं परो यस्य तन्मत्परम् । “इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् । जीवभूता”मिति ह्युक्तम् । भगवच्छरीरतया भगवच्छेषतैकरसं ह्यात्मस्वरूपम् । तथा च श्रुतिः “य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयती”ति । तथा “स कारणं करणाधिपाधि

---

தரவு செய்யவேணுமென்று எண்ணமே உண்டாகக்கூடாது. அந்தத் தொந்தரவைப் பொறுத்துக்கொள்ள வேணும். அவன் விஷயத்தில் நல்ல பேச்சும், செய்கையும் வரவேணும், அப்படியே எண்ணமும் இருக்கவேணும். இந்த மூன்றையும், 3, 4, 5-வது குணங்களாகச் சொல்லியிருக்கிறது. ஒருவனுக்குப் படிப்பினாலும், நல்ல பிறப்பாலும், பணத்தாலும் கர்வமுண்டாகி, பெரியோர்களை அலக்ஷியம் செய்யும்படி நேரிடும். அந்த கர்வமும், அப்படி அலக்ஷியம் செய்வதும் கூடாது. தன் இளப்பத்தையே நினைத்துக்கொண்டிருக்க வேணும். இது முதலாவது குணம். எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாயிருப்பது மூன்று குணங்கள். நல்ல ஸங்கதிகளை சொல்லிக்கொடுக்கும் நல்ல ஆசாரியனிடத்தில் எப்பொழுதும் வணக்கமாகவே யிருப்பது; சாஸ்திரத்தில் சொன்னபடி மனதும், வாக்கும், உடம்பும் சுத்தமாயிருப்பது; சாஸ்திரம் சொன்ன ஸங்கதிகளில். நிலையான நம்புதல். இவைகள் 6, 7, 8-வது குணங்கள். சொல்லப்பட்ட குணங்கள் எல்லாம் இருந்தாலும், பகவானிடத்தில் நிலையான பக்தி இல்லாவிட்டால், ஆத்மாவை உள்ளபடி பார்ப்பது முடியாது. ஆகையால் பகவானுடைய பக்தியை 16-வது குணமாகச் சொல்லியிருக்கிறது.

வை நாநாவ்யக்தஸ்மிஜநிதா நாநாயோநய:, ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞ பதிர்குணேஶ:” இத்யாதிகா| ப்ரஹ்மப்ரஹ்மஸ்தூத்தணயோபி ஶரீராத்யர்தாந்தரபூதம் ஸ்வதஶ்ஶரீராதிபி: பரிஶுத்தமபி தம் க்ஷேத்ரஜ்ஞதத்த்வமித்யர்த:| ‘ஸர்வாநந்தாயகஶ்சதே’ இதி ஹி ஶ்ரூயதே | ஶரீரபரிஷ்வங்கம் சாஸ்ய கர்மக்ருதம்| கர்மவஶ்யாநாத்யஸ்யாநந்த்யம்| ஶ்ருத்யந்தரேஷ்வபி ப்ரஹ்மஶப்த: ப்ரயுஜ்யதே “ஸர்வேண து ஸம்ப்ரதீயதே சாது ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ கஶ்சதே || ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச| ப்ரஹ்மஸூத்ரை: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி || ஸர்வேஷு ஸர்வேஷு பூதேஷு ஸமம் மத்பக்திம் லபதே பராம்”இதி| நஸ்த்தாநஸ்தாவ்யதே- கார்யகாரணரூபாவஸ்தாத்வயாபரிஹிததயா ஸதஸச்சப்தாபிதேயாதத்வாரூபம் நோச்யதே| கார்யாவஸ்தாயாம் ஹி தேவாதிநாமரூபபாகேந ஸதித்யுச்யதே| தத்ந ஹேதயா காரணாவஸ்தாயாமஸதித்யுச்யதே| ததாச ஶ்ருதி: “அஸத்வா இதமக்ர ஆஸீத்| ததோ வை ஸதஜாயத, தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத” இத்யாதிகா| கார்யகாரணாவஸ்தாத்வயாந்வயஸ்த்வசித: கர்மரூபாவித்யாவேஷ்டநக்ருத:; ந ஸ்வரூபக்ருத இதி ஸதஸச்சப்தாபிதேயத்வரூபம் நோச்யதே| யத்யபி “அஸத்வா இதமக்ர ஆஸீத்”இதி காரணாவஸ்தம் பரம் ப்ரஹ்மோச்யதே - ததாபி நாமரூபவிபாகாநர்ஹஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீரம் பரம் ப்ரஹ்ம காரணாவஸ்தமிதி காரணாவஸ்தாயாம் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞரூபேணாவ்யஸதஸச்சப்தாவாச்யம் க்ஷேத்ரஜ்ஞஸ்ய ஸாம்ஸாரிகாவஸ்தாக்ருதேதி பரிஶுத்தஸ்வரூபம் ந ஸதஸச்சப்தநிர்தேஶ்யம் ||

அவ—உடம்பு அறியப்படும் வஸ்துவென்றும், அதை அறிவதினால் ஜீவன் அதைக்காட்டிலும் வேறு என்றும் சொல்லப்பட்டது. அந்த ஜீவஸ்வரூபத்தைப்பற்றித் தெளிவாய் சொல்லுகிறார்—

கீழ்ச்சொன்ன குணங்கள்வந்து, பார்க்கவேண்டிய ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி சொல்லுகிறேன். அந்த ஜீவஸ்வரூபத்தை

உள்ளபடி பார்த்தால், பிறப்பு, இறப்பு, கிழத்தனம் முதலான ஸம்ஸாரம் நீங்கி, உயர்ந்த லோகத்தை அநுபவிக்கலாம். அந்த ஜீவஸ்வரூபம் ஒருக்கால் உண்டானதுமில்லை; அதற்கு அழிவுமில்லை; அது எப்போதுமிருக்கிறது. அது என்னை யஜமானனாக உடையது. அதாவது—எப்போதும் அது என் உடம்பாயிருப்பதாலே, என்னுடைய வேலைக்காகவே ஏற்பட்டது அது பெரிது. அதாவது உடம்பைக்காட்டிலும் வேறானதால், அதனுடைய அறிவு என்கிற குணமானது இயற்கையில் உடம்பினால் அளவுபட்டதல்ல. இப்போது ஜீவன் கர்மத்தால் ஒரு உடம்பில் இருப்பதால், அந்த குணம் அளவுபட்டிருக்கிறது. கர்மம் அடியோடு போய்விட்டால், அந்த குணமானது எல்லாவற்றையும் அறியும்படி பெரிதாகிறது. ஒரேகாலத்தில் லக்ஷம் உடம்புகளை எடுத்துக்கொள்ளலாம். கர்மம் இருக்கும்பொழுதும், யோகத்தின் சக்தியினால் அனேகம் உடம்புகளை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அந்த சக்திநிலைபில்லை. ஜீவனுடைய அறிவுக்கு இயற்கையில் சுருக்கமில்லை அது எங்கும் பரவக்கூடியது. அது பகவானுடைய அறிவுபோலுள்ளதுதான். இப்போது கர்மத்தால் சுருங்கியிருக்கிறது. இதைப்பற்றிப் பெரிதென்று சொன்னதேயொழிய, ஆத்மஸ்வரூபம் சின்னதான். ஜீவனைப் பிரும்மம் (பெரிது) என்று வேதத்திலும் கீதையிலும் சொல்லியிருக்கிறது. ஜீவன் தேவன் முதலான உடம்பை அடையும்போது, அவனை ஸத் என்று சொல்லுகிறது. பிரளயகாலத்தில் ஒரு உடம்பும் இல்லாத ஸமயத்தில், அஸத்து என்று சொல்லுகிறது. இந்த இரண்டு இருப்பும் கர்மத்தினால் உண்டாகிறது கர்மம் அடியோடு போனால் போய்விடும். ஜீவன் ஸத்துமல்ல. அஸத்துமல்ல. அதாவது பிறந்தவனுமல்ல; பிறக்கப்போகிறவனுமல்ல. வேதத்தில் ''அஸத்'' என்கிற சொல் பிரளயகாலத்திலிருக்கும் பிரும்மத்தைச் சொல்லுகிறது. அது ஜீவனைச் சொல்லவில்லையேயென்றால்- அஸத் என்கிற சொல்லுக்கு உருவமும், பெயருமில்லாதது என்று பொருள். ஜீவனுக்குப் பிரளயகாலத்தில் இவையிரண்டு மில்லாமையால், அவன் அஸத்து. அஸத்தான அவன் பிரும்மத்துக்கு உடம்பாயிருப்பதால், பிரும்மத்தையும் வேதம் அஸத்து என்று சொல்லுகிறது. ஆகையாலே கர்மத்தால்

உண்டான இரண்டு இருப்பும் கர்மம் போனவனுக்கு இல்லாமையால், பரிசுத்தமான ஜீவஸ்வரூபத்தை ஸத் என்றும், அஸத்தென்றும் சொல்லக்கூடாது. [12]

ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம் ।
ஸர்வத: ஶ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ॥ ௧௫ ॥

ஸர்வத: பாணிபாதந்தத் - பரிஶுத்தாத்மஸ்வரூபம் ஸர்வத: பாணிபாதகார்யகரம்। ததா ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம் ஸர்வத: ஶ்ருதிமத்-ஸர்வதஶ்சக்ஷுராதிகார்யக்ருத்। "அபாணிபாதோ ஜவனோ க்ரஹீதா பஶ்யத்யசக்ஷு: ஸ ஶ்ருணோத்யகர்ண:" இதி பரஸ்ய ப்ரஹ்மணோऽபாணிபாதஸ்யாபி ஸர்வத: பாணிபாதாதிகார்யக்ருத்த்வம் ஶ்ரூயதே। ஶுத்தஸ்யாத்மனோऽபி பரஸ்ய ஸாம்யாபத்த்யா ஸர்வத: பாணிபாதாதிகார்யக்ருத்த்வம் ஶ்ருதிஸித்தமேவ। "ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதீ"தி ஹி ஶ்ரூயதே ।"இதம் ஜ்ஞானமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:" இதி வக்ஷ்யதே। லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி-லோகே யத்வஸ்துஜாதம் தத்ஸர்வம் வ்யாப்ய திஷ்டதி। பரிஶுத்தஸ்வரூபம் தேஶாதிபரிச்சேதரஹிததயா ஸர்வகதமித்யர்த: ॥ ॥௧௫॥

கர்மம் போய் பரிசுத்தமான ஜீவஸ்வரூபம் கை கால்கள் இல்லாத போதிலும், எல்லா இடங்களிலும் கை கால்களின் வேலைகளைச் செய்ய சக்தியுள்ளது. அப்படியே கண், தலை, வாய், காது, இவைகளில்லாதபோதிலும், எல்லா இடங்களிலும் கண் முதலானவைகளின் வேலையைச் செய்ய சக்தியுள்ளது. பகவானுடைய ஸ்வரூபத்துக்கு கை கால் முதலியவைகள் இல்லை. ஆனாலும் அது எங்கும் அவைகளின் வேலைகளைச் செய்கிறது என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. அடியோடு கர்மம் போனவன் பகவானைப் போல் ஆகிறானென்று சொல்லியிருக்கிறபடியாலே, அவனும் அப்படியே செய்கிறான். முக்தனுடைய அறிவு இன்ன இடத்தில்

தான் பரவுகிறது என்று சட்டப்படியில்லை. அது எல்லாவிடத்திலும் எப்பொழுதும் நிலையாய் பரவியிருக்கிறது [13]

𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 ॥௧௪॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 – 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑍈𑌰𑌾𑌭𑌾𑌸𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 – 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 – 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌰𑌪𑌿 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 – 𑌵𑌿𑌨𑍈𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌾𑌨𑌾𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 – 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍋 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌦𑍇𑌹𑌸𑌙𑍍𑌗𑌰𑌹𑌿𑌤𑌂 । 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 – 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌭𑌰𑌣𑌸𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚, "𑌸 𑌏𑌕𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑌤𑍀" 𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 – 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌂 । 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 – 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌗𑌸𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 ॥ ॥௧௪॥

அந்த முக்தஸ்வரூபம் கண் முதலான இந்திரியங்களாலும், விஷயங்களை அறியச்சக்தியுள்ளது. அவைகள் இல்லாமலும், இயற்கையாகவே, எல்லாவற்றையும் அறியமுடியும். அதற்கு இயற்கையில் தேவன் முதலான உடம்புகள் கிடையாது. எல்லா உடம்புகளையும் எடுத்துக்கொள்ள சக்தியிருக்கிறது. அதற்கு இயற்கையில் ஸத்துவம் முதலான குணங்கள் கிடையாது ஆனாலும் அந்த குணங்களுடைய பலனை அநுபவிக்கச் சக்தியுண்டு [14]

𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌂 𑌚𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 𑌚 𑌤𑌤𑍍 ॥௧௫॥

𑌭𑍂𑌤𑌾𑌨𑍀 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌹𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 – 𑌤𑍇𑌷𑌾𑌮𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 "𑌜𑌕𑍍𑌷𑌤𑍍 𑌕𑍍𑌰𑍀𑌡𑌨𑍍 𑌰𑌮𑌮𑌾𑌣𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌰𑍍𑌵𑌾 𑌯𑌾𑌨𑍈𑌰𑍍𑌵𑌾" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋'𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍇𑌵 𑌚 – 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍋'𑌚𑌰𑌂 𑌦𑍇𑌹𑌿𑌤𑍍𑌵𑍇 𑌚𑌰𑌂 𑌚 । 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 – 𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌂

ஏதத்³ருஷ்டாந்தத்வேஷ்வபி தே³ஹே வர்தமானமப்யதிஸூக்ஷ்மத்வா த்³தே³ஹாத் ப்ருத²க்த்வேன ஸம்ஸாரிபி⁴ர்விஜ்ஞேயம். தூ³ரஸ்த²ம் சாந்திகே ச தத் - அமானித்வாத்³யுக்தகு³ணரஹிதானாம் விபரீதகு³ணானாம் பும்ஸாம் ஸ்வதே³ஹே வர்தமானமப்யதிதூ³ரஸ்த²ம். ததா² அமானித்வாதி³கு³ணோபேதானாம் ததே³வாந்திகே வர்ததே ॥ ॥௧௫॥

முக்தனுடைய ஸ்வரூபம் உடம்பில்லாமலுமிருக்கும். உடம்புகளுக்குள்ளேயும் இருக்கும். கர்மம் இருக்கும்போது உடம்புடனே, அல்லது பிரகிருதியுடனே சேர்ந்தே இருக்கவேணும். ஆத்ம ஸ்வரூபம் தனியாக இருக்க முடியாது. அப்படிப்போல் அல்ல முக்தனுடைய ஸ்வரூபத்துக்கு. அவன் இஷ்டப்படி அனேக சரீரங்களை எடுத்துக் கொள்ளக்கூடும். ஆனால் அவைகள் கர்மத்தினால் வந்தவைகள் அல்ல. ஸ்வபாவத்தில் நடமாட வேண்டியதில்லை. இஷ்டப்படி உடம்புகளை எடுத்துக்கொள்ளும்போது ஸஞ்சரிக்கவும் கூடும். இப்படி எல்லாசக்தியுமுள்ள—எல்லாவற்றையும் அறியக்கூடிய—இந்த ஆத்மஸ்வரூபம் உடம்பிலிருந்தாலும், ரொம்ப சின்னதாக இருப்பதால், கர்மத்தால் கட்டுப்பட்டவர்களால் உடம்பைக் காட்டிலும் வேறாக அறிய முடியாது. கீழ்ச் சொன்ன குணங்களில்லாதவர்களுக்குக்கிட்டத்தில்(அதாவது உடம்பில்) இருந்தபோதிலும், ரொம்ப தூரத்தில் இருப்பதுபோல் இருக்கும். அந்த குணங்களுள்ளவர்களுக்கு ரொம்பகிட்ட இருக்கிறது. அதாவது அந்த குணங்களுள்ளவர்கள் அதை நன்றாகப் பார்ப்பர்கள். இல்லாதவர்களுக்கு அது தெரியாது. [15]

அவிப⁴க்தம் ச பூ⁴தேஷு விப⁴க்தமிவ ச ஸ்தி²தம் ॥௧௫½॥

தே³வமனுஷ்யாதி³பூ⁴தேஷு ஸர்வத்ர ஸ்தி²தமாத்மவஸ்து வேதி³த்ரேகாகாரதயா அவிப⁴க்தம் - அவிது³ஷாம் தே³வாத்³யாகாரேண அயம் தே³வோ மனுஷ்ய இதி விப⁴க்தமிவ ச ஸ்தி²தம் ॥

ஜீவன்கள் தேவன் முதலான வெவ்வேறு உடம்புகளில் இருந்தாலும், அறிவுள்ளவர்கள் என்று ஒரே மாதிரிதான். அவர்கள் ஸ்வரூபத்தில் தேவன், மனிதன் முதலான பிரிவுகளில்லை.

இதை அறியாதவர்கள் அதை தேவன் முதலான உடம்புகளா கவே நினைத்து, வெவ்வேறாக எண்ணுகிறார்கள். [15½]

அவ— தேவோஹம் மநுஷ்யோஹமிதி தேஹஸாமாநாதிகரண்யேநாநுஸந்தீயமாநோபி ஆத்மா தேஹாதர்தாந்தரபூத இதி ஜ்ஞாத்ருத்வஸ்வபாவமிதி உக்தம் | இதாநீம் ப்ருதிவ்யாதிஸங்காதரூபாத் தேஹாதர்தாந்தரபூத ஜ்ஞாதா ஸ்வபாவ இத்யாஹ—

ஸம்ஸ்ருஷ்டாஸ்ச தஜ்ஜ்ஞேயம் ஸ்வவிஷ்டாந ப்ருதக்விஷ்டாந: ||கசு||

ஸங்காதாநாம் ப்ருதிவ்யாதீநாம் தேஹாரம்பேண ஸம்ஹதாநாம் யத் தத் ஸ்வஸ்வாஸாதாரணம் தஸ்ய ஜ்ஞேயத்வம், ஜ்ஞாத்ருத்வம் ச ஆத்மந: ஸ்வபாவ இதி ஜ்ஞாதவ்யம் | ததா ஸ்வவிஷ்டாநாம் ஸ்வாதீநாம் ஸ்வாத்மநா ப்ருதக்விஷ்டாநாம் ஸ்வவிஷ்டஸ்வரூபம் ஸங்காதஸ்ய ஸ்வவிதாநாதீநாம் ஜ்ஞாத்ருத்வம் ஸ்வபாவ இதி ஜ்ஞாதவ்யம் | ப்ருதக்விஷ்டாநாம் ப்ருதக்ஸம்ஸ்ருஷ்டாநாம் ஸ்வாதீநாம் ப்ருதக்ஸ்வபாவ: ஸ்வாதீநாம் ஸ்வரூபம் ஜ்ஞாத்ருத்வமிதி ஜ்ஞாதவ்யம் | ப்ருதிவ்யாதீநாம் ஸ்வபாவ ஸங்காதம் ஜ்ஞேயம் ஸ்வ ஸம்ஸ்ருஷ்டம் ஸ்வரூபம் க்ஷேத்ரம் இதி ப்ரதிபாத்யதே ||

||கசு||

அவ—நான் தேவன், நான் மனிதன் என்று உடம்போடு ஆத்மா ஒன்றாக எண்ணப்பட்டாலும், அது அறிவுள்ளதாக இருப்பதால், உடம்பைக் காட்டிலும் வேறென்று அறியலாமென்று இந்த அத்தியாயம் முதல் சுலோகத்தில் சொல்லப்பட்டது இப்போது வேறு காரணங்களாலும், உடம்பைக் காட்டிலும் அது வேறென்று அறியலாமென்று சொல்லுகிறார்—

பூமி முதலானவைகள் சேர்ந்து உண்டான உடம்பைத் தூக்குகிறது ஆத்மா; தூக்கப்படுவது உடம்பு. ஆகையால் உடம்பைக்காட்டிலும் அது வேறு; 1 பூமி முதலானவைகளாலுண்

1. இங்கு ஒருகேள்வி—சோற்றை உடம்புதானேவிழுங்குகிறது. இதை எல்லாருமபாாக்கிறோமே. ஆத்மாவுக்கோ வாய்முதலான அவயவங்கள்

டான சோறு முதலானவைகளை ஆத்மாதான் விழுங்குகிறது. விழுங்கப்பட்டதால்வளரும்உடம்பைக்காட்டிலும்விழுங்குகிறஆத்மாவேறு. சோறு முதலானவைகளை ஜரிப்பித்து, கர்ப்பம் முதலானவைகளை உண்டாக்குவதும் ஆத்மாதான். உடம்பு தூக்குகிறதில்லை. பிணமானஉடம்பில்விழுங்குவது, ஜரிப்பிப்பதுமுதலியவை காணப்படவில்லை. ஆகையாலே பூமி முதலானவை சேர்ந்து உண்டான உடம்பானது இந்த வேலைகளைச்செய்கிறதில்லை என்று தீர்மானம் பண்ணலாம் [16]

ஜ்யோதிஷாமபி தஜ்ஜ்யோதிஸ்தமஸ: பரமுச்யதே |
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம் ||

ஜ்யோதிஷாம் தீபாதித்யமணிப்ரப்ருதீநாமபி தஜ்ஜ்யோதி:-ப்ரகாசகம், தீபாதித்யாதீநாமப்யாத்மப்ரகாசத்வம்

---

கிடையாது. இந்த வேலைகளை ஆத்மாவின் வேலைகளாக எப்படிச் சொல்லக்கூடும்—என்று, பதில் பூமிமுதலானவைகள் சேர்ந்து, க்ஷேத்திரம் (உடம்பு) என்பது உண்டாயிருக்கிறது. இது உடம்பாயிருந்துகொண்டு, அறிவுள்ளஒருவனுக்கு உட்பட்டு,இந்தவேலைகளைச்செய்கிறதா? அல்லது பூமி முதலானவைகளின் சேர்க்கையாகத்தானிருந்து,இந்தவேலைகளைச் செய்கிறதா? இதைக்கொண்டு ஒருவன் விழுங்குகிறானா? இதுவேவிழுங்குகிறதா—என்று விசாரிக்கவேணடும். உடம்பாயிருந்துஇந்தவேலைகளைச்செய்வதாலும், உடம்புஎனகிற சொல்லாலேயே அதை ஏவி வேலை வாங்குகிற ஆத்மா என்று ஒன்று இருக்கிறதென்றும், இந்தவேலைகளை உடம்பைக்கொண்டு அந்த ஆத்மாவே செய்கிறதென்றும் ஏற்படும். பூமி முதலானவைகளின் சேர்க்கையாகவே இருந்து, இந்த வேலைகளைச் செய்வதானால், பிணமான உடம்பில் இந்தவேலைகள் காணப்படவில்லையே. அந்த பிணமாக இருப்பதும் பூமிமுதலானவைகளின் சேர்க்கைதானே. பிணத்திலும் சில வேலைகள் உண்டாகின்றன. ஆனால் அவைகள் ஒரு ஜீவன் அறிவினால் ஏற்பட்டவையல்ல. ஒருஜீவன் சோற்றை விழுங்குவது முதலான வேலைகளைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறான். பிறகு உடம்பைக் கொண்டு, அந்த வேலைகளைச் செய்கிறான். பூமி முதலானவைகளால் செய்யப்பட்ட ஒருவஸ்துவில் ஜீவன் என்று ஒன்று இல்லாவிட்டால், உடம்பு என்று பெயர் ஏற்படமாட்டாது. ஐயனார் கோவில் வாசலில் குயவனால் செய்யப் பட்டு, வைக்கப்பட்ட பொம்மைக்கு உடம்பு என்று பெயர் கிடையாது. அது ஒரு வேலையையும் செய்யவும் செய்யாது.

ஜ்ஞாநேநைவ ப்ரகாஶயதி, தீபாதித்யாதயஸ்து விஷயேந்த்ரியஸந்நிக
ர்ஷவிரோதிஸந்தமஸநிரஸநமாத்ரம் குர்வதே| தாவந்மா
த்ரேண தேஷாம் ப்ரகாஶகத்வம்| தமஸ: பரமுச்யதே-தம
ஶ்ஶப்தஸூக்ஷ்மாவஸ்தப்ரக்ருதிவசந:, ப்ரக்ருதே: பரமுச்யத
இத்யர்த:| அதோ ஜ்ஞாநம் ஜ்ஞேயம் - ஜ்ஞாநைகாகாரமிதி
ஜ்ஞேயம்| தச்ச ஜ்ஞாநகம்யம்-அமாநித்வாதிபிர்ஜ்ஞாநஸாதநை
: ப்ராப்யமித்யர்த:|ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம்-ஸர்வ
ஸ்ய தேஶே ஹ்ருதயப்ரதேஶே விஶேஷேணாவஸ்திதம் ஸந்நிஹிதம்||

விளக்கு, ஸூரியன் முதலானவைகள் (ஜ்யோதிஸ்ஸு) உலகத்தில் வஸ்துக்களைக் காட்டுவதாகச் சொல்லப்படுகின்றன. அவைகளையும் ஆத்மாதான் காட்டுகிறது. அவைகள் கண்ணாலே வஸ்துக்களைப் பார்ப்பதற்கு இடஞ்சலான இருட்டைப் போக்குகின்றன. பிறகு ஆத்மாவிலிருக்கும் அறிவு வஸ்துக்களை ஆத்மாவுக்கு காட்டுகிறது. ஆத்மாவும், அதின் அறிவும் இல்லாவிட்டால், விளக்கு என்ன செய்யும். இருட்டைப் போக்குவதைப்பற்றி, விளக்கு முதலியவைகளை ஜ்யோதிஸ்ஸு (காட்டுகிறது) என்று சொல்லுகிறது. அவைகள் வஸ்துக்களைக் காட்டவில்லை. ஆத்மாதான் அவைகளையும் மற்றவைகளையும் தன்னுடைய அறிவு என்கிற குணத்தால் தனக்குக் காட்டுகிறது. விளக்கு முதலியவைகளுக்கு அறிவு கிடையாது. ஆகையால் அறிவுள்ள ஆத்மாதான் எல்லாவற்றைக் காட்டினும் உயர்ந்த ஜ்யோதிஸ்ஸு. ஸத்துவம் முதலான குணமுள்ள பிரகிருதியைக் காட்டினும் 1 வேறு என்று வேதத்தில் சொல்லப்படுகிறது. ஜடமான பிரகிருதியைக் காட்டினும் வேறாக இருப்பதால், அறிவையே இயற்கையாக உடையது என்று அறியத்தக்கது. கீழ்ச்சொன்னகுணங்களாலேபார்க்கக்கூடியது. எல்லாருடைய ஹிருதயத்திலும் 2 விசேஷமாக இருக்கிறது.

1. சுலோகத்திலிருக்கும் "பரம்" என்கிற சொல்லுக்கு வேறு என்று பொருள் பாஷியத்தில் சொல்லப்பட்டது. அதற்கு உயர்ந்தது என்றும் பொருள். பிரகிருதியினால் உண்டான வஸ்துக்களை ஜீவன் அனுபவிப்பதினால், பிரகிருதியைக்காட்டிலும் அவன் உயர்ந்தவன் என்று சொல்லலாம்.

2. விசேஷமாக இருப்பதாவது—அனுபவித்துக்கொண்டிருக்கிறது. அல்லது அது ஹிருதயத்திலதான் இருக்கிறது. [illegible] அங்கங்களில் அறி[illegible]

𑌇𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌚𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।
𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌯𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௧௮॥

𑌏𑌵𑌂 "𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 "𑌸𑌂𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌧𑍃𑌤𑌿𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 । "𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 "𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌧𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । "𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 "𑌹𑍃𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌏𑌤𑌤𑍍 – 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌿-

---

விளுல் இருக்கிறது. விளக்கு ஒருஇடத்தில் இருக்கிறது. அதின வெளிச்சம நாலு பக்கமும்பரவுகிறது. அதுபோல் ஆத்மா ஹ்ருதயத்தில் இருக்கிறது. வெளிச்சம்போன்ற அதின்அறிவு எல்லாஇடத்திலும் பரவுகிறது.

12-வது சுலோகம் முதல் ஆறு சுலோகங்களாலே ஜீவாத்மாவின் ஸ்வரூபம் இன்னபடி இருக்குமென்று சொல்லப்பட்டது. இதனால் உடம்பைக்காட்டிலும் எல்லா விதத்தாலும் அது வேறு என்று ஏற்படுகிறது. உடம்பில் கை, கால், கண், காது முதலான அங்கங்கள் இருக்கின்றன. அது இந்திரியங்களுக்குஇருப்பிடம். ஸத்துவம் முதலான குணங்களையுடையது. பிரகிருதியினால் உண்டானது. ஆத்மாவோ இந்த நாலு விஷயங்களிலும் வேறு. அதில் கை, கால், கண், காது முதலான அங்கங்களில்லை. இந்திரியங்களுக்கு மிருப்பிடமன்று. ஸத்துவம்முதலான மூன்று குணங்களும் அதில் இல்லை. அது பிரகிருதியைக்காட்டிலும் வேறான திரவியம். உடம்பு ஜடம்; அதாவது—தன்னைக் காட்டுகிற வஸ்துவன்று. ஆத்மா ஸ்வயம்பிரகாசம்; தன்னைக்காட்டுகிற வஸ்து. இப்படிப் பலவிதமாய் உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மா, இப்போது இருப்பதுபோல, உடம்போடே சேர்ந்தே இருக்குமா? அல்லது அதைவிட்டுத் தனியாக இருக்கக்கூடுமா என்றால், பதில்—கர்மம் அடியோடு போனால், உடம்பை விட்டுத் தனியாயுமிருக்கும். வேண்டுமானால் நினைவினாலேயே அனேக உடம்புகளை எடுத்துக்கொண்டு, அவைகளுக்குள்ளே இருக்கும். அப்படி உடம்புகளை எடுத்துக்கொள்ளும்போது, இன்ன ஜீவனுக்கு இன்ன உடம்பு என்று கட்டாயமில்லை. வேண்டிய உடம்பை எடுத்துக்கொள்ளத் தகுந்தவன. உடம்புகளில் போலே ஜீவன்களுக்குள்ளே வெவ்வேறு பிரிவுகளில்லை. அவர்கள் அறிவுள்ளவர்கள் என்று ஒரேமாதிரி.

ஜ்ஞாய, மத்பாவாயோபபத்யதே-மம யோ பாவः ஸ்வபாவः அஸம்ஸாரித்வம், அஸம்ஸாரித்வப்ராப்தியோக்யோ பவதீத்யர்த்த:॥

அவ— ஆரம்பித்த ஸங்கதியை முடித்துக் கொண்டு, அதின் பிரயோஜனத்தைச் சொல்லுகிறார்—

5-வது, 6-வது சுலோகங்களாலே உடம்பின் உண்மையைச் சுருக்கமாகச் சொன்னேன். 7-வது முதல் 11-வது வரையில் ஆத்மாவை அறிவதற்கு உதவியான குணங்கள் சொல்லப்பட்டன. 12-வதுமுதல் 17-வதுவரையில் ஜீவனுடைய உண்மையைச் சுருக்கமாகச் சொல்லிற்று. என்னிடத்தில் பக்தியுள்ளவன் உடம்பின் உண்மையையும், அதைக் காட்டிலும் வேறான ஜீவனுடைய உண்மையையும், அந்த ஜீவனை அறிவதற்கு உதவியான குணங்களின் உண்மையையும் அறிந்தால், என்மாதிரி ஆய்விடுவன். அதாவது ஸம்ஸாரத்தை அடியோடு விடத்தகுந்தவனாக ஆவன். [18]

ஏவ—அத்யந்தவிவிக்தஸ்வபாவயோः ப்ரக்ருதிபுருஷயோः ஸம்ஸர்கஸ்யாநாதித்வம், ஸம்ஸ்ருஷ்டயோர்த்வயோः கார்யபேதः ஸம்ஸர்கஹேதுஶ்சோச்யதே—

ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி ।
விகாராம்ஶ்ச குணாம்ஶ்சைவ வித்தி ப்ரக்ருதிஸம்பவாந் ॥௧௯॥

ப்ரக்ருதிபுருஷாவுபாவந்யோந்யஸம்ஸ்ருஷ்டாவநாதீ இதி வித்தி। பந்தஹேதுபூதாந்விகாராந்-இச்சாத்வேஷாதீந், அமாநித்வாதிகாம்ஶ்ச குணாந் மோக்ஷஹேதுபூதாந் ப்ரக்ருதிஸம்பவாந் வித்தி। புருஷேண ஸம்ஸ்ருஷ்டேயம் அநாதிகாலப்ரவ்ருத்தா க்ஷேத்ராகாரபரிணதா ப்ரக்ருதிः ஸ்வவிகாரைரிச்சாத்வேஷாதிபிः புருஷஸ்ய பந்தஹேதுர்பவதி। ஸைவாமாநித்வாதிபிஸ்ஸ்வவிகாரைः புருஷஸ்யாபவர்கஹேதுர்பவதீத்யர்த்த: ॥ ॥௧௯॥

அவ—பலவிதத்திலே வெவ்வேறான தன்மையுள்ள உடம்பு, ஜீவன்— இவைகளின் சேர்க்கைக்கு இதுமுதல் என்று இல்லை என்பதையும், இவைகள் சேர்ந்தபோது, அவைகளின் வேலை

வெவ்வேறு என்பதையும், ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் ஒரே மாதிரியாக வந்துகொண்டிருக்கிற அவைகளின் சேர்க்கைக்குக் காரணம் இன்னதென்பதையும் சொல்லுகிறார்—

பிரக்ருதிக்கும் ஜீவனுக்கும் சேர்க்கை இதுமுதல் என்று முன் எல்லையில்லாமல்1 வெகுகாலமாய் இருந்துகொண்டிருக்கிறது. இந்த சேர்க்கை ஜீவனுக்கு ஆசை த்வேஷம் முதலானவைகளை உண்டுபண்ணி, கர்மத்தை வளர்த்து, ஸம்ஸாரத்தை வளர்க்கிறது. அதுவே 7-வது முதலான சுலோகங்களில் சொன்ன குணங்களை உண்டுபண்ணி, கர்மத்தை விலக்குவதற்கும் உதவுகிறது. [19]

कार्यकारणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते।
पुरुषस्सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥ ॥२०॥

कार्यं-शरीरं, कारणानि-ज्ञानकर्मात्मकानि समनस्कानीन्द्रियाणि, तेषां क्रियाकारित्वे पुरुषाधिष्ठिता प्रकृतिरेव हेतुः। पुरुषाधिष्ठितक्षेत्राकारपरिणतप्रकृत्याश्रया भोगसाधनभूताः क्रिया इत्यर्थः। पुरुषस्य अधिष्ठातृत्वमेव। तदपेक्षया "कर्ता शास्त्रार्थवत्त्वात्" इत्यादिकमुक्तम्। शरीराधिष्ठानप्रयत्नहेतुत्वमेव हि पुरुषस्य कर्तृत्वम्। प्रकृतिसंसृष्टः पुरुषस्सुखदुःखानां भोक्तृत्वे हेतुः-सुखदुःखानुभवाश्रय इत्यर्थः ॥२०॥

ஜீவனால்2 ஏவப்பட்ட உடம்பும், பதினொரு இந்திரியங்களும் ஜீவனுக்கு ஸுகதுக்கங்களைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்

---

1. பகவானுடைய அனுக்கிரஹத்தினாலே இந்த சேர்க்கைபோகும். இதற்குப்பின் எல்லையுண்டு; முன் எல்லைஇல்லை. மோக்ஷத்துக்குப்பின் எல்லையில்லை. சம்சாரத்துக்கு இக்கரையில்லை; மோக்ஷத்துக்கு அக்கரையில்லை.

2. ஒருவன் சாப்பிடும்போது, ஆஹாரத்தைப் பல்லு கடிக்கிறது; அன்னநாக்கு உள்ளேதள்ளுகிறது. ஜீவன் அவைகளைஏவுகிறவன்; உடம்பு முதலானவைகள் கருவிகள்; அனுபவிக்கிறவன் ஜீவன்.

கின்றன. அவைகளை ஏவுகிற ஜீவன் ஸுகத்தையும், துக்கத்தையும் அநுபவிக்கிறான். [20]

அவ— ஏவமந்யோந்யஸம்ஸ்ருஷ்டயோ: ப்ரக்ருதிபுருஷயோ: கார்யபேத உக்த:| புருஷஸ்ய ஸ்வதஸ்ஸ்வாநுபவைகஸுகஸ்யாபி வைஷயிகஸுகது:கோபபோகஹேதுமாஹ—

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந் ॥

॥ ௨௦½ ॥

குணமய: ஸ்தூலகாயேஷு ஔபாதிக:| ஸ்வதஸ்ஸ்வாநுபவைகஸுகோऽபி புருஷ: ப்ரக்ருதிஸ்த:- ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்ட:| ப்ரக்ருதிஜாந் குணாந்- ப்ரக்ருதிஸம்ஸர்கோபாதிகாந் ஸத்வாதிகுணகார்யபூதாந் ஸுகது:காதீந், புங்க்தே- அநுபவதி ||

॥ ௨௦½ ॥

அவ— ஒன்றோடொன்று சேர்ந்த பிரகிருதிக்கும், ஜீவனுக்கும் வேலைகள் வெவ்வேறென்று சொல்லப்பட்டன. இயற்கையில் தன்னையே அநுபவித்து, மிகவும் ஸுகப்படக்கூடிய ஜீவன் ஏன் விஷயங்களால் வரும் ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறான் என்றால், சொல்லுகிறார்—

உடம்புமுதலானவைகளாக ஆகியிருக்கிற பிரகிருதியுடன் [1] சேர்ந்திருக்கையால், அதினுடைய ஸத்துவம்முதலானகுணங்களால் உண்டாகும் ஸுகதுக்கங்களை ஜீவன் [2] அநுபவிக்கிறான். [20½]

---

1. பிரளயகாலத்தில் ஜீவன் பிரகிருதியுடன் சேர்ந்திருந்தாலும், அவனுக்கு ஸுகமும், துக்கமுமில்லை. பிரகிருதி உடம்பாகவும், இந்திரியங்களாகவும் ஆகி, அவைகளை ஜீவன் ஏவும்போது தான், அவைகள்வேலை செய்து, அவனுக்கு ஸுகத்தையும், துக்கத்தையுமுண்டு பண்ணுகின்றன. சிலவேளைகளில் ஜீவன் நினைக்காமலே சிலவேலைகள் நேருகின்றன. அவைகளும் அநுபவிக்கிற ஜீவன் உடம்பில் இருப்பதினால்தான் நேருகின்றன. பெரும்பாலும் இவன்நினைவினாலேதான் வேலைகள் நடக்கின்றன.

2. இங்கு ஓர் ஸந்தேகம்-ஜீவன் இயற்கையாக பரிசுத்தமானவன். தன்னையே அநுபவித்துக்கொண்டிருக்க வேண்டியவன். தன்னைக்காட்டிலும் வேறானவஸ்துக்களை கண்முதலான இந்திரியங்களால் அநுபவி

அவ — ப்ரக்ருதிஸம்ஸர்க்கே ஹேதுமாஹ —

காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு ||

பூர்வபூர்வ ப்ரக்ருதிபரிணாமரூபதேவாதிஶரீரயோநி விஶேஷேஷு ஸ்திதோऽயம் புருஷ: தத்தத்யோநி ப்ரயுக்தஸத்த்வாதிகுணமயேஷு ஸுகாதிஷு ஸக்த: தத்ஸாதநபூதேஷு புண்யபாபகர்மஸு ப்ரவர்த்ததே। ததஸ்தத்புண்யபாபபலாநுபவாய ஸதஸத்யோநிஷு ஸாத்வஸாதுயோநிஷு ஜாயதே। ததஶ்ச கர்ம கரோதி। ததஶ்ச ஜாயதே। யாவதமாநித்வாதிகாநாத்மப்ராப்திஸாதநபூதாந் குணாந் ஸேவதே, தாவதேவ ஸம்ஸரதி। ததுக்தம்-காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸ்விதி||௨௧||

அவ— ஜீவனுக்கு உடம்புடன் சேர்க்கை ஆறுபோல் பெருகிக்கொண்டிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறார்—

ஜீவனுக்கு உடம்புகளின் சேர்க்கை இப்போது வந்தது என்று சொல்லமுடியாது. அந்தஉடம்புகள் கணக்கில்லாமல் வரிசையாய் வந்துகொண்டிருக்கின்றன. அந்தந்த உடம்பிலிருக்கிற ஜீவன் அததற்குத் தகுந்தபடி மேலிடுகிற ஸத்துவம்முதலானகுண

---

த்துவரும் ஸுகங்களையும், துக்கங்களையும் எப்படி அநுபவிக்கக்கூடும். ஆகையாலே, செம்பரத்தின் பூவின் பக்கத்தில் வைக்கப்பட்ட ஸ்படிகத்தில் தெரிகிற அதின் சிகப்பு எப்படி உண்மையில் ஸ்படிகத்திலில்லையோ,அப்படியே இந்தஅநுபவம் ஜீவனுக்குஉண்மையிலில்லை—என்று. இந்த ஸந்தேஹம் சுலோகத்தில் "புங்க்தே-அநுபவிக்கிறான்" என்கிற சொல்லாலே தீர்க்கப்படுகிறது. ஜீவன் அனுபவிக்கிறான என்பது யாருக்கும் பிரத்தியக்ஷமாக இருக்கிறதே. அதை எப்படிப்பொய் என்றுசொல்லுகிறது.

உதாரணம்-ஒருவனுக்கு நினைத்தபடி ஸஞ்சரித்த ஒரு பிரும்மசாரி ஒரு ஸ்திரீயைக் கல்யாணம்செய்துகொண்டு,அவளுடன்சேர்ந்ததினால், பல ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். அதுபோல. சுலோகத்திலிருக்கிற பிரகிருதி என்கிற சொல் பெண்பாலாகவும், புருஷன்என்கிற சொல் ஆண்பாலாகவும் இருப்பதினால், இந்த உதாரணம் தோன்றுகிறது.

ங்களாலே அவைகளாலுண்டாகும் ஸுகம் முதலானவைகளில் [1] ஆசையுள்ளவனாகி, அவைகளுக்கு உதவியான புண்ணியங்களையும், பாபங்களையும் செய்கிறான். அந்த புண்ணியங்களுக்கும், பாபங்களுக்கும் ஏற்பட்ட பலன்களை அநுபவிப்பதற்காக அவைகளுக்குத்தகுந்தபடி நல்லதோ, கெட்டதோ [2] உடம்பு மறுபடியும்வருகிறது. முன்போல்மறுபடியும் சுகதுக்கங்களுக்கு ஆசைப்பட்டு கர்மங்களைச்செய்து, மறுபடியும் பிறக்கிறான். 7—வது சுலோகம் முதல் சொன்ன குணங்கள் வருகிறவரையில் இந்த வருத்தத்துக்கு ஓய்வில்லை.

[21]

𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 ॥ ௨௨ ॥

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌹𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍇𑌹𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌗𑍁𑌣 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯𑍋𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌜𑌨𑌿𑌤𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌯𑍋𑌰𑍍𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌵𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌦𑍇𑌹𑌨𑌿𑌯𑌮𑌨𑍇𑌨, 𑌦𑍇𑌹𑌭𑌰𑌣𑍇𑌨, 𑌦𑍇𑌹𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌭𑌵𑌤𑌿 ।

---

1. ஸத்துவகுணத்தினாலுண்டாகும் ஸுகத்தில் ஆசை எவனுக்கும் வரும். ரஜோகுணத்தினால் வரும் துக்கத்தில் ஆசை எப்படி வரும் என்றால், பதில்--துக்கத்தை ஸுகமாக எண்ணுவதாலே, அதில் ஆசையுண்டாகிறது. உதாரணம்—ஒருவன் பணம் ஸம்பாதிப்பதற்காக கப்பல்யாத்திரை செய்கிறான். அதில் அநேக ஆபத்துக்கள் இருக்கின்றன. வரப்போகிறலாபம் கொஞ்சம். அதுகிடைப்பதும் நிச்சயமில்லை. சிலர் அடிபடுவதையும் ஸுகமாக எண்ணுகிறார்கள். இல்லாவிட்டால், ஸந்தோஷமாகச் சண்டைக்குப்போவார்களா.

2. பலன்களைஉடம்பைக்கொண்டுதான் அனுபவிக்க வேண்டும். ஜீவாத்மஸ்வரூபம் மிகவும் சின்னது. அதைநினைக்கவும் முடியாது; கொளுத்தவும்முடியாது. சந்தனத்தாலே ஸுகப்படவேணுமானால், அதற்கு ஒருஉடம்பைக் கொடுத்து, உடம்பில்சந்தனத்தைப்பூசவேணும். அதைச்சுடவேணுமானால், அதற்கு உடம்பைக் கொடுத்து, உடம்பில்தணலைவைக்கவேணும்,

𑌤𑌥𑌾 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 “𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌃। 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍈𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌯𑌾𑌤𑌿 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌿𑌵𑌾𑌶𑌯𑌾𑌤𑍍” 𑌇𑌤𑌿। [illegible] ॥ ௨௨ ॥

அவ—ஜீவனுக்கு உடம்பு வந்தபிறகு வரும் ஸங்கதிகளைச் சொல்லுகிறார்.

ஜீவன் உடம்பிலிருக்கும்போது, அந்தந்த வேலைகளைச் செய்ய வேணுமென்று எண்ணி, அந்தந்த வேலைகளில் உடம்பை ஏவுகிறான். உடம்பு வேலைகளைச் செய்யும்போது, அவைகளை ஒப்புக்கொண்டிருக்கிறான். அந்த உடம்பைத் தூக்குகிறான், அந்த வேலைகளினால் உண்டாகும் ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். இப்படி உடம்பை ஏவுவதாலும், தூக்குவதாலும், சேஷியாயிருப்பதாலும் (அதனால் வரும் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதாலும்), உடம்பு, இந்திரியங்கள், மனஸு, இவைகளுக்கு ராஜாவாக இருக்கிறான். அவைகளைக் குறித்து [1] பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறான். 12-வது சுலோகத்தில் சொன்னபடி அளவில்லாத அறிவையும் சக்தியையும் அடையவேண்டிய இந்த ஜீவன் நெடுநாளாய் வந்த உடம்பு முதலானவைகளாக ஆயிருக்கும் பிரகிருதியின் சேர்க்கையால், ஸத்துவம்முதலான குணங்களால் உண்டாகிற ஸுகங்களை

1. ஆத்மா என்கிறசொல் எங்கும் நிறைந்த வஸ்துவைச் சொல்லுகிறது ஜீவன் தன்னுடைய அறிவு என்கிறகுணத்தினால்தன் உடம்பில் நிறைந்திருக்கிறான். ஆகையால் அவனை ஆத்மாஎன்று சொல்லுகிறது. உடம்பையும், மனதையும் ஆத்மாவென்று இந்த அத்தியாயம் 24—வது சுலோகத்தில சொல்லப் போகிறார்- ஆகையாலே ஜீவனைப் பரமாத்மா என்று இங்கே சொல்லியிருக்கிறது.

𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 — 𑌅𑌭𑍍𑌯𑌦𑌯𑌸𑌾𑌧𑌨𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌆𑌸𑍁𑌰𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 — 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 । 𑌶𑍌𑌚𑌂 — 𑌵𑍈𑌦𑌿𑌕𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂, 𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌂 𑌚 𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌨𑌾𑌪𑌿 𑌚𑌾𑌚𑌾𑌰𑌃 — 𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌶𑍌𑌚𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑌿𑌨𑌾 𑌆𑌚𑌾𑌰𑍇𑌣 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 "𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁" 𑌇𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 — 𑌯𑌥𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑌰𑍂𑌪𑌸𑌤𑍍𑌯𑌭𑌾𑌷𑌣𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ॥ ௭ ॥

பிரும்மலோகம்வரையிலுள்ள உலகங்களில் கிடைக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தர்மங்களும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய தர்மங்களும், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் அவர்களுக்குத் தெரியாது. லக்ஷம்தடவை சொன்னாலும், தமோகுணம் மேலிட்டிருப்பதால், புரியாது. உடம்பும் ஆத்மாவும் வேதத்தில் சொல்லிய கர்மங்களை எப்படியிருந்து செய்ய வேணுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதோ, அப்படி அவர்கள் இருக்கமாட்டார்கள். ஸ்நாநம் செய்து கோவிலுக்குப் போகவேணுமென்று சொல்லியிருக்கிறது. அந்த ஸ்நானத்தைச் செய்யமாட்டார்கள். ஆத்மாவிற்கு தயை, பொருமை, வணக்கம் இவை முதலானவைகள் வேணுமென்று சொல்லியிருக்கிறது. அவைகள் அவர்களுக்கு இருக்காது. ஸந்தியாவந்தனம் முதலான எந்த வேலைகளாலே உடம்பும் ஆத்மாவும் சுத்தமாகுமோ, அந்த வேலைகளுமிருக்காது. ஸந்தியாவந்தனம் பண்ணாதவன் அசுத்தன்; ஒரு வேலைக்கும் தகாதவன் என்று சொல்லியிருக்கிறது. அவர்களிடத்தில் ஸத்தியம் இருக்காது. பொய்தான் சொல்லுவார்கள். ஏய்க்கிறத்திலேயே ருசியாகையால், நடந்தபடி சொல்லமாட்டார்கள். தொந்தரவு செய்வதே ஸ்வபாவமானதால், அநுகூலத்தைச் சொல்லமாட்டார்கள். [7]

𑌅𑌸 — 𑌕𑌿𑌂 —

𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍇 𑌜𑌗𑌦𑌾𑌹𑍁𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 ॥ ॥ ௮ ॥

ம், மறுபடியும் பிரகிருதியுடன் சேரமாட்டான். அதாவது— மறுபடியும் பிறக்கமாட்டான். இந்தஉடம்பு போகிறகாலத்திலேயே அளவில்லாத அறிவுள்ளதாயும், இயற்கையில் ஒருவிதமான கர்மங்களுமில்லாததுமான ஆத்மஸ்வரூபத்தை அடைவன். அதாவது அவனுக்கு எல்லாக்கர்மங்களும் போய்விடும். [23]

த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதாத்மாநமாத்மநா ।
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே ॥

கேசித் நிஷ்பந்நயோகா ஆத்மநி ஶரீரேவஸ்திதமாத்மாநமாத்மநா மநஸா, த்யாநேந-யோகேந பஶ்யந்தி। அந்யே ச அநிஷ்பந்நயோகாஸ் ஸாங்க்யேந யோகேந-ஜ்ஞாநயோகேந யோகயோக்யம் மந: க்ருத்வா ஆத்மாநம் பஶ்யந்தி। அபரே-ஜ்ஞாநயோகாநதிகாரிண: தததிகாரிணஶ்ச ஸுகரோபாயஸக்தா: வ்யபதேஶ்யாஶ்ச கர்மயோகேந அந்தர்கதஜ்ஞாநேந மநஸோ யோகயோக்யதாமாபாத்ய ஆத்மாநம் பஶ்யந்தி॥ ॥உ௪॥

அ— கீழ்ச்சொன்ன ஸங்கதியையே இரண்டு சுலோகங்களால் விரிவாய்ச் சொல்லி, ஆத்மாவின் அறிவில் உயர்ந்தபடி முதல் பலபடிகளைச் சொல்லுகிறார்.—

தியானம் நிறைவேறின சிலர் உடம்பிலிருக்கும் ஆத்மாவை மனஸினாலே தியானத்தினாலேயே பார்க்கிறார்கள். அதாவது ஆத்மாவைப்பார்க்கும்படி தியானம் சிலர்க்கு நிறைவேறிவிட்டது. ஆத்மாவின் தியானம் நிறைவேறாதவர்கள் ஞானயோகத்தைப்பண்ணி, மனஸை ஆத்மாவைத்தியானம்பண்ணத்தகுந்ததாகச்செய்து, பிறகு ஆத்மாவைப்பார்க்கிறார்கள். ஞானயோகம் பண்ண முடியாதவர்களும், முடிந்தபோதிலும், ப்ரயாஸமில்லாமல் ஆத்மாவை

---

யை நன்றாய் அறிந்தவன் பிராரப்த (பலனைக்கொடுக்க ஆரம்பித்த) கர்மங்களினாலே தொந்தரவுகளை அநுபவித்தாலும், அவனை மற்றவர்களைப் போல் நினைத்து, மறுபடியும் பிறப்பனென்று நினைக்கக்கூடாது.

"இருந்தாலும்" என்கிற சொல்லில் "உம்" என்பதால் தொந்தரவுகளை அநுபவிக்காமல் இருப்பவன் மறுபடியும் பிறக்கமாட்டான் என்று சொல்லவேணுமா என்று காட்டப்படுகிறது.

ப்பார்க்கும்வழியைத் தேடுகிறவர்களும், நாலுபேர்களால் தெரிந்தவனென்றும், நல்லகாரியங்களைச் செய்கிறவன் என்றும் கொண்டாடப்பட்டவர்களும் ஆத்மாவின் உண்மையான அறிவுடன் சேர்ந்த கர்மயோகத்தைச் செய்து, மனதை ஆத்மாவைத் தியானப்பண்ணத்தகுந்ததாக ப்பண்ணி, ஆத்மாவைப் பார்க்கிறார்கள். [24]

அந்யே த்வேவமஜாநந்த: ஶ்ருத்வாऽந்யேப்₄ய உபாஸதே ।
தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா: ॥

அந்யே து கர்மயோகா₃தி₃ஷ்வாத்மாவலோகநஸாத₄நேஷ்வநதி₄க்ருதா:, அந்யேப்₄ய:- தத்த்வத₃ர்ஶிப்₄யோ ஜ்ஞாநிப்₄ய: ஶ்ருத்வா கர்மயோகா₃தி₃பி₄ராத்மாநமுபாஸதே । தேऽப்யாத்மோபாஸநேந ம்ருத்யுமதிதரந்தி । யே ஶ்ருதிபராயணா:- ஶ்ரவணமாத்ரநிஷ்டா₂:, தே ச ஶ்ரவணநிஷ்டா₂: பூதபாபா: க்ரமேண கர்மயோகா₃தி₃கமாரப்₄யாதிதரந்த்யேவ ம்ருத்யும் । அபிஶப்₃தா₃த் பூர்வேப்₄யோ நிகர்ஷோऽவக₃ம்யதே ॥ ௨௫ ॥

கர்மயோகத்தையும் செய்யமுடியாத சிலர் உண்மையை அறிந்த பெரியோர்களிடம் கேட்டு, கர்மயோகம் முதலானவைகளைச் செய்து, ஆத்மாவைத் தியானம்பண்ணுகிறார்கள். அவர்களும் ஆத்மவைப்பார்த்து, ஸம்ஸாரத்தைப் போக்குகிறார்கள். எவர்கள் பெரியோர்களிடம் ஆத்மாவின்ஸங்கதிகளைக் கேட்டுக்கொண்டுமாத்திரம் இருக்கிறார்களோ, அதாவது அதற்குத்தகுந்த வேலைகளைச் செய்யவில்லையோ, அவர்களும் கேள்வையினாலே பாபத்தைக்போக்கி, கொஞ்சகாலத்தில் படிப்படியாக க்கர்மயோகம் முதலானவைகளைச்செய்து, ஸம்ஸாரத்தை [1] தாண்டுவர்கள். [25]

அத₂ ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டஸ்யாத்மநோ விவேகாநுஸந்தா₄நப்ரகாரம் வக்தும் ஸர்வம் ஸ்தா₂வரம் ஜங்க₃மம் ச ஸத்த்வம் சித₃சித்ஸம்ஸர்க₃ஜமித்யாஹ —

1. மறுபிறப்புஆகிய தொந்தரவு போய்விடுமென்று சொன்னதினாலேயே உயர்ந்த லோகமும் வரும் என்று ஏற்படுகிறது. அறிவில்லாமையும், கர்மங்களும் அடியோடு போனவன் மறுபிறப்புக்குத் தகுந்தவனோ; அல்ல. அவனுக்கு லோகத்துக்கு குறைவு என்ன?

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ॥ ௨௬ ॥

யாவத் ஸ்தாவரஜங்கமாத்மநா ஸத்த்வம் ஜாயதே, தாவத் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரிதரேதரஸம்யோகாதேவ ஜாயதே-ஸம்யுக்தமேவ ஜாயதே, ந த்விதரேதரவியுக்தமித்யர்த்த:॥ ॥ ௨௬ ॥

*அவ*—பிரகிருதியோடு சேர்ந்த ஜீவன் பிரகிருதியைக்காட்டிலும் வேறென்று நினைக்கும் வழியைச் சொல்லுவதற்காக 1, உலகத்தில்—அசையும் பொருளோ, அசையாப்பொருளோ—எல்லாம் பிரகிருதி, ஜீவன்—என்ற இந்தஇரண்டும் சேர்ந்து உண்டானவைகள் என்று சொல்லுகிறார்—

உலகம் ஜங்கமம் (நடமாடுகிறது) என்றும் 2 ஸ்தாவரம், அதாவது—மரம் முதலான நடமாடாதது) என்றும் இருவகையாக இருக்கிறது. இதெல்லாம் பிரகிருதி (அறிவில்லாதது), ஜீவன் (அறிவுள்ளது) என்கிற இந்த இரண்டும் சேர்ந்துதான் உண்டாயிருக்கின்றன. பிரகிருதி மாத்திரமும் அல்ல; ஜீவன் மாத்திரமும் அல்ல.

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் ।
விநச்யத்ஸ்வவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி ॥ ௨௭ ॥

ஏவமிதரேதரயுக்தேஷு ஸர்வேஷு பூதேஷு தேவாதிவிஷமாகாரஸ்திதம், தத்தத்தேஹேந்த்ரியமநஸாம் ஈச்வரதயா பரமேச்வரம் ஸ்திதம் ஜ்ஞாத்ருத்வேந ஸமாநாகாரம், தேஷு தேஹாதிஷு விநச்யத்ஸு விநாசாநர்ஹஸ்வபாவேநாவிநச்யந்தம் ய: பச்யதி, ஸ பச்யதி—ஸ ஆத்மாநம் யதாவஸ்திதம் பச்யதி । யஸ்து தேவா

1 இரண்டுவஸ்துக்கள் இருக்கின்றனவென்று அறிந்தால்தானே, ஒன்றுக்கொன்றின் பேதத்தை காட்டலாம். உடம்புதான் ஆத்மாவென்று நினைத்தவனுக்கு உடம்புவேறு, ஆத்மாவேறு என்று எப்படிக் காட்டமுடியும்.

2. மரம், செடி, கொடிகள் முதலானவைகளில் அறிவிருப்பதாகக் காணப்படாமையாலே ஜைனர்கள் சொல்லுவதுபோல், அவைகளில்ஜீவன் இல்லையென்று நினைக்கக்கூடாதென்று காட்டுவதற்காக, இந்தச் சொல் ... சேர்த்திருக்கிறது.

ஷிவிஶேஷாகாரேணாத்மநோ விஶேஷாகாரம், ஜந்மவிநாஶயு-
க்தம் ச பஶ்யதி-ஸ நித்யமேவ ஸம்ஸரதீத்யபிப்ராயஃ ॥ ||௨௭||

இப்படி பிரகிருதியும் ஜீவனும் சேர்ந்து உண்டான எல்லாவஸ்துக்களிலும், ஆத்மா என்கிற வஸ்துக்களை தேவன், மனிதன் முதலான வெவ்வேறு விதமான உடம்புகளைக்காட்டிலும் 1 வேறென்றும், அந்தந்த உடம்பு, இந்திரியங்கள், மனது—இவைகளுக்கு ராஜாவென்றும், அறிவுள்ளது என்பதினால் அவைகள் 2 ஒரேமாதிரியென்றும், அந்த உடம்புகள் அழிந்தபோதிலும், அழியத் தகுதியில்லாமையால், 3 அவைகள் அழியத்தகாதவைகள் என்றும் எவன் பார்க்கிறானோ (அதாவது—ஆத்மா இப்படிப்பட்டதென்று அறிகிறானோ), அவன் ஆத்மாவை உள்ளபடி அறிகிறான். எவன் உடம்பிலிருக்கிற நீளம், குட்டை, கருப்பு, செகப்பு முதலிய வேற்றுமைகளை ஆத்மாக்களில் இருப்பதாகவும், அவைகள் பிறப்பு, இறப்பு உள்ளவைகள் என்றும் 4 நினைக்கிறானோ, அவனுக்கு ஸம்ஸாரம் ஒருநாளும் போகாது. அவன் பிறப்பதும் சாவதுமாகவே இருப்பன். [27]

---

1. உதாரணம்—கங்கையின் ஜலத்தை மண்குடத்திலும், தங்கக்குடத்திலும் வைத்தபோதிலும், அது மண்ணாகவும், தங்கமாகவும் ஆகிறதில்லை. அப்படியே தேவன், மனிதன் முதலிய உடம்புகளில் ஆத்மாக்கள் இருந்தபோதிலும், தேவன், மனிதன் முதலான வேற்றுமைகள் ஆத்மாக்களுக்குஇல்லை. அவைகளுக்கு அந்த உடம்பிலிருப்புமாத்திரம்தான்.

2. உடம்புகளிலிருக்கும்வேற்றுமைகள் ஆத்மக்களில்இல்லையென்பது மாத்திரம் அல்ல. ஆத்மாக்களுடைய ஸ்வரூபத்திலும் ஒன்றுக்கு ஒன்று வேற்றுமையில்லை. அதாவது-எல்லாம் ஒரேமாதிரி. பசுமாடுகளுக்கு அனேக வர்ணங்களிருந்தபோதிலும், பால் வெளுப்பு என்பதால், ஒரேமாதிரியாயிருக்கிறது. அதுபோல எல்லா ஆத்மாக்களும் அறிவுள்ளவை என்பதால் ஒரேமாதிரி.

3. இது 2-வது அத், 17-வது சுலோகத்தில் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

4. வெளுப்பான சங்கை மஞ்சள் என்று நினைப்பதுபோல், இது தப்பான எண்ணம். இப்படி ஆத்மாவை நினைக்கிறவன் அதை உண்மையாக அறியவில்லை.

ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தி²தமீஶ்வரம் ।
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் க³திம் ॥ ௨௮ ॥

ஸர்வத்ர–தே³வாதி³ஶரீரேஷு தத்³த்⁴ருதிஶேஷித்வாதா⁴ரதயா நியந்த்ருதயா ச ஸமவஸ்தி²தமீஶ்வரம் ஆத்மாநம் தே³வாதி³விஷமாகாரவியுக்தம் ஜ்ஞாநைகாகாரதயா ஸமம் பஶ்யந்நாத்மநாத்மாநம் ந ஹிநஸ்தி–ரக்ஷதி ஸம்ஸாராந்மோசயதி । ததஃ–தஸ்மாஜ்ஜ்ஞாத்ருதயா ஸர்வத்ர ஸமாநாகாரத³ர்ஶநாத் பராம் க³திம் யாதி । க³ம்யத இதி க³திஃ, பரம் க³ந்தவ்யம் யதா²வத³வஸ்தி²தாத்மாநம் ப்ராப்நோதி । தே³வாத்³யாகாரவைஷம்யத்ருக்ததயா ஸர்வத்ர விஷமாத்மாநம் பஶ்யந் ஆத்மாநம் ஹிநஸ்தி ப⁴வஜலதௌ⁴ ப்ரக்ஷிபதி ॥ ॥ ௨௮ ॥

அவ—கீழ்ச் சொன்னதற்குக் காரணம் சொல்லுகிறார்—

தேவன் முதலான எல்லா உடம்புகளிலும் அவைகளுக்கு யஜமானர்களாகவும், அவைகளைத் தூக்குகிறவர்களாகவும், ஏவுகிறவர்களாகவும் ஜீவாத்மாக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவன் முதலான உடம்புகளின் வேற்றுமைகள் இல்லை என்றும், அவர்களெல்லாரும் அறிவுள்ளவர்கள் என்பதால், ஒரேமாதிரி என்றும் அறிகிறவன் தன்னுடைய மனதினால் தன்னைக் காப்பாற்றுகிறான். அதாவது—ஆத்மாவுக்கு ஸம்ஸாரத்தைப் போக்குகிறான். எல்லாவுடம்புகளிலுமிருக்கும் எல்லா ஆத்மாக்களும், அறிவுள்ளவைகள் என்பதால், ஒரேமாதிரி என்றுபார்ப்பதினாலே, உயர்ந்த பதவியை அடைகிறான். அதாவது-ஆத்மாவை உள்ளபடி அறிகிறான். ஆத்மாக்களை உடம்புகளாகவே பார்க்கிறவன் தன்னை ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தின் நடுவில் தள்ளிக் கொள்ளுகிறான். [28]

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶஃ ।
யஃ பஶ்யதி ததா²த்மாநமகர்த்தாரம் ஸ பஶ்யதி ॥ ௨௯ ॥

ஸர்வாணி கர்மாணி காயிகாரணக க்ருதிவைஷம்யதஃ ப்ரக்ருதிரூபதயா ஆத்மந ப்ரக்ருத்யா க்ரிய மாணாநீதி யஃ பஶ்யதி, ததா²த்மாநம் ஜ்ஞாநாகாரமகர்த்

ரம் ச ய: பஶ்யதி| தஸ்ய ப்ரக்ருதிஸம்யோகஸ்தூதயிஷ்டாநம் தஜ்ஜந்ய ஸுகது:காநுபவஶ்ச கர்மக்ருதோ ந ஜ்ஞாநக்ருத இதி ச ய: பஶ்யதி| ஸ ஆத்மாநம் யதாவஸ்திதம் பஶ்யதி|| ||29||

எவன் எல்லா வேலைகளும் உடம்பினால் செய்யப்படுகின்றனவென்றும், 1 அப்படியே அறிவையே இயற்கையாக உடையதான ஆத்மா அவைகளைச் செய்யவில்லையென்றும் பார்க்கிறானோ, அவன் ஆத்மாவை உள்ளபடி பார்க்கிறான். அதாவது—இப்போது ஆத்மாக்கள் பல வேலைகளைச் செய்கிறார்கள். அறிவையே இயற்கையாகவுடைய ஜீவன்களுக்கு இந்த வேலைகள் பிரகிருதியுடன் சேர்க்கையால் வருகின்றன. 2ஸ்வபாவத்தால் கிடையாது. ஆத்மாக்களுக்குப் பிரகிருதியுடன் சேர்க்கையும், உடம்பு முதலானவைகளை ஏவுகிறதும், அதினால் வரும் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதும் கர்மத்தினால் ஏற்படுகின்றன. இப்படி அறிகிறவன் ஆத்மாவை உள்ளபடி அறிகிறான். [29]

யதா பூதப்ருதக்பாவமேகஸ்தமநுபஶ்யதி |
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ||30||

ப்ரக்ருதிபுருஷதத்த்வத்வயாத்மகேஷு தேவாதிஷு ஸர்வேஷு பூதேஷு ஸ்திதம் தேவத்வமநுஷ்யத்வ ஹ்ரஸ்வதீர்க்கத்வாதிவிவிதாகாரம் ப்ருதக்பாவமேகஸ்தம் ப்ரக்ருதிஸ்தம் யதா பஶ்யதி - நாத்மஸ்தம்| தத ஏவ - ப்ரக்ருதித ஏவ உத்தரோத்தரபுத்ரபௌத்ராதிவிஸ்தாரம் ச யதா பஶ்யதி ததைவ ப்ரஹ்ம ஸம்பத்யதே - அநவச்சிந்நம் ஜ்ஞாநைகாகாரம் ஆத்மாநம் ப்ராப்நோதீத்யர்த்த: || ||30||

பிரகிருதி, ஜீவன் என்கிற இரண்டும், எள்ளும் எண்ணெயும் போல், ஒன்றோடொன்று சேர்ந்து உண்டான—தேவன் முதலா

---

1. வேலைகளைச் செய்வதை ஆத்மாவை அறிந்தவனும், அதை அறியாதவனும் பார்க்கிறார்கள். ஆத்மாவை அறிந்தவன் அவைகளை உடம்பு செய்கிறதென்று பார்க்கிறான்.

2. ஜீவனுக்கு இரண்டு இருப்புகள் இருக்கின்றன. (1) கர்மமுள்ளவனாயிருப்பது. (2) கர்மம் அடியோடு போன இருப்பு. இந்த இரண்டாவது இருப்பிலே இந்த வேலைகளைச் செய்கிறதில்லை.

ன்—எல்லாப் பிராணிகளிலும், தேவன்—மனிதன், நீளம்-குட்டை இவை முதலான வேற்றுமைகள் இரண்டில் ஒன்றான உடம்பிலிருக்கின்றனஎன்றும், ஆத்மாவில் இல்லை யென்றும், பிள்ளை, பேரன் முதலான ஸம்ஸாரத்தின் விரிவுகள் அந்த பிரகிருதியினாலேதான் உண்டாகின்றன என்றும் எவன் எப்போது அறிகிறானோ, அப்போதே பிரும்மத்தை அடைந்து விட்டான் அதாவது—அளவில்லாத அறிவுள்ளவனாக ஆகிறான். [30]

𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌯𑌮𑌵𑍍𑌯𑌯𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥௩௧॥

𑌅𑌯𑌂-𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌷𑍍𑌯 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌃, 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍-𑌅𑌨𑌾𑌰𑌬𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃-𑌵𑍍𑌯𑌯𑌰𑌹𑌿𑌤𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍-𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇-𑌦𑍇𑌹𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍈𑌰𑍍𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௩௧॥

உடம்பைக் காட்டிலும் வேறான தன்மையுடையவனென்று தீர்மானிக்கப்பட்ட இந்த ஜீவன், உடம்பில் இருந்தாலும், உடம்பு போல் உண்டாகாதபடியால், 1 அழிவில்லாதவன். அந்த ஜீவன் ஸத்துவம் முதலான குணங்களில்லாதபடியால், உடம்புடன்சேராதிருந்தால், இப்போதுசெய்யும் வேலைகளைச் செய்ய மாட்டான் வளர்வது, அழிவது முதலான உடம்பினுடைய குணங்களும் அவனுக்கு2வருவதில்லை. அதாவது—ஒருவன்ஓடும்போது, உடம்பு வேர்க்கிறது. அந்த வேர்வைஉடம்பிலிருக்கிறது; ஆத்மாவுக்கில்லை. [31]

---

1. உலகத்தில் எது உண்டாகிறதோ, அதற்கு அழிவை எல்லாரும் பார்க்கிறோம். உண்டாகாமையால், அழிவில்லை.

2. சேற்றில் விழுந்த துணியில் சேறு ஒட்டிக்கொள்ளுகிறது. அது போல், உடம்பிலிருக்கும் ஆத்மாவுக்கு அதினுடைய ஸ்வபாவங்கள் வருமோவென்றால், வருகிறதில்லையென்று கருத்து.

ஒரு வெள்ளைத்துணியை சற்று நேரம் நம் உடம்பில் போட்டுக் கொண்டால், அந்த துணி கருத்துப்போகிறது. அதுபோல் ஆத்மா நெடு நாளாக உடம்பிலிருந்தபோதிலும், அதற்கு உடம்பின்கருப்பு முதலான மயங்கள் வருவதில்லை.

அவ — யத்யபி நிர்குணத்வாந்ந கரோதி, நித்யஸம்பந்ததேஹஸ்வபாவை: கதம் ந லிப்யத இத்யத்ராஹ —

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாதாகாஶம் நோபலிப்யதே।
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாzzத்மா நோபலிப்யதே॥ ||௩௨||

யதா ஆகாஶம் ஸர்வகதமபி ஸர்வவஸ்துபிஸ்ஸம்யுக்தமபி ஸௌக்ஷ்ம்யாத் வஸ்துஸ்வபாவைர்ந லிப்யதே, ததாzzத்மாzபி ஸௌக்ஷ்ம்யாத் ஸர்வத்ர தேவமநுஷ்யாதௌ தேஹேzவஸ்திதோzபி தத்தத்தேஹஸ்வபாவைர்ந லிப்யதே॥௩௨॥

அவ — ஸத்துவம் முதலான குணங்களில்லாததினால், ஆத்மா வேலை செய்யாமலிருக்கலாம். எப்பொழுதும் உடம்புடன் சேர்ந்திருக்கிறவனுக்கு உடம்பின் அழுக்கு முதலானவைகள் 1 ஏன் வரவில்லை என்றால், சொல்லுகிறார் —

ஆகாசமென்பது எல்லாவஸ்துக்களுடனும் சேர்ந்திருந்தாலும், அதில் ஒருவஸ்துவினுடைய ஸ்வபாவமும் சேருகிறதில்லை. நெருப்பின்சூடு, தண்ணீரின் குளுமை இவை முதலானவைகள் ஒன்றும் சேருவதில்லை. ஏனென்றால், அது மிகவும் ஸூக்ஷ்மமாக இருக்கிறது, அதாவது மெல்லிசாக இருக்கிறது. 2 அதுபோல் ஜீவாத்மாவும் ஆகாசத்தைக்காட்டிலும் மெல்லிசாக இருப்பதால், எல்லா உடம்

---

1. ஒட்டிக்கொள்ளுகிற ஸ்வபாவமுள்ள சேறு காலில் ஒட்டிக்கொள்ளுகிறதே. அதுபோல உடம்பிலிருப்பது ஏன் ஆத்மாவில் ஒட்டுவதில்லை. உப்பளத்தில் விழுந்த ஒரு குச்சியானது உப்பாய்ப் போய்விடுகிறது. அதுபோல் உடம்புடன் எப்பொழுதும் சேர்ந்திருக்கிற ஆத்மாவுக்கு உடம்பின் ஸ்வபாவங்கள் ஏன் வருவதில்லை.

2. வெய்யில் எல்லா வஸ்துக்களிலும் படுகிறதே. அந்த வஸ்துக்களுடைய ஸ்வபாவம் வெய்யிலுக்கு என்ன வருகிறது. ஒன்றும் வரவில்லை. எல்லாவஸ்துக்களிலும் ஒட்டுகிற ஜலம் தாமரை இலையின் மேல் பக்கத்தில் ஒட்டுகிறதில்லை. ஆகாசத்திற்கு இன்னொருவஸ்துவின் ஸ்வபாவம் வருவதாக இருந்தால், உலகத்திலிருக்கும் வெவ்வேறுவிதமான எல்லாவஸ்துக்களின் ஸ்வபாவங்களும் வரவேணுமே.

புகளுடனும்சேர்ந்திருந்தாலும் அவைகளின் ஸ்வபாவம் அதற்கு வருகிறதில்லை 1 [32]

யதா ப்ரகாஶயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: ।
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத ॥௩௩॥

யதைக ஆதித்ய: ஸ்வயா ப்ரபயா க்ருத்ஸ்நமிமம் லோகம் ப்ரகாஶயதி, ததா க்ஷேத்ரமபி க்ஷேத்ரீ இதம் க்ஷேத்ரமிதி க்ருத்ஸ்நம் - பஹிரந்தஶ்சாபாதமஸ்தகம் ஸ்வகீயேந ஜ்ஞாநேந ப்ரகாஶயதி । அத: ப்ரகாஶ்யாத் லோகாத் ப்ரகாஶகாதித்யவத், வேதித்ருவேதந வேத்யத்வதாரூபாத் க்ஷேத்ராதத்யந்தவிலக்ஷணோऽயமாத்மேத்யர்த்த:॥ ॥௩௩॥

அ—இந்த அத்தியாயத்தில் முதல் சுலோகத்தில் "ஆத்மா அறிகிறது, உடம்பு அறியப்படுகிறது, அதனால் இவையிரண்டும் வேறு" என்று காட்டப்பட்டது இங்கு அதிகமாகவொன்று சொல்லுகிறார் ஒரே உடம்பு அநேக வஸ்துக்களின் சேர்க்கையாயிருப்பதாலே, பலவாக இருக்கிறது அதாவது—தோல், நரம்பு, எலும்பு, மாம்ஸம்—இவை முதலியவைகளாக இருக்கிறது ஆத்மா அவயவமில்லாத ஒரே வஸ்துவாக இருக்கிறது இதனாலும் உடம்பும் ஆத்மாவும் வேறு என்று சொல்லப்பட்டது இரண்டுவிதமான வேற்றுமைகளையும் உதாரணத்தைக்காட்டி, உறுதிப்படுத்துகிறார்—

---

1. 27-வது சுலோகம் முதல் ஆறு சுலோகங்களாலே ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லப்பட்ட ஸங்கதிகள் என்னவென்றால், (1) ஆத்மாக்களின் ஸ்வரூபங்களில், உடம்புகளில்போல, வேற்றுமைகிடையாது. அவைகள் ஒரேமாதிரி, நெருப்புப்பொறிகள்போல. கருப்பு, சிகப்பு, வெளுப்பு முதலான பசுக்களின் பால்போல (2) உடம்புகளைப்போல அவைகளுக்கு அழிவில்லை (3) உடம்புடன் சேராத ஆத்மஸ்வரூபம் ஸம்ஸாரவேலையொன்றையும் செய்கிறதில்லை. (4) ஆத்மாக்களுக்கு ஸ்வரூபத்தில், உடம்புகளுக்குப்போல, குழந்தைத்தனம், யௌவனம், கிழத்தனம் இவை முதலிய மாறுபாடு, (பரிணாமம்) இல்லை (5) உடம்புடன் சேர்ந்திருந்தபோதிலும், அவைகளின் ஸ்வபாவங்கள் ஆத்மாக்களில் ஒட்டுகிறதில்லை. 2-வது ஸங்கதிக்குக்காரணம்—ஆத்மாவுக்கு உண்டாவதில்லாமை, 3-வது

ஒரே ஸூரியன் தன்னுடைய 1 வெளிச்சத்தாலே எங்கும் பரவி, எல்லா வஸ்துக்களையும் காட்டுகிறான். அதுபோல் உடம்பி லிருக்கிற ஆத்மா. உடம்பை, உள்ளும் 2 வெளியும், கால் முதல் 3 தலைவரையில், தன் அறிவினால் பரவி, இது என்னுடைய உடம்பு, இப்படிப்பட்டதென்று காட்டுகிறது. ஆகையால் காட்டப்படுகிற உலகத்தைக் காட்டிலும், காட்டுகிற ஸூரியன் வேறாயிருப்பது போல், காட்டப்படுகிற உடம்பைக்காட்டிலும் காட்டுகிற ஆத்மா மிகவும் வேறு. உடம்பு மாதிரியோ என்று துளிக்கூட நினைக்கக் கூடாது. [33]

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா |
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ||

ஓம் தத்ஸதிதி ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுநஸம்வாதே க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞவிபாகயோகோ நாம த்ரயோதசோऽத்யாய: ||

ஏவம்-உக்தேந ப்ரகாரேண க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரந்தரம்-விசேஷம் விவேகவிஷயஜ்ஞாநாக்யேந சக்ஷுஷா, யே

---

ச்குக் காரணம்—ஸத்துவம் முதலான குணங்கள் அவைகளில் இல்லாமை. 5-வதுக்குக்காரணம்—அவைகள் மிகவும் மெல்லியதாயிருப்பது.

1. ஜீவனுடைய ஸ்வரூபமும் அறிவு, அவனுடைய குணமும் அறிவு, அதாவது ஜீவன் அறிவாயும், அறிவுள்ளவனாயும் இருக்கிறான். அவனுடைய குணமும் அறிவு என்பதால், ஒரே ஜாதியானபோதிலும், எப்படி ஸூரியனும், அவனுடைய வெளிச்சமும் தேஜஸ்ஸு என்பதால், ஒரே மாதிரியாயிருந்தாலும், ஸூரியனைக்காட்டிலும் அவன் வெளிச்சம் வேறோ, அப்படியே ஆத்மஸ்வரூபத்தைக்காட்டிலும் அவனுடைய அறிவு என்கிற குணம் வேறு என்று உதாரணத்தாலே காட்டப்படுகிறது.

2. உள்ளும்-மாம்ஸம் முதலானவைகள். வெளியும்-தோல் முதலியவைகள்.

3. இது சுலோகத்திலிருக்கிற "கிருத்ஸ்நம்" (எல்லாம்) என்ற சொல்லின் பொருள். இந்தச் சொல்லை சுலோகத்தில் சொன்னதற்குக் கருத்து-உடம்பு ஒன்றாயிருந்தபோதிலும், அதில் அநேக அவயவங்கள் இருப்பதினாலே, அது ஆத்மாவைக்காட்டிலும் வேறு என்றும், உடம்புக் கும் அதின் அவயவங்களில்ஒன்றுக்கும் அறிகிறதன்மையில்லையென்றும்.

விது:, பூதப்ரக்ருதிமோக்ஷம் ச தே பரம் யாந்தி-நிர்முக்த
பந்தாத்மாநம் ப்ராப்நுவந்தி| மோக்ஷ்யதே அநேநேதி மோக்ஷ:|
அமாநித்வாதிகமுக்தம் மோக்ஷஸாதநமித்யர்த:| க்ஷேத்ரக்ஷேத்ர
ஜ்ஞயோர்விவேகவிஷயேண ஜ்ஞாநேந சக்ஷுஷா தயோர்விவே
கம் விதித்வா பூதாகாரபரிணதப்ரக்ருதிமோக்ஷோபாயம
மாநித்வாதிகம் ச லப்த்வா யே யாந்தி-தே நிர்முக்தபந்தா:
ஸ்வரூபேணாவஸ்திதம் அநவதிகஜ்ஞாநம் ஆத்மாநம் ப்ரா
ப்நுவந்தீத்யர்த:||

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீகீதாபாஷ்யே
த்ரயோதசோऽத்யாய:.

---

கீழ்ச்சொன்னபடி உடம்புக்கும், ஆத்மாவுக்கும் இருக்கும் வித்தியாஸத்தை—இது வேறு, அது வேறு என்று பிரித்துக்காட்டக்கூடிய யோஜனை என்கிற கண்ணால் எவர்கள் அறிகிறார்களோ; இந்த ஆத்மாவுக்கு உடம்புடன் சேர்க்கை அடியோடு போவதற்கு உதவி 7-வது சுலோகம் முதல் சொன்ன குணங்கள் என்றும் அறிகிறார்களோ—அவர்கள் கர்மத்தினால் உண்டான கட்டு நீங்கி, உள்ளபடி ஆத்மஸ்வரூபத்தை அடைகிறார்கள். அதாவது-கர்மத்தைப் போக்கி, அளவில்லாத அறிவை அடைகிறார்கள்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

---

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌵—𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯, 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑍈𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌮𑍁𑌚𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌮𑌯𑌸𑍁𑌖𑌾𑌦𑌿𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌚𑌾𑌵𑌾𑌦𑌿—“𑌕𑌾𑌰𑌣𑌂 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌯 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁” 𑌇𑌤𑌿 । 𑌅𑌥𑍇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁𑌤𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍋 𑌗𑍁𑌣𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌶𑍍𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌪𑌰𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌰𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌿𑌤𑍋 𑌗𑌤𑌾𑌃 ॥௧॥

𑌪𑌰𑌂 - 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌮𑍇𑌵 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌤𑌚𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 । 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑍁𑌨𑌯𑌃-𑌤𑌨𑍍𑌮𑌨𑌨𑌶𑍀𑌲𑌾𑌃 𑌇𑌤𑌃-𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌃 ॥ ॥௧॥

அவ—பதிமூன்றாவது அத்தியாயத்தில்—ஒன்றோடொன்று சேர்ந்த பிரகிருதி, ஜீவன்—இவைகளுடைய ஸ்வரூபங்கள் வெவ்வேறென்று உள்ளபடி அறிந்து, அதின் 7-வது சுலோகம் முதல் சொன்ன குணங்களாலே ஸம்ஸாரம் போகிறதென்றும், ஆனால் அந்த குணங்கள் மாத்திரம் போதாது; அவைகளுடன் பகவானிடத்தில் பக்தியும் வேணும், பக்திதான் முக்கியம் என்றும், இந்த ஜீவனுக்குப் பந்தம் (பிரகிருதியுடன் சேர்க்கை) வரிசையாய் வந்த ஸத்துவம் முதலான குணங்களாலே உண்டான ஸுகத்தில்ஆசையாலே யென்றும்சொல்லப்பட்டது. இப்போது ஸத்துவம் முதலான குணங்களால் பந்தம் உண்டாகிற விதத்தையும், குணங்களைப் போக்கும் வழியையும் பகவான் சொல்லுகிறார்—

பிரகிருதி. ஜீவன்—இவைகளைப்பற்றியே [1] முன் சொன்ன

1 முன் அத்தியாயங்களில் ஸத்துவம் முதலான குணங்கள் ஸம்ஸாரத்துக்குக் காரணமென்று அந்தந்த இடங்களில் சொல்லப்பட்டது. அதையே இங்கே விரிவாய்ச் சொல்லப்போகிறார்.

தைக் காட்டிலும் வேறாயும், ஸத்துவம் முதலான குணங்களைப்பற்றியும் இன்னமும் சொல்லுகிறேன். இந்த ஸங்கதியின் அறிவு பிரகிருதி, ஜீவனைப் பற்றின அறிவுகளுக்குள் மிகவும் உயர்ந்தது. எல்லா ருஷிகளும் இந்த ஸங்கதியை அறிந்து, அதையே எப்பொழுதும் நினைத்து, இந்த ஸம்ஸாரத்தைப் போக்கி, உயர்ந்த லோகத்தை அடைந்தார்கள். [1]

அத—வக்ஷ்யமாணம் ஜ்ஞாநம் ஃபலேந விஶிநஷ்டி—

இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ।
ஸர்கே(அ)பி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ॥௨॥

இதம்-வக்ஷ்யமாணம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:-மம ஸாம்யம் ப்ராப்தா: । ஸர்கே(அ)பி நோபஜாயந்தே-ந ஸ்ருஜிகர்மதாம் பஜந்தே । ப்ரலயே ந வ்யதந்தி-ந ஸம்ஹ்ருதிகர்மதாம் ॥ ॥௨॥

அவ—மறுபடியும் அந்த அறிவு உயர்ந்த பிரயோஜனத்தைக் கொடுக்கும் என்று ஸ்தோத்திரம் பண்ணுகிறார்—

நான் சொல்லப்போகிற ஸங்கதியை அறிகிறவர்கள் என்னைப் போலவே ஆய்விடுவார்கள். அவர்கள் மறுபடியும் பிறக்கிறதில்லை. பிரளய காலத்தில் வரும் 1 தொந்தரவையும் அடைகிறதில்லை. [2]

அத—அத ப்ராக்ருதாநாம் குணாநாம் பந்தஹேதுதா ப்ரகாரம் வக்தும், ஸர்வஸ்ய ஜகத: ப்ரக்ருதிபுருஷஸம்ஸர்கஜத்வம் "யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித்" இத்யத்ரோக்தம் ஸர்வதா ஸ்வேநைவ க்ருதமித்யாஹ—

மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந் கர்பம் ததாம்யஹம் ।
ஸம்பவஸ்ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத ॥௩॥

க்ருத்ஸ்நஸ்ய ஜகதோ யோநிபூதம் மம மஹத்ப்ரஹ்ம யத், தஸ்மிந் கர்பம் ததாம்யஹம் "பூமிராபோ(அ)நலோ வாயு:

1. அந்தத் தொந்தரவாவது—பிரளய காலத்தில் ஜீவன்கள் இந்திரியங்கள் இல்லாமையால், அறிவில்லாதவர்கள் போலிருக்கிறார்கள். அந்த தொந்தரவுமில்லை.

கம் மநோ புத்திரேவ ச| அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா| அபரேய''மிதி நிர்திஷ்டாऽசேதநப்ரக்ருதிர்மஹதஹங்காராதிவிகாராணாம் காரணதயா மஹத்ப்ரஹ்மேத்யுச்யதே| ச்ருதாவபி க்வசித்ப்ரக்ருதிரபி ப்ரஹ்மேதி நிர்திச்யதே ''யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்யஸ்ய ஜ்ஞாநமயம் தப:| தஸ்மாதேதத்ப்ரஹ்ம நாமரூபமந்நம் ச ஜாயதே'' இதி| ''இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்| ஜீவபூதா'' இதி சேதநபுஞ்ஜரூபா யா பரா ப்ரக்ருதிர்நிர்திஷ்டா, ஸா இஹ ஸர்வப்ராணிபீஜதயா கர்பசப்தேநோச்யதே| தஸ்மிந்நசேதநே யோநிபூதே மஹதி ப்ரஹ்மணி சேதநபுஞ்ஜரூபம் கர்பம் ததாமி| அசேதநப்ரக்ருத்யா போகக்ஷேத்ரபூதயா போக்த்ருவர்கபுஞ்ஜபூதாம் சேதநப்ரக்ருதிம் ஸம்யோஜயாமீத்யர்த:| தத: தஸ்மாத்ப்ரக்ருதித்வயஸம்யோகாந்மத்ஸங்கல்பக்ருதாத்ஸர்வபூதாநாம் ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தாநாம் ஸம்பவோ பவதி ||

*அவ—உலகத்தில் எல்லாப் பிராணிகளும் பிரகிருதி, ஜீவன்-இவைகளுடைய சேர்க்கையாலேதான் உண்டாகின்றனவென்று கீழ் 13 வது அத்தியாயத்தில் 26-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டது. அந்தச் சேர்க்கையைப் பகவானுன நான் தானே உண்டு பண்ணுகிறேன் என்று சொல்லுகிறார். எதற்காகவென்றால்—பிரகிருதியினுடைய ஸத்துவம் முதலான குணங்களால் பந்தம் உண்டாகும் வழியைச் சொல்லுவதற்காக.*

*எல்லா உலகங்களையும் உண்டுபண்ணுகிறது என்னுடையதான பிரகிருதியென்கிறவஸ்து; அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன். அதாவது—பெண்களுடைய கர்ப்பப்பையில் ஆண்கள் கர்ப்பத்தை வைப்பதுபோல், எல்லாப் பிராணிகளுக்கும் விதை போன்ற ஜீவன்களைப் பிரகிருதியில் சேர்க்கிறேன். ஒரு பூமியில் விதையைப் போடுவதுபோல். அந்தப் பிரகிருதியில் ஜீவன்களைச் சேர்க்கிறேன். ஜீவன்கள் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்கு இடமான பிரகிருதியோடே அநுபவிக்கிற ஜீவன்களைச் சேர்க்கிறேன் என்னுடைய நினைவினால் இப்படிச் சேர்க்கப்பட்ட என்*

னுடையதான 1 இரண்டு பிரகிருதிகளிலிருந்துபிரும்மா என்பவர் முதல் சின்னப் புல் வரையிலுள்ள எல்லாப்பிராணிகளும் உண்டாகின்றன. [3]

𑌅𑌥—𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑍋 𑌮𑌦𑌾𑌯𑌤𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹—

𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌃 ।
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾 ॥௪॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌪𑌶𑍁𑌮𑍃𑌗𑌪𑌕𑍍𑌷𑌿𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍋 𑌯𑌾𑌃 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇; 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌃—𑌕𑌾𑌰𑌣𑌂—𑌮𑌯𑌾 𑌸𑌂𑌯𑍋𑌜𑌿𑌤𑌚𑍇𑌤𑌨𑌵𑌰𑍍𑌗𑌾 𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌕𑌾𑌰𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌅𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾—𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌚𑍇𑌤𑌨𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑍋𑌜𑌕𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௪॥

அத—2காரியம் (செய்யப்பட்டது) என்று சொல்லப்படுகிற—ஜீவன், உடம்பு என்கிறவைகளின் சேர்க்கையையும் நான் தான் உண்டு பண்ணுகிறேன் என்று சொல்லுகிறார்—

---

1. அதாவது—பிரகிருதி, ஜீவன். பிரகிருதியென்பது தாழ்ந்த பிரகிருதி; ஜீவன் உயர்ந்த பிரகிருதி. இவையிரண்டையும் பகவானுடைய பிரகிருதியென்று சொல்லுகிறது.

2. பிரகிருதி, ஜீவன் இவைகளுடைய சேர்க்கை இருவிதம். பிரளயகாலத்தில்அறிவில்லாத பிரகிருதி என்று ஒன்றுதான் இருக்கிறது. ஸ்ருஷ்டிகாலத்தில் அந்த ஒரு வஸ்துவைப் பகவான் தன் நினைவினாலே ஒன்றிலிருந்து ஒன்றாக 23 வஸ்துக்களாகப் பண்ணுகிறார். பண்ணி, அவைகளை ஒன்றோடொன்று சேர்த்து, பிரும்மாண்டம் என்று ஒரு இடத்தையும் செய்து, ஒன்றோடொன்று சேர்த்துப் பண்ணப்பட்ட பிரும்மாவென்கிற உடம்பில் ஒரு ஜீவனைச் சேர்த்தார். அந்தப் பிரும்மாவைக்கொண்டு 14 லோகங்கள் அடங்கிய பிரும்மாண்டத்திலிருக்கும் தேவன், மனிதன், ஆடுமாடு-புல் பூண்டு என்று நான்குபிரிவுள்ள எல்லா வஸ்துக்களையும் உண்டுபண்ணினார். இதற்குக் காரியாவஸ்தை (ஸ்ருஷ்டி) என்று பெயர். இதுகீழ 3-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது.

தேவன், கந்தர்வன், யக்ஷன், ராக்ஷஸன், மனிதன், ஆடு மாடு முதலானவைகள், பக்ஷிகள், பாம்புகள்—இவை முதலான எல்லாவற்றிலுமிருந்து அந்தந்த பிராணிகள் உண்டாகின்றனவே அவைகளுக்கு அறிவுள்ள ஜீவன்களோடே என்னால் சேர்க்கப் பட்ட—மஹத் முதலாய் ஐந்து பூதங்கள் வரையில் மாறின—பிர கிருதிதான் காரணம். அவரவர்கள் கர்மத்துக்குத் தகுந்தபடி அந்தந்தஜீவன்களை அந்தந்த உடம்புகளில் நான்தான் சேர்க்கிறேன்.

அத — ஏவம் ஸம்ஸ்ருஷ்டஸ்ய ப்ரக்ருதிபுருஷஸம்ஸர்க்கேண தேவாதியோநிஷு ஜாதானாம் பந்தஹேதுப்ரகாரமாஹ —

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா: |
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம் || ||௫||

ஸத்த்வரஜஸ்தமாம்ஸி த்ரயோ குணா: ப்ரக்ருதே: ஸ்வரூபாநுபந்திந: ஸ்வபாவவிசேஷா: ப்ரகாசாதிகார்யைகநிரூபணீயா: | ப்ரக்ருத்யவஸ்தாயாமநுத்பூதா: ததிகாரேஷு மஹதாதிஷூத்பூதா: — மஹதாதிவிசேஷாந்தாரப்த தேவமநுஷ்யாதி தேஹஸம்பந்திநம் தேஹிநமவ்யயம் ஸ்

இப்போது நாள்தோறும் கீழ்ச்சொன்ன நான்குபிரிவுள்ள வஸ்துக்களிலிருந்து பிராணிகள் உண்டாகின்றன. இவைகளையும் பகவான் தான் உண்டுபண்ணுகிறார். இதற்கு க்கார்யாவஸ்தை (ஸ்ருஷ்டி) யென்றுபெயர். இது இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. உலகத்தில் ஒருவனுக்கு ஒருபிள்ளையும்,அந்தப்பிள்ளைக்கு ப்பிள்ளையும் பிறக்கின்றன. தகப்பன் பிள்ளையை உண்டுபண்ணினனே ஒழிய, பேரனை உண்டுபண்ணுவதில், தகப்பனுக்கு ஒருவேலையுமில்லை. ஒரு கொல்லையில் முதலில் வாழைக்கன்றுவைக்கப்படுகிறது. அந்தவாழைபெரிதானபிறகு, அதிலிருந்து கன்றுகள் வெடிக்கின்றன.கொல்லைக்காரன் முதல்வாழையைப்போட்டானே ஒழிய, வாழையிலிருந்து கன்றுகள் வெடிப்பதற்கு அவன் பிரயத்தினம் ஒன்றுமில்லை. இந்த இரண்டுபோலல்ல பகவான் உலகத்தை உண்டுபண்ணுவது. பிரகிருதியை உலகமாசப் பண்ணினதும் பகவான்தான். இன்றையதினம் ஒருவனுக்கு ஒருகுழந்தை பிறப்பதும் பகவானல்தான். அவர் நினைக்காவிட்டால், எந்தகாலத்திலும் ஒருவஸ்துவும் உண்டாகாது.

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா: நிபத்நந்தி-
மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம் ‖ ‖௫‖

அவ—முதலில் உலகத்தை உண்டு பண்ணும்போது, அந்தந்த ஜீவன்கள் தங்கள் கர்மத்துக்குத் தகுந்தபடி தேவன் முதலான நாலு விதமாக உண்டானார்கள். அந்த ஜீவன்கள் 1 மறுபடியும் மறுபடியும் அதேமாதிரியாகவோ, வேறு விதமாகவோ, உண்டாவதற்குக் காரணம் சொல்லுகிறார்—

ஸத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்று குணங்கள் பிரகிருதி என்கிற வஸ்துவுக்கே உள்ள 2 குணங்கள். அவைகள் எப்பொழுதும் அதை விட்டுப் பிரியாமல் இருக்கின்றன. அவைகளால் 3 உண்டாகிற சில ஸங்கதிகளைக் கொண்டுதான் அந்த

---

1. நைமித்திகஸிருஷ்டியின் ஆரம்பத்தில் பகவான் ஜீவனை அவனுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி உடம்புடன் சேர்த்ததினாலே, அவனுக்குப் பிறப்பு உண்டாயிற்று. அந்த உடம்பு முடியும்போதே, அந்தக் கர்மமும், அதின் பலனும், அதின் அநுபவத்துக்கு உதவியான உடம்பும் போய்விட்டனவே. ஜீவனோ இயற்கையில் சுத்தன். எப்படி அவனுக்கு மறுபடி பிறப்பு வந்ததென்று கேள்வி.

2. "குணங்கள்" என்ற சொல்லாலே—ஸாங்கியன் சொல்லுகிறபடி, ஸத்துவம் முதலானவைகள் திரவியம் அன்று என்று காட்டப்படுகிறது.

3. சப்தம், ரூபம் முதலான குணங்களைப்போல், ஸத்துவம் முதலானவைகளைக் கண் முதலான இந்திரியங்களாலே ஒருக்காலும் அறிய முடியாது. ஆனபோதிலும் நமக்கு உண்டாகும் சில ஸங்கதிகளை நாம் அறிகிறோம். அவைகளுக்குக் காரணங்கள் இருக்கவேண்டுமென்று பொதுவாய்த் தீர்மானித்து, அவைகளுக்குக்காரணங்கள் ஸத்துவம் முதலான குணங்களென்று சாஸ்திரத்தாலே அறிகிறோம். விஷத்தினுடையவும், மருந்தினுடையவும் சக்திகண்ணுக்குத் தெரியாதபோதிலும், அதைத் தெரிந்தவன் சொல்லுவதைக்கேட்டு, மருந்தைச் சாப்பிடலாம்; விஷத்தைச் சாப்பிடக்கூடாது என்று முடிவுபண்ணுகிறோம். அப்படியே ஸத்துவம் முதலானவைகள் செய்யும் வேலைகளைக்கேட்டு, ஸத்துவத்தை வளர்க்கவேண்டும் என்றும், மற்றவைகளை விலக்கவேண்டுமென்றும் அறிகிறோம்.

குணங்கள் இருக்கின்றன என்று 1 அறியலாம். அந்த குணங்களைப் பிரகிருதியாயிருக்கிற காலத்தில் 2 அறிய முடியாது. அந்தப்பிரகிருதி மஹத் முதலான வஸ்துக்களாக ஆகிறபோது தான் அவைகளை அறியலாம். அந்த குணங்கள் உடம்பாக ஆன பிரகிருதியுடன் சேர்ந்த ஜீவனை, அந்த உடம்பில் இருப்பதாலே, கட்டுப்படுத்துகின்றன. அந்த ஜீவன் இயற்கையில் 3 குணங்களுடன் சேர்க்கைக்குத் தகாதவன். [5]

அத—ஸத்த்வரஜஸ்தமஸாம் ஸ்வரூபம் பந்தப்ரகாரம் சாஹ—

தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகமநாமயம் |
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக ||௬||

தத்ர-ஸத்த்வரஜஸ்தமஸ்ஸு ஸத்த்வஸ்ய ஸ்வரூபமீத்ருசம்-நிர்மலத்வாத் ப்ரகாசகம்- ப்ரகாசஸுகாவரணஸ்வபாவரஹிததா நிர்மலத்வம்| ப்ரகாசஸுகஜநநைகாந்தஸ்வபாவதயா ப்ரகாசஸுகஹேதுரித்யர்த:। ப்ரகாசோ வஸ்துயாதாத்ம்யாவபோத:। அநாமயம்-ஆமயாக்யகார்யம் ந வித்யத இத்யநாமயம் | அரோகதாஹேதுரித்யர்த: | ஏதத் ஸத்த்வம் வ்யாபாரேண தேஹிநமேநம் ஸுகஸங்கேந ஜ்ஞாநஸங்கேந ச பத்நாதி | ஸாமாந்யஸ்ய ஸுகஸங்கம் ஜ்ஞாநஸங்கம் ச ஜநயதீத்யர்த:| ஜ்ஞாநஸுகயோஸ்ஸங்கே ஹி ஜாதே, தத்ஸாதநேஷு லௌகிகவைதிகேஷு ப்ரவர்த்ததே | ததஸ்ச தத்ஸாதநாநுஷ்டாநஸம்பவாநுரூபாஸு யோநிஷு ஜாயதஇதி

1. ஒருவனுக்கு கண் என்கிற இந்திரியம் இருக்கிறதென்பதை, ஒன்றின் பார்வையைக்கொண்டுதான் அறியவேணும். அதுபோல.

2. இந்த குணங்களை அறிவதற்குக் காரணம்—உத்பவம் என்பது. அதாவது—வெளிக்குவருவது. அது பிரகிருதியாய் இருக்கும்போதில்லை. மஹத் முதலாக மாறும்போது உண்டாகிறது. மலர்ந்த பூவிலிருக்கும் வாஸனை மொட்டில் தெரியவில்லை. ஒட்டுமாம்பழத்திலிருக்கும் வாஸனை முதலான குணங்கள்பிஞ்சாயிருக்கும்போது தெரிகிறதில்லை. அதுபோல.

3. இது சுலோகத்தில் "அவ்யயம்" என்கிற சொல்லின் பொருள். இயற்கையில் குணங்களின் சேர்க்கையும்,அதினால் உண்டாகும் அறிவின் குறைவு முதலானவைகளும் ஜீவனுக்கு இல்லை.

ஸத்த்வம் ஸுகஜ்ஞாநஸங்கத்வாரேண புருஷம் பத்நாதி| ஜ்ஞாநஸுகஜநநம் புநரபி தயோராஸங்கஜநநம் ச ஸத்த்வக்ருத்யம் பவதி || ||௬||

*அவ—ஸத்த்வம் முதலான குணங்களின் ஸ்வபாவத்தையும், அவைகள் ஜீவனைக் கட்டுகிற வழியையும் சொல்லுகிறார்—*

*அவை மூன்றில் ஸத்த்வம் என்கிற குணம் உண்மையான அறிவுக்கும், ஸுகத்துக்கும் இடைஞ்சலன்று. ஆகையால் உண்மையான அறிவையும், வியாதியில்லாமல் பண்ணிஸுகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஜீவனுக்கு ஸுகத்திலும், உண்மையான அறிவிலும் ஆசையை உண்டாக்குகிறது. அந்த ஆசையினால் அந்த இரண்டையும் கொடுக்கக்கூடிய-உலகத்தினால் ஏற்பட்டவையோ, சாஸ்திரத்தில் ஏற்பட்டவையோ-வேலைகளைச் செய்கிறான். அந்த வேலைகளின் பலனை அநுபவிப்பதற்காக உடம்பு வருகிறது- அதாவது—பிறக்கிறான். இதேமாதிரியாக அடிக்கடி பிறக்கிறான். இந்த வழியாக ஸத்த்வம் தொந்தரவு படுத்துகிறது*

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் |
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம் ||௭||

ரஜோ ராகாத்மகம்-ராகஹேதுபூதம்| ராக:-யோஷித்புருஷயோரந்யோந்யஸ்ப்ருஹா | த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம்-த்ருஷ்ணாஸங்கயோருத்பவஸ்தாநம் | த்ருஷ்ணாஸங்கஹேதுபூதமித்யர்த்த: | த்ருஷ்ணா-ஶப்தாதிஸர்வவிஷயஸ்ப்ருஹா | ஸங்க: புத்ரமித்ராதிஷு ஸம்பந்திஷு ஸம்ஶ்லேஷஸ்ப்ருஹா | ததா தேஹிநம் கர்மஸு-க்ரியாஸு ஸ்ப்ருஹாஜநநத்வாரேண நிபத்நாதி | க்ரியாஸு ஹி ஸ்ப்ருஹயா யா: க்ரியா ஆரபதே தேஹீ, தாஶ்ச புண்யபாபரூபா இதி தத்பலாநுபவஸாதநபூதாஸு யோநிஷு ஜந்மஹேதவோ பவந்தி | அத: கர்மஸங்கத்வாரேண ரஜோ தேஹிநம் நிபத்நாதி| ததேவம் ரஜோ ராகத்ருஷ்ணாஸங்கஹேது: கர்மஸங்கஹேதுஶ்சேதி த்ருஷ்டம் பவதி || ||௭||

ரஜோகுணம் ஸ்திரீக்குப் புருஷனிடத்திலும், புருஷனுக்கு ஸ்திரீயினிடத்திலும் ஆசையையுண்டுபண்ணுகிறது. சப்தம் முதலிய விஷயங்களில் ஆசையையும், பிள்ளை முதலானவர்களுடன் சேர்ந்திருக்க வேணுமென்கிற ஆசையையும் உண்டு பண்ணுகிறது. நல்ல வஸ்துக்களைப் பார்ப்பதிலும், நல்ல பதார்த்தங்களைச் சாப்பிடுவதிலும், நல்ல வாஸனையுள்ள சந்தனம், புஷ்பம்—இவை முதலியவைகளை அநுபவிப்பதிலும், நல்ல பாட்டுக்களையும், நல்ல பேச்சுக்களையும் கேட்பதிலும் ஆசையை உண்டுபண்ணுகிறது. ஆசையை உண்டு பண்ணி, அதற்குத் தகுந்த 1 வேலைகளில் ஏவுகிறது. புண்ணியமோ, பாபமோ செய்யப்பட்ட அந்த வேலைகளின் பலன்களை அநுபவிப்பதற்காக உடம்புகளுடன் பிறக்கிறான். ரஜஸ்ஸு என்கிற குணம் ஜீவனை இவ்விதமாகத் தொந்தரவு செய்கிறது.

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ॥ ७ ॥

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् । रागः - योषित्पुरुषयोरन्योन्यस्पृहा, तृष्णा - शब्दादिसर्वविषयस्पृहा । सङ्गः - पुत्रमित्रादिषु सम्बन्धिषु संश्लेषस्पृहा । तृष्णासङ्गसमुद्भवं - तृष्णासङ्गयोरुद्भवस्थानं रागात्मकं रजो विद्धि । तत् - तद्रजः कर्मसङ्गद्वारेण देहिनं निबध्नाति । कर्मसङ्गः - क्रियासु स्पृहा । क्रियासु हि स्पृहया देही पुण्यपापरूपाणि कर्माण्यारभते । ततश्च तत्फलानुभवसाधनभूतासु योनिषु जन्म प्राप्य पुनः पुनः कर्मारम्भी भवति । अतो रजः कर्मसङ्गद्वारेण देहिनं निबध्नाति ॥ ॥ ७ ॥

---

1. ஸத்துவகுணம் நல்ல அறிவிலும், ஸுகத்திலும் ஆசையையுண்டுபண்ணி வேலையில் ஏவுகிறது. ரஜோகுணமும் சில வேலைகளில் ஏவுகிறது. இப்படியானால், இரண்டு குணங்களுக்கும் வித்தியாஸம் என்னவென்றால்—பதில். ஸத்துவகுணமுள்ளவன் ஸுகத்தைத் தீர்மானித்துக்கொண்டுதான் ஒரு வேலையைச் செய்வன். ரஜோகுணமுள்ள

தமோகுணம் ஒரு வஸ்துவை மாறி எண்ணுவதினால், அதாவது—ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாக எண்ணுவதினால், எல்லாப் பிராணிகளுக்கும் உண்டாகிறது; அதிகமாகிரி எண்ணத்தை உண்டுபண்ணுகிறது. அது-அவசியம் செய்ய வேண்டிய ஒரு வேலையிருக்கும்போது, அதைக் கவனிக்காமல் இன்னொரு வேலையில் ஏவுகிறது. சோம்பலையும், அதாவது—செய்யவேண்டிய எல்லா வேலைகளிலும் அலுப்பையும், 1 தூக்கத்தையும் உண்டுபண்ணுகிறது. தமோகுணம் இவ்விதம் ஜீவனைத் தொந்தரவு பண்ணுகிறது.

அவ—ஸத்த்வாதீநாம் ப3ந்த4ப்ரகாரேஷு ப்ரதா4நாந்யாஹ —

ஸத்த்வம் ஸுகே2 ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பா4ரத ।
ஜ்ஞாநமாவ்ருத்ய து தம: ப்ரமாதே3 ஸஞ்ஜயத்யுத ॥ ௯ ॥

ஸத்த்வம் ஸுக2ஸங்க3ப்ரதா4நம்। ரஜ: கர்மஸங்க3ப்ரதா4நம்। தமஸ்து வஸ்துயாதா2த்ம்யஜ்ஞாநமாவ்ருத்ய விபரீதஜ்ஞாநஹேதுதயா கர்தவ்யே விபரீதப்ரவ்ருத்திஸங்க3ப்ரதா4நம் ॥ ॥ ௯ ॥

அவ—ஸத்துவம் முதலான குணங்கள் ஜீவனைக் கட்டுப்படுத்தும் வழிகளில் முக்கியமானவைகளைச் சொல்லுகிறார்.—

ஸத்துவகுணத்துக்கு ஸுகத்தில் ஆசையையுண்டுபண்ணுவது முக்கியம். ரஜோகுணத்துக்கு வேலையில் ஆசையையுண்டுபண்ணுவது முக்கியம். தமோ குணத்துக்கு வஸ்துவினுடைய உண்

---

வனுக்கு அந்தந்த வஸ்துக்களும், வேலைகளும்தான் வேண்டியது அதினால் உண்டாகும் ஸுகம் கொஞ்சமா? அதிகமா என்று கவனிக்க மாட்டான். இதை-ராஜாவின் ஸ்திரீயை ஆசைப்படுவது, கெட்டபின் ளையைக் காப்பாற்றுவது, ஒருபலனுமில்லாத உடம்பின்வேலை—இவைகளில் பார்க்கலாம்.

1. தூக்கமாவது—வேலைசெய்வதினால் இந்திரியங்கள் களைத்து, ஓய்ந்திருப்பது. கண்முதலான இந்திரியங்கள் மாத்திரம் ஓயும்போது ஸ்வப்பனம். அப்போது அறிவு உண்டு. மனதும் ஓய்ந்துபோனால், நல்லதூக்கம். அதற்கு “ஸுஷுப்தி” என்று வடமொழியில் பெயர். அப்போது அறிவேயில்லை. தமோகுணமுள்ளவனுக்கு தூக்கம் வேலைசெய்து களைப்பினால் வருவதில்லை; தமோகுணத்தினால்வருகிறது.

மையை மறைத்து, தப்பான நினைவை உண்டு பண்ணுவது ஸ்வபாவமாகையால், ஒருவன் செய்ய வேண்டிய வேலைக்கு விரோதமான வேலையைச்செய்வதில் ஆசையையுண்டு பண்ணுவதுமுக்கியம்.

அவ--தேஹாகாரபரிணதாயாஃ ப்ரக்ருதேஃ ஸ்வரூபானுபந்தித்வேன த்ரயாணாம் குணானாம், தேஷு ஸ்வரூபானுபந்தித்வேன ஸர்வதா ஸத்ஸ்வபி ப்ராசீனகர்மவசாத் ஆப்யாயனவசாச்ச கார்யம் கதம் ஜனயந்தீத்யத்ராஹ —

ரஜஸ்தமச்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத ।
ரஜஃ ஸத்த்வம் தமச்சைவ தமஃ ஸத்த்வம் ரஜஸ்ததா ॥ ॥௰॥

யத்யபி ஸத்த்வாதயஸ்த்ரயஃ ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டாத்மஸ்வரூபானுபந்தினஃ, ததாபி ப்ராசீனகர்மவசாத் தேஹாப்யாயனாஹாரவைஷம்யாச்ச ஸத்த்வாதயஃ பரஸ்பரஸமுத்பவாபிபவரூபேண வர்தந்தே। ரஜஸ்தமஸீ கதாசிதபிபூய ஸத்த்வமுத்ரிக்தம் வர்ததே। ததா தமஃஸத்த்வே கதாசிதபிபூய ரஜஃ கதாசித்। கதாசித் ரஜஃஸத்த்வே அபிபூய தமஃ ॥ ||௰||

அவ—பிரகிருதி தான் உடம்பாக ஆகியிருக்கிறது. இதில் மூன்று குணங்களும் எப்போதுமிருக்கின்றனவே. அந்த மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமான வேலைகளை (அதாவது—ஸத்துவம் அறிவைக் கொடுக்கும்; தமஸ்ஸு அதைக் கெடுக்கும்; ரஜோகுணம் வேலையைக் கொடுக்கும், தமஸ்ஸு அதைச்செய்யவொட்டாமல்பண்ணும்)எப்படிச்செய்யும் என்றால்-சொல்லுகிறார்-

உடம்பில் ஸத்துவம் முதலான மூன்றுகுணங்கள் எப்போதுமிருந்தபோதிலும், நெடுநாளாய் வந்த கர்மத்தினாலும், உடம்பை வளர்க்கும் 1 சாப்பாட்டின் வித்தியாஸத்தினாலும், அந்தகுணங்களில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்று மற்றவைகளை அடக்கி மேலிடுகிறது. [10]

---

1 கர்மத்தினாலும், சாப்பிட்டதினாலும் உடம்பில் பித்தம், வாதம், ச்லேஷ்மம் என்கிற மூன்று தாதுக்களில் இருக்கவேண்டிய நிலைமை மாறி, ஒவ்வொன்று ஒருஸமயத்தில் மேலிடுவதுபோல்.

௧௧—तत्र कार्यैकनिरूप्यं सत्त्वादिवृद्धिप्रकारमाह—

सर्वद्वारेषु देहेऽस्मिन् प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत॥ ॥௧௧॥

सर्वेषु चक्षुरादिषु ज्ञानद्वारेषु यदा वस्तुयाथात्म्यप्रकाशो ज्ञानमुपजायते, तदा तस्मिन् देहे सत्त्वं प्रवृद्धमिति विद्यात् ॥ ॥௧௧॥

அவ—இன்ன இன்ன குணம் மேலிடுகிறது என்பதைக் காரியங்களைக்கொண்டு தான் கண்டுபிடிக்கவேணும் என்று சொல்லுகிறார்—

ஒருவன் கண் முதலான இந்திரியங்களினால் அந்தந்த வஸ்துக்களை உள்ளது உள்ளபடி அறிந்தால், அப்போது ஸத்துவகுணம் மேலிட்டிருக்கிறது என்று அறியலாம். [11]

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ॥ ॥௧௨॥

लोभः-स्वकीयद्रव्यस्य त्यागासहिष्णुता । प्रवृत्तिः-प्रयोजनमनुद्दिश्यापि चलनस्वभावता । आरम्भः-फलसाधनभूतानां कर्मणामारम्भः । अशमः-इन्द्रियानुपरतिः । स्पृहा विषयेच्छा । एतानि रजसि प्रवृद्धे जायन्ते । यदा लोभादयो वर्तन्ते, तदा रजः प्रवृद्धमिति विद्यादित्यर्थः ॥ ॥௧௨॥

தன் சொத்துக்களைப் பிறருக்குக் கொடுக்க மனதாகாமலிருப்பதும், ஒரு பிரயோஜனமுமில்லாமல் ஓடியாடுவதும், காசு முதலான பிரயோஜனங்களுக்காக வேலைகளைச் செய்வதும், இந்திரியங்கள் அடங்காமலிருப்பதும், பார்வை, சாப்பாடு முதலியவைகளில் ஆசையும் இருந்தால், ரஜோகுணம் மேலிட்டிருக்கிறதென்று அறியலாம். [12]

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ॥
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ ॥௧௩॥

अप्रकाशः-ज्ञानानुदयः । अप्रवृत्तिः-स्तब्धता । प्रमादः-अकार्यप्रवृत्तिफलमनवधानम् । मोहः- विपरीत

ஜ்ஞாநம் | ஏதாநி தமஸி ப்ரவ்ருத்தே ஜாயந்தே, தாநி தமஸ: ப்ரவ்ருத்தமிதி விஜ்ஞேய:॥ ॥௧௩॥

ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது, அதிலுள்ள ஸங்கதிகள் உண்மையாய் தோன்றாமையும், சோம்பலும் (அதாவது—ஒரு வேலையையும் செய்யப் பிடிக்காமலிருப்பதும்), தப்பு வேலைகளைச் செய்யும்படியான கவனிக்காமையும், தப்பு எண்ணங்களும் இருந்தால், தமோகுணம் மேலிட்டிருக்கிறதென்று அறியலாம். [13]

யதா ஸத்த்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத்।
ததோத்தமவிதாம் லோகாநமலாந் ப்ரதிபத்யதே ॥௧௪॥

யதா ஸத்த்வம் ப்ரவ்ருத்தம், ததா ஸத்த்வே ப்ரவ்ருத்தே தேஹப்ருத் ப்ரலயம்-மரணம் யாதி சேத், உத்தமவிதாம்-உத்தமதத்த்வவிதாம் ஆத்மயாதாத்ம்யவிதாம் லோகாந்-ஸமூஹாந் அமலாந்-மலரஹிதாந் அஜ்ஞாநரஹிதாந் ப்ரதிபத்யதே-ப்ராப்நோதி | ஸத்த்வே ப்ரவ்ருத்தே ம்ருத: தத்த்வவிதாம் குலேஷு ஜநித்வா தத்த்வஜ்ஞாநஸாதநபூதேஷு புண்யகர்மஸ்வதிக்ருதோ பவதீதி॥

அவ—செத்துப்போகும் காலத்தில் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் மேலிடுவதற்குக்காரணங்களை இப்போதே போக்குவதற்காக, அந்தக்காலத்தில் ரஜஸ்ஸுதமஸ்ஸுக்கள் மேலிட்டால் வரும் கெடுதிகளைச் சொல்லுகிறார்—

ஸத்துவகுணம் மேலிட்டிருக்கும்போது, ஒருவன் இறந்தால், ஆத்மஸ்வரூபத்தை உண்மையாக அறிந்தவர்கள் வயிற்றில் பிறந்து, ஆத்மாவின் உண்மையான அறிவைக் கொடுக்கக்கூடிய நல்ல கர்மங்களைச் செய்வன்— [14]

ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே ॥௧௫½॥

ரஜஸி ப்ரவ்ருத்தே மரணம் ப்ராப்ய பலாபிஸந்திபூர்வ கர்மகாரிஷு ஜாயதே। தத்ர ஜநித்வா ஸ்வர்க்காதிபல ஸாதநகர்மஸ்வதிக்ருதோ பவதி॥ ॥௧௫½॥

*ரஜோகுணம் மேலிட்டிருக்கும்போது இறந்தால், சுவர்க்கம் முதலான பலன்களுக்காக வேலை செய்கிறவர்கள் வயிற்றில் பிறந்து, அந்தமாதிரி வேலைகளைச் செய்வன்.* [14½]

𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌲𑍀𑌨𑌸𑍍𑌤𑌮𑌸𑌿 𑌮𑍂𑌢𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ ॥௧௫॥

𑌤𑌥𑌾 𑌤𑌮𑌸𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌮𑍃𑌤𑍋 𑌮𑍂𑌢𑌯𑍋𑌨𑌿𑌷𑍁-𑌶𑍍𑌵𑌸𑍂𑌕𑌰𑌾𑌦𑌿𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌸𑌕𑌲𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌨𑌰𑍍𑌹𑍋 𑌜𑌾𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௧௫॥

*தமோகுணம் மேலிட்டபோது இறந்தால், நாய், பன்றி, முதலான பிராணிகளாகப் பிறந்து, ஒரு நல்ல வேலையையும் செய்யத்தகாதவனாக ஆவன்.* [15]

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂 𑌫𑌲𑌮𑍍 ।
𑌰𑌜𑌸𑌸𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌫𑌲𑌮𑍍 ॥ ॥௧௬॥

𑌏𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍌 𑌮𑍃𑌤𑌾 𑌉𑌤𑍍𑌤𑌮𑌵𑌿𑌦𑌾𑌂 𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑍇𑌨𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌸𑍍𑌯 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯-𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌮𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃, 𑌫𑌲𑌂-𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑌨𑌿𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂-𑌦𑍁𑌃𑌖𑌗𑌨𑍍𑌧𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌮𑌾𑌹𑍁𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌵𑌿𑌦𑌃 । 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑌸𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌫𑌲𑌸𑌾𑌧𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌷𑍁 𑌜𑌨𑍍𑌮 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌃 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌰𑌜𑍋𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌃 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌰𑍂𑌪𑌸𑌾𑌂𑌸𑌾𑌰𑌿𑌕𑌦𑍁𑌃𑌖𑌪𑍍𑌰𑌾𑌯𑌮𑍇𑌵 𑌫𑌲𑌮𑌾𑌹𑍁𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌦𑌃 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌫𑌲𑌂-𑌏𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌤𑌮𑌸𑌃 𑌫𑌲𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌰𑍂𑌪𑌮𑍍 ॥ ॥௧௬॥

*ஒருவன் ஸத்துவம் வளர்ந்த வேளையில் இறந்து, ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கள் வயிற்றில் பிறந்து, பலன்களை விரும்பாமல், எனக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய கர்மங்களை என் ஸந்தோஷத்துக்காகவே செய்வன். அதனால் இன்னும் அதிகமாக ஸத்துவகுணம் வளர்ந்து, கொஞ்சங்கூட துக்கக்கலப்பில்லாத ஸந்தோஷத்தை அடைகிறான். ரஜோகுணம் மேலிட்டபோது*

இறந்தவன் முன்சொன்னபடி ஸ்வர்க்கம் முதலான பலன்களுக்காகக் கர்மங்களைச்செய்கிறவர்கள் வயிற்றில் பிறந்து, மறுபடியும் அதேமாதிரியே கர்மங்களை மேல்மேலும்செய்து, ஸம்ஸாரத்தை வளர்க்கிறான். அவனுக்குஸுகமென்று பேச்சே ஒழிய. முழுவதும் துக்கம் தான். தமஸ்ஸு வளர்ந்தபோது இறந்தவனுக்கு இருக்க இருக்க தப்பு எண்ணம் வளர்கிறது. [16]

அதோத்கடஸத்த்வாதிஜநிதம் நிரோதாதிகம் விவிநக்தி —
ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச ।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச ॥௧௭॥

ஏவம் ப்ரவ்ருத்தாத் ஸத்த்வாதாத்மாதியாதாத்ம்யாவபோதரூபம் ஜ்ஞாநம் ஜாயதே । ததா ப்ரவ்ருத்தாத் ரஜஸ: ஸ்வர்காதிபலலோபோ ஜாயதே । ததா ப்ரவ்ருத்தாத் தமஸ: ப்ரமாத:- அநவதாநநிமித்தாஸத்கர்மணி ப்ரவ்ருத்தி:, ததஸ்ததோ மோஹ:- விபரீதஜ்ஞாநம், ததஸ்தாயிகஞ்ச தத:, ததஸ்த்வஜ்ஞாநம்- ஜ்ஞாநாபாவ:॥ ॥௧௭॥

அவ— ஸத்துவம் முதலான குணங்கள் வளர்ந்து வருகிற பிரயோஜனங்கள் என்ன என்றால், சொல்லுகிறார்—

மேலே மேலே ஸத்துவம் வளர்ந்தால், ஆத்மாவை முதலில் உள்ளபடி அறிகிறான். பிறகு இடைவிடாமல் நினைக்கிறான். பிறகு பார்க்கிறான். ரஜஸ்ஸு வளர்ந்தால், சுவர்க்கம் முதலான பலன்களில் ஆசைவளர்கிறது. தமஸ்ஸு வளர்ந்தால், ஸங்கதிகளின் உண்மையைக் கவனிக்காமல், கெட்ட காரியங்களைச் செய்வன். அதனால் தப்பு எண்ணம் வளரும். அதனால் தமோகுணம் மேலே மேலே வளரும். அதனால் நல்ல அறிவு அடியோடு போய்விடும். [17]

ஊர்த்வம் கச்சந்தி ஸத்த்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: ।
ஜகந்யகுணவ்ருத்தஸ்தா அதோ கச்சந்தி தாமஸா:॥ ॥௧௮॥

ஏவமுக்தக்ரமேண ஸத்த்வஸ்தா ஊர்த்வம் கச்சந்தி- க்ரமேண ஸம்ஸாரபந்தாந்மோக்ஷம் கச்சந்தி । ரஜஸ்ஸ்வர்காதிபலலோபகார்பண்யாத் ராஜஸா: புநர்ஜந்மஹேதுபூதம் கர்மாநுஷ்டாய

[illegible] ॥கஅ॥

ஸத்த்வகுணம் மேலிட்டவர்கள் இருக்க இருக்க ஸத்த்வம் வளர்ந்து, உயர்ந்த பதவியை அடைகிருர்கள். அதாவது—ஸம்ஸாரத்தைப் போக்குகிருர்கள். ரஜோகுணம் மேலிட்டவர்கள் சுவர்க்கத்தில் ஆசையால் அதற்காக வேலைசெய்து, பலனை அனுபவித்து, மறுபடியும் பிறந்து, அநேகமாதிரி கர்மங்களைச் செய்கிருர்கள். ஆகையால் மேலும் போகாமல், கீழும் போகாமல் நடுவில் நிற்கிருர்கள். திரும்பித் திரும்பி வருகிறபடியினுலே, அதைத் துக்கம் என்றே சொல்லலாம். தமோகுணம் மேலிட்டவர்கள் இருக்க இருக்க தமோகுணம் வளர்ந்து, இருக்க இருக்க கெடுதலான வேலைகளைச் செய்து, கீழே கீழே போகிருர்கள். அதாவது—பறையன்களாகிருர்கள்; பிறகு மாடு பக்ஷி முதலானபிறப்பு; பிறகு புழுவாக பிறப்பு; பிறகு மரம், கொடி, கல்லு, பட்டுப்போன கட்டை, ஓட்டுச்சல்லி, செத்தை-இவை முதலானவைகள் ஆகிருர்கள். [18]

அவ—[illegible]—

[illegible]
[illegible] ॥க௯॥

[illegible]

பரம் வேத்தி-கர்த்ருப்யோ குணேப்யஶ்ச பரம்-அந்யமாத்மாநம் அகர்த்தாரம் வேத்தி| ஸ மத்பாவமதிகச்சதி- மம யோ பாவஸ்தமதிகச்சதி| ஏதது³க்தம் பவதி- ஆத்மந: பரிஶுத்தஸ்வபாவஸ்ய பூர்வ-பூர்வகர்மமூலகுணஸங்கநிமித்தம் விவிதகர்மஸு கர்த்ருத்வம், ஆத்மா ஸ்வதஸ்த்வகர்த்தா அபரிச்சிந்நஜ்ஞாநைகாகார இத்யேவமாத்மாநம் யதா பஶ்யதி, ததா மத்பாவமதிகச்சதீதி ||

அவ—நல்ல சாப்பாடுகளாலேயும், பலன்களை விரும்பாமல் நல்ல கர்மங்களைச் செய்வதாலேயும் மேலே மேலே ஸத்துவகுணம் வளர்ந்தவர்கள்—ரஜோகுணம், தமோகுணம் குறைந்து, உயர்ந்த பதவியை அடையும் விதத்தைச் சொல்லுகிறார்:—

சாப்பாட்டை ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்றுவிதமாகச் சொல்லியிருக்கிறது. அவைகளில் ஸத்துவகுணத்தை வளர்க்கிற ஆஹாரத்தைச் சாப்பிடுவதினாலும், பலன்களை விரும்பாமல் பகவானுடைய ஸந்தோஷத்துக்காக நல்ல கர்மங்களைச் செய்வதினாலும், ஒருவன் ரஜோகுணத்தையும், தமோகுணத்தையும் இருந்த இடம் தெரியாமல் தொலைத்து, ஸத்துவகுணத்தை மிகவும் வளர்த்து, ஸம்ஸார வேலைகள் எல்லாம் குணங்களாலேதான் உண்டாகின்றன என்றும், ஆத்மா என்பது இயற்கையில் ஒரு வேலையையும் செய்கிறதில்லை யென்றும் அறிகிறான். அவன் என்னைப் போல் ஆகிறான். அதாவது—ஆத்மா நெடுநாளாய் வந்த கர்மத்தினாலே ஸத்துவம் முதலான குணங்களாலே உண்டாகிற பலன்களில் ஆசை உண்டாகி, அதற்காகப் பல வேலைகளைச் செய்கிறான். இயற்கையில் ஒருவித குற்றமுமில்லாதவன்; இதுமாதிரி வேலைகள் அவனுக்குக்கிடையாது; அளவில்லாத அறிவுள்ளவன்—என்று அறிந்தால், அவன் என் மாதிரி ஆய்விடுவன். [19]

அத²—கர்த்ருப்யோ குணேப்யோऽந்யமகர்த்தாரமாத்மாநம் பஶ்யந் மத்பாவமதிகச்சதீத்யுக்தம்| ஸ மத்பாவ: கீத்ருஶ இத்யத்ராஹ—

குணாநேதாநதீத்ய த்ரீந் தேஹீ தேஹஸமுத்பவாந் |
ஜந்மம்ருத்யுஜராது:கைர்விமுக்தோऽம்ருதமஶ்நுதே ||

ஏவம் தேஹீ தேஹஸமுத்பவாந்—தேஹாகாரபரிணத ப்ரக்ருதிஸமுத்பவாந் ஸத்த்வாதீந் த்ரீந் குணாநதீத்ய தத்விவிக்தம் ஜ்ஞாநைகாகாரமாத்மாநம் பஶ்யந் ஜந்மம்ருத்யுஜராது:கைர்விமுக்தோऽம்ருதம்—ஆத்மாநமநுபவதி, ஏஷ மத்பாவ இத்யர்த:|| ||உ0||

*அவ—ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி பார்க்கிறவன் பகவானைப்போல ஆகிறான் என்று சொல்லப்பட்டது. பகவானைப்போல ஆகிறது என்பது என்ன என்றால், சொல்லுகிறார்:—*

இந்த ஜீவன் உடம்பாக ஆகியிருக்கும் பிரகிருதியினால் ஏற்பட்டிருக்கிற ஸத்துவம் முதலான மூன்று குணங்களையும் ஜயித்து, இயற்கையில் அந்த குணங்களின் சேர்க்கையில்லாத—அறிவையே இயற்கையாக உடைய—ஜீவஸ்வரூபத்தைப் பார்த்து பிறப்பு, சாவு, கிழத்தனம் இவை முதலான தொந்தரவுகளில்லாமல், ஆத்மாவை அநுபவித்து, மிகுந்த ஸுகத்தை அடைகிறான். இதுதான் பகவானைப்போல ஆகிறது என்பது. அதாவது—பகவான் எப்பொழுதும் அளவில்லாத ஸந்தோஷமுள்ளவராக இருக்கிறார். ஸம்ஸாரிகளான ஜீவன்கள் பலகாரணங்களால் எப்போதும் துக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் ஆத்மஸ்வரூபத்தைப்பார்த்த ஜீவன்கள் எப்பொழுதும் ஸந்தோஷப்படுகிறார்கள் 1

1 ஆத்ம விஷயமான புஸ்தகத்தைப் படிக்காதவர்கள் ஸம்ஸாரக்கவலையினால் எப்பொழுதும் வருத்தப்படுகிறார்கள். ஆத்மாவைப்பற்றின சாஸ்திரங்களைப் படித்த வித்வான்கள் ஸம்ஸாரக் கவலையினாலும், நான் படித்தவன் என்கிற எண்ணத்தினால் உண்டான சண்டைகளாலும், அதற்குப் புஸ்தகம் எழுதுகிற சிரமங்களாலும் தொந்தரவு படுகிறார்கள். ஸம்ஸாரிகளும், படித்தவர்களும் ஆத்மஸ்வரூபத்தை அறியவேயில்லையே அறிந்து தியானம் செய்வதினால் வரும் பயன் எப்படி? யாராவது ஒருவர் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர் இருந்தால், அவரை இந்த வித்வான்கள் அறிந்தவரென்று நினைத்து, அவருடன் பழகினால், அவரால் இவர்களுக்கு அறிவு ஏற்படும். இவ்வுலகத்தில் அறிந்தவர் அகப்படுவதே வருத்தம். அப்படி அகப்பட்டாலும், இப்போதைய வித்வான்கள் தங்களை ஆத்மஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாக நினைத்திருக்கிறபடியால், அவரை அறிந்தவராக நினைப்பதும், அவருடன் பழகுவதும் ஒருக்காலும் நடக்கவே நடக்காது.

ஸ்ரீ:

# ஸ்ரீமத் கீதா பாஷ்யம்.

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம: ||
ஸ்ரீமதே வாதிஹம்ஸாம்புவாஹ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ||
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம: ||
ஸ்ரீரங்கநாயகீ திவ்யமணி பாதுகாப்யாம் நம: ||
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ||
ஸ்ரீமத்யை கோதாயை நம: ||
ஸ்ரீகோமளாம் ஸ்ரீஸமேதாய ஸர்வாபீஷ்ட ப்ரதாயிநே நம: ||

ஸ்ரீமந் நாராயணனுடையது எல்லா லோகங்களும் பெரும்பாலும் அவைகளிலிருக்கிற எல்லா ஜனங்களும் பூமியிலிருக்கிற ஸுகத்தைத்தான் ஆசைப்படுகிறார்கள். பூமியில் துக்கம் கலப்பில்லாத ஸுகம் ஒருவருக்கும் ஒருபோதும் கிடையாது. இதே மாதிரிதான் சாஸ்திரங்களில் சொல்லும் ஸ்வர்க்கம் முதலான உலகங்களிலும் எவருக்கும் ஏதாவது குறைவுகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. இந்த ஸங்கதியைத் தானாக ஒருவனும் அறிந்துகொள்ள முடியாது. மிகுந்த பெரியவருடைய கவலையோடு கூடிய உபதேசத்தினாலே தெளிந்த ஒரு பெரியவருடைய அதே மாதிரியான உபதேசங்களாலே இந்த அறிவு வரவேண்டியது. இப்போது படித்தவர்களோ படிக்காதவர்களோ, ஏழையோ பணக்காரனோ எவனுக்கும் இது தோன்றுவது வருத்தம். ஆனால் படித்தவர்கள் விரிவாய் சொல்லுவார்கள். அவர்களுக்குள் யாருக்கு மனதில் பட்டிருக்கிறதோ துக்கம் கலந்த ஸுகத்தையே எவரும் அநுபவிப்பதனாலே நிலையான ஸுகத்தைப் புஸ்தகங்களைக்கொண்டுதான் அறிந்துகொள்ளவேண்டும். யுக்திகளால் மாத்திரம் ஏற்பட்ட புஸ்தகங்களைக்கொண்டு அதையறிய முடியாது, ஏனென்றால், அதுக்கு மேலும் யுக்திகள் தோன்றுமாகையால்,

ஆத்மவ்யதிரிக்தேஷு வஸ்துஷு ஸம்ப்ரவ்ருத்தானி ஸத்த்வரஜஸ்தமஸாம் கார்யாணி ப்ரகாஶப்ரவ்ருத்திமோஹாக்யானி யோ ந த்வேஷ்டி। ததா ஆத்மவ்யதிரிக்தேப்யோ வஸ்துப்யஸ் தானி நிவ்ருத்தானி ந காங்க்ஷதி ॥ ॥௨௨॥

பகவான் சொல்லுகிறார்—

ஒருவன் ஸத்துவகுணத்தினால் ஒருவஸ்துவை அறிகிறான்; ரஜோகுணத்தினால் ஒருவேலையைச் செய்கிறான்; தமோகுணத்தினால் ஒருவஸ்துவை வேறொருவஸ்துவாக நினைக்கிறான். உலகத்தில் ஆத்மாவைத்தவிர 1 மற்ற வஸ்துக்கள் பிடித்தவைகளென்றும், பிடிக்காதவைகளென்றும் இருவகைப்படும். அவைகளில் பிடிக்காத வஸ்துக்களைப் பற்றின அறிவு, வேலை, மயக்கம்—இவைகள் வந்தால், ஒருவன் வருத்தப்படுவன். பிடித்த வஸ்துக்களைப் பற்றின அறிவு முதலானவைகள் வந்து போனால், அவைகள் மறுபடியும் வரவேண்டுமென்று ஆசைப்படுவன். இந்த மூன்றுகுணங்களை ஜயித்தவனுக்கு இப்படி வருத்தமுமில்லை; ஆசையுமில்லை. [22]

உதாஸீனவதாஸீனோ கு³ணைர்யோ ந விசால்யதே ।
கு³ணா வர்தந்த இத்யேவ யோऽவதிஷ்ட²தி நேங்க³தே ॥௨௩॥

---

1. உதாரணம்- ஸத்துவ குணத்தால் ஒருவன் பாம்புமுதலானவைகளைப்பார்க்கிறான். அது பிடிக்காதவஸ்து. அதின் பார்வையினால் வருத்தமில்லை. உலகத்தில் ரஜோ குணத்தால் விரோதிகளுடன் ஒருவன் பேசுகிறான். அவன் வீட்டுக்குப் போகிறான். பிறகு ஏன் பேசினேன், ஏன் போனேன் என்று வருத்தப்படுகிறான். அந்த மாதிரி வேலைகள் நேர்ந்தால், இவன் வருத்தப்படுகிறதில்லை ஒருவன் தமோகுணத்தினால், சத்துருவின் குழந்தையை உள்ளபடி அறியாமல், தன் குழந்தையாக நினைத்துக் கொண்டாடினான். பிறகு அறிந்து வருத்தப்படுகிறான். ஸத்துவ குணத்தினால் ஏற்படுகிற பிள்ளை பெண்டாட்டிகளின் பார்வை தனக்கு இருந்து போய்விட்டால், அந்தப் பார்வை மறுபடியும் வரவேண்டுமென்று விரும்புகிறதில்லை. ரஜோகுணத்தினால் ஏற்படுகிற-பணம் கிடைப்பதற்காகச் செய்யப்படும்—வேலை தவறிப்போனால், அதைப்பற்றி ஆசைப்படுகிறதில்லை. வெகுநாளாக ஒருவனைப் பார்க்கவேணுமென்று நினைத்துக் கொண்டிருந்தவன், அவன் வந்தபோது தமோகுணத்தினால், அவனை வேறொருவனாக நினைத்துவிட்டான். அவன் போய்விட்டான். பிறகு தவறிப்போன அவனுடைய பார்வையை ஆசைப்படுவதில்லை.

உதாஸீநவதாஸீந꞉ - கு³ணவ்யதிரிக்தாத்மாவலோகநத்ரு-
ப்த்யா உதாஸீநவதாஸீந꞉ - கு³ணைர்ந விசால்யதே, கு³ணா꞉
ஸ்வேஷு கார்யேஷு ப்ரகாஶாதி³ஷு வர்தந்த இத்யநுஸந்தா⁴ய, யஸ்தூஷ்ணீமவதிஷ்ட²
தே | நேங்க³தே - ந கு³ணகார்யாநுகு³ணம் சேஷ்டதே ||உ௩||

அவ—உடம்போடேகூட இருப்பவன்—பிடித்தவைகளையும், பிடிக்காதவைகளையும் பற்றின கீழ்ச் சொல்லியவைகளில் எப்படி மனக் கலக்கமில்லாமல் இருப்பன் என்றால், சொல்லுகிறார்—

இவன் ஆத்மாவை மாத்திரம் பார்த்து ஸந்தோஷப்படுகிறபடியால், பிடித்ததோ பிடிக்காததோ, மற்ற வஸ்துக்களைக் கவனிக்கிறதில்லை. அதாவது—வருத்தமும், ஆசையும் உண்டாகிறதில்லை. ஸத்துவம் முதலான குணங்களால் வருத்தத்தையும் ஆசையையும் அடைந்தாலும், ஒரு வேலையைச் செய்வதுமில்லை. பிடித்ததோ, பிடிக்காததோ—அவைகளின் அறிவு முதலானவைகள் ஏற்படும்போது, அவைகள் அந்த 1 குணங்களால் ஏற்படுகின்றனவென்று எண்ணி, 2 அவைகளுக்குத் தகுந்த வேலைகளைச் செய்வதில்லை. பிடிக்காதவஸ்துக்களைப் பார்த்துக் கோபிப்பதும், பிடித்தவஸ்துக்களைப்பார்த்து ஸந்தோஷப்படுவதும் இல்லை. [23]

ஸமது³꞉க²ஸுக²꞉ ஸ்வஸ்த²꞉ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந꞉ |
துல்யப்ரியாப்ரியோ தீ⁴ரஸ்துல்யநிந்தா³த்மஸம்ஸ்துதி꞉ ||உச||
மாநாவமாநயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ꞉ |
ஸர்வாரம்ப⁴பரித்யாகீ³ கு³ணாதீத꞉ ஸ உச்யதே || ||உரு||

ஸமது³꞉க²ஸுக²꞉ - ஸுக²து³꞉க²யோ꞉ ஸமசித்த꞉ | ஸ்வஸ்த²꞉ - ஸ்வஸ்மிந் ஸ்தி²த꞉, ஸ்வாத்மைகப்ரியத்வேந புத்ராதி³ஜந்மமரணாதி³ஸுக²து³꞉க²யோ꞉ ஸமசித்த꞉ | தத ஏவ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந꞉ | தத ஏவ துல்யப்ரியாப்ரிய꞉-து

1. சுலோகத்தில் முதல்பாதத்தில் சொன்னதையே இங்கே விரிவாய்ச் சொல்லுகிறது.

2. இரண்டாவது பாதத்தில் சொன்னதையே இங்கேவிரிவாய்ச் சொல்லுகிறது.

ப்ரியாப்ரியவிஷயௌ | தீர:- ப்ரக்ருத்யாத்மவிவேககுஶல: | ததஶ்ச துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி:- ஆத்மநி மநுஷ்யத்வாத்ய பிமாநக்ருத ஹீநோத்க்ருஷ்டகுணாகுணநிமித்தஸ்துதிநிந்தயோ: ஸ்வாஸம்பந்தாநுஸந்தாநேந துல்யவ்ருத்தி:| ததா மாநாவமாநயோ: ததா மித்ராரிபக்ஷயோரபி ஸ்வஸம்பந்தாபாவாதேவ துல்யவ்ருத்தி:| ததா தைஹிகவ்யாபாரஸர்வாரம்பபரித்யாகீ| ய ஏவம்பூத: ஸ குணாதீத உச்யதே ॥ ॥௨௪-௨௫॥

ஆத்மாவைப் பார்ப்பது தவிர, மற்ற ஸுகத்தையும் துக்கம் போலவே நினைக்கிறான். தன் ஆத்மா ஒன்றையே இன்பமாக நினைத்துக் கொண்டிருப்பதாலே, பிள்ளை பிறந்தது என்றாலும், செத்தது என்றாலும், அவன்மனது 1 ஒரேமாதிரியாயிருக்கும். அதனாலேயே ஓட்டாஞ்செல்லியையும், கருங்கல்லையும், தங்கக்கட்டியையும்ஒரேமாதிரியாகநினைக்கிறான். அதனாலேயேபிடித்தவஸ்துக்களும், பிடிக்காத வஸ்துக்களும் அவனுக்கு ஒரேமாதிரியாக இருக்கின்றன. ஆத்மாவையும், உடம்பையும் வெவ்வேறென்று அறிகிற விஷயத்தில் கெட்டிக்காரனாக இருக்கிறான். அதனாலே தன்னை ஒருவன் வைதாலும், ஸ்தோத்திரம் பண்ணினாலும் 2 ஒரே மாதிரியாக இருக்கிறான். குணத்தைக்கண்டு கௌரவம் செய்வதிலும், தோஷத்தை நினைத்து அலக்ஷியம் செய்வதிலும், அவையிரண்டுக்கும் காரணமாகஏற்படுகிற ஸ்நேஹம், விரோதம் இவையுள்ளவர்களிடத்திலும்—அவையிரண்டிலும் ஆத்மாவுக்கு ஸம்பந்தமில்லை என்று எண்ணி, ஒரேமாதிரியாகஇருக்கிறான். அப்படியே உடம்புக்காக மாத்திரம் ஒரு வேலையையும் செய்கிறதில்லை. இப்பேர்ப்பட்டவன் குணங்களை ஜயித்தவன் என்று சொல்லப்படுகிறான்.

---

1. ஸுகம் வந்தால் எம்பிக் குதிக்கிறதும், துக்கம் வந்தால் தலையைத் தொங்கப்போட்டுக் கொள்ளுகிறதுமில்லை.

2. ஒருவன் இவர் ரொம்ப அழகாகஇருக்கிறாரென்று சொன்னான். இன்னொருவன் மிகவும் குரூபியாக இருக்கிறார் என்று சொன்னான். அழகும்,அழகில்லாமையும்உடம்பிலிருக்கிறதென்றுஎண்ணி, அவையிரண்டினால் உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மாவுக்கு லாபமும், நஷ்டமுமில்லையென்றுநினைத்து,அவையிரண்டிலும்ஒரேமாதிரியாகஇருக்கிறான்

𑌅𑌵— 𑌅𑌥𑍈𑌵𑌂𑌰𑍂𑌪𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌮𑌾𑌹—

𑌮𑌾𑌂 𑌚 𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑍇𑌣 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑍇𑌵𑌤𑍇 ।
𑌸 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌸𑌮𑌤𑍀𑌤𑍍𑌯𑍈𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥

“𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨 𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑍇; 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌵𑌾𑌸𑌨𑌾𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌮𑌾𑌂-𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂 𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑌿𑌮𑍍, 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑍇𑌣-𑌐𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌚 𑌯𑌸𑍍𑌸𑍇𑌵𑌤𑍇। 𑌏𑌤𑌾𑌨𑍍-𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑌤𑍀𑌤𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯-𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌯, 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇-𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿-𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௨௬॥

அவ— இந்தமாதிரி குணங்களை ஜயிப்பதற்கு முக்கியமான காரணத்தைச் சொல்லுகிறார் —

கீழ்ச் சொன்னபடி உடம்பு வேறு, ஆத்மா வேறு என்று நினைத்தமாத்திரத்தால் குணங்களுடைய ஜயம் ஏற்படாது. இவையிரண்டும் வேறு என்று எவ்வளவு நினைத்தாலும், இவனுக்கு நெடு நாளாய் வந்த கெட்ட பழக்கம் இந்த நினைவை அமுக்கிவிடும். இந்த நினைவு இருந்தாலும், நினைவின் வேலை நடக்காது. ஆனால் எப்படி குணங்களுடைய ஜயம் வருமென்றால், என்னைப் பிரபத்திபண்ணி, என்னைத்தவிர வேறு தேவதையையும், என்னைத்தவிர வேறு பிரயோஜநத்தையும் நினைக்காமல், என்னிடத்தில் பக்தியையும்பண்ண வேண்டும். என்னைப் பிரீதியோடு நினைத்து ஸந்தோஷப்படுத்த வேணும். 1 நான் நினைத்தபடி நடத்துகிறவனும், அளவில்லாத

1. நெடுநாளாய்வந்த கெட்டபழக்கத்தைப் போக்குவதற்கு வேண்டியபகவானுடைய குணங்கள் சுலோகத்தில் “மாம்” (என்னை) என்கிற சொல்லாலே காட்டப்படுகின்றன என்று கருத்து. பகவான் ஒருவனை க்கர்மத்துக்கு உட்படுத்துவது போல, கர்மத்திலிருந்து விடுவிப்பதிலும் நினைத்தபடி நடத்துகிறவர். இந்தகுணம் ஒருவனைத்தண்டிப்பதற்கும், மன்னிப்பதற்கும் பொதுவானது. அநுக்கிரஹத்துக்கு மாத்திரம் வேண்டியவைகள் மற்றஇரண்டுகுணங்களும்.

தயையுள்ளவனும், என்னிடத்தில் வந்தவர்களிடத்தில், அவர்கள் எவ்வளவு குற்றம் பண்ணினலும், அவைகளைக் கவனிக்காமல் பிரீதியுள்ளவனாகவும் இருக்கிறேன். இப்படி என்னுடைய கவனிக்காமைக்கும், பிரீதிக்கும் அளவில்லை. இப்படி என்னிடத்தில் பக்தியுடன் தன் ஸ்வரூபத்தைத் தியானம் செய்தால், என் அநுக்கிரஹமில்லாமல் ஜயிக்கமுடியாத ஸத்துவம் முதலான குணங்களை ஜயித்து, பிருமமாக ஆவதற்கு (அதாவது - ஆத்மாவை உள்ளபடி இன்பமாகப் பார்ப்பதற்குத்) தகுந்தவனாகிறேன். [26]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌹𑌮𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌚 ।
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌸𑍍𑌯𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌸𑍍𑌯 𑌚 ॥

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌦𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌗𑍁𑌣𑌤𑍍𑌰𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌹𑌿 𑌶𑌬𑍍𑌦𑍋 𑌹𑍇𑌤𑍌 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌹𑌮𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑍇𑌵𑌿𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾; 𑌤𑌥𑌾 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 - 𑌅𑌤𑌿𑌶𑌯𑌿𑌤𑌨𑌿𑌤𑍍𑌯𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌐𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌸𑍍𑌯 - "𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌸𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌧𑌰𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑌵𑌚𑌨𑌃 - 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌸𑌾𑌹𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑌯𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌕𑌃 । 𑌏𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 - 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 "𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 । 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍇𑌕𑍋𑌪𑌾𑌯𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌐𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍇𑌕𑍋𑌪𑌾𑌯𑍋 𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑌾𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 ॥ ॥௨௭॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

அவ— குணங்களின் ஜயத்தையும் பகவான் கொடுக்கிறாரென்றுசொன்னதை உறுதிப்படுத்துவதற்காக, மூன்று விதமான பலன்களைப் பகவான் கொடுக்கிறார் என்று நடு ஆறு அத்தியாயங்களாலே சொல்லப்பட்டதை மறுபடியும் இங்கே சொல்லுகிறார்—

இன்னொருவரையும், இன்னொரு பிரயோஜனத்தையும் நினைக்காமல் செய்யப்பட்ட பக்தியினாலே ஸந்தோஷப்படுத்தப்பட்ட நான்—அழிவில்லாததும், ஒருவிதக் குற்றமில்லாததும், இன்பமானதுமான ஆத்மாவின் அநுபவத்தையும்,பிரும்மப்பட்டத்தைக் காட்டிலுமுயர்ந்ததான ஐசுவரியத்தையும், மோக்ஷ ஸுகத்தையும் கொடுக்கிறவன். ஆகையால் என்னைப் பிரபத்தி பண்ணி, பக்தி பண்ணினால் தான், இந்த எல்லா ஸுகங்களும் கிடைக்கும். இந்த ஸங்கதியை 17—வது அத்தியாயம் 14—வது சுலோகம் முதல் சொல்லியிருக்கிறது, குணங்களை ஜயிப்பதும், அதனால் வரும் ஆத்மாவின் பார்வையும் பகவானைப் பிரபத்தி பண்ணினால் தான்வரும். இந்த ஸங்கதிகளெல்லாம் நல்ல ஆசாரியர்களுடையவும், பகவானுடையவும் அநுக்கிரஹத்தால் மனதில் படவேணும்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:.

𑌅𑌥 — 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌭𑍂𑌤𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌵𑌿𑌶𑍋𑌧𑍍𑌯, 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋 𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌪𑌰𑌿𑌣𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑍋𑌽𑌨𑌾𑌦𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑍇 𑌚𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑍋𑌭𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑍋 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌮𑍂𑌲𑍋 𑌭𑌗𑌵𑌤𑍈𑌵 𑌕𑍃𑌤 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌸𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑍂𑌲𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌭𑌜𑌨𑍀𑌯𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌬𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍𑌤𑌾𑌂, 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑍂𑌤𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌪𑍁𑌰𑍁𑌷𑌦𑍍𑌵𑌯𑌾𑌤𑍍 𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍈𑌕𑌤𑌾𑌨𑌤𑌯𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌾𑌰𑌭𑌤𑍇। 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌅𑌸𑌙𑍍𑌗𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂, 𑌛𑍇𑌦𑍍𑌯𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌿𑌤𑌤𑌮𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌕𑌾𑌰𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 —

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌮𑌧𑌃𑌶𑌾𑌖𑌮𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌯𑌸𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦 𑌸 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍 ॥ ௧ ॥

𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍍 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌮𑌧𑌃𑌶𑌾𑌖𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃, '𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑍋𑌽𑌵𑌾𑌕𑍍𑌶𑌾𑌖 𑌏𑌷𑍋𑌽𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃', '𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌮𑌵𑌾𑌕𑍍𑌶𑌾𑌖𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑍀'𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃। 𑌸𑌪𑍍𑌤𑌲𑍋𑌕𑍋𑌪𑌰𑌿𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌸𑌕𑌲𑌨𑌰𑌪𑌶𑍁𑌮𑍃𑌗𑌕𑍍𑌰𑌿𑌮𑌿𑌕𑍀𑌟𑌪𑌤𑌙𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌨𑍍𑌤𑌤𑌯𑌾𑌽𑌧𑌃𑌶𑌾𑌖𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌅𑌸𑌙𑍍𑌗𑌹𑍇𑌤𑍁𑌕𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌵𑍍𑌯𑌯𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌯𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌸𑍍𑌯 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌃। 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿-𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 '𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌮𑌾𑌲𑌭𑍇𑌤 𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌮𑌃', 𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌮𑍇𑌕𑌾𑌦𑌶𑌕𑌪𑌾𑌲𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵

[illegible] ॥ ॥க॥

அவ—க்ஷேத்திராத்தியாயம் என்று சொல்லப்படுகிற 13-வது அத்தியாயத்தில் க்ஷேத்திரம் (இடம்) என்று சொல்லப்பட்ட பிரகிருதியினுடைய ஸ்வரூபத்தையும், க்ஷேத்திரக்ஞன் (இடத்தை அறிகிறவன்) என்று சொல்லப்பட்ட ஜீவனுடைய ஸ்வரூபத்தையும் தெளிவாகச் சொல்லி; ஜீவன் இயற்கையில் ஒருவித குற்றமில்லாதவனாகவும், அளவில்லாத அறிவுள்ளவனாகவும் இருந்த போதிலும், நெடுநாளாய்வந்த—பிரகிருதியின் ஸத்துவம் முதலான குணங்களாலுண்டான—ஆசையின் வெள்ளத்தினால், அவனுக்கு தேவன் முதலான உடம்பின்சேர்க்கை நெடுநாளாய் வந்ததென்று சொல்லப்பட்டது. 14-வது அத்தியாயத்தில் (காரணாவஸ்தை) ஸிருஷ்டி காலத்தில் உண்டாகிற உடம்பின் சேர்க்கையும், (காரியாவஸ்தை) அது முதல் நாளது வரையில் ஓயாமல் நடந்துவருகிற உடம்பின் சேர்க்கையும் பகவானாலேயே செய்யப்பட்டதென்று சொல்லி; ஜீவனுக்கு ஸத்துவம் முதலான குணங்களால் கட்டு உண்டாகும் வழியை விரிவாகச்சொல்லி; அந்தக்கட்டுப்போய், ஆத்மாவை உள்ளபடி பார்ப்பது பகவானிடத்தில் பக்தியினால் தான் வரவேண்டுமென்று சொல்லப்பட்டது. 15-வது அத்தியாயத்தில் பக்திபண்ணவேண்டிய பகவானுக்கு க்ஷரம் (பத்தன்), அக்ஷரம் (முக்தன்) என்கிற—ஸம்ஸாரிகளும், ஸம்ஸாரம் போனவர்களும் சொத்துக்கள் என்பதையும்; பகவான்குற்றங்களுக்குச் சத்துரு (ஒருக்காலும் குற்றமில்லாதவர்)—எப்பொழுதும் எல்லா நல்ல குணங்களுக்கும் இருப்பிடம்—ஆகையால் மிகவும் உயர்ந்தவர்; ஆதலால் சொத்தான இந்த இரண்டு வகுப்புக்களைக் காட்டிலும் பகவான் வேறு ஜாதி என்பதையும்; அவர் ஜீவஜாதியேயல்ல என்பதையும்; புருஷோத்தமன், எல்லா புருஷர்களைக்

காட்டிலும் (அதாவது—பகவானும் மஹாலெக்ஷ்மியும் தவிர,மற்ற அறிவுள்ளவர்களெல்லாரும் ஜீவன்கள்; அவர்களெல்லாரையும் காட்டிலும் வேறு ஜாதியாகையால்) உயர்ந்தவர் என்பதையும் சொல்ல ஆரம்பிக்கிறார்.

முதலில் ஒழிவு என்கிற கோடாலியினாலே பந்தம் (ஸம்ஸாரம்) என்கிற மரத்தை வெட்டின அக்ஷரம் (முக்தன்) என்கிற ஸொத்தைச் சொல்லுவதற்காக, வெட்டத்தகுந்த—பந்தம் (கட்டு) என்று சொல்லக்கூடிய—ஸம்ஸாரத்தை (உடம்புமுதலானவைகளை) 1 அரசமரமாகச் சொல்லிக்கொண்டு, பகவான் சொல்லுகிறார்—

ஸம்ஸாரம் என்கிற அரசமரத்துக்கு வேர் 2 மேலே இருக்கிறதென்றும், கிளைகள் கீழே இருக்கின்றன என்றும், அதற்கு அழிவில்லையென்றும், அதற்கு வேதங்கள் இலைகள் என்றும் வேதம் சொல்லுகிறது. இந்த மரத்தை இப்படி எவன் அறிகிறானோ, அவன்தான் வேதத்தின் கருத்தை அறிந்தவன். [1]

1. ஸம்ஸாரத்தை அரசமரமாகச் சொல்லுவானேன் என்றால்—அரசமரத்தை உயர்ந்த புண்ணிய விருக்ஷமாகச் சொல்லியிருக்கிறது. அது யாகங்களுக்கு உதவுகிறது. அதுபோல் உடம்பு ஆத்மயாகம் என்கிற பிரவ்ருத்திக்கு உபயோகப்படுகிறது. ஜீவன் ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு அது மிகவும் உதவியாக இருக்கிறது. பாபிகளுக்குத் தொந்தரவைக் கொடுக்கிறதே யொழிய, நல்லவர்களுக்கு மிகவும் நல்லது. பாபிகளும் கடைசியில் இந்த உடம்பினால்தான ஸௌக்கியத்தை அடையவேணும். அதற்காக அரசமரமாகச் சொன்னது.

2. ஸம்ஸாரம்என்கிற மரத்தை வெட்டுவதற்கு வழியை வேதம் சொல்லுகிறது. வெட்டவேண்டிய மரம் தெரியாதபோனால், வெட்டுவது எப்படி? பூமி முதல் ஏழுலோகங்களுக்கு மேலேயிருக்கும் நாலு முகமுள்ள பிரும்மாவினால் உண்டாகிறபடியால், இந்த மரத்துக்கு வேர் மேலே யிருக்கிறதென்றும், பூமியிலும்,அதற்குக்கீழ்லோகங்களிலும்வஸிக்கும் மனிதன், மாடு, புழு, பக்ஷிகள் மரம் என்று சொல்லப்பட்டவைகள் இருப்பதால், கிளைகள்கீழே இருக்கின்றன என்றும், ஒழிவை யுண்டுபண்ணக்கூடிய நல்ல அறிவு ஏற்படும்வரையில், இது வரிசையாய் வளர்ந்து வெட்டுவதற்கு (போக்குவதற்கு) முடியாமலிருப்பதால், அழிவில்லை என்றும் சொல்லப்பட்டது. வேதவாக்கியங்களில் பிள்ளைகள், மாடுகள், பணம்காசுகள்—இவைமுதலானவைகள்உண்டாவதற்குச் சில யாகங்களைச்

அத⁴ஶ்சோர்த்⁴வம் ச ப்ரஸ்ருதாஸ்தஸ்ய ஶாகா² கு³ணப்ரவ்ருத்³தா⁴ விஷயப்ரவாலா: || ||௧½||

தஸ்ய மநுஷ்யாதி³ஶாக²ஸ்ய வ்ருக்ஷஸ்ய தத்தத்கர்மக்ருதா: பஶுஸரீஸ்ருபஸ்தா²வராந்தா: மநுஷ்யபஶ்வாதி³ரூபேண ப்ரஸ்ருதா ப⁴வந்தி | ஊர்த்⁴வம் ச க³ந்த⁴ர்வயக்ஷதே³வாதி³ரூபேண ப்ரஸ்ருதா ப⁴வந்தி | தாஶ்ச கு³ணப்ரவ்ருத்³தா⁴: கு³ணை: ஸத்த்வாதி³பி⁴: ப்ரவ்ருத்³தா⁴: | விஷயப்ரவாலா: ஶப்³தா³தி³விஷயபல்லவா: ||

1 மனிதர்கள் முதலானகிளைகளுள்ள அந்த மரத்தில் அந்தந்த ஜீவன்களின் கர்மங்களாலே ஏற்படுகிற-மனிதன், மாடு, முதலான-வேறு கிளைகள் மறுபடியும் கீழே பரவுகின்றன. கந்தர்வன், யக்ஷன் தேவன் முதலான 2 கிளைகள் மேலே பரவுகின்றன. அந்தக்கிளைகள் ஸத்துவம் முதலான 3 குணங்களால் வளர்கின்றன. சப்தம் முதலான விஷயங்கள் அந்த 4 கிளைகளுக்கு துளிர்கள். [1½]

அத²—அத⁴ஶ்சேத்யாஹ—

அத⁴ஶ்ச மூலாந்யநுஸந்ததாநி கர்மாநுப³ந்தீ⁴நி மநுஷ்யலோகே || ||௨||

---

செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அவைகளால் இந்த ஸம்ஸாரம் வளர்கிறது. ஆகையால் அந்த வேதவாக்கியங்களை இந்த மரத்துக்கு இலைகளாகச் சொல்லுகிறது. இலைகளாலேதான் மரம்வளர்கிறது. இலையில்லாமல் போனால், மரம் பட்டுப்போகும்.

1. நைமித்திக ஸிருஷ்டியை நினைத்து முதல்சுலோகம். நித்திய ஸிருஷ்டியை நினைத்து இந்த சுலோகம்.

2. கர்மங்களைச் செய்கிற பூலோகத்தைப்பற்றி, இந்த சுலோகத்தில் "கீழே மேலே" என்கிற சொற்களைஉபயோகப்படுத்தி யிருக்கிறது. கீழ்மேல் பரவுகிற கிளைகளெல்லாம் பிரும்மாவின் உலகத்துக்குக் கீழே இருப்பதால், முதல் சுலோகத்தோடு விரோதமில்லை.

3. 14—வது அத்தியாயத்தில் சொன்னபடி ஸத்துவம் முதலான குணங்களே மேல்மேல் பிறப்புகளுக்குக்காரணமாயிருப்பதாலே, தேவன், மனிதன் முதலான கிளைகள் குணங்களால் வளர்கின்றன.

4. கிளைகள் துளிர்க்கிறபடியால், அவைகள் இன்பமாக இருக்கின்றன. அதுபோல சப்தம் முதலான விஷயங்களால் மனிதன் முதலான பிறப்புக்கள் இன்பமாக இருக்கின்றன.

ப்ரஹ்மலோகமூலஸ்யாஸ்ய வ்ருக்ஷஸ்ய மநுஷ்யாக்ரஸ்ய அத: மநுஷ்யே ச மூலாந்யநுஸந்ததாநி। தாநி ச கர்மாநுபந்தீநி — கர்மாண்யேவாநுபந்தீநி மூலாந்யதோ மநுஷ்யலோக இத்யர்த:। மநுஷ்யத்வாவஸ்தாயாம் க்ருதைர்ஹி கர்மபிரதோ மநுஷ்யபஸ்வாதய: ஊர்த்வம் ச தேவாதயோ பவந்தி ॥ ॥௨॥

அவ—எப்படி யென்றால், சொல்லுகிறார்—

பிரும்மலோகத்தை வேராகவும், மனிதர்களை நுனியாகவும் உடைய இந்த மரத்துக்கு மனித லோகத்தில் கர்மங்கள் ஆகிய 1 வேர்கள் பரவுகின்றன. அதாவது—மனிதனாக இருக்கும் போது செய்யப்பட்டபுண்ணிய பாபங்களாலே, மறுபடியும் கீழே மனிதனாகவும் ஆடு மாடாகவும் பிறக்கிறார்கள். மேல் லோகத்தில் தேவன்களாகவும் ஆகிறார்கள், [2]

ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே நாந்தோ ந சாதிர்
ந ச ஸம்ப்ரதிஷ்டா ॥ ॥௨½॥

அஸ்ய வ்ருக்ஷஸ்ய ஊர்த்வமூலத்வாதிகேநோக்தம் ரூபம், தத்த்வஜ்ஞாநரஹிதா மநுஷ்யாத்யேகநாமஸ்தாவகம், மநுஷ்யேஷு ப்ரதேஸேஷ்வஹமஹமிதி தை: ஸம்ஸாரிபிர் ஜ்ஞாநம் ப்ரஸ்தரூபவகலிதி யதேஷ்டம் ரூபம் திஷ்டம்; ந ததா ஸம்ஸாரிபிருபலப்யதே। மநுஷ்யோऽஹம் தேவதத்தஸ்ய புத்ரோ யஜ்ஞதத்தஸ்ய பிதா தததநுரூபபரிக்ரஹஸ்சேத்யேதாவந்மாத்ரமுபலப்யதே। ததாऽஸ்ய வ்ருக்ஷஸ்யாந்த: விநாஸோऽஸௌ குணமயபோகேஷ்வஸங்கக்ருத இதி நோபலப்யதே। ததாऽஸ்ய குணஸங்க ஏவாதிரிதி நோபலப்யதே। அஸ்ய ப்ரதிஷ்டாநாத்யநாத்மந்யாத்மாபிமாநரூபமஜ்ஞாநமிதி நோபலப்யதே। ப்ரதிதிஷ்டத்யஸ்மிந்நிதி ஹ்யஜ்ஞாநமேவாஸ்ய ப்ரதிஷ்டா ॥ ॥௨½॥

1. இவைகள் சின்னவேர்கள். ஒருவீட்டின் மாடியில் முளைத்த கொடியிலிருந்து ஒரு கொடி கீழே தொங்கிக்கொண்டு வந்து, பூமியில்

ஸம்ஸாரமாகிய இந்த மரம் பிரும்மாவினிடமிருந்து உண்டாவதால், அவன் வேர். அவன் பிள்ளைகள், பேரன்கள் வழியாய் மனிதன் வரையில் வளர்கிறபடியால், மனிதன் நுனி. மனிதன் பூமியில் இருப்பதால் கிளைகள் கீழே இருக்கின்றன. மனிதப்பிறப்பில் செய்யப்பட்ட புண்ணியபாபங்கள் என்கிற வேர்களால் கீழேயும், மேலேயும் கிளைகள் பரவுகின்றன. இந்த ஸங்கதிகளை ஸம்ஸாரிகள் அறியவில்லை. நான் மனிதன்; ஸ்ரீநிவாஸ அய்யங்காருக்குப் பிள்ளை; நாராயண அய்யங்காருக்குத்தகப்பன்; மனிதனுக்கு வேண்டிய ஸொத்து முதலானவைகள் உள்ளவன்—என்று இவ்வளவைத்தான் அவர்கள் அறிகிறார்கள். இந்த மரம் ஸத்துவம் முதலான குணங்களாலே உண்டாகிற ஸுகங்களில் ஆசையினால் துலைகிறது. அவைகளில் ஆசையினால்தான் அது உண்டாகிறது. உடம்பை ஆத்மாவாக நினைப்பதாகிற அக்ஞானம் தான் இந்த மரத்துக்கு ஆதாரம் (மரத்துக்குபூமிபோல்). என்றும் அறியவில்லை. [2½]

அச்வத்தமேநம் ஸுவிரூடமூலம் அஸங்கசஸ்த்ரேண த்ருடேந சித்த்வா। ததஃ பதம் தத்பரிமார்கிதவ்யம் யஸ்மிந் கதா ந நிவர்தந்தி பூயஃ ॥ ||௩½||

அத:-உக்தப்ரகாரம் ஸுவிரூடமூலம்-ஸுத்ருடமூலம் விவிதம் இமம் அச்வத்தம் ஸம்யக்ஜ்ஞாநமூலேந த்ருடேந குணமயபோகாஸங்கராஹித்யேந சஸ்த்ரேண சித்த்வா, தத:-விஷயாஸங்கராஹித்யாத் தத்பதம் பரிமார்கிதவ்யம் - அந்வேஷணீயம் । யஸ்மிந் கதா பூயோ ந நிவர்தந்தே ॥ ||௩½||

1கீழ்ச்சொல்லிய—கெட்டியாயும், 2பலவிதமாயும், வேர்நன்றாய்

பட்டவுடன் வேருண்டாகி, அதிலிருந்து, மேலும் கீழும் கிளைகள் பரவுகின்றன. அதுபோல.

1. வாஸனையாலேமிகவும்கெட்டியாயிருக்கிறது. அதை... ல்லப்போகிற ஒழிவைத் தவிர வேறொன்றாலும் போகாதென்றுகருத்து.

2. பிராயச்சித்தத்தாலே சில கர்மங்களாகிய வேர்களை அறுத்தாலும், மனதாலும், வாக்காலும், உடம்பாலும் நினைவோடும், நினைவில்லாமலும் நெடுநாளாய்ச் செய்யப்பட்ட கர்மங்களாகிற வேர்களுக்கும், அவைகளின் விதங்களுக்கும் கணக்கில்லை யென்று கருத்து.

ஊன்றின-இந்த அரசமரத்தை நல்ல அறிவுகளால் ஏற்பட்ட-மிகவும் கெட்டியான(வாய்மழுங்காத)—ஸத்துவம் முதலான குணங்களால் ஏற்படுகிற ஸங்கங்களில் ஒழிவாகிற-[1]கோடாலியாலே வெட்டி, அந்த ஒழிவைக் கொண்டே-ஜீவாத்ம ஸ்வரூபத்தைப் பார்க்கப்பாடுபட வேணும் எதைப் பார்த்தால், மறுபடியும் [2] ஸம்ஸாரத்தை அடைய மாட்டார்களோ. [3½]

அத—அநாதிகாலப்ரவ்ருத்தகுணமயபோகஸங்கமூலம் ச விபரீதஜ்ஞாநம் நிவர்த்தயிதுமாஹ—

தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி:
ப்ரஸ்ருதா புராணீ ॥ ॥ ௪ ॥

அஜ்ஞாநாதிநிவ்ருத்தயே தமேவ சாத்யம்-க்ருத்ஸ்நஸ்யாதிபூதம் 'மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்', 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே', 'மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய' இத்யாதிஷூக்தமாத்யம் புருஷமேவ சரணம் ப்ரபத்யேத-தமேவ சரணம் ப்ரபத்யேத। யத:-யஸ்மாத் க்ருத்ஸ்நஸ்ய ஸ்ருஷ்டிரியம் குணமயபோகஸங்கப்ரவ்ருத்தி: புராணீ புராதநீ ப்ரஸ்ருதா। உக்தம் ஹி [illegible] ''தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா। மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி

1. வியாதி முதலான கஷ்டங்களாலே உண்டாகும் ஒழிவு கொஞ்சகாலமிருந்து போய்விடும். அது கெட்டியாயிருக்காது. அந்த ஒழிவு போதாது—என்று கருத்து.

2. ஸம்ஸாரம் என்பது பிறப்புமுதலான பலவித துக்கங்கள். இது ஜீவன்களுக்குக் கர்மங்களாலே ஏற்படுகிறது. ஒவ்வொரு ஜீவனுக்கும் நல்ல அறிவினால் ஒழிவுவந்தால், கர்மங்கள் போய், இந்த ஸம்ஸாரம் என்கிற மரம் போய்விடும். மரத்திலிருந்து பழுத்து உதிர்ந்த இலை மறுபடியும் மரத்தில் ஒட்டாததுபோல, இந்த ஜீவன் பிரும்மாவாகிற வேரிலிருந்து உண்டான ஸம்ஸாரத்தில் மறுபடியும் ஒட்டுகிறதில்லை. பிரும்மா என்கிற ஒரு வேரிலிருந்து கணக்கில்லாத ஜீவன்களுக்கு ஒவ்வொருவனுக்கும் ஸம்ஸாரம் என்கிற மரம் உண்டாயிருக்கிறது. இதையெல்லாவற்றையும் சேர்த்து மரம் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறது.

தேநேதி। ப்ரபத்யத: ப்ரவ்ருத்திரிதி வா பாட:। தமேவசா த்யம் புருஷம் ப்ரபத்ய-சரணமுபகம்ய-அஜ்ஞாநநிவ்ருத்த்யாதே: க்ருத்ஸ்நஸ்யைதஸ்ய ஸாதநஹேதோ: ப்ரவ்ருத்தி: புராணீ-புராதநீ ப்ரஸ்ருதா। புராதநாநாம் முமுக்ஷூணாம் ப்ரவ்ருத்தி: புராணீ। புராதநா ஹி முமுக்ஷவோ மாமேவ சரணமுபகம்ய நிர்முக்தபந்தா: ஸஞ்ஜாதா இத்யர்த:॥

*அவ—நெடுநாளாய் வந்த—ஸத்துவம் முதலான குணங்களாலே ஏற்படும்—ஸுகங்களின் ஆசையும், அதை உண்டுபண்ணுவதான கெட்ட அறிவும்* 1 *என்னமாய்ப் போகும் என்றால், சொல்லுகிறார்—*

*இந்தத்தப்பான அறிவும், கெட்ட ஆசையும் போகிறதற்காக எல்லா உலகங்களையும் உண்டு பண்ணின* 2 *பகவானையே கெஞ்ச வேணும். அவராலேதானே இவைகளெல்லாம் நெடுநாளாகப் பெருகிவருகிறது* 3.

*மற்றொருபாடம்—அந்தபகவானை கெஞ்சிக்கேட்டுக்கொண்டு தான் ஸம்ஸாரத்தைப் போக்குகிறது என்பது* 4 *வெகுகாலமாய் நாளதுவரையில் நடந்துவருகிறது.* [4]

நிர்மாநமோஹா ஜிதஸங்கதோஷா அத்யாத்மநித்யா விநி
வ்ருத்தகாமா:। த்வந்த்வைர்விமுக்தா: ஸுகது:கஸம்ஜ்ஞை
ர்கச்சந்த்யமூடா: பதமவ்யயம் தத் ॥ ||௫||

---

1. *ஒழிவாகிய கெட்டியான கோடாலி அகப்பட்டாலன்றோ, ஸம்ஸாரமாகிய மரத்தை வெட்டலாம். அது ஸம்ஸாரிகளுக்கு எப்படி அகப்படும்? என்கிற ஸந்தேஹத்தை அடுத்த சுலோகத்தாலே தீர்க்கிறார்.*

2. *எந்த பகவானுடைய கட்டளைகளை மீறினதாலே பந்தமுண்டாயிருக்கிறதோ, அவரை ஸந்தோஷப் படுத்தினால், அவரே அந்தக்கட்டைத்தரித்து விடுவர் என்று கருத்து.*

3. *இது 7—வது அத்தியாயம் 14—வது சுலோகத்தில் சொல்லப்பட்டது.*

4. *முன்காலத்திலிருந்த முமுக்ஷுக்கள் (ஸம்ஸாரத்தைப் போக்க ஆசைப்பட்டவர்கள்) பகவானையே கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, பந்தத்தை (கட்டை) ப்போக்கினார்கள் என்று "புராணீ" என்கிற சொல்லாலே காட்டப்பட்டது. புராணீ என்பதற்கு நெடுநாளாய் வந்த என்று பொருள்.*

एवं मां शरणमुपगम्य, निर्मानमोहाः - निर्मुक्तानात्मन्यात्माभिमानरूपमोहाः। जितसङ्गदोषाः - जितगुणमयभोगसङ्गरूपदोषाः। अध्यात्मनित्याः - आत्मनि यज्ज्ञानं तदध्यात्मम्, तन्नित्याः आत्मज्ञाननिरताः। विनिवृत्ततदितरकामाः, सुखदुःखसंज्ञैर्द्वन्द्वैर्विमुक्ताः। अमूढाः - आत्मानात्मस्वभावज्ञाः। तदव्ययं पदं गच्छन्ति - अनवच्छिन्नज्ञानाकारमात्मानं यथावस्थितं प्राप्नुवन्ति। मां शरणमुपगतानामात्मप्राप्तिपर्यवसानं सुकरमित्यभिप्रायः॥ ॥५॥

1 இப்படி என்னைச் சரணாகதி பண்ணி (கெஞ்சிக் கேட்டுக் கொண்டு), ஆத்மா என்பது உடம்புதான் என்கிற தப்பு எண்ணங்களும், ஆசையாகிற தோஷமும் போய், 2 எப்பொழுதும் ஆத்மாவையே நினைத்துக்கொண்டு, மற்ற ஸங்கதிகளில் 3 ஆசையொழிந்து, ஸம்ஸாரத்தில் ஏற்படும் ஸுகதுக்கங்களை 4 நினையாமல், ஆத்மாவையும் உடம்பையும் 5 உள்ளபடி (வெவ்வேறாக) அறிந்து, அழிவில்லாத அந்த வஸ்துவை அடைகிறார்கள். அதாவது-6 அளவில்லாத அறிவையே ஸ்வபாவமாக உடைய ஆத்மா

1. கீழ்ச்லோகத்தில் சொன்ன ஸங்கதியை இந்த ச்லோகத்தில் விரிவாய்ச் சொல்லுகிறது.

2. யோகம் செய்கிறவேளையில் அதை இடைவிடாமல் நினைப்பது; மற்றவேளைகளிலும் பெரும்பாலும் நினைப்பது.

3. ச்லோகத்தில் "விநிவ்ருத்த" என்ற சொல்லில் 'வி' என்கிற சொல்லுக்கு விசேஷமாக என்று அர்த்தம். விசேஷமாய் ஒழிவதாவது விஷயங்கள் கிட்ட இருக்கும்போதும் அவைகளைக் கவனிக்காமை.

4. ஆத்மாவைப் பார்ப்பதற்கு முன்னாலே துக்கங்களைப் பொறுத்துக் கொள்ளுவது. பிறகு துக்கமே வருவதில்லை.

5. முதலில் ஆத்மாவும், உடம்பும் ஒன்று என்கிற எண்ணம் இல்லாமை சொல்லப்பட்டது. இங்கே அந்த எண்ணம் போனதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. ஆத்மாவுக்கும், உடம்புக்கும் வேற்றுமையைக்காட்டும் அடையாளங்களை அறிந்தால்தான், அந்த எண்ணம் போகும்.

6. இது ச்லோகத்திலிருக்கிற "பதம்" என்ற சொல்லின் பொருள் கர்மம் அடியோடு போன ஆத்மஸ்வரூபம் அடையவேண்டியதாகை

வை உள்ளபடி பார்த்து ஸந்தோஷப்படுகிறார்கள். என்னைக்கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுவதினால், நான் ஸந்தோஷத்தை அடைந்து, அவர்களுக்கு முடியாத இந்த வேலைகளை வெகு ஸுகமாக முடித்து வைக்கிறேன். 1. [5]

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ ||௬||

तत्-ज्योतिः, न सूर्यो भासयते, न शशाङ्कः, न पावकश्च । ज्ञानं हि सर्वस्य प्रकाशकम्; बाह्यानि तु ज्योतींषि विषयेन्द्रियसम्बन्धविरोधितमोनिरसनद्वारेणोपकारकाणि । अस्य च प्रकाशको योगः । तद्विरोधि चानादिकर्म । तन्निवर्तनं चोक्तं अमानित्वादिभिः । यद्गत्वा पुनर्न निवर्तन्ते, तद्धाम परं ज्योतिः, मदीयं मद्विभूतिभूतमित्यर्थः । ज्योतींषि हि प्रकाशकत्वेन

---

யால், அதையும் பதம் என்று சொல்லுவதுண்டு. பதம் என்கிற சொல் பகவானையும், வைகுண்டமென்கிற லோகத்தையும் சொல்லும். ஆனால் இங்கே அவைகள் அந்த 'பதம்' என்ற சொல்லுக்குப் பொருளல்ல. ஏனென்றால், அடுத்த ச்லோகத்தில் "பதம்" என்று சொல்லப்பட்டதை "மமதாம"(என்னுடைய ஜ்யோதிஸ்ஸு)என்று சொல்லுவதாலே, பகவானைக்காட்டிலும் வேறென்று ஏற்படுகிறது. பதம் என்கிற சொல் வைகுண்டத்தையும் சொல்லவில்லை. அது இருக்கிறதென்றுமாத்திரம் தெரிந்துகொண்டால் போதும்; தேடவேண்டியதல்ல, தியானம்பண்ணித் தேடவேண்டியது ஜீவாத்மஸ்வரூபம் தான்.

1. இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்ட ஆறுஸங்கதியில் ஒன்றால் ஒன்று வருகிறது. உடம்பே ஆத்மா என்கிற தப்புஎண்ணம் போனால், விஷயங்களில் ஆசைபோகும். ஆசைபோனால், ஆத்மஸ்வரூபத்தை நினைக்கலாம். அது மிகவும் இன்பமாயிருப்பதாலே, அதினுடைய நினைவே விஷயங்களில் ஆசையை ஒழித்துவிடும். ச்லோகத்தில் "ஸங்கம், காமம்" என்ற இரண்டு சொற்கள் இருக்கின்றன. இரண்டுக்கும் ஆசையென்றுதான் பொருள். ஆனால் ஸங்கத்தினால் காமமுண்டாகிறது, 2-வது அத்தியாயம் 62-வது ச்லோகத்தைப் பார்க்க.

தஸ்ய பாஸகேஷ்வாதித்யாதீநி ஹி ஜ்யோதீம்ஷி ந ஜ்ஞாநஜ்யோதிஷ: ப்ரகாஶகாநி ஜ்ஞாநமேவ ஸர்வஸ்ய ப்ரகாஶகம்॥ ||௬||

ஆத்மாவை உள்ளபடி அறிந்தால், இப்போது படுகிற ஸம்ஸார வருத்தம் தீரும். அந்த ஆத்மஸ்வரூபம் என்கிற தேஜஸ்ஸை ஸூர்யன், சந்திரன், அக்கினி—இவைகளைக்கொண்டு 1 காண முடியாது. யோகத்தினால் (தியானத்தினால்) தான் ஆத்மாவைப் பார்க்கவேணும். மற்ற விஷயங்களிலும் வெளிச்சம் வஸ்துக்களைக் காட்டவில்லை. அறிவுதான் காட்டுகிறது கண் அந்த வஸ்துக்களில் பரவுவதற்கு இடைஞ்சலான இருட்டை மாத்திரம் போக்கி உதவுகிறது. யோகத்தை நெடுநாளாய் வந்த கர்மம் தடுக்கிறது. அதைப்பகவானைச் சரணாகதி பண்ணுவதால் ஏற்படுகிற ஒழிவினால் தொலைக்கவேணும். எந்த ஆத்மஸ்வரூபத்தை அடைந்தால் மறுபடியும் ஸம்ஸாரத்தை அடையமாட்டார்களோ, அந்தமிகவும்2 உயர்ந்த தேஜஸ்ஸு என்னுடைய—என்னை விட்டுப்பிரியாமல் எப்பொழுதும் என்னுடன் சேர்ந்திருக்கிற—பிரகாரரூபமான 3 ஸொத்து. 4 [6]

1. ஒருவன் இருட்டில் ஒரு வஸ்துவைப்பார்த்துப் பயப்படுகிறான். அந்தபயம் ஸூரியன் புறப்பட்டாலும், விளக்கைக் கொண்டுபோனாலும், அங்கே இருக்கும் வஸ்துவை உள்ளபடி பார்ப்பதினாலே போய்விடுகிறது. ஆத்மாவைப்பார்ப்பதற்கு அந்தமாதிரி உதவியையும் வெளிச்சத்தால் செய்யமுடியாது.

2. அறிவுள்ள ஆத்மா இல்லாவிட்டால், ஸூரியன் முதலான வெளிச்சங்களால் என்னப்பிரயோஜநம். ஆகையால் ஆத்மாதான் எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த தேஜஸ்ஸு.

3. என்னுடைய ஸொத்து என்று சொல்லுவதின் கருத்து—முக்தனாகும்போது ஜீவன் எல்லாவிதத்தாலும் பகவானைப்போல் ஆய்விடுகிறானென்று சொல்லுவதால், ஸ்வதந்திரனாக ஆய்விடுவானோ என்கிற ஸந்தேஹம்வேண்டாம். அப்போதும் பகவானுக்குட்பட்ட அவனுடையஸொத்து—என்று. ஒருவனுக்குச் சொத்தான வீடுபோலன்று பகவானுக்கு ஜீவன். ஜீவன் எப்போதும் பகவானுடன் சேர்ந்தே அவனுக்குப் பிரகாரமாகவே இருக்கிறான்.

4. இந்த சுலோகம் ஜீவனைத்தான் சொல்லுகிறது. பகவானைச் சொல்லவில்லை. ஏனென்றால்—(1) இதில் "தத்" (அது) என்கிற

மமைவாம்ʼஶோ ஜீவலோகே ஜீவபூ⁴த: ஸநாதந: ।
மந:ஷஷ்டா²நீந்த்³ரியாணி ப்ரக்ருʼதிஸ்தா²நி கர்ஷதி ॥ ॥7॥

ஏவம்ʼ ஸ்வரூபேண ஸநாதநோ மமாம்ʼஶ ஏவ ஸந் கஶ்சித³நாதிகர்மரூபாவித்³யாவேஷ்டிதோ ஜீவபூ⁴தோ ஜீவலோகே வர்தமாநோ தே³வமநுஷ்யாதி³ப்ரக்ருʼதிபரிணாமவிஶேஷஶரீரஸ்தா²நி மந:ஷஷ்டா²நீந்த்³ரியாணி கர்ஷதி । கஶ்சிச்ச பூர்வோக்தேந ஸம்யக்³ஜ்ஞாநாக்²யயா வித்³யயா முக்த: ஸ்வேந ரூபேணாவதிஷ்ட²தே । ஜீவபூ⁴தஸ்து ஸங்குசிதஜ்ஞாநேந ஸ்வயம் கர்மரூபப்ரக்ருʼதிபரிணாமவிஶேஷரூபஶரீரஸ்தா²நாமிந்த்³ரியாணாம் மந:ஷஷ்டா²நாமீஶ்வர:, தாநி கர்மாநுகு³ணமிதஸ்தத: கர்ஷதி ॥ ॥7॥

அவ—இப்படி எல்லா ஜீவன்களும் பகவானுடைய ஸொத்தாய், அவருடைய அம்சமாயிருந்தால், நித்திய ஸூரிகளைப் போலே எல்லாஜீவன்களும் பரிசுத்தர்களாக ஏன் இருக்கவில்லை என்றால்—கர்மத்துக்கு உட்பட்ட ஜீவனும் பகவானுடைய ஸொத்துத்தான் என்று சொல்லி, இவன் பத்தன், இவன்முக்தன் என்கிற ஏற்பாட்டுக்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—

கீழ்ச்சொன்னபடி இயற்கையில் ஒருவிதக் குற்றமுமில்லாதவர்களும், எப்பொழுதும் இருப்பவர்களுமான எல்லா ஜீவன்களும் என்னுடைய ஸொத்துத்தான். ஆனால் அவர்களில் சிலர் நெடுநாளாய் வந்த கர்மத்தினால் கட்டுப்பட்டு, அழிவுள்ள லோகங்களில் தேவன், மனிதன் முதலான உடம்புகளை அடைந்து, அறிவும்,சக்தியும் மிகவும்குறைந்து, அந்தஉடம்பிலிருக்கும் மனஸ்ஸுடன் சேர்ந்த ஐந்து இந்திரியங்களுக்குமாத்திரம் யஜமானர்களாய், அவைகளைக்கர்மத்துக்குத் தகுந்தபடி அங்குமிங்கும் இழுக்கிறார்

---

சொல் இருக்கிறது. முன்னால் சொன்னதைத்தான் அது காட்டும். முன்னால் "அழிவில்லாதஅந்தவஸ்துவை" என்றுஜீவனைத்தான் சொல்லிற்று. (2) அடுத்த சுலோகத்தில் ஜீவனையே சொல்லப்போகிறது. (3) இந்த 6—வது சுலோகத்திலும் ஸ்வயம்பிரகாசம் என்கிற குணத்தைக்காட்டும் "தாம" (தேஜஸ்ஸு) என்கிற சொல் இருக்கிறது.

கள். அதாவது—அவைகளைக்கொண்டு வேலைசெய்கிறார்கள். சிலர் கீழ்ச்சொன்னபடி என்னைச் சரணமடைந்து, கர்மத்தைப்போக்கி, ஒருவித தொந்தரவுமில்லாமலிருக்கிறார்கள். [7]

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: ।
க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஶயாத் ॥௮॥

யச்சரீரமவாப்நோதி, யஸ்மாச்சரீராதுத்க்ராமதி, தத்ராய மிந்த்ரியாணாமீஶ்வர: ஏதாநீந்த்ரியாணி ஸூக்ஷ்மபூதைஸ்ஸஹ க்ருஹீத்வா ஸம்யாதி । வாயுர்கந்தாநிவாஶயாத் - யதா வாயு: ஸ்ரக்சந்தநகஸ்தூரிகாத்யாஶயாத் தத்ஸூக்ஷ்மாவயவைஸ்ஸஹ கந்தாந் க்ருஹீத்வா அந்யத்ர ஸம்யாதி, தத்வத் ॥ ॥௮॥

ஜீவன் எந்த உடம்பை அடைகிறானோ, எந்தஉடம்பிலிருந்து இறக்கும் காலத்தில் வெளிக்கிளம்புகிறானோ; அந்தஉடம்பிலிருக்கும் இந்திரியங்களுக்கு யஜமாநனாய், அந்த இந்திரியங்களுடனும், சின்னதான (ஸூக்ஷ்மமான—கண்ணுக்குத்தெரியாத) பூமி முதலான ஐந்துபூதங்களுடனும் சேர்ந்தே யிருக்கிறான். அதாவது—பிறக்கும்போது அவைகளுடன் வருகிறான். இறக்கும்போதும் அவைகளுடனே போகிறான். காற்றானது பூமாலை, சந்தனம், கஸ்தூரிமுதலான வாஸனைத் திரவியங்களின் ஸூக்ஷ்மமான சில பாகங்களை எடுத்துக்கொண்டு போவதுபோல. [8]

அவ— காநி தாநீந்த்ரியாணீத்யத்ராஹ—

ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்ராணமேவ ச ।
அதிஷ்டாய மநஶ்சாயம் விஷயாநுபஸேவதே ॥ ॥௯॥

மந:ஷஷ்டாநீந்த்ரியாண்யதிஷ்டாய ஸ்வஸ்வவிஷய ப்ரவணாநி க்ருத்வா, தாந் ஶப்தாதீந் விஷயாநுபஸேவதே-அநுபுங்க்தே ॥ ॥௯॥

அவ—எப்போதும் ஜீவனுடன் சேர்ந்திருக்கிற இந்திரியங்கள் எவைகள் என்றால், சொல்லுகிறார்—

காது, கண், த்வக்கு, நாக்கு, மூக்கு, மனது என்கிற ஆறு இந்திரியங்களை அதனின் வேலைகளைச் செய்யும்படியாகச் செய்து, சப்தம்முதலான விஷயங்களை அநுபவிக்கிறான். [9]

உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம் ।
விமூடா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: ॥௧௦॥

ஏவம் குணாந்விதம் ஸத்த்வாதிகுணமயப்ரக்ருதிபரிணாமவிசேஷமநுஷ்யத்வாதிஸம்ஸ்தாநபிண்டஸம்ஸ்ருஷ்டம் பிண்டவிசேஷாதுத்க்ராமந்தம், பிண்டவிசேஷே ஸ்திதம் வா குணமயாந் விஷயாந் புஞ்ஜாநம் வா கதாசிதபி ப்ரக்ருதிபரிணாமவிசேஷமநுஷ்யத்வாதி பிண்டாத் விலக்ஷணம் ஜ்ஞாநைகாகாரம் விமூடா நாநுபஶ்யந்தி । விமூடா: மநுஷ்யத்வாதிபிண்டாகாராத்மாபிமாநிந: । ஜ்ஞாநசக்ஷுஷஸ்து பிண்டாத்மவிவேகவிஷயஜ்ஞாநாஸ்து ஸர்வாவஸ்த்தஸ்வப்யேநம் விவிக்தாகாரமேவ பஶ்யந்தி ॥ ॥௧௦॥

அவ—ஜீவன்களுக்குக் கர்மங்களாகிற விலங்கும், உடம்பாகிற ஜயிலும், அதற்குள் நுழைவதிலும், அதைவிட்டு வெளிக்கிளம்புவதிலும் உள்ள வருத்தமும், அதிலிருக்கும்போது விஷம் கலந்த தேன்போன்ற—மிகவும் இளப்பமான—விஷயங்களை அநுபவிப்பதும் சொல்லப்பட்டன. மேலே ஜயிலுக்குக்காரணம் பகவானுடைய சொத்தாகிய ஆத்மஸ்வரூபத்தைத் திருடினது (அதாவது—தன்னுடைய சொத்தென்று எண்ணுவது) என்றுகாட்டி, ஆத்மஸ்வரூபம் காணப்படாததால், இல்லையென்கிற சங்கையைக்கண்டிக்கிறார்.

மனிதன் முதலான உடம்பையே ஆத்மாவாக எண்ணுகிறவர்கள் (அதாவது—உடம்பு தவிர, ஆத்மாஎன்று ஒன்றிருக்கிறது என்று அறியாதவர்கள்) ஸத்துவம் முதலான மூன்றுகுணங்களுள்ள உடம்புடன் சேர்ந்த ஜீவனை, அந்தஉடம்பிலிருக்கும்போதும், விஷயங்களை அநுபவிக்கும்போதும், அதைவிட்டுக்கிளம்பும்போதும் ஒருக்காலும் உடம்பைக்காட்டிலும் வேறாகவும், அறிவையே இயற்கையாக உடையவனாகவும் நினைக்கிறதில்லை. உடம்புவேறு. ஆத்மா வேறு என்று ஞானக்கண்ணால் அறிந்தவர்கள் எல்லா ஸமயங்களிலும் இவனை வேறாகவே நினைக்கிறார்கள். [10]

யதந்தோ யோகிநஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்யவஸ்தி2தம்| யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்யசேதஸ: ||௧௧||

மத்ப்ரபத்திபூர்வகம் கர்மயோகாதிஷு யதமாநா யோகிநஸ்தை: ஶுத்தாந்த:கரணா யோகாக்யேந சக்ஷுஷா ஶரீரே அவஸ்திதமபி ஶரீராத்விவிக்தம் ஸ்வேந ரூபேணாவஸ்திதமேநம் பஶ்யந்தி | யதமாநா அப்யக்ருதாத்மாநோ மத்ப்ரபத்திவிரஹிணோ அஸம்ஸ்க்ருதமநஸ: | அத ஏவாசேதஸ: - ஆத்மாவலோகநஸமர்தமநோரஹிதா: | நைநம் பஶ்யந்தி || ||௧௧||

என்னைச் சரணாகதிபண்ணி, கர்மயோகம் முதலானவைகளைச் செய்கிறவர்கள் அவைகளாலே மனது தெளிந்து, யோகம் (த்யானம்) என்கிறகண்ணாலே, உடம்பிலிருந்தாலும், உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மஸ்வரூபத்தை அவனுக்கு ஏற்பட்ட நிலைமையோடு இருப்பவனாகப் பார்க்கிறார்கள். என்னைச் சரணாகதிபண்ணாமல், கர்மயோகம் முதலியவைகளை ஆரம்பித்தவர்கள் மனது [1] ஸம்ஸ்காரத்தை (தெளிவையுண்டுபண்ணக்கூடிய வேலையை) அடையாமல், மனது தெளியாமலும், ஆத்மாவைப் பார்க்க சக்தியில்லாமலும் இருப்பதால், ஆத்மாவைப் பார்க்கிறார்களில்லை. [11]

அதைவம் ரவிசந்த்ராக்நீநாம் யஸந்நிக்ருஷ்டவிரோதிதமோ நிரஸநேந ஸ்வாப்ரகாஶ்யப்ரகாஶகாநாம் ஜ்யோதிஷாமபி ப்ரகாஶகஜ்ஞாநஜ்யோதிராத்மா உக்த: ஸ்வாத்மந: ஸம்பந்தி ப்ரகீர்த்யதே — "தஸ்மாத் ஸர்வம், மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந:" இதி| இதாநீம் த்ரிவிதசேதநாசேதநாத்மகஸ்ய ஆதித்யாதீநாம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிரபி ஸஹேதுகமாஹ—

யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதேऽகிலம் |
யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி மாமகம் || ||௧௨||

1. ஸம்ஸ்காரமில்லாத மனது வேலைக்கு உதவாமையால், இல்லாதது போல.

அகிலஸ்ய ஜகதோ பாஸகமேதேஷாமாதித்யாதீநாம் யத்தேஜஃ, தந்மதீயம் தேஜஃ| தைஸ்தைராராதிதேந மயா தேப்யோ தத்தமிதி வித்தி || ||௧௨||

அ,வ—ஸூரியன், சந்திரன், அக்கினிமுதலான வெளிச்சங்கள் வஸ்துக்களின் பார்வைக்கு இடைஞ்சலான இருட்டைப்போக்கி, இந்திரியங்களுக்கு உதவிசெய்கிறபடியால், ஜ்யோதிஸ்ஸு என்று சொல்லப்படுகின்றன. அவைகள் வஸ்துக்களைக்காட்டுகிறதில்லை. காட்டுகிறது அறிவுள்ளஆத்மாதான். அந்த தேஜஸ்ஸுக்களுக்கும் பிரகாசமான(அவைகளால்பிரயோஜனத்தைஅடைகிறதான)-பத்தன், முக்தன் என்ற இருவகையான—அறிவை வெளிச்சமாக வுடைய—ஆத்மா பகவானுடைய ஸொத்து என்று சொல்லப்பட்டது.(சு—6, 7). இப்போது பிரகிருதியிலிருந்து உண்டாகியிருக்கிற ஸூரியன் முதலானவைகளுடைய தேஜஸ்ஸும் (வெளிச்சமும்) பகவானுடைய ஸொத்து (பகவானால் கொடுக்கப்பட்டது) என்று சொல்லுகிறார்—

எல்லாலோகங்களையும் காட்டுகிற ஸூரியன் முதலானவைகளுடைய தேஜஸ்ஸு என்னுடையது. என்னை அவர்கள் சிலசேவைகளால் ஸந்தோஷப்படுத்தினபடியால்[1] என்னுடைய தேஜஸ்ஸை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்—என்றறிநீ. [ 12 ]

சுவ— ப்ருதிவ்யாஶ்ச பூததாரிண்யா தாரகஶக்திரபி மதீயேத்யாஹ—

காமாவிஶ்ய ச பூதாநி தாரயாம்யஹமோஜஸா | புஷ்ணாமி சௌஷதீஸ்ஸர்வாஸ்ஸோமோ பூத்வா ரஸாத்மகஃ ||

---

1. எல்லாம் இயற்கையில் பகவானுடையஸொத்து. கர்மங்களால் பகவானை ஸந்தோஷப்படுத்தினவர்களுக்கு அவர் கொஞ்சகாலம் அவைகளைக் கொடுத்துவைக்கிறார். ஆகையால் ஸூரியன் முதலானவைகளிடமிருக்கும் வெளிச்சம்பகவானதுதான்என்று இங்கேசொல்லிற்று.சிலர் சொல்லுகிறார்கள்—ஸூரியன் தேஜஸ்ஸு என்னுடையது என்று சொல்லியிருக்கிறது.ஸூரியனுடையது என்னுடையதாகஎன்னமாகஆகும். ஆகையால்ஸூரியனும், நானும் ஒன்று என்று சொல்லப்படுகிறது—என்று. அதுபிசகு. ஏனென்றால், ஸூரியனிடத்திலிருப்பது என்று சொல்லியிருக்கிறதேயொழிய, ஸூரியனுடையது என்று சொல்லவில்லை,

அஹம் ப்ருதிவீமாவிச்ய ஸர்வாணி பூதாந்யோஜஸா-ப்ரதிஹதஸாமர்த்யேந தாரயாமி ॥ ததா அஹமம்ருதரஸமய: ஸோமோ பூத்வா ஸர்வா ஓஷதீ: புஷ்ணாமி ॥ ॥௧௩॥

அவ—எல்லாவஸ்துக்களையும் பூமி தூக்குகிறது. பூமியினுடைய அந்தசக்தி என்னுடையது என்று சொல்லுகிறார்—

நான் பூமிக்குள்ளே நுழைந்து, ஒருவராலும் தடுக்கமுடியாத என்னுடைய சக்தியினாலே எல்லாப் பிராணிகளையும் 1 தூக்குகிறேன். 2 அமிருதரஸமான சந்திரனாகஆகி, எல்லாமரம் செடிகளையும் வளர்க்கிறேன் (காப்பாற்றுகிறேன்.) [13]

அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாச்ரித: ।
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம் ॥௧௪॥

அஹம் வைச்வாநரோ ஜாடராநலோ பூத்வா ஸர்வேஷாம் ப்ராணிநாம் தேஹமாச்ரித:, தைர்புக்தம் பக்ஷ்யபோஜ்யலேஹ்யபேயாத்மகம் சதுர்விதமந்நம் ப்ராணாபாநவ்ருத்தி ஸமாயுக்த: பசாமி ॥ ॥௧௪॥

---

1\. உலகத்தில் ஒரு விசுபலகையில் ஒரு வஸ்துவை வைத்தால், அந்தப்பலகையின் சேர்க்கை அந்தவஸ்து கீழே விழுவதைத்தடுக்கிறது. அதனால் அந்தப்பலகை அந்தவஸ்துவைத் தூக்குகிறதென்று சொல்லுகிறது. ஒருமனிதன் உள்ளே போவதை ஒருசுவர் தடுக்கிறது. ஏனென்றால், அந்த சுவருக்குள் அவனால் நுழையமுடியவில்லை. ஒருஉள்ளில் பெரியநெருப்பு எரியும்போது, கதவுதிறந்திருந்தாலும், அந்த நெருப்பின் கானல் நுழையமுடியாமல் தடுக்கிறது. அந்த கானல் சுவர்போலல்ல. ஆனாலும் தடுப்பதில் சுவரில்காட்டிலும் அதிகம். பகவான் பலகைபோலும், சுவர்போலுமல்ல, நினைவினால் தூக்குகிறார். நெருப்பு தனசக்தியினால் தடுப்பதுபோல. எவ்வளவு பெரிதாக இருந்தாலும், இதுகீழே விழவேண்டாமென்று அவர் நினைத்தால், அதுவிழுவதில்லை. ஸூரியன் கீழே விழாமலிருப்பது பகவானுடைய நினைவினால்தான்.

2\. பகலில் கடும்வெய்யிலினால் தபித்தமரங்கள் சந்திரனுடைய நிலவினால் குளிர்ச்சியை அடைகின்றன. சந்திரன் என்பது அனலில்லாமல் குளிர்ந்த தண்ணீர்போன்றது. பிணத்தின்பேரில் அமிருதம் என்பதைத்தடவினால், அதின்சக்தியினால் மறுபடியும்உயிர்வருமாம். அந்த சக்தியுள்ளதை அமிருதம் என்றுசொல்லுகிறார்கள்.

நான் எல்லாப் பிராணிகளுடைய வயிற்றில் இருக்கும் நெருப்பாகஆகி, பிராணன், அபானன் என்கிற காற்றேடுகூடி அந்தப் பிராணிகள் சாப்பிடுகிற நாலுவிதமான ஆஹாரத்தையும் சமைக்கிறேன். அதாவது—ஜெரிக்கப்பண்ணுகிறேன். நான்குவித ஆஹாரமாவது:—கடித்தும், உருஞ்சியும், நாக்கினல் நக்கியும், குடித்தும் சாப்பிடப்பட்டது. [ 14 ]

[illegible]

[illegible]

[illegible]

ஏவம் ப்ராணிநாம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஹேதுதீதி ப்ராண ப்ரவ்ரு-
த்திஹேதுதாவிஷயம் ஸாமர்த்யாதிநிர்வர்ணஜந்யம் ப்ராணா-
நாம் ஸ்வாதீநம் ஜ்ஞாநம்| ஸர்வைஸ்ஸர்வைஸ்தைஸ்ச| வேதைஸ்ச ஸ
ர்வைரஹமேவ வேத்ய:| அக்நிஸூர்யவாயுஸோமேந்த்ர
ராதிநாம் வேதப்ரதிபாத்யாநாம் வேதைஸ்ஸர்வைஸ்த்ரவ்யாதிநா
ம் ஸர்வேஷு வேதேஷு ஸர்வைர்வேதைரஹமேவ வேத்ய:; தேவதாநா
ஷ்ட்ராதிரூபேணைவ வாத்ர| வேதாந்தக்ருத்-வேதாநாம் "இஷ்ட
ம் யஜேத ஸர்வாணம் யஜேதேத்" யாதீநாம் அந்த:-பலம்,
பலம் ஹி தத் ஸர்வம் வேதாநாம் பயஸ்யத்தி| அந்தக்ருத்-பல
க்ருத் — வேதோதிதஸ்ய கர்மண: பலப்ரதாதா ஹமேவேத்யர்த்த:|
தஸ்மாத் வைதிகைஸ்ச 'யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஸ்ரத்
யார்சிதுமிச்சதி' இத்யாதி "தஸ்யைவ தத: காமாந்மயைவ
விஹிதாந் ஹிதாநி"தி, "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச
ப்ரபுரேவ ச"தி ச| வேதவிதேவ சாஹம்-வேதவித் அஹமேவ|
ஸர்வம் வேதவிதாயிநம் வேதவேத்யமேவ வேத,ஐதரேய ந்யாய
வேதாந்தம் ஸ வேதே நாஸ வேதவிதித்யபிப்ராய: || ||௧௫||

அவ—இந்த இடத்தில் பகவானுடைய சொத்தான சந்திரனும், அக்கினியும் பகவானாகவே சொல்லப்பட்டன. இவைகளும், இன்னும் உலகத்திலிருக்கும் எல்லாவஸ்துக்களும் பகவானுக்கு சொத்தாகையால், அவரைக்காட்டிலும் வேறாக இருந்தாலும், அவைகள் பகவான் என்றே வேதஞ்சொல்லுகிறது. அதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—

அந்தச் சந்திரனும், அக்கினியும், இன்னும் எல்லாப்பிராணிகளும் ஒருகாரியத்தைச் செய்வதோ, செய்யாமலிருப்பதோ, அவைகளுக்குக் காரணமான அறிவு உண்டாவதற்கு இடமான அவர்களுடைய ஹிருதயத்தில், எல்லாவற்றையும் என்னுடைய நினைவினால் ஏவிக்கொண்டு, ஆத்மாவாக இருக்கிறேன். ஆகையால் எல்லா ஆத்மாக்களுக்கும் நினைவும், அறிவும், மறதியும் (அல்லது ஊஹிப்பதும்)—எல்லாம் என்னால்தான் உண்டாகின்றன. அக்கினி, ஸூரியன், வாயு, ஸோமன், இந்திரன் முதலான வேதத்திலிருக்கும்

எல்லாச் சொற்களும் அக்கினி, ஸூரியன் முதலானவர்களைச் சொன்னபோதிலும், அவர்களுக்கு ஆத்மாவான என்னைத்தான் சொல்லுகின்றன. உடம்பைச்சொல்லும்—பெருத்தவன் என்கிற—சொல் அதிலிருக்கும் ஆத்மாவைச்சொல்லுவதுபோல. வேதத்தில் சொல்லப்பட்ட யாகம் முதலான கர்மங்களுக்கு பலன்களைக் கொடுப்பவனும் நானே. எல்லாவேதங்களும் என்னைத்தான் சொல்லுகின்றன என்கிறஸங்கதி எனக்குத்தான் தெரியும். இப்படியல்லாமல் வேறாக அறிந்தவன் வேதத்தை உள்ளபடி அறிந்தவனில்லை.

நினைவாவது—(ஸ்ம்ருதி:) கண் முதலான இந்திரியங்களால் ஒருவன் ஒரு வஸ்துவை அறிந்து, கொஞ்சகாலம் ஆனபிறகு, அதை மறந்துபோகிறான். பிறகு ஒரு ஸமயத்தில் சில வஸ்துக்களைப் பார்க்கும்போது, முன் மறந்துபோன வஸ்துவின் நினைவு வருகிறது. அதைத்தான் ஸ்ம்ருதியென்று சொல்லுகிறது. அந்தநினைவு எப்படி வருகிறது என்றால்—முன்னே உண்டான பார்வையால் ஆத்மாவில் ஸம்ஸ்காரம் என்று ஒன்று உண்டாகிறது. இப்போது உண்டாகிற ஒரு பார்வை முதலானதால், அந்த ஸம்ஸ்காரம் கிளம்பி, நினைவுஉண்டாகிறது. உதாரணம்—ஒருஸமயத்தில் ஒருவன் ஒருயானையையும் யானைக்காரனையும் பார்த்தான். பார்த்து ஒரு வருஷமாயிற்று. பிறகு யானைக்காரனைமட்டும் பார்த்தான், உடனே அந்த யானையின் நினைவுவருகிறது. யானையைப்பற்றின நினைவு ஸம்ஸ்காரத்தினால்தான் உண்டாகிறது. கண்முதலானதினால் இல்லை. அறிவு (ஞானம்) என்பது கண்முதலான இந்திரியங்களாலும், ஹேதுக்களாலும் (அதாவது—ஒரு இடத்தில் புகையைப் பார்த்து அதில் நெருப்பு இருக்கிறதென்று அறிவது), சொல்லுகளாலும், யோகத்தினாலும் வஸ்துக்களை அறிவது. ஸஹிப்பதாவது—யாகம் சுவர்க்கத்தைக் கொடுக்கிறதென்று ஒரு பிரமாணம் இருக்கிறது. பண்ணின உடனே போகிற யாகம் என்கிற வேலை வெகுநாள் கழித்துவரும் ஸுவர்க்கத்தை எப்படிக் கொடுக்கும் என்றால்—யாகம் என்பது ஒரு தேவதைக்கு ஒரு பதார்த்தத்தைக் கொடுப்பது. அதனால் ஸந்தோஷமடைந்த நிலையான அந்த தேவதை சுவர்க்கத்தைக் கொடுக்கிறது. உலகத்தில் ஒருவனுக்குஒருவன் அன்போடு சிலபண்டங்களைக் கொடுத்தால்,

வாங்கி ஸந்தோஷத்தை அடைந்தவன் கொடுத்தவனுக்கு வேண்டியவைகளைக்கொடுப்பதுபோல. ஆகையால் யாகத்தால் ஸ்வர்க்கமுண்டாகும் என்கிற பிரமாணம் ஸரிதான், தப்பு அன்று என்றுகண்டு பிடிப்பது ஊஹம். பிரமாணங்களின் கருத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவியான சில யுக்திகளால் உண்டாகிற அறிவை ஊஹம் என்று சொல்லுகிறது. [15]

𑌅𑌵 — 𑌅𑌥 𑌉𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌰𑌭𑍂𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 —

𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇 𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰 𑌏𑌵 𑌚 ।
𑌕𑍍𑌷𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍌 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍍𑌷𑌰𑌶𑌬𑍍𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌜𑍀𑌵𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌲𑌪𑌨𑍀𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑍍𑌷𑌰𑌣𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 । 𑌅𑌤𑍍𑌰𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌰𑍂𑌪𑍈𑌕𑍋𑌪𑌾𑌧𑌿𑌨𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌃 । 𑌅𑌕𑍍𑌷𑌰𑌶𑌬𑍍𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌃 𑌅𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 । 𑌸 𑌤𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌹𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍋 𑌨 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍋𑌽𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌯𑍋𑌗𑌰𑍂𑌪𑍈𑌕𑍋𑌪𑌾𑌧𑌿𑌨𑌾 । 𑌨 𑌹𑍀𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌨𑌾𑌦𑍌 𑌕𑌾𑌲𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤 𑌏𑌕 𑌏𑌵 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 "𑌬𑌹𑌵𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌗𑌤𑌾𑌃" । "𑌮𑌮 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌗𑌤𑌾𑌃" 𑌇𑌤𑌿 𑌚 ॥ ॥௧௬॥

அவ—நான் எல்லா வேதங்களுடைய உண்மையான அர்த்தங்களை அறிந்தபடியாலே, அவைகளுக்குள் முக்கியமான பொருளைச் சொல்லுகிறேன். கேள்.

க்ஷரன் (பத்தன்), அக்ஷரன் (முக்தன்) என்று இரண்டு புருஷர்கள் இருக்கிறார்கள்—என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று எல்லாருக்கும் தெரியும். அவர்களில் க்ஷரன் என்

பவர்கள்—பிறப்பும், இறப்பும் உள்ளவர்களாய்—நான்முகனுள்ள பிரும்மாமுதல் பச்சைப்புல், அல்லது புழுவரையிலுள்ள—எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் பிரகிருதியோடு சேர்ந்த—எல்லா ஜீவன்கள். அக்ஷரன் என்பவர்கள் பிரகிருதியின் சேர்க்கை நீங்கி, தன் நிலைமையோடிருக்கிற முக்தர்கள். அவர்களுக்குக் கர்மத்தினால் கொஞ்சகாலம் ஒரு உடம்பில் கட்டாயம் இருக்கவேண்டியதில்லாமையால், அவர்களைக்கூடஸ்தன் (பொது) என்று சொல்லுகிறது. [16]

உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: |
யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர: ||௧௭||

உத்தம:புருஷஸ்து தாப்யாம் க்ஷராக்ஷரஶப்தநிர்திஷ்டாப்யாம் பத்தமுக்தபுருஷாப்யாமந்ய:-அர்தாந்தரபூத:| பரமாத்மேத்யுதாஹ்ருத: ஸர்வாஸு ஶ்ருதிஷு| பரமாத்மேதி நிர்தேஶாதேவ ஹ்யுத்தம: புருஷோ பத்தமுக்தபுருஷாப்யாமர்தாந்தரபூத இதி கம்யதே| கதம்? யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்தி- லோக்யத இதி லோக:, தத்த்ரயம் லோகத்ரயம், அசேதநம் தத்ஸம்ஸ்ருஷ்டஶ்சேதநோ முக்தஶ்ச இதி ப்ரமாணாவகம்யமேதத்த்ரயம் ய ஆத்மதயா ஆவிஶ்ய பிபர்தி| ஸ தஸ்மாத்வ்யாப்யாத் பர்தவ்யாச்சார்தாந்தரபூத:| இதஶ்சோக்தாத் லோகத்ரயாதர்தாந்தரபூத:; யதோ(அ)ஸாவவ்யய ஈஶ்வரஶ்ச| அவ்யயஸ்வபாவோ ஹி வ்யயஸ்வபாவாதசேதநாத் தத்ஸம்ஸ்ருஷ்டசேதநாத் தத்ஸம்ஸர்கயோக்யாச்ச முக்தாதர்தாந்தரமேவ| ததா தஸ்ய லோகத்ரயஸ்யேஶ்வரஶ்சேஶிதவ்யாத் தஸ்மாதர்தாந்தரபூத:||

உத்தம (உயர்ந்த) புருஷன் என்பவன் மேற்சொன்ன இரண்டு வகுப்பார்களைக் காட்டிலும் வேறு ஜாதிக்காரர். அவர் பரமாத்மா (மிகவும் உயர்ந்த ஆத்மா) என்று எல்லா வேதங்களிலும் சொல்லப்படுகிறார். ஏனென்றால்—அறிவில்லாத பிரகிருதி, அதோடு சேர்ந்த ஜீவன் (பத்தன்), முக்தன் என்று பிரமாணங்களாலே அறியக்கூடிய இந்த மூன்றிலும் ஆத்மாவாய் நுழைந்து,

தூக்குகிறபடியால், நுழையப்பட்டு தூக்கப்படுவதைக் காட்டிலும் அவர் வேறு. வேறுகாரணமும் உண்டு. உடம்பு முதலான அறிவில்லாத வஸ்து உண்டாகிறது; அழிகிறது; அதுடன் சேர்ந்த ஜீவன் (பத்தன்)பிறப்பு, இறப்பு முதலான பலதொந்தரவுகளை அநுபவிக்கிறான். முக்தன் இவைகளை முன்னை அநுபவித்தான். பகவான் இவைகள் ஒன்றுமில்லாதவரும், இவைகளைப் போக்குகிறவரும் ஆயிருக்கிறார். ஆகையால்அவைகளைக்காட்டிலும்வேறு. மேலும், பகவான் அவைகளை ஆளுகிறார். அவைகள் ஆளப்படுமவைகள். ஆகையாலும் அவைகளைக்காட்டிலும் வேறுஜாதி. [17]

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥

यस्मादेवं स्वभावः क्षरं पुरुषमतीतोऽहम्, अक्षरान्मुक्तादप्युत्तमः; अतो लोके वेदे च पुरुषोत्तम इति प्रथितोऽस्मि – वेदार्थावलोकनाल्लोक इति स्मृतिरिहोच्यते, श्रुतौ स्मृतौ चेत्यर्थः । श्रुतौ तावत् 'परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः' इत्यादौ । स्मृतावपि 'अंशावतारं पुरुषोत्तमस्य ह्यनादिमध्यान्तमजस्य विष्णोः' इत्यादौ ॥ ॥௧௮॥

அவ—இப்படி பகவான் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் வேறுஜாதி என்பது பரமாத்மா என்கிற பெயரினால் தீர்மானிக்கப்பட்டது. அதுவே அதே மாதிரியான இன்னொரு பெயரினால் உறுதிப்படுத்தப்படுகிறது—

கீழ்ச்சொன்ன காரணங்களால் க்ஷரன், அக்ஷரன் என்கிற இருவகையாரைக்காட்டிலும்நான் [1] மேலாகஇருப்பதாலும் (அதா

1. முக்தன் பத்தனைக்காட்டிலுமுயர்ந்தவன். அவனைக்காட்டிலும் பகவான் உயர்ந்தவர். ஆகையால் மிகவும் உயர்ந்தவர்.

வது—அவர்களுடைய குற்றங்கள் ஒன்றும்ஒருகாலத்திலும் என்னிடத்தில் இல்லாமையாலும்), வேதத்திலும், ஸ்மிருதியிலும் என்னைப் புருஷோத்தமன்(மிகவும் உயர்ந்தபுருஷன்)என்று சொல்லியிருக்கிறது. [18]

யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் ।
ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ॥ ||௧௯||

ய: ஏவமுக்தேந ப்ரகாரேண புருஷோத்தமம் மாமஸம்மூடோ ஜாநாதி க்ஷராக்ஷரபுருஷாப்யாம் வ்யாப்திபரணஸ்வாம்யைரர்த்தாந்தரதயா விஜாதீயம் ஜாநாதி। ஸ ஸர்வவித் — மத்ப்ராப்த்யுபாயதயா யத்வேதிதவ்யம் தத்ஸர்வம் வேத। ஸர்வபாவேந மாம் பஜதே ச — மத்ப்ராப்த்யுபாயதயா நிர்திஷ்டாநி யாநி மத்பஜநாநி தை: ஸர்வைர்பஜநப்ரகாரைர்மாம் பஜதே। ஸர்வைர்மத்வேதநைர்மத்பஜநைஶ்ச யா ப்ரீதி:, உபயவிதா ஸா ப்ரீதிரநேந வேதநேந ஜாயதே॥ ||௧௯||

இப்படி புருஷோத்தமன் என்கிறசொல்லுக்குப் பொருள் சொன்னது—பகவானை அப்படியே நினைக்க வேண்டுமென்பதற்காக என்று காட்டிக்கொண்டு, பகவான்புருஷோத்தமன் (மிகவும் உயர்ந்தபுருஷன்) என்கிற அறிவை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்—

கீழ்ச்சொன்ன காரணங்களாலே (அதாவது—ஸ்வபாவத்தில் மாறுதலில்லாமை, எல்லாவற்றிலும் நிறைந்து, அவைகளைத் தாங்கி ஏவுகை—இவைமுதலானவைகளாலே) புருஷோத்தமனான என்னை எவன் மயங்காமல், உள்ளபடி க்ஷரன், அக்ஷரன் என்றவர்களைக்காட்டிலும் வேறுஜாதியென்று அறிகிறானோ; அவன் என்னை அடைவதற்காக அறியவேண்டிய எல்லா ஸங்கதிகளையும் அறிந்தவன். என்னை அடையவேண்டியதற்காக என்னைத்தியானம்செய்யவேண்டிய எல்லாவிதத்தாலும் என்னைத்தியானம் செய்கிறான். அதாவது—என்னைப்பற்றின எல்லா அறிவுகளாலும், அதற்குத் தகுந்த எல்லா வேலைகளாலும் நான் என்னஸந்தோஷத்தை அடைவேனோ, அதை இந்தநினைவாலேயே அடைகிறேன். விதங்களாவன—என்னை நினைப்

பது, என் பெயர்களைச் சொல்லுவது, என் வேலைகளைச் செய்வது, என்னை வணங்குவது முதலானவைகள். [19]

𑌅𑌵—𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌵𑌵𑍇𑌦𑌨𑌂 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿—

𑌇𑌤𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌯𑌾𑌽𑌨𑌘 । 𑌏𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌭𑌾𑌰𑌤 ॥ ॥௨௦॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾
𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷
𑍋𑌤𑍍𑌤𑌮𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯 ॥

𑌇𑌦𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌵𑌵𑍇𑌦𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌮𑌿𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑌮𑌨𑌵𑌦𑍍𑌯𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌮𑌮𑌿𑌤𑌿 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑌯𑌾 𑌤𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 । 𑌏𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑍀𑌯𑌾, 𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌽𑌨𑍇𑌨 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾, 𑌯𑌚𑍍𑌚 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌮𑍂𑌲𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌯𑌮𑌿𑌦𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௨௦॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

---

அவ—இப்படி பகவான் புருஷோத்தமன் என்று அறிவதைக் கொண்டாடுகிறார்—

கீழ்ச்சொன்ன காரணங்களாலே நான் மிகவும் உயர்ந்த புருஷன் என்பது சாஸ்திரத்தினால் சொல்லப்பட்ட ஸங்கதிகளுக்குள் மிகவும் உயர்ந்தரஹஸ்யம். அதாவது—ஒருவராலும் அறியமுடியாதது. ஒருவர் தெரிந்து சொன்னாலும் மனதில்படாது. அதை நீ குற்றமில்லாதவனாகையாலே, மிகவும் தகுந்தவன் என்று நினைத்து, உனக்குச் சொன்னேன். இது உன் மனதில்பட்டால், என்னை

அடைவதற்கு உதவியான எல்லா அறிவும் வந்துவிட்டதுபோல். என்னை அடைவதற்காகச் செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் செய்ததுபோல. இங்கே சாஸ்திரத்தினால் ஏற்படுகிற—பகவான் உயர்ந்த புருஷன் என்கிற—நிலைமையைச் சொல்லிற்று; தியானங்களால் ஏற்படும் அவருடைய பார்வையைச் சொல்லவில்லை. 1 [20]

---

1. ஒருவன் இந்த ஸங்கதியை அறிந்தால்தான், மற்ற அறியவேண்டிய எல்லா ஸங்கதிகளையும் அறிவன்; செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் செய்வன், அவைகளுக்கு இதுதான் வேர். ஆகையால் இதின் அறிவதையே மற்ற எல்லாவற்றின் அறிவாகவும், எல்லா வேலைகளாகவும் கொண்டாடினார். இதனால் மற்ற அறிவுகளையும், மற்ற வேலைகளையும் வேண்டாமென்று சொல்லக்கூடாது. அவைகள் கட்டாயம்வேணும்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

# 𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌅𑌤𑍀𑌤𑍇𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌰𑌯𑍇𑌣 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌯𑍋𑌶𑍍𑌚 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌵𑌿𑌯𑍋𑌗𑌯𑍋𑌶𑍍𑌚 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌹𑍇𑌤𑍁𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍋 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑍂𑌤𑌾𑌦𑌚𑌿𑌤𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌚𑌿𑌤𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌬𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌭𑌯𑌰𑍂𑌪𑌾𑌦𑌕𑍍𑌷𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌪𑌨𑌭𑌰𑌣𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑍈𑌰𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌤𑌯𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌮𑍍। 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑍇𑌮𑍍𑌨𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌶𑍍𑌯𑌤𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌶𑍍𑌯𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌯𑍋𑌰𑍍𑌦𑍈𑌵𑌾𑌸𑍁𑌰𑌸𑌰𑍍𑌗𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌵𑌕𑍍𑌤𑌿—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌅𑌭𑌯𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।<br>
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑌪 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ॥ ॥௧॥

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌪𑍈𑌶𑍁𑌨𑌮𑍍 ।<br>
𑌦𑌯𑌾 𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌲𑍋𑌲𑍁𑌪𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌾𑌰𑍍𑌦𑌵𑌂 𑌹𑍍𑌰𑍀𑌰𑌚𑌾𑌪𑌲𑌮𑍍 ॥௨॥

𑌤𑍇𑌜𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 𑌶𑍌𑌚𑌮𑌦𑍍𑌰𑍋𑌹𑍋 𑌨𑌾𑌤𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑌾 ।<br>
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌮𑍍𑌪𑌦𑌂 𑌦𑍈𑌵𑍀𑌮𑌭𑌿𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑌤 ॥ ॥௩॥

𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌯𑍋𑌗𑌸𑌂𑌯𑍋𑌗𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌜𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌭𑌯𑌂, 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌭𑌯𑌮𑍍। 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃-𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌭𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃-𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌵𑍇𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾। 𑌦𑌾𑌨𑌂-𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌧𑌨𑌸𑍍𑌯 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌮𑍍। 𑌦𑌮𑌃-𑌮𑌨𑌸𑍋 𑌵𑌿𑌷𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌂𑌶𑍀𑌲𑌨𑌮𑍍। 𑌯𑌜𑍍𑌞𑌃-𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤 𑌭𑌗𑌵𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌰𑍂𑌪𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌯𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍। 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃-𑌸𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌰𑌾𑌧𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌵𑍇𑌦 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌨𑌿𑌷𑍍𑌠𑌾। 𑌤𑌪𑌃-𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑍁𑌪𑌵𑌾𑌸𑌾𑌦𑍇𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌣𑌨𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌪𑌾𑌦𑌨𑌸𑍍𑌯 𑌕𑌰𑌣𑌮𑍍। 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍-

மநோவாக்காயவ்ருத்தீநாமேகரூப்யம் பரேஷு | அஹிம்ஸா-
பரபீடாவர்ஜநம் | ஸத்யம்-யதாத்ருஷ்டார்த்தவிஷயம் பூத
ஹிதவாக்யம் | அக்ரோத:-பரபீடாபலசித்தவிகாரரஹிதத்வம் |
த்யாக:-ஆத்மஹிதப்ரத்யநீகபரிக்ரஹவிமோசநம் | ஶாந்தி:-
இந்த்ரியாணாம் விஷயப்ராவண்யநிரோதஸாமர்த்யம் | அபை
ஶுநம்-பராநர்த்தகரவாக்யநிவேதநாகரணம் | தயா பூதே
ஷு-ஸர்வேஷு-பூதேஷு துஃகாஸஹிஷ்ணுத்வம் | அலோலுப்
த்வம்-அலோலுபத்வம் | அலோலுபத்வம் விஷயேஷு
நிஸ்ப்ருஹத்வமித்யர்த்த: | மார்தவம்-அகாடிந்யம்-ஸாதுஜந
ஸம்ஶ்லேஷார்ஹதேத்யர்த்த: | ஹ்ரீ:-அகார்யகரணே வ்ரீடா | அசா
பலம்-ஸ்ப்ருஹணீயவிஷயஸந்நிதாவசஞ்சலத்வம் | தேஜ:-துர்ஜ
நைரநபிபவநீயத்வம் | க்ஷமா-பரநிமித்தபீடாநுபவேऽபி
பரேஷு தம் ப்ரதி சித்தவிகாரரஹிததா | த்ருதி:-மஹத்யா
மப்யாபதி க்ருத்யகர்தவ்யதாவதாரணம் | ஶௌசம்-பாஹ்யாந்த
ரகரணாநாம் க்ருத்யயோக்யதா ஶாஸ்த்ரீயா, அத்ரோஹ:-ப
ரேஷ்வநுபரோத:- பரேஷு ஸ்வச்சந்தவ்ருத்திநிரோதரஹி
தத்வமித்யர்த்த: | நாதிமாநிதா-அஸ்தாநே கர்வ: அதிமாநித்வம்,
தத்ரஹிததா | ஏதே குணா தைவீம் ஸம்பதமபிஜாதஸ்ய
பவந்தி-தேவஸம்பந்திநீ ஸம்பத் தைவீ | தேவா பகவதாஜ்ஞா
நுவ்ருத்திஶீலா:, தேஷாம் ஸம்பத் ஸா ச பகவதாஜ்ஞாநுவ்ரு
த்திரேவ, தாமபிஜாதஸ்ய-தாமபிமுகீக்ருத்ய ஜாதஸ்ய தாம்
நிவர்தயிதும் ஜாதஸ்ய பவந்தீத்யர்த்த: ॥ ॥ ௩ ॥

அவ—நடந்த மூன்று அத்தியாயங்களிலே-பிரிந்தும், சேர்ந்துமிருக்கிற பிரகிருதி-ஜீவன்களுடைய உண்மையும், அந்த சேர்க்கை ஸத்துவம் முதலான குணங்களாலே உண்டாகிற ஸங்கங்களில் ஆசையினால் உண்டாகிறது என்பதும், ஆசை போனால் அது போய்விடுமென்பதும், சேர்ந்தாலும், பிரிந்தாலும் அவையிரண்டும் பகவானுடைய சொத்தென்பதும், பகவான் தன்னுடைய சொத்தான அறிவில்லாத வஸ்துவைக்காட்டிலும், பக்தன், முக்

தன் என்று இருவகையான அறிவுள்ள வஸ்துக்களைக் காட்டிலும் ஒருவிதமான மாறுபாடில்லாததினாலும், அவைகளில் நுழைந்திருப்பதாலும், அவைகளைத் தூக்குவதாலும், அவைகளுக்கு யஜமானனாக இருப்பதாலும் வேறு வஸ்துவாகையால், மிகவும் உயர்ந்த புருஷன் என்கிற பகவானுடைய உண்மையும் சொல்லப்பட்டன. இப்போது சாஸ்திரத்திற்கு உட்பட்டவன்தான் கீழ்ச் சொன்ன எல்லா ஸங்கதிகளையும் நம்புவன் என்று காண்பிப்பதற்காக, சாஸ்திரத்திற்கு உட்பட்டவன் தெய்வப்பிறவி யென்றும், அவன் இன்னமாதிரி இருப்பன் என்றும், சாஸ்திரத்திற்குஉட்படாதவன் அஸுரப்பிறவி யென்றும், அவன் இன்னமாதிரி இருப்பன் என்றும், பிரித்து பகவான் சொல்லுகிறார்—

தெய்வப்பிறவிக்கு அடையாளங்களைச் சொல்லுகிறார். (1) உலகத்தில் பிடித்த வஸ்துவின் பிரிவென்றும், பிடிக்காத வஸ்துவின் சேர்க்கையென்றும் துக்கம் இரண்டுவிதம். ஒருவன் இவை இரண்டும் வருவதற்கு அடையாளங்களைக் கண்டால், நடுங்குவன். அது இல்லாமை (அபயம்); (2) மனதில் 1 ரஜோகுணம், தமோகுணம் இல்லாமை; (3) உடம்பைக்காட்டிலும் வேறான ஆத்மாவின் உண்மையை அறிவதில் 2 நிலையாயிருக்கை; (4) நியாயமாய் ஸம்பாதித்த தன் ஸொத்தை நல்ல பாத்திரத்தில் (தகுந்த வர்களுக்கு) தானம் செய்வது; (5) மனதை விஷயங்களில் போகாமல் பழக்குவது; (6) பலன்களை விரும்பாமல், பகவானுடைய ஸந்தோஷத்திற்காக,

---

1 சுலோகத்தில் ஸம்சுத்தி என்கிற சொல்லுக்கு நல்ல சுத்தி என்று பொருள். அதாவது—ஆசை, பொறாமை, மோசம் செய்வது முதலான எல்லா விதமான தோஷங்களில்லாமை. அவைகளை உண்டு பண்ணுகிற ரஜஸ்ஸும் தமஸ்ஸும் போனால், அவைகள் தானே போய் விடுமென்று எண்ணி, அந்தச்சொல்லுக்கு ரஜோகுணம் தமோகுணம்இல்லாமை என்று பொருள் எழுதினது.

2. சுலோகத்தில்—ஞானயோகம் என்கிற சொல்லாலே கர்மயோகம் முதலானவைகள் வேண்டாமென்று சொல்லப்படவில்லை. ஸத்துவகுணம் மேலிட்டவனுக்கு அவைகளும் வேண்டும். ஆகையால் இந்தச் சொல்லாலே கர்மயோகம், ஞானயோகம்,பக்தியோகம்—இவைமூன்றுக்கும் வேண்டிய சாஸ்திரத்தில் சொல்லியபடி உடம்பைக் காட்டிலும் வேறான ஜீவஸ்வரூபத்தை நினைப்பது தான் சொல்லப்படுகிறது.

வைசுவதேவம் முதலான நித்தியகர்மங்களைச் செய்கை; (7) வேதம் முழுவதும் 1 பகவானையும், எல்லா உலகமும் அவர் சொத்து என்பதையும், அவரை ஸந்தோஷப்படுத்தும் வழியையும் சொல்லுகிறது என்று நினைத்து, எப்பொழுதும் வேதத்தைச் சொல்லுகை; (8) ஒருவன் பகவானை ஸந்தோஷப்படுத்துவதான வேலைகளைச் செய்வதற்காக. முதலில் 2 கிருச்சிரம், சாந்திராயணம், சாப்பிடக்கூடாது என்று சொல்லப்பட்ட ஏகாதசி முதலான நாள்களில் சாப்பிடாமலிருப்பது முதலானவைகளைச் செய்கை; (9) பிறர்விஷயத்தில் மனது, வாக்கு, உடம்பு—இந்த மூன்றின் வேலைகளும் ஒத்திருப்பது; (10) பிறருக்குத் தொந்தரவு செய்யாமலிருக்கை; (11) நிஜம்சொல்லுவது, அதாவது—கண்ணால் கண்டபடி சொல்லுகை; அதை ஜனங்களுக்கு தொந்தரவுக்காகச் சொல்லக்கூடாது; நன்மைக்காகச் சொல்லலாம்; (12) பிறருக்குத் தொந்தரவைக் கொடுக்கக்கூடிய மனக்கலக்கம் இல்லாமை; (13) தன் நன்மைக்கு இடைஞ்சலான தன் வஸ்துக்களை விடுகை; (14) கண்முதலான இந்திரியங்களைச் சப்தம் முதலான விஷயங்களில் அழுந்தாமல் தடுத்துப் பழக்குகை; (15) பிறருக்கு இடைஞ்சலுக்காகக் கோழ்ச்சொல்லாமை; (16) எல்லாப்பிராணிகளிடத்திலும் (சத்துருக்களிடத்திலும், சிநேகிதர்களிடத்திலும்) தயை—அதாவது—அவர்கள் வருத்தப்பட்டால் அதைக்கண்டு தாங்காமலிருக்கை, (17) தனக்குத் தகாத சப்தம் முதலான விஷயங்களில் ஆசையில்லாமை; (18) கெட்டியாய் இல்லாமை, அதாவது—பயப்படாமல் ஸாதுக்கள் தன்கிட்ட நெருங்கிப் பழகத்தகுந்தவனாக இருக்கை; சவர்—தன்

1. இரண்டாவது அத்தியாயம் 46-வது சுலோகத்தில் சொன்னபடி-மோக்ஷத்தை அடைய ஆசைப்படுகிறவன்கொஞ்சபலன்களைக்கொடுக்கும் தாழ்ந்த தேவதைகளின் பூஜையைச் சொல்லும் பாகத்தைப் படிக்கக்கூடாது—என்று ஸந்தேஹமுண்டாகலாம். அப்பிரகரணத்தை முழுவதும் என்ற சொல். ஆனால் அவன் எண்ண வேண்டிய விதம் வேறு. அது வியாக்கியானத்தில் சொல்லப்படுகிறது.

2. சுலோகத்தில் தபஸ் என்கிற சொல்லுக்கு சாஸ்திரத்தில் சொல்லியபடி ஸுகத்தைக் குறைப்பது என்று பொருள். அதைக் குறைக்கும்விதம் இங்கே சொல்லப்படுகிறது.

ணீர் போவில்லாமல் கெட்டியாயிருப்பதால், ஒன்றினாலும் அதில் நுழைய முடியவில்லை. (19) தப்புக்காரியங்களைப் பண்ணினாலும், பண்ணுவதிலும் வெட்கப்படுகை; (20) தான் ஆசைப்படக்கூடிய விஷயங்கள் கிட்ட இருக்கும்போது, அவைகளினால் கலங்காமலிருக்கை, (21) கெட்டமனிதர்கள் தன்னை அவமானம் பண்ணமுடியாமல் இருக்கையும், கெட்டமனிதர்களைக் கண்டிக்கத்தகுந்தவனாக இருக்கையும். சபலம் முதலியவைகளால் கெட்டமனிதனிடம் போனால், அவன் அவமானம் பண்ணுவதற்கு இடம் உண்டாகும். அப்படிப்போகாமலிருக்கை; கெட்டமனிதர்கள் அவமானப்படுத்துவதற்குக் காரணமான சபலம் முதலியவைகள் இல்லாமலிருக்கை; (22) பிறரால் தொந்தரவுகளை அனுபவிக்கும்போதும், அவர்கள் விஷயத்தில் மனது கலங்காமலிருக்கை; (23) எவ்வளவு பெரிய ஆபத்திலும், செய்யவேண்டிய காரியத்தை, விடாமல் தைரியத்துடன் செய்கை; (24) செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதற்கு, கண் முதலான இந்திரியங்களும் மனதும் சாஸ்திரத்தில் சொல்லியபடி தகுந்தவைகளாக இருக்கை; (25) எவர்களையும் அவர்களிஷ்டப்படி நடக்கவொட்டாமல் தடுப்பது துரோஹம். அது இல்லாமலிருக்கை; அதாவது-பலமுள்ளவன் இளைத்தவனை நியாயமில்லாமல் தன் வலிமையால் வசப்படுத்திக்கொள்ளுகிறவன். அதில்லாமலிருக்கை; (26) சிலர் தங்கள் யோக்கியதையைமீறிக் கர்வப்படுகிறார்கள். அது இல்லாமலிருக்கை; உலகத்தில் யாருக்கும் கர்வம் என்பதே கூடாது. பணமோ, படிப்போ, குலமோ, அதற்குத்தகுந்ததாக இருந்தால், போனால் போகட்டும் என்று பொறுக்கக்கொள்ளலாம். அதைமீறி இருந்தால், அது மிகவும் பிசகு. ஆயிரம் ரூபாய் உள்ளவனுக்கு பதினாயிரம் ரூபாய் உள்ளவன் கர்வமிருந்தால், அதை ஒரு ஜனமும் ஸஹியாது. இந்த இருபத்தாறு குணங்களும் தேவப்பிறப்புள்ளவர்களுக்கு இருக்கும். அவர்களாவன—பகவானுடைய உத்திரவை நடத்துவதற்காக பிறந்தவர்கள். அவர்களுக்கு இந்தகுணங்கள் கட்டாயம் இருக்கும்.

த³ம்போ⁴ த³ர்போ(அ)பி⁴மாநஶ்ச க்ரோத⁴: பாருஷ்யமேவ ச ।
அஜ்ஞாநம் சாபி⁴ஜாதஸ்ய பார்த² ஸம்பத³மாஸுரீம் ॥ ௪ ॥

த³ம்ப⁴: தா⁴ர்மிகத்வக்²யாபநாய த⁴ர்மாநுஷ்டா²நம்; த³ர்ப:
க்ருத்யாக்ருத்யாவிவேககரோ விஷயாநுப⁴வநிமித்தோ ஹ

𑌷𑌃; 𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌃-𑌸𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌭𑌿𑌜𑌨𑌾𑌨𑌨𑍁𑌰𑍂𑌪𑍋𑌨𑍍𑌨𑌤𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌃 | 𑌕𑍍𑌰𑍋𑌧𑌃-𑌪𑌰𑌪𑍀𑌡𑌾𑌫𑌲𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌕𑌾𑌰𑌃 | 𑌪𑌾𑌰𑍁𑌷𑍍𑌯𑌂-𑌸𑌾𑌧𑍁𑌜𑌨𑍋𑌦𑍍𑌵𑍇𑌗𑌕𑌰𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 | 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌂-𑌪𑌰𑌾𑌵𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑍇𑌕𑌃 | 𑌏𑌤𑍇 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾 𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 𑌸𑌮𑍍𑌪𑌦𑌮𑌭𑌿𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 | 𑌅𑌸𑍁𑌰𑌾𑌃-𑌭𑌗𑌵𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍀𑌲𑌾𑌃 || ||௪||

(1) பகவானுடைய உத்திரவை நடத்தவேணுமென்று எண்ணமில்லாமல், நாலுபேர்கள் தன்னை நல்லதார்மிஷ்டன் என்று கொண்டாடுவதற்காகத் தர்மங்களைச்செய்கை; (2) இன்னதைச் செய்யலாம், இன்னதைச் செய்யக்கூடாது என்று தோன்றவொட்டாமல் பண்ணுகிற—பணம், பிள்ளை, பெண்டாட்டி முதலானவைகளை அனுபவிப்பதினால் உண்டாகும்—தலை தெரியாமல் வருகிற—ஸந்தோஷம். (3) தன்னுடைய படிப்பு, பணம், குலம், முதலானவைகளுக்குத் தகாத கர்வம். முதல் மூன்று சுலோகங்களில் 26-வது குணமாகச் சொன்னதற்கு எதிர்தட்டானது; (4) பிறருக்குத் தொந்தரவு பண்ணக்கூடிய மனக்கலக்கம்; (5) நல்லவர்களுக்கு 1 நடுக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஸ்வபாவம்; (6) இன்னது உயர்ந்தது; இன்னது இளப்பம் என்றும்; இன்னகாரியத்தைச செய்யலாம்; இன்னகாரியத்தைச் செய்யக்கூடாதென்றும் பிரித்து அறியாமை. இந்த ஆறு 2 குணங்களும் அஸுரப்பிறப்புள்ளவர்களுக்கு இருக்கும். அஸுரப்பிறப்பாவது பகவானுடைய உத்திரவை மீற வேணுமென்றே பிறந்தவர்கள். [ 4 ]

𑌦𑍈𑌵𑍀 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌯𑌾𑌸𑍁𑌰𑍀 𑌮𑌤𑌾 ||௫½||

𑌦𑍈𑌵𑍀-𑌮𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾 𑌸𑌮𑍍𑌪𑌤𑍍 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯-𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑍇 𑌭𑌵𑌤𑌿 - 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 | 𑌆𑌸𑍁𑌰𑍀-𑌮𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾 𑌸𑌮𑍍𑌪𑌤𑍍 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌯 𑌭𑌵𑌤𑌿-𑌅𑌧𑍋𑌗𑌤𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 || ||௫½||

---

1. கெட்டவர்கள் விஷயத்தில் கடுமையாக இருப்பது அறிகக் கெடுதலன்று.

2. இங்கே ஆறு குணங்களைமாத்திரம் சொன்னபோதிலும், முதல் மூன்று சுலோகங்களில் சொன்ன குணங்களில்லாமையையும் சொன்னதாக வைத்துக்கொள்ளவேணும்.

அவ:—இருபத்தாறு குணங்களில் ஆசையும், ஆறு குணங்களில் வெறுப்பும் உண்டாவதற்காக இருபத்தாறு குணங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் என்றும், ஆறு குணங்கள் ஸம்ஸாரத்தைக் கொடுக்கும் என்றும் சொல்லுகிறார். இது ஏற்கனவே 14-வது அத்தியாயம் 18-வது ச்லோகம் முதல் சொல்லப்பட்டிருக்கிறது. இருபத்தாறு குணங்கள் ஸத்துவத்தின் வேலை. ஆறு குணங்கள் ரஜஸ்ஸு-தமஸ்ஸுக்களின் வேலை—

தேவப்பிறப்பாகிற (அதாவது—என் உத்திரவுப்படி நடக்கிற) பெரிய ஸம்பத்து இப்போது இருக்கும் ஸம்ஸாரத்தைப் போக்கி, என்னிடம் வருவதற்கு படிப்படியாய் உதவுகிறது. அஸுரப்பிறப்பு (என்னுடைய உத்திரவை மீறிநடப்பது) அதோகதியை (அதாவது—இப்போது இருக்கும் நிலைமையைக்காட்டிலும் இன்னும் கீழே கீழேபோவதை) அடையும்படி செய்கிறது. [4½]

அவ — அத2 ஸ்வஸ்யாஸுரப்ரக்ருதித்வஶங்கயா ப்ரஸ்க2லிதமர்ஜுநம் ப4க3வாநாஹ —

மா ஶுச: ஸம்பத3ம் தை3வீமபி4ஜாதோ(அ)ஸி பாண்ட3வ ||௫||

ஶோகம் மா க்ருதா:, த்வம் து தை3வீம் ஸம்பத3மபி4ஜாதோ(அ)ஸி| பாண்ட3வ-தா4ர்மிகாக்3ரேஸரஸ்ய ஹி பாண்டோ3ஸ்தநய ஸ்த்வமித்யபி4ப்ராய: || ||௫||

அவ—இந்த இரண்டு பிரிவையும் கேட்ட அர்ஜுனன்—நான் இவைகளில் எந்தப்பிரிவோ, தெரியவில்லையே என்று நடுங்கினான். அப்போது பகவான் சொல்லுகிறார்—

அப்பா! நீ துக்கப்படாதே.[1] நீயோ தேவப்பிறப்பு பெரிய தர்மிஷ்டனான பாண்டுமஹாராஜவிற்குப் பிறந்தபிள்ளையல்லவா, நல்லவர்களுடைய வயிற்றில் கெட்டபிள்ளைகள் பிறக்குமா. [5]

---

1. அர்ஜுனனுக்குச் சண்டையின் ஆரம்பத்தில் பந்துக்கள் சாகிறார்கள் என்று ஒருவருத்தம் உண்டாயிற்று. அது கீழே பகவான் பண்ணின உபதேசத்தினால் போய்விட்டது. இது அந்த துக்கமல்ல. அது ஆத்மா முதலானவைகளை அறியாததினால் வந்தது. இது நான் நல்லபிறப்போ இல்லையோ என்ற ஸந்தேஹத்தால் வந்தது.

த்³வௌ பூ⁴தஸர்கௌ³ லோகே(அ)ஸ்மிந் தை³வ ஆஸுர
ஏவ ச | தை³வோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பா
ர்த² மே ஶ்ருணு ॥ ॥ 6 ॥

அஸ்மிந்-கர்மலோகே, கர்மகாரிணாம் பூ⁴தஸர்கா³: ஸ
ர்கா³ த்³விவிதா⁴ - தை³வ ஆஸுரஶ்சேதி | ஸர்க³: - உத்பத்தி:,
ப்ராசீநபுண்யபாபரூபகர்மவஶாத் உத்பத்திவேலாயாம் ப⁴க³வதா³ஜ்ஞாநுவ்ருத்தி
தத்³விபரீதகரணயோக்³யதாயாம் ச த்³விதா⁴ ஸங்கல்பாத்
நிர்வர்த்யதே | தத்ர தை³வஸர்க³: விஸ்தரஶ:
ப்ரோக்த: | தே³வா நாம ப⁴க³வதா³ஜ்ஞாநுவ்ருத்திஶீலா:
ஆஸுராஸ்து தத³நநுவ்ருத்திஶீலா:, ஸ தை³வ:-கர்மயோகா³தி³
ரூபோ விஸ்தரஶ: ப்ரோக்த: | ஆஸுரம் ஸர்க³ம்
மே ஶ்ருணு, தஸ்மாத் மத்த: ஶ்ருணு - ஸாவதா⁴நோ ப⁴வ ஶ்ருணு॥

அவ—இயற்கையில் எல்லா ஆத்மாக்களும் ஸமமாயிருக்க, சிலர் தேவப்பிறப்பென்றும், சிலர் அஸுரப் பிறப்பென்றும், பிரிவதற்கு காரணமென்ன என்றும் ஸந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டு, அஸுரப்பிறப்பின் குணங்களை அறிந்து விலக்கவேண்டுமென்று காட்டுவதற்காக, அஸுரப்பிறப்புள்ளவர்களின் நடவடிக்கையை விஸ்தாரமாய் சொல்லுகிறார்—

கர்மத்தினால் ஏற்படுகிற இந்தலோகத்தில் கர்மங்களைச்செய்யும் ஜனங்கள் தேவப்பிறப்பென்றும், அஸுரப்பிறப்பென்றும் இருவகை. நெடுநாளாய்வந்த புண்ணியங்களாலும், பாபங்களாலும் பிறக்கிற காலத்திலேயே பகவானுடைய உத்தரவை நடத்துவதற்காக வென்றும், அதை மீறுவதற்காகவே என்றும் இருவகையாகவே ஜனங்கள்பிறந்திருக்கிறார்கள் அதாவது-பகவான் அவர்களை அப்படியே பிறப்பித்திருக்கிறார். தேவப்பிறப்புக்களின் வேலைகளைப்பற்றி கீழே விரிவாய் சொல்லியாய்விட்டது. அதாவது—யோகம் முதலானவைகள். அஸுரப்பிறப்புக்களின் வேலைகளைச் சொல்லுகிறேன், கேள். [6]

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா ந விது³ராஸுரா:| ந ஶௌ
சம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்³யதே ॥ 7 ॥

𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚–𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌸𑌾𑌧𑌨𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑍍 𑌆𑌸𑍁𑌰𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃–𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 | 𑌶𑍌𑌚𑌂 - 𑌵𑍈𑌦𑌿𑌕𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂, 𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌂 𑌚𑌾𑌸𑍁𑌰𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇| 𑌨𑌾𑌪𑌿 𑌚𑌾𑌚𑌾𑌰𑌃- 𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌶𑍌𑌚𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑌿𑌨𑌾 𑌆𑌚𑌾𑌰𑍇𑌣 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇| 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 "𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁" 𑌇𑌤𑌿| 𑌤𑌥𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇–𑌯𑌥𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑌰𑍂𑌪𑌂 𑌭𑌾𑌷𑌣𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 || || எ ||

பிரும்மலோகம்வரையிலுள்ள உலகங்களில் கிடைக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தர்மங்களும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய தர்மங்களும், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் அவர்களுக்குத் தெரியாது. லக்ஷம்தடவை சொன்னலும், தமோகுணம் மேலிட்டிருப்பதால், புரியாது உடம்பும் ஆத்மாவும் வேதத்தில் சொல்லிய கர்மங்களை எப்படியிருந்து செய்யவேணுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதோ, அப்படி அவர்கள் இருக்கமாட்டார்கள். ஸ்நானம் செய்து கோவிலுக்குப் போகவேணுமென்று சொல்லியிருக்கிறது. அந்த ஸ்நானத்தைச் செய்யமாட்டார்கள். ஆத்மாவிற்கு தயை, பொருமை, வணக்கம் இவை முதலானவைகள் வேணுமென்று சொல்லியிருக்கிறது. அவைகள் அவர்களுக்கு இருக்காது. ஸந்தியாவந்தனம் முதலான எந்த வேலைகளாலே உடம்பும் ஆத்மாவும் சுத்தமாகுமோ, அந்த வேலைகளுமிருக்காது. ஸந்தியாவந்தனம் பண்ணுதவன் அசுத்தன்; ஒரு வேலைக்கும் தகாதவன் என்று சொல்லியிருக்கிறது. அவர்களிடத்தில் ஸத்தியம் இருக்காது. பொய்தான் சொல்லுவார்கள். எய்க்கிறத்திலேயே ருசியாகையால், நடந்தபடிசொல்ல மாட்டார்கள். தொந்தரவு செய்வதே ஸ்வபாவமானதால், அனுகூலத்தைச் சொல்லமாட்டார்கள். [7]

[illegible]

𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍇 𑌜𑌗𑌦𑌾𑌹𑍁𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 |
𑌅𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 || || அ ||

அஸத்யம் ஜகதேதத் ப்ரஹ்மகார்யதயா ப்ரஹ்மாத்மகமிதி நாஹு:। அப்ரதிஷ்டம் - ததா ப்ரஹ்மணி ப்ரதிஷ்டிதமிதி ந வதந்தி। ப்ரஹ்மணாऽநந்தேந ஹி த்ருதா ப்ருதிவீ ஸர்வாந் லோகாந் பிபர்தி; யதோக்தம் - 'தேநேயம் நாகவர்யேண ஶிரஸா வித்ருதா மஹீ। பிபர்தி மாலாம் லோகாநாம் ஸதேவாஸுரமாநுஷாம்' இதி। அநீஶ்வரம் ஸத்யஸங்கல்பேந பரேண ப்ரஹ்மணா ஸர்வேஶ்வரேண மயேதம் நியமிதமிதி ச ந வதந்தி। "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே" இதி ஹ்யுக்தம்। வதந்தி ச அபரஸ்பரஸம்பூதம் கிமந்யத் காமஹைதுகம் — ஸ்த்ரீபும்ஸயோ: பரஸ்பரஸம்பந்தேந ஜாதமிதம் மநுஷ்யபஶ்வாதிகமுபலப்யதே, அநேவம்பூதம் கிமந்யதுபலப்யதே? கிஞ்சிதபி நோபலப்யத இத்யபிப்ராய:॥ அத: ஸர்வமிதம் ஜகத் காமஹேதுகமிதி॥ ॥8॥

அவ—இன்னும்,

இந்த உலகத்தை, பிரும்மத்தால் உண்டானதாகையால், பிரும்மமென்றும், பிரும்மத்தால் தூக்கப்படுகிறதென்றும் சொல்லுகிறதில்லை. பகவான் இந்த பூமியை ஆதிசேஷனைக்கொண்டு தூக்குகிறபடியால்தான், இது எல்லாஉலகங்களையும் தூக்குகிறது என்று சொல்லியிருக்கிறது. நினைத்தபடி நடத்துகிறவனும், எல்லாவிதத்தாலும் அளவில்லாமல் உயர்ந்தவனும், எல்லா உலகத்தையும் அடக்கி ஆளுகிறவனுமான என்னாலே எல்லா உலகமும் 1 ஏவப்படுகிறதென்றும் (எல்லா வேலைகளும் என் ஆணையாய்த்தான் நடக்கிறதென்றும்) சொல்லுகிறதில்லை. இப்படிச் சொல்லாததுமன்னியில், வேறு விதமாகவும் சொல்லுகிறார்கள்—இவ்வுலகத்தில் மனிதரோ, ஆடுமாடு முதலானவைகளோ, எல்லாம் ஆணும்பெண்ணும்சேர்ந்துதான் உண்டாகிறது. கண்ணால் காணப்படுவதில் அப்படியில்லாதது ஒன்றுமில்லை. ஆகையால் எல்லா உலகமும் காமத்தால் உண்டாகிறது என்று. 2 [8]

1. என்னைத்தவிர வேறு ஒருவரை—இன்னொருத்தனை—இவ்வுலகத்திற்கு ராஜாவாகச் சொல்லுகிறவர்களும் அஸுரர்களே.

2. இதுபோலவே மண்ணில் விதையைப்போட்டால் மரம் உண்டாகி

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோऽல்பபுத்தய: ।
ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோऽஹிதா: ॥ ௯ ॥

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய-அவலம்ப்ய, நஷ்டாத்மாந:-அத்ருஷ்டதேஹாதிரிக்தாத்மாந:, அல்பபுத்தய:-கடாதிவஜ்ஜ்ஞேயபூதே தேஹே ஜ்ஞாத்ருத்வேந தேஹவ்யதிரிக்தோ ஜ்ஞாதா அவகம்யத இதி விவேகாக்ஷமா:, உக்ரகர்மாண:-ஸர்வேஷாம் ஹிம்ஸகா: ஜகத: க்ஷயாய ப்ரபவந்தி ॥ ॥ ௯ ॥

கீழ்ச்சொன்ன தப்புஎண்ணத்தினால், உடம்பைக் காட்டிலும் வேறாக ஜீவனை அறியாமல், கொஞ்ச புத்தியுள்ளவர்களாய் (அதாவது—குடத்தைப்போல் உடம்பு அறியப்படுகிறது; அறிவுள்ளதன்று; ஆத்மா அதை அறிகிறது. ஆகையால் அது உடம்பைக் காட்டிலும் வேறு—என்று பிரித்து அறியமுடியாமல்), கடுமையான வேலைகளைச் செய்துகொண்டு, (அதாவது-எல்லாரையும் ஹிம்ஸித்துக்கொண்டு), உலகத்தை அழிக்கிறார்கள். 1 [9]

காமமாஶ்ரித்ய துஷ்பூரம் தம்பமாநமதாந்விதா: । மோஹாத்
க்ருஹீத்வாஸத்க்ராஹாந் ப்ரவர்தந்தேऽஶுசிவ்ரதா: ॥ ॥௧௦॥

துஷ்பூரம்-துஷ்ப்ராபவிஷயம் காமமாஶ்ரித்ய தத்ஸிஷாதயிஷயா மோஹாத்-அஜ்ஞாநாத், அஸத்க்ராஹாந்-அந்யாயக்ருஹீதாந் பரிக்ரஹாந் க்ருஹீத்வா அஶாஸ்த்ரவிஹிதவ்ரதா: தம்பமாநமதாந்விதா: ப்ரவர்தந்தே ॥ ॥௧௦॥

---

றது, இதற்கு தெய்வம் என்னத்துக்கு? இதேமாதிரி உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு காரணத்தால் உண்டாகிறது. அந்தக் காரணமே போதுமே; பிரும்மம் என்னத்துக்கு; அதில் பிரும்மத்திற்கு என்ன வேலை—என்று,

1. அவர்கள் தாங்கள்கெடுவதுமன்னியில், மற்றவர்களையும்கெடுக்கிறார்கள். அதாவது—அவர்கள் பகவானால் ஏற்படுத்தப்பட்ட தர்மமார்க்கத்தைக் கவனிக்கிறதில்லை. முட்டாளான மற்றவர்கள் அவர்கள் செய்வதைப் பார்த்து, அவர்கள் சொல்வதைக்கேட்டு, அவைகளைஸரியானவைகள் என்று நம்பி, தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற புருஷார்த்தங்களை அடையாமல், மூன்று விதமான (தன்னால் வருவது, மற்ற பிராணிகளால்வருவது, தெய்வத்தால்வருவது) தொந்தரவுகளுள்ள ஸம்ஸாரத்தில் அழுந்துகிறார்கள்.

அடையமுடியாத ஒரு வஸ்துவை ஒரு ப்ரயோஜனமாக ஆசைப்பட்டு, அதை அடைவதற்காக, இன்னது நல்லது, இன்னது பொல்லாதது என்று அறியமுடியாததினாலே, அந்யாயமாக (திருட்டு முதலான தப்புவழிகளாலே) பணம் முதலானவைகளை ஸம்பாதித்து, சாஸ்திரத்தில் சொல்லப்படாத (பார்ப்பதற்கும், தொடுவதற்கும் தகாதபடி பண்ணுகிற) விரதங்களுடனும் தம்பம், கர்வம், மதம்1 (உ-ம)—இவைகளுடனும் கர்மங்களைச் செய்கிறார்கள். [ 10 ]

சிந்தாமபரிமேயாம் ச ப்ரளயாந்தாமுபாச்ரிதா: |
காமோபபோகபரமா ஏதாவதிதி நிச்சிதா: ॥ ॥௧௧॥

அத்ய ச்வோ வா ம்ரியமாணா அபி ப்ரளயாவதிகாலஸாத்யாம் அபரிமேயாம் ச சிந்தாமுபாச்ரிதா:। ததா காமோபபோகபரமா:–காமோபபோக ஏவ பரமபுருஷார்த்த இதி மந்வாநா:, ஏதாவதிதி நிச்சிதா:-ஏதத்வ்யதிரிக்த: புருஷார்த்தோ ந வித்யத இதி ஸஞ்ஜாதநிச்சயா: ॥ ॥ ௧௧ ॥

அவ—இப்படி வேலைகளைச் செய்கிறவர்களுக்கு மேல் மேல் வரும் கெடுதிகளைச் சொல்லுகிறார்—

இன்றைக்கோ, நாளைக்கோ அவர்கள் சாகப்போகிறார்கள். அப்படி இருக்கச்செய்தேயும், அவர்கள் நினைவுகளுக்குக் கணக்கில்லை. ஸம்பாதிக்கவேண்டிய பணம் முதலானவைகளுக்கு இத்தனை என்று கணக்கில்லை. 2 அவைகளுக்கு வேலைசெய்ய வேணுமானால், பிரளய காலம்வரையில் வேலை செய்தாலும் முடியாது. 3 பின்னை, பெண்டாட்டி முதலானவர்களை அநுபவிப்பதுதான் மிகவும் உயர்ந்த

---

1. மதம் என்பது, பணம், படிப்பு, உயர்ந்த பிறப்பு, இவைகளால் வரும்—இஷ்டப்படி வேலைகளைச் செய்யும்படி பண்ணுகிற—கொழுப்பு.

2. இதினால் நினைவுகளை நிறைவேற்ற முடியாததும், எடுத்துக் கொள்ளும் பிரயாஸம் வீணென்றும் காட்டப்படுகிறது.

3. எல்லையில்லாத காலத்தினால் முடிக்கவேண்டிய வேலைகளையும் கொஞ்சகாலத்தில் முடிக்க ஆசைப்படுகிறார்களென்று மூடத்தனம் காட்டப்படுகிறது.

புருஷார்த்தமென்று எண்ணுகிறார்கள். இதற்கு மேற்பட்ட புருஷார்த்தம் இல்லை என்று நிர்மாணித்திருக்கிறார்கள். [11]

ஆஶாபாஶஶதைர்பத்தா: காமக்ரோதபராயணா: ।
ஈஹந்தே காமபோகார்தமந்யாயேநார்தஸஞ்சயாந் ॥

ஆஶாபாஶஶதை: - ஆஶாரூபபாஶஶதைர்பத்தா:, காமக்ரோதபராயணா:- காமக்ரோதைகநிஷ்டா:, காமபோகார்தமந்யாயேநார்தஸஞ்சயாந் இதி ஈஹந்தே ॥ ॥௧௨॥

ஆசைகள் என்கிற நல்ல கயிறுகளால் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அந்தக்கயிறுகளுக்குக் கணக்கில்லை. கயிற்றைக் கத்தியால் அறுக்கலாம்; ஆசையை அறுக்கமுடியாது. எப்பொழுதும் பிள்ளை, பெண்டாட்டி முதலானவைகளை அனுபவிப்பதும், கோபித்துக்கொள்வதும்தான் அவர்களுக்கு வேலை. தங்கள் இஷ்டப்படி எல்லாம் அனுபவிப்பதற்காக தப்புவழியால் பணம் முதலியவைகளை ஸம்பாதிக்க வேலைசெய்கிறார்கள். 1 [12]

இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மநோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ॥ ॥௧௩॥

இதம் க்ஷேத்ரபுத்ராதிகம் ஸர்வம் மயா ஸ்வஸாமர்த்யேநைவ லப்தம், நாத்ருஷ்டாதிநா। இமம் ச ஸ்வஸாமர்த்யேந ப்ராப்ஸ்யே நாத்ருஷ்டாதிஸஹித: ॥ இதம் தநம் ஸ்வஸாமர்த்யேந லப்தம் மே அஸ்தி। இதமபி தநம் புந: ஸ்வஸாமர்த்யேநைவ பவிஷ்யதி ॥ ॥௧௩॥

அவ—ஞானயோகம் செய்கிறவன் இன்னவிஷயத்தில் மனது அடங்கிற்று; இன்னவிஷயத்தில மனது அடங்கவில்லை—என்று பார்ப்பதுபோல், பிள்ளை, பெண்டாட்டி முதலான அநுபவங்களைத் தேடுகிறவன் இன்னது, கிடைத்தது, இன்னது கிடைக்கவில்லை—என்று கவனிப்பதைச் சொல்லுகிறார்—

1. முன்சுலோகத்தில் நினைவையே (நிஷ்டா)சொல்லிற்று. இந்த சுலோகத்தில் ஆசையைச்சொல்லுகிறது. பலன்வேண்டுமென்று ஆசை; பலனுக்காகச்செய்யவேண்டியதில் நினைவு. ஆசைப்படுமவைகளுக்கு கணக்கில்லாமையால், ஆசை முதலியவைகளுக்கும் கணக்கில்லை.

நிலம், பிள்ளை முதலானவைகளெல்லாவற்றையும், என்னுடைய ஸாமர்த்தியத்தினாலேயேதான் ஸம்பாதித்தேன். அதிருஷ்டம் முதலானவைகளால் அன்று. இன்னும் அநேக ஸங்கதிகளையும் என் ஸாமர்த்தியத்தினாலேதான் ஸம்பாதிக்கப் போகிறேன். அதிருஷ்டம் என்று ஒன்று இருப்பதாகவே நான் நினைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்தலக்ஷம்ரூபாய் பணமும் என் ஸாமர்த்தியத்தாலேதான் ஸம்பாதிக்கப்பட்டது. அதினாலேயேதான் இப்பவும் குறைவில்லாமலிருக்கிறது. இன்னமும் என் ஸாமர்த்தியத்தாலேயே அநேகபணங்களை ஸம்பாதிக்கப் போகிறேன். [13]

அஸௌ மயா ஹதஶ்ஶத்ருர்ஹநிஷ்யே சாபராநபி ||

அஸௌ மயா பலவதா ஹதஶ்ஶத்ரு:। அபராநபி ஶத்ரூநஹம் ஶூரோ வீரஶ்ச ஹநிஷ்யே। கிமத்ர மந்ததீபி: பரிகல்பிதேநாத்ருஷ்டபரிகரேண ॥ ॥௧௩½॥

என்னுடைய பலத்தினால் இந்த சத்துருவைக் கொன்றேன். இன்னும் அநேக சத்துருக்களையும் 1. சூரனும்வீரனுமான நான் கொல்லப்போகிறேன். அறிவும், பலமும் இல்லாதவர்கள் சொல்லுகிற அதிருஷ்டத்தின் ஒத்தாசை எனக்கு என்னத்துக்கு? [13½]

அவ—ததா—

ஈஶ்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம் பலவாந் ஸுகீ ||

ஈஶ்வரோऽஹம்—ஸ்வாதீநோऽஹம், அந்யேஷாம் அஹமேவ நியந்தா। அஹம் போகீ—ஸ்வத ஏவ போகீ, நாத்ருஷ்டாதிபி:। ஸித்தோऽஹம்—ஸ்வத: ஸித்தோऽஹம், ந ஸுக்ருதாத்ருஷ்டாதிபி:। ததா ஸ்வத ஏவ பலவாந் ஸ்வத ஏவ ஸுகீ ॥௧௪॥

அவ—அப்படியே.—

நான் ஒருவருக்கு உட்பட்டவனில்லை. எல்லாவையும் நான்தான் அடக்கி ஆளுகிறேன். என்னுடைய ஸாமர்த்தியத்தினாலேதான் எல்லா ஸுகங்களையும் அநுபவிக்கிறேன். அதிருஷ்

1 சூரன்—புலிபோல சத்துருவின் சேனையைச் செத்தைபோல எண்ணி, பயமில்லாமல் அதில் நுழைகிறவன். வீரன்—சண்டைபோடும்போது களைப்பு முதலானவை இல்லாதவன்.

டம் முதலானவைகளின் ஒத்தாசை எனக்கு வேண்டியதில்லை. இந்தமாதிரி நான் ஆகியிருக்கிறதும் என்னாலேயேதான். அதிருஷ்டத்தினாலில்லை. எனக்கு இருக்கும் பலமும் ஸுகமும் என்னாலேயேதான். [14]

𑌆𑌢𑍍𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌨𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿 𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌮𑌯𑌾 ॥

𑌆𑌢𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑍍𑌮𑌿, 𑌅𑌭𑌿𑌜𑌨𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿, 𑌸𑍍𑌵𑌤 𑌏𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍𑌵𑌯𑍇 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿। 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌲𑍋𑌕𑍇 𑌮𑌯𑌾 𑌸𑌦𑍃𑌶𑌃 𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌲𑌬𑍍𑌧𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥௧௪½॥

என்னாலேதான் நான் பெரிய பணக்காரனாக இருக்கிறேன். உயர்ந்த குலத்தில் நானாகவேதான் பிறந்தேன். என்மாதிரி தன் ஸாமர்த்தியத்தினாலேயே எல்லா ஸம்பத்தையும் ஸம்பாதித்தவன் இன்னொருவன் யார் இருக்கிறான். [14½]

𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍋𑌦𑌿𑌷𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 ॥

𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍋𑌦𑌿𑌷𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 - 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑍇𑌣 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌯𑌾𑌗𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌾 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

நானே யாகம்பண்ணப் போகிறேன். நானே கொடுக்கப்போகிறேன். நானே ஸந்தோஷப்படப்போகிறேன். (எனக்கு தெய்வத்தின் ஒத்தாசை என்னத்துக்கு). எல்லா வேலைகளையும் என்னாலேயே செய்யமுடியுமென்று நினைக்கிறார்கள். அது தப்பு எண்ணத்தினாலேயே. [15]

𑌅𑌨𑍇𑌕𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑍋𑌹𑌜𑌾𑌲𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑍇𑌷𑍁 𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑌕𑍇𑌽𑌶𑍁𑌚𑍌 ॥

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌦𑌿𑌸𑌹𑌕𑌾𑌰𑌰𑌹𑌿𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾, 𑌏𑌵𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌜𑌾𑌤𑍇 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌜𑌾𑌤𑍇 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑌨𑍇𑌕𑌾𑌨𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌅𑌨𑍇𑌕𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌃, 𑌏𑌵𑌂 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑍋𑌹𑌜𑌾𑌲𑍇𑌨 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑍃𑌤𑌾𑌃 𑌅𑌶𑍁𑌚𑍌 𑌨𑌰𑌕𑍇 𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௧௬॥

அதிருஷ்டம், ஈச்வரன்—இவை முதலான ஒத்தாசையில்லாமல் எல்லாம் என்னாலேயே செய்யமுடியுமென்று நினைத்து, இப்படிச் செய்வேன்; இதையும் செய்வேன்; இன்னும் மற்ற எந்த வேலையையும் செய்வேன் என்கிற தப்பு எண்ணங்களுள்ளவர்களாயும், உள்ளபடி அறியாதவர்களாயும், தங்களிஷ்டப்படி ஸுகங்களை அனுபவிப்பதை ஆசைப்பட்டு, வேலைகளைச் செய்கிறார்கள். நடுவில் செத்துப்போய், ரத்தம், எச்சல் முதலானவைகள் ரொம்பிய நரகத்தில் விழுகிறார்கள். [16]

ஆத்மஸம்பாவிதா꞉ ஸ்தப்தா தநமாநமதாந்விதா꞉| ॥௧௬½॥

ஆத்மநைவ ஸம்பாவிதா꞉—ஆத்மநைவாத்மாநம் ஸம்பாவயந்த꞉। ஸ்தப்தா꞉—பரிபூர்ணம் மந்யமாநா ந கிஞ்சித்குர்வாணா꞉। கதம்? தநமாநமதாந்விதா꞉—தநேந வித்யாபிஜநாபிமாநேந ச ஜநிதமதாந்விதா꞉ ॥ ॥௧௬½॥

தாங்களே தங்களை ஸ்தோத்திரம் பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஸாதுக்கள் தங்களை இன்னொருவர் ஸ்தோத்திரம் பண்ணும்போதுகூட வெட்கப்படுகிறார்கள். தங்களுக்கு ஒருவிதமான குறைவுமில்லை என்று நினைத்து, ஒரு வேலையையும் செய்கிறதில்லை. பகவானையும் ஆசாரியர்களையுங்கூட ஸேவிக்கிறதில்லை. பணம், படிப்பு, குலம் உள்ளவன் என்கிற எண்ணத்தினால் உண்டான கொழுப்பை அடைந்திருக்கிறார்கள் [16½]

யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம்॥

நாமயஜ்ஞை꞉—நாமப்ரயோஜநை꞉—யஷ்டா இதி நாமமாத்ரப்ரயோஜநைர்யஜ்ஞை꞉। ததபி தம்பேந ஹேதுநா யஷ்டவ்யாவிதிபூர்வகம் அயதாசோதநம் யஜந்தே ॥

அவர்கள் யாகங்களைப்பண்ணுவது தீக்ஷிதன் என்கிற பெயருக்காகவும், இவன் யாகம் பண்ணினான் என்று நாலுபேர்கள் சொல்லுவதற்காகவும்தான். ஸ்வர்க்கத்துக்காக இல்லை. அதைச் செய்வதும் சாஸ்திரத்தில் சொல்லியபடியல்ல. [17]

ஏவ—தேவ ஸர்வேஷ்வபி யஜ்ஞாத்யா—

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ஶ்ரிதா: |
மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா: ||

அநந்யாபேக்ஷோऽஹமேவ ஸர்வம் கரோமீதி த்வஹங்காரம் ஸமாஶ்ரிதா:, ததா ஸர்வஸ்ய கரணே மதீயமேவ பலம் பர்யாப்தமிதி ச பலம், அதோ மத்ஸத்ருஶோ நகஶ்சிதஸ்தீதி ச தர்பம், ஏவம்பூதஸ்ய மம காமமாத்ரேண ஸர்வம் ஸம்பத்ஸ்யத இதி காமம், மம யே அநிஷ்டகாரிணஸ்தாந் ஸர்வாந் ஹநிஷ்யாமீதி ச க்ரோதம், ஏவமாதீந் ஸம்ஶ்ரிதா:, ஸ்வதேஹேஷு பரதேஹேஷு சாவஸ்திதம் ஸர்வஸ்ய காரயிதாரம் புருஷோத்தமம் மாம் அப்யஸூயகா: ப்ரத்விஷந்த:- குயுக்திபிர் மத்ஸ்திதௌ தோஷாநாவிஷ்குர்வந்தோ மாமஸஹமாநா: அஹங்காராதிகாந் ஸம்ஶ்ரிதா யாகாதிகம் ஸர்வம் க்ரியாஜாதம் குர்வதே இத்யர்த்த: || || ௧௮ ||

அவ—அவர்கள் மேலே சொல்லப்போகிறபடி யாகம் பண்ணுகிறார்கள் என்று சொல்லுகிறார்—

ஒருவருடைய உதவியுமில்லாமல் நானே எல்லாவற்றையும் செய்வேன். எனக்கு தெய்வத்தின் உதவியும் வேண்டாம் என்கிற எண்ணத்தையும் (அகங்காரத்தையும்), என் பலமே எல்லா காரியங்களையும் செய்யப் போதுமானது என்கிற எண்ணத்தையும் (பலத்தையும்), இந்த இரண்டினால் உண்டாகிற—என்யாதிரி ஒருவருமில்லை என்கிற—எண்ணத்தையும் (தர்ப்பத்தையும்), இப்படிப்பட்ட எனக்கு நினைத்தமாத்திரத்தில் எல்லாம் கிடைக்கும் என்கிற எண்ணத்தையும் (காமத்தையும்), எனக்கு எவர்களாவது இடைஞ்சல் செய்தால், அவர்களெல்லாரையும் கொன்றுவிடுவேன் என்கிற எண்ணத்தையும் (குரோதத்தையும்)—இவைகளை அடைந்து, தன்னுடம்பிலும், பிறருடைய உடம்புகளிலுமிருந்து, எல்லா வேலைகளையும் செய்விக்கிற—மிகவும்உயர்ந்த புருஷனான நான் ஒருவன் இருக்கிறேனென்று யாராவது சொன்னால், அந்தச்சொல்லைப் பொறுக்காமல், நான் இல்லை என்பதற்குக் கோணலான பல யுக்திகள் சொல்லுகிறார்கள். இந்த அழுகிலே யாகம் முதலான எல்லா

வேலைகளையும் செய்கிறார்கள். யாகமென்பது என்ன? எதற்காகச் செய்கிறோம் என்பது முதலானவைகளைக் கவனிக்கிறதில்லை. [18]

𑌤𑌾𑌨𑌹𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍।
𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑍍𑌯𑌜𑌸𑍍𑌰𑌮𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 ॥

𑌯 𑌏𑌵𑌂 𑌮𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌿, 𑌤𑌾𑌨𑍍 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑌶𑍁𑌭𑌾𑌨𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 - 𑌜𑌨𑍍𑌮𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁, 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿 - 𑌮𑌦𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿, 𑌤𑌤𑍍𑌤𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌗𑌣𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑍍𑌰𑍂𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌷𑍍𑌵𑍇𑌵 𑌸𑌂𑌯𑍋𑌜𑌯𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥௧௯॥

1கீழ்ச்சொன்னபடி யாரென்னிடத்தில் த்வேஷம் பண்ணுகிறார்களோ, அவர்களையும் (1), நான் இல்லை என்பதற்குக் கோணலான யுக்திகளைச் சொல்லுகிறவர்களையும் (2), என்னைத் தெரிந்தும் என்கிட்ட வராதவர்களையும் (3), நான் இருக்கிறேன் என்று அறியாதவர்களையும் (4) நான் எப்பொழுதும் ஸம்ஸாரத்திலேயே போடுகிறேன். (அதாவது—பிறப்பு, கிழத்தனம், சாவு, மறுபடியும் பிறப்பு—இதேமாதிரி ஓயாமல்சுற்றும்படி செய்கிறேன்). அதிலும், அஸுரப் பிறப்பிலேயே போடுகிறேன். (அதாவது—எனக்கு சத்ருவாகவே பிறப்பிக்கிறேன்). அந்தப்பிறப்பைக் கொடுக்கும்படியான வேலைகளைச் செய்யும்படி கொடுமையான நினைவுகளை நானே உண்டுபண்ணுகிறேன். [19]

𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾 𑌮𑍂𑌢𑌾 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿।
𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌧𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥ ॥௨௦॥

𑌮𑌦𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌃- [illegible] 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌮𑍂𑌢𑌾𑌃-𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵- 𑌅𑌸𑍍𑌤𑌿

1. இந்தசுலோகத்திலிருக்கும், 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃--𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍--𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍--𑌅𑌶𑍁𑌭𑌾𑌨𑍍--என்கிற நாலு சொற்களாலே 7-வது அத்தியாயம் 15-வது சுலோகத்தில் சொல்லப்பட்ட நாலுவிதமான பாபிகள் சொல்லப்படுகிறார்கள்.

[illegible] 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌵𑌾𑌪𑍍𑌯, 𑌤𑌤
𑌸𑍍𑌤𑌤𑍋 𑌜𑌘𑌨𑍍𑌯𑌤𑌮𑌾𑌮𑍇𑌵 𑌗𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௨௦॥

அந்த பிறப்பை அடைந்து, அவர்கள் மறுபடியும் பிறப்புகள் தோறும் இதேமாதிரி கெட்ட நினைவுகளையே அடைந்து, எல்லாருக்கும் ராஜாவாய் பகவானான வாஸுதேவன் ஒருவனிருக்கிறானென்று அறியாமலே இன்னும் கீழே கீழே போகிறார்கள். அதாவது—இருக்க இருக்க இளப்பமான பிறப்புக்களையே அடைகிறார்கள்.

𑌅𑌵- 𑌆𑌸𑍁𑌰𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾𑌶𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌹𑍇𑌤𑍁𑌮𑌾𑌹-

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯𑍇𑌦𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌨𑌾𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌥𑌾 𑌲𑍋𑌭𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥

𑌆𑌸𑍁𑌰𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯𑍈𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂, 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌨𑌾𑌶𑌨𑌂-𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋 𑌲𑍋𑌭 𑌇𑌤𑌿। 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂। 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂-𑌮𑌾𑌰𑍍𑌗𑍋 𑌹𑍇𑌤𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍-𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌤𑌿𑌘𑍋𑌰𑌨𑌰𑌕𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌲𑍋𑌭𑌾𑌨𑌾𑌮𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌦𑍂𑌰𑌤𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥ ॥௨௧॥

அவ—ஆத்மாவை உள்ளபடி அறியவொட்டாமல் செய்கிறதான கீழ்ச்சொன்ன இந்த அஸுரஸ்வபாவத்துக்கு வேர் எது? அதாவது, இது எதனால் உண்டாகிறதென்றால், அதைச்சொல்லுகிறார்—

கீழ்ச்சொன்ன அஸுரர்களுடைய ஸ்வபாவமாகிற நரகத்திற்கு மூன்று வாசற்படிகள் இருக்கின்றன. அதாவது—அவைகள் வழியாகத்தான் நரகத்தை அடையவேணும். அவைகளால் தான் அந்த ஸ்வபாவங்கள் உண்டாகின்றன. அவைகள் தான் ஆத்மாவை உள்ளபடி அறியவொட்டாமல் பண்ணி, ஜீவன்களுக்கு எல்லையில்லாத கெடுதிகளை உண்டு பண்ணுகின்றன. அவைகளாவன—(1) காமம், (2) க்ரோதம் (3) லோபம். காமமாவது-விஷயங்களை அனுபவிப்பதில், அநுபவித்தாலல்லது தாங்கமுடியாத ஆசை. க்ரோதமாவது—அப்படி அனுபவிக்க முடியாமல் போனால், மனது கலங்கி கிட்ட இருப்பவர்களை அடிக்கவும், வைய்யவும் பண்ணுகிற மனக்

கலக்கம். லோபமாவது-தனக்கு ஏராளமான ஸொத்து இருந்தபோதிலும், காலணாக்கூட பிறருக்குக் கொடுக்க மனதாகாமலிருப்பது. ஆகையால் இந்த மூன்றையும் விடு. மிகவும் 1 கொடுமையான நரகத்திற்குக் காரணமாக இருப்பதால், இந்த மூன்றையும் அடியோடு தொலைக்கவேண்டும். [21]

ஏதைர்விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்த்ரிபிர்
நர: । ஆசரத்யாத்மந: ஶ்ரேயஸ்ததோ யாதி பராம் கதிம் ॥

ஏதை: காமக்ரோதலோபைஸ்தமோத்வாரைர்மத்விப
ரீதஜ்ஞாநஹேதுபிர்விமுக்தோ நர ஆத்மந: ஶ்ரேய: ஆச
ரதி-லப்தமத்விஷயஜ்ஞாநோ மத்ப்ராப்த்யுபாயே ப்ரயததே - த
தோ மாமேவ பராம் கதிம் யாதி ॥ ॥௨௨॥

நரகத்துக்கு வழியாயும், என்னைப்பற்றித் தப்பான நினைவுகளைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கிற இந்த மூன்றுகளுமில்லாதவன் ஆத்மாவுக்கு க்ஷேமங்களைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்வன். அதாவது—என்னை உள்ளபடி அறிந்து, எனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்வன். அதனால் அடையவேண்டியவைகளில் மிகவும் உயர்ந்த என்னை அடைவன்.

அவ—ஶாஸ்த்ராநாதரஸ்ய நரகஸ்ய ப்ரதாநஹேதுத்வமாஹ—

ய: ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥

ஶாஸ்த்ரம்-வேதா:, விதிரநுஶாஸநம்,வேதாக்யம் ஶாஸநமுத்ஸ்ருஜ்ய ய: காமகாரதோ வர்ததே-ஸ்வச்சந்தாநுகுணமார்கேண வர்ததே, நஸஸித்திமவாப்நோதி- நகாமப்யாமுஷ்மிகீம் ஸித்திமவாப்நோதி-நஸுகம் கிஞ்சிதவாப்நோதி, நபராம் கதிம், குத: பராம் கதிம் ப்ராப்நோதீத்யர்த: ॥௨௩॥

அவ—ஜீவனுக்கு நரகத்தைக் கொடுக்கும் ஸங்கதிகளுக்குள் சாஸ்திரத்தை அலக்ஷியம்1 பண்ணுவதுதான் மிகவும் முக்கியமானது என்று சொல்லுகிறார்—

1. இப்போது உலகத்தில் இருக்கிறது அது ஒன்றுதான், யாரும் சாஸ்திரத்தை அலக்ஷியம் பண்ணுகிறார்கள்.

வேதம் என்கிற என்னுடைய உத்திரவை மீறி, தன்னிஷ்டப்படி எவன் நடக்கிறானோ, அவனுக்கு இந்த லோகத்தில் ஸுகம் துளிக்கூடக் கிடையாது ஸ்வர்க்கம் முதலான வேறு உலகங்களுமில்லை. இவைகளே இல்லாதபோது, மோக்ஷம் எப்படிவரும். [23]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌦𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇
𑌦𑍈𑌵𑌾𑌸𑍁𑌰𑌸𑌂𑌪𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮
𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 - 𑌉𑌪𑌾𑌦𑍇𑌯𑌾𑌨𑍁𑌪𑌾𑌦𑍇𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂-𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌯𑌦𑍇𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌣𑌨𑌰𑍂𑌪𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌚𑌾𑌵𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 - 𑌯𑌥𑌾𑌵𑌦𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯, 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌤𑍍𑌵𑌮𑌰𑍍𑌹𑌸𑌿-𑌤𑌦𑍇𑌵𑍋𑌪𑌾𑌦𑌾𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ௨௪ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

---

ஆகையால் இன்னதைச்செய்யலாம், இன்னதைச் செய்யக்கூடாதென்பதை சாஸ்திரத்தைக்கொண்டுதான் அறியவேணும். ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள்—இவைகளோடுசேர்ந்தவேதங்கள் பகவான் மிகவும் உயர்ந்த புருஷனென்றும், அவனை அடைவதற்காக, அவருக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய வேலைகளைச் செய்யவேணுமென்றும் சொல்லுகின்றன. அந்த பகவானையும், அந்தக்கர்மங்களையும் ஏற்றக் குறைவில்லாமல் உள்ளபடி அறிந்து, நீ அந்த வேலைகளை உள்ளபடி செய். [24]

ஸ்ரீமதே பகவதே பாஷியகாராய மஹாதேசிகாய நம:

(21—வது சுலோகத்தின் குறிப்பு) 1 ரௌரவம் முதலான நரகங்கள் பாபங்களைப் போக்குகின்றன. அஸுரத்தனம் பாபங்களை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அது மிகவும் கொடுமையான நரகம்.

𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃॥

𑌭𑌾:— 𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌵𑌿𑌭𑌾𑌗𑍋𑌕𑍍𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌵𑍇𑌦𑍈𑌕𑌮𑍂𑌲𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌫𑌲𑌤𑍍𑌵𑌂, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌗𑍁𑌣𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌂, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌤𑌤𑍍𑌰𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯, 𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌯𑌾𑌗𑌾𑌦𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌯𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌤𑍁 𑌕𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌾𑌹𑍋 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌃॥

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌕𑌾? 𑌕𑌿𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂? 𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌰𑌜𑌃? [illegible] 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾–𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃, 𑌸𑍍𑌥𑍀𑌯𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌰𑍇𑌵 𑌨𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌿𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃, 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌰𑌜𑌸𑌿, 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌤𑌮𑌸𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃॥

அவ—தேவப்பிறப்பு, அஸுரப்பிறப்பு என்கிற பிரிவைச் சொல்லி, அதுவழியாய் அடையவேண்டிய வஸ்துவையும், அடைவதற்கு உபாயத்தையும், வேதத்தைக்கொண்டே அறியவேணுமென்று சொல்லப்பட்டது. இப்போது சாஸ்திரத்தில் சொல்லப்படாத வேலைகள் அஸுரப்பிறப்புள்ளவர்களாலேயே செய்யப்படுமாகையாலே, அவைகள் வீண்; அவைகளுக்குப் பலன் கிடையாதென்பதையும்; சாஸ்திரத்தினால் சொல்லப்பட்ட வேலைகள் ஸத்துவம் முதலான குணங்களால் மூன்று விதங்கள் என்பதையும்; சாஸ்திரத்தினால் ஏற்பட்ட வேலைகளுக்கு அடையாளத்தையும், சொல்லுகிறார். அர்ஜுனன் சாஸ்திரத்தில் சொல்லப்படாத வேலைகளுக்குப்பலனில்லை என்பதை அறியாமல், சாஸ்திரத்தில் சொல்லப்படாதயாகம் முதலான வேலைகளை மிகவும்சிரத்தையுடன் ஒருவன் செய்தால், அவைகளினால் வரும்பலன்கள் ஸத்துவகுணத்தால்

ஏற்பட்டவைகளா? அல்லது மற்ற இரண்டு குணங்களால் ஏற்பட்டவைகளா என்று கேட்கிறான்.—

சாஸ்திரமில்லாமல் சிரத்தையுடன் யாகம் முதலான சில காரியங்களைச் சிலர் செய்கிறார்களே. அவர்கள் எந்த குணத்திலிருக்கிறார்கள்? அதாவது—அந்த வேலைகள் ஸத்துவத்தினால் ஏற்பட்டவைகளா? ரஜஸ்ஸினாலா? தமஸ்ஸினாலா? [1]

அவ—ஏவம் ப்ருஷ்டோ பகவாந் அஶாஸ்த்ரவிஹிதஶ்ரத்தாயா: தத்பூர்வகஸ்ய ச யாகாதேர் நிஷ்பலத்வம் ஹ்ருதி நிதாய ஶாஸ்த்ரீயஸ்யைவ யாகாதேர் குணதஸ் த்ரைவித்யம் ப்ரதிபாதயிதும், ஶாஸ்த்ரீயஶ்ரத்தாயாஸ் த்ரைவித்யம் தாவதாஹ—

ஶ்ரீபகவாநுவாச—

த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா ।
ஸாத்த்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு ॥

ஸர்வேஷாம் தேஹிநாம் ஶ்ரத்தா த்ரிவிதா பவதி। ஸா ச ஸ்வபாவஜா, ஸ்வபாவ:—ஸ்வாஸாதாரணோ பாவ:—ப்ராசீநவாஸநாநிமித்தஸ் தத்தத்ருசிவிஶேஷ:। யத்ர ருசிஸ் தத்ர ஶ்ரத்தா ஜாயதே। ஶ்ரத்தா ஹி ஸ்வாபிமதம் ஸாதயத்யேததிதி விஶ்வாஸபூர்விகா ஸாதநே த்வரா। வாஸநா ருசிஶ் ச ஶ்ரத்தா சாத்மகுணஸம்ஸர்கஜா:। தேஷாமாத்மகுணாநாம் வாஸநாதீநாம் ஜநகா: தேஹேந்த்ரியாந்த:கரணவிஷயகதாஸ் தத்கார்யைகநிரூப்யா: ஸத்த்வாதயோ குணா:— ஸத்த்வாதிகுணயுக்ததேஹாத்யநுபவஜா இத்யர்த்த:। ததேவம் ஶ்ரத்தா ஸாத்த்விகீ ராஜஸீ தாமஸீ சேதி த்ரிவிதா। தாமிமாம் ஶ்ரத்தாம் ஶ்ருணு—ஸா ஶ்ரத்தா யத்ஸ்வபாவா, தத்ஸ்வபாவம் ஶ்ருணு இத்யர்த்த:॥

அவ.—இப்படிக் கேட்கப்பட்ட பகவான், சாஸ்திரத்தினால் ஏற்படாதவைகளில் சிரத்தைக்கும், அதனால் செய்யப்படுகிற வேலைகளுக்கும் ஒரு பிரயோஜனமும் கிடையாதென்பதை 1 மனதில்

1. அர்ஜுனன் கேட்ட கேள்விக்கு பதில் கடைசியில் சொல்லுகிறார். அது அசட்டுக்கேள்வி என்று காட்டுவதற்காக உடனே பதில் சொல்லவில்லை.

வைத்துக்கொண்டு, சாஸ்திரத்தினால் ஏற்பட்ட யாகம் முதலான வேலைகள் ஸத்துவம் முதலான குணங்களால் மூன்று விதமென்று சொல்லுவதற்காக, 1 சாஸ்திரத்தினால் ஏற்பட்ட வேலைகளைப் பற்றின சிரத்தை மூன்றுவிதம் என்று சொல்லுகிறார்—

2 உடம்போடுகூடின எல்லாப் பிராணிகளுக்கும் இருக்கும் சிரத்தையானது மூன்றுவிதம். அது 3 ஸ்வபாவத்தினாலுண்டாகிறது. ஸ்வபாவமாவது—நெடுநாளாய்வந்த வாஸனையால் (பழக்கத்தால்) ஏற்பட்ட அந்தந்த ஸங்கதிகளில் பிரீதி (ருசி). எதில் பிரீதி இருக்கிறதோ அதில் சிரத்தை உண்டாகிறது. சிரத்தையாவது—இந்த வேலையால் என்னுடைய இஷ்டம் கிடைக்கும் என்று நம்பி, அந்த வேலையைச் செய்வதில் பறபறப்பு. வாஸனையும், ருசியும், சிரத்தையும் ஒருவன் உடம்புடன் சேர்ந்து இருக்கும்போது, அதினுடைய ஸத்துவம் முதலான குணங்களாலே, அந்தந்த ஸங்கதிகளில் ஆத்மாக்களுக்கு உண்டாகின்றன. ஆகையால், சிரத்தை—ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம்—என்று மூன்றுவிதம். அதின் ஸ்வபாவத்தைச் சொல்லுகிறேன். கேள். [2]

---

1. சிரத்தையோடு ஒருகாரியத்தைச் செய்தால்தான், பலன் உண்டாகும் அந்த காரியமும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதாக இருந்தால்தான்.

சிரத்தைஎன்பது ஸத்துவகுணம் உள்ளவர்களுக்குத்தான் என்பதில்லை. மற்றகுணங்களுள்ளவர்களுக்கும் உண்டு. சாஸ்திரத்தில்சொல்லாத வேலைகளில்வரும் சிரத்தையைப்பற்றிக்கேட்ட அர்ஜுனனுக்கு சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளில் வரும்சிரத்தை மூன்று விதமென்று சொல்ல ஆரம்பித்தபடியால், கீழ்ச்சொன்ன சிரத்தைக்கு மூன்று விதம் கிடையாது என்று ஜாடையாய் காட்டப்படுகிறது.

2. 'உடம்போடு கூடின' என்கிற சொற்களாலே ஸத்துவம் முதலான குணங்களில் ஒவ்வொன்று மேலிடுகிறதென்றும், அதற்குத் தகுந்தபடி சிரத்தை முதலான காரியங்கள் உண்டாகின்றனவென்றும் காட்டப்படுகிறது. ஸத்துவம் முதலான குணங்கள் உடம்பிலிருக்கின்றன. சிரத்தை உடம்புடன் சேர்ந்த ஆத்மாவில் இருக்கிறது. காரணமான குணங்கள் மூன்று விதமாய் இருப்பதால், காரியமான சிரத்தையும் மூன்று விதம்.

3. ஒருவேலையைச் செய்யச் சொல்லுகிற சாஸ்திரமும், அந்தவேலையைப்பற்றி ஸ்தோத்திரம் பண்ணுகிற அர்த்தவாதம் என்கிற வேதவாக்கியமும் எல்லாருக்கும் பொதுவாய் இருக்க, ஏன் ஒருவனுக்கு ஒன்றில்சிர

ஸத்த்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத |
ஶ்ரத்தாமயோ(அ)யம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: ||

ஸத்த்வம்-அந்த:கரணம் | ஸர்வஸ்ய புருஷஸ்யாந்த:கரணாநுரூபா ஶ்ரத்தா பவதி-அந்த:கரணம் யாத்ருஶகுணயுக்தம் தத்விஷயா ஶ்ரத்தா ஜாயத இத்யர்த: | ஸத்த்வஶப்த: பூர்வோக்தாநாம் தேஹேந்த்ரியாதீநாம் ப்ரதர்ஶநார்த: | ஶ்ரத்தாமயோ(அ)யம் புருஷ:-ஶ்ரத்தாமய:-ஶ்ரத்தாபரிணாம:, யோ யச்ச்ரத்த:-ய: புருஷோ யாத்ருஶ்யா ஶ்ரத்தயா யுக்த:, ஸ ஏவ ஸ: ஸ தாத்ருஶஶ்ரத்தாபரிணாம:-புண்யகர்மவிஷயே ஶ்ரத்தாயுக்தஶ்சேத் புண்யகர்மபலஸம்யுக்தோ பவதீதி ஶ்ரத்தாப்ரதாந: பலஸம்யோக உக்தோ பவதீதி || ||௩||

எல்லா ஜீவன்களுக்கும் சிரத்தை அவரவர்கள் மனதுக்குத் தகுந்தபடி இருக்கிறது. மனது என்ன குணத்தோடு சேர்ந்திருக்கிறதோ, அந்த குணத்தினால் ஏற்படும் வேலைகளில் சிரத்தை உண்டாகிறது. அதாவது—மனது ஸத்துவகுணமுள்ளதாயிருந்தால், அவனுக்கு ஸத்துவகுணத்தினால் ஏற்படும்வேலைகளில் சிரத்தை உண்டாகிறது. 1 எவனுக்கு எந்தமாதிரி சிரத்தை இருக்கிறதோ, அந்த சிரத்தையே அந்த மனிதனாக ஆகிறது. மண்ணால் பண்ணின குடம் மண்ணாயிருக்கிறது. வெள்ளியினால் பண்ணின குடம் வெள்ளியாயிருக்கிறது. அதுபோல. அதாவது நல்ல கர்மங்களில் சிரத்தையுள்ளவனாயிருந்தால், நல்ல கர்மங்களின் பலன்களை அடைகிறான். ஆகையால் பலன் கிடைப்பதற்கு சிரத்தைதான் முக்கியமான காரணம் என்று சொன்னதாக ஆகிறது. [3]

---

த்தை? இன்னொருவனுக்கு இன்னொன்றில் சிரத்தை என்றால்—இந்த வாக்கியத்தால் பதில் சொல்லுகிறார். உலகத்தில் ருசி வெவ்வேறாக இருக்கிறது. அதினால் சிரத்தையும் வெவ்வேறு.

1 சுலோகத்தில் 3-வது பாதத்தில் பொதுவாய் சொன்னதை 4-வது பாதத்தில் அந்தந்த சிரத்தையுள்ளவனுக்கு அந்தந்த பலன்வருமென்று பிரித்துச் சொல்லுகிறார். நெய்ஸாப்பிட்டால், ஆயுஸ்ஸு வளருமாம். ஆயுஸ் நெய் என்று வளர்க்கிற நெய்யையும், வளர்கிற ஆயுஸ்ஸையும் ஒன்றாகச்.

𑌅𑌵 — 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌵𑍃𑌣𑍋𑌤𑌿 —

𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑍇𑌤𑌾𑌨𑍍 𑌭𑍂𑌤𑌗𑌣𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌮𑌸𑌾 𑌜𑌨𑌾𑌃 ॥

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌚𑍁𑌰𑌾𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇, 𑌦𑍁𑌃𑌖𑌾𑌸𑌂𑌭𑌿𑌨𑍍𑌨𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌸𑍁𑌖𑌹𑍇𑌤𑍁𑌦𑍇𑌵𑌯𑌾𑌗𑌵𑌿𑌷𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌰𑌾𑌜𑌸𑌾 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇। 𑌤𑌾𑌮𑌸𑌾𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑌾𑌨𑍍 𑌭𑍂𑌤𑌗𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇—𑌦𑍁𑌃𑌖𑌸𑌂𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌲𑍍𑌪𑌸𑍁𑌖𑌜𑌨𑌨𑍀 𑌰𑌾𑌜𑌸𑍀 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾। 𑌦𑍁𑌃𑌖𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌸𑍁𑌖𑌜𑌨𑌨𑍀 𑌤𑌾𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௪ ॥

அவ—அதையே விரிவாகச் சொல்லுகிறார்—

ஸத்த்வகுணம் மேலிட்டவர்கள் ஸாத்த்விகமான சிரத்தையை அடைந்து, தேவர்களுடைய பிரீதிக்காக யாகங்களைச் செய்கிறார்கள். துக்கக் கலப்பில்லாத-உயர்ந்த—ஸுகத்தை உண்டுபண்ணக்கூடிய—தேவதைகளைக் குறித்துச்செய்யப்படும் யாகங்களில் சிரத்தையை ஸாத்த்விகம் என்று சொல்லுகிறது. ரஜோகுணம் மேலிட்டவர்கள் யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் குறித்து யாகம் செய்கிறார்கள். தமோகுணம் மேலிட்டவர்கள் 1 ப்ரேதங்களையும், பிசாசுகளையும்குறித்து யாகம் செய்கிறார்கள். துக்கம் கலந்த கொஞ்ச ஸுகத்தைக் கொடுக்கிறது ராஜஸ சிரத்தை. துக்கம் என்றே சொல்லும்படியான—மிகவும் கொஞ்சமான—ஸுகத்தைக் கொடுக்கிறது தாமஸசிரத்தை. [4]

𑌅𑌵 — 𑌏𑌵𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌷𑍁 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌗𑍁𑌣𑌤𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑍇𑌷𑍁 𑌤𑌪𑍋

---

சொல்லுவது உண்டு. அப்படியே 'அந்த சிரத்தையே அவன்' என்கிற சொல்லுக்கு அந்த சிரத்தையினால் உண்டாகும் பலனை அவன் அநுபவிக்கிறான் என்று பொருள்.

1. தாய் தகப்பன் செத்துப்போன பத்து நாளில்செய்கிற காரியங்களை ப்ரேத திருப்திக்காக என்றுசொல்லுகிறார்கள். ஆனால் இது ஸாத்த்விகம்.

𑌯𑌾𑌦𑍃𑌚𑍍𑌛𑌿𑌕𑍇𑌷𑍁 𑌮𑌚𑍍𑌛𑌾𑌸𑌨𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌸𑍁𑌖𑌲𑌵𑌃, 𑌅𑌪𑌿 𑌤𑍍𑌵𑌨𑌰𑍍𑌥 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌹𑍃𑌦𑌿 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌯𑌨𑍍𑌨𑌾𑌹—

𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌘𑍋𑌰𑌂 𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇 𑌤𑌪𑍋 𑌜𑌨𑌾𑌃 ।
𑌦𑌂𑌭𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ ॥ ௫ ॥
𑌕𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌮𑌾𑌂 𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌨𑍍 ॥ ௬ ॥

𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌮𑌤𑌿𑌘𑍋𑌰𑌮𑌪𑌿 𑌤𑌪𑍋 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌸𑍍𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌂—𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌬𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌸𑌂 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌕𑌂 𑌯𑍇 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 । 𑌦𑌂𑌭𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑍂𑌤𑌸𑌮𑍂𑌹𑌂 𑌕𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌦𑌂𑌶𑌭𑍂𑌤𑌂 𑌜𑍀𑌵𑌂 𑌚𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑍋 𑌯𑍇 𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌕𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇, 𑌤𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 । 𑌅𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯 𑌆𑌸𑍁𑌰𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃-𑌅𑌸𑍁𑌰𑌾 𑌹𑌿 𑌮𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌕𑌾𑌰𑌿𑌣𑌃-𑌮𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌕𑌾𑌰𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌖𑌲𑌵𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌪𑌿 𑌤𑍍𑌵𑌨𑌰𑍍𑌥𑍇 𑌪𑌤𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 “𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑌕𑍇𑌽𑌶𑍁𑌚𑍌” 𑌇𑌤𑌿 ॥

அவ—கீழ்ச்சொன்னபடி சாஸ்திரத்தால் ஏற்படும் சிரத்தையுடன் செய்யப்பட்ட யாகம் முதலானவைகளுக்கு குணங்களுக்குத் தகுந்தபடி பலன் வரும். சாஸ்திரத்தால் சொல்லப்படாதவைகள் என்னுடைய உத்திரவுக்கு எதிர்த்தட்டானவையாலே, அவைகளால் துளியேனும் ஸுகம் கிடைக்காது; தவிர கெடுதியுமுண்டாகும் என்று மனதில் இருந்த சங்கதியை வெளியிட்டுச் சொல்லுகிறார்—

**தம்பம், அகங்காரம், காமம், ராகம், பலம் இவைகளோடு, உடம்பை இளைக்கப் பண்ணிக் கொண்டும், உடம்பிலிருக்கும் 1 என்னு**

1. சுலோகத்தில் (𑌮𑌾𑌂) என்னையும் தொந்தரவு பண்ணுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. இவன் என்னபட்டினியிருந்தாலும், பகவானுக்கு ஒரு தொந்தரவுமில்லை. ஆகையால், ‘என்னை’ என்பதற்கு என்னுடைய ஸொத்தான ஜீவனை என்றுதான் பொருள். ஜீவனைத் தொந்தரவு பண்ணுகிறதில், தனக்கு மிகுந்த வருத்தம் என்று காட்டுவதற்காகத் தன்னைத் தொந்தரவு பண்ணினதாகச் சொன்னது.

டைய அம்சமான ஜீவனுக்குத் தொந்தரவை உண்டுபண்ணிக் கொண்டும், 1சாஸ்திரத்தினல் சொல்லப்படாத கடுமையான தபஸ்ஸையும், எல்லையில்லாத வருத்தத்துடன்கூடினயாகம்முதலானவைகளையும், எவர்கள் பண்ணுகிருர்களோ, அவர்களை அஸுரர்கள் என்றே நினை. அஸுரர்களாவன—என்னுடைய உத்திரவுக்கு விரோதமாக நடப்பவர்கள். அப்படி நடப்பதால், துளியேனும் ஸுகம் கிடையாது. அவர்கள் எல்லையில்லாத தொந்தரவோடுகூடிய நரகத்தில்தான் விழுவர்கள். [5—6]

---

1 சாஸ்திரத்தில் சொல்லப்படாதவைகள் எவையென்ருல்-வேதத்தை ஒப்புக்கொள்ளாதவர்களால் ஏற்படுத்தப்பட்ட கர்மங்களும், வேதத்தில் சொல்லியவைகளாயிருந்தாலும், செய்கிறவன் எப்படி இருக்கவேணுமென்று சொல்லியிருக்கிறதோ, அப்படி இல்லாதவர்களால் செய்யப்படுமவைகளும், இன்ன இடத்தில், இன்ன காலத்தில், இன்ன திரவியத்தைக்கொண்டு இன்னமாதிரி செய்யவேணுமென்று சாஸ்திரத்தில்சொல்லப்பட்ட கட்டுப்பாட்டை மீறியும் செய்யப்படுமவைகளும்.

நாம் சாஸ்திரத்திற்கு ஒத்தது என்று நினைத்துச் செய்கிற எல்லா கர்மங்களும், உண்மையில் சாஸ்திரத்திற்கு ஒத்திருந்தால்தான் பலன் கிடைக்கும். அப்படி யில்லாவிட்டால், எவ்வளவு சிரத்தையோடு செய்தாலும், பலன்கிடைக்காது; கெடுதியுமுண்டு. அதாவது-பிராமணர்களுக்குள்ளும், வைஷ்ணவர்களுக்குள்ளும்-இதுதான் சாஸ்திரத்திற்கு ஒத்தது இதுதான் சாஸ்திரத்திற்கு ஒத்தது—என்று சண்டைப்படுகிருேம். எது சாஸ்திரத்திற்கு உண்மையில் ஒத்திருக்கிறதோ, அதற்குத்தான் பலன் உண்டு. அது எது என்று எப்படி அறிவதென்ருல்—தயை, பொறுமை, வணக்கம்—இவை முதலான 16-வது அத்தியாயத்தில் சொல்லிய இருபத்தாறு குணங்களுள்ளவன் செய்வதுதான் சாஸ்திரத்திற்கு ஒத்ததென்று அறியலாம்.

இந்த இடத்தில் ஒரு ஸங்கதி ஏற்படுகிறது. இதை எல்லாரும் கவனிக்கவேணும். 1 ஆசாரியனல் சரணுகதி செய்யப்பட்ட சிஷ்யனுக்குப் பகவான் மோக்ஷம் கொடுப்பது, ஆசாரியனுக்காகவே யொழிய, சிஷ்யனுக்காக இல்லை. 2 சிஷ்யனிடம் இருக்கும் கொஞ்சம் குணங்களைப் பார்த்தும் அவனுக்காக ஆசாரியன் தயையினல் சரணுகதி செய்யலாம். இந்த இரண்டையும் திரிஜடை ராக்ஷஸிகளுக்குப் பண்ணின சரணுகதியில் பார்க்கலாம் ஆகையால் ஆசாரியர்கள், நல்ல குணமுள்ளவர்களாயிருந்து, பகவானுக்கு மிகவும் வேண்டியவர்களாயிருந்தால், அவர்க

𑌅𑌵—𑌅𑌥 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌮𑍇𑌵 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍇𑌷𑍁 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌷𑍁 𑌗𑍁𑌣𑌤𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌯𑌤𑌿। 𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌾𑌰𑌮𑍁𑌖𑍇𑌨 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌦𑌿𑌰𑌾𑌜𑌸𑌤𑌾𑌮𑌸𑌾𑌹𑌾𑌰𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇। "𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨𑌃, 𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇—

𑌆𑌹𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 । 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌤𑌥𑌾 𑌦𑌾𑌨𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌭𑍇𑌦𑌮𑌿𑌮𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥ ॥௭॥

ஜீவனுக்கு ஆத்மாவாக இருந்து ஏவுகிற பகவான் ஜீவனுக்கு உத்திரவு கொடுத்து, அந்தவேலையைசெய்யும்படி செய்கிறார். ஆகையால் ஜீவனுக்கும்தன்நினைவின்றேலே ஒரு வேலையைச்செய்யும்படியான சக்தி இருக்கிறது. ஆகையால் அவனைப்பற்றி செய்யென்றும், செய்யாதே என்றும் உத்திரவுபண்ணலாம். உதாரணம்—ஆயிரம் பேர்கள் சேர்ந்து ஒரு தேரை இழுக்கிறார்கள். அவ்விடத்தில் "நிற்காதே இழு" என்று ஒவ்வொருவனையும் உத்திரவு பண்ணுகிறார்கள். 1

---

1. ஜீவனுக்கு இதுமுதல் என்று இல்லாமல், ஒன்றினால் ஒன்று வளர்ந்துகொண்டு வரும்—புண்ணியம், பாபம் என்று இருவகையான—கர்மம் என்று ஒன்றிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி வேலைகளைச செய்ய ஆரம்பிக்கிறான். அதற்கு பகவான் செய்யென்று உத்திரவு கொடுக்கிறார். இதினால் ஜீவன் இஷ்டமிருந்தால் வேலை செய்வது என்பது போகவில்லை. ஒருவன தன்னொருவனால் செய்யமுடியாததை மற்றவர்கள் உதவியினால் செய்கிறான். அதினால் லாபநஷ்டம் அவனுக்கு இல்லாமல் போகவில்லை. அதுபோல் பகவனில்லாமல் போனால், ஒரு வேலையும் நடக்காது. அவ்வளவைப் பற்றித்தான் ஜீவனுடைய வேலை பகவானதீனம் என்று சொன்னது.

தத்ரைவம் ஸதி கர்தாரமாத்மாநம் கேவலம் து ய: |
பஶ்யத்யக்ருதபுத்தித்வாந்ந ஸ பஶ்யதி துர்மதி:॥௧௬॥

ஏவம் வஸ்துத: பராத்மாநுமதிபூர்வகே ஜீவாத்மந: கர்த்ருத்வே ஸதி, தத்ர - கர்மணி கேவலமாத்மாநமேவ கர்தாரம் ய: பஶ்யதி, ஸ துர்மதி:-விபரீதமதி:, அக்ருதபுத்தித்வாத்-அநிஷ்பந்நயதாவஸ்திதவஸ்துபுத்தித்வாத், நபஶ்யதி-யதாவஸ்திதம் கர்தாரம் ந பஶ்யதி ॥ ॥௧௬॥

இப்படி ஜீவன் பகவானுடைய உதவியைக்கொண்டே எல்லா வேலைகளையும் செய்கிறான். அவருடைய உதவி இல்லாமல் ஜீவனுக்கு இஷ்டப்படி வேலை செய்யச் சக்தி இருக்கிறது ஒன்றை செய்தால், அவனைத் தடுப்பாரில்லை. உதாரணம்—(1) ஒரு பூமியில் அவரை, புடல், பாகல்—இவை முதலான விதைகளைப் போடுகிறோம். இவை எல்லாவற்றிற்கும் ஜலத்தைக் கொட்டுகிறோம். ஜலமில்லாமல்போனால் ஒரு விதையும் முளைக்காது, அந்தந்த விதைக்குத் தகுந்தபடி வெவ்வேறு விதமான முளைகள் உண்டாகின்றன. அந்த முளைகளின் வேறுபாடு விதைகளின் சக்தியாலே யொழிய ஜலத்தினால் அன்று. பகவான ஜலம் போல எல்லாவற்றிற்கும் பொதுவான காரணம். (2) ஒரு தகப்பனுக்கு இரண்டு பிள்ளைகள். அவன் ஒவ்வொரு பிள்ளைக்கும் ரூ. 2000 வீதம் பணம் கொடுத்தான். அவர்களில் ஒருவன் தன் கர்மத்திற்குத் தகுந்தபடி லாபம் வரும்படியான வேலையையும், மற்றொருவன் தன கர்மத்திற்குத் தகுந்தபடி நஷ்டம் வரும்படியான வேலையையும் செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டுபேரும் தகப்பனை வந்து கேட்டார்கள். தகப்பனுக்கு ஒன்றில் லாபம் வரும் என்றும், ஒன்றில் நஷ்டம் வரும் என்றும் தெரியும். ஆனாலும் தகப்பன் கர்மத்துக்குத் தகுந்தபடி பலன் கொடுக்கவேண்டியதாகையால், இரண்டு பேர்களுக்கும் அவரவர்கள் இஷ்டப்படி செய்ய உத்திரவுகொடுத்தான். தகப்பன் தானாக ஒருவனையும் இந்த வேலையைச் செய்யென்று ஏவவில்லை. தகப்பன் உத்திரவும், ஸஹாயமும் இல்லாவிட்டால், ஒருவன் வேலையும் நடக்காது. தகப்பன் அதீனம் என்பது இவ்வளவுதான். ஆகையால் கீழ்ச்சொன்ன உத்திரவுகள் கூடும். ஜீவன் ஒரு வேலையைச் செய்வதற்கு உடம்பு முதலானவைகளின் உதவி வேண்டியிருந்தாலும், செய், செய்யாதே என்று உத்திரவு பண்ணக்கூடும். அப்படி செய்வதினாலும், செய்யாததினாலும் வரும் புண்ணிய பாபங்களை அடையவும் கூடும்.

போனால், இவனால் ஒரு வேலையும் செய்யமுடியாது. அப்படி இருக்கும்போது, ஜீவன் அந்தந்தவேலைகளை பகவான் உதவியன்னியில் தான் ஒருவனாகச்செய்வதாக நினைத்தால், அவன் தப்பாக நினைக்கிறவன். ஆத்மாவைப்பற்றின-சாஸ்திரத்தினால்உண்டான—அறிவு இல்லாத அவனுக்கு வஸ்துவினுடைய உண்மையைப்பற்றின அறிவு ஏற்படாதபடியால், வேலை செய்கிறவன் இன்னானென்று உள்ளபடி அறியவில்லை. [16]

𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌙𑍍𑌕𑍃𑌤𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌹𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌸 𑌇𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌨 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ॥௧௭॥

𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑍇𑌨 𑌯𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌃— 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍋 𑌬𑍋𑌧𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌨𑌾𑌹𑌙𑍍𑌕𑍃𑌤𑌃— 𑌨𑌾𑌹𑌮𑍍𑌭𑌿𑌮𑌾𑌨𑌕𑍃𑌤𑌃, 𑌅𑌹𑌂𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇— 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌮𑌮 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑍇𑌵 𑌫𑌲𑌂 𑌨 𑌮𑌯𑌾 𑌸𑌮𑍍𑌬𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌨𑌚 𑌮𑌦𑍀𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑍇𑌤𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑌾𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌸 𑌇𑌮𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌹𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌤𑌾𑌨𑍍𑌨 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿— 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌖𑍍𑌯𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇- 𑌤𑌤𑍍𑌫𑌲𑌂 𑌨𑌾𑌨𑍁𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௭ ॥

அவ—வேலையை நான் செய்யவில்லையென்கிற நினைவின் பலனைச் சொல்லுகிறார்—

பகவானே எல்லாவேலைகளையும் செய்கிறார் என்று நினைத்து, நான் ஒருவனாகவே இந்த வேலையைச் செய்கிறேன் என்று எவன எண்ணவில்லையோ; அதினால் இந்த வேலையினுடைய பலனும் எனனதன்று; இந்த வேலையும் என்னுடையது அன்று என்றும் நினைக்கிறானோ, அவன் சண்டையில் இந்த எல்லா உலகத்தையும் கொன்றாலும்; அவர்களை அவன் கொல்லவில்லை. பீஷ்மர் முதலானவர்களை மாத்திரம்கொல்லவில்லை என்பதில்லை. ஆகையால் சண்டையில் எல்லாரையும் கொல்லுவது அவனுக்கு,கெடுதியை உண்டுபண்ணாது.

அவ—𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍈𑌵 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑍇𑌯𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮-

𑌣𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌕𑍃𑌤𑌂 𑌵𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍, 𑌕𑌰𑍍𑌮𑌚𑍋𑌦𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌤𑌾𑌵𑌦𑌾𑌹 —

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌕𑌰𑍍𑌮𑌚𑍋𑌦𑌨𑌾 ।
𑌕𑌰𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃 ॥௧௮॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂-𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌚-𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮, 𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾-𑌤𑌸𑍍𑌯 𑌬𑍋𑌦𑍍𑌧𑌾 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌕𑌰𑍍𑌮𑌚𑍋𑌦𑌨𑌾. 𑌬𑍋𑌧𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌬𑍋𑌦𑍍𑌧𑍄𑌣𑌾𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇-𑌕𑌰𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍇𑌤𑌿 । 𑌕𑌰𑌣𑌂 𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 । 𑌕𑌰𑍍𑌮 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌕𑌂 । 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍇𑌤𑌿॥

அவ—நான் செய்யவில்லை என்பது முதலான எண்ணங்கள் ஸத்துவ குணம் வளர்ந்தால் தான் வரும். அதனால் ஸத்துவத்தைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டியது என்று காட்டுவதற்காக, ஸத்துவம் முதலான குணங்களால் கர்மங்களுக்கு ஏற்படும் வித்தியாஸத்தை விரிவாகச் சொல்லப்போகிறார். முதலில் கர்மங்களுடைய விதியை (அதாவது இதைச் செய் என்கிற கட்டளையை)ப் பற்றிச் சொல்லுகிறார்—

செய்யவேண்டிய கர்மங்களைப்பற்றின அறிவு, செய்யவேண்டிய கர்மங்கள் (வேலைகள்), வேலைகளை அறிகிறவன் - இந்த மூன்றும் சேர்ந்து தான் ஒரு கர்மத்தினுடைய விதி (இதைச்செய் என்கிற கட்டளை) ஏற்படுகிறது. அவைகளில், அறியவேண்டிய கர்மங்களில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. அவையாவன—கர்மத்துக்கு உதவியான திரவியம் முதலானவைகள், கர்மம், அதைச்செய்கிறவன் 1

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑍈𑌵 𑌗𑍁𑌣𑌭𑍇𑌦𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌗𑍁𑌣𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑍇 𑌯𑌥𑌾𑌵𑌚𑍍𑌛𑍃𑌣𑍁 𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 ॥

𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌤

---

1. உதாரணம்—ஸோமயாகம் என்கிற கர்மத்தில் ஸோமம் என்பது காமத்துக்கு வேண்டிய திரவியம். அதன் ரஸத்தை தேவதைகளுக்குக் கொடுப்பது கர்மம். அதைச்செய்கிறவன் ஒருவன்-என்ற மூன்று.

க்ரியாநுஷ்டாதா ச, ஸத்த்வாதிகுணபேததஸ் த்ரிதைவ ப்ரோச்யதே। குணஸங்க்யாநே - குணகார்யகணநே, யதாவச்ச்ருணு தாந்யபி - தாநி குணதோ பிந்நாநி ஜ்ஞாநாதீநி யதாவச்ச்ருணு ॥

செய்யவேண்டிய கர்மத்தைப்பற்றின அறிவு, செய்யப்படுங் கர்மம், அதைச்செய்கிறவன்-இவை ஸத்துவம் முதலான குணங்களால் மூன்றுவிதமாக இருக்கின்றன. அவைகளை உள்ளபடி சொல்லுகிறேன், கேள். 1 [19]

ஸர்வபூதேஷு யேநைகம் பாவமவ்யயமீக்ஷதே ।
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ஸாத்த்விகம் ॥ ௨௰ ॥

ப்ராஹ்மணக்ஷத்ரியப்ரஹ்மசாரிக்ருஹஸ்தாதிரூபேண விபக்தேஷு ஸர்வேஷு பூதேஷு கர்மாதிகாரிஷு யேந ஜ்ஞாநேநைககாரத்ரவ்யம் பாவம் தத்த்வமவிபக்தம் ப்ராஹ்மணாத்யநேககாரேஷ்வபி பூதேஷு ஸிததீர்க்காதி விபாகவத்ஸு ஜ்ஞாநாகாரத்ருதி விபாகரஹிதமவ்யயம் வ்யயஸ்வபாவேஷ்வபி ப்ராஹ்மணாதிசரீரேஷ்வவ்யயம் அவிக்ருதம் ஸமாதிவஜ்ஞாநமயம் ச கர்மாதிகாரவேளாயாமீக்ஷதே, தஜ்ஜ்ஞாநம் ஸாத்த்விகம் வித்தி ॥ ॥௨௰॥

கர்மம் செய்கிறவர்களுக்குள் பிராமணன் முதலான பிரிவுகளும், பிரும்மசாரி முதலான பிரிவுகளுமிருக்கின்றன. அவர்களில் உடம்பைக் காட்டிலும் வேறாய், அறிவுள்ளதாய், அழிவில்லாததாய், ஆத்மாவென்று ஒன்று இருப்பதாக அறியவேணும். அதிலும் பிராமணன்முதலானஜாதிப்பிரிவும், கருப்பு சிகப்பு, நீளம், குட்டை-இவை முதலான பிரிவுகளும் உடம்புகளுக்கே ஒழிய ஆத்மாக்களுக்கு இல்லை, ஆத்மாக்கள் எல்லாரும் ஞானஸ்வ

---

1. 18-வது சுலோகத்தில்முன்பாதியில் சொன்னமூன்றையே இந்த சுலோகத்தில் சொல்லுகிறார். பின் பாதியில் சொன்ன மூன்றில்—கர்தா (செய்கிறவன) பரிக்ஞாதா (அறிகிறவன்) என்று சொல்லப்பட்டவனதான். கர்மம என்பது க்ஞேயம (அறிய வேண்டியது,) என்று சொல்லப்பட்டதுதான். கரணம் என்பது காமத்துடன் சேர்ந்திருக்கிறதென்று அதைதனியாய்ச்சொல்லவில்லை.

ரூபம் (அறிவுள்ளவன்) என்பதால் ஒரே மாதிரி. அழியக்கூடிய உடம்புகளில் இருந்தாலும், அவர்களுக்கு அழிவில்லை. மாறுபாடு முதலானவைகள் இல்லை ஸ்வர்க்கம் முதலான அந்த கர்மங்களின் பலன்களை ஆசைப்படத்தகுந்தவர்களுமில்லை. இவ்விதமாக ஆத்மாவைக்கர்மம் செய்யவேணுமென்று நினைக்கிற வேளைகளில் அறியவேணும். இந்த அறிவை 1 ஸாத்துவிகம் என்று சொல்லுகிறது [20]

ப்ருதக்த்வேந து யஜ்ஜ்ஞாநம் நாநாபாவாந் ப்ருதக்விதாந் ।
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ராஜஸம் ॥

ஸர்வேஷு பூதேஷு ப்ராஹ்மணாதிஷு ப்ராஹ்மணாத்யாகாரப்ருதக்த்வாத் ஆத்மஸு நாநாபாவாந் நாநாபூதாந் ஸிததீர்க்காதிப்ருதக்த்வேந ச ப்ருதக்விதாந் ஸுகாதிஸம்யோகயோக்யாந் கர்மாதிகாரபேதாயோக்யாந் யச்ச ஜ்ஞாநம் வேத்தி தச்ச ஜ்ஞாநம் ராஜஸம் வித்தி ॥ ௨௧॥

ஆத்மாக்களுக்கு பிராமணன் முதலான பிரிவுகளும், கருப்பு சிகப்பு, நீளம், குட்டை—இவை முதலான பிரிவுகளும் இருக்கின்றனவென்றும், அவர்கள் அந்தக்கர்மங்களின் சுவர்க்கம் முதலான பலன்களை அடையத்தகுந்தவர்கள் என்றும் கர்மம் செய்யும் போது உண்டாகும் நினைவை ராஜஸம் என்றுசொல்லுகிறது. [21]

யத்து க்ருத்ஸ்நவதேகஸ்மிந் கார்யே ஸக்தமஹைதுகம் ।
அதத்த்வார்த்தவதல்பம் ச தத்தாமஸமுதாஹ்ருதம் ॥ ௨௨॥

யத்து ஜ்ஞாநம் ஏகஸ்மிந் கார்யே ஏகஸ்மிந் கர்தவ்யே கர்மணி ப்ரேதபூதகணாத்யாராதநரூபே அத்யல்பபலே க்ருத்ஸ்நவத் ஸம

1. ஜீவன்கள் பகவானுடைய ஸொத்து. இவர்கள் எந்தப்பலன்களை அனுபவித்தால், பகவானுக்கு இஷ்டமாயிருக்குமோ, அவைகளைத்தான் ஆசைப்படவேண்டியது. இவர்கள் சுவர்க்கம் முதலானவைகளை அனுபவிப்பது பகவானுக்கு இஷ்டமன்று. ஆகையால் அவைகளை ஆசைப்படத்தகுந்தவர்களல்ல. இது முதலான உண்மையை அவன் அறிந்திருக்கிறபடியால், அந்த அறிவை ஸாத்துவிகம் என்று சொல்லுகிறது. ஸத்துவம் என்பது உண்மையைக்காட்டும்.

க்ருத்ஸ்நவத் ஸக்தம் | அஹேதுகம்-வஸ்துதஸ்து க்ருத்ஸ்நவத்தயா தத்ஸாதிஶயஸஜ்ஞேஹேதுரஹிதம் | அதத்த்வார்த்தவத்-பூர்வவதாத்மேவாத்மநி வ்யாப்ருதாதியாக்த்தயாத்யந்தாதிஶயபாமாத்ரவிஷயம் அத்ஸ்ய ஸம்ப வஸ்து தத்ஸாரா ஆராதநவிஷயபலாத் அல்பம் ச தத் ஜ்ஞாநம் தாமஸமுதாஹ்ருதம் | || ௨௨ ||

சிலர் பிரேதம், பூதம்-இவை முதலானவைகளுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதும், மிகவும் கொஞ்சமான பலனைக்கொடுப்பதுமான ஒரு வேலையை மிகவும் பெரியபலனைக்கொடுக்கிறதாக நினைக்கிறார்கள், இப்படி அவர்கள் நினைப்பதற்கு துளிக்கூட நியாயமில்லை. ராஜஸமான அறிவுள்ளவர்களைப்போல் ஆத்மாக்களைப்பல பிரிவுள்ளவர்களாகவும் நினைக்கிறார்கள். எந்த நினைவினால் இப்படி நினைக்கிறார்களோ அந்தஅறிவைத்தாமஸம் என்றுசொல்லுகிறது.

அத—ஸாம்ப்ரதம் கர்த்தவ்யவிஷயஜ்ஞாநஸ்ய கர்த்ருவிஷயஸ்ய ச குணதஸ்த்ரைவித்யமுக்த்வா, அநுஷ்டேயஸ்ய கர்மணோ குணதஸ்த்ரைவித்யமாஹ—

நியதம் ஸங்கரஹிதமராகத்வேஷத꞉ க்ருதம் |
அபலப்ரேப்ஸுநா கர்ம யத்தத்ஸாத்த்விகமுச்யதே || ௨௩ ||

நியதம் - ஸ்வவர்ணாஶ்ரமோசிதம், ஸங்கரஹிதம்-கர்த்ருத்வாதிஸங்கரஹிதம், அராகத்வேஷத꞉ க்ருதம் - கீர்த்திராகாத் அகீர்த்திதவேஷாச்ச ந க்ருதம், தம்பேந க்ருதமித்யர்த்த꞉ | அபலப்ரேப்ஸுநா, அபலாபிஸந்திநா கர்த்ரா க்ருதம் யத் கர்ம தத் ஸாத்த்விகமுச்யதே || ௨௩ ||

அவ—கர்மத்தைச் செய்யவேணுமென்று நினைக்கும் வேளையில் அந்தக்கர்மத்தைச்செய்யத்தகுந்த ஜீவனைப்பற்றின அறிவை மூன்று விதமாகச்சொல்லி, செய்யப்படும்கர்மத்தினுடைய மூன்று விதங்களைச் சொல்லுகிறார்—

தன்னுடைய வர்ணத்துக்கும், ஆசிரமத்துக்கும்தகுந்ததும், சீழ்4-வதுசுலோகத்தில் சொன்னபடி மூன்று ஸங்கதிகளைவிட்டதும், கீர்த்தி வருவதற்காகவும், அகீர்த்திபோவதற்காகவும் செய்

யப்படாததுமான எந்தவேலை சுவர்க்கம் முதலான அதின் பலனை விரும்பாமல், இதை அவசியம் செய்ய வேணுமென்று நினைத்து, செய்யப்படுகிறதோ, அந்தக் கர்மத்தை ஸாத்துவிகம் என்றுசொல்லுகிறது [23]

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந:।
க்ரியதே பஹுளாயாஸம் தத்ராஜஸமுதாஹ்ருதம் ॥

யத்து புந: காமேப்ஸுநா-பலப்ரேப்ஸுநா ஸாஹங்காரேண வா। வாஶப்தஶ்சார்தே। கர்த்ருத்வாபிமாநயுக்தேந ச பஹுளாயாஸம் யத்கர்ம க்ரியதே; தத்ராஜஸம்। பஹுளாயாஸமிதம் கர்ம மயைவ க்ரியத இத்யேவம்பூதாபிமாநயுக்தேந யத்கர்ம க்ரியதே, தத்ராஜஸமித்யர்த:॥ ॥ ௨௪ ॥

பகவானைக் கலக்காமல் நான் செய்கிறேன் என்கிறஎண்ணத்துடனும், பலனை ஆசைப்பட்டும், மிகவும்பிரயாஸமுள்ள இந்தவேலையை நானுக்கொண்டு செய்கிறேன்; இன்னொருவரால்முடியாது 1 என்கிறஎண்ணத்துடனும்எந்தக்கர்மம்செய்யப்படுகிறதோ, அதை ராஜஸம் என்று சொல்லுகிறது [24]

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமநவேக்ஷ்ய ச பௌருஷம்।
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸமுச்யதே ॥ ௨௫ ॥

க்ருதே கர்மண்யநுபத்யமாநம் து:கமநுபந்த:। க்ஷய: கர்மணி க்ரியமாணே அர்த்தவிநாஶ:। ஹிம்ஸா தத்ர ப்ராணிபீடா। பௌருஷம் ஆத்மந: கர்மஸமாபநஸாமர்த்யம்। ஏதாந்யநவேக்ஷ்ய-அவிம்ருஶ்ய, மோஹாத்-பரமபுருஷகர்த்ருத்வாஜ்ஞாநாத் யதாரப்யதே, தத்தாமஸமுச்யதே॥ ॥ ௨௫ ॥

ஒரு வேலையைச் செய்யும்போது-அதைச்செய்தபிறகு வருகிற 2 தொந்தரவுகளையும், செய்யும்போது வருகிறபணச்செலவை

---

1 அந்த வேலைக்கு அவ்வளவு் பிரயாஸம் வேண்டாம். அது ரஜோ குணத்தால் ஏற்படுகிறது.

2 தனக்கும் மற்றவர்களுக்கும் வரும்தொந்தரவுகள், இது "பிராணிகள்" என்று பொதுவாய்ச் சொன்னதினால் ஏற்படுகிறது.

யும், பிராணிகளுடைய தொந்தரவுகளையும், தன்னால் அந்த வேலையைச்செய்துமுடிக்க முடியும்முடியாதுஎன்பதையும், யுக்திகளையும் சாஸ்திரத்தையும்கொண்டு கவனிக்காமலும், தைவம் செய்கிறது என்று அறியாமலும், எந்த வேலை செய்யப்படுகிறதோ, அந்த வேலையைத்தாமஸம் என்று சொல்லுகிறது [25]

𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌨𑌹𑌂𑌵𑌾𑌦𑍀 𑌧𑍃𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌾𑌹𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃-𑌫𑌲𑌸𑌙𑍍𑌗𑌰𑌹𑌿𑌤𑌃। 𑌅𑌨𑌹𑌂𑌵𑌾𑌦𑍀-𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌰𑌹𑌿𑌤𑌃। 𑌧𑍃𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌾𑌹𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃-𑌆𑌰𑌬𑍍𑌧𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌯𑌾𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌿 𑌅𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑌗𑌣𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌸𑌹𑌨𑌂 𑌧𑍃𑌤𑌿𑌃, 𑌉𑌤𑍍𑌸𑌾𑌹𑌃-𑌉𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃। 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌃-𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌦𑍌 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌨𑌾𑌦𑍇𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌰𑌵𑌿𑌕𑍃𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌃। 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ || ௨௬ ||

கர்மத்தினால் வரும் ஸ்வர்க்கம் முதலான பலன்களில் ஆசையில்லாதவன்; நான் செய்கிறேன் என்று எண்ணமில்லாதவன்; ஆரம்பித்தகாரியம் முடிவதற்குள் வரும் தொந்தரவுகளுக்குப் பயப்படாதவன்; அந்தக் காரியத்தைச் செய்துமுடிப்பதில் ஆவலுள்ளவன்; சண்டை முதலானகாரியங்களிலும், அவைகளுக்கு உதவியாகப் பணம் கிடைப்பதற்காகச்செய்கிற வேலைகளிலும், பலன்கள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், கலக்கமில்லாத மனதுள்ளவன் — இவ்விதமாக இருந்து கர்மங்களைச்செய்கிறவனை ஸாத்துவிகனென்று சொல்லுகிறது. [26]

𑌰𑌾𑌗𑍀 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑍇𑌪𑍍𑌸𑍁𑌰𑍍𑌲𑍁𑌬𑍍𑌧𑍋 𑌹𑌿𑌂𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌃।
𑌹𑌰𑍍𑌷𑌶𑍋𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌰𑌾𑌜𑌸𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥௨௭॥

𑌰𑌾𑌗𑍀-𑌯𑌶𑍋𑌽𑌰𑍍𑌥𑍀। 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑍇𑌪𑍍𑌸𑍁𑌃-𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑍀। 𑌲𑍁𑌬𑍍𑌧𑌃-𑌕𑌰𑍍𑌮𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌰𑌹𑌿𑌤𑌃। 𑌹𑌿𑌂𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃-𑌪𑌰𑌾𑌨𑍍 𑌪𑍀𑌡𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌃। 𑌅𑌶𑍁𑌚𑌿𑌃-𑌕𑌰𑍍𑌮𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌃। 𑌹𑌰𑍍𑌷𑌶𑍋𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾

தேந கர்மணி ஜயாதிவிபர்யயேஷு ஹர்ஷசோகாந்வித:- கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித: ॥ ॥௨௭॥

கீர்த்தியையும், கர்மத்தினால் வரும் ஸ்வர்க்கம் முதலான பலன்களையும் விரும்புகிறவன்; செய்கிற கர்மங்களுக்கு எவ்வளவு திரவியம் செலவழிக்கவேணுமோ, அதைச்செலவழிக்கமனதாகாதவன; பிறர்களைத் தொந்தரவுபண்ணி, அவர்களைக்கொண்டு, வேலை செய்கிறவன்; கர்மங்களைச் செய்வதற்கு வேண்டிய சுத்தியில்லாதவன; சண்டை முதலானவைகளில் தனக்கு வேண்டிய பலன் கிடைத்தால் ஸந்தோஷப்படுகிறவன்; கிடைக்காவிட்டால் வருத்தப்படுகிறவன்—இவ்விதமாக இருந்து கர்மங்களைச் செய்கிறவனை ராஜஸன என்று சொல்லுகிறது. [27]

அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: சடோ நைக்ருதிகோऽலஸ:।
விஷாதீ தீர்க்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே ॥௨௮॥

அயுக்த:- சாஸ்த்ரீயகர்மாயோக்ய: விகர்மஸ்த:। ப்ராக்ருத:- அநதிகதவித்ய:। ஸ்தப்த:- அநாரம்பசீல:। சட:- அபிசாராதிகர்மருசி:। நைக்ருதிக:- வஞ்சநபர:। அலஸ:- ஆரப்தேஷ்வபி கர்மஸு மந்தப்ரவ்ருத்தி:। விஷாதீ- அதிமாத்ராவஸாதசீல:। தீர்க்கஸூத்ரீ- அபிசாராதிகர்ம குர்வந் பரேஷு தீர்க்ககாலவர்த்யநர்த்தபர்யவஸாநதர்சீ- ஏவம்பூதோ ய: கர்த்தா ஸ தாமஸ: ॥ ॥ ௨௮ ॥

சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களுக்குத் தகாதவன்; நல்ல புஸ்தகங்களைப் பெரியவர்களிடம்கேட்டு நலலஸங்கதிகளை அறியாதவன்; சோம்பலுள்ளவன, (அதாவது—ஒரு வேலையையும் செய்ய ஆரம்பிக்கப் பிடிக்காதவன்); பிறருக்குக கொலை வரையிலுள்ள தொந்தரவைச்செய்யஆசையுள்ளவன, பொய்முதலானவைகளால் பிறரை ஏய்க்கிறவன்; செய்ய ஆரம்பித்த காரியத்திலும சோம்பலுள்ளவன், (அதாவது—சுருசுருப்பாய் முடிக்காதவன்); எப்பொழுதும் எதைப்பற்றியாவது வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற ஸ்வபாவமுள்ளவன; பிறர்களுக்குக் கொலை முதலானவைகளைச் செய்து, நெடு நாள் வரைக்கும்உள்ள தொந்தரவை உண்டுபண்ண வே

ண்டுமென்று நினைக்கிறவன்—இப்படியிருந்து வேலைகளைச் செய்கிறவனைத் தாமஸன் என்று சொல்லுகிறது. [28]

அவ — ஏவம் கர்த்தவ்யகர்மவிஷயஜ்ஞானே, கர்த்தவ்யே கர்மணி, கர்த்தரி ச ஸத்த்வாதிகுணதஸ்த்ரைவித்யமுக்தம் | இதானீம் ஸர்வதத்த்வஸர்வபுருஷார்த்தநிஶ்சயரூபாயா புத்தேர் த்ருதேஶ்ச குணதஸ்த்ரைவித்யமாஹ —

புத்தேர்பேதம் த்ருதேஶ்சைவ குணதஸ்த்ரிவிதம் ஶ்ருணு |
ப்ரோச்யமானமஶேஷேண ப்ருதக்த்வேன தனஞ்ஜய || ௨௯

பா — புத்தி:- விவேகபூர்வகம் நிஶ்சயரூபம் ஜ்ஞானம் | த்ருதி:- ஆரப்தாயா: க்ரியாயா விக்னோபநிபாதேऽபி தாரணஸாமர்த்யம் | தயோ: ஸத்த்வாதிகுணதஸ்த்ரிவிதம் பேதம் ப்ருதக்த்வேன ப்ரோச்யமானம் ஶ்ருணு || ௨௯ ||

அவ—இப்படிச் செய்யவேண்டிய கர்மங்களைப்பற்றின அறிவும், செய்யத்தகுந்த கர்மங்களும், அவைகளைச் செய்கிறவனும், ஸத்துவம் முதலான மூன்று குணங்களாலே மூன்று விதங்கள் என்று சொல்லப்பட்டன. இப்போது எல்லா வஸ்துக்களின் இருப்பைப்பற்றியும், தனக்கு வேண்டிய எல்லாப் பிரயோஜனங்களைப் பற்றியும் ஏற்படுகிற தீர்மானமான அறிவிக்கும், "த்ருதி" (ஒரு காரியத்தைக் கட்டாயம் முடிக்கவேணும் என்ற எண்ணம்), என்பதற்கும் ஸத்துவம் முதலானவைகளால் ஏற்படும் வித்தியாஸத்தைச் சொல்லுகிறார்—

ஒரு ஸங்கதியைப்பற்றி யோஜித்து உண்டாகிற — எதிர்கக்ஷிகளைத் தள்ளும்படியான - தீர்மானத்திற்கும், ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்து, நடுவில் என்ன இடைஞ்சல் வந்தாலும், அதை விடாமல் முடிக்கவேணும் என்கிற எண்ணத்துக்கும் (த்ருதிக்கும்) ஸத்துவம் முதலானவைகளால் ஏற்படும் வித்தியாஸத்தை உள்ளபடி சொல்லுகிறேன்; கேள். [29]

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே |
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த ஸாத்த்விகீ ||

ப்ரவ்ருத்தி: அப்யுதயஸாதநபூதோ தர்ம:| நிவ்ருத்திர் மோக்ஷஸாதநபூத:| தாவுபௌ யதாவஸ்திதௌ யா புத்திர் வேத்தி| கார்யாகார்யே ஸர்வவர்ணானாம் ப்ரவ்ருத்திநிவ்ருத்திதர்மயோரனுஷ்டானே தேசகாலாவஸ்தாவிசேஷேஷு இதம் கார்யம் இதம் அகார்யம் இதி யா வேத்தி| பயாபயே சாஸ்த்ராதிவ்ருத்த்யனுவ்ருத்த்யோர் பயாபயஸ்தானம், பந்தம் மோக்ஷம் ச ஸம்ஸாரயாதாத்ம்யம் தத்விமோசனயாதாத்ம்யம் ச யா வேத்தி, ஸா ஸாத்த்விகீ புத்தி:|| ||௩௦||

மோக்ஷம் தவிர மற்ற பலன்களை கொடுக்கும் தர்மங்களையும், மோக்ஷத்தைக் கொடுக்கும் தர்மங்களையும் எந்த புத்தி உள்ளபடி அறிகிறதோ; அந்தந்த வர்ணத்தார்கள் கீழ்ச்சொன்ன இரண்டு தர்மங்களில் ஒன்றைச்செய்யும்போது, இடங்களுக்கும், காலங்களுக்கும், தங்கள் இருப்புக்கும் தகுந்தபடி இதைச் செய்ய வேணும், இதைச் செய்யக்கூடாது என்று எந்த புத்தி உள்ளபடி அறிகிறதோ; இந்த ஸங்கதி சாஸ்திரத்திற்கு விரோதமானது; இது நடுங்கவேண்டிய ஸங்கதி; இது சாஸ்திரத்திற்கு ஒத்தது; இது ஸுகத்தைக் கொடுக்கக்கூடியது என்பதையும், பந்தம் (ஸம்ஸாரம்) என்பது இன்னது, மோக்ஷம் என்பது இன்னது என்பதையும் எந்த புத்தி உள்ளபடி அறிகிறதோ—அதை ஸாத்த்விகம் என்று சொல்லுகிறது. [30]

யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச |
அயதாவத் ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த்த ராஜஸீ ||௩௧||

யயா பூர்வோக்தம் த்விவிதம் தர்மம் தத்விபரீதம் ச தத்அனுஷ்டானதேசகாலாவஸ்தாதிஷு கார்யம் சாகார்யம் ச யதாவந்ந ஜாநாதி, ஸா ராஜஸீ புத்தி: || ||௩௧||

கீழ்ச்சொன்ன இரண்டு தர்மங்களையும், அவைகளுக்கு எதிர் தட்டானவைகளையும் (அதர்மங்களையும), அந்த தர்மங்களைச்செய்யும்போது இடம், காலம், அவஸ்தை (இருப்பு)—இவைகளுக்குத் தகுந்தபடி இதைச் செய்யவேண்டியது, எதை செய்யக்கூடாது

என்பதையும், உள்ளபடி எந்த புத்தி அறிவில்லையோ, அதை ராஜஸம் என்று சொல்லுகிறது. [31]

அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா ।
ஸர்வார்த்தாந் விபரீதாம்ஶ்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ ॥

தாமஸீ து புத்திஸ்தமஸாவ்ருதா ஸதீ ஸர்வாநர்த்தாந் விபரீதாந் மந்யதே। அதர்மம் தர்மமிதி, தர்மமதர்மமிதி, ஸந்தம் அஸந்தம், அஸந்தம் ச ஸந்தம், பரம் ச தத்த்வமபரம் - அபரம் ச பரம், ஏவம் ஸர்வம் விபரீதம் மந்யத இத்யர்த்த: ॥

தமோகுணம் மேலிட்டு, எந்த புத்தி கீழ்ச்சொன்ன எல்லா வஸ்துக்களை மாறுதலாக நினைக்கிறதோ, அதாவது—அதர்மத்தைத் தர்மமென்றும், தர்மத்தை அதர்மமென்றும், இருப்பதை இல்லையென்றும், இல்லாததை இருப்பதென்றும், உயர்ந்த வஸ்துவை இளப்பமென்றும், இளப்பத்தைஉயர்ந்ததென்றும் நினைக்கிறதோ, அதைத் தாமஸம் என்று சொல்லுகிறது. 1 [32[

த்ருத்யா யயா தாரயதே மந: ப்ராணேந்த்ரியக்ரியா: ।
யோகேநாவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த்த ஸாத்த்விகீ ॥

யயா த்ருத்யா யோகேநாவ்யபிசாரிண்யா மந:ப்ராணேந்த்ரியாணாம் க்ரியா: பகவத்த்யாநவிஷயா தாரயதே। யோகோ(அ)த்ர மோக்ஷஸாதநபூதம் பகவதுபாஸநம்। யோகேந ப்ரயோஜநஸாதநேநாவ்யபிசாரிண்யா—யோகோத்தேஶேந ப்ரவ்ருத்தாஸ்தாயநஸந்தா மந:ப்ராணேந்த்ரியக்ரியா: யயா த்ருத்யா தாரயதே ஸா ஸாத்த்விகீத்யர்த்த: ॥ ॥ ௩௩ ॥

மோக்ஷத்திற்காக பகவானைத் தியானம்செய்ய 2 உதவியான

---

1. ஸாத்துவிக புத்தி உள்ளதை உள்ளபடி நினைக்கிறது. ராஜஸ புத்தி சங்கை மஞ்சள் நிறமுள்ளதாக நினைக்கிறது. இதில் சங்கு என்பது ஸரி. மஞ்சள் நிறம் என்பது பிசகு. தாமஸபுத்தி மாமரத்தைப் புளியமரமென்று நினைக்கிறது. இரண்டாவதிற்கு குணத்தில் மாறாட்டம். மூன்றாவதற்கு உருப்படியிலேயே மாறாட்டம்.

2. மனதின் வேலை தியானம்செய்து ஆத்மாவைப்பார்ப்பது. பிராணன் வேலை பிராணனை மடக்கிச்செய்வது. இது தியானத்திற்குஇடைஞ்சலான

மனது, பிராணன், இந்திரியங்கள்-இவைகளின் வேலைகளை விடா மல் நடத்துவதை (தருதியை) ஸாத்துவிகம என்று சொல்லு கிறது. இதை உறுதியெனறும சொல்லுகிறது. [33]

யயா து த⁴ர்மகாமார்தா²ந் த்⁴ருத்யா தா⁴ரயதே(அ)ர்ஜுந ।
ப்ரஸங்கே³ந ப²லாகாங்க்ஷீ த்⁴ருதி꞉ ஸா பார்த² ராஜஸீ ॥ ௩௪ ॥

ப²லாகாங்க்ஷீ புருஷ꞉ ப்ரக்ருஷ்டஸங்கே³ந த⁴ர்மகாமார்தா²ந் யயா த்⁴ருத்யா தா⁴ரயதே ஸா ராஜஸீ । த⁴ர்மகாமார்த²ஶப்³தே³ந தத்ஸாத⁴நபூ⁴தா மந꞉ப்ராணேந்த்³ரியக்ரியா லக்ஷ்யந்தே । ப²லாகாங்க்ஷீத்யுக்தஸங்கே³ந ராஜஸத்வாத் த⁴ர்மகாமார்த²ஶப்³தா³ஸ்ஸர்வே லக்ஷிதா꞉ । அதோ த⁴ர்மகாமார்தா²பேக்ஷயா மந꞉ப்ராணேந்த்³ரியக்ரியா யயா த்⁴ருத்யா தா⁴ரயதே, ஸா ராஜஸீ த்⁴ருதிர்ப⁴வதி । ॥ ௩௪ ॥

கர்மஙகளால் வரும—ஸ்வர்க்கம் முதலான—பலன்களில் அதி கமான ஆசையால், தர்மம், அர்த்தம, காமம், (அறம, பொருள இன்பம்) என்கிற மூன்று பலன்களைக் கொடுக்ககூடிய மனது முதலானவைகளின வேலைகளை விடாமல்நடத்த வேணுமெனகிற எண்ணத்தை (த்ருதியை) ராஜஸம் என்று சொல்லுகிறது [34]

யயா ஸ்வப்நம் ப⁴யம் ஶோகம் விஷாத³ம் மத³மேவ ச ।
ந விமுஞ்சதி து³ர்மேதா⁴ த்⁴ருதி꞉ ஸா பார்த² தாமஸீ ॥ ௩௫ ॥

யயா த்⁴ருத்யா ஸ்வப்நம் நித்³ராம் மத³ம் விஷயாநுப⁴வஜநிதம் மத³ம், ஸ்வப்நமதா³வுத்³தி³ஶ்ய ப்ரவ்ருத்தா மந꞉ப்ராணேந்த்³ரியக்ரியா꞉ து³ர்மேதா⁴ ந விமுஞ்சதி । ப⁴யஶோகவிஷாத³ஹேதுபூ⁴தாஶ்ச ப⁴யஶோகாதி³விஷயா꞉ । தத்ஸாத⁴நபூ⁴தா மந꞉ப்ராணேந்த்³ரியக்ரியா யயா தா⁴ரயதே, ஸா த்⁴ருதிஸ்தாமஸீ ॥ ௩௫ ॥

தூக்கத்தையும், பிள்ளை, பணம் முதலானவைகளை அனுப விப்பதினால் வரும திமிரையும், உண்டுபண்ணக்கூடிய வேலைகளை யும், பயத்தையும், சோகத்தையும், விஷாததைதையும் கொடுக்கக்

---

சிரமததையும ப லன்களையும போககுகிறது. இந்திரியஙகள வேலை திய ஸம் செய்யாத வேளைகளில் அதறகு உதவியானவைகளைச செயவது.

கூடிய வேலைகளையும் விடாமல் நடத்தவேணுமென்கிற கெட்ட எண்ணத்தை (த்ருதியை)த் தாமஸமென்றுசொல்லுகிறது.1 [35]

𑌸𑍁𑌖𑌂 𑌤𑍍𑌵𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑍃𑌧𑍃𑌤𑌯𑍋 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑍁𑌖𑌂 𑌗𑍁𑌣𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥

கீழ்ச்சொன்ன அறிவு முதலானவைகளால் அடையவேண்டிய பிரயோஜநம் ஸுகம். அந்தஸுகம் மூன்று விதமென்பதைச் சொல்லுகிறேன்; கேள். [35½]

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑍍𑌰𑌮𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥௩௬॥

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑍁𑌖𑍇 𑌚𑌿𑌰𑌕𑌾𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌾𑌂 𑌰𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿। 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿-𑌨𑌿𑌖𑌿𑌲𑌸𑍍𑌯 𑌸𑌾𑌂𑌸𑌾𑌰𑌿𑌕𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ॥௩௬॥

எந்த ஸுகத்தை வெகுகாலம் அனுபவித்து, இருக்க இருக்க அளவில்லாத ஸந்தோஷத்தை ஒருவன் அடைவனோ, ஸம்ஸாரத்தினால் ஏற்படுகிற எல்லா துக்கங்களும் அடியோடு போய்விடுமோ; அது ஸாத்துவிகம். [36]

𑌅𑌥--𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿—

𑌯𑌤𑍍𑌤𑌦𑌗𑍍𑌰𑍇 𑌵𑌿𑌷𑌮𑌿𑌵 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑍋𑌪𑌮𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌜𑌮𑍍 ॥௩௭॥

𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌮𑌗𑍍𑌰𑍇-𑌯𑍋𑌗𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌸𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍁𑌭𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌵𑌿𑌷𑌮𑌿𑌵 𑌦𑍁𑌃𑌖𑌮𑌿𑌵 𑌭𑌵𑌤𑌿। 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑍋𑌪𑌮𑌮𑍍-𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇-𑌵𑌿

1. பயத்தைக்கொடுக்கும்வேலைவலுத்தவனோடு சண்டை. அது இவனுடைய திமிரினால் உண்டாகிறது. சோகத்தைக் கொடுக்கும் வேலை பந்துக்களுக்கு மனவருத்தம். அது இவனுடைய கோபத்தினால் உண்டாகிறது. விஷாதத்தைக் கொடுக்கும் வேலை வீணாகப் பணத்தைச் செலவழிப்பது. நல்ல விஷயத்தில் இருக்கும் த்ருதியை உறுதியென்று சொல்லுகிறது. கெட்ட விஷயத்திலிருக்கும் த்ருதியைப் பிடிவாதமென்று சொல்லுகிறது.

காலே பஹ்வாயாஸாபேக்ஷத்வேந விவிக்தஸ்வரூபாநாவிர்பாவாச்ச து:-கவத் பவதி | ததாத்மபுத்திப்ரஸாதஜம்-ஆத்மவிஷயா புத்திராத்மபுத்தி: தஸ்யா: நிவ்ருத்தஸகலேதரவிஷயத்வம் ப்ரஸாத: | நிவ்ருத்தஸகலேதரவிஷயபுத்த்யா விவிக்தஸ்வபாவாத்மாநுபவஜநிதம் ஸுகமம்ருதோபமம் பவதி | தத் ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம் ॥ ॥ ௩௭ ॥

அவ—அதைப்பற்றி நன்றாய்ச் சொல்லுகிறார்—

எந்த ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய வேலை, அதாவது—ஆத்மாவின் தியானம்—1 ஆரம்பிக்கும் காலத்தில்விஷம்போலிருக்குமோ; அதாவது—மிகுந்த பிரயாஸத்தோடு அதைச் செய்யவேண்டியதாகையாலும், உடம்பைக்காட்டிலும் வேறாக ஆத்மாவென்று ஒரு வஸ்துவை இதுவரையில் அறியாததினாலும், மிகுந்ததொந்தரவைக் கொடுக்குமோ, நல்லகர்மங்களைச் செய்வதினால் பகவானுக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாய், அதினால் உடம்பைக்காட்டிலும் வேறான ஞானஸ்வரூபமான ஆத்மாவின் நினைவு பழக்கத்தினால் வளரும்போது, அமிருதம்போல் ஸுகமாயிருக்குமோ, அதாவது—வேறு வஸ்துக்களை நினையாமல் ஆத்மா ஒன்றையே பார்த்துக்கொண்டிருப்பதினால் அளவில்லாத ஸுகத்தை அனுபவிப்பானோ—அந்தஸுகத்தைஸாத்துவிகமென்றுசொல்லுகிறது. [37]

விஷயேந்த்ரியஸம்யோகாத்யத்ததக்ரே(அ)ம்ருதோபமம் |
பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ॥௩௮॥

அக்ரே-அநுபவவேலாயாம் விஷயேந்த்ரியஸம்யோகாத் யத்தத் அம்ருதமிவ பவதி | பரிணாமே-விபாகே விஷயாணாம் ஸுகதாநிவ்ருத்திக்ஷயாதௌ நிவ்ருத்தே தஸ்ய ச ஸுகஸ்ய நிரயாதிநிமித்தத்வாத் விஷமிவ பீதம் பவதி | தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ॥ ॥௩௮॥

---

1 ஒருவன் ஒருவித்தையைப் படிக்க ஆரம்பிக்கும் போது, மிகவும் அலுப்பாக இருக்கும். ஜன்மாந்திரஸுகிருதத்தினாலும், பெரியோர்களுடைய அநுக்கிரஹத்தினாலும், அந்தவித்தை மனதில் நன்றாய்ப்பட்டால், பிறகு அவனுக்கும் அவனால்பலபேர்களுக்கும் மிகுந்தஸுகமுண்டாகிறது.

எந்த ஸுகம் கண் முதலான இந்திரியங்கள் பார்க்கத் தகுந்தது முதலான விஷயங்களுடன் சேர்ந்து உண்டாகி, அனுபவிக்கும் வேளையில் அமிருதம்போல் மிகவும் இன்பமாயிருந்து, பிறகு அது ஸுகமாகத் தோன்றுவதற்குக் காரணமான பசி முதலானவை போனபோது, மிகுந்த தொந்தரவைக் கொடுப்பதாலும், மேலும் நரகம் முதலான பெரிய தொந்தரவுகளைக் கொடுக்கக்கூடியதாகையாலும், விஷத்தைச் சாப்பிட்டதுபோல் இருக்குமோ—அதை ராஜஸம் என்று சொல்லுகிறது. 1 [38]

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥ ३८ ॥

[illegible] ॥ ३८ ॥

1. உதாரணம—ஒருவன் நல்ல பசியாக இருந்த ஸமயத்தில் விஷம் கலந்த ஸாதத்தை ஸாப்பிட்டு விடுகிறான். அப்போது மிகவும்ஸுகமாக இருந்தது. பிறகு அளவில்லாத தொந்தரவு உண்டாகிறது. அதுபோல். இன்னொரு உதாரணம்—ஒருவன் ஒரு பெண் மிகவும் அழகாகவும் சமத்தாகவும் இருக்கிறதென்று அதைக் கல்லியாணம் செய்துகொண்டு, அதைப்பார்ப்பதையும், தொடுவதையும், அத்துடன்பேசுவதையும்மிகுந்த ஸுகமென்று அனுபவிக்கிறான். பிறகு பிள்ளை, பெண்கள் பிறந்து, அவைகளுக்காக மாடு, வீடு முதலானவைகள் நேர்ந்தபோது, ஐயோ, ஐயோ என்று மிகவும் தபிக்கிறான். அந்த ஸுகத்தை (முதலில்உண்டான ஸுகத்தை) ராஜஸம் என்று சொல்லுகிறது.

எந்த ஸுகம் அனுபவிக்கும்போதும், அனுபவித்த பிறகும் வஸ்துக்களை உள்ளபடி அறியவொட்டாமல் பண்ணுமோ, அதாவது—இரண்டு காலத்திலும் உண்மையான அறிவு இராதோ, அது தாமஸம். இதை அனுபவிக்கும்போது, இன்ன வஸ்து இன்னது என்று அதின் உண்மை தெரியாது பிறகு அது கெடுதலென்று அதின் உண்மை சில ஸுகத்தில் தெரியும். அப்படியில்லாமல் வஸ்துவின் உண்மை பிறகும் தெரிகிறதில்லை. அந்த ஸுகம் தூக்கத்தினாலும், சோம்பலாலும், கவனக்குறைவாலும் உண்டாகிறது. தூக்கம் அறிவைக் கெடுக்கிறது. சோம்பலுள்ளவனுக்கு அறிவு எப்படி வரும்? கவனிக்காதவனுக்கும் அறிவு இல்லை. ஆகையால் மோக்ஷத்தை ஆசைப்படுகிறவன் ரஜோகுண-தமோகுணங்களை அடியோடு தள்ளி, ஸத்துவகுணத்தைமாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டியதென்று சொன்னதாக ஆகிறது [39]

ந தத³ஸ்தி ப்ருதி²வ்யாம் வா தி³வி தே³வேஷு வா புந: ।
ஸத்த்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதே³பி⁴: ஸ்யாத்த்ரிபி⁴ர்கு³ணை: ॥

ப்ருதி²வ்யாம் மநுஷ்யாதி³ஷு தி³வி தே³வேஷு வா ப்³ரஹ்மாதி³ஸ்தா²வராந்தேஷு ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டேஷு ப்ராணிஷு ப்ரக்ருதிஜைரேபி⁴ஸ்த்ரிபி⁴ர்கு³ணைர்முக்தம் யத் ஸத்த்வம் ப்ராணிஜாதம் ந தத³ஸ்தி ॥

அவ—மோக்ஷத்தை அடைவதற்கு முன்பு, இந்த ஸத்துவம் முதலான மூன்று குணங்களுடைய வேலைகளைப் பிரும்மாமுதலானவர்களாலேயும் விடமுடியாதென்று சொல்லிக்கொண்டு, மூன்று குணங்களைப்பற்றின பேச்சை முடிக்கிறார்—

பூமியில் மனிதன் முதலானவர்களோ, தேவலோகத்தில் தேவர் முதலானவர்களோ, பிரகிருதியோடு சேர்ந்த-பிரும்மா முதல் மரம்வரையிலுள்ள—எல்லாப்பிராணிகளும் பிரகிருதியில் உண்டான ஸத்துவம்முதலானகுணங்களுக்குட்பட்டவைகள். அவைகளில் இந்த மூன்று குணங்கள் இல்லாதபிராணிகளே கிடையாது. [40]

ஏவ—"த்யாகே³நைகே அம்ருதத்வமாநஶு:" இத்யாதிஷு மோக்ஷஸாத⁴நதயா நிர்தி³ஷ்டஸ்ய ஸந்ந்யாஸஶப்³தா³ர்த²ஸ்ய ஐக்யம், ஸ ச க்ரியமாணேஷ்வேவ கர்மஸு கர்த்ருத்வத்யாக³மூ

ர்த:, ஏவம் கர்மணோ த்யாக: கர்த்ருத்வத்யாகஸ்ச பரமபுருஷே கர்த்ருத்வாநுஸந்தாநேந த்யக்தம் | ஏதத்ஸர்வம் ஸத்வகுணவ்ருத்திகார்யமிதி ஸத்வஸ்யோபாதேயதாஜ்ஞாபநாய ஸத்வரஜஸ்தமஸாம் கார்யபேதா: ப்ரபஞ்சிதா: || இதாநீமேவம்பூதஸ்ய மோக்ஷஸாதநதயா க்ரியமாணஸ்ய கர்மண: பரமபுருஷாராதநவேஷதாம் ததாநுஷ்டிதஸ்ய ச கர்மணஸ்தத்ப்ராப்திலக்ஷணம் ஏவம் ப்ரதிபாதயிதும், ப்ராஹ்மணாத்யதிகாரிணாம் ஸ்வபாவாநுபந்தி ஸத்வாதிகுணபேதபிந்நம் வ்ருத்த்யா ஸஹ கர்தவ்யகர்மஸ்வரூபமாஹ—

ப்ராஹ்மணக்ஷத்ரியவிஶாம் ஶூத்ராணாம் ச பரந்தப |
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவப்ரபவைர்குணை: ||

ப்ராஹ்மணக்ஷத்ரியவிஶாம் ஸ்வகீயோ பாவ: ஸ்வபாவ: ப்ராஹ்மணாதிஜந்மஹேதுபூதம் ப்ராசீநகர்மேத்யர்த்த: | தத்ப்ரபவா குணா: | ப்ராஹ்மணஸ்ய ஸ்வபாவப்ரபவோ ரஜஸ்தமோऽபிபவேநோத்ரிக்த: ஸத்வகுண: | க்ஷத்ரியஸ்ய ஸ்வபாவப்ரபவஸ்ஸத்வதமஸோரபிபவேநோத்ரிக்தோ ரஜோகுண: | வைஶ்யஸ்ய ஸ்வபாவப்ரபவ: ஸத்வரஜஸோரபிபவேநால்போத்ரிக்தஸ்தமோகுண: | ஶூத்ரஸ்ய ஸ்வபாவப்ரபவஸ்து ரஜஸ்ஸத்வாபிபவேநாத்யுத்ரிக்தஸ்தமோகுண: | ஏபி: ஸ்வபாவப்ரபவைர்குணைஸ்ஸஹ ப்ரவிபக்தாநி கர்மாணி ஶாஸ்த்ரை: ப்ரதிபாதிதாநி | ப்ராஹ்மணாதய ஏவங்குணகா:, தேஷாம் சைதாநி கர்மாணி, வ்ருத்தயஶ்சைதா இதி ஹி விபஜ்ய ப்ரதிபாதயந்தி ஶாஸ்த்ராணி ||

அவ—மோக்ஷத்துக்கு உதவியாகச் சொல்லப்பட்ட "தியாகம்" என்பதும், "ஸன்னியாஸம்" என்பதும் ஒன்றுதான்; அது எல்லா கர்மங்களைச்செய்துகொண்டே கீழ்ச்சொன்ன மூன்று ஸங்கதிகளை விடுவது; பகவான்தான் எல்லா வேலைகளையும் செய்கிறார் என்கிற நினைவினால் அந்த மூன்றையும் ஒருவன் விடுகிறான்; இவையெல்லாம் ஸத்துவகுணம் மேலிட்டால்தான் உண்டாகுமாகையால், ஸத்துவத்தைத் தான் கட்டாயம் எடுத்

துக் கொள்ளவேணும் என்று சொல்லிக் காட்டுவதற்காக, ஸத்துவம் முதலான குணங்களுடைய வெவ்வேறு விதமான வேலைகள் விரிவாகச் சொல்லப்பட்டன. இப்போது மோக்ஷத்திற்காக இப்படிச் செய்யப்படுகிற கர்மங்கள் பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றன என்பதையும், அதினால் பகவானை அடையலாம் என்பதையும் சொல்லுவதற்காக பிராமணன் முதலான நான்கு வர்ணத்தார்க்கும் பிழைக்கும் வழியையும், அவர்கள் செய்யவேண்டிய வேலைகளையும் சொல்லுகிறார். நான்கு வர்ணத்தாருக்கும் ஒருவருக்கொருவர் ஸத்துவம் முதலான குணங்களில் அதிகமும் குறைவுமிருக்கின்றன. அதனால் இவையிரண்டும் (பிழைக்கும் வழியும், வேலைகளும்) வேறுபடுகின்றனஎன்றுசொல்லுகிறார்-

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்—இவர்களுக்கு அந்தந்த பிறப்புக்கள் நெடுநாளாய்வந்தஅவரவர்களின் கர்மங்களின் தாரதம்மியங்களால் ஏற்படுகின்றன. அந்த தாரதம்மியத்தினால் ஸத்துவம்முதலான குணங்களுக்கும் தாரதம்மியம்உண்டாகிறது. அதாவது—பிராமண ஜாதிக்கு ரஜோகுணமும், தமோகுணமும் மிகவும் குறைந்து, ஸத்துவகுணம் மேலிட்டிருக்கிறது. க்ஷத்திரியஜாதிக்கு தமோகுணமும்ஸத்துவகுணமும்குறைந்து, ரஜோகுணம் மேலிட்டிருக்கிறது. வைசியஜாதிக்கு ஸத்துவகுணமும் ரஜோகுணமும் குறைந்து, தமோகுணம் கொஞ்சம் மேலிட்டிருக்கிறது. சூத்திரஜாதிக்கு ஸத்துவகுணமும் ரஜோகுணமும் குறைந்து, தமோகுணம்அதிகமாகமேலிட்டிருக்கிறது. இந்ததாரதம்மியத்தினால் அவரவர்களுக்குசெய்யவேண்டியவேலைகளையும், பிழைப்புக்கு வழிகளையும் வெவ்வேறு விதமாக சாஸ்திரம் சொல்லுகிறது.

𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥ ௪௨ ॥

𑌶𑌮𑌃-𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑌿𑌯𑌮𑌨𑌮𑍍 । 𑌦𑌮𑌃-𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌨𑌿𑌯𑌮𑌨𑌮𑍍 । 𑌤𑌪𑌃-𑌭𑍋𑌗𑌨𑌿𑌯𑌮𑌨𑌰𑍂𑌪𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌕𑌾𑌯𑌕𑍍𑌲𑍇𑌶𑌃 । 𑌶𑍌𑌚𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 । 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌃- 𑌪𑌰𑍈𑌰𑌾𑌬𑌾𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌕𑍃𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌾 । 𑌆𑌰𑍍𑌜𑌵𑌂-𑌪𑌰𑍇𑌷𑍁 𑌮𑌨𑍋𑌨𑍁𑌰𑍂𑌪

வம் பாஹ்யசேஷ்டாப்ரகாஶநம் | ஜ்ஞாநம் - பராவர தத்த்வயாதாத்ம்யஜ்ஞாநம் | விஜ்ஞாநம் - பரதத்த்வகதாஸாதாரணவிஶேஷவிஷயம் ஜ்ஞாநம் | ஆஸ்திக்யம் - வைதிகஸ்ய க்ருத்ஸ்நஸ்ய ஸத்யதாநிஶ்சய: ப்ரகர்ஷ: | கேநாபி ஹேதுநா சாலயிதுமஶக்ய இத்யர்த: | பகவாந் புருஷோத்தமோ வாஸுதேவ: பரப்ரஹ்மஶப்தாபிதேயோ நிரஸ்தநிகிலதோஷகந்த:, ஸ்வாபாவிகாநவதிகாதிஶயஜ்ஞாநஶக்த்யாத்யஸங்க்யேயகல்யாணகுணகண:, நிகிலவேதவேதாந்தவேத்ய: | ஸ ஏவ நிகிலஜகதேககாரணம், நிகிலஜகதாதாரபூத:, நிகிலஸ்ய ஸ ஏவ ப்ரவர்தயிதா, ததாராதநபூதம் ச வைதிகம் க்ருத்ஸ்நம் கர்ம, தைஸ்தைராராதிதோ தர்மார்தகாமமோக்ஷாக்யம் பலம் ப்ரயச்சதீத்யஸ்யார்தஸ்ய ஸத்யதாநிஶ்சய: ஆஸ்திக்யம் | "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:, அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே | மயி ஸர்வமிதம் ப்ரோதம், போக்தாரம் யஜ்ஞதபஸாம்... ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி, மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய, யத: ப்ரவ்ருத்திர்பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் | ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:, யோ மாமஜமநாதிம் ச வேத்தி லோகமஹேஶ்வரம்" இதி ஹ்யுச்யதே | ததேதத் ப்ராஹ்மணஸ்ய ஸ்வபாவஜம் கர்ம || ||௪௨||

அவ—பிராமணன் வேலையைச் சொல்லுகிறார்—

கண் முதலான இந்திரியங்களையும், மனதையும் ஏற்பட்டவைகள் தவிர மற்ற விஷயங்களில் போகாதபடி அடக்குவது; சாஸ்திரத்திற்கு ஒத்தபடி சாப்பாட்டை நிறுத்துவது முதலானவைகளாலே உடம்பை ஒடுக்குவது; சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்வதற்காக ஸ்நாநம் முதலானவைகளைச செய்வது; பிறர்கள் எவ்வளவு தொந்தரவு பண்ணின போதிலும், மனது கலங்காமை; பிறர்கள் விஷயத்தில் மனதிலிருப்பதற்குத் தகுந்தபடி பேசுவதும், வேலை செய்வதும்; உயர்ந்த வஸ்துக்களையும், இளப்பமான வஸ்துக்களையும் உள்ளபடி அறிவது; உயர்ந்த வஸ்துவிற்கு மாத்திரமுள்ள குணங்களை மிகவும் நன்றாக அறிவது; வேதத்தில்

சொல்லிய எல்லா ஸங்கதிகளும் உண்மைதான், பொய்யல்ல என்கிற உயர்ந்த தீர்மானம்; அதாவது—இன்னொருவர் என்ன சொன்னாலும், இந்தத் தீர்மானத்தை மாற்றமுடியாமை; ஆனால் அதுபிடிவாதமல்ல. அதாவது-பகவானென்றும், புருஷோத்தமனென்றும், பரப்பிரும்மமென்றும் சொல்லப்படுகிற வாஸுதேவன் ஒருவிதக் குற்றங்களுமில்லாதவர்; இயற்கையாகவே அளவில்லாமல் உயர்ந்த கணக்கில்லாத நல்லகுணங்களுள்ளவர்; இப்படிப்பட்டவர் என்று எலலா உபநிஷத்துக்களும் அவரைத்தான் சொல்லுகின்றன; அவர் ஒருவர்தான் எல்லா உலகங்களையும் உண்டுபண்ணுகிறார்; தாக்குகிறார்; ஏவுகிறார்; வேதங்களில் சொல்லிய எல்லாக் கர்மங்களாலும் அவர்தான் ஸந்தோஷத்தை அடைகிறார்; ஸந்தோஷத்தை அடைந்து, அந்தக் கர்மங்களுக்குத் தகுந்தபடி தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், (அறம், பொருள், இன்பம், வீடு) என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கிறார்—என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. இந்த ஸங்கதிகளை இந்த கீதையிலும் (அ.5, சு-29; அ-7, சு-7; அ-10, சு-3-8; அ-15, சு-15: அ-18, சு-46) சொல்லியிருக்கிறது. இந்தஅர்த்தங்களில் நம்புதலை ஆஸ்திக்கியம் என்று சொல்லுகிறது. கீழ்ச்சொன்ன வேலைகள் பிராமணனுக்கு ஏற்பட்டவைகள். 1 [42]

𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍 । 𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥

𑌶𑍌𑌰𑍍𑌯𑌂-𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌨𑌿𑌰𑍍𑌭𑌯𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂। 𑌤𑍇𑌜𑌃-𑌪𑌰𑍈𑌰𑌨𑌭𑌿𑌭𑌵𑌨𑍀𑌯𑌤𑌾। 𑌧𑍃𑌤𑌿𑌃-𑌆𑌰𑌬𑍍𑌧𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌪

---

1. கீழ்ச்சொன்ன வேலைகளெல்லாம்ஸத்துவகுணம்மிகவும்மேலிட்டிருந்தால்தான் வரும்.இவைகள்பிராமணஜாதிக்குவரக்கூடியவைகள்என்பதற்காகச் சொல்லியிருக்கிறதேயொழிய, ஸத்துவகுணம் மேலிட்டிருக்கிறது என்பது பிராமணஜாதிக்குமாத்திரம்என்று இல்லை. எல்லா ஜாதியிலும் வரலாம். பிராமணஜாதியில் இல்லாமலுமிருக்கலாம். ஆனால் இந்த ஜாதியில் அதிகமாக இருக்கக்கூடியது. பிராமணத்தன்மை என்பது இருவகை, குணத்தினால் வருவது ஒன்று. பிறப்பினால் வருவது ஒன்று. ஆனால் குணத்தினால் வருவதுதான் உயர்ந்தது. இரண்டும் சேர்ந்தால், பாலும் சர்க்கரையும் சேர்ந்தது போல.

நிபாதேऽபி தத்ஸமாபநஸாமர்த்யம் | தாக்ஷ்யம்-ஸர்வக்ரியாநி ர்வ்ருத்திஸாமர்த்யம் | யுத்தே சாப்யபலாயநம்-யுத்தே சாத்ம மரணநிஶ்சயேऽபி அநிவர்தநம் | தாநம்-ஆத்மீயஸ்ய த்ரவ்யஸ்ய பர ஸ்வத்வாபாதநபர்யந்தஸ்த்யாக: | ஈஶ்வரபாவ:- ஸ்வவ்யதிரிக்த ஸகலஜநநியமநஸாமர்த்யம் | ஏதத் க்ஷத்ரியஸ்ய ஸ்வபாவ ஜம் கர்ம ॥ ॥ ௪௩ ॥

*அவ—க்ஷத்திரியன் வேலைகளைச் சொல்லுகிறார்—*

சண்டையில் பயமில்லாமல் நுழையும் சக்தி; (புலி என்பது எந்த ஸங்கதிகளுக்கும் பயப்படாமல், சுட்டாலும் மேல் வந்து விழும், அதுபோல்); பிறர்களால் அவமானம் பண்ணமுடியாமலிருப்பது; அதாவது—நுழைந்து, தோல்வி யடையாமலிருப்பது; எல்லாக் காரியங்களையும் முடிக்கிற சக்தி; ஆரம்பித்த காரியத்திற்கு என்ன தடங்கல் நேரிட்டாலும், அதை விடாமல் முடிக்கும் சக்தி; சண்டையில் தனக்குச சாவு கட்டாயம் நேரிடும் என்று தீர்மானமிருக்கச்செய்தேயும், பயந்து ஓடாமலிருக்கை; தன் ஸொத்தைப் பிறர்களுக்கு விற்கவும், வாங்கவும் தகுந்ததாக ஆகும்படி கொடுப்பது; எல்லா ஜனங்களையும் அடக்கி ஆளுகை—இவைகள் க்ஷத்திரியனுக்கு ஸ்வபாவத்தால வரக்கூடிய வேலைகள். [43]

க்ருஷிகோரக்ஷவாணிஜ்யம் வைஶ்யம் கர்ம ஸ்வபாவஜம் ॥

க்ருஷி:-ஸஸ்யோத்பாதநம் கர்ஷணம் | கோரக்ஷம்-பஶுபாலநமித்யர்த்த: | வாணிஜ்யம்-தநஸஞ்சயஹேதுபூதம் க்ரய விக்ரயாத்மகம் கர்ம | ஏதத்வைஶ்யஸ்ய ஸ்வபாவஜம் கர்ம ॥

*அவ— வைசியன் வேலைகளையும் தொழில்களையும் சொல்லுகிறார்—*

உழுது பயிர்ச்செலவு பண்ணுகிறது; மாடுகளைக் காப்பாற்றுகிறது; பணம் சம்பாதிப்பதற்காக வித்துவாங்கி வியாபாரம் பண்ணுகிறது—இவைகள் வைசியனுக்கு ஸ்வபாவத்தாலுண்டான வேலைகள். [43½]

பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம் ॥ ௪௪ ॥

பூர்வவர்ணத்ரயபரிசர்யா, ஶூத்ரஸ்ய ஸ்வபாவஜம் கர்ம। ததேதத் ப்ராஹ்மணாதீநாம் வர்ணாநாம் வ்ருத்திபிஸ்ஸஹ கர்தவ்யாநாம் ஶாஸ்த்ரவிஹிதாநாம் யஜ்ஞாதிகர்மணாம் ப்ரதர்ஶநாயோக்தம்। யஜ்ஞாதயோ ஹி த்ரயாணாம் வர்ணாநாம் ஸாதாரணா:। ஶமாதயோऽபி த்ரயாணாம் வர்ணாநாம் முமுக்ஷூணாம் ஸாதாரணா:। ப்ராஹ்மணஸ்ய து ஸத்த்வோத்ரேகஸ்ய ஸ்வாபாவிகத்வேந ஶமதமாதயஸ்ஸுகோபாதாநா இதி க்ருத்வா தஸ்ய ஶமாதய: ஸ்வபாவஜம் கர்மோக்தம்। க்ஷத்ரியவைஶ்யயோஸ்து ஸ்வதோ ரஜஸ்தம:ப்ரதாநத்வேந ஶமதமாதயோ து:கோபாதாநா இதி க்ருத்வா ந தத்கர்மோக்தம்। ப்ராஹ்மணஸ்ய து வ்ருத்திர்யாஜநாத்யாபநப்ரதிக்ரஹா:। க்ஷத்ரியஸ்ய ஜநபதபரிபாலநம்। வைஶ்யஸ்ய ச க்ருஷ்யாதயோ யதோக்தா:। ஶூத்ரஸ்ய து கர்தவ்யம் வ்ருத்திஶ்ச பூர்வவர்ணத்ரயபரிசர்யைவ ॥

॥ ௪௪ ॥

அவ—சூத்திரன வேலையைச சொல்லுகிறார்—

பிராமணன முதலான மூன்று ஜாதியாருக்கும் வேலை செய்வது சூத்திரர்களுக்கு ஸ்வபாவத்தாலுண்டான வேலை

இப்படிக் கீழே நாலு வர்ணத்தார்க்கும் சில வேலைகளை மாத்திரம் சொல்லிற்று இன்னமும் சில வேலைகளுமுண்டு. மூன்று ஜாதியாரும் யக்ஞம் முதலானவைகளைச் செய்யவேண்டியது கண் முதலான இந்திரியங்களை அடக்குவது முதலானவைகளையும் ஸம்ஸாரத்தைப் போக்கவேணுமென்றிருக்கிற மூன்று ஜாதியாரும் செய்யவேண்டியது. பிராமணஜாதிக்கு இயற்கையில் ஸத்துவகுணம் மேலிட்டிருப்பதால், அவர்களால் அவைகளை ஸுகமாகச் செய்யமுடியும் என்பதற்காக, அவைகளை அவர்களுக்கு ஸ்வபாவத்தாலுண்டாகும் வேலைகளாகச் சொன்னது. க்ஷத்திரியர்களும், வைசியர்களும் ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டிருப்பவர்களானபடியால், இவைகளை வருத்தப்பட்டுச் செய்ய வேண்டியதாகையாலே, அவைகளை அவர்கள் வேலைகளாகச் சொல்லவில்லை பிராமணனுக்குப்பிழைப்பு—பிறர்களுக்கு

யாகத்தைச் செய்விப்பதும், வேதம் முதலானவைகளைச் சொல்லிவிப்பதும், பிறர்கள் கொடுப்பதை வாங்கிக்கொள்ளுவதும். க்ஷத்திரியர்களுக்கு தேசத்தைக் காப்பாற்றி வரிவாங்குவது. 1 வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் முன் சொன்னதொழில்தான் பிழைப்புக்கு வழி. [44]

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ॥ ॥४५॥

स्वे स्वे - यथोदिते कर्मण्यभिरतो नरः संसिद्धिं - परमपदप्राप्तिं लभते । स्वकर्मनिरतो यथा सिद्धिं विन्दति - परमपदं प्राप्नोति, तथा शृणु ॥ ॥४५॥

அந்தந்த ஜாதிக்கு ஏற்பட்ட கர்மங்களை ஆசையுடன் செய்கிறவன் பரமபதத்தை (மிகவும் உயர்ந்த இடத்தை) அடைகிறான். எப்படி அடைகிறான் என்றால், சொல்லுகிறேன், கேள். [45]

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥ ॥४६॥

यस्माद् भूतानामुत्पत्त्यादिका प्रवृत्तिः, येन च सर्वमिदं ततम् । स्वकर्मणा तं मामिन्द्राद्यन्तरात्मतयावस्थितमभ्यर्च्य, मत्प्रसादान्मत्प्राप्तिरूपां सिद्धिं विन्दति मानवः । मत्त एव सर्वमुत्पद्यते, मया च सर्वमिदं ततमिति पूर्वमेवोक्तम् "अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा । मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय, मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना, मयाध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम्, अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते" इत्यादिषु ॥ ॥४६॥

---

1. தயைமுதலான நல்லகுணங்களும், நல்ல ஸம்ஸ்காரங்களும்,(அதாவது—சங்கு சக்கிரங்களைத்தரிப்பது,மந்திரங்களைப்பெற்றுக்கொள்ளுவது) உள்ள சூத்திரர்களுக்கு சிலதர்மங்கள்சொல்லப்படுகின்றன. அவைகளை—அவர்களுக்கேற்பட்ட வேலைகளுக்கு விரோதமில்லாமல், முன்ஜாதியார்கள் உத்தரவின் பேரில்-செய்யவேண்டியது. அப்போதும் அவர்கள் வேலைகளாக எண்ணிக்கொண்டு செய்யவேண்டியது.

அறிவுள்ள ஜீவன்கள், அறிவில்லாத வஸ்துக்கள்—என்று இருவகையானஎல்லாம் எவனால் உண்டாகின்றனவோ, இருக்கின்றனவோ, வேலைகளைச்செய்கின்றனவோ; எவனெல்லாருக்கும் உள்ளே நுழைந்து ஆத்மாவாக இருக்கிறானோ; இந்திரன் முதலான எல்லா தேவதைகளுக்கும் ஆத்மாவாகஇருக்கும் அந்த 1 எனனை அவரவர்களுக்கு ஏற்பட்ட வேலைகளைச்செய்து,2 எவர்கள் பூஜைசெய்கிறார்களோ (ஸந்தோஷப்படுத்துகிறார்களோ); நான் ஸந்தோஷப்பட்டு அவர்களை என்னிடம் அழைத்துக்கொள்ளுகிறேன். [46]

ஶ்ரேயாந் ஸ்வத⁴ர்மோ விகு³ண: பரத⁴ர்மாத் ஸ்வநுஷ்டி²தாத்|

ஏவம் த்ருʼக்ஷகத்ருʼக்ஷராதி³கோசராராயநாஶ்ரயேஷு ஸ்வ-ஸ்வதே³நைவாராத்⁴யம் யோக்³யாயஸ்ய:| ப்ரக்ருʼதிஸம்ஸ்ருʼஷ்டேந ஹி புருஷேண இந்த்³ரியவ்யாபாரரூப: கர்மயோக³: ஸுகரோ ப⁴வதி| அத: கர்மயோகா³க்²ய: ஸ்வத⁴ர்மோ விகு³ணோ(அ)பி பரத⁴ர்மாத்-இந்த்³ரியஜயநிஷ்பாத்³யாத் ஜ்ஞாநயோகா³த் ஸகலேந்த்³ரியநியமநரூபதயா ஸுஶகாத் ஸ்வநுஷ்டி²தாத் ஶ்ரேயாந் ||௪௭||

அவ—இப்படி பிராமணன் முதலானவர்ணங்களுக்கும், பிரம்மசரியம் முதலான ஆசிரமங்களுக்கும் ஏற்பட்ட கர்மங்களை விட

---

1 சுலோகத்தில் 'தம' (அவனை) என்று சொல்லியிருக்க, வியாக்கியானத்தில் எனனைஎன்றுபொருள்சொல்லுவதற்குக்காரணம்—ஸ்ரீ கிருஷ்ணபகவான் எல்லா உலகங்களையும் தானே உண்டுபண்ணினதாயும், எல்லா உலகங்களிலும் ஆத்மாவாகத்தான் நுழைந்திருப்பதாயும் முன்னலேயே சொல்லியிருக்கிறார். 7-வது அத்,சு-6,7;9-வது அ,சு-4-10; 10-வதுஅ, சு-8;இவைகளைப்பார்க்க. ஆகையால் இச்சுலோகத்தில்'அவனை' என்று சொல்லப்பட்டவர் கிருஷ்ணபகவான் தான்.

2. சூத்திரர்கள் இந்த சுலோகத்தில் சொன்னபடி பகவானை பூஜித்தால், வேறு பிறப்பில் கர்மயோகம் முதலானவைகளைசெய்யத் தகுதியை அடைந்து, அவைகளைச்செய்து, பரமபதத்தை அடையலாம். விதுரர் சூத்திரனாகப்பிறந்தபோதிலும், பக்தியோகம் செய்தாரேஎன்றால்—பதில்—அவர் முன் பிறப்பில் பக்திபண்ணஆரம்பித்தவர். அதை இந்தப் பிறப்பிலும் செய்தார். சூத்திரப் பிறப்பில் ஆரம்பிக்கக்கூடாதேயொழிய ஆரம்பித்ததை நடத்தலாம்.

வே கூடாதென்றும், அவைகளாலே பகவானை அடையும் விதமும் சொல்லப்பட்டது. ஞானயோகம் செய்யத்தகுந்தவனும் கர்மயோகத்தையே செய்யவேணடியதென்று மூன்றாவது அத்தியாயத்தில் சொன்னதைச் சொலல ஆரம்பிக்கிறார்—

கர்மயோகம் என்பது இந்திரியங்களின் வேலை. அதை உடம்புடன் சேர்ந்தவன் ஸுகமாகச்செய்யலாம். 1 அது ஸொந்த தர்மம். ஞான யோகம் என்பதை இந்திரியஙகளை ஜயித்தவன் செய்யவேண்டியது. அது பிறருடைய வேலை. அதாவது—உயர்ந்த கெட்டிக்காரனாலேயே தான் செய்யக்கூடியது. எல்லாராலும் செய்யக்கூடாதது. அது ஒருக்கால் முடியாதபோனாலும் போகும். அதைக்காட்டிலும் கொஞ்சம் குறைவாயிருந்தாலும், கர்மயோகத்தையே செய்யவேண்டியது. [46½]

அவ—ததேவோபபாதயதி—

ஸ்வபாவநியதம் கர்ம குர்வந் நாப்நோதி கில்பிஷம்॥ ௪௭॥

ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டஸ்ய ஹீந்த்ரியவ்யாபாரரூபதயா ஸ்வபாவத ஏவ நியதத்வாத் கர்மண:-கர்ம குர்வந் கில்பிஷம் ஸம்ஸாரம் ந ப்ராப்நோதி। அப்ரமாதத்வாத் கர்மண:। ஜ்ஞாநயோகஸ்ய ஸகலேந்த்ரியநியமந ஸாத்யதயா ஸப்ரமாதத்வாந்நிஷ்டஸ்ய ப்ரமாதாத் கில்பிஷம் ப்ராப்நுயாதபி॥ ॥௪௭॥

அவ—அதற்கே யுக்தி சொல்லுகிறார்—

உடம்போடு இருக்கிற ஜீவனுக்குக் கண் முதலான இந்திரியங்களைக்கொண்டு வேலைசெய்தே வழக்கம். இந்திரியங்களை அடக்

1. சுலோகத்தில ஸ்வதர்மம்—(தன்னுடைய தாமம்) என்பதற்கு தன் வாணத்திற்கும், ஆசிரமத்திற்கும் ஏற்பட்ட தாமம் என்று பொருளல்ல. அது பொருளானால, பரதர்மம் (அயலாருடைய தாமம்) எனபது வேறு வர்ணததிற்கும், ஆசிரமத்திற்கும் ஏறபட்டவைகளென்று ஆகும். அதைச் செய்யககூடாது. செய்யக்கூடாததையும செய்யததகுந்ததையும சேர்த்து, அதைக்காட்டிலும் இது நல்லதென்று சொல்லுவது ஸரியன்று. பொய்சொல்லுவதைக் காட்டிலும்உண்மையைப் பேசுவது நல்லதெனறு சொல்லுவது வழக்கமில்லை. ஆகையால சொந்ததர்மம் எனபது கர்மயோகம். பிறருடையதர்மம் என்பதுஞானயோகம் என்றுதான் பொருள்.

குவது என்றால் முடியாது. கர்மயோகம் என்பது இந்திரியங்களுடைய வேலை. ஆகையால் அதைத் தவறுதலில்லாமல் நடத்தமுடியும். அதனால் ஸம்ஸாரத்தைப் போக்குவன். இந்திரியங்களை அடக்குவதாகிற ஞான யோகத்தைச்செய்ய ஆரம்பித்தால், அதைச் சரியாய் நடத்திமுடிப்பது வருத்தம். அது நடுவில் நின்றுபோனால், ஸம்ஸாரம் போகாது. [47]

அவ—அத: கர்மநிஷ்டைவ ஜ்யாயஸீதி த்ருதீயோக்தம் ஸ்மாரயதி—

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரிவாவ்ருதா: ॥

அத: ஸஹஜத்வேந ஸுகரத்வாத் அப்ரமாதத்வாச்ச கர்ம ஸதோஷம்—ஸது:கமபி ந த்யஜேத். ஜ்ஞாநயோகயோக்யோऽபி கர்மயோக ஏவ கர்தவ்ய:। ஸர்வாரம்பா:-கர்மாரம்பா: ஜ்ஞாநாரம்பாஶ்ச ஹி தோஷேண-து:கேந தூமேநாக்நிரிவ ஆவ்ருதா:। அயம் து விஶேஷ:-கர்மயோகஸ்ஸுகரோऽப்ரமாதஶ்ச। ஜ்ஞாநயோகஸ்தத்விபரீத இதி ॥ ॥ ௪அ ॥

அவ—ஆகையால கர்மயோகம் தான் மிகவும் நல்லது என்று மூன்றாவது அத்தியாயத்தில சொல்லியதை நினைப்பு மூட்டுகிறார்—

ஆகையால் கர்மயோகம் வருத்தமில்லாமல் செய்து முடிக்கக் கூடியதாகையாலும், ஞானயோகத்தைப் போல் நடுவில் நின்று போகக்கூடியதல்லாமையாலும், அதைச்செய்வதில் உடம்புக்கு வருத்தம் முதலானவைகள் இருந்தாலும், ஞானயோகத்தைப் பண்ணத்தகுந்தவனும கர்மயோகத்தைத் தான் செய்யவேண்டியது. அதை விடக்கூடாது. நெருப்புக்குப் புகைபோல எல்லா வேலைகளிலும் தொந்தரவு இருக்கிறது. 1தொந்தரவு கர்மயோகத்

1. இந்த சுலோகம் முன்பாதியில-ஞானயோகத்தில தொந்தரவு இல்லை, அதைச் செய்யலாமென்றுநினைத்து, ஒருவன அதைச்செய்யவேனோ என்று பயந்து, தொந்தரவு இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, கர்மயோகத்தையே செய்யவேண்டியதென்று சொன்னார் பின்பாதியில்—ஞானயோகத்தில் தொந்தரவு இல்லை என்பது சரியல்ல. அதிலும் தொந்தரவு

திலுமிருக்கிறது. ஞானயோகத்திலுமிருக்கிறது. ஆனால் கர்ம யோகத்தை முழுக்க நடத்தலாம். லகுவாய்ச் செய்யலாம். ஞான யோகத்தைமுழுக்கநடத்தமுடியாது அதைசசெய்வதுகஷ்டம்[48]

𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍇𑌨𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰-𑌫𑌲𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾-𑌜𑌿𑌤𑌮𑌨𑌾𑌃। 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 । 𑌏𑌵𑌂 𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌦𑌨𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑍇𑌨 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍, 𑌪𑌰𑌾𑌂 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿-𑌪𑌰𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌫𑌲𑌭𑍂𑌤𑌾𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌿𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌰𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥ ॥௪௯॥

கர்மங்களின் பலன்களை விரும்பாமல், மனதை ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் போகாமல் அடக்கி, பகவானே எல்லா வேலைகளையும செய்கிறார் என்கிற நினைவினால், நானே வேலைகளைச் செய்கிறேன் என்கிற 1 எண்ணமில்லாமல், கர்மங்களைச் செய்கிறவன் ஞானயோகததினால் வரக்கூடியதான ஆதமாவின் தியானத்தை அடைகிறான் அதாவது—கர்மஙகளால் பகவான் ஸந்தோஷத்தை அடைநது இவனை எல்லா இநதிரியங்களை அடக்கி, ஆத்மாவைத் தியானம்பண்ணத் தகுநதவனாகச செய்கிறார். [49]

𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌥𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮𑍇।
𑌸𑌮𑌾𑌸𑍇𑌨𑍈𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑌰𑌾 ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 - 𑌆𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌦𑌹𑌰𑌹𑌰𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾-𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾

---

இருககிறதென்று காட்டுகிறார். கர்மயோகம செய்வதில உடம்புக்கு மாததிரம் தொநதரவு ஞான யோகத்தில உடம்பில் மறைந்திருக்கிற ஜீவாதமஸ்வரூபததைதத தேடுவதறகாக மனதையும் இந்திரி யஙகளையும அடககுவது மிகவும் கஷ்டம்.

1. ஸ்வபநததில்கூட இநத எணணம வராதபடி அது போகவேணுமென்று கருத்து

ரேண வர்த்தமாநோ ப்ரஹ்ம ப்ராப்நோதி ததா ஸமாஸேந நிபோத। தஸ்யைவ ப்ரஹ்ம விசேஷ்யதே நிஷ்டா ஜ்ஞாநஸ்யா பரேதி। ஜ்ஞாநஸ்ய த்யாநாத்மகஸ்ய யா பரா நிஷ்டா-பரா ப்ராப்திரித்யர்த்த: ॥ ॥ ரு० ॥

சரீரம் போகிற வரையில் ஒவ்வொரு நாளும் கர்மயோகத்தைச் செய்து, தியானம்பண்ண 1 ஆரம்பித்தவன் எப்படி இருந்து ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி பார்க்கிறான் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள். ஆத்மாவைப் பார்ப்பதுதான் தியானத்தினால் அடையவேண்டிய உயர்ந்த பிரயோஜநம். [50]

புத்த்யா விசுத்தயா யுக்தோ த்ருத்யாத்மாநம் நியம்ய ச।
சப்தாதீந் விஷயாம்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச॥
விவிக்தஸேவீ லக்வாசீ யதவாக்காயமாநஸ:। த்யாநயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித:॥ ருக ॥
அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம்।
விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே ॥ருங॥

புத்த்யா விசுத்தயா-யதாவஸ்திதாத்மதத்த்வவிஷயயா யுக்த:। த்ருத்யா ஆத்மாநம் நியம்ய-விஷய விமுகீகரணேந யோகயோக்யம் மந: க்ருத்வா। சப்தாதீந் விஷயாம்ஸ்த்யக்த்வா-அஸந்நிஹிதாந் க்ருத்வா। தந்நிமித்தௌ ச ராகத்வேஷௌ வ்யுதஸ்ய। விவிக்தஸேவீ - ஸர்வைர்த்யாநவிரோதிபிர்விவிக்தே தேசே வர்த்தமாந:। லக்வாசீ-அத்யசநாநசநரஹித:। யதவாக்காயமாநஸ:-த்யாநாபிமுகீக்ருதகாயவாங்மநோவ்ருத்தி:। த்யாநயோகபரோ நித்யம்-ஏவம்பூதஸ்ஸந் ஆப்ரயாணாதஹரஹர்த்யாநயோகபர:। வைராக்யம் ஸமுபாச்ரித:-த்யேயதத்த்வவ்யதிரிக்தவிஷயதோஷாவமர்சேந தத்ர தத்ர விராகதாம் வர்த்தயந்। அஹங்காரம்-அநாத்மநி ஆத்மாபிமாநம்। பலம்-தத்விவ்ருத்திஹேதுபூதவாஸநாபலம்। தந்நிமித்தம் தர்பம்। காமம் க்ரோதம் பரிக்ரஹம் விமுச்ய। நிர்மம: ஸர்வேஷ்வநாத்மீயேஷ்வாத்மீய

1. இது 6-வது அத். 7,8,9-வது சுலோகங்களில் சொல்லப்பட்டது

ஸமுபாஶ்ரித꞉| ஶாந்த꞉—ஶுத்³தா⁴ந்த꞉கரண꞉| ஏவம்பூ⁴
தோ த்⁴யாநயோக³ம் குர்வந் ப்³ரஹ்மபூ⁴யாய கல்பதே-ப்³ர
ஹ்மபா⁴வாய கல்பதே| ஸர்வப³ந்த⁴விநிர்முக்தோ யதா²வஸ்தி²த
மாத்மாநமநுப⁴வதீத்யர்த²꞉ ॥ ॥௫௧॥

ஆத்மாவை உள்ளபடி 1 நன்றாய் அறிந்து, 2 உறுதியுடன் ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் மனதை போகவொட்டாமல் தடுத்து, ஆத்மாவைத் தியானம் செய்யத் தகுந்ததாகப்பண்ணி, சப்தம் முதலான விஷயங்களின் 3 கிட்டத்தில் இல்லாமல், அவைகளைப்பற்றி வரும் ஆசையையும், த்வேஷத்தையும் போக்கி, ஆத்மாவைத் தியானம் பண்ணுவதற்கு இடைஞ்சல்கள் ஒன்றும் இல்லாத இடத்தில் இருந்துகொண்டு, அதிகமாகச் சாப்பிடாமலும், அடியோடு ஆஹாரத்தை விடாமலும். 4 மனது, வாக்கு, உடம்பு—இவைகளைத் தியானத்திற்கு உதவியாகப் பண்ணிக்கொண்டு, உடம்பை விடுமளவும் தினந்தோறும் இதேமாதிரி தியானத்தைச் செய்துகொண்டு, தியானிக்கத்தகுந்த ஆத்மாவைத் தவிர 5 மற்ற விஷயங்களில் தோஷங்களை கவனித்து, அவைகளில் ஒழிவை வளர்த்துக்கொண்டு, உடம்புதான் ஆத்மா என்கிற எண்ணத்

1. அறியவேண்டிய ஸங்கதிகளில் குறைவு, சந்தேகம், தப்பு எண்ணம்-இவைகளில்லாமை அறிவுக்கு நன்மை.

2. 33-வது சுலோகத்தில் சொன்ன ஸாத்துவிகமான த்ருதி (உறுதி).

3. விஷயங்கள் கிட்ட இருந்தால், மனது கலங்கும். அதற்காக அவைகளைக் கிட்ட வைத்துக்கொள்ளாமல் இருக்கவேண்டும்.

4. அசங்காத ஆஸனத்தில்உட்கார்ந்து இருப்பதால், உடம்பு உதவுகிறது. பிரணவத்தைத் தவிர வேறு ஒரு சொல்லையும் சொல்லாமையால், வாக்கு. மனது பகவானுடைய திருமேனியை நினைப்பதால்.

5. கண் முதலான இந்திரியங்களால் அறியப்படும் விஷயங்களில் ஆசையை விடுகையை 51-வது சுலோகத்தில் சொன்னார். இங்கே மனதினால் ஏற்படும் ஆசையின் ஒழிவைச் சொல்லுகிறது. 6-வது அத், 24-வது சுலோகம் குறிப்பைப் பார்க்க. சுலோகத்தில் "வைராக்³யம் ஸமுபாஶ்ரித꞉" (ஒழிவை நன்றாய் அடைந்து) என்கிற சொற்கள் இருக்கின்றன. ஒழிவு முன்னமேயே உண்டாயிருந்தாலும், அதைவிஷயங்களின் குற்றங்களை நினைத்து நினைத்துபலப்படுத்துவது நன்றாய்அடைவது.

தையும், அந்த எண்ணம் வளருவதற்குக் காரணமான வாஸனையின் 1 பலத்தையும், அதனால் ஏற்படும்-தான் எடுத்துக்கொள்ளத் தகுந்த ஸங்கதியை எடுத்துக்கொள்ளாமல் பண்ணும்—2 கொழுப்பையும், காமத்தையும், கோபத்தையும், உடம்பைச்சேர்ந்த வஸ்துக்களையும் விட்டுவிட்டு, ஆத்மாவைச் சேராத வஸ்துக்களை (பிள்ளை பெண்டாட்டி முதலானவைகளை) தன்னுடையவைகள் (ஆத்மாவினுடையவைகள்) என்று நினையாமல், ஆதயானவை அனுபவிப்பதையே ஸுகமாக நினைத்து, ஆத்மாவைத் தியானம் செய்கிறவன் எல்லா ஸம்ஸாரமும் போய், ஆத்மாவை உள்ளபடி பார்ப்பன். [51-52-53]

ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந சோசதி ந காங்க்ஷதி|
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்||

